ஊன் உடம்பு ஆலயம்

(திருமந்திரம்)

பதிப்பாசிரியர்

முனைவர் கோ.விசயராகவன்

முனைவர் தி.மகாலட்சுமி

பேரா.கோவி.சிவபாலன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

ஊன் உடம்பு ஆலயம்

(மலேயாவில் நடைபெற்ற அனைத்துலகத்
திருமந்திர மாநாட்டுக்கட்டுரைகள்)

பதிப்பாசிரியர்கள்

முனைவர் கோ. விசயராகவன்
முனைவர் தி. மகாலட்சுமி
பேரா. கோவி. சிவபாலன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113

நூல்விவரக் குறிப்பு

நூல் தலைப்பு	:	ஊன் உடம்பு ஆலயம் (திருமந்திரம்)
பதிப்பாசிரியர்கள்	:	முனைவர் கோ. விசயராகவன் இயக்குநர் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
		முனைவர் தி. மகாலட்சுமி ஆய்வு அலுவலர் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
		பேரா. கோவி. சிவபாலன் மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறை
வெளியீட்டாளரும் பதிப்பு உரிமையும்	:	உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இரண்டாம் முதன்மைச் சாலை மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம் தரமணி, சென்னை 600 113 தொலைபேசி எண் 044-22542992
வெளியீட்டு எண்	:	921
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதல்பதிப்பு
பதிப்பு ஆண்டு	:	2016
பயன்படுத்திய தாள்	:	18.6கிகி டி.என்.பி.எல் வெள்ளைத்தாள்
நூலின் அளவு	:	1/8 டெம்மி
எழுத்தின் அளவு	:	10 புள்ளி
பக்க எண்ணிக்கை	:	465 + 15
அச்சுப்படிகளின் எண்ணிக்கை	:	1200
விலை	:	ரூ. 250 (இருநூற்றைம்பது ரூபாய் மட்டும்)
அச்சகம்	:	ஏ.கே.எல். அச்சகம் போரூர் சென்னை - 600 116.
பொருள்	:	திருமந்திர ஆய்வுகள்

LIBRARY
Acc No
Date



முனைவர் கோ. விசயராகவன்
எம்.ஏ., எம்.ஃபில், பி.எட், பிஎச்.டி.
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை 600 113.

அணிந்துரை

பேரறிஞர் அண்ணா அவர்கள் முன்வைத்த கருத்தினால் தோற்றம் பெற்ற உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தமிழின் மேன்மையை, தமிழ் இலக்கியத்தின் சிறப்பை உலகம் முழுதும் கொண்டு செல்லும் வளரச்சி நோக்குடன் செயல்பட்டு வருகின்றது. இதுவரை 800க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளது. இந்நிறுவனத்தில் துறைசார்ந்த பல ஆய்வுப்பணிகள் நடைபெற்று வருவது மட்டுமல்லாமல் முனைவர்பட்ட ஆய்வுகளும் நடைபெற்று வருகின்றன. 2014-2015 ஆம் கல்வியாண்டில் திருமந்திரமும் வாழ்வியலும் என்ற பட்டய வகுப்பு தொடங்கப்பெற்றது. நிறுவனத்தின்வழி இங்கு 60 மாணவர்களும், இலண்டனில் 24 மாணவர்களும் படித்து இப்பட்டயச்சான்றிதழ் பெற்றுள்ளனர்.

தனி ஒரு நூலான திருமந்திரத்திற்குப் பட்டயத்தைக் கொண்டு வந்ததற்கான காரணம் அந்த நூலுக்கென உள்ள தனிச்சிறப்பும், தனித்தன்மையும்தான். எந்தக் கல்வி கற்றாலும் அந்தக் கல்வி ஆன்மிகக் கல்வியால்தான் முழுமை பெறுகின்றது. இத்தகு மெய்ஞான ஆன்மிகநூலாகத் திருமந்திரம் விளங்குகின்றது. இல்லறதுறவற வாழ்வின்வழி பேரின்பவாழ்வு வாழ்ந்து பிறவா நிலையை அடைய வழிகாட்டுகின்றது. மனம் ஒருமுகப்படுதல், பக்குவப்படுதல், தன்னையறிதல், யோகம், தியானம், மூச்சுப்பயிற்சி போன்றவற்றின்வழி இறையாற்றல் என்ற ஒன்று வெளியே மட்டும் இல்லை. அது நம்முள்ளும் இருக்கிறது. அந்த ஆற்றலை நாமும் பெறமுடியும் என உணர்த்துகின்றது. இத்தகு திருமந்திரத்திற்கு உயர்பட்டயம் கொண்டுவருதல், பட்டய வகுப்பின்னவழி திருமந்திரக் கல்வியை உலகநாடுகளுக்குக் கொண்டு செல்லுதல், உலகப் பொது மறை என்ற நிலையை உருவாக்குதல், திருமந்திரத்திற்குச் செம்பதிப்புகளையும், உரைவளப்பதிப்புகளையும் கொண்டு வருதல், கருத்தரங்கம், பயிலரங்கம், மாநாடு முதலியன நடத்துதல், திருக்குறளைப் போன்று தமிழகம் முழுமையும் திருமந்திரத்தைப் பரப்பச் செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளவுள்ளது.

இந்நோக்கில் நிறுவனத்தில் 12 சிறப்புப் பொழிவுகள் திருமந்திரத்திற்கு நடத்தப்பெற்றுள்ளது. தற்போது திருமந்திர மாநாடு 27.01.2016 அன்று மலாயாப் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது. இம்மாநாட்டினை எங்களுடன் இணைந்து மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல்துறைத்தலைவர் முனைவர் ஆர்.மோகனதாஸ் இராமசாமி அவர்களும், பேராசிரியர் கோவி. சிவபாலன் அவர்களும் உலகத் தமிழ் மற்றும் சோதிடவியல் ஆய்வுமைய நிறுவனர் பேரா.முனைவர் தி.மகாலட்சுமி அவர்களும் நடத்தவுள்ளனர். நூற்பணி உள்பட மாநாட்டுப் பணிகளைச் சிறப்புற செய்து கொண்டுள்ளமைக்காக அவர்களை மிகவும் பாராட்டுகின்றேன். இம்மாநாட்டில் இடம்பெறும் பன்னாட்டுக் கருத்தரங்கில் மலாயாவில் நடைபெற்ற திருமந்திர மாநாட்டுக் கட்டுரைகள் எனும் இந்நூல் வெளிவருவதில் மகிழ்ச்சி யடைகின்றேன்.

தமிழம், தமிழ்நாடும் வாழ்ந்திட, அல்லும் பகலும் அயராது உழைத்து வரும் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இதயம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ்மொழி வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்துவரும் பள்ளி கல்வி மற்றும் உலகத்தமிழாராய்ச்சி நிறுவன தலைவர் மாண்புமிகு அமைச்சர் கே.சி.வீரமணி அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் திரு த.உதயசந்திரன், இ.ஆ.ப அவர்களுக்கும் எனது உளங்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த அரியநூலை அழகுற அச்சிட்டுத் தந்த ஏ.கே.எஸ் அச்சகத்தாருக்கும் என் பாராட்டுகள்.



முனைவர் மு.பொன்னவைக்கோ
B.E., M.Sc. (Engg.), Ph.D.
துணை வேந்தர்
பாரத் பல்கலைக்கழகம்
சேலையூர், சென்னை 600 073.

வாழ்த்துரை

மலாயா பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறையும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும், உலகத்தமிழ் மற்றும் சோதிடவியல் ஆய்வு மையமும் இணைந்து மலாயாவில் நடைபெறவுள்ள திருமந்திர மாநாட்டுக் கட்டுரைகளைத் தொகுத்து நூலாக அச்சிட்டு மாநாட்டில் வெளியிட விருக்கும் செய்தி மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கின்றது.

அன்பே சிவம் என்பதை அழகாகத் தமிழில் சொல்லி, என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே எனப் பாடி, திருமந்திரத்தை அருளியவர் திருமூலர். பத்தாம் திருமுறையாகிய திருமந்திரம் தோத்திரமாகவும், சாத்திரமாகவும், யோக நூலாகவும், ஞான நூலாகவும், தந்திர நூலாகவும், மந்திரங்கள் அமைந்த பாராயண நூலாகவும், சமய, சமூக, ஒருமைப்பாட்டு நல்லிணக்க நூலாகவும் உலகுக்கு உயிராக விளங்கும் அருந்தமிழ் சமய நூலாகவும் உள்ளது. இந்நூல் பண்டைய இந்திய சித்தர்களின் அரிய கண்டுபிடிப்பு களையும் வாழ்வியல் உண்மைகளையும் விளக்குகிறது. வேதம், ஆகமம் ஆகிய இரண்டிற்கும் இத்திரு மந்திரம் அரிய விளக்கமாய்ப் பொலிந்து விளங்குகின்றது.

இந்த அரியநூலாகிய திருமந்திரத்தின் பெருமைகளை உலகறியும் வண்ணம் மலாயாவில் நடைபெறவுள்ள திருமந்திர மாநாட்டுக் கட்டுரைகளைத் தொகுத்து நூலாக வெளியிட மேற்கொண்டுள்ள பணி மிகவும் பாராட்டிற் குரியது. இந்நூல் தமிழ் மக்கள் இறைவழி பாட்டைத் தமிழ் வழி செய்ய வழிகோலும் என்பதில் ஐய்யமில்லை. இப்பணிப் பொறுப்பை ஏற்று சிறப்பாகச் செயல்பட்டு வரும் நிறுவன இயக்குநர் அவர்களுக்கும், சோதிடவியல் ஆய்வு மைய நிறுவனர் திருமதி தி.மகாலட்சுமி அவர்களுக்கும், பேரா. சிவபாலன் அவர்களுக்கும் எனது உளம் நிறைந்த பாராட்டுக்கள்.

அன்புடன்,

15/1/16

மு.பொன்னவைக்கோ



முனைவர் மோகனதாஸ் இராமசாமி
தலைவர், இந்திய ஆய்வியல் துறை
மலாயாப் பல்கலைக்கழகம்
மலேசியா

வாழ்த்துரை

மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறையுடன் இணைந்து, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் உலகத்தமிழ் மற்றும் சோதிடவியல் ஆய்வு மையமும் ஏற்பாடு செய்துள்ள அனைத்துலகத் திருமந்திர மாநாடு குறித்துப் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். பிறப்புக்கும் இறப்புக்கும் இடையே இருக்கின்ற வாழ்க்கையைப் பொருள் பொதிந்ததாக ஆக்கிக் கொள்வதற்கு ஆன்மீகப் பெரியோர்கள் அளித்துச் சென்ற சமயச் சொத்துகளுள் திருமந்திரம் தனிப்பெருமைக்குரியது. திருமந்திரத்தின் பயனை மக்கள் நுகர வேண்டும் என்னும் பெருநோக்கத்தில் பல்வேறு பொருண்மைகளில் இம்மாநாட்டில் சொற் பொழிவுகள் நிகழ்த்தப்பெறவுள்ளன. திருமந்திரத்தின் பிழிவுகளாக அமையவுள்ள அப்பொழிவுகள் நலமான வாழ்க்கைக்கு வழிகாட்டும் என நம்புகிறேன்.

மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறை ஆண்டுதோறும் அயலகக் கல்விக்கழகங்களுடன் இணைந்து பல்வேறு கருத்தரங்குகளையும் மாநாடுகளையும் நடத்தி வருகின்றது. மொழி, இலக்கியம், சமயம், பண்பாடு, அறிவியல் எனப் பல்துறை சார்ந்த கருத்தரங்குகளை இதுநாள் வரை ஏற்பாடு செய்து வெற்றிகரமாக நடத்தியிருக்கிறோம். இம்முறை தமிழர்களின் ஆன்மீகச் சொத்தான திருமந்திரத்துக்காக **உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்துடனும், உலகத்தமிழ் மற்றும் சோதிடவியல் ஆய்வு மையத்துடனும்** கைக்கோர்ப்பதில் மகிழ்ச்சி. எதிர்வரும் காலங்களில் உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்துடனும் உலகத்தமிழ் மற்றும் சோதிடவியல் ஆய்வு மையத்துடனும் இணைந்து இதுபோன்ற பயன்மிக்க மாநாடுகளை ஏற்பாடு செய்வதற்கு இந்திய ஆய்வியல் துறை தயாராக உள்ளது. இம்மாநாடு பங்கேற்பாளர்களுக்கு மிகுபலன் விளைவித்து எல்லா வகையிலும் வெற்றியடைய மனப்பூர்வமான வாழ்த்துகள்.



கோவி. சிவபாலன்
முதுநிலை விரிவுரையாளர்
இந்திய ஆய்வியல் துறை
மலாயாப் பல்கலைக்கழகம்
மலேசியா

வாழ்த்துரை

இன்றைய மக்களிடையே பெருகி வரும் ஆன்மிகத் தெளிவை நோக்கிய தேடல் பயணங்கள் ஆக்கத்துக்குரிய முயற்சியாகும். ஆனாலும் பல வேளைகளில் அப்பயணங்கள் தெளிவிலே முடியாமல் தீர்க்கவியலா குழப்பத்திலே அவர்களை ஆழ்த்திவிடுகின்றன. இதற்கு மக்களிடையே உள்ள பொருள்சார் ஆசைகளும் அவர்களை வழிநடத்தும் ஆன்மிகக் குருமார்களிடம் உள்ள தெளிவுக் குறைவுமே முதன்மைக் காரணங்களாக அமைந்து விடுகின்றன. இந்நிலை ஒருபுறமிருக்க, தமிழர்களின் சமய மரபாகிய சைவ மரபிலே தோன்றிய சமயப் பெரியோர்களுள் தனிச் சிறப்புக்குரியவராகத் திகழும் திருமூலர் இயற்றிய திருமந்திரம் மனிதனின் பிறவிப்பிணி தீர்க்கும் அருமருந்தாக அமைந்துள்ளது.

தமிழர்களின் தனிப்பெரும் ஆன்மீகச் சொத்தான திருமந்திரத்தின் விழுமியங்களை ஆராய்ந்தறிவதும், அறிந்தவற்றை மக்களிடம் சேர்ப்பதுவும் காலத்தின் தேவையாக உள்ளது. இதைக் கருத்தில்கொண்டு உலகத்தமிழாராய்ச்சி நிறுவனமும், மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறையும், உலகத்தமிழ் மற்றும் சோதிடவியல் ஆய்வு மையமும் இணைந்து அனைத்துலக திருமந்திர மாநாட்டை ஏற்பாடு செய்திருப்பது அருமையுடைய செயலாகும். இம்மாநாடு சிறப்புற நடந்தேறுவதற்கான ஆக்கப்பூர்வ பணிகளை இந்திய ஆய்வியல் துறையுடன் இணந்து மேற்கொண்ட உலகத்தமிழாராய்ச்சி நிறுவன இயக்குனர் முனைவர் **கோ.விசயராகவன்** அவர்களும் உலகத்தமிழ் மற்றும் சோதிடவியல் ஆய்வு மையத்தின் நிறுவனர் முனைவர் **தி.மகாலட்சுமி** அவர்களும் பாராட்டுக்குரியவர்கள். இம்மாநாட்டில் கலந்து கொள்ளுகின்ற பேராளர்கள் அனைவருக்கும் இம்மாநாடு மிகுபயனைச்சேர்க்க வேண்டும் என விழைந்து வாழ்த்துகிறேன்.



பேரா. முனைவர் தி. மகாலட்சுமி
நிறுவனர்,
உலகத் தமிழ் மற்றும் சோதிடவியல் ஆய்வு மையம்,
தரமணி,
சென்னை 113.

பதிப்புரை

அறியாமையிலிருந்து விடுவிப்பதும், இறையுணர்வைப்பெற்று அவ்வுணர்வில் தொடர்ந்து இருப்பதற்கான பயிற்சியைச் செய்து கொண்டிருப்பதன்வழி பிறப்பில்லாப் பெருவாழ்வை அடையச் செய்வதும் ஆன்மிகவாழ்வின் நோக்கமாகின்றது. சிந்தனைவளம் அறிவு, எதிர்காலத்தைப் பற்றிய சரியான ஊகிப்பு ஆகியவற்றைப் பெற்ற நிறைவான, வளமான வாழ்வு இவ்வான்மிகத்தால் அமையும். இப்பயணத்தில் பலரும் அவரவர் சக்திக்கு ஏற்றாற்போல் முன்னேறிச் செல்கின்றனர்.

நம்முடைய கல்வியில் மெய்ஞானக் கல்வியும், குறிப்பிடத்தக்க அளவில் இடம்பெறுதல் வேண்டும். அப்போதுதான் பிற கல்வியால் பெற்ற அறிவு முழுமைபெறும். மெய்ஞானக் கல்வியாகத் திருமந்திரம் திகழ்கின்றது. நம் உயிர்தான் கடவுள். நாம் கண்ணால் பார்ப்பது, நினைப்பது, செயல்படுவது ஆகியவை நம்செல்களில் பதிந்து அவையே நம்முடைய செயல்பாடுகளாகின்றன. இதை நாம் உணரும்போது இறையாற்றலை நம்முள் பெறமுடியும். இதை உணர மனத்தை ஒருமுகப்படுத்தவேண்டும். நம்மை நாம் யார் என அறிய ஒவ்வொரு நாளும் முயல வேண்டும். பிறர் குறையைக் காணாது நம்முடைய குறையை நாளும் திருத்திக்கொள்ளல் வேண்டும். மனம் பக்குவப்பட வேண்டும். அனைத்து உயிர்களிடமும் அன்பு காட்ட வேண்டும். பிறருக்கு உதவுதல், தன்னலம் கருதாது உதவுதல் வேண்டும். இத்தகைய பயிற்சிகளை மேற்கொள்ளும்போது இறையாற்றலுடன் கூடிய மனவலிமையைப் பெறுதல் இயலும். இல்லற வாழ்விலிருந்துகொண்டே பேரின்பவாழ்வு வாழ்ந்து பிறவா நிலையை அடையமுடியும்.

ஞானநூல்களைப் படித்தல், பிறரையும் படிக்கச் செய்தல், அதன் பொருளைப் பிறரையும் கேட்கவைத்தல், தான் கேட்டது படித்தது ஆகியவற்றைப் பற்றிச் சிந்தித்தலே எழில்ஞான பூசை. இதைத் திருமந்திரம் நன்கு உணர வைக்கின்றது. தான்பெற்ற இறை அனுபவத்தைப் பேரின்பத்தைப் பிறரும் பெறவேண்டும் என்ற கருணையின் வெளிப்பாடே திருமந்திரம். இது தோத்திர, சாத்திர நூலாகவும் தெய்வத்தன்மை, அறிவியல் தன்மை நிறைந்த மறைபொருளாகவும் உள்ளது.

தனிமனித ஒழுக்கம், அறம் சார்ந்த வாழ்க்கை போன்ற வாழ்வியல் நெறிகளை ஒன்றுபோல் திருமந்திரமும் திருக்குறளும் கூறுகின்றன. மேலும் திருக்குறள் பேரின்ப நிலையை, பிறவா நிலையை அடையச் சூக்குமமாகப் பல செய்திகளைப் புரிய வைக்கிறது. இதுபோன்ற பல நுட்பமான சூக்குமச் செய்திகளைத் தன்னுள்ளே கொண்டுள்ள திருமந்திரம் மூச்சுப்பயிற்சி, ஆசனம், தியானம் போன்றவற்றைச் செய்முறைப்பயிற்சியாகவும் கூறுகின்றது. தமிழிலக்கிய வரிசையில் இடம்பெற்றுள்ள நூல்களுள் குறிப்பாகத் திருமுறைகளுள் திருமந்திரத்தில் மட்டுமே மூச்சுப்பயிற்சி, ஆசனம், தியானம் போன்ற செய்திகள் இடம்பெற்றுள்ளன.

மக்கள்நலத்திற்குப் பெரிதும் உதவும் அனைத்துச் செய்தி களையும் அறிவியல் சார்புடன் திருமந்திரம் மிகச்சிறப்பாக நுட்பமாக எடுத்துரைக்கிறது. வரையறுக்கப்பட்ட ஒழுகலாறுகளுடைய பண்பட்ட சமுதாயத்தை உருவாக்கி, மனித வாழ்க்கையைப் பொருளுள்ளதாக, ஒளியுடையதாகச் சீரமைக்க அகம்சார்ந்த, புறம்சார்ந்த, சமயம் சார்ந்த ஒழுங்குமுறைகள் எவ்வாறு சிறக்கவேண்டும் எனக்கூறுகின்றது. அன்பும், ஆண்டவனும் ஒன்று என்று உணர்த்தி, இப்பண்பட்ட ஒழுக்கம் மேலோங்க மேலோங்க இறையுணர்வு தானே வரும், உண்மை வாழ்க்கை, பொருளுடைய வாழ்க்கை அமையும் என்கின்றது. முறையான உணவு, நல்லபழக்கம், உடற்பயிற்சி, புலனடக்கம், சமயப்பண்பாட்டுடன் கூடிய வழிபாட்டு நெறிகள் போன்றவற்றைக் கூறுகின்றது.

திருக்குறளுக்கு ஒப்பான இத்திருமந்திரம் மனிதன் உளமகிழ்வுடனும், உடல் நலத்துடனும் நிறைவாழ்வு வாழ்ந்துபிறவா நிலையை அடைவதற்கான செய்திகளை மேற்கூறியதுபோன்று பலநிலைகளில் எடுத்துரைக்கின்றது. இந்நூற்பயனை மக்கள் அனைவருக்கும் கொண்டுசெல்லும் நோக்கில் 27-01-2016 அன்று திருமந்திர மாநாடு மலாயாப் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

மலாயாப் பல்கலைக்கழகத்தில், அப்பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறையும், உலகத்தமிழ் மற்றும் சோதிடவியல் மார்ச் 2016இல் ஆய்வு மையமும் **இரண்டாம் சோதிட மாநாடு** நடத்தலாமென்று முடிவு செய்தது. உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தில் எனது பொறுப்பில் **திருமந்திரமும் வாழ்வியலும்** என்ற பட்டயவகுப்பு நடைபெற்று வருகின்றது. எனவே அந்நிகழ்வின் போதே திருமந்திர மாநாட்டையும் நடத்துங்கள் என்று நிறுவன இயக்குநர் **கோ.விசயராகவன்** கூறியதன் அடிப்படையில் இந்தத் திருமந்திர மாநாடு நடைபெறுகின்றது. இம்மாநாட்டில் இடம்பெறும் பன்னாட்டுக் கருத்தரங்கிற்காக 91 ஆய்வாளர்கள் கட்டுரை வழங்கியுள்ளனர். இந்த அனைத்துலகக் கருத்தரங்கக் கட்டுரைத் தொகுப்புகள் **ஊன் உடம்பு ஆலயம்** எனும் பெயரில் வெளி வருகின்றது. இந்நூலிற்கு வாழ்த்துரை நல்கிய பாரத் பல்கலைக் கழகத் துணைவேந்தரும் தமிழ் ஆர்வலருமான மேன்மைமிகு **முனைவர் மு.பொன்னவைக்கோ** அவர்களுக்கு நிறுவனத்தின் சார்பிலும் பல்கலைக்கழகம் சார்பிலும், எங்களது ஆய்வு மையம் சார்பிலும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூல் வெளியிடும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, திருமந்திர மாநாட்டிற்கான அனைத்து ஒத்துழைப்பையும் குறைவற உளமகிழ்வுடன் நல்கிய **இயக்குநர் கோ.விசயராகவன்** அவர்களுக்கும், தங்களது பல்கலைக்கழகத்தில் நடத்திக் கொடுக்கும் மலாயாப் பல்கலைக் கழக இந்திய ஆய்வியல் துறையின் தலைவர் **ஆர்.மோகனதாஸ் இராமசாமி** அவர்களுக்கும், அனைத்து பணிகளையும் பொறுப்பேற்று நடத்திக் கொடுக்க இருக்கும் **பேரா.கோவி.சிவபாலன்** அவர்களுக்கும், பல்வேறு வழிகளில் இக்கருத்தரங்கிற்குத் துணைபுரிந்த அத்துணை நல் உள்ளங்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கட்டுரை வழங்கிய பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், தமிழ் மற்றும் பிறதுறை ஆர்வலர்கள் அனைவருக்கும் நன்றி. கட்டுரை அளித்ததோடு மட்டுமன்றி, தங்கள் கட்டுரையை வழங்க மலாயாவிற்கு வரும் ஆய்வாளர்களுக்கும் எனது பாராட்டுதல்களை நன்றியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒளி அச்சுகோர்வைப் பணியினை சிரத்தையுடன் ஆற்றிய நண்பர் திரு.சதானந்தன் அவர்களுக்கும் என் அன்பான நன்றி.

பொருளடக்கம்

1. தமிழும் திருமந்திரமும் 1
- முனைவர் கோ.விசயராகவன்

2. திருமந்திரம் காட்டும் ஆன்மிக வாழ்வு 15
- முனைவர் தி. மகாலட்சுமி

3. சிவபரத்துவம் 21
- தருமலிங்கம் நடராசன்

4. திருமூலர் சுட்டும் குரு 27
- சிவத்தமிழ் செல்வர்
முனைவர் நாகப்பன் ஆறுமுகம்

5. தமிழ் ஞானம் தந்த தலை ஞானம் - திருமந்திரம் 32
- இளமுனைவர் பெரியய்யா

6. நாரிமருந்து 38
- மருத்துவர் பொன் மாணிக்கவள்ளி

7. சிவ சிவ என்கிலர் தீவினையாளர் 43
- மரபு வழிச் சித்தர்
அனுப்பபட்டி ப.சு.மணியன்

8. மறைமொழி பகரும் அறவழி 47
(திருமந்திரத்தில் அறம்)
- பால சீனிவாசன்

9. மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழில்
திருமந்திரப் பண்பாடு 55
- மீனாட்சி அழகப்பன்

10. திருமந்திரத்தில் உட்கூறு 63
- சக்தி போகர்தாசன்

11. பத்தாம் திருமுறை திருமந்திரமும்
- நாலாயிரத்திவ்யப்பிரபந்தமும் 68
- ந.ா.ஜெயலெட்சுமி

12. திருமந்திரத்தில் மருத்துவம் 74
- மருத்துவர் ஆ. சிவகுமார்

13. திருமந்திரம் அளித்த அகத்துவம் எட்டு 78
- முனைவர் நா. தாமோதரன்

14. திருமந்திரத்தில் முழுமையான முதல்வன் 87
- மீ.கோமதி

15. திருமந்திரத்தில் நிலையாமை 92
- ராஜசுலோச்சனா
16. திருமந்திரத்தில் குருவணக்கம் 97
- லோ. கவிதா
17. திருமந்திரமும் சித்தர் பாடல்களும் - ஒப்பாய்வு 101
- முனைவர் செ. அகிலாண்டேஸ்வரி
18. திருமூலர் - ஒரு மீள்பார்வை 107
- முனைவர் பொ. சத்தியபாமா
19. திருமூலரின் பல்துறைச் சிந்தனைகள் 113
- முனைவர் ந. கிருட்டினமூர்த்தி
20. திருமூலரின் மூப்பு, இறப்புச் சிந்தனைகள் 120
- முனைவர் ஔவை இரா. நிர்மலா
21. திருமந்திரத்தில் காலம் போற்றும் பண்பாட்டு நெறிகள் 126
- முனைவர் பா. ஜான்சிராணி
22. திருமந்திரத்தில் காலத்தால் அழியாத சமுதாய வாழ்வும் சிந்தனைகளும் 129
- முனைவர் க. சங்கர்
23. திருமந்திரத்தில் திருமந்திர மாலை 133
- க. முத்து
24. திருமூலரின் திருமந்திரம் தந்த வாழ்வியல் 137
- இளம் டாக்டர் ஹேமாத்திரிதாசன்
25. திருமந்திரம் பேசும் கடவுள் துகள் 140
- ச. திலகவதி
26. திருமந்திரம் மனநலம் பற்றிய சிந்தனைகள் 145
- இரா. வேம்பு
27. நல்வாழ்வு வாழத் திருமூலர் தந்த திருமந்திரம் 150
- ச. ரமேஷ்
28. சமுதாயத்தைக் கட்டமைக்கும் தனிமனித ஒழுக்கம் 157
- தா. மார்டின் செல்லதுரை
29. திருமந்திரத்தில் சிவபூஜை 162
- வி. இந்துமதி
30. பிரபஞ்ச இரகசியத்தின் ஓவியர் மு. நமசிவாயம் 167
- தொகுப்பு: P. குமார் & S. குமார்

31. திருமந்திரம் காட்டும் பக்தி நெறி 172
- முனைவர் கா. ஆறுமுகம்
32. திருமந்திரத்தில் வள்ளுவம் 176
- முனைவர் ஆ. பாக்கியலட்சுமி
33. திருமந்திர வாழ்வில் வழிகாட்டி 180
- முனைவர் கி. இலட்சுமி
34. திருமந்திரமும் திருகுறளும் - ஓர் ஒப்பீடு 184
- தேவி. மு
35. திருமந்திரத்தில் சமுதாயக் கருத்துகள் 189
- முனைவர் க. சேக்மீரான்
36. திருமந்திரத்தில் வாழ்வியல் 193
- வி.கே. கவிதா
37. திருமந்திரம் உணர்த்தும் அட்டாங்க யோகம் 196
- ந.ஞானரத்தம்
38. திருமந்திரத்தில் தனிமனித நலன் 200
- முனைவர் மார்த்தாண்ட பூபதி
39. திருமந்திரத்தில் சைவசமயக் கோட்பாடுகள் 206
- முனைவர் சொர்ணபிரபா
40. திருமந்திரம் - ஓர் மருத்துவப் பேரறிவியல் 211
- முனைவர் ம.பா. அகத்தியர்
41. திருமந்திரத்தில் திருனர் 216
- முனைவர் கி. அய்யப்பன்
42. திருக்குறளும் திருமந்திரமும் 221
- வித்வான் - கவிஞர்
முனைவர் சேது இராமலிங்கம்
43. திருமூலர் கூறும் துறவு நிலை 224
- முனைவர் பா. சுமத்திரா
44. ஊழ் வினை - நால்வரும் திருமூலரும் ஓர் ஒப்புமை 229
- முனைவர் பழ. முருகேசன்
45. திருமந்திரமும் மானுட வாழ்க்கையும் 233
- பா. அனுராதா
46. திருக்குறளும் திருமந்திரமும் -
அதிகார வைப்பு ஒப்பீடு 237
- முனைவர் இரா. சங்கரப்பன்

47. திருமூலர் திருமந்திரத்தில் சிவதொன்மம் 244
- து. அருண்பாண்டியன்
48. திருமந்திரம் கூறும் இல்லற வாழக்கை 249
- திருமதி து. பத்மபிரியா
49. திருமூலர் திருமந்திரத்தில் இறைமை 256
- வே. அருட்பாமணி
50. திருமூலர் காட்டும் வாழ்வியல் தத்துவம் 263
- ஜி.மனோகர்
51. திருமூலர் காட்டும் விஞ்ஞானமும்
மெய்ஞ்ஞானமும் 269
- எம். வெங்கடாசலபதி
52. மந்திரமாவது 276
- முனைவர் ஆ. தசரதன்
53. வாழ்வும் திருமந்திரமும் 281
- முனைவர் ஜெ.ஜெயவாணிஸ்ரீ
54. திருமந்திரமும் மனித வாழ்க்கையும் 287
- இரா. ஆனந்த ஜோதி
55. திருமந்திரத்தில் கருத்து வளம் 292
- முனைவர் அ. கந்தசாமி
56. திருமந்திரத்தில் சித்தர் நெறி 298
- இரா. ஆனந்தி
57. திருமந்திரத்தின் சிறப்புகள் 305
- ம. பத்மாவதி
58. திருமந்திரத்தில் திருவடி 310
- ஆரோக்கியதாஸ்
59. திருமந்திரத்தில் மனிதப் பண்புகள் 314
- இல. பிரவின் பீற்றர் ஞானையா
60. திருமந்திரத்தில் யோகக் கலை 319
- து. பாண்டிக்குமார்
61. திருமந்திரத்தில் கூறும் நெறிகள் 324
- வெ.ச. சரவணன்
62. திருமந்திரத்தில் மனம் 330
- சண்முக வடிவு
63. திருமந்திரத்தில் மும்மலங்கள் 337
- தேன்மொழி

64. திருமந்திரம், சிலப்பதிகாரம் வழி அரசாட்சி 341
- ப. கல்விராயன்
65. திருமந்திரம் கூறும் சாகாகல்வி 346
- சி.கங்காதரன்
66. திருமந்திரத்தில் சக்கர வழிபாடு 350
- ம. சுந்தர்
67. திருமந்திரத்தில் அரசாட்சி முறை 356
- வேணு
68. பன்னிரு திருமுறைகளுக்குள் திருமந்திரம் 361
- முனைவர் சு. சுஜா
69. உடற்கூற்று அறிவியல் நோக்கில்
சித்தர்களும் திருமூலரும் 368
- முனைவர் க. முருகேசன்
70. திருமூலரின் சமய சன்மார்க்கநெறி 375
- ச.ஞானசம்பந்தன்
71. திருமந்திரமும் விநாயகர் அகவலும் 383
- முனைவர் ச. முத்துச்செல்வி
72. திருமூலரின் தனிமனித அறங்கள் 387
- முனைவர் பி.பகவதி
73. திருமந்திரம் ஒரு அருமந்திரம் 391
- முனைவர் ஆ.இரா.பாரதராஜா
74. பொய்யாமொழியும் மறைமொழியும் 397
(திருக்குறள்-திருமந்திரம் ஒப்புமைகளில் சில)
- பால சீனிவாசன்
75. திருமூலர் திருமந்திரத்தில் வாழ்வியல் சிந்தனை 404
- த. சக்கரவர்த்தி
76. திருமந்திரமும் செந்தமிழ் ஆகமச் சடங்குகளும் 407
- அகோர சிவம் ச.மு. தியாகராஜன்
77. திருமூலரும் ஆகமமும் 415
- பொன்.எழில் குமார்
78. திருமூலர் பெருமான் வரலாறு 418
- கோ.கோபிநாத்
79. திருமூலரின் இறைமைச் சிந்தனை 422
- எஸ்.குணராஜா

80. திருமூலர் கூறும் திருமந்திரத்தில் உடல்உயிர் தத்துவங்கள் 425
- மருத்துவர் எ. கன்னியப்பன்

81. திருமந்திர அமைப்பியல் 429
- சுதாகர்

82. திருமூலரும் திருமந்திரமும் - ஒரு வரலாற்றுச் சுருக்கம் 432
- சிவத்திரு ந. தட்சிணாமூர்த்தி

83. திருமூலரின் அறச்சிந்தனை 434
- ஏ. ஏழுமலை

84. திருமந்திரம் காட்டும் நிலையாமைக் கருத்துகள் 436
- முனைவர் சு. சசிகலா

85. திருமந்திரம் வெளிப்படுத்தும் முதல்தந்திர சிறப்பு 440
- மு.க. ஞானசம்பந்தம்

86. நடுவுநிலைமை பற்றித் திருக்குறள், திருமந்திரம் ஒப்பீடு 443
- மா. பாலமுருகன்

87. பெரியாரை துணை கோடல் திருக்குறள், திருமந்திரம் ஒப்பீடு 445
- ப. ஆனந்தன்

88. ஊழ் பற்றித் திருக்குறள், திருமந்திரம் ஒப்பீடு 447
- முனைவர் க. காந்திதாஸ்

89. திருமூலர் + திருமந்திரம் = இறைநெறி 449
- ஆய்வியல் நிறைஞர் இர. அருள் நிதி

90. திருமந்திரம் உணர்த்தும் மந்திரம், தந்திரம், இயந்திரம் 452
- ச. ஞானசம்பந்தம்

91. திருமந்திரத்தில் கர்ப்பக் கிரியையும் பரியங்க யோகமும் 460
- முனைவர் மரு. சு. இரவீந்திரன்

1. தமிழும் திருமந்திரமும்



முனைவர் கோ. விசயராகவன்
எம்.ஏ., எம்.ஃபில், பி.எட், பிஎச்.டி.
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை 600 113.

முன்னுரை

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே (திரு. 152)

என்று தன்னை இறைவன் இவ்வுலகில் படைத்ததே தமிழ்த் தொண்டிற்காக என்று திருமூலர் கூறுகின்றார். அத்தகைய செந்தமிழ், வண்டமிழ், ஒண்டமிழ், தீந்தமிழ், பைந்தமிழ், இயற்றமிழ், தண்டமிழ் என்றெல்லாம் இம்மொழிக்கு அடை மொழிகள் அளித்து அறிஞர்கள் அழைத்து வருகின்றனர். திருமூலம் உலகெலாம் உயர்ந்திட, அலகிலாத் தத்துவங்கள் அடங்கிய, எளிய சொற்களாலான நூல் திருமந்திரம். 'தமிழும் திருமந்திரமும்' என்ற இவ்வாய்வுத் தலைப்பிலான கட்டுரையை இனிக் காண்போம்.

தமிழ்

அருளாளர்கள் தாம் உணர்ந்தவற்றைப் பிறர் உணருவதற்கு ஊடகமாக இருப்பது மொழி ஆகும். அம்மொழி உணர்த்துவதற்குத் தேவையான சொற்களைத் தன்னகத்தே பெற்றிருக்க வேண்டும். அத்தகைய ஞானமொழியாகத் தமிழ்மொழி சிறந்து விளங்குகின்றது.

இன்பத்தமிழ், உலகறிந்த உயர்தமிழ் 'ழ' கரம் பெற்ற நற்றமிழ், சிந்தை இனிக்கும் செந்தமிழ், ஒழுக்கம் தந்த ஒண்டமிழ், தாலாட்டும் தண்டமிழ், அறம் நல்கும் அன்புத்தமிழ், வீரம் கண்ட வெற்றித் தமிழ், வளம் படைத்த வண்டமிழ் என்று தமிழ்வழி திருமந்திரத்தில் கூறும் கருத்துகளைப் பற்றிய கண்ணோட்டம் ஈண்டு எடுத்துரைக்கப்படுகின்றது.

தமிழிலே போற்றுதல் வேண்டும்

இறைவனை, ஈசனை, தென்னாடுடைய தலைவனைத் தமிழிலே போற்றுதல் வேண்டும். அதுவே அவனுக்குப் பிடித்தமான ஒன்றாகும். இதனைச் சிவனே கூறுகின்றார். ''வன்மை பேசி வன்தொண்டன் என்னும் நாமம் பெற்றவனை நமக்கு அன்பில் பெருகிய சிறப்பில் மிக்க அர்ச்சனை பாட்டே ஆகும். ஆதலால்

மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடு'' என்று சுந்தருக்கு இறைவன் கட்டளை இடுகின்றார்.வடமொழிச் சொற்களைத் தவிர்த்து திருநாவுக்கரசரின் போற்றித் திருத்தாண்டகம்,திருவாசகத்தின் போற்றித் திருஅகவல் பகுதியில் உள்ள போற்றித் துதிகளைப் பாடவேண்டும்.

திருமந்திரம்

திருமந்திரம் மூவாயிரம் பாடல்களைத் தன்னகத்தே கொண்டது. இப்பாடல்களில் முதல் ஆயிரம் வேதங்களையும், அடுத்த ஆயிரம் ஆகமங்கள்,குருசீடன் உறவு, நிலம் , நீர், நெருப்பு, ஆகாயம், காற்று இவை குறித்தும், மூன்றாவது ஆயிரம் ஷாக்தம் (சக்தி) விஞ்ஞானம்,மெய்ஞானம் குறித்தும் விளக்குகின்றன.

சுதானந்த முனிவர் - திருமூலராக மாறியது

திருக்கையிலாயத்தில் சுந்தரானந்தர் என்ற முனிவர் இருந்தார். அவர் தென்னகத்தில் பொதிகைமலையில் இருந்த அகத்தியரிடம் தமிழ்ப் பாடம் கேட்க மிகுந்த ஆர்வம் கொண்டு காசி, காளஹஸ்தி, காஞ்சிபுரம், சிதம்பரம் போன்ற திருத்தலங்களைத் தரிசித்துக் கொண்டு இறையருளைப் பெற்று வந்து கொண்டிருந்தார். திருவாவடுதுறையை நோக்கி வந்து கொண்டிருந்த நேரம். அங்கு மாலை வேளையில் கீழே பசுக்கூட்டம் கண்ணீர் மல்க இருப்பதைப் பார்த்துக் (ஆகாச மார்க்கமாக வந்துகொண்டிருந்தபோது) கீழே இறங்கிப் பசுக்களை மேய்த்துக் கொண்டிருந்த ஒருவன் இறந்து கிடப்பதைப் பார்த்தார்.

பசுக்கள் படும் துயரம் இவரை வேதனைப்படுத்தியது. அவருக்கு அட்டமா சித்திகளில் ஒன்றான கூடுவிட்டுக் கூடு பாயும் வித்தை தெரியும். ஆதலால், தனது உடலை ஆலமரத்தின் அடியில் வைத்துத் தனது ஆன்மாவை அச்சிறுவன் உடலில் செலுத்தி உயிர்ப்பித்தார். இடையன் எழுந்தவுடன் பசுக்கள் மிகவும் ஆனந்தப் பட்டு வீட்டிற்குச் சென்றன.அந்த இடையனுக்கு மூலன் என்று பெயர். புதிய மூலன் வீட்டை அடைந்ததும், அவனது நடை உடை, பேச்சு, செயல்களில் மாற்றம் இருப்பதை உணர்ந்த மூலனது மனைவி தனது உற்றார்,உறவினரிடம் தெரிவித்தாள்.

இந்த நிலையில், மாடு மேய்க்கச் சென்ற மற்ற இடையர்கள் ஆலமலரத்தில் தாடி, சடைமுடி, நெற்றியில் திருநீறு, கழுத்திலே ருத்ராட்ச மாலை, கையில் கமண்டலம், பிரம்புக்குச்சி, இவைகளோடு இருக்கும் அந்த உருவத்தைக் கீழே இறக்கித் தீ வைத்தனர். மூலன் உடலில் இருந்த சுந்தரானந்தர் என்ற யோகிக்கு தீ பற்றி எறிவது தெரிந்து அந்த ஆலமரத்தடிக்கு வந்தார். அவர்

வருமுன் அவ்வுடல் எறிந்து சாம்பலாகியது. இறைவன் அசரீரி வாக்கின் மூலம் 'நீ' மூலன் உடம்பில்' இருந்து பாடல் இயற்றுவாயாக' என்று தெரிவித்தார். இது இறைவனின் கருணை என்று எண்ணி அன்று முதல் மூலன் உடலிலேயே தங்கி ஆண்டிற்கு ஒரு பாடல் வீதம் மூவாயிரம் ஆண்டுகள் இருந்து மூவாயிரம் பாடல்கள் பாடியதாக வரலாறு.[1]

திருமந்திரம்

ஒரு சித்திரை மாதம் முழுநிலவு நாளில் முதற்பாடலாக விநாயகப் பெருமானைப் பற்றிப் பாடல் பாடினார்.

ஐந்து கரத்தனை யானை முகத்தினை
இந்திரன் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன் தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

இப்பாடல் ஐம்பூதங்களையும் தன்னகத்தே கொண்ட விநாயகரைக் குறித்துப் போற்றிப் பாடலாகும். மேலும் வேத, வேதாந்த, ஆகம, சைவ சித்தாந்தக் கருத்துகளையும் கொண்டது.[2]

இப்பாடல் பிற்சேர்க்கை எனக் கூறுவாரும் உளர்.

சிவபெருமானுக்கு நந்தி என்ற பெயரும் உண்டு என்பது திருமூலருடைய சித்தாந்தம். சிவபெருமானை நந்தி என்று சொன்னவர் திருமூலரே. திருமூலருக்கு முதல் குருவாக, மோன குருவாக, ஞானகுருவாக, அருள்குருவாக நந்தி திருமந்திரமாயிற்று.

நமசிவாய

சிவம் கூற்றைத் திருமூலர் எடுத்துக்காட்டுகின்றார்.

இம்மண்ணுலகில்

ந- காஞ்சிபுரத்தில் மண்ணாகவும், (பூமி - நிலம்)
ம- திருவானைக்காவில் நீராகவும் (நீர்)
சி- அண்ணாமலையில் நெருப்பாவும் (தீ)
வா- காளஹஸ்தியில் காற்றாகவும் (காற்று)
ய- சிதம்பரத்தில் ஆகாயமாகவும்

என்ற சிவக்கூற்றைத் திருமூலர் காட்டுகின்றார்.

சிவகுடும்பத்தினரைத் திருத்தலங்களோடு ஒப்பிடுகின்றார்.

திருவலஞ்சுழியை - விநாயகராகவும்,
சுவாமிமலையை - முருகனாகவும்
திருஆரூரை - (சோமாஸ்கந்தர்) சோமன் உமை சுந்தரனாகவும்
சிதம்பரத்தை - நடராசராகவும்
சீர்காழியை - பைரவராகவும்
சூரியனார்கோவிலை - நவக்கிரகமாகவும்

சேய்ஞலூரை - சண்டிகேஸ்வரராகவும்
(சேங்கனூர்)
திருஆரூரை - நந்தியாகவும் வணங்கும் முறையில்

திருஞான சம்பந்தர் பாடுகின்றார். திருவாவடுதுறைப் பெரு மானைப் பாடும்போது (நந்தியருகில் நின்று) திருமூலர் நினைவு வரவே திருஞானசம்பந்தருக்குத் திருமந்திர நூல் கிடைத்ததாம். இந்நிகழ்வைச் சேக்கிழார் தமது நூலில் பதிய வைக்கிறார்.

'வாசி தீரவேகாசு நல்குவீர்' என்ற பாடல் பாடியதின் சுருக்கமே என்று பன்னிரண்டாம் திருமுறையில் சேக்கிழார் மேற்கோள் காட்டுகின்றார்(ப-51).

கயிலையில் சுந்தரரோடு படித்தவர்கள்
'நந்தி அருள்பெற்ற சாதரை நாடிடின்
நந்திகள் நால்வர்,சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரன்
என்றிவர் என்னுடன் எண்மரும் ஆமே

வடகயிலை மலையில் குருகுலத்தில் இவர்கள் எல்லோரும் தமிழ்மொழியில்தான் படித்தார்கள். இந்த நிலையில் இறைவனே தமிழ்ப் பாடச்செய்தான் என்று திருமூலர் வாக்கால் அறிகிறோம்.

என்னைநன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே
தந்திரம் ஒன்பது சார்பு மூவாயிரம்
சுந்தரன் ஆகம செம்மொழி தந்தானே

திருமூலர் தமது பாடலில் தமது முழுமுதற் கடவுள் சிவபெரு மானே என்றும், அவனே தம் தலைவன் என்றும்,பெரும்தெய்வம் என்றும்,நேச நிறைதெய்வம் என்றும் குறிப்பிடுகின்றார்.

ஆதிபரந்தெய்வம் அண்டத்து நற்றெய்வஞ்
கோதியடியார் தொடரும் பெருந்தெய்வம்
நீதியுள் மாதெய்வ நின்மலன் எம்மிறை
பாதியுள் மன்னும் பராசக்தி யாமே (1737)

என்று உமையொரு பாகனாய் சிவனைப் பார்க்கிறார். சிவனைப் பார்த்த நிலையை இப்பதிகத்தில் காட்டுகின்றார்.

ஆடியும் பாடியும் அழுதும் அரற்றியுந்
தேடியுங் கண்டேன் சிவன்பெருந் தன்மையைக்
கூடியவாறே குறியாக் குறிதந் தென்
ஊடு நின் றானவன் தன்னொரு நெற்றே (1785)

(சிவபெருமான் தனக்கு உணர்த்த, தான் உணர்ந்த பேரானந்த நிலையை) ஆடியும், பாடியும், அழுதும், புலம்பியும் பெற்ற காட்சியைத் தமிழில் கூறுகின்றார்.

திருமந்திரமும் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகமும் என்பதில் வரும்,

காளியோ டாடிக் கனகா சலத்தாடிக்
கூளியோ டாடிக் குவலயத் தேயாடி
நீடிய நீர்தீக் கால்நீள்வா னிபையாடி
நாளுற அம்பலத் தேயாடும் நாதனே (2700)

என்ற பாடல் ஒன்பதாம் தந்திரத்தின்கீழ் எட்டாவது அதிகாரமான திருக்கூத்து தரிசனம் என்பதில்(27) இருபத் தேழாவது பாடல். திருமூலர் தமது பாடலில் காளியை அடக்குவதன் பொருட்டு, சிவவெருமான் பொன்மலையாகிய மேரு மலையில், பேய்க் கூட்டங்களுடனும், நிலவுலகத்திலும், ஐம்பெரும் பூதங்களின் ஊடேயும் நின்றும், சீவர்கள் நீண்டநாள் வாழத் தில்லைச் சிற்றம்பலத்தின்கண் சிறப்புற நின்றும் ஆடுகின்றான் என்று கூறுகின்றார்.

காரைக்காலம்மையாரின் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் 2இல் முதலாவது பாடலாகப் பாடுகின்றார்.

எட்டி இலவம் ஈகை
சூரை காரை படர்ந்தெங்கும்
சுட்ட சுடலை சூழ்ந்த
சுள்ளி சோர்ந்த சூடர்கெளவப்
பட்ட பிணங்கள் பரந்த
காட்டிற் பறைபோல் விழிகட்பேய்
கொட்ட முழவங் கூறி
பாடக் குழகன் ஆடுமே

(திருவாலங்காட்டு மூத்த பதிகங்கள் - 2)

காரைக்கால் அம்மையார் இப்பாடலில் எட்டி, இலவம், ஈகை, சூரை, காரை, கள்ளி முதலிய மரங்களும், செடிகளும், சூழ்ந்ததும் கழுகுகளால் குடல் கெளவப்பட்ட பிணங்கள் நிறைந்ததுமான சுடு காட்டில் பரந்து வட்ட வடிவம் கொண்ட விழிகளை உடைய பேய் முழவங் கொட்ட, கூளி பாடக் குழகன் ஆடுவான் என்று கூறுகின்றார்.

இவ்விரண்டு பாடல்களும் சிவபெருமான் ஆடுவதைக் காட்டு வனவாக அமைந்த போதிலும் வாழ்க்கையின் தொடக்கத்தைக் காட்ட சிவபெருமான் ஆடுவதாகக் கூறுகின்றார்.

ஆக இருபெரும் சிவஞானிகளுமே சிவபெருமான் நடனத்தைக் கூறுவதாகவே அமைகின்றது.

திருமந்திரம்- செந்தமிழ்

செந்தமிழ்த் திருவைந்தெழுத்து எனப்படுவது 'சிவாயநம' என்பதாகும்.

சிவன ருளாய சிவன்திரு நாமஞ்
சிவனரு ளான்பமாத் திரோத மலமாயை
சிவன்முத லாகச் சிறந்து நிரோதம்
பவம தகன்று பரசிவ னாமே (2661)

இப்பாடல் திருமூலர், செந்தமிழ் திருவைந்தெழுத்துச் சிவபெருமானின் திருமேனியாகும் என்றும், அதனால் அம்மறை திருவருளேயாகும் என்றும், அது 'சிவயநம' எனப்படும் என்றும், அத்திருவெழுத்தைந்தும் முறையே சிவன், அருள், ஆன்மா, திரோதம், மலமாயை என்று மெய்ப்பொருளின் ஐந்திணையும் தனித்தனியாகக் குறிக்கும் ஐந்து சொற்களின் முதலெழுத்தாகும் என்று கூறுகின்றார்.

சிவயநம எனக் காதலாகி நற்றவம் புரிதல் வேண்டும்;
அத்தவத்தின் பயனாக மலமாயை
கன்மங்கள் அகன்று அடங்கும்

அதனால் பிறப்பறுத்துத் திருவடிப் பேறாம் சிறப்புற்று அவ்வுயிர் சிவனாகி மிளா அடிமையாய் வாழ்ந்திருக்கும் என்றும் கூறுகின்றார்.

இறைவனை அடைக்கலமடைதல்

சிந்தித்து ஆராய்ந்து மனம் தெளிந்தவர்களுக்கு இறைவனின் திருமேனி மூலம் அடைக்கலமாகவும், சிவமாகவும், சிவலோகமாகவும், செங்கதியாகவும், விளங்குகின்றது.

திருவடி யேசிவ மாவது தேரில்
திருவடி யேசிவ லோகம்சிந் தித்தல்
திருவடி யேசிவ செப்பில்
திருவடி யேதஞ்சம் உள்தெளி வார்க்கே

என்ற இப்பாடல் மேற்கூறிய கூற்றுக்கு அரணாக அமைந்துள்ளது.

(குரு- சீடன் உறவு முறை)

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே

தமிழும் திருமூலரும் (ஓங்காரம்)

எட்டு என்னும் எண் தமிழில்அகரமாக எழுதப்பெறும். இரண்டு உகரமாக எழுதப்பெறும். 8 -அ, 2 - உ

இவை தமிழ் எண்கள்.

அ- ஓர; எழுத்து, ஓர; எண்.
உ- ஓர; எழுத்து - ஓர; எண்.

அ - எழுத்தாக எழுதும்போதும் படிக்கும்போதும் அகரம்.
எண்ணாக எழுதும்போதும் படிக்கும்போதும் எட்டு.
உ - எழுத்தாக எழுதும்போதும் படிக்கும்போதும்; உகரம்.
எண்ணாக எழுதும்போதும் படிக்கும்போதும் இரண்டு.

ஆகரம் உகரம் இவ்விரண்டும் சுட்டெழுத்துகள். தமிழில் சுட்டெழுத்துகள் மூன்று. அ,இ, உ.

அ - சேய்மைச் சுட்டு.
இ - அண்மைச் சுட்டு
உ - இடைநிலைச் சுட்டு

அ அவன்: அந்த - தூரத்திலுள்ளவனைக் குறிப்பது

இ இவன்: இந்த அண்மையிலுள்ளவனைக் குறிப்பது

உ உவன்: உந்த - தூரத்திலுமின்றி அண்மையிலுமின்றி இடை நிலையிலுள்ளவனைக் குறிப்பது.

அகரச்சுட்டும் இகரச்சுட்டும் ; பெருவழக்கு. உகரச்சுட்டு அரிதின் வழங்கும்.

எட்டும் இரண்டும் தெரியாதவன் என்றால் அகரம் உகரம் ஆகிய எழுத்துகளை அறியாதவன் என்ற பொருள். எழுத்தறிவு (எழுத்து வாசனை) இல்லாதவனை உனக்கு ஆனா ஆவன்னா தெரியுமா என்ற கேட்பது இன்றும் வழக்கிலுள்ளதன்றோ? அ உ தெரியுமா என்பது பண்டைய வழக்கு.

ஓங்காரத்தின் தனிச்சிறப்பு

அ உ அறியா அறிவில்இடை மகனே என்பது யாப்பருங்கல விருத்தியில் 7,37,95 ஆகிய மூன்று சூத்திரங்களின் உரையிலும் மேற்கோட்; செய்யுளில் வருகிறது.

தமிழில் அகர உகரங்கள் எண்ணாகவும் எழுத்தாகவும் வழங்குவதால் அகரம், உகரம் ஆகிய எழுத்துகளை அறியாதவன் 8, 2 என்ற எண்களை அறியாதவன் என்னும் இரு பொருளிலும் எட்டிரண்டும்; அறியாதவன் என்பது வழங்கும். ஞானிகள் வழக்கில் உட்பொருள் வேறு. அகரம் , உகரம், மகரம் இம் மூன்றும் சேர்ந்தது ஓங்காரம் (அ உ ம் ஓம்). எட்டிரண்டும் தெரியாதவன் என்றால் அகர உகரங்கள் சேரந்த ஓங்காரத்ததை அறியாதவன் என்பது பொருள். அகரம் உகரம் இரண்டுந்தானே உள்ளன. மகரம் இல்லையே? மூன்றுங் கூடினாற்றானே ஓங்காரமாகும் என வினவலாம். ஏட்டி ரண்டும், அகர உகரம் என்பதிலுள்ளும் மகரமாய் நின்று அ உ ம் ஓங்காரமாகும். அது அகர உகரங்களை எழுத்தாகக் கொண்டு காணும் பொருள்.

இனி, இன்னொருபொருள்: 8 2 10. தமிழில் பத்து என்னும் எண் யகரமாக எழுதப்பெறும். யு -10. அ உ ய பஞ்சாக்கரத்துள் (சிவயநம என்பதில்) யகரம் ஆன்மாவைக் குறிக்கும். எட்டிரண்டும் அறியாமை என்பதற்கு எட்டிரண்டும் பத்து. பத்தாகிய (யகரமாகிய) ஆன்மாவை அறியாமை என்பது பொருள். இது அகர உகரங்களை எண்ணாகக் கொண்டு காணும் பொருள்.

எட்டும் இரண்டும் இருமூன்று நான்கெனப்
பட்டது சித்தாந்த சன்மார்க்க பாதமே (986)

என்னும் திருமந்திரத்தில் எட்டும் இரண்டும் பத்தென்பது கூறப் பட்டது. இரு மூன்று நான்கு. 2 3 4 10. இரண்டும் மூன்றும் ஒரு நான்கும் சேர்ந்தது பத்து.

1. அ உ ஓ, ஓங்காரம்.
2. அ உ 10 ஆன்மா

ஓங்காரத்தை உணராமை, ஆன்மாவாகிய தன்னை உணராமை ஆகிய இவ்விரண்டும்

எட்டிரண்டும் அறியாமையாம். இப்பொருளிற்றான் ஞானிகள் பாடியுள்ளனர்; வள்ளலார்; தமிழ் என்னும் சொல்லுக்கு இட்ட உரையில் அகரத்தின் பொருளை விளக்குமிடத்து அ அகண்டாகார சித்தை விளக்கும் ஓங்கார பஞ்சாக்கரத்துள் பதிநிலை அக்கரமாம் என்றும், அ - அகண்டாகார சித்கலாரூப ஓங்காரத்துட்பொருட் பிரதம விலக்கிய வியக்தி அக்கரம். பன்னீருயிர் நிலையிற்ற றலையாய முதலக்கரமாதலில், அதுவே பிரமாதி பரசிவாந்த நிலைகளுக்கும் அனாதியாதி காரணமாயுள்ள இயற்கையுண்மைப்; பரிபூரணப் பொருளி லக்காம் என்றும் அருளுகின்றா ர்.

ஓங்காரமும் பஞ்சாக்கரமும் சரிநிகர்; சமானமானவை. ஓங்காரம் மூலமந்திரம். பீஜமந்திரம். எல்லா மந்திரங்களையும் ஓங்காரமாகிய மூலமந்திரத்தைச் சேர்த்தே ஓதவேண்டும்.

பஞ்சக்கரத்திற்கு ஓங்காரம் தேவையில்லை. காயத்திரி போன்ற பெரிய மந்திரங்களிலும் ஓங்காரம் சேர்ந்திருப்பதைக் காணலாம். ஓங்காரத்தின் தனிச்சிறப்பு இதுவாகும்.

பஞ்சாக்கரம் ஒன்றே ஓங்காரம் இன்றி அமையும்.ஏனைய மந்திரங்கள் அனைத்தும் ஓங்காரம் இன்றி அமையா.

ஓங்காரம் மொழிப்பொது. தமிழிலும் ஓங்காரம் உண்டு. வடமொழியிலும் ஓங்காரம் உண்டு. ஓங்காரம் சமயப்பொது. சைவத்திலும் ஓங்காரம் உண்டு. வைணவத்திலும் ஓங்காரம் உண்டு. சமணத்திலும் ஓங்காரம் உண்டு. பௌத்தத்திலும் ஓங்காரம் உண்டு. பௌத்த மந்திரம்- ஓம் மணிபத்மஹூம். ஓம் வயிரபாணி ஹூம். கிறித்துவத்தில் ஆமென் (AMEN) இஸ்லாமியத்தில் ஆமீன் என்றும் வேறு வடிவங்களே. ஓங்காரம் உலக மொழிகளுக்கெல்லாம் பொது. ஓங்காரம் உலக சமயங்களுக்கெல்லாம் பொது. ஓங்காரமே வேதம். ஓங்காரமே ஆகமம். ஓங்காரமே திருமுறைகள். ஓங்காரமே ஓதிப்பயன் பெறுக.

ஓமெனும் ஓங்காரத் துள்ளே ஒருமொழி
ஓமெனும் ஓங்காரத் துள்ளே உருஅரு
ஓமெனும் ஓங்காரத் துள்ளே பலபேதம்
ஓமெனும் ஓங்காரம் ஒண்முத்தி சித்தியே — திரு.2676

ஓங்காரத் துள்ளே உதித்தைந்து பூதங்கள்
ஓங்காரத் துள்ளே உதித்த சராசரம்
ஓங்காரா தீதத் துயிர்;மூன்றும் உற்றன
ஓங்கார சிவ பரசிவ ரூபமே.

புஜீரணவம், பஞ்சாக்கரம் இவ்விரண்டையும் திருமந்திரத்துள் பலவிடத்துள் ; காணலாம்.

பஞ்சாக்கரம்

அஞ்செழுத்தாலே அமரந்தனன் நந்தியும்
அஞ்செழுத்தாலே அமரந்தபஞ் சாக்கரம்
அஞ்செழுத்தாகில் அக்கர சக்கரம்
அஞ்செழுத்துள்ளே அமர்ந்திருந்தானே திரு.934

ஐந்தின் பெருமையே அகலிடமாவதும்
ஐந்தின் பெருமையே ஆலய மாவதும்
ஐந்தின் பெருமையே அறவோன் ; வழக்கமும்
ஐந்தின் வகைசெயப் பாலனு மாமே திரு. 969

நமசிவாயம்; என்று பெயரிட்டோர் பலர்;. சிவாய நம எனப் பெயரிட்டவர்; ஒருவரும் இல்லை. இறைவன் திருநாமத்தினைத் தமக்குப் பெயராக வைத்துக்கொள்வர்.

மந்திரத்தை எவரும் பெயராக வைப்பதில்லை.

நமசிவாய என்பது பெயர். சிவாய நம என்பது மந்திரம்.

நமசிவாய என்பது வேதமுறை. சிவாய நம என்பது ஆகமமுறை.

நமசிவாய - சமயகுரு உபதேசிப்பது

சிவாய நம - ஞானகுரு உபதேசிப்பது

நமசிவாய - சாதாரண பக்குவிக்குரியது.

சிவாய நம - தீவிர பக்குவிக்குரியது.

நமசிவாய - இம்மை மறுமைப் பயன்களை அளிப்பது கருமசித்தி

சிவாய நம -சாத்திரத்துக்கு (அனுபவத்துக்கு) என்பது தெளிவு.

நமசிவாய - திருவாவடுதுறை ஆதீனவழக்கு.

சிவாய நம - தருமபுர ஆதீன வழக்கு.

திருமந்திரமும் சண்டேசுர நாயனார் புராணமும்

நூலொன்று பற்றி நுனியேற மாட்டாதார்
பாலொன்று பற்றினாற் பண்பின் பயன்கெடுங்
கோலொன்ற பற்றினாற் கூடா பறவைகள்
மாலொன்று பற்றி மயங்குகின்றார்களே (282)
செம்மை வெண்ணீற் றொருமையினார்
இரண்டு பிறப்பின் சிறப்பினார்
மும்மைத் தழலோம் பிய நெறியார்
நான்கு வேதம் முறைபயின்றா
தம்மை ஐந்து புலனும் பின் செல்லும் தகையார் அறுதொழிலின்
மெய்ம்மை ஒழுக்கம் ஏழுலகம் போற்றும்
மறையோர் விளங்குவது

-சண்டேசுர நாயனார் புராணம் (2)

மேலே தரப்பட்டிருக்கும் திருமந்திரப் பாடல். முதல் தந்திரத்தில் பதின்மூன்றாவது அதிகாரமான 'கல்வி' என்பதன்கீழ் ஆறாவது பாடலாகவும், திருமந்திரப்பா வரிசையில் 282 - ஆவது பாடலாகவும் அமைந்துள்ளது.

இப்பாடலில் திருமூலர், இறையடியை அடைவிக்கு நிறை நூல்களைப் பற்றுக் கோடாகக் கொண்டு சிவபெருமான் திருவடியை அடைய வேண்டும் என்றும், அவ்வாறு செய்யாதவர்கள் ஏதாவது ஒரு கொள்கையினைச் சார்ந்து கடும்பற்றுடன் இருப்பர் என்றும், மற்றவர்களுடன் பிணங்கித் துன்பம் விளைவிப்பர் என்றும், திருவைந்தெழுத்தாகிய செம்பொருள் செங்கோலைக் கைப் பற்றினால் ஐம்புலப் பறவைகள் அடங்கும் என்றும், இத்தகைய நன்னெறிக்கு உய்க்கும் நிலையுடைய கல்வியினை அறியாதார் உடல் உலக ஊண்களில் மயக்குற்றுப் பிறப்பு இறப்பாகிய தடுமாற்றத்தால் மயங்கித் துன்புறுகிறார்கள் என்றும் கூறுகின்றார்.

அடுத்து தரப்பட்டிருக்கும் பாடல், சேக்கிழாரால் அருளப்பட்ட 'சண்டேசுர நாயனார் புராணப் பாடலாகும். இது சண்டேசுர நாயனாரின் பண்புகளைப் பற்றிக் கூறுகிறது.

சேக்கிழார் தமது பாடலில், திருவேண்ணீற்றில் ஒன்றுபட்ட மனம் உடையவராய், இரு பிறப்பின் சிறப்பை உடையவராய், மூன்று தீக்களை வளர்க்கும் நெறியிலே நிற்பவராய், நான்கு மறை களையும் முறையாய்க் கற்பவராய், ஐந்து புலன்களும் தம்மைப்பின் செல்லும் இயல்பு கொண்டவராய், தாம் செய்யும் ஆறு தொழிலின் மெய்யான ஒழுக்கத்தை ஏழு உலகங்களும் போற்றத்தக்கவராய் உள்ள மறையவர் வாழும் ஊர் சேய்ஞலூராகும்(சேங்கனூர்) என்கிறார்.

பல்வேறு தமிழ்மறை நூல்களைத் துணையாகக் கொண்டோ அல்லது பல்வேறு கொள்கைகளைத் துணையாகக் கொண்டோ இறைவனடியை அடைய மாட்டாதவர்கள். திருவைந்தெழுத்தாகிய செம்பொருள் செங்கோலைக் கைப்பற்றினால் ஐம்புலப் பறவைகள் அடங்கும் எனத் திருமூலர் கூறுகின்றார். இதனை,

கோலொன்று பற்றினாற் கூடா பறவைகள்

என்னும் அழகான வரியின் மூலம் உணரலாம்.

அதேபோலப் பல்லாற்றானும் சிறப்பு வாய்ந்த நற்பண்புகளுடன் வாழ்ந்தவராய் சண்டேசுவரரைப் பற்றிக் கூறும் சேக்கிழார், ஐந்து புலன்களும் தம்மைப் பின் செல்லும் இயல்பு கொண்டவராய் விளங்கினார் என்று கூறுகின்றார். இதனை,

தம்மை ஐந்து புலனும் பின்
செல்லும் தகையார்..

என்னும் பெரியபுராண வரிகளால் அறியலாம்.

ஐந்து புலன்களை அடக்கி நன்னெறிக்கு உய்க்கும் நிலையான கல்வியினை அறியாதார் உடல் உலக ஊண்களில் மயக்குற்றுப் பிறப்பு இறப்பாகிய தடுமாற்றத்தால் மயங்கித் துன்புறுகிறார்கள் என்று மனமிரங்கி திருமூலர் வேதனைப்பட, அத்தகைய சிறந்த கல்வியைப் பெற்றவராய்த் திகழ்ந்தார் என சண்டேசுர நாயனாரைச் சுட்டிக் காட்டுகிறார் சேக்கிழார்.

திருமந்திரமும் அமுதாம்பிகைப் பிள்ளைத் தமிழும்

ஏடங்கை நங்கை இறை எங்கள் முக்கண்ணி
வேடம் படிகம் விரும்பும் வெண்தாமரை
பாடுந் திருமுறை பார்ப்பனி பாதங்கள்
சூடுமின் சென்னவாய்த் தோத்திரஞ் சொல்லுமே (1043)

தெய்வச் சுருதி தமிழ்க்கன்றித்
தீட்டா நிலைமைத் தெனவுலகில்
தெரிக்குங் காழத் திருஞானச்
செம்மற்குழவிக்கருள் ஞானம்
பெய்து குழைக்கவோ முலாயம் பெரிய
மலைவாய் உறுத்துமென்றோ
பெருமான்றனையுங் குழைத்தவலிப் பெற்றி
அறிந்து தடுத்தோயூங்
கையில்இலக நக்குறிபற் கதுவ நோமென்றோதீம்பால்
கறந்து கொடுத்தாய யெனச் சகிமார் கனிந்து பாட
நகை முகிழ்க்கும்
வையகத்தமைந்த மதர்வேற்கண் வாழ்வே வருக வருகவே
வளங்கூர் குளந்தைப் பதியமுத வல்லி வருக வருகவே.
அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ் (60) (ப.1.3)

திருமூலர் தமது பாடலில், செந்தமிழ் மறைமுறை ஏட்டைத் திருக்கையிலுடைய நங்கை தம் இறைவி என்றும், அவள் மூன்று திருக்கண்களையுடையவள் என்றும், படிகம் போலும் தூய்மையான வெண்ணிறத்தவள் என்றும், வெண்தாம ரையான சகசிரதளத்தில் விரும்பி இருப்பவள் என்றும், திருமுறை பாடும் திருவாயினள் என்றும், அப்பெருமாட்டியின் திருவடிகளை நம் தலையில் சூடி வாயினால் துதித்து வணங்கவேண்டும் என்றும் கூறுகின்றார். (1043)

ஈண்டு தரப்பெற்றிருக்கும் மற்றொருபாடல் குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ். இதனை அருளியவர் சிவஞான சுவாமிகள். இந்நூலில் ஆறாவதாக அமைந்துள்ள வாரானைப் பருவம் என்பதன் கீழ் ஆறாவது பாடலாக அமைந்துள்ள, இது தோழியரகளை பிள்ளை நடந்து வருதலை விரும்பிஅழைக்கும் பருவமாம்.

மாதவச் சிவஞான சுவாமிகள் தமது பாடலில், இறைவன் அருளிய நெறிகள் நிறைந்த மறைகள் தமிழுக்குண்டு என்றும், இவ்வுலகில் உள்ள மலங்கள் பற்றி எடுத்துரைக்கும் சீர்காழி திருஞானசம்பந்தருக்குப் பார்வதியம்மையாரின் பேணும் திருக் கொங்கைகளில் உள்ள இனியபாடலுடன் அரிய சிவஞானத்தைக் குழைத்து அமுது செய்தருளியதாகவும், அவ்வாறு செய்யுங்கால் பெரிய நாயகி அம்மையார்

சிவபெருமான் இயம்பியபடி, முலைக்காம்புகள் குழந்தையின் மென்மையான வாயை உறுத்தும் என்றோ, குழந்தையின் வாய் வலிக்கும் என்று நன்கு அறிந்து தடுத்தோ, பூப்போன்ற கையில் இளம் நகக்கறியோ பற்குறியோ பட்டு நோகுமென்றோ குழந்தையின் (திருஞானசம்பந்தர்) அருகில் போய் கச்சுடைய தம் முலைப்பாலைப் பொற்கிண்ணத்தில் கறந்தருளினார் என்றும், தோழியர் மகிழ்ச்சிபொங்க எங்கள் வாழ்வே என்றும், தோழியர் மகிழ்ச்சி பொங்க எங்கள் வாழ்வே என்றும் எங்கள் கனி அமுதே என்றம் கூறி வருக வருகவே என இசைந்துபாடி வரவேற்பார்கள் எனவும் கூறுகிறார்.

திருமூலர், தமது இறைவி யார் என்ற கேள்விக்கு செந்தமிழ் மறைமுறை ஏட்டைத் திருக்கையிலுடைய நங்கை என்று குறிப்பிடுகின்றார்.அதாவது, வேதம் ஆகமங்களைச் சுவடி உருவ மாகக் கையில் வைத்துள்ள மனோன்மணி எனப்படும். இதனை, ஏடங்கை நங்கை இறை... என்ற சொற்றொடர்களால் அறியலாம்.

அதேபோல மாதவச் சிவஞானசுவாமிகள், இறைவன் அருளிய நெறிகள் நிறைந்த மறைகள் தமிழுக்குண்டு என்று கூறுகின்றார். இதனை. தெய்வச் சுருதி தமிழுக்கன்றி என்னும் சொற்றொடர் களால் தெளிந்து கொள்ள இயலும்.

ஏடங்கை நங்கை என்னும் திருமந்திரச் சொற்களால் தொடக்கத்தில் வேதாகமங்கள் எழுதப்பட்டுச் சுவடி வடிவில் திருவருளம்மை கையில் இருந்தன. மேலும், அதுபோது, வடமொழி எழுத்தில்லாத மொழியாகவும், தமிழ் எழுதும் மொழி யாகவும், இருந்தபடியால் வேதாகமங்கள் தமிழ்மொழியிலேயே எழுதப்பெற்றன என்பதும் பெறப்படும் செய்தி.

தவிர, நெறிகள் நிறைந்த மறைகள் தமிழில் உண்டு என்பதைத் தெய்வச் சுருதி தமிழுக்கன்றி என்னும் சொற்றொடர் விளக்குவது மட்டுமல்லாமல், இருதவ ஞானிகளும் தமிழ் மற்றும் வேதங்களின் தொன்மையை விளக்கா நிற்கின்றனர்.

திருமந்திரமும் ஆனந்தாதீதமும் (பக்.17)

உள்ள சரியாதி ஒட்டியே மீட்டென்பால்
வள்ளல் அருத்தியே வைத்த வளம்பாடிச்
செய்வன எல்லாஞ் சிவமாகக் காண்டலாற்
கைவள மின்றிக் கருக்கடந் தேனன்றே *(2936)*

பாட வேண்டும் நான் போற்றி நின்னையே
பாடி நைந்து நைந்து உருகி நெக்கு நெக்கு
ஆட வேண்டும் நான் போற்றி அம்பலத்து
ஆடும் நின்கழல் போது நாயினேன்
கூட வேண்டும் நான் போற்றி இப்புழுக்
கூடுநீக்கு எனைப் போற்றி பொய்யெலாம்
வீட வேண்டும் நான் போற்றி வீடுதந்து
அருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே (ஆனந்தாதீதம்.10)

மேலே சுட்டிய திருமந்திரப்பாடல் ஒன்பதாம் தந்திரத்தின்கீழ், இருபதாம் அதிகாரமான அணைந்தோர் தன்மை என்பதில் இருபதாவது பாடலாக அமைந்துள்ளது. மேலும், திருமந்திரப்பா வரிசையில் 2936ஆவது பாடலாகவும் வரையப்பட்டுள்ளது.

திருமூலர் தமது பாடலில், நன்னெறி நான்கின் 1.சீலம்,நோன்பு, செறிவு, அறிவு வாயிலாகத் தம்மைப் பயிற்றுவித்து அவற்றினின்று மீட்டுவித்தருளியதாகவும், திருவடியின்பற்றினை அளித்ததாகவும், அவனருளால் அச்சிறப்பினைப் பாடிக்கொண்டிருப்பதாகவும், செயலெல்லாம் சிவச் செயலெனவும், எஞ்சுவினையாகிய கைவளம் (கைப்பொருள்- செழுமை) எரிசேர் வித்தென மாய்ந்தமை யாலும், ஏறுவினை உணக்கிலா வித்தென ஓய்ந்தமையாலும், ஏன்ற வினை உடலூழாய்த் தேய்ந்தமையாலும், இன்னமோர் அன்னை வயிற்றில் பிறக்கும் கருநிலை கடந்து அருநிலையாம் சிவனிலை எய்தியதாகக் கூறுகின்றார்.

அடுத்துவரும் பாடல், திருச்சதகத்தின்கீழ் ஆனந்தாதீதம் என்பதில் பத்தாவது பாடல். இது திருவாசகப்பா வரிசையில் 104ஆவது பாடல். இது திருப்பெருந்துறையில் அருளப்பட்டது. ஆனந்தாதீதம் என்றால் சொற்பதங்கடந்த தொன்மை என்பது பொருள். சொல்லில் அடங்காததைக் கூடியவரையில் சொல்லால் விளக்க இப்பதிகம் பயன்படுகிறது.எண்சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தால் ஆனது.

மாணிக்கவாசகர் தமது பாடலில் சிவனைப் பற்றியே மனம் நெகிழ்ந்து கரையும்படி பாடிப் பரவசமடைந்து தாம் கூத்தாட வேண்டும் என்றும் ஊர்த்துவ தாண்டவமாடும் சிவசொரூபத்தில் தாம் ஒன்றுபடவேண்டும் எனவும், தாம் அதீதத்தில் போகவேண்டும் என்றும், வீடுபேறு தமக்குக் கிடைக்கவேண்டும் எனவும் வேண்டுகிறார்.

சிதம்பரத்திற்குப் போனவர்கள் திரும்பி வருவதில்லை என்பது கோட்பாடு. சிவனுடைய ஊர்த்துவ தாண்டவம் பிரகிருதிக்கு அப்பாற்பட்டது. ஆதலால் அதுவே ஆனந்தா தீதம்.

திருமூலர் சிவனருளால் அவனைப் பாடிக் கொண்டிப்பதாக்க கூறும்போது, வள்ளல் அருத்தியே வைத்த வளம்பாடி என்கிறார். மேலும் எஞ்சுவினை, ஏறுவினை என்ற வினைகளின் பயனால் மற்றொரு அன்னை வயிற்றில் மீண்டும் பிறக்க வழியில்லாமல் எல்லாவற்றையும் கடந்து சிவனிலை அடைந்ததாகக் கூறும்போது, கைவள மின்றிக் கருக்கடந் தேன்ன்றே என்கிறார்.

அதேபோல மாணிக்கவாசகர் சிவனைப் பற்றியே தாம் பாடிக் கொண்டிருக்க வேண்டும் என்று கூறும்போது,

பாடவேண்டும் நான் போற்றி நின்னையே
பாடி நைந்துநைந்து உருகி நெக்குநெக்கு
ஆட வேண்டும்நான் போற்றி... என்கிறார்.
மேலும், வீடு பேறு வேண்டும்என்னும்போது,
....பொய்யெலாம்
வீட வேண்டும்நான் போற்றி வீடுதந்து
அருளு போற்றி நின் மெய்யர் மெய்யனே

என்று வேண்டுகிறார். திருமூலரும், மாணிக்கவாசகரும் எப்போதும் சிவனையே பாடவேண்டும் எனவும்,

அதன்விளைவாக வீடுபேறு அடையவேண்டும் எனவும் ஒரே மாதிரியாக வேண்டுகின்றனர்.

முடிவுரை

'அகக்கண்களையும் ஒருங்கிணைக்கும் திருமூலத் தேவனையே சிந்தை செய்பவர்க்குக் கரு மூலமில்லையே காண்' என்று உலகமெங்கும் திருமந்திரப்புகழ் ஒலிக்கட்டும்; அகிலமும் ஆனந்தமும் அருளொலியும் அமையட்டும்.

துணைநின்ற நூல்கள்

1. திருமந்திரம் - மூலநூல்
2. திருவாசகம் காட்டும் இயற்கைப் புனைவுகள், தாவை-பொன்.செந்தில்குமார்.
3. வண்டமிழ் இலக்கிய வரலாறு, பொன்முடி பதிப்பகம், 1989 ஜூன், உ.த.நி.31076
4. தமிழ் இலக்கியங்களில் காலந்தோறும் மானுட விழுமியங்களும் கலைக்கூறுகளு ம் -(தொகுதி 1,2, 3, 4)
5. திருமந்திரமும் பிற தமிழ் இலக்கியங்களும் - பேரா.பு.சி இரத்தினம்.

2. திருமந்திரம் காட்டும் ஆன்மிக வாழ்வு



முனைவர் **தி.மகாலட்சுமி**
திருமந்திரமும் வாழ்வியலும்
பட்டய வகுப்புப் பொறுப்பாளர்
தமிழ் இலக்கியம் மற்றும் சுவடிப்புலம்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை-113. 9884364603

திருமந்திரம் மனித சமுதாயத்தை வாழ்விக்க வந்த உயர்ந்த நூல். மனிதனிடம் உள்ள குறைகளை நீக்கி உயர்வடைவதற்கான வழிமுறைகளை விளக்கிச் செல்கின்றது. திருமூலர் தாம் சொல்லவந்த கருத்துகளை மக்கள் மனம் ஏற்றுக் கொள்ளும்வகையில் தக்க எடுத்துக்காட்டுகள் வழி தெளிவுபடுத்துகின்றார். அழிவற்ற ஆன்மாவை அழிவற்ற இறைவனோடு ஒன்றச் செய்யும் வழிமுறைகளைக் கூறுகின்றார். இதுபோன்ற கருத்துகள்வழி திருமூலர் கூறும் ஆன்மிக வாழ்வு பற்றிய கருத்துகளை எடுத்துரைப்பதாய் இக்கட்டுரை அமைகின்றது.

திருமந்திரம் கூறும் இல்லறத் துறவற வாழ்வு ஆன்மிக நெறிப்பட்டது. பிரபஞ்சம் முழுவதும் பிரமத்தில் இருந்தே பரிணமித்துள்ளது. எந்த உருவில், எந்தக் கருத்தில் கடவுளை வணங்கினாலும் அது அவருடைய மனமாக உருவெடுக்கும். எனவே மனத்தின் சக்தியை உணர்ந்தால் இறைசக்தி ஊடுருவி மனமாக ஆவதை உணரமுடியும். இது மனம் அமைதி அடையவும் அதன்வழி உலகம் அமைதி அடையவும் வழிகோலும்.

புறவழிபாடு

ஆறுசமயங்கள் வற்புறுத்தும் புறவழிபாடுகளாலும் பந்தபாசங்களில் சிக்கியிருந்தாலும் இறைவனைக் காணமுடியாது (1515). இறையோடு இணைய வீடுபேறு அடையத் தடையாக இருப்பது புறவழிபாட்டை முன்நிறுத்தும் சமயங்களே (1518).

இறையை உணர்தல்

அறுசமயங்கள் காட்டும் கடவுள் உண்மையான கடவுள் அல்ல. உருவமற்ற அவன் உணரப்பட வேண்டியவன். உணர்ந்தால் அகக்கண்கள் திறந்துகொள்ளும். இறைவனின் அகப்புறச் செயற்பாடுகளை, விந்தைகளை, பிரமாண்டத்தை உணர்ந்துக் கொள்ளும்திறன் தானே உருவாகும்.

இறைவன் உள்ளும் புறமும் உள்ளான் என நம்பினால் உள்ளான், உள்ளும் புறமும் இல்லை என்றால் இல்லை (1517) என்று திருமூலர்

கூறுவதால் அவர் உண்டு இல்லை என்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. இறைத்தன்மை எப்படிப்பட்டது என்பதைப் புரியவைக்கும் நோக்கில்தான் செயல்படுகின்றார். அன்பும், பண்பட்ட உள்ளமும் இறையை உணர முடியும் என்கிறார்.

ஆறுசமயங்களின் வழிமுறைகள் வெவ்வேறாக இருந்தாலும் அவை முக்தி எனும் இலக்கை நோக்கியே வழிகாட்டுகின்றன (1543).பிறப்பால் மனிதர்களிடையே ஏற்றத்தாழ்வுகள் இல்லை. இதை உணர்ந்தால் முக்தி கைகூடும் (1153). பண்பட்ட மனத்தால்தான் ஞானக்கண்களைத் திறக்க முடியும். அகத்து உள்ள சோதியைக் காணமுடியும்.

இறையுணர்வு-வழிபாடு-பயன்

இறைவனின் திருவடியே சரணம் என்று பற்றிக்கொண்டு அதே சிந்தனையோடு தியானிப்பதே திருவடிஞானம்; இது சிவமயமாக்கும்; வீடுபேறு அளிக்கும்; இச்சைகளில் இருந்து மீட்கும்; ஞானம் சித்தியாகும் (1582). பரமன் அருள் இருந்தால் மட்டுமே இறையனுபவ நிலையை அனைத்தும் அடங்கி ஓம் என்ற பிரணவ மந்திரத்தின் ரீங்கார ஒலியைக் கேட்கும் உணர்வைப் பெறமுடியும் (1593).

இல்லறத்தான் உலகபோகங்களைப் பெறுவதற்கு வழிபடும் முறைகளையும், அவ்வழிபாட்டுக்குரிய பொருள்களையும், வழிபாட்டால் ஏற்படும் பயன்களையும் திருமூலர் தெளிவாகக் கூறுகின்றார். சிவவழிபாடு, சக்தி வழிபாடு, வழிபாட்டு முறைகள், சக்கரஅமைப்புகள் போன்ற இல்லறத்தாருக்குக் கூறப்பெறுகின்றது (914-928). சக்தியாகி திரிபுரையை, மணிபோன்ற ஒளித்தியானத்தால் பேரொளியாக வணங்குபவர் வீடுபேற்றை அடைவர் என்கின்றது திருமந்திரம்; இதுபோல் இராஜேஸ்வரி (1049; 1068), வயிரவி, சாம்பவி போன்றோரின் உருவத்தோற்றம் பற்றியும், வழிபாடு பற்றியும், வழிபாட்டின் பயன் பற்றியும் கூறுகின்றது; சக்தியை விடுத்துச் சிறுதெய்வங்களை வழிபட்டால் நாதாந்தமும் முத்தியும் கிட்டாது (1363).

ஆன்மா

சிவ என்பது பெரும்கருணை. ஆன்மா என்பது சிறிய கருணை. தன்னையறிதல் என்பது ஆன்மாவாகியதான், தன்உண்மைத் தன்மையில் நிற்றல் என்பதே. ஆன்மா உடலைப் பற்றியபோது புருடன் என்றும், விந்து நாதங்களைப் பற்றியபோது சீவன் என்றும், மாயையில் கட்டுண்டபோது பசு என்றும், ஒன்றையும் பற்றாதபோது ஆன்மா என்றும் பெயர் பெறுகின்றது (இறைவனும் ஆன்மாவும், ப.110). இந்த ஆன்மா தானே அனைத்தையும் அறியவல்லது என ஞானசாதனையால் அறிந்துகொண்டால், அவ்ஆன்மா உலகோர் வணங்கும்படி பரபிம்ம நிலையைப் பெறும்.

செயல் என்பது உடலுக்கும் மனதுக்கும் உண்டு. ஆன்மாவுக்கு. இல்லை இது சில சன்மார்க்க நெறிகளைப் பின்பற்றி அதன்வழி

அடைய வேண்டிய பேறுகளை அடையமுடியும். ஆன்மா உண்மைத் தன்மையில் நின்று கடவுளின் உண்மைத் தன்மையில் கலந்து சுத்தஉடம்பை, ஒளியுடம்பைப் பெறமுடியும். ஆன்மா முத்தியடை வதற்கு முன்னுதாரணமாக அணிமா, மகிமா முதலிய எண்வகைச் சித்திகளைப் பெறும். உலகியலில் ஆன்மாபடுகின்ற நிலைகளுக்கு அவத்தைகள் என்று பெயர். இவை ஒவ்வொன்றிலிருந்தும் விலகித் தன்நிலையில் இருத்தல் வேண்டும். இதுவே ஆன்மதரிசனம்.

மாயை எனும் திரைக்குள்ளே இருப்பதால் ஆன்மா தன்னையும் ஆண்டவனையும் அறியாமல் இருளில் மூழ்கிக் கிடக்கிறது (2548). மனம், புத்தி, சித்தம், அகங்காரம் இதனால் விளையக் கூடிய காமம்,குரோதம்,மோகம், லோபம், மதம், மாச்சர்யம் போன்றவற்றை ஆன்மா வெல்ல வேண்டும்.

மனிதனின் திருந்திய செயல்பாடுகள் ஆன்மா பிறர்மீது செயல்படும் செயல் அன்புக் கொண்டதாக அமைவதே ஆன்மா ஆகும். இவற்றையே உடல் உருவமில்லாத உயிர் என்றும் கூறலாம்.

மனச்சாட்சி என்று சொல்கிறோம் அந்த மனச்சாட்சியேதான் ஆன்மா ஆகும். எப்படி என்றால் மனச்சாட்சியோடு நடந்துகொள் என்று மனிதனுக்குப் புத்தி சொல்வதைக் கேட்கிறோம். நல்நடத்தை நீதிநெறி நடந்து கொள்வதையே மனச்சாட்சியின் பொருளை உணர்த்துகின்றன. ஆன்மாவை மனச்சாட்சி என்று புரியும்படியே சொல்லலாம்.

விலங்கு இடத்திலும் ஆன்மா: பசு சுவாசத்தால் துர்நாற்றம் உள்ள புல்லை மேய்வது இல்லை. அங்கு மனத்தின்மூலம் அவை வெறுக்கப்படுகிறது. நல்லவை தீயவை மனம் அங்கு ஆராயப்படுகிறது. ஆதலால் விலங்குக்கும் ஆன்மா மனம் உள்ளதை உணரலாம்.

நாய் எடுத்துக்கொண்டால் நன்றி உள்ள பிராணி அனைவரும் அறிந்த உண்மை. தன்னை வளர்த்தவர்களை அரவணைத்துக் கொண்டு அடுத்த ஆள் வந்தால் குரைத்துக் கடிக்க வருகிறது.முதலாளியைப் பார்த்தால் பாசத்தை வெளிப்படுத்துகின்றது. பகையாளியைப் பார்த்தால் பாய்கின்றது. அந்த இடத்தில் விலங்காக இருந்தாலும் சிந்திக்கும் திறனும் பக்குவம் அடைந்து அங்குச் செயலாற்றுகிறது. அந்த நாயின் இடத்தில் ஆன்மா மனம் மேல்லோங்கி நிற்கிறது.

தாவரத்திலும் ஆன்மா: நிழலில் வைத்த பூச்செடி உடலை வளைத்துவளைத்துத் தனக்குத் தேவையான சூரியசக்தியைத் தேடிக்கொள்கிறது. இரவெல்லாம் கரிமலவாயுவைச் சுவாசித்து மனிதனுக்குப் பிராணவாயுவைத் தருகிறது. இத்தாவரங்கள் மனிதனுக்கு மருந்துகளாகவும் பயன்படுகிறது.

தன்னை அறியும்வரை மனிதன் நன்மையும் தீமையும் செய்து கொண்டே இருக்கிறான். ஆனால் மரங்கள் எந்நாளும் மனிதனுக்கும் விலங்குக்கும் நன்மையே செய்கிறது. மரம், செடி, கொடி ஆகியன தன்னை அறிந்து அனைவருக்கும் நன்மையே செய்கின்றன. எனவே தாவரங்களும் ஆன்மாவோடு செயல்படுகிறது.

இல்லறம்

இல்லறத்தார் யாக்கை நிலையாமையை உணர்ந்து வீடுபேறு பெற முயலவேண்டும். விருந்தோம்பல், துறவிக்குப் பொருள் கொடுத்துப் பணிவிடை செய்தல், நற்செயல்புரிதல் போன்றவற்றைத் திருமந்திரம் கூறுகின்றது. பரத்தையர் தொடர்பு, பிறன்மனை நயத்தல், பொருட்பற்று போன்றன கூடாது என்கின்றது.

மாடு, மனை, செல்வம், மனைவி, மக்களோடு செழுங்கிளை தாங்கும் செல்வனாக வாழும் இல்லறத்தான், தன்மனையாளைப் பிரியாது வாழ்ந்து அவளோடு பல அறச்செயல்களைச் செய்பவன். துறந்தோருக்குப் பணிவிடை செய்வது அவன் கடமை. அது அவனுக்குக் கிட்டும் பெரும்பேறு. எள்ளளவு பொன்னை ஞானிக்குக் கொடுத்தாலும் வீடுபேறு கிட்டும் (507).

மனிதன் இறைநிலைக்கு உயரப் புலனடக்கம் வேண்டும். ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்றை விடுதல் வேண்டும். விலக்க வேண்டியவற்றுள் காமமும் ஒன்று. பரத்தையரைவிட்டு விலகாது இருப்பவர்களுக்கு ஞானமும், சிவானந்தமாகிய தேனும் கிட்டாது (330). அதுபோலப் பிறன்மனையை நயப்பவனும் சிறுமையும் கேடும் அடைவான் (202).

பாரம்பரியம்

இது ஒரு மனிதனின் குணத்திற்குக் காரணமாகின்றது. இதனைத் தாங்கியிருப்பது குரோமோசோம். இது பற்றித் திருமந்திரத்தில் ஆணும் பெண்ணும் ஒன்று சேரும்போது விந்தும் கருவும் ஒன்று சேர்கின்றன. அப்போது விந்து கருவினை எதிர்த்துச் சென்றால் பிறக்கும் குழந்தை உருத்திரனைப்போலத் தாமதகுணம் பெறும்; மாறாகச் சுரோணிதம் எதிர்த்து வரும்போது பிறக்கும் குழந்தை திருமாலுக்குரிய சத்துவகுணம் பெறும்; விந்தும் கருவும் சமமாகக் கலந்திருக்கும்போது பிறக்கும் குழந்தை பிரமனைப்போல் இராட்சதகுணம் பெறும். இம்மூன்று குணங்களும் ஒத்திருக்கும் ஒருவன் பேரரசை ஆளும் தகுதி உடையவன் (458). இல்லறத்தான் நாளும் சிவசிந்தனையில் ஈடுபடுவதால் அவன் விரும்பும் பொருட்செல்வமும் நாளாக நாளாக அவனுக்குத் தேவைப்படாது. இறையன்பை மட்டும் வேண்டும் நிலைக்குச் செல்வான் என உணர்த்துகின்றது.

துறவு

துறவிகளின் ஒழுகலாறுகளை விரிவாகக் கூறுகின்றது. துறவுநிலை என்பது மிக உன்னதமானது. திருமூலர் ஆறாம் தந்திரத்தில் துறவு, தவம், தவவேடம், அவவேடம், திருநீறு, ஞானவேடம், சிவவேடம், அபக்குவன், பக்குவன் முதலிய தலைப்புகள் உண்மைத் துறவிகளின் தன்மைகளையும் செயல்களையும் வரையறுக்கின்றது.

நல்லதொரு துறவிக்குச் சான்றாகச் சிவனையே காட்டுகிறார். சிவன் நியதிகளை உடையவன், பிறப்பற்ற தனியன், தத்துவக் காட்டை

நீத்தவன், பிச்சையாக ஏற்பது சீவபோதம், சிறந்த துறவியான அவனே பற்றுகளை நீத்தவரின் பிறவியை நீக்கவல்லவன் (1616).

தனக்கெனத் தன் சீடர்களைத் தேர்ந்தெடுக்கும் குருவினைத் திருமந்திரம் அடையாளம் காட்டுகின்றது (2636). இறையனுபவத்தை முதலில்தான் உணர்ந்துபின் அதைச் சீடனுக்குக் குரு காட்டுவார். குருவருளால் பிரணவ நாதத்தைச் சீடன் குண்டலினி ஆற்றலை விழித்தெழச் செய்து உணர்ந்து கொள்கிறான்.

இறைவனை அடைதல்

சிந்தையைச் சிவன்பால் வைத்து, முடிந்தஅளவு இறையும் ஆன்மாவும் இல்லை என்பவர்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள் என்பதை,

இல்லை யெனினும் பெரிதுளன் எம்மிறை
நல்ல வரனெறி நாடுமின் நீரே (2103)

என்ற பாடலில் கூறுகிறார். அதாவது இறைவன் உண்டு எனத் தெளிந்து சிவநெறி செல்லுங்கள் என்றும், இறைவன் ஒருவனே என்றும் சொல்லி, இந்த இறைவனை அடைவதற்கான பல படிநிலைகளையும் கூறுகின்றார்; சுத்த சைவம், அசுத்த சைவம், மார்க்க சைவம், கடுஞ்சுத்த சைவம், சரியை, கிரியை, யோகம், ஞானம், சன்மார்க்கம், சகமார்க்கம், சற்புத்திர மார்க்கம், தாசமார்க்கம், சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம், சத்திநிபாதம், ஆறந்தம் போன்ற பொருண்மைகளில் விளக்கமுறையை அவற்றின் பயன்பாட்டோடு எடுத்துரைக்கின்றது.

உள்ளமே சிவன் வாழும் கோயில். இங்குள்ள இறைவனைத் தரிசிக்க முடியாதவர், எங்கெங்கோ தேடி அலைகின்றனர் (1762) என்பது திருமூலர் கோயில் வழிபாட்டு முறையை ஏற்கவில்லை என உணர்த்துகின்றது. அனைத்தும் சிவமயமானது.

மானுடர் ஆக்கை வடிவு சிவலிங்கம்
மானுடர் ஆக்கை வடிவு சிதம்பரம்
மானுடர் ஆக்கை வடிவு சதாசிவம்
மானுடர் ஆக்கை வடிவு திருக்கூத்தே (1726)

உயிர் இருக்குமிடம் சிவலிங்கமே என்று கூறும் இப்பாடல் மனிதஉடலை, சிதம்பரமாகவும், சதாசிவமாகவும் குறிப்பிடுகின்றது. உலகப்பொருள்களில் உள்ள உயிர் அகரம். உயிரே சிவனாக இருப்பதால் அவனே அகரமாகின்றன. எந்தப் பொருளிலும் உள்ள ஆற்றல் சக்தியைக் குறிப்பதும் உகரம். அகர உகரம் கலந்ததே உலகம்.அகரம்-உயிர்; உகரம் - உடல்; இவ்விரண்டும் கலந்தது சிவலிங்கம்.

அகர உகர வடிவமே சிவலிங்கம் (1753)

திருமந்திரம் உடலில் இறைவனைச் சிவசக்தியாய்க் காண்கின்றது. விந்து - சக்தி; நாதம் - சிவம். விந்தின் வடிவம் வட்டம்; நாதத்தின் வடிவம் - தண்டம். இவ்விரண்டும் கலந்து உருப்பெறுவதே ஆன்மலிங்கம். ஓம் எனும் ஓரெழுத்து பிரணவத்தால், நமசிவாய எனும் ஐந்தெழுத்தால் வழிபடுவதைக் கூறுகின்றது.

ஐந்தெழுத்து மந்திரம்

ஐந்தில் ஒடுங்கில் அகலிடம் ஆவது
ஐந்தில் ஒடுங்கில் அருந்தவம் ஆவது
ஐந்தில் ஒடுங்கில் அரன்பதம் ஆவது
ஐந்தில் ஒடுங்கில் அருள்உடையாரே (2035)

சிவனடியார்களின் உயிர்மூச்சான இந்த ஐந்தெழுத்து மந்திரத்திற்குச் சித்தர்களின் யோகதந்திர முறைகளில் மிகப்பெரிய இடம் உண்டு. இதைப் பயன்படுத்தும்முறை அட்டாங்கயோகப் பகுதியில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. இம்மந்திரத்தில் மனம்ஒடுங்க மனப்பக்குவம் அவசியம் (2036). மனம் ஒன்றிப் போனால் உலகம் கைவசப் படும்; அருந்தவமும் இறையருளும் கிட்டும்.

சிவசிவ என்று தியானித்தால் தேவர் ஆகலாம்; சிவகதைப் பெறலாம் (2715). இதிலுள்ள ஓர் எழுத்தான சி யைத் தியானித்தால் பிறவாநிலையை அடையலாம்.இதற்கு நாயோட்டு மந்திரம் என்று பெயர் (1100).

இறைநெறியைப் பின்பற்றுபவர்களுக்குச் சமயக் கொள்கைகளின் விளக்கமாகத் திருமந்திரம் அமைகிறது. 18 நெறிகளைக் கூறி ஏதாவது ஒரு நெறியைப் பின்பற்றி இறைவனை அடைய வழி கூறுகிறது. அன்புடன் விளக்கேற்றித் தீபம் காட்டி வழிபட்டுக் கோயில்தொண்டு செய்தல், மலரும் நீரும் கொண்டு வழிபடுதல், அடியாருக்கு உதவுதல், ஞானியருக்கு உணவு அளித்தல், உண்மை அன்புடன் இறைபால் சிந்தை செலுத்தல் போன்ற வழிபாட்டு முறைகளைக் கூறுகின்றார். அரிய தவயோகங்களால் வழிபாடு செய்யும் பக்குவம் அனைவருக்கும் எளிதாக வந்துவிடாது. எனவே அவரவருக்கு ஏற்ற நெறியில் நின்று இறையருள் பெறும் நிலையையும் சொல்லுகின்றார். தூயஉள்ளம், தூயவாழ்வு, தன்னலமற்ற அன்பு, பிறருக்கு உதவும் பண்பு, மனப்பக்குவம் இறையை எளிதில் அடையத் துணைபுரியும் என்கின்றார்.

முடிவுரை

திருமந்திரம் கூறும் இல்லறத்தாருக்கும், துறவறத்தாருக்கும், ஆன்ம ஈடேற்றத்திற்கும், பிறவி நீக்கத்திற்கும் வழிகாட்டும் உயரிய நூல். இது கூறும் ஆன்மிக வாழ்வு சமுதாய ஈடேற்றத்திற்குப் பெரிதும் உறுதுணை புரியும். நல்லன எதிர்கொண்டு அல்லன நீக்கி ஞானம் பெற வலியுறுத்துகிறது (195). இன்பம் தரும் நெறியை நாடி ஒழுக்கத்தில் நிற்க வேண்டுமென நெறிப்படுத்துகின்றது. அறத்தையும், அன்பையும், இறைவழிபாட்டையும் வற்புறுத்தி, யோகநெறி வாழ்ந்து நிலையற்ற இவ்வுடலில் இறைஅனுபவம் உணர்ந்து வாழ வழிகாட்டுகின்றது.

திருமூல தேவனையே சிந்தை செய்வார்க்குக்
கருமூலம் இல்லையே காண் (தனிப்பாடல்)

3. சிவ பரத்துவம்

தருமலிங்கம் நடராசன்
மலேசியா

முன்னுரை

ஆதி முதலாகிய பரம்பொருளின் துணைகொண்டே உலகம் தோன்றிற்று என்பதனை (ஆதிபகவன் முதற்றே உலகு) என்பார் ஐயன் திருவள்ளுவர். (போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்) என்று திருவெம்பாவையில் உயிர்கள் உலகில் இடம் பெறுவதற்குப் பரம்பொருளான சிவபெருமானே முதலில் அருள்புரிந்தான் என்று மணிவாசகர் குறிப்பிடுவார். எல்லா உலகங்களில் உள்ள உயிர்களும் அருமையான சிவப்பரம் பொருளைப் போற்றுதற்கு உரியன என்பதனை, உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன் என்று பெரியபுராணத்தில் தெய்வச் சேக்கிழார் குறிப்பிடுவார். அத்தகைய பரம்பொருள் யார் என்பதற்கு அடையாளமும் கூறுவார். பரம்பொருளான சிவமே, அறிவு வெளியாகிய சிதம்பரத்தில் ஆடல் வல்லானாக, நிலவு மற்றும் கங்கையைத் தலையில் அணிகளாகக் கொண்டவனாக, அளவு இல்லாத ஒளி பொருந்தியவனாகப் பொதுவில் நடம் புரிகின்றான் என்றும் குறிப்பிடுவார். எல்லா உயிர்களும் தொழ வேண்டிய சிவத்தின் பரத்துவத்தைத் திருமூலரும் புலப்படுத்துவார்.

எல்லா உயிர்களும் தொழும் தன்மையாளன் பரம்பொருளான சிவமே என்பதனை,

போற்றிசைத்து இன்னுயிர் மன்னும் புனிதனை,
நாற்றிசைக்கும் நல்ல மாதுக்கு நாதனை,
மேற்றிசைக்குள் தென்திசைக்கு ஒருவேந்தனாம்,
கூற்று உதைத்தானையான்கூறு கின்றேனே

என்பார் திருமூலர். எல்லா உயிர்களும் சிவம் என்னும் பரம் பொருளைத் தொழ வேண்டும் என்பதற்குத் திருமூலர் பல காரணங்களைச் சொல்கிறார். 'போற்றி, என் வாழ் முதலாகிய பொருளே' என்பார் மணிவாசகர். தமது வாழ்விற்கு இறைவனே முதலாகப் பலவற்றைக் கொடுத்து அருள் புரிந்திருக்கின்றான் என்று குறிப்பிடுகின்றார். பல்வேறு உலகங்களில் வாழ்கின்ற எல்லா உயிர்களிலும் இறைவன் தங்கி இருந்து அருள்புரிகிறான் என்பார்.

அவன் உயிர்களில் தங்கி இருக்கும் வகையால் ஒன்றாயும் உயிர்களைச் செலுத்தும் வகையால் உடனாயும் பொருள் தன்மையால் உயிர் வேறு இறைவன் வேறு என்று வேறுபட்டும் நின்று அருளுகின்றான், அதனால் அவனே எல்லா உயிர்களும் தொழுதற்கு உரிய பரம்பொருள் என்கின்றார்.

அன்றாட வாழ்வில் எல்லா உயிர் வகைகளும் இயற்றும் அனைத்துச் செயல்களுக்கும் பரம்பொருளான சிவனே துணை நிற்கின்றான். சிவனே உயிரற்ற எல்லா பொருள்களையும் உயிர்கள் பயன் பெறும் பொருட்டு இசைவிக்கின்றான். இப்படி உயிர்களிலும் நீக்கம் அற நின்று அனைத்தையும் சிவன் நிகழ்த்துவித்த போதும் உயிர்களாலோ உலகப் பொருள்களாலோ அழுக்கு அடையாதத் தூயவனாகச் சிவன் இருக்கின்றான். அதனால் உலக உயிர்கள் அனைத்தும் அவனுக்கு நன்றிக்கடன் பட்டிருக்கின்றன என்கின்றார். அத்தகைய உயர்ந்த பரம்பொருள் ஒருவனே எல்லா உயிர்களாலும் தொழப்படும் தன்மையாளனாக உள்ளான் என்று திருமூலர் குறிப்பிடுகின்றார்.

எல்லா உலகங்களையும் உயிர்களையும் தனது திருவருளான நடப்பாற்றலைக் கொண்டே சிவம் நடத்துவிக்கின்றது. இதனையே பெண்ணாக, அம்மையாக, அம்பிகையாக உருவகப்படுத்தி, ஆதிசத்தி என்று மொழியும் சித்தாந்த சைவம். இதனையே நான்கு திசைகளிலும் வாழும் உயிர்களுக்கு நல்ல அருள் புரியும் அம்மைக்குத் தலைவன் என்கிறார் திருமூலர். சிவனும் சிவனின் திருவருளுமே உலகையும் உலக உயிர்களையும் பேணிக்காப் பதனால் சிவனையும் அவனின் திருவருளையும் உயிர்களுக்கும் உலகங்களுக்கும் அம்மை அப்பர் என்றனர். சித்தாந்த மெய்கண்ட நூலும், "அம்மை அப்பரே உலகிற்கு அம்மை அப்பர்" என்று குறிப்பிடும். இதை ஒட்டியே, " அப்பன் நீ அம்மை நீ ..... துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ, துணையாய் என் நெஞ்சம் துறப்பிப்பாய் நீ" என்பார் திருநாவுக்கரசு அடிகள். எல்லா உயிர்களின் உள் இருந்தும் அவற்றிற்குச் சிவன் அம்மை அப்பராக இருந்து திருவருள் புரிவதனாலே சிவனின் பரத்துவத்தை அறிந்து எல்லா உயிர்களும் அவனைத் தொழும் கடப்பாடு உடையன ஆகின்றன என்பார் திருமூலர்.

பரம்பொருளான சிவன், தென்திசைக்கு வேந்தன் என்பதாலும் அவன் கூற்றுவனை உதைத்தவன் என்பதாலும் சிவத்தின் பரத்துவம் உணர்தற் பாலது என்று குறிப்பிடுகின்றார் திருமூலர். கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்ற சிறந்த திசைகளில் மிகச் சிறந்ததாகத் தென்திசையைத் திருமூலர் குறிப்பிடுகின்றார். திருமூலர் போற்றும் தமிழ்மொழி வழங்கும் தென்பாண்டி நாடு தென் திசையில்

இருப்பதாலும் தென்நாட்டினைத் தெரிவு செய்து பெருமான் ஆடல் புரிந்து, தென்னாடு உடைய சிவனாக எந்நாட்டவற்கும் இறைவனாய் விளங்குவதனாலும் தென்திசையைச் சிறப்புடைய திசையாகக் குறிப்பிடுகின்றார் திருமூலர். தவிர, உயிர்கள் தொழவேண்டியவன், **தென் திசைக்கு ஒரு வேந்தன்** என்கின்றார். தொன்மைத் தமிழர் சிவ பெருமானை, **வேந்தன்** என்று அழைக்கும் வழக்கு உள்ளமை தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ளது. **வேந்தன் மேய தீம்புனல் உலகமும்** என்பது தொல்காப்பியம். உயிர்களால் கற்பனை செய்தும் பார்க்க இயலாத இறைவன் தமிழ் வழங்கும் தென் நாட்டில் வெளிப்பட்டுத் தோன்றி அனைத்து உயிர்களுக்கும் அருள் வழங்குபவனாய் இருப்பதனால் எல்லா உயிர்களும் தொழும் பரத்துவம் உடையவனாகச் சிவன் இருக்கின்றான் என்பார் திருமூலர்.

எல்லா உயிர்களையும் பறித்துச் செல்லும் பணியினைச் செய்பவன் காலன் அல்லது எமன் என்று கூறுவர். காலனைக் கூற்றுவன் என்றும் குறிப்பிடுவர். மார்கண்டேயர் எனும் சிறந்த சிவனடியாருக்காக அவரின் உயிரைப் பறிக்க வந்த காலனைச் சிவபெருமான் காலால் எட்டி உதைத்து அருள்புரிந்தார். காலனுக்கும் காலனாகிய அச்சிவபெருமானே சொர்க்கம், நரகம் எனும் உலகினுக்கு மேம்பட்ட உலகான சிவ உலகினை அளிக்க வல்லவன். உண்மையான மரணம் இல்லாத பெருவாழ்வினை அளிக்கக் கூடியவன். காலனுக்கும் காலனாக இருக்கக் கூடியவன் பரம்பொருளான சிவபெருமானே! அதனாலேயே உயிர்கள் உண்மையான மரணம் இல்லாத பெருவாழ்வு அடைய வேண்டுமாயின் சிவப் பரம்பொருளையே தொழவேண்டும் என்கின்றார் திருமூலர். பிறந்து மடியும் சிற்றுயிர்களையும் சிறுதெய்வங்களையும் வழிபடுவதனால் சிறு சிறு நன்மைகள் மட்டும் கிடைக்குமே ஒழிய, பேரின்பப் பெருவாழ்வான, உண்மையான மரணமிலாப் பெருவாழ்வான, பிறந்த பிறவியின் பயனான, இன்பநிலை கிட்டாது என்று குறிப்பிடுகின்றார் திருமூலர். இதனால் எல்லா உயிர்களும் தொழும் தன்மையாளன் பரம்பொருளான சிவனே என்று புலப்படுத்துகின்றார்.

கரு, விதை, வியர்வை, முட்டை எனும் நால்வகை வழிகளிலான உயிர்களின் தோற்றத்திற்கும் வானவர், மாந்தர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் எனும் எழுவகைப் பிறப்பினுக்கும் உட்படாதது பரம்பொருள் என்று தமிழர்களின் இறைக்கொள்கை யான சித்தாந்த சைவம் குறிப்பிடும். இதனால் ஒரு தாயின் கருவில் தங்கிப் பிறந்து தன்னைத் தானே கடவுள் என்று சொல்லிக் கொள்பவர்கள் கடவுள் இல்லை என்று புலனாகிறது. விலங்குகளின்

வயிற்றில் கருவாய் இருந்து வரும் பசு, சிங்கம், எலி, குரங்கு, ஆடு, புலி போன்றவை கடவுள் இல்லை என்பது அறிவில்படுகின்றது. விதையிலிருந்து தோன்றும் ஆலமரம், அரசமரம், மாமரம், வில்வம், வேப்பிலை, துளசி, அருகம்புல், எலுமிச்சை போன்ற மூலிகைத் தன்மை உடைய தாவர வகைகளும் கடவுள் இல்லை என்றுத் தெளிவாகின்றது. வியர்வையிலிருந்து தோன்றும் கிருமிகள், பேன் போன்ற உயிரினங்களும் கடவுள் இல்லை என்று உறுதியாகிறது. முட்டையிலிருந்து தோன்றும் பாம்பு, மயில், சேவல், கழுகு, தவளை, பல்லி, போன்றவையும் கடவுள் இல்லை என்று உண்மையாகின்றது.

நால்வகைத் தோற்றமும் எழுவகைப் பிறப்புக்கும் உட்படாத பரம்பொருளைச் சித்தாந்த சைவம் முழுமுதல் என்றும் பரம்பொருள் என்றும் குறிப்பிடுகின்றது. அதனைச் சிவம் என்று திருமூலரும் திருமுறை ஆசிரியர்களும் மெய்கண்ட நூலாசிரியர்களும் சுட்டுவர். முழுமுதல் ஆகிய சிவத்தினை, "முன்னை ஒப்பாயுள்ள மூவருக்கு மூத்தவன், தன்னைஒப்பாய் ஒன்றும் இல்லாத் தலைமகன்" என்று திருமூலர் தமது திருமந்திரத்தில் உணர்த்துகின்றார். நான்முகன் படைத்தல், திருமால் காத்தல், அரன் அழித்தல் என்ற ஒவ்வொரு தொழிலே உடையவர் என்றும் அந்தந்த தொழில் ஒன்றினையே அடிப்படையாகக் கொண்டு தமக்குள் ஒருவருக்கு ஒருவர் ஒப்பானவர்கள் என்பார். இம்மூவருக்கும் முழுமுதலாய், அவர்களினும் மேலானவனாய் விளங்கும் சிவன், படத்தல், காத்தல், அழித்தல் எனும் தொழில்களை மேற்கூறிய மூவருக்கும் பணித்து அதற்கு மேல் மறைத்தல், அருளல் எனும் தொழில்களைச் செய்து, முடிந்த முதலாய்த் தனக்கு ஒப்பு இல்லாத் தலைமகனாய்ப் பரத்துவம் மிக்கவனாய் விளங்குபவன் என்பார் திருமூலர்.

"என்னால் தொழப்படும் எம்இறை மற்றுஅவன் தன்னால் தொழப்படுவார் இல்லைதானே" என்பார் திருமூலர். அடியேனால் தொழப்படும் எம் தலைவன் சிவன், யாரையும் தொழ வேண்டுவது என்பது இல்லாதவன். நற்பேறு வேண்டி அவனையே எல்லோரும் தொழுவர் என்று திருமூலர் குறிப்பிடுகின்றார். இது பற்றியே திருவாசகம் அருளிய மணிவாசகரும், திருஅம்மானையில், **"சேர்ந்தறியாக் கையானை"** என்று பெருமானைப் போற்றுகின்றார். முழுமுதல் பரம்பொருளே பிறவா ஆக்கைப் பெரியோன், அவன் பிறப்பு இறப்பு அற்றவன். மற்ற உயிர்களுக்குப் பிறப்பையும் இறப்பையும் அளிப்பவன். அவன் பிறரை வழிபட வேண்டுவது இல்லை என்பார் திருமூலர்.

பிரமபுரம், கொச்சை, பூந்தாராய், சண்பை, சிவபுரம், வெங்குருகு எனப் பன்னிரு பெயர்களால் திருமுறைகளில் குறிக்கப்பெறும்

சீர்காழியில், முழுமுதலான சிவனை நான்முகன் வழிபட்டு உய்ந்தான் என்ற செய்தியினைத் திருஞானசம்பந்தப் பெருமானின், "தோடுடைய செவியன்" எனத்தொடங்கும் பிரமபுரத் திருப்பதிகம் உறுதி செய்கின்றது. சிறந்த சிவ அடியாராகிய இராவணனைக் கொன்றப் பழி நீங்க, இராமேசுவரத்தில் இராமபிரான் முழுமுதல் சிவனை வழிபட்டுப் பழி நீங்கினான் என்று திருமுறைகள் சுட்டுகின்றன. திருமாற்பேறு எனும் தலத்தில் திருமால் சிவபெருமானை வழிபட்டுப் பேறுபெற்றான் என்று திருநாவுக்கரசு அடிகளின் ஐந்தாம் திருமுறையான திருக்குறுந்தொகை குறிப்பிடுகின்றது. ஆயிரம் மலர்களைக் கொண்டு பெருமானை வழிபட்ட திருமால், ஆயிரம் மலர்களில் ஒரு மலர் குறைய, தன் கண்ணைப் பிடுங்கி மலராகச் சாற்றிச், சுதர்சனம் என்ற சக்கரத்தினைப் பரிசாகப் பெறும் பேற்றினைப் பெற்றான் எனும் குறிப்பைச் சேந்தனார் தமது திருப்பல்லாண்டில் குறிப்பிடுவார்.

சூரியன், சந்திரன், வாயு, வருணன், அக்கினி, குபேரன், எமன், இந்திரன் போன்ற வானவர்களும், புதன், வியாழன், சனி, ராகு, கேது போன்ற கோள்களும், வியாசர், பிரிங்கி, தக்கன், அகத்தியர், ஜைமினி, சுகர், கௌதமர் போன்ற முனிவர்களும் சீதை, இலக்குவன், அனுமன், வாலி, சுக்ரீவன், சடாயு, சம்பாதி, தருமன், வீமன், அர்ச்சுனன், முதலிய புராண இதிகாச அடியார்களும் முழுமுதலான சிவனை வழிபட்டே பழி நீங்கினமையும் பேறு பெற்றமையும் திருமுறைகளில் காணக்கிடக்கின்றது.

தவிர, இறைத்தமிழ் மந்திரங்களான பன்னிரண்டு திருமுறைகளை அருளிய இருபத்து ஏழு திருமுறை ஆசிரியர்களும், அறுபத்து மூன்று நாயன்மார்களும், பதினான்கு சைவ சித்தாந்த மெய்கண்ட நூல்களை அருளிய மெய்கண்டார் முதலாய மெய்கண்ட ஆசான்களும் தாயுமானார், வள்ளல் பிரான், சைவ மடங்களின் ஆதீனத் தலைவர்கள் போன்ற பிற்கால அடியார்களும் சிவனையே முழுமுதலாகக் கொண்டு பேறு பெற்றிருக்கின்றனர்.

பெருமானிடம் நடனப் போட்டியில் தோல்வியுற்றுத் தன் ஆணவம் நீங்கும் பேற்றினைப் பெற்றுத் தில்லைக் காளி என்று வீற்றிருக்கும் காளியும், குறிப்பிட்ட வட்டத்துக்குள்ளும் எல்லைக்குள்ளும் தங்கள் ஆட்சியையும் காவலையும் உடைய மதுரை வீரன், ஐடாமுனி, சங்கிலி கருப்பன், கருப்புச்சாமி, முனியாண்டி, சடையாண்டி, ஐயனார் போன்ற காவல் தெய்வங்களும் எல்லைத் தெய்வங்களும் குலதெய்வங்களும், மாரியம்மன், பேச்சியம்மன், கூனி, இசக்கியம்மன், காத்தாயி போன்ற கிராமத் தேவதைகளும் நீலி, காட்டேரி, பிடாரி போன்ற பேய்களும் பிறப்பு இறப்புக்கு உட்படுபவை. இவை நம்மைப் போன்று விருப்பு வெறுப்புக்கு ஆளாகின்றவை என்பதனால் இவற்றின் வாழுங்காலத்தினையும் நற்பேற்றினையும் பரத்துவச் சிவனே அளிக்கின்றான் என்பது திருமூலரின் குறிப்பு.

தமிழர்களின் அக்கறையின்மையினாலும் சமயக் கல்வியை முயன்று கற்காமையினாலும் தமிழருக்கே உரிய சைவ சமயமும் அதன் உயர்ந்த கொள்கைகளும் கேட்பாரற்றுக் கிடக்கின்றன. தமிழர் அவர்தம் உண்மைச் சமயத்தை மறந்து பல தவறான கொள்கைகளிலும் அறியாமையிலும் உழன்று கொண்டு இருக்கின்றனர். இதன் விளைவாகத் பழைமையும் சிறப்பும் அருள் நிகழ்ச்சிகளும் நிகழ்ந்த பெரும் பெரும் சிவன்கோயில்கள் பாழடைந்தும் முறையான பூசனைகள் நடைபெறாமலும் முடங்கிக் கிடக்கின்றன. நாயன்மார்களும் திருமுறை ஆசிரியர்களும் பணி செய்த, திருமுறைப் பாடல்கள் அருளிய பாடல் பெற்றத் திருக்கோயில்கள் பேணப்படாமல் கிடக்கின்றன. தனக்கு ஒப்பு இல்லாத் தலைவனான, பரம்பொருளான, சிவபெருமானை வழிபடுதலே தமிழ்ச் சைவர்களின் முறையான வழிபாடு என்பதனைத் தமிழர்கள் அறியாது இருக்கின்றனர். இதனால் இன்று சிவவழிபாடு நலிந்து, காவல் தெய்வ வழிபாடுகளும் சிறுதெய்வ வழிபாடுகளும் மலிந்து கிடக்கின்றன. தமிழ்ச் சைவர்கள் வேறு சமயங்களைத் தழுவுதலும் புதுப்புது சமயங்களை உருவாக்கி மக்களைத் திசைத் திருப்புகின்றவர்களின் பின்னால் திரிவதும் மலிந்து காணக்கிடக்கின்றது. இன்னும் சிலர் தனி மாந்தரைக் கடவுளாக எண்ணி வழிபடும் அறியாமையிலும் வீழ்ந்து கிடக் கின்றனர். தனக்கு ஒப்பு இல்லாத் தலைவனான சிவனை அறியாமல் ஏமாற்றுக்காரர்களின் ஏமாற்றுக்கு ஆளாகித் தவிக்கின்றனர்.

முடிவுரை

"ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை" என்று பெருமானை மணிவாசகர் திருவெம்பாவையில் சுட்டுவார். உலக ஒடுக்கத்தின் போதும் மீளவும் அதனைத் தோற்றுவிக்கும் போதும் நிற்கின்ற தனி ஒருவனைத், தன்னை ஒப்பாய் இல்லாத் தலைவனை, இயலும் பரம்பொருளான சிவத்தை வழிபட்டால், தீமை ஏற்படும், கைப்பொருள் செலவாகிவிடும், குடும்பத்தில் குழப்பம் ஏற்படும் என்று யாரோ கூறுவதைக் கேட்டு அறியாமையில் மூழ்கிக் கிடக்கின்ற தமிழ்ச் சைவர்கள் சிந்திக்க வேண்டும். இறந்தவரின் உயிர் அமைதி பெறுவதற்கு மட்டும் சிவன் கோயில்களைத் தேடுகின்ற நாம், திருமணம், காதணிவிழா, புதுமனைப் புகுவிழா, பிறந்த நாள் விழா என்று எல்லா வேளைகளிலும் சிவனை வழிபட வேண்டும். அன்றாட வாழ்வில் சிவவழிபாட்டினை மேற்கொள்ள வேண்டும் என்பதே திருமூலரின் கருத்து, அதுவே உண்மைச் சைவர் வாழ்வின் இலக்கு. திருமூலரின் திருவாக்கிற்குச் செவிசாய்த்து உண்மையை நாடுவோம், வாழ்வின் பயனை அடைவோம்! இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை!

4. திருமூலர் சுட்டும் குரு

சிவத்தமிழ்செல்வர்
முனைவர் நாகப்பன் ஆறுமுகம்
மலேசியா

முன்னுரை

குருவைப் பற்றிய சைவ சமயத்தின் கோட்பாடு தனிச்சிறப் புடையது. வேறு மதங்களின் சிந்தனையும் குருவைப் பற்றி மக்கள் கொண்டிருக்கிற கருத்தும் சைவ சமயத்தின் முடிவுக்கு நேரானவை அல்ல. சைவ சமயத்தில் சிவனாகிய பரம்பொருளே குரு. மாணவன் குருவை தரிசனம் செய்யத் தகுதியும் பக்குவமும் பெற்ற காலத்தில் சிவபெருமான் குருவாக எழுந்தருள்வான். அப்போதும் உயிர்கள் பெற்ற பக்குவத்திற்கு ஏற்ப வெவ்வேறு திருமேனிகள் எடுப்பான். அத்திருமேனிகளில் மானிட வடிவமும் ஒன்று.

பார்வைஎன மாக்களை முன்பற்றிப் பிடித்தற்காம்
போர்வை எனக்காணார் புவி (திருவருட்பயன் 45)

மானைப் போன்ற பொய்யுருவம் ஒன்றைக் காட்டி மானைப் பிடிக்கும் வேட்டுவனைப் போன்று இறைவன் மானிட வடிவம் காட்டிப் பக்குவப்பட்ட ஆன்மாக்களைக் கவர்வான். இச்செய லையே 'உள்ளம்கவர் கள்வன்' என்றார் திருஞானசம்பந்தர்.

திருஞானசம்பந்தர் முதலிய நால்வர் பெருமக்களின் உடலைத் தனக்குப் போர்வையாகக் கொண்டு சிவனே குருவாக எழுந்தரு ளினான் என்று நாம் உணர வேண்டும். சிவஞானம் பெற்ற அடியார்களின் கருவிகரணங்கள் பதிகரணங்களாகவும் அவர்களின் செயல்கள் பதிபுண்ணியமாகவும் கருதப்படுவதால் சிவபெரு மானால் ஆட்கொள்ளப்பெற்ற அடியார்கள் சிவமாகவே கருதப்படுவர் என்பதுவே சைவத்தின் குரு பற்றிய கொள்கை. சிவபெருமானின் அருள் நோக்கால் மல நீக்கம் செய்யப்பெற்ற அருளாளரின் ஆன்மாவை ஆவேசித்துச் சிவபெருமான் செயல்படுவான். இதுவே சிவன் குருவாய் வந்த நிலை.

பக்குவப்பட்ட ஆன்மாக்களை ஆட்கொள்வதற்கே இறைவன் குருவாய் எழுந்தருள்வான் எனில் இங்கோர் வினா எழுவது இயல்பாகிறது. பக்குவப்படுவது எவ்வாறு என்பதே அவ்வினா. உயிர்கள் வினைவழியே இன்ப துன்பங்களைத் துய்த்து வருங்கால் பக்குவப்படுகின்றன. இதற்கெனத் தனு, கரண, புவன, போகங்

களை இறைவன் அருளி மறைத்தலால் அவற்றைச் செயல்படுத்தி வருகின்றான். அறிவிக்க அறியும் உயிர்களுக்கு ஆகமங்களாலும் திருமுறைகளாலும் நன்னெறி காட்டுகிறான். இவற்றால் பக்குவப் பட்ட உயிர்களுக்குக் குருவாய் எழுந்தருளி அத்துவா சுத்தி செய்து ஆட்கொள்வான்.

சிவனே குருவாய் வருவான் என்ற இக்கொள்கையை நன்கு உணர்ந்து கொள்ளாமல் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலப் பொதி சுமக்கும் மனிதர்கள் மருட்டும் வேடம் தரித்துக் கொண்டு தம்மைக் குருவாகப் போற்றிக் கொள்வதும் போற்றுவதற்குப் போலிச் சீடர்களை அமர்த்திக் கொண்டு பொருள் வேட்டையாடுவதும் இக்காலத்தில் வழக்கமாகிவிட்டது.

எனவே, சைவ சமயம் சுட்டும் குருவின் இலக்கணத்தைத் திருமூலர் மந்திரங்களைக் கொண்டு தெளிய வேண்டும். திருமந்திரம் ஆறாம் தந்திரத்தில் சிவகுரு தரிசனம் என்னும் பகுதியிலும் பிறவிடங்களிலும் குருவுக்குரிய இடத்தை நன்கு விளக்குகின்றார் திருமூலர்.

யார் குரு?

'இறையே சிவகுரு வாமே' *(1553)* என்றார் திருமூலர். 'சிவகுரு இறைவனே ஆவான்' என்பது திருமூலர் முடிவு. இறைவனே சிவகுருவாய் வருவான். "ஆசற்ற சற்குரு அப்பர மாமே' *(1554)* என்றும் 'சொல்லார்ந்த சற்குரு சுத்த சிவமே' *(1556)* என்றும் வலியுறுத்துகிறார்.

யார் சீடன்?

இறைவனைக் குருவாய்ப் பெறுதற்கு மாணவனுக்கும் தகுதிகள் வேண்டும் என்று மொழிவது சித்தாந்தம். உலகியல் நாட்டத்தில் மிகுதியும் அழுந்திய நிலையில் இன்னும் இன்னும் உலகச் செல்வங்களைப் பெறும் நோக்கில் வாழ்வோர் இந்த ஆசைகளை நிறைவேற்றும் குருவையே தேடுவர். இவர்களை நத்திப் பறித்துண்ணும் குருவே இவர்களுக்கு வாய்க்கின்றார். இவர்களே இன்றைய உலகில் காணப்பெறும் சீடனும் குருவும்.

மாணவனுக்கும் தகுதி வேண்டும்

சாத்துவிகனாய் பரதத்துவம் தான் உன்னி
ஆத்திக பேத நெறி தோற்றமாகியே
ஆர்த்த பிறவியின் அஞ்சி அறநெறி
சாத்த வல்லான் அவன் சற்சீடனே *(1672)*

என்று மாணவனுக்குரிய தகுதியைத் திருமூலர் வரையறை செய்கிறார்.

நல்ல சாத்துவிகப் பண்பும் சிவமாகிய பரம்பொருளை அடைய வேண்டும் என்ற எண்ணத்தில் திட்பமும், பல்வேறு சமய நெறிகளில் முத்திக்குரிய நெறியை அறிந்து தேர்ந்தவனும் மீண்டும் பிறப்பதற்கு அஞ்சுகின்றவனும் அற நெறியில் அசையாது நிற்க வல்லவனும் நல்ல மாணவன் ஆவான்.

சத்தும் அசத்தும் எவ்வாறெனத் தான் உன்னிச்
சித்தம் உருக்கிச் சிவனருள் காட்டப்
பத்தியின் ஞானம் பெறப் பணிந்து ஆனந்த
சத்தியின் இச்சை தகுவோன் சற்சீடனே (1674)

சத்தாகிய நிலை மாற்றம் இல்லாத பொருள், அசத்தாகிய நிலை மாற்றம் உடைய பொருள்கள் ஆகியவற்றின் பண்புகளை ஆராய்ந்து அறிகின்றவனும் அறிவதற்குத் தக்க ஆசிரியரை அணுகிச் சிவானந்தம் கூட்டுவிக்கும் திருவருளில் ஆழ்வதற்கு வேட்கை உடையவனும் எவனோ அவன் சற்சீடன் என்பது திருமூலர் கருத்து.

சற்குணம் வாய்மை தயாவிவேகம் தண்மை
சற்குரு பாதமே சாயைபோல் நீங்காமே
சிற்பர ஞானம் தெளியத் தெளிவுஓர்தல்
அற்புதமே தோன்றல் ஆகும்சற் சீடனே (1680)

நற்பண்பு, மெய்ம்மொழி, அன்பு, பகுத்துணர்தல், நற்குருவைச் சார்ந்திருத்தல், மெய்யறிவு, மெய்ப்பொருளைச் சிந்தித்துத் தெளிதல், இவற்றால் சிவானந்தம் தலைப்பட்டு இன்புறல் ஆகியவை நல்ல மாணவனின் பண்பு என்பது திருமூலர் சிந்தனை.

நல்ல மாணவனுக்கு இலக்கணம் சொன்னவர் அல்லாத மாணவனுக்கும் இலக்கணம் கூறுகிறார்.

குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வார்
குருடுங் குருடுங் குருட்டாட்டம் ஆடிக்
குருடும் குருடும் குழிவிழு மாறே (1658)

ஆணவம், கன்மம், மாயை ஆகிய மல மறைப்பால் நேர்ந்த அறியாமையாகிய குருட்டினை மல மறைப்பு இல்லா அருட்குரவரே நீக்க வல்லவர். குருட்டினை நீக்கும் குருவினைத் தேடி அடையாமலும் அவரைப் பெறுவதற்குரிய பக்குவத்தைப் பெறாமலும் பொய் வேடம் தாங்கிய மாந்தரைக் குருவாய்க் கொண்டு காலத்தையும் பொருளையும் வீணாக்குவர் பக்குவமற்ற மாணவர். இவ்விருவரும் அறியாமை நிறைந்த வாழ்வையே நடத்திப் பிறந்து இறந்து துன்புறுவர் என்பது திருமூலர் சிந்தனை.

குருடாகிய மாணவருள் இன்னொரு வகையும் உளர். வந்தவர் சிவகுருவே. என்றாலும் தம் அறியாமையால் மானுட சட்டை தாங்கிய குருவைச் சிவமென அறியாமல் மானுடரில் ஒருவராக எண்ணி அவர்பால் அணுகாமல் வாணாளை வீணாள் ஆக்குவார் இவர்.

'சுத்தசிவன் குருவாய் வந்து தூய்மைசெய்
தத்தனை நல்கருள் காணா அதிமூடர்
பொய்த்தகு கண்ணால் நமர்என்பர்... *(1558)*

என்று சிவத்தை அறியாதாரையும்,

...புண்ணியர்
அத்தன் இவனென் றடிபணி வாரே *(1558)*

என்று சிவத்தைக் குருவெனக் கண்டவரையும் குறிக்கின்றார் மூலர்.

அருளும் நெறி

இறைவன் மிகுதியும் பக்குவப்பட்ட விஞ்ஞானகலருக்கு உள்ளிருந்தே உணர்த்துவான். பிரளயாகலருக்கு தடத்தத் திருமேனிகள் கொண்டு உணர்த்துவான். சகலருக்கு மானுட உரு தாங்கி உணர்த்துவான். இதனைத்,

'தேவனும் சுத்த குருவும்...' *(1557)* என்னும் தொடரால் மூலர் உணர்த்துகிறார்.

குருவின் அருட் செயல்கள்

மாணவனைக் கடைத்தேற்றும் பொருட்டு ஆசிரியர் ஆற்றும் கடன்களால் அவரது பண்புகள் புலனாகின்றன. சிவபெருமானே சற்குருவாய் எழுந்தருளி மாணவனைச் சுத்தி செய்கிறார். மாணவனும் இறை நாட்டமும் சிவானந்த தேட்டமும் உள்ளவனாய் இருக்கின்றான்.

பத்தி பணித்துப் பரவும் அடிநல்கிச்
சுத்த உரையால் துரிசறச் சோதித்துச்
சத்தும் அசத்தும் சதசத்தும் காட்டலால்... *(1553)*

என்னும் அடிகளால் மாணவன் பொருட்டுச் சிவகுரு ஆற்றும் அருட்செயல்கள் உணர்த்தப்பட்டன. மெய்ப்பொருளிடத்து அன்பைக் கூட்டுதல், போற்றுதலுக்குரிய திருவடியைக் காட்டுதல், அருளுபதேசத்தால் அறியும் பொருள்பால் ஏற்படும் ஐயத்தையும் திரிபையும் களைதல், சத்தாகிய சிவம் அசத்தாகிய மலங்கள், சதசத்தாகிய உயிர் ஆகியவற்றின் தன்மைகளை உணர்த்துதல் ஆகியன குருவின் அருட்செயலாக இப்பாடலில் உணர்த்தப்பட்டன.

முப்பொருள்களின் தன்மைகளைக் காட்டியதால் உயிர் மலக் கட்டுகளினின்று விடுபட்டுத் தன்னை உணர்ந்து தனக்குத் தலைவன் சிவனே எனத் தெளியும். ஆணவம், கன்மம், மாயை என்னும் மலச் சார்பு நீங்கியமையால் உயிர் திருவருளில் கூடும். திருவருள் சிவத்தில் கூட்டும். இதனை,

பாசத்தைக் காட்டியே கட்டு பறித்திட்டு
நேசத்த காயம் விடுவித்து நேர்நேரே
கூசற்ற முத்தியில் கூட்டலால்... *(1554)*

என்னும் அடிகளால் வரும் மந்திரம் உணர்த்துகின்றது.

பயன்

சிவகுரு தரிசனத்தால் உயிர் பெறும் பயன்கள் பல. முப்பொருள் தன்மை அறிதல், அவற்றுள் நீக்குவன நீக்கிக் கூடுவன கூடுதல், பத்தி, ஞானம், வைராக்கியம், சிவோகம், நன்முத்தி, பிறப்பின்மை ஆகியவை சிவகுரு தரிசனத்தால் உயிர் பெறும் பயன்களாகத் திருமூலர் தெரிவிக்கின்றார்.

முடிவுரை

சைவத் திருநெறி காட்டும் அருள் நெறி எக்காலத்திற்கும் பொருந்துவது. தெளிவும் திண்மையும் உடையது. அன்றும் இன்றும் சிவபெருமான் அருட்குருவாய்த் தோன்றி உயிர்களை ஆட்கொள்ள அணியமாய் இருக்கின்றான். ஆனால் இக்கால மக்களோ இனிய பாற்கலன்மீது அமர்ந்திருக்கும் பூனை அப்பாலை அருந்தாமல் தொலைவில் கண்ட கரப்பான்பூச்சியைக் கவர்வதற்குப் பாய்வது போல் (திருவருட்பயன் 39) முத்தி நலம் காட்டும் மெய்க்குருவை அறியாது உலகியலையே போற்றும் பொய்க்குருவை நாடித் துன்புறுகின்றனர். மாணவரும் குருடு, குருவும் குருடு, ஆகக் குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடிக் குருடும் குருடும் குழி விழும் போக்கே இக்கால மக்களின் சமய வாழ்வாய் அமைந்துவிட்டது.

பொய்யை அறிந்து அதனை விட்டு நீங்கி மெய்யை உணர்ந்து அதில் பொருந்தி அருள் நலம் பெறத் திருவருள் வழி காட்டுமாக! சிவசிவ.

5. தமிழ்ஞானம் தந்த தலைஞானம் - திருமந்திரம்



இளமுனைவர் **பெரியய்யா**,
B.Sc., B.Sc(Agri)., M.Sc.(Agri)., M.A., PGDM., BGL PhD.,
25, ICC, 5th Street, W-Block, B-Sector,
அண்ணாநகர் மேற்கு (Extn.,)
சென்னை - 600101.

திருமூலர் திருமந்திரம் பன்னிரு திருமுறைகளில் பத்தாம் திருமுறை - தமிழர்க்கு முத்தான பொதுமறை.

வேதாந்த சித்தாந்த வெளிவாசல் தாண்டி, நாதாந்த வடிவாக நாதனைக் காணும் ஞானம் நல்கிய தமிழ்.

சித்தத்துக்குள்ளே சிவனைக் காணச் சிந்தை செய்த, மானுடப் பிறவியின் மாதத்துவம் பாடிய மாமனிதர் திருமூலர்.

பாவச்சுமை மானிடப் பிறவி என்று பாடிய பக்தர் கூட்டத்தை விட்டு விலகி 'உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பு ஆலயம்' என்று பாடியவர் திருமூலர்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' - என்று புறம் பாடிய புலவனைப் போல,

'ஒன்றே குலம் ஒருவனே தேவனும்' என்று பாடிய ஆன்ம நேய அருட்கவி - திருமூலர்.

'வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை' என்ற வள்ளுவன்போல, பேதம் பார்க்காது, 'யார்க்கும் இடுமின் அவர் இவர் என்னன்மின்' என்னும் ஞானபோதம் நல்கிய ஞானி.

பச்சிலை போதும் பரமன் பூசைக்கு, பசுவுக்கு ஒரு வாயுணவு, 'ஈ' என வருவோர்க்கு ஒரு பிடி சோறு - இதுவே உயர்ந்த தானம், தர்மம், நல்லறம் என்பதை விளக்க,

யாவர்க்குமாம் இறைவற்கு ஒரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே

என்று பாடிய திருமூலர் திருவாக்கு 'அறிவே தெய்வம்' என்பது திருமந்திரம் - 'ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில் இல்லை என்பது'.

தமிழ் இமயம் திருமூலர் என்றால், இமயப் பரப்பின் நெடுவரை உச்சி திருமந்திரச் சிந்தனைகள். திருமூலர் - வாழ்க்கை அற்புதங்களின் சொற் பொருள்.

திருமூலர் வாக்கு - அறிவுத் தேன் பிலிற்றும் ஞானத் தேனடை.

திருமந்திரம் - தமிழ் செய்த தவம். தமிழர் ஞானம் தந்த செல்வம்.

'ஏழையின் சிரிப்பில் இறைவன் இருப்பான்' என்பதற்கு எழுதிய விளக்கமாக,

நடமாடக் கோயில் நம்பார்க்கு ஒன்றீயில்
படமாடக் கோயில் பகவற்கு அது ஆமே

என்று, 'ஏழைக்குச் செய்யும் உதவி, இறைவனுக்குச் செய்யும் பூசை' என்று பூசைக்குப் புதுவிளக்கம் சொன்ன புண்ணியன். பூசைக்குப் பூவும் நீரும் போதும் என்று பாடிய புலவன் - திருமூலன். கொட்டிக்கிடக்கும் நித்தில மணிக்குவியல் - வைர வார்ப்புக்கள் திருமந்திரங்கள்.

திருமூலர் அட்டமா சித்திகள் பெற்ற தவயோகி என்றும், அவர் திருக்கயிலாய மலையில் இருந்து புறப்பட்டுத் தென்னாடு வந்து, திருஆடுதுறைத் திருத்தலம் அடைந்து, அங்கு எழுந்தருளியுள்ள செம்பொன் தியாகேசரை வணங்கிக் கோவிலின் மேற்குப் பக்கம் உள்ள படர் அரசமரத்தடியில் அமர்ந்து யோக நிட்டை புரிந்து, ஆண்டுக்கொரு பாடல் என்று, மூவாயிரம் ஆண்டுக் காலம் வாழ்ந்து, மூவாயிரம் தமிழ்ப்பாடல்களைப் பாடினார் என்றும், அவையே திருமந்திரம் எனவும் கூறப்படுகிறது. இது திருமூலர் வாக்காகவே ஒன்பதாம் தந்திரத்தின் ஈற்றில் மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ் என்று பதிவாகியுள்ளது. இனி அவர் கயிலையிலிருந்து புறப்பட்டுத் தென்னாடு வந்தார் என்பதற்கு என்ன ஆதாரம் என்றால், தெய்வச் சேக்கிழார் தம் திருந்தொண்டார் புராணத்தில்,

கயிலாயத்து ஒரு சித்தர் பொதியில் சேர்வார்
காவிரி சூழ் சாத்தனூர் கருதும் மூலன்

என்று குறிப்பிடுவதே இதற்கான சான்றாகும்.

தென்தமிழ் நாட்டிற் சைவசமயக் கருவூலமாகத் திகழ்வன பன்னிருதிருமுறைகள். அவைகளில் பத்தாந் திருமுறையாக அமைந்துள்ளது. திருமூலர் அருளிய திருமந்திரம்.

பன்னிரு திருமுறைகளையும் தோத்திரங்களாகக் கொண்டு அவைகளின் சாரமாக, பிழிவாக, சாத்திரங்களை அமைத்துக் காண்பது தமிழகத்து அருளாளர்கள் வகுத்தமைத்த முறை. ஆயினும் பத்தாந் திருமுறையாக அமைந்த திருமந்திரத்தைத் தோத்திரமாகவும் சாத்திர மாகவும் அமைத்துக் காண்பது மரபாகப் போற்றப் பெற்று வருகிறது.

திருமறைகள் அனைத்தினுக்கும் காலத்தால் முற்பட்டது திருமந்திரம் என ஆய்வாளர்கள் நிறுவியுள்ளார்கள். திருமூலர் அருளிய திருமந்திரம் ஒன்பது பெரும் பிரிவுகளாகப் (தந்திரம்) பிரித்து அமைக்கப்பெற்றுள்ளது. ஒன்பது பிரிவுகளும் வடமொழியில் உள்ள சைவ ஆகமங்களின் பொருளைத் தமிழில் திருமூலர் அமைத்துக் கொடுத்தார் என்பது மரபு வழியில் வந்த கருத்து. அக்கருத்து அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பெறவில்லை. அவ்வகையில் திருமூலர் வடமொழிச் சைவாக மங்களை அப்படியே தமிழில் மொழிபெயர்த்தார் என்று கொள்ளக்கூடாது. ஆகமங்களின் பொருளைத் தமிழில் தாமே ஓர் ஒழுங்குமுறை அமைத்துக் கொண்டு கூறினார் என்று விளக்கம் காட்டி அமைத்துள்ளார்கள்.

திருமூலர் அருளிய திருமந்திரத்தை யோகநூல் என்றும் அருளனுபவ நூல் என்றும் ஆய்வாளர்கள் எடுத்துக் கூறியுள்ளார்கள்.

திருமூலர்பிரான் அருளிச் செய்தவை மூவாயிரம் பாடல்கள் என்ற வழக்கு தற்போது வழக்கில் உள்ளது. ஆனால் அச்சிட்டு வெளிவந்துள்ள நூல்களில் 3047 பாடல்கள் உள்ளன. திருபனந்தாள் ஸ்ரீகாசி மடம் வெளியிட்டுள்ள திருமந்திரப்பதிப்பில் 61 மிகைப் பாடல்களையும் சேர்த்து 3108 பாடல்கள் இருக்கின்றன. சில பாடல்கள் இரண்டுமுறை வருவதால் பதிப்பிற்குப் பதிப்பு பாடல்களின் எண்ணிக்கை வேறுபடுகின்றது. திருமந்திரம் 1000 என்ற நூலும் மருத்துவம் தொடர்பாக வெளிவந்துள்ளது. திருமூலர் 300 மந்திரப்பாடல்களை அருளியதாகக் குறிப்பு காணப்படுகிறது. ஆனால் அனைத்தும் ஒரே பொருளைக்குறிப்பன என்பது திண்ணம்.

மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்
மூலன் உரைசெய்த முந்நூறு மந்திரம்
மூலன் உரைசெய்த முப்பது உபதேசம்
மூலன் உரைசெய்த மூன்றும்ஒன் றாமே — திரு 3046

என்னும் திருமந்திரப்பாடல் திருமூலர்பிரான் அருளியதா அல்லது வேறொருவர் அருளியதா என்பதை அறியமுடியவில்லை.

திருமந்திரம் ஓர் அனுபவ நூல். முயற்சியோடு கூடிய பயிற்சியால் பெறும் அனுபவ அறிவால் உணரக்கூடிய நூலாகத் திருமந்திரம் திகழ்கிறது. திருமந்திரத்தில் உள்ள மூவாயிரத்து நாற்பத்தேழு பாடல்களும் திருமூலரின் அனுபவ வெளிப்படாகும். இந்நூலை ஒவ்வொருவரும் அவரவர் அனுபவத்திற்கேற்ப அறிந்து கொண்டு வருகின்றனர். இந்நூலைப் பக்திநூல் என்றும், சாத்திரநூல் என்றும், வேதாந்தநூல் என்றும் தாந்திரிகநூல் என்றும் ஞானநூல் என்றும் அவரவர் உணர்திறனுக்கேற்ப உரைத்து வருகின்றனர். இதனைத் தனித்தமிழ் ஆகமம் என்றும் கூறுவர், அறிஞர்கள் பலர் திருமந்திரத்தை வாழ்க்கைக்கு வழிகாட்டும் நூலாக உணர்ந்து உரைத்து இருக்கிறார்கள். ஞானநூலாகவும் சித்தாந்த நூலாகவும் போற்றப்பெறும் திருமந்திரத்தினை வாழ்க்கைக்கு வழிகாட்டும் நூலாக உணர்ந்து போற்றினால் பயன் பெறலாம்.

மந்திரம் என்பதற்கு நினைப்பவரைக் காப்பது என்பது பொருள். திருமந்திரப் பொருளை ஒருவர் நினைவில் ஒட்ட வைத்துக் கொண்டால் அவரை வாழ்நாள் முழுமையும் காக்க வல்லது திருமந்திரம். திருமந்திரத்தில் உபதேசம் எனும் தலைப்பில் தரப்பெற்றுள்ள முப்பது பாடல்களின் விளக்கமாகவே ஏனைய மூவாயிரம் பாடல்களும் அமைந்துள்ளன. உபதேசப் பகுதியிலுள்ள பாடல்களை ஒருவர் ஊன்றிப் படித்து உணர்ந்து தெளிந்தால் அவரே மந்திரமாகி விடுவார்.

இதனை,

நான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்

ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான்பற்றி பற்றத் தலைப்படுந் தானே

என உரைத்திருப்பது உணரத்தக்கது. உடலுக்குள் உணர்வாக உள்ள இம்மந்திரத்தை ஒருவர் இடையறாது பற்றிக் கொண்டால் வான்பற்றி நின்ற மறைப் பொருளான சிவம் வந்து அவரிடம் பொருந்திவிடும் என்பது கருத்து.

நெற்றிக்கு நேரே புருவத்து இடைவெளி
உற்றுற்றுப் பார்க்க ஒளிவிடும் மந்திரம்
பற்றுக்குப் பற்றாய்ப் பரமன் இருந்திடம்
சிற்றம் பலமென்று சேர்ந்துகொண் டேனே

புருவமத்தியில் காணப்படும் இடைவெளிதான் தில்லைத் திருச்சிற்றம்பலமாகும். அங்குதான் பரம்பொருளாகிய சிவம் சோதி வடிவாக ஒளிர்கின்றது.

உயிர்கள் ஏன் பிறக்கின்றன என்பதையும் அவற்றின் நிலை பற்றியும் மிகத் தெளிவாக உரைக்கிறார்.

பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாசம் அனாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கிற்பசு பாசநில் லாவே

எனும் முப்பொருள் உண்மையே சைவ சித்தாந்தத்தின் அடிப்படை. பசு, பாசத்தினை விட்டுப் பதியிடம் சென்று சரணடைதல் வேண்டும். சேர்ந்த பிறகு பதியே குருவுருவாய் வந்து உணர்த்திவிடும்.

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்துஎனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்திவிட்டு
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே
(சிவஞான போதம் - 8ஆம் சூத்திரம்)

என்பதற்கேற்பக் குருவும், சீடனும் அன்னியம் இல்லாத நிலையினைப் பெற வேண்டும். பெற்றால் குருவருளைச் சீடன் பெற்றுப் பிறவிப் பணியினை அறுக்க முடியும்.

கல்லாலின் புடையமர்ந்து நான்மறை ஆ(று)
அங்குமுதற் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல்
நினைந்து பவத் தொடக்கை வெல்வாம்
(பரஞ்சோதி முனிவர் - திருவிளையாடல் புராணம் - காப்புச் செய்யுள்)

என்பதற்கிணங்கப் பிறவிப் பிணிகளை அறுத்து வெற்றி பெறலாம். அவ்வுயிர்கள் எப்படிக் குருவருளால் ஈடேறுகின்றன என்பதையும் நுட்பமாக உணர்த்துகிறார்.

மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்பதைத் தெளிவுறுத்து கிறார். நடமாடும் கோயிலாக இருக்கும் உயிர்களுக்குச் செய்யும் தொண்டே படமாடும் கோயிலில் இருக்கும் மகேசனுக்குச் செய்யும் தொண்டாகும்.

இதனை,

படமாடக் கோயில் பகவற்கொன் றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயில்
படமாடக் கோயில் பகவற்க தாமே (1857)

என எளிமையாகக் கூறித் தொண்டு செய்வதற்குத் தூண்டுகிறார்.

உயிர் தன்னை அறியாமல் இருப்பதற்குக் காரணம் என்ன? மயக்கம் தான். உண்மையைக் காணாக் கண்ணராய் ஆணவமலம் எனும் இருட்டறையில் கிடந்து உயிர்கள் உழல்கின்றன.

பொன்னை மறைத்தது பொன்னணி பூடணம்
பொன்னின் மறைந்தது பொன்னணி பூடணம்
தன்னை மறைந்தது தன்கர ணங்களாம்
தன்னின் மறைந்தது தன்கர ணங்களே (2289)

மரத்தை மறைந்து மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைந்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே (2290)

இவ்வாறு உயிர்கள் தம்மையறியாமல் தாமே கெட்டு உழல்கின்றன. தன்னையறிந்து விட்டால் விடுதலைதான். எப்படித் தன்னை அறிவது?

தன்னை யறிந்திடுந் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை யவிழ்ப்பார்கள்
பின்னை வினையைப் படித்துப் பிசைவார்கள்
சென்னியில் வைத்த சிவனரு ளாலே (2611)

என்கிறார் திருமூலர்பிரான். சென்னியிலிருக்கும் சிவத்தை நடுக்கண் புருவப்பூட்டுத் திறந்து காட்டுவதற்குக் குருபிரான் தேவை. அவரவர் விதிவழி அடைய நின்றனர். அவ்வளவே.

தம் உயிராகிய சீவனைச் சிவமாக மாற்றிக் கொள்ளும் ஆற்றல் பெற்றவர்களால் மட்டுமே பின்வருமாறு கூறமுடியும்.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகுங்கதி யில்லைநுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்ம்மினே (2104)

என்னும் திருமந்திரப் பாடல் நினைந்து உருகுவதற்குரியது. உறுதியாகச் சித்தத்தில் நின்று, நின்று நினைக்க வேண்டும்.அதுவும் நன்றே நினைக்க வேண்டும் எதற்காக? (நீர் நினைத்து உய்ம்மினே) உய்வதற்காக!எதிலிருந்து உய்வதற்காக? எமனிடமிருந்து உய்வதற்காக (நமனில்லை) அதாவது நினைந்து போற்ற வேண்டும். உள்ளத்தில் சித்தாக அறிவாக இருந்து எல்லாவற்றையும் நமக்கு

அறிவித்துக் கொண்டிருக்கும் அந்தப் பரம்பொருளை, பெரும்பொருளை - பேரொளிப் பிழம்பை - பெருவெளியை - அறிவை நேர் கூராக்கி ஒரே நினைவில் ஆணியாய் - ஆப்பாய், அறைந்து நிறுத்திக் காண வேண்டும் என்பதே இத்திருமந்திரத்தின் நுண்பொருள்.

உயிர்கள் அறிவு வடிவம் (அறிவு சொரூபம்) என்பதை மறந்து அவை மயங்கியிருப்பதை உணர்த்துகிறார். குருபிரான் உணர்த்திய பின்னரே உயிர்கள் மாயத் திரைகளிலிருந்து விடுபட்டுத் தாமே அந்த அறிவின் வடிவம் (அறிவு சொரூபம்) என்பதை உணர முடியும்.

அறிவுக்கு அழிவில்லை ஆக்கமும் இல்லை
அறிவுக்கு அறிவல்லது ஆதாரம் இல்லை
அறிவே அறிவே அறிகின்றது என்றிட்டு
அறைகின் றனமறை யீறுகள் தாமே (2358)

என்பதை உணர்ந்து, உணர்ந்து ஊற்றெழும் கண்ணீர் அதனால் நனைந்து, நனைந்து உய்தி பெறுதல் வேண்டும். சிரஞ்சீவிப் பதத்தைப் பெறுதல் வேண்டும். இதுவே திருமந்திரப் பயன்.

தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை யறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை யறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே யர்ச்சிக்கத் தானிருந் தானே (2355)

என்கிறார் திருமூலர் பிரான். சூட்சுமமும், இரகசியமும் இது தான். தானே தான் அது. அதுவே தான் நாம். தன்னை அறிந்தவன் தனக் குள்ளே இருக்கும் தலைவனையும் அறிவான். தமக்குள்ளே ஒளிந்து ஒளிரும் கண்ணார் அமுதத்தைக் கண்டவர்களின் ஐம்புலன்களும் வெறிபிடித்து அலையுமா? அலையாதே! தலைவனைஅறிந்தால் வெறி பிடித்த ஐம்புலமாடுகள் வெறி அடங்கி அமைதியுறும். அதன் பிறகு ஐம்புலன்களும் மனத்திலே ஒன்றி விடும். தெளிந்த மனம் கண்ணாடி போல உள்ளத்தில் உறைந்திருப்பவனைக் காட்டிவிடும். அதன்பிறகு ஐம்புலனும் செயல்பட்டாலும் அது ஞானநெறியாகவே இருக்கும். இதனை,

பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு
மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினால்
பார்ப்பான் பகஜந்தும் பாலாச் சொரியுமே (2883)

என்கிறார் திருமூலர்.

தமிழ்ப் பண்பாட்டுப் பலகணியாகவும் தமிழ் ஞானத் திறவு கோலாகவும், தமிழ்ச் சமயத்தின் - சமுதாயத்தின் தலைவாசலாகவும் திகழும் திருமந்திரம், தமிழறிந்தோர் இல்லந்தோறும் பயிலப்பட - பயன்பட வேண்டிய அரிய கருத்துக் கருவூலம்.

மந்திரங்கள், மனத்துயர் போக்கும் மா மருந்துகள். திருமந்திரம் தமிழர் வாழ்வுக்கு வழிகாட்டி. நல்லறிவுப் பெட்டகம். ஞானத் தேனமுதம். திருமந்திரச் சிந்தனைகள், தமிழர் வாழ்விலும் வாக்கிலும் ஒளிவிடும் நாள், தமிழுக்குத் திருநாள் ஆகும்.

6. நாரி மருந்து



மருத்துவர். பொன்மாணிக்கவல்லி
தலைவர், அனைத்துலகத் திருமந்திரம் மற்றும்
யோகா ஆராய்ச்சி நிறுவனம், மேலத்திருப்பூந்துருத்தி
தஞ்சாவூர் 613103. தமிழ்நாடு, இந்தியா.
கைபேசி: 98432 69109 • Email: yoga.drthirumoola@gmail.com

உலகில் எடுத்தது சத்தி முதலா
உலகில் எடுத்தது சத்தி வடிவாய்
உலகில் எடுத்தது சத்தி குணமாய்
உலகம் எடுத்த சதாசிவன் தானே (1713)

சிவனும் சத்தியும் இணைபிரியாமல் இருந்து உலகத்தை இயக்குவதைத் தெளிவாகச் சுட்டிக்காட்டுவது திருமந்திரம். சிவன் அர்த்தநாரியாக இருந்து அருள்பாலிப்பதை உலக மக்களும் அறிவர். ஆனால் மருந்திற்கும் திருமந்திரத்திற்கும் ஏதேனும் தொடர்பு உண்டா? அது ஒரு முழுமையான ஆகம நூலாயிற்றே என்றெல்லாம் வினா எழும். ஆராய்ச்சி செய்தால் மாபெரும் மருத்துவ நூலாகத் திருமந்திரம் விளங்குவதைக் காணலாம். சித்தர்கள், ஞானிகள் பெரும்பாலும் பெண்களால் துன்பப்படுவதையே கூறுவார்கள். அதில் பட்டினத்தார்,

காதளவு ஓடிய கலகப் பாதகக்
கண்ணியர் மருங்கில் புண்ணுடல் ஆடும்
காதலும் கருத்தும் அல்லால்நின் இருதாள்
பங்கயம் சூடப் பாக்கியம் செய்யாச்
சங்கடம் கூர்ந்த தமியேன்.

என்று சங்கடப்படுகிறார்.

காதுவரை நீண்டு காமப்போர் செய்யும் கொடிய கண்களை உடைய பெண்களது இடையின்கீழே ஆறாத புண்ணாய் அமைந்த அல்குல் தடத்தினில் புணர்ந்து களிக்க வேண்டும் என்ற ஆசையையும் அதே நினைப்பையும் தவிர, உனது (சிவன்) இரு தாள்களாகிய தாமரை மலர்களைத் தலையிலே சூடிக்கொள்ளும் புண்ணியச் செயலை ஒரு போதும் செய்யாத பாவியேன் யான் என்று தனது துன்பநிலையை எடுத்துரைக்கிறார். ஆனால், திருமூலர் பெண்ணை மருந்தாக மாற்றுகிறார்.இக்கலையழகை இக்கட்டுரையின் வாயிலாகக் காண்பதே இங்குச் சிறப்பு நோக்கம்.

பொருளுரை

இருபத்து ஒன்றாம் நூற்றாண்டில் மருத்துவம் மிகவும் பயனுள்ள ஒன்றாகும். மருந்து எதற்காக? பிறவிப் பிணி என்ற நோயினால் துன்பப்படுகின்றோம். அதை முழுமைப்படுத்தும் பணியில் ஈடுபடாமல் மாயையில் சிக்குண்டு தவிக்கின்றோம். அந்த மாய்வாழ்வை மாற்றியமைக்கும் வழிதான் நாரி மருந்து என்னும் சிற்றின்பத்தையே

பேரின்பமாக மாற்றும் கலை. இதைப் பரியங்க யோகம் என்ற பகுதியில் திருமந்திரத்தில் காணலாம். கட்டிலில் பெண்ணோடு கூடியிருந்து செய்யும் போகத்தை யோகமாக்குவது பரியங்கயோகமாகும். இதைத் தாத்ரீ யோகம் என்றும் தற்காலத்தில் கூறுவதைக் காணலாம்.இதனைத்

பெற்ற சிற்றின்பமே பேரின்பமாய் அங்கே,
முற்ற வரும்பரிசு உந்தீபற
முளையாது மாயை என்று உந்தீபற

என்ற திருவுந்தியார் பாடலில் காணலாம். இனித் திருமந்திர விளக்கத்தைக் காணலாம்

பூசு வனவெல்லாம் பூசிப் புலர்த்திய
வாச நறுங்குழல் மாயையும் சாத்திக்
காயகுழலி கலவியோ டுங்கலந்து
ஊசித் துளையுறத் தூங்காது போகமே (825)

பூசத் தகுந்த வாசனைத் திரவியங்கள் எல்லாம் உடம்பில் பூசிக்கொண்டு மலர்ந்த மணம் நிறைந்த மாலையை அணிவித்துப் பெண்ணோடு கலவியிலே பொருந்தி மனமானது பிரம மந்திரமாகிய உச்சியை நினைத்திருக்க தளராது என்கிறார் திருமூலர்.

இன்ப காலத்தில் கூட இறைவனை நினைத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு நினைக்கும் நபர் தமது உடலில் வாசைன நிறைந்த (பரிமளம்) மணம் வீசும் பூக்களைச் சூட வேண்டும் என்று அதன் முக்கியத்தைக் கூறுகிறார். காரணம் ஊன் உடம்பு ஆலயமல்லவா? ஆதை அலங்காரம் செய்து பார்க்கச் சொல்கிறார்.

மேலும்,

போதத்தை யுன்னவே போகாது வாயுவும்
மேதத்த வெள்ளியும் மீளும் வியாழத்தில்
சூதொத்த மென்முலை யாளும்நற் சூதனும்
தாதிற் குழைந்து தலைகண்ட வாறே (862)

என்பதில்,பேரறிவுப் பொருளை நினைவில் கொண்டுகலவி புரியின் காம வாயு நிறைந்து தொழிற்படாது. அப்போது நீர்த்தன்மையுடைய சுக்கிலமும் சுரோணிதத்தில் கலக்காது மீளும். சூதாடு கருவியையொத்த தனங்களையுடைய பெண்ணும் உடம்பாகிய தேரினை நடத்தும் ஆணும் தம்மில் பொருந்திய கூட்டுறவால் விளைந்த சுக்கில சுரோணிதங்கள் விந்து நாதங்களாக மாற்றம்பெற்றுச் சிரசில் பொருந்தும் என்கிறார்.

மாதம் இரண்டுமுறை போகம் செய்தல் நலம் என்று சித்தர்கள் கூறியுள்ளனர். அதுபோக எஞ்சியுள்ள நாட்களில் காமவேட்கை உள்ளவர்கள் மேற்கண்ட பாடலில் கூறியபடி சுக்கிலத்தைச் சேமிப்பதனால் நன்மையுண்டாகும் என்பதனைக் குறிப்பிடுகிறார்.

கண்டனும் கண்டியும் காதல்செய் யோகத்து
மண்டலம் கொண்டிரு பாலும் வெளிநிற்கும்
வண்டியை மேற்கொண்டு வானீர் உருட்டிடத்
தண்டொரு காலும் தளராது அங்கமே (827)

தலைவனும் தலைவியும் விரும்பிப் புணரும் யோகத்து அக்கினி மண்டலம் சூரிய மண்டலங்களைக் கடந்து சந்திர மண்டலத்தில் இருவரும் சிரசின் மேலேயுள்ள வெளியை அறிவர். உடலாகிய வண்டியை மேலும் மேலும் செலுத்துவதால் மதிமண்டலத்தில் ஆகாய கங்கையாகிய ஒளியைப் பெருக்கிட அங்கீதத்தில் தண்டு ஒரு போதும் தளர்ச்சியடையாது என்கிறார்.

பரியங்கயோகம் செய்யும் இருவரும் அன்பின் வடிவமாகவும் இளமையோடும் இருந்து செய்யும்போது வானீர் பெருகி வரும். அதோடு மட்டுமல்லாமல் உடல் தளர்ச்சியடையாமல் மனம் புத்துணர்ச்சி பெற்றுத், தன்னை வழிநடத்திச் செல்லும் தலைவனாவான் என்பதனை,

அங்கு புணர்ச்சியும் ஆகின்ற தத்துவம்
அங்கத்தில் விந்து வருகின்ற போகத்துப்
பங்கப் படாமல் பரிகரித்துத் தம்மைத்
தங்கிக் கொடுக்கத் தலைவனும் ஆமே (828)

என்கிறார். புணர்ச்சியின் காரணமான காமாக்கினி, உடம்பில் விந்துவை நீக்கம் செய்கின்ற போகத்தில் அது கெடாமல் பாதுகாத்து, யோகத்தினால் மாற்றி விந்து ஜெயம் பெற்றவன் தலைவனாவான் என விளக்குகிறார்.

தலைவனும் ஆயிடும் தன்வழி ஞானம்
தலைவனும் ஆயிடும் தன்வழி யோகம்
தலைவனும் ஆயிடும் தன்வழி யுள்ளே
தலைவனும் ஆயிடும் தன்வழி அஞ்சே (829)

என்கிறார். அங்ஙனமாகிய தலைவன் ஆன்மாவை அறிந்தவனாகின்றான். விரும்பிய சிவயோகம் தானே வந்தடையும். அவன்தன்னை வசப்படுத்தி ஆளும் தலைவனாவான். அவன் விருப்பப்படி பஞ்சபூதங்கள் முதலியன நடக்கும் என்கிறார்.

யோகிகள், மானிடர்களைவிட எவ்வளவு உயர்ந்தவர்கள் என்பதனைத் தெள்ளத்தெளிவாக இதிலிருந்து தெரிந்துகொள்ள முடிகிறது. காரணம் ஐந்தறி சீவன்கள் செய்யும் வேலையை ஆறறிவு சீவன் செய்யலாமா? ஆன்மாவை அறியவந்த பிறவியை அறியாமையின் காரணமாக மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசையில் அதிக நாட்களைச் செலவு செய்வதனால் தலைவன் என்ற பதவியை எட்ட இயலாமல் போய்விடுகிறது. பசித்து, தனித்து, விழித்து, பதவியைப் பெற இயலாதவர்களுக்குத் திருமூலர் குறுக்குவழியில் ஆன்மாவை அறிய, அரியவழியைக் காட்டுவதுடன்,

அஞ்சி கடிகைமேல் ஆறாங் கடிகையில்
துஞ்சுவது ஒன்றத் துணைவி துணைவன்பால்
நெஞ்சு நிறைந்தது வாய்கொளாது என்றது
பஞ்ச கடிகை பரியங்க யோகமே (830)

என, ஐந்து நாழிகைக்குமேல் ஆறாவது நாழிகையில் துணைவி துணைவனுடன் பொருந்தி உறக்கங்கொள்ள ஐந்துநாழிகை கொண்ட பரியங்கயோகம் மனம் நிறைவெய்தலால் கலவி இனித்தேவையில்லை என விளக்குகிறார்.

ஐந்து நாழிகை என்பது இரண்டுமணி நேரம் (ஒரு நாழிகை 24 நிமிடம்). இவ்வளவு நேரமா என்ற எண்ணம் தோன்றலாம். மூலாதாரத் திலிருந்து ஒவ்வொரு சக்கரமாக ஏற்றி உள்நாவிலிருந்து அமிர்தம் சுரக்க வேண்டும். அதுதான் இந்த யோகத்தின் முக்கிய நோக்கம். ஆனால், இது ஒருவராலும் செய்ய இயலாது என்பதனை,

பரியங்க யோகத்துப் பஞ்ச கடிகை
அரியஇவ் யோகம் அடைந்தவர்க்கு அல்லது
சரிவளை முன்கைச்சி சந்தனக் கொங்கை
உருவித் தழுவ ஒருவர்க்கு ஒண்ணாதே (831)

என்கிறார். பரியங்க யோத்தில் ஐந்துநாழிகை அருமையாக இருப்பதற்கு, நழுவுகின்ற வளையலை அணிந்த முன்கையை யுடையவளும் விஷய வாசனை பொருந்திய சூரியசந்திரர்களாகிய தனங்களையும் உடைய குண்டலினி சத்தியைக் கடந்து மேற்செல்லவல்ல ஒருவராலன்றி வேறெவராலும் முடியாது என விளக்குகிறார்.

ஆனால், இராசயோகம் என்று கூறக்கூடிய அட்டாங்க யோகத்தை முறையாகப் பயின்றவர்களாலும் பேரின்பமே முடிந்த முடிவு என்று கருதக்கூடிய சாதகர்களாலுமே இது முடியும் என்றும் குறிப்பிடுகிறார்.

ஆகையினால் இதை யாராலும் அவ்வளவு எளிதில் அடைய முடியாது. அவ்வாறு அடைந்தவர்களின் சிறப்பை,

வைத்த இருவரும் தம்மின் மகிழ்ந்துடன்
சித்தம் கலங்காது செய்கின்ற ஆனந்தம்
பத்து வகைக்கும் பதினெண் கணத்துக்கும்
வித்தக னாய்நிற்கும் வெங்கதி ரோனே (835)

இவ்வண்ணம் விந்து நீக்கமின்றிப் புணரும் இருவரும் தம்மில் இன்புற்று காம வசப்படாமல் தேவ காரியமாக நினைத்துச் செய்கின்ற ஆனந்தநிலையில் பத்துத் திசைகளுக்கும் பதினெட்டு வகைத் தேவர்களுக்கும் உள்ள சிவசூரியன் விளங்குவான் என்கிறார்.

இவ்வாறு விளங்கும் சாதகர்கள் தம்முடைய உடலிலே ஓசை (நாதம்) ஒளியை (விந்து) உணரும் வாய்ப்பினைப் பெறுகிறார்கள். இதனையே சிவவாக்கியச் சித்தர்,

ஓடிஓடி ஓடிஓடி உட்கலந்த சோதியை
நாடிநாடி நாடிநாடி நாட்களும் கழிந்துபோய்
வாடிவாடி வாடிவாடி மாண்டுபோன மாந்தர்கள்
கோடிகோடி கோடிகோடி எண்ணிறந்த கோடியே

என்கிறார். இதிலிருந்து கோடிக்கணக்கான மாந்தர்கள் இவ்யோகத்தில் தோல்வியடைந்து வாடிப்போய் மாண்டுவிட்டதைப் பதிவு செய்துள்ளார்.

குண்டலினியை 'வித்து' என்று சிவவாக்கியர் குறிப்பிடுகிறார். குண்டலினி சக்தி என்பது விந்துவின் சிறப்பு ஆற்றல். இது போகத்தின்போது கீழ்நோக்கிப் பாய்ந்து சிற்றின்பமாய்க் குறைகிறது. யோகத்தின்போது மேல்நோக்கி ஏறிப்போய் பேரின்பம் பயக்கிறது. நம் உடலில் ஐந்து வகை அக்கினியுள்ளன.

1. மூலாக்கினி 2.யோகாக்கினி 3. கோபாக்கினி
4. தீபாக்கினி (பசி) 5. தாபாக்கினி (காமம்)

இவற்றுள் கோபாக்கினி, தீபாக்கினி, தாபாக்கினி ஆகிய மூன்றின்மீதும் குண்டலினி சக்தி கீழ்நோக்கிப் பாய்ந்து விடயபோக சிற்றின்ப விவகாரங்களில் சிதறி விரயமாகிறது. ஆனால் மூலாக்கினி, யோகாக்கினி இரண்டிலும் குண்டலினி சக்தி ஊர்த்துவ முகமாக மேல்முகமாக மேல்நோக்கிப் பாய்ந்து பேரின்பநிலையில் மானுடத்தைச் சேர்க்க உதவுகிறது.

முடிவுரை

ஒரு விந்தணு உருவாகச் சுமார் எண்பது குருதித்துளிகள் தேவைப் படுகின்றன. உணவு உண்ட மறுநாள் திப்பி நீங்கி அன்னரசமாகும். மூன்றாவது நாள் உதிரமாகும். நான்காவது நாள் மாமிசமாகும். ஐந்தாம், ஆறாம் நாள்களில் மேதை ஆகும். ஏழாம் எட்டாம் நாள்களில் மஜ்ஜை ஆகும். பின்னரே இந்திரியமாகும்.

இந்திரியமாகிய விந்து, தூய இரத்தத்தினின்றும் வடிகட்டப்படும் ஓர் அபூர்வப் பொருளாகும். இவ்விந்துவிற்கு விந்தணு, சுக்கிலம், இந்திரியம், ஜீவசத்து, உயிர்த்துளி, உயிர் ஆற்றல், உடற்சாறு என்று பல பெயர்கள். இதை வீணாக்கும் சாதகன் தளர்ந்து விடுகிறான். ஆகையால் இதற்குச் சக்தி வாய்ந்த மருந்து நாரி மருந்து என்று திருமூலர் குறிப்பிடுகிறார்.

வீர மருந்தென்றும் விண்ணோர் மருந்தென்றும்
நாரி மருந்தென்றும் நந்தி அருள்செய்தான்
ஆதி மருந்தென்று அறிவார் அகலிடம்
சோதி மருந்திது சொல்லஒண் ணாதே (திரு. 850)

வீரியத்தால் உண்டானபடியால் வீரமருந்தென்றும் ஆகாய வெளியில் சோதியாக அமைவதால் தேவர்கள் மருந்தென்றும் பெண்ணால் அடையப்படுவதால் நாரிமருந்தென்றும் என் குருநாதன் அருளிச் செய்தான். இதனைத் தொன்மையான மருந்தென்று யோகியர் அறிவர். இது விரிந்த சோதிமயமானது. இதனைச் சாமானியருக்குச் சொல்ல லாகாது. சோதி மருந்தை இப்பிறவியில் பெறுவதற்காகவே பெண்ணைப் படைத்து இயற்கை உதவியிருக்கிறது என்கிறார்.

பரியங்க யோகத்தின் பயனாக விளையும்நாரி மருந்து

- மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தவும் நோய்களைக் கட்டுப்படுத்தவும் உதவுகிறது.
- தேவையற்ற கருத்தரித்தலைத் தடுக்கிறது.
- அறியாமையை நீக்கி ஆன்மபலத்தைக் கூட்டுகிறது
- இளமையில் வரும் முதுமையை நிலையை மாற்றப் பெரிதும் உதவுகிறது.

இன்னும் இவற்றைப்போல் பல்வேறு நிலைகளில் நாரி மருந்து பயன்தருகிறது.

7. சிவ சிவ என்கிலர் தீவினையாளர்



மரபு வழிச் சித்தர் அனுப்பபட்டி ப.சு.மணியன்
பல்லடம் 641664, தமிழ்நாடு. இந்தியா
கைபேசி: 9442734398
சென்னை – 4.

வினைக் கொள்கை

தமிழ்நாட்டில் இருவினை கொள்கையைப் பற்றி காலங் காலமாக அருளாளர்களும், ஞானிகளும் பேசி வருகின்றனர். மனிதப் பிறப்பு மீண்டும் மீண்டும் வருவதற்கும் வினைப்பனே காரணம் என்று வேதங்களும், ஆகமங்களும், புராணங்களும், சைவசித்தாந்தமும் இதை உறுதிப்படுத்துகின்றன. சஞ்சிதம், ஆகாமியம், பிரராப்தம் இவ்மூன்றுமே தாம் தாம் செய்த வினையின் பயனை செய்தவர்களுக்குத் திரும்ப திரும்பக் கொடுத்துப் பிறவியைத் தொடரச் செய்வதாகும்.

இதனை,

இருவினை விலங்கொடு இயங்கு புற்கலம்
வினைபோகமேயொடு தேகங்கண்டாய்
வினைதான் ஒழிந்தால் தினைப்போதளவும்
நில்லாது கண்டாய்

என்று பட்டினத்தார் கூறுகிறார். இதனை,

வினையின் வந்தது, வினைக்கு விளையாயது
பினைவனநீங்கின் புலால்புறத்திடுவது
பற்றின் பற்றிடம், குற்றக் கொள்கலன்

என்று மணிமேகலையும்,

எனைப்பகை உற்றாரும் உய்வர்
வினைப்பகை பின்சென்று வீயாது அடும்

என்று வள்ளுவர் தீவினையச்சம் பற்றிக் கூறுவார்.

ஒருவன் தான்செய்த வினையில் இருந்து முழுமையாக நீங்கினால்தான் பிறவாமையும், இறவாமையும், இறைவன் மயமாகும் நிலையும் ஆன்மாவுக் கிட்டும். மனிதன் செய்யும் வினைகளில் நல்வினை, தீவினை என்று இரண்டும் உண்டு. இந்த இரண்டு வினைகளுமே பிறப்பிற்குக் காரணமாகிறது. நல்வினை செய்தோர் நல்ல செல்வசெழிப்பான குடும்பத்திலும், தீவினை செய்தோர் கீழ்நிலைக்குடும்பத்திலும் பிறப்பர்.

தமிழகத்தில் தோன்றிய ஆன்மிகவாதிகள் அனைவருமே உயிர்கள் வினையில் இருந்துநீங்க வேண்டும் என்றே கூறி இருக்கிறார்கள். உலகப் பொதுமறையாம் திருக்குறளில்,

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான் முந்துறும்

எனக்கூறுவதால் ஒருவனுடைய ஊழ் வினையே அவனது பிறவிக்கு வித்தாகிறது. ஞானசம்பந்தர் முதல் முதல் ஞானப்பால் அருந்திய பின்பு பின் தன்னை அறிமுகப்படுத்தும் முகமாக

ஒரு நெறிய மனம் வைத்துணர் ஞானசம்பந்தன் உரை செய்த
திருநெறிய தமிழ் வல்லவர் தொல் வினை தீர்தல் எளிதாமே

என்று வினை தீர்வுக்கு வழிகாட்ட வந்ததாகக் குறிப்பிடுகிறார்.

திருமூலரும், ஆன்மா உடம்பு எடுத்து உலகில் பிறவிக்கு வந்த காரணமே தன் வினைமாசுகளை அகற்றி, பொய் நெறிகளில் இருந்து நீங்கி மெய்ஞான நெறிக்குச் செல்ல வேண்டும் என்பதே தான் பிறவிக்கு வந்ததன் காரணம்

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே (724)

இப்பாடல் மூலம் விளக்கம் செய்து, உடம்பு ஆன்மாவுக்கு வினை நீங்க வந்தது. உடம்பு அழிந்தால் ஆன்மா உலகுக்கு வந்த காரியம் ஈடேறாது. ஆக மெய்ஞானம் பெற்று இறைவனை அடையும் வரை உடம்பை வைத்துக் கொள்ளும் உபாயத்தைப் பாடலில் விளக்கம் செய்கிறார்.

தீவினையாளர்கள்

சிவசிவ என்கிலர் தீவினையாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளுஞ்
சிவசிவ என்றிடத் தேவருமாவர்
சிவசிவ என்னச் சிகதிதான் (2716)

தீவினையாளர்கள் மும்மலத்தில் அழுந்தி உடம்பே தான் என்றும், புலன்களால் அனுபவிப்பதே வாழ்வு என்றும், நல்லவைகள் எவை என்றோ, சகமனிதர்களின் சுகதுக்கங்களை கவனியாமல் வீணே உண்டு உறங்கி சகல அவத்தையிலே இருப்பதினால் அவர்களது அறிவில் சிவனாகிய கடவுள் ஒருவன் இல்லை என்று தீவினையின் காரணமாக 'சிவசிவ' என்று எண்ணவும் முடியாது, வளங்கவும் முடியாது. அப்படி சிவம்பரம் பொருளை அறிந்து அவரால் தான் நாம் வாழ்கிறோம். அவர்தான் வினையில் இருந்து நம்மை நீக்குவர் என்று உருக்கத்துடன் சிவசிவ என்று சொல்லுவார்களே ஆகில் அவர்களது தீவினைமாய்ந்து, தேவ நிலைக்கு உயர்வது மட்டுமில்லாமல் சிவகதியே சேர்வார்கள் என்பது திருமூலர் உயிர்களின் மேல் உள்ள இரக்கத்தால் கூறுகிறார்.

அஞ்சும் அடங்கும் அறிவு

யோகியர்பால் யோகம் பயிலச் செல்வீர்களாயின் அவர் புலன்கள் ஐந்தையும் அடக்கி கல்லைப்போல உணர்வுவற்று

அமர்ந்திருங்கள், அதுவே யோகப் பயிற்சி என்பார்கள். ஆனால் திருமூலர் கூறும் நுட்பமோ உங்களின் ஐம்புலன் அறிவையும் பயிற்சியினால் கடவுள் சந்நிதியில் நிறுத்தி அவைகளை அவனது அருளில் அடங்குமாறு பயிற்சி செய்யுங்கள் தொடர்ந்து அப்படி பயின்று வருவீர்களானால் நீங்கள் இறைவனையும் - இறைவன் உங்களையும் கண்டு கொள்ளமுடியும் என்பதை

அஞ்சும் அடக்கு அடக்கு என்பர் அறிவிலார்
அஞ்சும் அடக்கும் அமரரும் அங்கில்லை
அஞ்சும் அடக்கில் அசேதனமாம் என்றிட்டு
அஞ்சும் அடக்கா அறிவறிந்தேனே (2033)

அஞ்சும் அடக்கில் அசேதனம் என்பதை இறை நினைப்பு இல்லாமல் உடலுடன் பிராணன் அடங்கியநிலையே அசேதனம் - அறிவற்ற நிலை தூங்கி எழுவது போன்ற நிலையே.

மும்மல காரியம்

முப்புரதகனம் என்பது மும்மலத்தை அழிப்பது தான் முப்புரத்தை வெற்றியடைந்த புராணம். மும்மலம் என்பது ஆணவம், கன்மம், மாயை என்பதே முப்புரம் - முப்புராதிகள் என்போர். மும்மலத்தை அடக்காமல் - மாயையில் ஈடுபட்டு பட்டு பிறவி கடலில் தத்தளிப்பவர்கள், இந்த மும்மலம் அற்றால் - முத்தியும் சித்தியும் கிட்டும் என்பதை திருமூலர் வலியுறுத்து கிறார். ஆணவமலமாகிய இருளில் இருந்து ஆன்மா ஒளிக்கு வரவேண்டும். ஆன்மா ஒளிமயமானது அது சிவஞான ஒளியில் தன்னை ஒன்ற விடாமல் மும்மலம் ஆன்மாவை இருளிலேயே தள்ளிக் கொண்டிருக்கிறது. பிறவிக்குக் காரணம் எது என்று ஆன்மா சிந்திக்க வேண்டும் - அப்படி சிந்திக்கும் போது அது மும்மலத்திலிருந்து நீங்கும் தடைகளையெல்லாம் தவிர்க்கும். மும்மலம் என்பன முப்புரம். மூவகை இயல்புடையே மனமே முப்புராதிகள். அதனைத் தன் வழியில் இயக்கும் ஆண்மை. இதைத்தான் திருமூலர் கொண்ட அறிவு முப்புராதியை வெற்றி கொண்டது.

அப்பணி செஞ்சடை ஆதிபுராதனன்
முப்புரம் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புரமாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யாரறிவாரே (343)

இறைவன் தன்மெய்யடியார்களை மும்மலத்தில் இருந்து விடுவிக்க அருள்புரிகிறான். ஆன்மாவுக்கு சிவஞானத்தை வரவைக்கிறார். இறைவன் அருளினால் ஆன்மாவினுடைய ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி ஆகிய மலங்கள் நீங்க ஆன்மா சுத்தியாகி - பிறவித்தலையில் இருந்து விடுபடுகிறது. இதைவிடுத்து, சூரசம்ஹாரம், மகிஷாசுரவதம்,

நரகாசுரவதம் போன்ற புறச்சடங்குகளை வழிபாட்டுச் சடங்கு களாக, விழாவாக பெரிதுபடுத்திக் காட்டாமல் ஆன்மாக்களைப் பிடித்துள்ள அறியாமைகளை சம்ஹாரம் செய்யும் வழிகளை போதிப்பதே ஆன்ம விடுதலைக்கு மூலகாரணமாகும். சடங்குகள், சம்பிரதாயம், பல தெய்வ வழிபாட்டு முறைகளும், விரதங்களும் மக்களுக்குத் தேவையற்ற வீண் ஆடம்பரமே.

மெய்கண்டார் காலத்திற்கு முற்பட்ட திருமூலர் 'சித்தாந்தம்' என்ற சொல்லை, திருமந்திரத்தில் முப்பத்திரண்டு இடங்களில் எடுத்தாண்டிருக்கிறார். 'தானான வேதாந்தம்', 'தான் என்னும் சித்தாந்தம்', தேனிக்கும் முத்திரை சித்தாந்த முத்தியே என்று முடிவாகக் கூறினார்.

நித்தம் பரனோடு உயிருற்று நீண்மலம்
சத்தமுதல் ஐந்தும் தத்துவத்தால் நீங்கிச்
சுத்தம் அசுத்தம் தொடாவகை நினைந்து
அத்தன் பரன்பால் அடைதல் சித்தாந்தமே

ஆகச் சித்தாந்தம் என்பது சித்தத்தின் முடிவு சிவனைச் சார்தலே என்பதைத் திருமூலர் தெளிவாக உறுதிப்படுத்துகிறார்.

முப்பொருள் உண்மை

முப்பொருள் என்பது இறைவன், ஆன்மா, பாசம் இதை சைவசித்தாந்தம். பதி, பசு, பாசம் என்று கூறுகிறது. இந்த மூன்று பொருளும் உலகம் தொடங்கில் கால முதல் இருந்து வருகிறது. இறைவன் உலகத்துக்கு வேண்டும், இறைவனுக்கு ஆன்மாக்களும் வேண்டும். ஆன்மாவை - பாசமாகிய இருள் பிடித்துக் கொள்கிறது. இதுவே மாயை. மாயையில் விரிவே ஆணவம், கன்மம், மாயை என்பன. இதுவே இறைவனை (பதி) சேரவிடாமல் - பசுவை பாசம் பிணித்திருக்கிறது. இந்தப் பிணிப்பே பிறவிப்பிணி. இதிலிருந்து நீங்க வேண்டுமானால் இறைவனைத் தெரிய வேண்டும். அவன்தான் ஆன்மாவின் கட்டை அவிழ்க்க வல்லவன். அவனிடம் நீ அடங்கிவிடு. இதைத்தான் திருமூலர் தெளிவாகக் கூறுகிறார்.

பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போல் பசுபாசம் அனாதி
பதியினைச் சென்றணுகா பசுபாசம்
பதியணுகிற் பசு பாசம் நில்லாவே (1527)

பதியாகிய இறைவன் பசுவாகிய ஆன்மாவின் பாசத்தை அழிக்கவல்லவன். 'கள்ளப்புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே' என்று மாணிக்க வாசகர் நமக்கொல்லாம் கூறுகிறார். ஆகவே, ஆன்மாவாகிய நாம் - பதிப்பொருளாகிய சிவபரம் பொருளைப் பற்றிக் கொண்டால் பிறவிப் பிணி நீங்கும் இதைத்தவிர வேறு வழியே இல்லை.

8. மறைமொழி பகரும் அறவழி
(திருமந்திரத்தில் அறம்)

பால சீனிவாசன்
வழக்கறிஞர்
உலாபேசி: 9380581129

ஐயமாக்கடல் ஆழ்ந்த உயிர்க்கெலாம்
கையில் ஆமலகம் எனக்காட்டுவான்
மையல் தீர் திருமந்திரம் செப்பிய
செய்ய பொற்றிடு மூலனை சிந்திப்போம்
(பதி,பசு,பாச விளக்கம்)

திருமந்திரம் எத்தகையது என்பதை அது அருளும் சில தொடர்கள் நம் சிந்தையைத் தீண்டுகின்றன.

"திருமந்திரமே சிறந்த உபாங்கம்; திருமந்திரமே திருமேனிதானே"

"திருமேனிதானே திருஞானமாகும்; திருமேனிதானே தெளிந்தார்க்கு சித்தியே"

தேர்வு செய்யப்பட்ட தொடர்கள் இவை.

3101, 3102ஆம் பாடல்கள் ஏட்டுப் பிரதியில் காணப்பட்டவை (திருமந்திரம்-திருப்பனந்தாள்-காசித் திருமடம் 2000 பக்.412, 413)

- பன்னிரு சைவத் திருமுறைகளுள் பத்தாவதாக வைத்துப் போற்றப்படுவது, திருமூலர் அருளிய திருமந்திரம். அருள் நூல் என்னும் சிறப்புப் பெற்றது.
- அறம், பொருள், காமம், வீடு எனும் நான்கு உறுதிப் பொருள்களையும் தன்னகம் கொண்டதோர் 'முதல் நூல்' (நன்னூல்-நூல் இலக்கணம் காண்க)
- அருள் நூல் தாங்கிய அறமும், அறநூல் ஏந்திய அருளும்; அறமும் அருளும் ஒன்றை ஒன்று சார்ந்திருத்தலே இயல்பு எனக் காட்டுவான் அமைகின்றன.
- அற அருள் புணர்ச்சியே வாழ்வியல் புணர்ச்சியின் உச்சம். இறை கற்றறிந்து முறை செய்ய வேண்டுவது சான்றோர் கடன். இவ்வுரைக் கோர்வையின் கண் அறம் குறித்து திருமூலர் உணர்த்தும் பகுதிகள் சிலவற்றை மட்டும் நான் உணர்ந்த வண்ணம் உணர்த்த முயன்றுள்ளேன்.
- அறம் கடந்ததோர் செயலெதனையும் தமிழர் செய்வ தொழிந்தனர் என்பது தமிழர் தம் தலையாய பெருமை.

- அறம், அறத்தின் பொருட்டே செய்யப்பட வேண்டும் என்பதை ஓர்க. திருமந்திரம், நாம் கொள்ள வேண்டிய அறத்தையும், தள்ள வேண்டிய அறத்தையும் (பொதுப்பொருள், நுண்பொருள்) வேறுபடுத்தியே காட்டுகிறது.

  முதல் தந்திரம் இருபத்துநான்கு பொருண்மைகளைக் கொண்டது. அவற்றுள் அரசாட்சி முறை, அறஞ்செய்யான் திறம், அறஞ்செய்வான் திறம், கள்ளுண்ணாமை, கொல்லாமை, நடுவு நிலைமை, புலால் மறுத்தல் முதலாய என்பன ஏழும்

  இரண்டாம் தந்திரம் இருபத்தைந்து பொருண்மைகளுள் பெரியாரைத் துணைக்கோடல், பொறையுடைமை என்பன இரண்டும்,

  ஏழாம் தந்திரம் முப்பத்தெட்டு பொருண்மைகளுள் ஐந்திரியம் அடக்கும் அருமை, அடக்கும் முறைமை, கூடாவொழுக்கம், கேடு கண்டிரங்கல் என்பனவான நான்கும்.

  எட்டாம் தந்திரம் நாற்பத்து மூன்று பொருண்மைகளுள் அவாவுறுத்தல், புறங்கூறாமை, முக்குற்றம், வாய்மை எனும் நான்கும்; இப்பதினேழு கூறுகளும் நடைமுறை வாழ்வியலை மேம்படுத்திக் கொள்ள விரைந்து கொள்ள வேண்டுவனாம் அறங்கள்.

அரசாட்சி முறை: ஆள்வோனும்-கல்வியும்

ஆள்வோன் கல்வியாளனாக இருக்க வேண்டும். கல்லாமல் இருப்பேன். ஆட்சியில் உயிரிழப்பும் ஏனையவையும் தவறாமல் நிகழும். கல்லாத ஆட்சியாளன் காலனை விடவும் தாழ்ந்தவன் என்கிறார். கற்றவர்கள் ஆட்சிப் பொறுப்பேர்ப்பதே நன்மை பயக்கும் என்பதே இதன் அறம்.

கல்லா அரசனிற் காலன் மிகநல்லன்
கல்லா அரசன் அறம் ஓரான்....
நல்லாரைக் காலன் நணுக நில்லானே *(238)*

தவமிருந்து மன்னன் நாட்டை நடத்த வேண்டும். மக்களும் அதைப் பின்பற்ற வேண்டும். இல்லையேல் நாடு, செல்வம் அனைத்தும் நரகம் (239) என்றும்

ஞானிகளாலே ஞானமுண்டாக்குதல் நாட்டிற்கு நலம் (242) என்றும் திறம்தகு முக்தி, செல்வம் வேண்டுவோர் ''மறந்தும் அறநெறியே ஆற்ற வேண்டும். வருவாயில் ஆறில் ஒரு பங்கு மன்னனைச் சேர வேண்டும் (244) என்றும் வலியுறுத்துபவர் அறம் விட்டுச் செய்பவனின் தவறிய செயல்களுக்கு மன்னன் தண்டனை தர வேண்டும் என உறுத்துகிறார். 'தண்டம் செய் வேந்தன் கடனே'

(246) 'மெய்த்தண்டஞ் செய்வதவ் வேந்தன் கடனே' (247) என்பது திருமூலரின் அறவாக்காம்.

அறம் செய்பவன்

அடியார்கள் யார், பிறர் யார், பொது யார் எனும் அறிவு அறம் கொண்டு நிற்பவர்கள் தன்மை அறிவதால் ஏனையவற்றையும் அறிவார்கள். 'தாமறிவாரறந்தாங்கி நின்றாரவர்' (251) என்று கூறிய மூலர், 252ஆம் பாடலில் இறைவற்குப் பச்சிலை ஒன்றும் அன்றி பசுவிற்கு ஒரு வாயளவும் அன்றி பிறர்க்கோர் கைப்பிடி உணவும் அன்றி ஏதொன்றும் இயலாவிடினும் நல்ல சொல்லும் செய்வது அறம் என்கிறார். அற்று நின்றார் உண்ணும் ஊணே அறன் (253) என்று புறப்பற்றன்றிய செயல் வாழ்வை நெறிப்படுத்தினார். குற்றம் தீராமல், அறிவைப் பெருக்காமல், (மெய்யறிவு, வாலறிவு, மேலா மறைவு) இன்பமுடன் இயன்றபோது தருமம் செய்யாதவர்கள் ஏழை நெஞ்சர்கள் (254) என்கிறார். ஈசன் அறந்தான் அறியும் அளவு என்று அறிந்தார்க்கு அளவுகோல் (256) ஒன்றும் கணக்கிட்டார். 'பற்றது வாய் நின்ற பற்றினைப் பார்மிசை அற்றம் உடைான் அறநெறி' (259) என்று முடிவுக் காட்டுகிறார்.

அறம் செயான்

அறம் செயாதவன் செல்வம் பயனற்று வீழும் நஞ்சான, கசக்கின்ற எட்டிக் கனிக்கு ஒப்பானது (260) அவன் எத்தனை ஊழிகள் வாழ்ந்தும் அழிவிற்கு ஒப்பாம். அவர் போன்றவரால் இறையைக் காண இயலாது என்பதை 'அறம் அறியார் அண்ணல் பாதம் நினையும் திறன் அறியார்' (262) இறையின் பாதத்தை நினைக்கும் திறன் கூட அவர்க்கு இல்லை என்று முடிவாகச் சொல்கிறார். அவர்கள் இருமல், சோகை, ஈளை எனும் வெப்புநோய் தாக்கத்தால் துன்பமடைவர் (263). தனக்காக மட்டுமன்றிப் பொதுவாக அனைவருக்கும் பயன் தரும் காட்டின் வளமை கூட ஒரு குடம் நீராவது ஊற்றாதவன் நரகம் போவான் என்பதை 264ஆம் பாடலில் 'கரகத்தால் நீராட்டி காவை வளர்க்கார், நரகத்தில் நிற்றிரோ' எனும் தொடர்களில் பதிக்கிறார்.

மனம் அன்பால் கனியவேண்டும். அது அடுத்தவர்க்குப் பயன் தரவேண்டும். அவர்கள் இறைவனைக் காணமுடியும் என்றும் பொருள்பட 'கனிந்தவர் ஈசன் கழல் அடி காண்பர்' (266) என்றார். முன்னோர்கள் செய்து வந்த அறத்தைப் பின்பற்றி அத்தகு வாழ்வைப் பின்பற்றாதவர்களை 'ஈகிலாப் பேதைகள் அன்பிலார் சிந்தை அறம் அறியாரே' (267) என வழி நடத்துவார் ஆனார்.

உயிர்களின் பிறவியே, கொடுப்பவை கொடுத்து இன்பம் துய்க்கவே எனும் பொருளில் பாடுகிறார். அவ்வரிகள் (268) 'இடுவதும் ஈவதும் எண்ணுமின் இன்பம் படுவது செய்யிற் பசுவதுவாமே'. பொருள், செல்வம் சேர்ப்பவர்களைப் போற்றிப் புகழாமல் இறைவன் திருப்பெயர் சொல்லி உயர்ந்த இலக்கை அடையுங்கள் (269) என்று கைகாட்டுகிறார்.

கள்ளுண்ணாமை

எல்லோர்க்கும் தெரியும் கள் நம் வாழ்வை எவ்வளவு ஆழத்தில் தள்ளும் என்று. ஆனால் இன்று பலர் அதைத் தள்ள முடியாமல் தல்லாடுதலைக் காண்பது இழிநிலை தான். திருமூலர் கள்ளைத் தள்ள சில வழிமுறைகளை அறிய அறிவுரைகளைத் தருகிறார். கள் உடலை உயிரை குறையுடையதாக்கும். முறையற்று நடக்கச் செய்யும் (324) அதைக் காட்டிலும் இன்பமும் தீஞ்சுவையும் உடைய ஒன்று இருக்கிறது அதுதான் சிவானந்தத் தேறல்; அவனை நெருங்குக என அழைக்கிறார். சித்தத்தை உருக்கி அதை அடையாமல் மது உண்டால் கீழ்மையே ஏற்படம் (325) கூர்க்குழகுழத ஏன்பதை (326)ஆம் பாடலில் காமமும் கள்ளும் கலதிகட்கேயாகும், ஆகவே புனிதன் இணையடிகளே நிலைத்த இன்பம் என்றார்.

மது உண்போர் உள் ஒளி உணரமாடடார் (327), கள் உண்பவர் நற்கருத்து அறியமாட்டார் (328), மது உண்போர் மாமூடர்கள் (329), அது வாய்மையை அழித்துவிடும், பொழுதறிய மாட்டார், இக்கும் இட, சூழல் நிலை அறிய மாட்டார் (331) சத்து கிடைக்கும் எனக் கருதி உண்ணும் கள்ளால் உள்ள சத்தும் அழியும் (332), மெய்காண விரும்பினால் சிவானந்தந்தேறலே நன்று (334)

என்று சொல்லி வரும் திருமூலர்

உண்ணீர் அமுத முறுமூறலைத் திறந்
தெண்ணீர் குரவன் இணையடித் தாமரை (336)

இறைவன் இணையடிகள் இன்பமே பேரின்பம் என முடிக்கிறார்.

மேற்கூடிப்பட்ட 331, 336 பாடல்கள் முறையே 1856 (குரு பூசை) ஏழாம் தந்திரத்து, 882 (சந்திரயோகம்) மூன்றாம் தந்திரத்தும் கூறப் படுதலான் இவற்றின் பொருட் சிறப்பின் பெருமை அறியவரும்.

கொல்லாமை

197, 198 அம் பாடல்களின் வழி 'பற்றாய நற்குரு பூசைக்கும் பன்மலர் மற்றோர் அணுக்களைக் கொல்லாமை'; 'கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை ..... தீவாய் நரகிடை நில்லிரும் என்று இடித்துரைக்கிறார்.

நடுவு நிலைமை

நடைமுறை வாழ்விற்கு மறைப்பாக விளங்கும் செயல் நடுவு நிலைமையேயாம். பலரால் இயலாமல் தடுமாறும், தடம்மாறும் நெறியாக ஆகிவிட்டதை உணர வேண்டும்.

நடுவு நின்றல் ஞானம், அன்றி நரகம் (320). நடுவு நின்றால் தேவர் நான் நிற்பதும் அவ்வழியே என்று தன்னையும் உட்படுத்துவது கருத்தின் ஊற்றம் தான். 321, 322 ஆம் பாக்களில் ஞானிகள் அடையாளமே நடுவு நிற்றலைக் குறிக்கும், நம்பத் தக்கவர்கள் அவர்கள் அவர்களோடுதான் நானும் இருக்கிறேன் என்கிறார்.

நடுவு நின்றால் வழி யானும் நின்றேனே
நடுவு நின்றா ரொடு யானும் நின்றேனே

என்பவை அத்தொடர்கள்.

புலால் மறுப்பு

புலால் நுகரும்புலையர் நரகத்தில் மரிப்பர் (199) 'கொலையே களவு, கள், காமம், பொய்கூறல், மலைவான பாதகமாம் (200) ஆவதே இவற்றை நீக்குக என்றார்.

பொறை

தனக்கேற்பட்ட இழிவு, துன்பம், துயரம் இவற்றைத் தாங்கிக் கொள்ளும் தகைமையாளரை பிறர் உரையோ ஏனையவையோ அவர் சிந்தையைத் தாக்காமல் காக்கும். ஏனையோரும் நல்லன் என்றிவரைப் போற்றுவர். அவரே ஞானம் பெற்றவர். வீடு, உலகம், இறைபதம் இவற்றிலெல்லாம் இவர்க்கு நல் இடமுன்டு என்பதைக் குறிக்கும் என 539-542 வரையிலான 4 பாடல்கள் தெரிவிக்கின்றன.

பெரியார் துணை

வாழ்வு உய்வடைய நல்வழி, துணைதாம் பெரியவர்கள் துணை. 'துணை பிரானொடுங் கூடவல்லார் அடி கூடுவன் யானே' (543) என்றும், தன் நெஞ்சத்தை அதன் வழி செல்லக் கூறுதலையும் (544) அத்தகு பெரியாருடன் கூடுதல் பேரின்பம் தரும் (545) எனவும் அது சிவனடியார்க்குரிய எனவும், அடியார்க்கடியராக இருத்தலே சிறப்பெனவும் அவரே திருமையுடையாரெனவும் 546, 547, 548 ஆம் பாடல்வழி கூறி நானும் அவருடன் சேர்ந்தேன் என்று கூவிக் சொல்கிறார்.

இந்திரியம்

2023 முதல் 2043 முடிய உள்ள 21 பாடல்களும் புலனடக்கமும் அதன் பயனும் பேசுகின்றன.

அஞ்சின் உகிரும் எயிறும் அறுத்திட்டாய்
எஞ்சாது இறைவனை எய்தலும் ஆமே (2026)

2032 இந்திரியம் அடக்கலுறும் அவன்தானே அமரன்

2033 அஞ்சுமடக்கில் அசேதனமாம்

2034 அடக்க அறிவென்னும் கோட்டையை வைத்தேன்

2035 ஐந்தில் ஒடுங்கில் அருந்தவம், அருளுடைமை

2036 பெருக்கில் பெருக்கும், சுருக்கில் சுருக்கும்

2037 அஞ்சாடல் ஒழுக்கது, அவ்வழிதூங்கும் படை

2038 ஐந்தும் ஒளிர்ந்தால் ஆனந்தம்

2039 ஐந்தொடுக்குவோன் மனம் கோயில்

2040 புலன்கள் வென்றால் வீடு

2041 புத்தியால் புலன்கள் கட்டப்புதின் திருமேனி காணலாம்

2042 புலன்களே நெஞ்சை அரிக்கும்

2043 இறைவனைக் கருத்தில் வைத்து ஏத்தினால் அவாமிகு புலன்கள் அடங்கும்

என்று பெரும்பட்டியனை மந்திரமாகக் கொண்டுள்ளதைக் காணலாம்.

கூடா ஒழுக்கம்

ஒழுக்கம், ஒழுகுவது என்ற பொருள் கொண்டது. விடாது பற்றிச் செய்வதைக் குறிக்கும். நன்றில் நிற்பதும் தீதில் விலகுதலும் அறிவுடையார் தொடர்ந்து செய்வர். இக்கருத்தை திருமூலர் 2067 முதல் 2083 முடிய உள்ள 17 பாடல்கள் வழியாக விளக்கியுள்ளளார்.

பொய்தான் மிகவும் புலம்பும் மனிதர்கள்
மெய்தான் உரைக்கில் விண்ணோர் தொழச் செய்வன் (2068)

வினை புலங்களைப் பாழ் செய்வோர் பித்தர்கள் அவர்களுக்குப் பிறப்பில்லை. அறிவுடையோர்க்கு வையகம் அகத்தில் அடங்கும் என்று நல்ஒழுக்கச் சிறப்பையும் கூடா ஒழுக்கம் குறைவையும் பேசிவதைகிறவர் 'கண்மணி' என்ற சொல் கொண்டும், கண்ணொளி என்ற சொல்லோரும் ஒழுக்கத்தை சித்தம் கொண்டு நெறிப்படுத்தச் சொல்கிறார். புலன்களும் ஏனைய உடற் கருவிகளும், மனமும் நல்லொழுக்கத்தின் பாற்படவேண்டும். அதற்கு இறை நாமமே வழிச் செலுததும் என்பதை'

ஈசன் கருத்தறிவாரில்லை
நன்முதலேறிய நாம மறநின்றால்
தன்முதலாகிய தத்துவமாமே

எனும் தொடர்களில் காண வழி செய்கிறார்

கேடும் - இரங்கலும்

பாவிகளாயிருந்து கேட்டையே தம் வித்தாக விதைத்து அறிவின்மையால் மாய்வதைத் தடுக்க மூலர் முயற்சி செய்கிறார். 'வாது செய்து என்னோ மனிதர் பெறுவது' நீதியுளே நின்று நின் மலன் தாள் பணி' உடம்பினை ஓம்பி உயிராத்திரியாதே. ஓராப் பழி மொழயாளராய் இராதே

நின்ற புகழும் நிறை தவத்துன்மையும்
என்றும் எம்மீசன் அடியவர்க்கே நல்கும்
அன்றி உலகம் அது இது தேவென்று
குன்றுகை யாலே குறைப்பட்ட வாயே (2088)

பிரானடி பேணாமல் பிராணிகளாக பேறிழந்தார். மனம், இளமை இவை காமத்திற்காக்கி மாதவன் இன்பம் விடலாமா. குரு வைத்து குறி அறியக்கூடாதா? எம்பிரானைத் தொழுங்கள். கருத்தறியாமல் காலம் கழியாதீர் என்றெல்லாம் வினாவை எழுப்பியும், வியந்தும், விளக்கருளியும் கேட்டைத் தவிர்க்க 2084 முதல் 2101 வரையிலான 18 பாடல்கள் அருளிச் செய்கிறார்.

அ வ ா

ஆசையும் அன்பும் அறுத்தால் ஈசனை அடையலாம்
வேட்டுக விட்டு மெய்ஞானம் நிற்க
அவாக்கடல் படாதீர் சுத்த ஞானியாய் தூய்மை பெறுக.

கந்த மலரிற் கலக்கின்ற நந்தியைச்
சிந்தையில் வைத்துத் தெளிவுறச் சேர்ந்திட்டால்
முந்தைப் பிறவிக்கு மூலவித்தாமே (2622)

என்று அவாவை நீக்க வைக்கிறார்.

புறங்கூறாமை (2512-2526)

புல்லறிவு நீங்கி, ஈசனே ஈசனென்றுன்னி, உன்னிலும் உன்க. புறம் பேசறங்க. ஊனம் ஒன்றுமன்றி உணர்வு செய்க.

பண்ணறிவாளனைப் பாவித்த மாந்தரை
விண்ணறிவாளர் விரும்புகின்றாரே (2518)

என்ற நெறியைக் காட்டி உய்விக்கின்றார்.

முக்குற்றம்

பிற குற்றங்களுக்கு மூலங்களாவன காமம், வெகுளி, மயக்கம். இவை நீங்கினால் அவர்க்குள் அறமாம் இறை அமர்வான், என்பதைக் கூறி

மூன்றினை நீங்கினர் நீகினர் நீங்காதார்
மூன்றினுட் பட்டு முடிகின்ற வாடுற (2435)

நீங்கினால் 'ஓமெனும் ஓசையினுள்ளே உறைபவர் உம்முள் தலைப்படுவார் என்று 2435, 2436 ஆம் பாடல்களில் வலியுறுத்து கிறார்.

வாய்மை

மருளுற்ற சிந்தையை மாற்றி அருமைப்
பொருளுற்ற சேவடி போற்றுவார் (2599)

மெய்கலந்தவனாகிய பொய்கலந்தாரோடு புகாத ஒருவனை அடைய முடியும் என்னும் கருத்தை முன்வைத்து 2595 முதல் 2609 வரையிலான 15 பாடல்களில் மெய்யெனும் வாய்மை வெளிப்பட வழி சமைக்கின்றார். மனமது மாசற்றதன்றோ அறம். அது கலவாதிருக்க வேண்டுமே.

இட அமைதி கருதியே, நீளும் திருமூலர்தம் அறக்கோட் பாட்டின் நீட்சியை நிறுத்துகிறேன். அருள் நூலாக விளங்கும் திருமந்திரத்துள் அவ்வருளைப் பெருதற்கான ஒரே வழி அறமே எனக் காட்டிச் செல்லும் திருமூலர் எவ்வெவ்வற்றை நீக்கி எவ்வெவ்வற்றைக் கைக்கொள்வது என்று தெளிபடுத்துகின்றார். அறம் கைக் கொண்டோரை அருள்தாமே வந்து கூடும்.

9. மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழில் திருமந்திரப் பயன்பாடு



மீனாட்சி அழகப்பன் M.A.,M.Phil
பாரம்பரை சோதிடர்,
உலக தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்,
தரமணி, சென்னை 113
9840058639
astrologermeenakshi@gmail.com

முன்னுரை

மண்ணுயிர்கள் பூமியில் இறையருள் பெற்று உயர்வடையும், வாழ்வியல் கோட்பாடுகளைச் செறிவுறத் திருமூலர் கூறுகிறார். நாளந்தா பல்கலைக்கழகம் தோன்றுவதற்கு முன்பே தழிழ்நாட்டில் அமைந்திருந்த பல்கலைக்கழகம்-காஞ்சி பல்கலைக்கழகம். வரலாற்று கல்வெட்டுகளில் சிவவழிபாடுகளைப் பதிவுசெய்து யாவரும் கடைபிடிக்கச் செய்த மன்னர் இராசசிம்மன். திருமூலர் வாழ்வியல் முழுமை என்பது அறிவும், அறிவியலும், ஆன்மீகமும் சேர்ந்த மூன்றும் என்ற நிலைப்பாடுதான். வெற்றிக்கு முக்கியம் எனத் திருமூலா; கூறுகிறார். தடையில்லாத முற்றோதல் மந்திரம், எந்திரம், தந்திரம், ஹோமம், தானம், தர்மம் செய்யப் பயிற்றுவைக்கப்பட்டன. பயிற்றுவிக்க குருபாரம்பரியம் இருந்தது. ஆன்மீகமும் அறிவியலும் வாழ்விலும் தந்திரங்களாகத் தமிழோடு கலந்த இலக்கியங்கள் நிறுவபட்ட தீர்மானங்களே சைவசமயக் கோட்பாடுகள்.

திருமூலர் பதினெட்டு மொழிகள் தெரிந்தால் பண்டிதர் என்றும், தான் அத்தகையன் என்பதை உணர்த்துகிறபடியால் அவர் பல திராவிட மொழிகளில் இருந்து தொகுத்திருக்கிறார் என்பதைப் பாடல்கள் ஆதாரமாகக் காட்டுகிறது. திருமூலர் 3000 தமிழ், 300 மந்திரம், 30 உபதேசம் என்று 3046 பாடலில் குறிப்பிடுகிறார்.

திருமூலர் வரலாறு

திருமூலனின் உடலில் புகும்முன் இவர் சுந்தரநாதர் என்ற பெயரில் செய்த நூல்களில் இவர் வரலாறும், கையிலையிலிருந்து வந்தவர் என்றும் உள்ளது. மந்திரமாலிகா, உபமன்யு பக்தவிலசம் போன்ற நூல்களில் திருமூலர் வரலாறு உள்ளதாகச் சேக்கிழார் தான்அருளிய திருத்தொண்டர் புராணத்தில் கூறுகிறார். மந்திரம் என்பது பிறரறியாமல் தம்முன்னர் அறிய மறைத்துக் கூறும் சொல்லாகும். பண்டைக்காலத்தில் மந்திரம் என்பது எழுதாக் கிளவியாக வழிவழியாகச் குரு சீடன் பரம்பரை என்ற முறையில் கற்பிக்கப்பட்டது.

நிறை மொழி மாந்தா; ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப தொல்

தொல்காப்பியத்துக்கு முன்பிருந்தே வாய்மொழியாகக் குரு சீடனுக்கும் போதித்த எழுதாக் கிளிவியாக இருந்த தமிழ் மந்திரத்தை முதன் முதலில் கலிவிருத்தத்தால் எழுதித் தமிழுக்கு நிலைத்த வடிவமாக வழங்கியவர் திருமூலர். எதற்காகத் தமிழ்நாட்டுக்கு வந்தார் என்பதை அவரே கூறுகிறார்.

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தழிழ்செய்யுமாறே (81)

செம்மொழி தமிழ் என்பதால் தான் மறைமொழியாகிய மந்திரமொழியைப் பல வழிகளில் தேடித் தொகுத்தமையால் திராவிட மொழியின் பண்டை நிலைகளை ஆய்ந்தரிதல் வேண்டும். அவை கி.மு 5ஆம் நூற்றாண்டில் பிராமி, திராவிட வரிவடிவங்களுடன் மொத்தம் 64 வரிவடிவங்கள் காணப்பட்டதாகக்கூறும் நூல் அசோகர் காலத்துப் பௌதிகநூல் லலிதாவிஸ்தாரம். 18 வரிவடிவம் காணப்பட்டதாகவும் அதில் திராவிடமும் ஒன்று எனக் கூறும் நூல்கள் சமவயாங்க சூக்தமும், பான்னவான சூக்தமும். மத்திய இந்தியாவில் பேசப்படும் தொன்மை வாய்ந்த திராவிட மொழிகள் பாஜி, ஒல்லரி, குய்யி, கோண்டி, பென்கோ, குவி, போய், கருக், மோஸ்ரா, திருச்தின திராவிடமொழியில் செம்மொழி தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், துளு, கொடகு அவையாறும் இலக்கிய வளமிக்கமொழிகள். இலக்கிய வளமில்லாத திராவிடமொழிகள் தோடா, கோத்தா, படுகு, பொடகு, துளு, வர, பொரமி, நயினி. 18 மொழியைக்கற்று திறன் பெற்றவா, அண்டம்-பிண்டம், மண்ணும் அடங்கிய ஈரேழ் 14 உலகம்

அண்டமுதலான அறஞ்சொன்ன வாறே
செம்மொழி தமிழ் சிறப்பு (59)

செம்மொழிக்குச் சிறப்பாகக் கூறப்படுபவையான 11 கூறுகள். அவை தொன்மை, தனித்தன்மை, பொதுமைப் பண்பு, தாய்மைப் பண்பு, பண்பாட்டுக் கலை வெளிப்பாடு, பிறமொழி; தாக்கமில்லாத தன்மை, இலக்கியவளம், உயர்சிந்தனை, கலை இலக்கியத் தனித்தன்மை மொழிக்கோட்பாடு.

நந்தி பெற்ற ஆகமங்கள்

ஆகமங்கள் பக்தி இலக்கியங்களில் தமிழ்நாட்டில் 108 இருந்தது, அதில் 28 கைக்குக் கிடைத்தது. மற்றவை அழிந்து போனது. இவற்றில் 18 ஆகமங்கள் அண்டத் தத்துவங்களைக் கூறுவன 5 ஆன்மத் தத்துவத்துக்கும், 5 ஆகமங்கள் பஞ்சாங்கப் பயன்பாட்டுக்கும் உடையவை.

கிடைத்த ஆகமங்கள்

1. காமிகம் 2. யோகஜம் 3. சிவிதியம் 4.கரணம் 5.அஜிதம் 6. தீப்தம் 7.சூக்சுமம் 8. சுகஸ்ரம் 9. ஹம்சுமம் 10. சுப்ரபீடம் 11. விஜெயம் 12. நிஸ்வசம் 13. சுயம்புவம் 14. அக்னேயம் 15. வீரம் 16. ரௌரவம் 17. மகுடம் 18. விசாலம் 19. சந்திரஞானம் 20. முக பிம்பம் 21. புரோக்கிதம் 22. லலிதம் 23. சித்தம் 24. சந்தானம் 25. சர்வாக்தம் 26. பரமேஸ்வரம் 27. புராணம் 28. வாதுலம். உச்சியைப் பார்த்திருக்கும் ஈசான முகத்தில் எட்டு ஆகமங்கள், திருமந்திரம் ஆகமச்சிறப்பு (57).

தெய்வவழிபாட்டிற்குறிய செம்மொழியின் தமிழானது விரிவடைவது எண், எழுத்து, மந்திரம், ஒளிக்கலை, தத்துவம், மண்ணுலகம் எட்டுப் பொருளில் உரையும் இறைவனையும் விஞ்ஞானவழியில் மந்திரங்கள் கொண்டு பூசிப்பது நாலுவகை அவை சரியை (¼ தெய்வத் தன்மைநிலை), கிரியை ½, ஞானம் ¾, யோகம் முழுபக்தி என்று கூறுவது தந்திரக் கலைகளால் மெய்ஞான வழியில் இறைவனை அடையும் சாதனங்கள் ஆகும். பன்னிரு திருமுறைகளையும் தோத்திரம், சாத்திரம், பிரபந்தம், புராணம் என்று நான்கு வகைகள் உள்ளன. பத்தாம் திருமுறையான திருமந்திரம் சாத்திர வகை என்றும் கூறப்படும். 63 நாயன்மார்களில் ஒருவர் திருமூலர்.

சிறப்பாயிரம், பொதுவாயிரம், தந்திரம் என்றும், மீண்டும் ஆகமங்களை 9 தந்திரங்களாகப் பகுக்கிறார். திருமந்திரம் 3000 ஆம் பாடல்களாகத் தந்தாகக் கூறுகிறார் (63).அவை:

1. காரணம் - பிறப்புக்காரணம். 2. காமிகம் - தனம் 3. வீரம் - வீரியம் 4. சித்தம் 5. வாதுளம் - சுழற்சி 6. வியாமனம் - விரிவடைதல் 7. கலோத்தரம் - காலம் 8. சுப்பிரம் - பிடிவாதம் 9. மகுடம் - கிரிடம். (64) ஆகமங்களின் உண்மைப் பொருளறியாமல், அதனை ஓதுதலும், உணர்தலும் இயலாத ஒன்று. இறைவன் காட்டிய ஞானம் - ஆகமங்கள், அதன் உண்மைப்பொருள் உணராதவர்க்கு, நீர் மேல் எழுதிய எழுத்துப்போல் பலன் கடினம் என்று எல்லா ஆகமங்களின் சாரங்களைக் கொடுத்துள்ளார்.

இறை வணக்கத்தில்

ஒன்றவன் தானே இரண்டவன் இன் அருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணா;ந் தான் ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழ்உம்பம்பர்ச்
சென்றனன் தான் இருந்தான் உணர்ந்து எட்டே (1)

ஒன்றவன்-சிவன் பிந்துபொருளாக சி எழுத்தாக, நாதமாக வடமறையாக, பேரொளிப் பிளம்பாக, அண்ட ஒளியாக ஒரு புள்ளியாக இருப்பவன். இரண்டவன்-சிவ சிவ-சக்தியாக, நேர் எதிர் மின்துகள்களாக

வடதென் மறையாக அருள்வடிவாக நாதம் ஓம் ஒலி-ஒளியாக நிறந்தரமாக எங்கும் நீக்கமற நிறைந்து ஐந்தொழிகள். மூன்றாக - பதி, பசு, பாசம் மூன்றில். அனாதிப் பொருளாக இருப்பவன். நான்கு - சரியை ¼ தெய்வசக்தி, கிரியை ½ தெய்வசிந்தனை, ஞானம் ¾ தெய்வசக்தி, யோகம் முழுபக்தி என்று முதிர் ஆன்மாக்கள் உணரவேண்டிய நிலையில் இருப்பான். சிவன் முகங்கள் ஐந்து - நீல நிறத்தாள் பார்வதியைத் தன்இடப்பாகம் கொண்ட சிவபெருமான் 1. ஈசானமுகம் உச்சியைப் பார்த்திருக்கும் மேல்நோக்கிய முகம் சற்று சாய்ந்தநிலையில்; 66 யோகபுருஷர்கள் கேட்கத்தன் கீழ்மேல் நோக்கிய அஞ்சாஈசான முகத்தால் அருளிச்செய்த 28 ஆகமங்கள், 2. மேற்குத் திசை சத்தியோசாதம் முகம், 3. கிழக்குத்திசை தத்புருஷமுகம், மேற்கு திசை முகம், 4. வடக்குப் பார்த்த முகம் வாமதேவமுகம், 5. தெற்குப்பா;க்கும் முகம் அகோரம் இவை அறம், பொருள், இன்பம், வீடு என்று நான்கு வேதங்களைக் கேட்டனர் மற்றும்; ஒரு ஐந்தாக ஆகாயம், வாயு, உரு, நீர், பூமியாகப் பஞ்சபூதங்களை வென்றவனன்.

ஆறு சமயங்களாக விரிந்தார் -எண், எழுத்து, மந்திரம், வண்ணம்பொருந்திய ஒளிகதிர்களின் கலையாக, தத்துவப்பொருளாக, அவையனைத்தும்பட்டுப் பிரதிபளிக்கும் மண்ணுலகமாய் விரிகிறார். ஆறுசமயங்களுக்கும் தலைவன் சிவன். சைவ சமயம் ஆறு அவை:

1. சைவம் - சிவ, பேரொளி வழிபாடு, வடமறை, நேர் மின் அணு அங்ககப் பொருள். சி எழுத்து
2. சக்தி தென்வேத நாயகி மாமகா மாயை சக்தி வழிபாடு எதிர்மின் அணு அங்ககப்பொருள். வ எழுத்து.
3. காணாபத்யம் - பிரணவம் ஒலி, சத்தம், நிரந்தரமான ஓசை, நாத வழிபாடு என்று கணபதி - பூஞ்சபூதங்கள் வழிபாடு. பிரணாயம் (Constant, Sound of univers) ஓம் கம்.
4. சௌரம் - சூரியசித்தாந்தம் - பஞ்சாங்கம் அடிப்படையான காலகணிதங்கள் பருவகாலங்கள், விழாக்கள்.
5. சந்திரம் - சந்திரசித்தாந்த - பஞ்சாங்கம் அடிப்படையான காலகணிதங்கள் திதி தா;பணங்கள்.
6. கௌமாரம் - குமாரக்கடவுள் வழிபாடு ஆறுமுகம், அக்கினி கடவுள் வழிபாடு. ஓம் ஸ்கம் கந்தாயை நம: இவற்றின் விரிவு தன்மையானது.

அண்டம் - பிண்டம், மண்ணும் ஆகிய ஈரேழ் பதினான்கு உலகம்

அண்டம் ஏழுலகம்

அடுக்குகளாக வியாப்பித்திருக்கும் வெப்பம் முதல் பொருள் தினிவு பருப்பொருள்கள் அலைகள் நிறைந்த உலகம் 1. சிவலோகம் ஒரு புள்ளியாகப் பிந்து மண்டலமாக இருக்கும் இடம் எட்டு சக்தித்துளிகளும் ஒரு புள்ளியில் குவிந்திருக்கும் வெப்பம் 10^{32}°C, காலம் 10^{43}/sec. புள்ளி நிலை. ஒரே நிலையான வெப்பத்தின் குறைந்த நிலையில் 2. வெளியும், 3. காலமும் விரிவடைகிறது.

ஒளி புள்ளி (the constant of the univers) 1.பருப்பொருட்களும், ஒளியாகப் பிரபஞ்சம் முழுதும் சிந்திக்கிடக்கிற பிந்தம். 2. சத்திய லோகம் - பெரும்வெடிப்புக்குப் பின் இரண்டான மாஹா மாயை 1. காலம். 2. புரவெளிகள் விரியும், நாதம் தினிவுத்திரன் குறையும். Dencity of the spot will be reduced. கதிரியக்கங்களும் பிரிந்து விரியும் காலம் வெப்பம் 10^{32}°C, காலம் 10^{-35}/sec., 2. space and time expanting. ஒரே நிலையான வெப்பத்தின் குறைந்த நிலையில் விரிவடைகிறது. 2. வெளியும், 3. காலமும் 3. தபோலோகம்-ஈர்ப்பு விசையலைகள் 10^{32}°C, காலம் 10^{-35}/sec 4. Gravity ஈர்ப்பு விசைகள் பரவும். 5. வட மறைகளாகிய ஆறு பொருட்கள் நேர்மின்அணு அங்ககப்பொருட்கள் தெரியும். விரிவு பரவெளி விரிந்து கொண்டே இருக்கும். மூன்று ஆறாக விரிவடைவது 10^{32}°C, காலம் 10^{-27}/sec (u,d,c,s,t,b,quarks of Quantum particles) 4. மகர்லோகம் - வெப்பம் 10^{19}°C, காலம் 10^{-2}/sec தென்வேத நாயகி மாகாமாயை சக்தி வழிபாடு 5. மின்காந்த அலைகள் விரிவடைகிறது. கீழ்-தென் 6. ஆறு எதிர்மின்அணு அங்கப்பொருள், மூன்று எலக்ட்ரான்ஸ் ஆறாக விரிவடைகிறது (e-electron,Ve,Mue electrons, Vm,Tau electrons, Vt, lepton quarks of Quantum particles) 'வ' எழுத்து 5. சுவர்லோகம் வெப்பம - 10^{16}°C, காலம் 10^{-12}/sec. விந்து உற்பத்தி-சிரோனிதம் உற்பத்தியாதல். அரு; அரு/உரு; உரு . வட மறை-தனித்தனியாகத் தயாராகிறது கருக்காலத்துக்கு. கருகளாகிய (Nueclei formation) மூன்று ஆராக விரிவடையும். 5. வடமறைகளாகிய ஆறுபொருட்கள் நேர்மின் அணு அங்ககப் பொருட்கள் தெரியும். விரிவு பரவெளி விரிந்து கொண்டே இருக்கும் மூன்று ஆறாக விரிவடைவது (u,d,c,s,t,b,quarks of Quantum particles (Nueclei formation). 6. ஆறு எதிர்மின் அணு அங்கப்பொருள், மூன்று எலக்ட்ரான்ஸ் ஆறாக விரிவடைகிறது (e-,Ve,M, Vm,T, Vt, lepton quarks of Quantum particles (oveum formation)) வெவ்வோறாகக் சுய நாடு;களிலேயே விரிவாக்கம் நடைபெற்றிடும். வேதியல் அயனி உலகம். 6. புவர்லோகம் வெப்பம் 10^{15}°C, காலம் 10^{-6}/sec ஆண்சக்தி குவியல்கள் பெண்சக்தி குவியல் உள்ள திசைக்குப் பிரயாணிப்பது. இரண்டும் சந்திக்கும்போது தங்கள் தங்கள் துணைவர்களாக வந்த எல்லாம் மறைந்து அணுக்களாகிவிடும்.

மூலக்கூறு வாய்பட்டில் உள் 118 மூலங்களாகப் பூமிக்குகிடைக்கும். ஹைட்ரஜன் முதல் பூமியில் தங்கள் வேதியகலைகளைத் தொடங்கும். 7. பூலோகம் வெப்பம் $10^{\circ\circ}C$, காலம் 10^{-1} /sec கட்டு விடுபடும் தளமாகத் திகழும் பூமி. புட்டு விடுபடும் கதிர்யியக்கம் எல்லா மாற்றத்தையும் தரும் மறைப்பு சக்தி, திரோதணம் மலம் மறைத்திருக்கும் பசுக்கள் ஒளியாகிய இறைவனைக் காணமுடியாத சூரியகாந்தக்கல்லைப் போர்த்தி இருக்கும் பஞ்சைப்போல உயிர்கள் உள்ளன. திருமந்திரம் கூறும் அறிவியல் அறிஞர் ஐன்டின் சக்திகுவியல்புள்ளி சமன்பாட்டைத் தொட்டுநிற்கிறது. (The quantum theory).

பிண்டம் எழுலகம்

வித்தியா தத்துவம் ஏழு. அவை மாயை, காலம், நியதி ஈகலை, வித்தை அராகம் - அறியு உணர்வுகள், புருடன் (உயித்) என்று. (மற்றவை 36 தத்துவங்கள் சிவதத்வம் ஐந்து. அவை சுத்தவித்தை என்று சிவன், சக்தி, சதாக்கியம ஈஸ்வரம் சுத்தவித்தை. ஆத்மதத் துவம் 24 ஆக மொத்தம் உடலை ஆளும் மாயாதத்துவம் 36 ஆகும்.

சுவாசம் ஏழேழு பதிநாலுலகங்களாவன அலம்ஸ, கூஹு, விசோதரி, வாரன, ஹசத் ஜிவ, யசோவதி, பயஸ்வினி, காந்தாரி, பூசா, சங்கினி,சரசுவதி இடை, பிங்கலை, சூட்சும, நாடிகள். இந்த நாடிகள் உடலைச் சுற்றி இருக்கும் இடங்கள் முன்நெற்றியின் நடுபாகம், வலதுபொடு, வலதுகண்ணம், வலது தோல்பட்டை, வலதுபக்கம், வலதுதொடை, வலது கணுக்கால், இடது கணுக்கால், இடதுதொடை, இடதுபக்கம், இடது தோல்பட்டை, இடது கண்ணம், இடதுநெற்றி, நெற்றியின் பின்பக்கம். ஸ்ரீசக்கரம் ஆங்கிலம் (ஸ்ரீ கபணதி, சச்சிதாந்தந்த ஆசிரமம்-மைசூர் வெளியீடு, பக்.50.)

காற்றைப்பிடிக்கும் கணக்கு அறிவாளர்க்குக் (571)

விரிந்து சுருங்கும் நெஞ்சுக் கூடு முச்சுக்கும் கதிரியக்குபோலச் சுபாவம் உண்டு, பருப்பொருள் காற்றாகவும் காற்று பருப்பொருளாகவும் ஆற்றல் (E) பருமை (m) ஒளிவேகம் (c) $E = mc^2$ சமன்பாட்டைக்காட்டும்.

மண்ணுலகம் ஏழுலம்

பூமியின் வயது 460 கோடி ஆண்டுகள் என்று 1896 ஆம் ஆண்டு, யுரேனியம், காரிய்யம் மூலங்களின் கதிரியக்கப் படிமானங்களின் ஆற்றலைக் கொண்டு கண்டுபிடித்ததும், நிலாவின் பாரையைச் சோதித்தும் உருதிசெய்யப்பட்டது. முதல் அடுக்கு பூமிக்கு மேல்பரப்பு முதல் கி.மு 60 முதல் கி.மு 1000 வரை, வாயுமண்டலமாக வலுக்கிறது அதற்குமேல் இரண்டாம் அடுக்கு அயனி மண்டலம் (ionsphere) உள்ளது.

மூன்றாம் அடுக்கு அயனிகள் பிளாஸ்மாக் கூல்கள் மண்டலத்தில் எலக்ரான்கள் தனியானதும், நேர்மின் அணுத்துகள அயனிகள், எதிர் மின் அணுத்துகள் அயனிகள் நிறைந்துள்ளது, மின்சாரத்தைக் கடத்தவல்ல மண்டலம் பரவெளி ஒளி சூரியன் ஒளி, புறஊதா, காமா, எக்ஸ்ரேகதிர்களும் பரும துகல்களும் நிறைந்த அயனி மண்டலம் 4ஆவது அடுக்கு, பூமியிலிருந்து 60 முதல் 80 கி.மி அளவு ஒளி வெயில் உள்ள நேரம் மட்டும் மின்சாரம் தொடர்பான செயல் நடக்கும். 5ஆம் அடுக்கு. 80 முதல் 100 கி.மி வரை பரவியது ஆறாவது அடுக்கு. இங்கு மின்துகள் 4ம் அடுக்கைப்போலப் பல நூறுமடங்கு அதிகமாக இருக்கும். அதன் மின்கடத்தும் தன்மை பூமியின் பரப்பிலிருப்பதை விட நூறுகோடி மடங்கு அதிகம். சிற்றலைகளை 50 ஆண்டுக்குமுன் அறிந்து வானெலிகளை அமைத்து ப் பயன்படுத்தி வருகிறோம்.

அயனிமண்டலம் திடமான நிறந்தரமானது இல்லை. இது இரவு, பகல், வெளிச்சம், இருட்டு, பருவகாலம் ஏற்ப தன்மைகளில் பாதிப்புள்ளது. சூரியனின் 11 ஆண்டுக்குச் சுழற்சி கரியக்காற்று துகள்திசை கடல்களில் புயல்களைறும் இயற்கையின் அசாதாரனமான சூழ்நிலைகளைச் செய்கிறது. ஐன்ஸ்டின் சமன்பாடு $E = mc^2$ ஆற்றல் மாற்றம் ஏற்படுத்தும்.

கதிர் இயக்கம் பருப்பொருளைக் கதிர;களாகவும், கதிர்களாகவும் தொடர்பான செயல் நடக்கும். பூமியுடன் ஏழு அடுக்குகளாக இவை இருக்கின்றன. அவை அதள, விதள, சுதள, ததாதள,அகாதள, ரசாதள, பாதாள யாகும்.

எண் குணத்தவனாக இருக்கிறான்

சைவ சமயம்: கடவுள் தன்மை எட்டு 1. தன்வயமாதல், 2. தூய உடலினன் 3. இயற்கை உணர்வடைதல் 4. முழுமையாக உணர்தல் 5. பற்றற்றிருத்தல் 6. பேரருள் நோக்கம் 7. முடிவில்லாமை 8. எல்லை இல்லாமை.

இயற்பியல் அறிவியல்

அண்டத்தில் எட்டு 1. பருப்பொருள் ஒளி particles 2. புரவெளி space 3. காலம் Time 4. ஈர்ப்பு சக்தி Gravity 5. வுட மறை ஆண் சக்தி Strong force protons 6. மின்காந்த அலைகள் Electromagnatic force 7. தென்மறை பெண்சக்தி Weak forece electrons 8. அடையாளங்கள் Code எண், எழுத்து, மந்திரம் (syllable) ஒளி உருவக் கலைகள், தத்துவம், புவனம் என்ற வித்தைகள்.

உபததேசப்பொருள்

மழைகாலம், கோடைகாலம், மிகுந்த பனி பெய்யும் குளிர்காலம் எல்லாம் அடங்கி, ஓடுங்கி, நிலப்பரப்பெல்லாம் நீரால் சூழப்பட்டு இருக்கும் ஓரி முடியும் காரத்தில், வடமறை, தென்மறை வேதங்களைச் சிவபெருமான் உமாதேவிக்கு அருள் செய்தான். உலகம் முடிவுற்றுத் தோன்றும் புது உயிர்கள், தாய் வழியே உமாதேவியிடம் இருந்து, உயிர;கள் மீண்டும் அவ்வேதப் பொருளுணர, அவற்றை இறைவன் உமையாளுக்கு உபதேசிக்க உள்ளம் கொண்டு அருளினான்.

திருமந்திர பயன்

இராசசிம்மன் கி.பி.666 - 705 காலத்தில் இவன் சைவசித்தாந்தப்படி நடப்பவன் துந்திர - ஆகமங்களைக்கொண்டு பூஜிப்பவன். அப்பருக்கு முற்பட்ட காலத்திலே ஆகமங்கள்- தந்திர நூல்கள் இருந்தன என்பது மந்திரநூல்படி இவனும் தன் தந்தையைப் போலவே கண்மணியால் செய்யப்பட்ட சிவலிங்கத்தை ஆத்மலிங்கமாகப் பூஜித்தவன். கைலாசர் நாதர்கோளில் பட்டிளவர். கி.பி. (686-689) பஞ்சகாலத்தில் பொருள் இல்லாத காரணத்தால் மனதில் பூசலார் நயனார் கட்டிய கோயில் குடமுழக்கு, செய்வதால் நான் கனவின் சிவன் சொல்ல "அரசன் வான் ஒலி கேட்டான்" என்று கல்வெட்டில் கூறப்படுகிறது.

நடமாடும் சிவபெருமான்போல் இருந்ததாக அரன் பெருமைகளைச் சேக்கிழார் தொண்டுர் புராணத்தில் கல்வெட்டுகளில் எழுதப்பட்டி ருக்கிறது, சென்று ஆராய்ச்சி செய்து எழுதியுள்ளார். மேலும் சிவபுஜை முறைகலை கல்வெட்டில் எழுதி எல்லொருக்கும் கிடைக்கும்படி அமைத்தான் அரசன். பல்லவ வரலாறு தொண்டைமண்டல ஆதினங்கள் இன்றும் உள்ளன, ஒரு சிவராத்திரி முழுமையாகச் சிவனடியார்களுடன் சிவபூஜை செய்ய என்தந்தை உதவி செய்தார். நானும் பலன் பெற்றவர்களில் ஒருத்தி. மா.இராசமாணிக்கனார் எழுதிய பல்லவர்; வரலாற்றில் (ப-எ 137) காணலாம்.

முடிவுரை

'கற்றது கையளவு கல்லாதது உலகளவு' என்பதை ஔவையார் சொல்லி வைத்தார். பெருமைகள் மிக்க மறைதழிழ் வாழ்வியல் பயன்பாட்டு நடைமுறைகளில் காணப்படுகிறது. அன்பேசிவம். அவனன்றி ஒரு அணுவும் அசையா என்ற வகையில் அண்ட-பிண்ட, மண்ணுலகங்கள் முற்றும் அறிய வேண்டும். அப்படி அறியாதவர்க்கு நீமேல் எழுத்தாகும். பயன் அறிந்தவருக்கு கரும்பினில் கட்டிபோலாகும். இறைவன் திருவருள் முன்நிற்க.

-அன்பே சிவம்-

10. திருமந்திரத்தில் உடற்கூறு



சக்தி போகர்தாசன்
9A/1 சங்கர் நகர் பைபாஸ் ரோடு,
இராணிப்பேட்டை-632401 வேலூர் மாவட்டம்
தமிழ்நாடு, இந்தியா
email: herbalhouserpt@yahoo.com
கைபேசி: 9087733198

ஈசனே ஆசானாய்க் காணும் போக்கு
இங்கு இன்பமுடன் கயிலாசம் எய்தலாமே

திருமந்திரத்தில் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருள் பற்றியும், வழிபாடு சுகவாழ்வு போன்ற பொதுவான கருத்துகளும் இடம்பெறுகின்றன. திருமந்திரம் மூன்றாம் தந்திரத்தில் காயசித்தி, உபாயம் இடம்பெறுகிறது. இதனை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

உடல்

நோய் நொடிகளுக்கு இடமளித்து அழியக்கூடிய இந்த உடல் கூட்டமைப்பு பாதுகாப்பாக அமைந்துள்ளது. ஐந்து இந்திரியங்கள், ஆறு ஆதாரங்கள், முப்பது எலும்பிணைப்புகள், பதினெட்டுப் பொருத்துள், ஒன்பது பந்தல்கள், பதினைந்து எலும்பு வரிசைகள், சேர்ந்துதான் உடம்பு என்கிறார் திருமூலர். உடல் அழிந்தால் உயிராகிய ஆன்மா உடலில் வாழ்வதற்கும் பக்குவம் பெறுவதற்கும் வாய்ப்பில்லாமல் போகும் என்பதால் உடலைக் காயகல்பத்தாலும் உயிரை (ஆன்மா) பிராணாயத்தாலும் உறுதியாக்குவதே சித்த மருத்துவத்தின் நோக்கம்.

உடலின் சிறப்பு

சித்தர்களின் உடற்கூறு உடலியக்கம் மருந்து, வேதியியல் நோய்நாடல் நோய் முதல் நாடல், முறை மருந்தியல், அறுவை மருத்துவம், மூலிகையியல், காயகல்பம் ஆகியவை.

உடம்பார் அழியின் உயிரார் அழிவர் (724) என்றார் திருமூலர். மனம் செம்மைப்பட்டால் எதிலும் வெற்றிபெற முடியும்.

உடலும் நாடி சாத்திரமும்

உடலிலேற்படும் நோயைக் கண்டறியச் சித்தர்கள் நாடி பார்த்தல் முறையைக் கையாண்டனர். நாடி பரிசோதனை மூலம் உடலிலுள்ள வாத, பித்தம், கபம் என்ற மூன்று நாடிகளின் நிலையைக் கொண்டு நோயை அறிந்தனர். இம்மூன்று நாடிகளின் சமநிலையைச் சீர்தூக்கி ஆராய்வதே நாடி சாத்திரம். வாதநாடியின் இயல்பு கோழி நடைபோலும் பித்தநாடியின் இயல்பு தவளை குதிப்பது போன்றும், கப நாடியானது பாம்பு ஊர்வது போன்றும் இயங்கும்.

நோயற்ற வாழ்வு

மும்மலங்களாகிய ஆணவம், கன்மம், மாயை இவற்றை நீக்கும்போது நோயற்ற வாழ்வு அமைகிறது. உடலுக்கு ஆக்கல், அழித்தல், காத்தல் என்ற மூன்று சக்தியைச் சித்த மருத்துவத்தில் வாதம், பித்தம், கபம் முறையே காற்று, சூரியன், சந்திரன் இவற்றைப் பிரதிபலிக்கின்றன. வாதம் (காற்று வாயு) பித்தம் (பித்தநீர்) கபம் (சளி) வாதம் அதாவது வாயு. வாயு என்றால் அசைவது. உடலின் இயக்கத்தை நடத்துவது வாயுதான். கபத்தையும், பித்தத்தையும் சீரானநிலைக்குக் கொண்டு வருவதும் வாயுதான்.

பித்தம்: பித்தம் என்றால் வெப்பம். சீரண அக்கினியால் உணவைச் செரிக்க உதவும்.

கபம் : நிலமும் நீரும் சேர்ந்தது கபம். உடல் வெப்பத்தைக் கட்டுப்படுத்தும். உடலுக்கு ஊட்டச்சத்து சேர உதவும். இந்தச் செயல்பாட்டினால் தான் திருமூலர் ''அண்டத்தில் உள்ளது தான் பிண்டத்தில் உள்ளது'' என்று கூறியுள்ளார்.

உடல்நலம் பேணல்

உடல் அழியாவண்ணம் காக்கும் முறை மருத்துவம். சித்த மருத்துவத்தில் உடல் ஆக்கக் கூறுகள் இயக்கும். ஆன்மா, அவற்றுக்குத் துணையாகவுள்ள வாத, பித்த, கபம் என்பன பற்றிக் கூறி, அவை நோயுறாதிருக்கும் மருத்துவ முறைகளும் கூறப் பட்டுள்ளன.

வாதம் (வாயு) : வாதம் என்றால் இயக்கத்தை நடத்துவது. வாயுவின் வகை பிராண, உதான, சமான, வியான, அபான, வாயுவின் செயல்பாடு. மூச்சு விடுதல் உணவை உட்கொள்ளுதல், இதயம், உணர்வு, இரத்த ஓட்டம் இவற்றைப் பாதுகாப்பது, மனம், நரம்புகள், அறிவு இவற்றைச் சீராக வைத்தல் உயிர் வாழத் தேவை.

பித்தம் : பித்தம் என்றால் அக்கினி-உணவு செரிக்கவும் நாளமில்லாச் சுரப்பிகளைச் சீராக நடத்தும்.

பித்தவகை பாசக, ரஞ்சக, சாதக, ஆலோசகா, பிராஜக செரிமானம் பித்தங்களின் இயக்கம் இரத்தத்திற்கு நிறம் சேர்த்தல், இரத்த உற்பத்திக்கு உதவுதல், ஞாபக சக்தி, அறிவு செயல்பட உதவுதல், நரம்பு திசு வளர்சிதை மாற்றம் போன்றவற்றிற்கு உதவுகின்றது.

கபம் (சளி) : கபத்தின் வகை அவலம்பகா, சிலேடகா, தர்பாகா, போதகா, ஸ்லேசகா, கபத்தின் செயல்-செயல்பாடு, இதயத்தை, நுரையீரலைக் காக்கிறது. சுவாசத்திற்கு உதவும். வயிற்றில் உணவை ஈரமாக வைக்க உதவும். அடி, மேல், வயிற்றை அமிலத்திலிருந்து பாதுகாக்கும் என்று சித்தர்கள் கண்டறிந்து நோயால் உடல் பாதிப் படையாமல் இருக்க மருத்துவ முறைகளையும் கையாண்டுள்ளார். சித்தர்கள் சித்த மருத்துவச் சிகிச்சையில் மணி, மந்திரம், ஔடதம் என மூவகையுள்ளது.

மணி : சித்த மருத்தவத்தில் மணி என்பது இரசத்தைக் கட்டி மணி போலாக்கிய இரசமணியைக் குறிப்பதாகும். உலோகங்களைத் தங்கமாக மாற்றக்கூடிய மூப்பு. நம் உடலையும் தங்கமாக்கும் எனச் சித்தர்கள் நம்பினார்கள். இரசமணிக்கு உடம்பில் உள்ள பலவகையான அழுக்கை நீக்கும் ஆற்றல் உள்ளது. நரை, திரை, மூப்பை நீக்கி நீண்டகாலம் வாழலாம் என்பதே இரசமணியின் மருத்துவக் குணமாகும். இதனை மருத்துவத் திருமந்திரம் எண்ணாயிரம் எனும் நூலில் (பக் 5, 7) திருமூலர் எட்டு வகையான இரசமணிகளைக் குறிப்பிடுகிறார். அவை சொரூப மணி, சூக்கும மணி, கமலின், காமுனி, சித்தமணி, யோகினி, விண்ணோகி, பசிசமணி என்பன.

மந்திரம் : சித்த மருத்துவம் எனும் நூலில், மனம்+தரம்=மந்திரம் எனவும் மனிதன்+தரம்=மந்திரம் எனவும் பொருள் கூறப்படுகிறது. மந்திரம் சொற்களால் ஆனது. சொற்கள் ஆற்றல் பெறும்போது அவை மந்திரமாகின்றன. மனத்தைக் காக்க வேண்டுமாயின் உடலைக் காக்க வேண்டும். இதனைத் திருமூலர் உடலை வளர்த் தேன் உயிர் வளர்த்தேன் என்ற கோட்பாட்டை வலியுறுத்தினார்.

ஐம்பொறிகளையும் அடக்கி ஒவ்வொரு நிலையினையும், தன் மனத்தை ஒரு நிலைக்குக் கொண்டுவந்து உடலை வளர்த்துச் சிவ சக்தியடையும். வேதாந்திகள் மந்திரத்தினால் நோய் நீங்குவதால் மருத்துவத்தில் மந்திரத்தைச் சேர்த்துக் கொண்டனர் எனவும் குப்புசாமி முதலியார் குறிப்பிட்டுக் காட்டுகிறார்.

நிறைமொழி மாந்தர் ஆணையிற்கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப

என்ற தொல்காப்பியர் கருத்தும் இங்கு நோக்கத்தக்கது.

ஔடதம்

ஔடதம் என்பது மருந்து எனப் பொருள்படும். ஔடதம் = அவிழ்தம் எனவும் பொருள்படும். அவிழ் + தல் = போக்குதல். நோய் களை அவிழ்க்கும் தன்மை மூலிகைகள், தாதுப்பொருட்கள், இரசம், பாடாணம், உப்பு சாறு முதலான பொருட்களின் சேர்க்கையால் செய்யப்படுவதே மருத்துவம்.

உடல் நிலையாமை

திருமூலர் திருமந்திரம் இரண்டாம் தந்திரத்தில் உடலின் நிலையாமையைப் பற்றி

மண்ணென்று கண்டீர் இருவகைப் பாத்திரம்
திண்ணென்(று) இருந்தது தீவினைச் சேர்ந்தது
விண்ணின்று நீர்விழின் மீண்டு மண்ணாணாற்போல்
எண்ணின்றி மாந்தர் இருக்கின்ற வாறே (143)

இறைவன் ஒருவகை மண்ணில் இருவகையான பாண்டங்களைச் செய்கின்றான். ஒன்று தீயினால் சுடப்பட்டது. மற்றொன்று தீயினால்

சுடாத பாண்டம். தீயினால் சுட்ட பாண்டம் வலிமையானது. உடைந்தாலும் அது மண்ணுடன் சேராது. அதுபோல் இறைவனின் திருவருள் என்னும் தீயினால் சுடப்பட்ட உடல் மீண்டும் பிறவா வரம் பெற்றதாகிவிடும்.

தீயினால் சுடப்படாத பாண்டம் மழைநீர்ப்பட்டுக் கரைந்து, மண்ணோடு மண்ணாகக் கலந்துவிடும். அதுபோல் இறைவனின் திருவருள் என்ற தீயினை உள்வாங்காதவர்கள் இவ்வுலகில் மீண்டும் மீண்டும் பிறவி எடுக்கும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

உடலின் மேன்மை

ஒழித்தேன்பிறவி உறவென்னும் பாசம்
கழித்தேன் கடவுளும் நானும் ஒன்றானேன்
அழிந்தாங்கு இனிவரும் ஆக்கமும் வேண்டேன்
செழுஞ்சார் புடைய சிவனைக் கண்டேனே (2958)

திருமூலர் உடலின் முதுமை தவிர்க்க முடியாது. ஆனால் தள்ளிப் போடலாம் என்கிறது சித்த மருத்துவம். திருமூலர் முதுமையிலும் இளமையாகத் திகழ வழியுரைக்கின்றார்.

அஞ்சனம் போன்றுடலையறு மந்தியில்
வஞ்சக வாத மறுமத்தி யானத்தில்
செஞ்சிறு காலையில் செய்திடில் பித்தனும்
நஞ்சறச் சொன்னோம் நரைதிரை நாசமே (727)

மாலை வேளையில் யோகாசனம் செய்வதால் கபம் நீங்கும். நடுப்பகலில் யோகாசனம் செய்வதால் வாதம் நீங்கும். காலையில் யோகாசனம் செய்தால் பித்தம் நீங்கும் என்கிறார் திருமூலர். இப்பயிற்சியின் விளைவாக நோய் அணுகாது. உடலின் நரை, திரை மாறும் என்று வலியுறுத்துகின்றார்.

சிவனை அடைதல்

மனிதன் உடல் வேறு ஆன்மா வேறு என்பதை அறிந்திருக்க வில்லை. மனிதன் தனது உடலையே தான் என்று மயங்குகிறான். சிவத்திடம் உணர்வு சென்றபோது தான் தன்னுளிருக்கும் ஒளியை அவன் கண்டுகொள்கிறான்.

செயலற் றிருக்கச் சிவானந்த மாகும்
செயலற் றிருப்பார் சிவயோகம் தேடார்
செயலற் றிருப்பார் செத்தெடுங் கூடார்
செயலற் றிருப்பார்கே செய்தியுண் டாமே (2319)

அண்டமே ஆன்மாவின் உண்மை வடிவம் உடலன்று. அதனையறிந்து இருக்கும்போது அது சிவத்தை அடைகிறது. சிவமாகும் பேற்றைப் பெறுகிறது. அந்நிலையில் அதன் மலங்களும் அவற்றால் உண்டான குணங்களும் அழியும். அடுத்தொரு பிறவியெடுக்கும் நிலை அதன் பின்பு தோன்றாது. சிவனிடத்தே சிவம் பொருந்தும்போது ஞானம் உண்டாகிறது. ஞானம் பெற்ற ஆன்மா உலக விருப்பங்களை ஒழித்து மேலான சிவபதத்தைச் சேரும். ஆன்மா பிறவியெடுப்பதும் செயல்படுவதும் சிவத்தின் செயல்பாடு.

தன்னை அறிந்தபின் பேரறிவான சிவத்தை அது அறிய முற்படுகின்றது. தன் இயக்கத்துகான ஆற்றலைச் சிவசக்தி அருளால் தான் பெற்றோம் என ஞானி உணர்கின்றான். ஆன்மாவின் உண்மைத் தன்மையை அறிவதால் உண்டாகும் பயன்கள் என்கிறார் திருமூலர்.

உருவம் நினைப்பவர்க்கு உள்உறும் சோதி
உருவம் நினைப்பவர் ஊழியும் காண்பர்
உருவம் நினைப்பவர் உம்பரும் ஆவர்
உருவம் நினைப்பவர் உலகத்தில் யாரோ (2841)

உன்னத நிலை

உடலுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு நீடிக்கும் வரைதான் வாழ்க்கை. இந்த நிலையற்ற வாழ்க்கை இருக்கும் வரையில் சரியாக வாழ்ந்துவிட வேண்டும். நெறிமுறைகளில் இருந்து விலகிவிடக் கூடாது என்பது திருமூலரின் கருத்து. நீங்கள் பிறவியெடுப்பதன் உன்னத நோக்கத்தை அடைய விரும்பினால் ஒழுக்கத்தில் நில்லுங்கள்.

முடிவுரை

கறுத்த இரும்பே கனகம தானான
மறித்திடும் பாகா வகையது போல (2013)

என்பது இரசவாதக் கலையைக் குறிக்கின்றது. இரசத்தை வேதகம் என்றும் அதற்கு உதவும் மருந்தைப் பரிசனவேதி என்றும் (திரு.889-2013) குறிப்பிடுகின்றது. இதனை உணராமல் மக்கள் இறப்பை எட்டுகின்றனர்.

சிவாய நமவென்று சிந்தித்திருப்போருக்கு
அபாயம் ஒரு நாளுமில்லை

என்று சித்தர்கள் கூறியுள்ளனர்.

இதனையே பட்டினத்தார்,

விட்டுவிடப் போகுதுயிர் !
விட்ட உடனே உடலைச்
சுட்டுவிடப் போகின் றார்
சுற்றத்தார் பட்டது பட்(டு)
எந்நேரமும் சிவனை
ஏந்துங்கள் போற்றுங்கள்
சொன்னேன் அதுவே சுகம் (ப.பொது.6)

கூறியுள்ளார். உடல் அழிந்தால் உயிராகிய (ஆன்மா) உடலில் வாழ்வதற்கும், பக்குவம் பெறுவதற்கும் வாய்ப்பில்லாமல் போகும் என்பதால் திருமூலர் உடம்பை வளர்த்து இறவா வரம் பெறுவதற்கான உணர்வைத் திருமந்திரம் வாயிலாக உலகிற்கு உணர்த்தினார்.

ஈசனைக் கருதி யெல்லா வுயிர்களையும்
நேசத்தால் நீ நினைந்து கொள்.

11. பத்தாம் திருமுறை திருமந்திரமும் - நாலாயிரத்திவ்வியப்பிரபந்தமும்

(அன்பு நெறி - பிரேம பக்தி)



நா. ஜெயலெட்சுமி
முனைவர் பட்ட ஆய்வாளர்
பட். சுவடியியல், தரமணி, சென்னை.
கைபேசி: 9791749210.
jayalakshmi981@gmail.com

முன்னுரை

பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா! நின்சேவடி
செவ்வித் திருக்காப்பு

உலகில் வணிக மொழி ஆங்கிலம் என்றும், தூதின் மொழி பிரெஞ்சு என்றும், காதலின் மொழி இலத்தீன் என்றும், தத்துவத்தின் மொழி ஜெர்மனியம் என்றும், தமிழ்மொழியை பக்திமொழி எனவும் சிறப்பித்துக் கூறுவர். அத்தகைய சிறப்புப் பெற்றுத் தந்த சைவப் பனுவல்களான பன்னிருதிருமுறைகளும், நாலாயிரத் திவ்வியப்பிரபந்தங்களும் உலக மக்களின் மரபிற்குரிய வாழ்வியல் சிந்தனைகளை எடுத்துக்காட்டுகின்றன. அவ்வளவில் தமிழ் மொழியின் ஏற்றத்திற்கும், பக்தியின் செல்வாக்கிற்கும் சைவப் பனுவல்களும், வைணவப் பனுவல்களும் சிறந்து விளங்குகின்றன. திருமுறைகளும், திவ்வியப் பிரபந்தங்களும் இயல், இசை, நாடகம் என்று முத்தமிழாகப் பரிணமித்து பக்திச் சுவையில் தோய்ந்து சாதி, மத, இன வேறுபாடின்றிக் கடல் கடந்த நிலையில் மக்களிடம் அன்புணர்வையும், குறிக்கோள் மிக்க வாழ்வியலையும் உணர்த்து கின்றன. இத்தகைய சைவப் பனுவலான திருமந்திரத்தினுள்ளும், திவ்வியப்பிரபந்தத்தினுள்ளும் உள்ள கருத்தினை ஒப்புமைப் படுத்துவதே இவ்வாய்வின் கட்டுரையாகும்.

திருமந்திரம்

பக்தி இயக்கத்தின் முன்னோடியாக நாயன்மார்களில் திருமூலரும், பன்னிரு ஆழ்வார்களையும் குறிப்பிடுவர். திருமந்திரத்தை இயற்றியவர் திருமூலராவார். இதனை பெரிய புராணமும் கூறுகின்றது. மந்திரம்போல் சுருங்கிய சொற்களில்

நுட்பமான பொருள் உடைய பாடல்கள் இந்நூலின்கண் உள்ளதால் இதனைத் திருமந்திரம் என்பர். இந்நூல் பன்னிரு திருமுறைகளில் பத்தாம் திருமுறை. மூவாயிரம் பாடல்களைக் கொண்ட இத்திருமந்திரச் செய்யுள் வெண்டளை பயின்று, வெண்பாவிற்கும் விருத்தப்பாவிற்கும் நடுநிலையாக உள்ளது. திருமந்திரப்பாடல்கள் பெரும்பாலும் சிவன், யோகம், ஆசிரியன், யோக சக்கரங்கள், சக்தி, உலகியலறங்கள் ஆகியவை பற்றிக் கூறப்படுகின்றன.

நாலாயிரத்திவ்வியப்பிரபந்தம்

பன்னிரு ஆழ்வார்களால் பாடப்பட்டு, நாதமுனிகளால் தொகுக்கப்பட்டது நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம் எனும் வைணவப் பனுவலாகும். திவ்வியப்பிரபந்தம் 4000 பாசுரங்களைக் கொண்டது. பல்வேறு இலக்கிய வகைமைகளைக் கொண்டது இப்பக்திப் பனுவல். அந்தாதி, ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா என அத்துணை இலக்கியச் செழுமை உடையது இந்நூல், வாழ்த்திக் கூறும் மரபு, தாலாட்டு, பிள்ளைத்தமிழ், சிற்றில் விளையாட்டு போன்ற இலக்கிய வகைகள் கொண்டதாகத் திகழ்கின்றது.

திவ்வியப்பிரபந்தப் பாசுரங்கள் விசிட்டாத்துவைதக் கோட்பாடு களான சித்து, அசித்து, இறைவன் என்ற தத்துவத்ரயம் கோட்பாட்டினை விளக்குகின்றது. பரம்பொருளுக்கும் ஆன்மா விற்கும் ஒன்பதுவகையான தொடர்புகள் ஏற்பட்டுள்ளன என்று வைணவ தத்துவம் கூறுகின்றது. இதனை நவவித பக்தி என்பர். ஸ்ரீமந்நாராயணனை அடைய எளியமுறையில் அன்புடன் செய்வதே பக்தி.

பக்தியானது மூன்று வகைப்படும். சாதனபக்தி, பாவபக்தி, ப்ரேமபக்தி.

மழைக்கு முன் ஏற்படும் புழுக்கத்தைப் போன்றது சாதனபக்தி.

சிறு தூற்றல் போன்றது பாவபக்தி ; பெருமழை போன்றது பிரேமபக்தி.(ஸ்ரீஸ்ரீ அண்ணா).

ச்ரவணம் கீர்த்தனம் விஷ்ணோ: ஸ்மரணம் பாதஸேவனம்
அர்ச்சனம் வந்தனம் தாஸ்யம் ஸக்யம் ஆத்ம நிவேதனம்

என்ற இந்தப் பக்தியில் அன்புகொண்டு தாயாக, தந்தையாக, குழந்தையாக, அண்ணனாக, அம்மானாக, காதலனாக, காதலியாகத் தம்மை பாவித்துச் செய்யக் கூடியது பக்தி எனப்படும்.

திருமந்திரம் - திருஅட்டாட்சரம்

சைவப் பனுவலின் மூல மந்திரம் ஐந்தெழுத்தாகும். வைணவ சமயத்தின் திருமந்திரம் திரு அட்டாட்சரம் என்பர். கடவுளுக்கு அன்பு செலுத்துவது மட்டுமல்லாமல் மக்களுக்குத் தொண்டு செய்யும் அன்பையும் திருமந்திரம் வலியுறுத்துகிறது.

அன்பில் விளைந்த அமுதம் (அன்பே இறை ; அறிவே இறை)

இறைவனை அன்பு வடிவாகவும், அறிவு வடிவாகவும் கண்டவர்கள் ஆழ்வார்கள். பூதத்தாழ்வார் இறைவனிடத்தில், அன்பு மட்டும் இருந்தால் போதும் இறைவனாகிய பெருமான் உன்னை ஆட்கொள்வான், துன்பம் உன்னை நெருங்காது என்று கூறுகிறார்கள்.

அன்பே தகளியாய் ஆர்வமே நெய்யாக
என்புருகு சிந்தை இடுதிரியா நன்புருகி
ஞானச்சுடர் விளக்கு ஏற்றினேன் நாரணற்கு
ஞானத்தமிழ் புரிந்த நான் (இரண்.1)

இவ்வாறு உள்ளத்து அன்பையே அகலாக, எண்ணெய் திரி முதலியவற்றைத் தாங்கும் கருவியாக அமைத்தேன். அன்பின் முதிர்ச்சியான ஆசையை நெய்யாக்கி, முதற்பொருளான ஸ்ரீமந் நாராயணனுக்கு எனது உள்ளத்தில் அறிவுத் தமிழினால் ஆன பாசுரத்தால் ஞானஒளியான விளக்கேற்றினேன் என்று தமது பாசுரத்தால் விளக்குகின்றார் பூதத்தாழ்வார்.

இவர் ஏற்றிய விளக்கில் ஞானமயமான ஆத்மாவும் கரைகிறது. இப்பாசுரத்தில் நாரணற்கு என்னும் சொல்லானது இடைநிலைத் தீபமாய், நாரணற்கு ஞானத்தமிழ் புரிந்தநான் என்றும், நாரணற்கு ஞானச்சுடர் விளக்கு ஏற்றினேன் என்றும் இரண்டு பக்கத்திலும் இணைத்துப் பொருள் கொள்ளுமாறு அமைந்திருக்கிறது. இப்பாசுரத்தில் அன்பு, ஆர்வம், இன்புவிளக்கானது என வெவ் வேறு சொற்களால் விளக்கிச் சொல்கிறார். இங்கு ஆத்மாவுக்கு ஆழ்வார் சூட்டுகிற தமிழ்ப் பெயர் நன்பு என்பதாகும். இப்பிரபந்தம் இறைவனைப்பற்றிய உண்மையறிவையும், அன்பால் பெற்றி டலாம் என்பதைத் பூதத்தாழ்வார் தமது பாசுரங்களில் முதலிலும், முடிவிலும், இடையிலும் குறிப்பிடுகின்றார்.

அன்பு ஆக்கி, ஏத்தி அடிமைப்பட்டேன் உனக்கு
என்பாக்கியத்தால் இனி (2-34)
பணிந்தேன் திருமேனி; பைங்கமலம் கையால்
அணிந்தேன், உன் சேவ டிமேல் அன்பாய் (2-65)
நேர்ந்தேன் அடிமை, நினைந்தேன் அதுஒண் கமலம் ;
ஆர்ந்தேன் உன்சேவடிமேல்அன்பாய் (2-90)

என வருவன இதற்குச் சான்று.நூலின் முடிவிலோ அந்த நிறைநிலை யையும் கடந்து விஞ்சிப் பெருகும் பேரன்பினை என்றன்

அளவன்றால் யானுடைய அன்பு (2-100) என்று தலைக் கட்டுகிறார்.இந்த ஓரடியே இவ்வெண்பாவுக்கும் நூலுக்கும் உயிர்நிலையான அடி. உயிர், உடம்புக்குள் வியாபித்திருத்தலைப் போல், அன்பின் வியாபகத்தைக் காட்டும் அடி இது. ஆக அன்பில் விளைந்த அமுதமே பூதத்தாழ்வாரின் இரண்டாம் திருவந்தாதி ஆகும்.

மாலே நெடியோனே கண்ணனே விண்ணவர்க்கு
மேவா வியன்துழாய்க் கண்ணியனே மேலால்

விளவின்காய் கன்றினால் வீழ்த்தவனே (2-100) எனக்கூவிக் கூவி கண்பனி சொர நின்று அழைத்து என்றன் அளவன்றால் யானுடைய அன்பு என மாலே என்ற சொல்லானது அடங்கி நிற்காதபடி அன்பைப் பெருக்கிவிட்டாயே என்பது கருத்து. இந்த அன்பின் விளைவாகத் திருமால் வீற்றிருக்கும் பரமபதநாதனை நோக்கித் தன் மனம் செல்வதாகப் பாடுகிறார்.

பதி அமைந்து,நாடி, பருத்தெழுந்த சிந்தை
மதி உரிஞ்சி, வான்முகடு நோக்கி -கதிமிகுத்து, அம்
கோல் தேடி ஓடும் கொழுந்த்தே போன்றதே
மால்தேடி ஓடும் மனம்.(2-27).

எனவே தான் அன்பையும் அதன் படிநிலைகளுள் ஒன்றான ஆர்வத்தையும் இங்ஙனம் உருவகித்துச் சிறப்பிக்கிறார்.

உள்ளம் உரை செயல் உள்ள இம்மூன்றையும்
உள்ளிக் கெடுத்து இறை

உள்ளில் ஒடுங்கே - திருவாய்மொழி

மக்களின் வாழ்க்கையில் அன்பு, அறிவு இரண்டாகவும் இறைவன் இருக்கிறான் என்பதை ஆழ்வார்கள் விளக்குகின்றனர். அதனால் வைணவ சமயத்தின் நெறியாகவும், அடிப்படையான தத்துவமாகவும் அன்பு அமைந்திருத்தலை வலியுறுத்துகின்றனர். அன்பின் ஆழத்தை வெளிப்படுத்தக் கூடியனவாக ஆழ்வார்களின் பாசுரங்கள் அமைந்திருக்கின்றன. திருமழிசையாழ்வார் திருக் குடந்தைப் பாசுரத்தில் ஆராவமுதே அடியேன் உடலம் நின்பால் அன்பாயே என்றும் பாடுகின்றார்.

திவ்வியப்பிரபந்தங்களில் பலஇடங்களில் இக்கருத்தைக் காணலாம். திருக்குறள் மலர்மிசை ஏகினான் மாலடி சேர்ந்தார்க்கு என்ற திருக்குறளில் மலர் என்பது இதயகமலத்தைக் குறிக்கிறது. அன்பால் நினைபவரது உள்ளக் கமலத்தின் அந்நினைந்த வடிவோடு விரைந்து சேரும் கடவுளைக் குறிக்கின்றது.

நம்மாழ்வாரும்
மனன் அகம் மலம்அற
மலர்மிசை எழுதரும்
மனன்உணர் அளவு இலன்
என்று பாடுகின்றார்.

இறைவனை அன்போடு நினைக்கிற நினைப்பே ப்ரேமபக்தி எனப்படும். ப்ரேமம் என்றால் ஆசையுடன் கூடிய அன்பு.

அடியார்க்கு அடியார்

இறைவனுக்கு அடிமைப்படுதலை முதல்நிலை என்றும், அவனடியார்க்கு அடிமைப்படுதலை முடிந்தநிலை என்றும் வகுத்துக்கூறுகிறது பக்தி இலக்கியங்கள்.

அடியார் அடியார் அடியார் அடிமைக்கு
அடியனாய் நல்கிட்டு அடிமையும் பூண்டேன்
அடியார் அருளால் அவன் அடிகூட
அடியான் இவன்ன என்று அடிமை கொண்டானே

சைவசித்தாந்தமும், வைணவ சித்தாந்தமும். இக்கருத்தினைத் திருமந்திரமும், திவ்வியப்பிரபந்தமும் வலியுறுத்துகிறது.

தோளிரண்டு எட்டு ஏழும் மூன்றும் முடி அனைத்தும்
தாளிரண்டும் வீழச்சரம் துரந்தான்- தாள் இரண்டும்
ஆர் தொழுவார் பாதமவை தொழுவது அன்றே என்
சீ கெழுதோள் செய்யும் சிறப்பு

என்று ஆழ்வார் (2-43) கூறியதை ஆசார்யர்கள் பொருத்திக் காட்டுவர். அடியார் அல்லாதாரை நெஞ்சாலும் நினையாமல் இருப்பது சாலச் சிறந்தது என்னும் எதிர்மறைக் கருத்தையும் ஆழ்வார்கள் பாடியுள்ளனர்.

சிறந்தார்க்கு எழுதுணையாம் செங்கண்மால் நாமம்
மறந்தாரை மானிடமா வையேன் (2-44)

என்றும் ஆள்வினை யேழ் அன்று அடர்த்தாற்கு ஆளானார் அல்லாதார் மானிடவர் அல்லர் என்று என் மனத்தே வைத்தேன் (பெ.தி.மொ.11-7-9)இலும் அருளிச்செய்வர்.

சங்கர நாராயணர் பாசுரங்கள்

அரன், நாராணன் நாமம், ஆன்விடை, புள், ஊர்தி
உரை நூல் மறை உறையும் கோயில் வரை நீர்
கருமம் அழிப்பு அளிப்பு கையது வேல் நேமி
உருவம் எரி கார் மேனி ஒன்று (1:5) முதல் திருவந்தாதி

சிவன், திருமால் ஆகிய இருவருடைய பெயர், வாகனம், அவர்களின் புகழ் உரைக்கும் பிரமாண நூல்கள், உறையும் இடம், தொழில், படை, உருவம் முதலியவற்றை அடுத்தடுத்து வைத்துப் பேசும் பாசுரம் இது.

பொன்திகழும் மேனிப் புரிசடை அம்புண்ணியனும்
நின்றுலகம் தாய நெடுமாலும்

என்றும்,

இருவர் அங்கத்தால திரிவரேலும், ஒருவன்
ஒருவன் அங்கத்து என்றும் உளன் (1-98)

என்பது மற்றொரு பாசுரம்.

ஆழ்வார்களின் திருமந்திரம் -திருநாமம்

இறைவனைக்காட்டிலும் அவனுடைய திருநாமத்திற்கு ஏற்றம் உண்டு. இது முந்தையோர் துணிவு. கட்டிப்பொன் போன்றவன் இறைவன்; அவனின் நாமம் அணிகலன் போன்றது என்பர் பெரியோர். திருநாமத்தினைச் சொன்னால் போதும், இறைவனது

திருவருள் கிட்ட அதுவே வழியாகும். ஆழ்வார்கள் பல பாசுரங்களில் இக்கருத்தினை எடுத்துக் காட்டியுள்ளனர். வேதப்பயன் கொள்ளவல்லவரான ஆழ்வார்கள் தாம் பெற்றபேறு இவ்வையகமும் பெறவேண்டும் என்ற நல்நோக்கோடு எளியவழியில் செந்தமிழால் விளக்குகின்றார்.

சைவத் திருமந்திரம் - ஓம் நம: சிவாய
வைணவத் திருமந்திரம் - ஓம் நமோ நாராயணாய

இவ்விரண்டு மந்திரங்களிலும் மூன்று சொற்கள் அடங்கி இருக்கின்றன. இவற்றுள் ஓம் என்ற சொல்லின் பொருளையே ஏனைய இரண்டு சொற்களும் விரிவுபடுத்துவதாகப் பெரியோர் பணிப்பர். இத்திருமந்திரத்தினை அன்புடன் (ப்ரேமையுடன்) குருமுகமாக ஓதுவதால் நற்பலனடையலாம் என்ற கருத்தினையே திருமூலரும், ஆழ்வார்களும் வலியுறுத்துகின்றனர். ஆக ஒரு தீபத்திலிருந்து ஏற்றிய விளக்குகள்போல சைவத் திருமுறைகளும், திவ்வியப் பிரபந்தங்களும் ஒளிவிடட்டும்.

எண்ணியதெல்லாம் மெய்யாக்குவான் - நம்
எண்ணத்தில் கண்ணன் இருப்பானாகில் (எண்ணிய)

முடிவுரை

மண்ணில் மகத்தான வாழ்வு வாழ, பக்தியாகிய அன்பு தேவை. தீய வழியில் செல்லாது நல்வழிப்படுத்தி, அன்புடன் கலந்த பக்தியைச் செய்து அன்புள்ளத்தை இறைவனுக்கு சமர்ப்பணம் செய்வோம். அன்பே வடிவான அவனை. அன்புடன் கலந்த பக்தியால் வசமாக்கி அவனருள் பெற ஒன்றே குலம் ; ஒருவனே தெய்வம் என்று போற்றுவோம். இதனைத்தான் சைவப் பனுவல்களும், வைணவப்பனுவலான நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமும் எடுத்துக்காட்டுகின்றன. தன்னைநாடும் அடியவர் துயர்நீக்கி அருள்புரியும் பரந்தாமன் அடிபணிந்தால் பாரில் பண்பட்டு, மேம்பட்டு, சிறப்புற்று, மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும் என்ற வாக்கிற்கேற்ப அவனடி பணிந்து அன்புடன்(ப்ரேமையுடன்)கலந்து தமிழிலக்கியத் தரணியில் பாடிப் புத்தொளி பரப்பி வலம் வருவோம்.

12. திருமந்திரத்தில் மருத்துவம்



மருத்துவர் ஆ.சிவகுமார், M.D.(S)
முனைவர்பட்ட ஆய்வாளர்
சென்னை பல்கலைக்கழகம்,
சென்னை-600 005.
கைபேசி: 9176545436

முன்னுரை

தென்னகத்துச் சித்தர் மரபில் முதன்மையானவர் திருமூலர் இவரின் திருமந்திரம் யோகம், ஞானம், வாதம், வைத்தியம், என்ற தலைப்பில் இலக்கண இலக்கியச் சிறப்புடையது. குறிப்பாகச் சித்த மருத்துவத் துறைக்குப் பெருந்தொண்டாற்றியுள்ளார்.

கருவுற்பத்தி

உன்னிய கர்ப்பக் குழியாம் வெளியிலே
பன்னிய நாதம் பகர்ந்த பிருதிவி
வன்னியும் வாயுவும் மாயுறுஞ் சுக்கிலம்
மன்னிய சமனாய் வளர்க்குமுதகமே

உதக முதிர முறுங்கனல் வாயுவால்
சிதகுறு மங்கங்கள் செய்து முடித்திடும்

கருக்குழியை ஆகாயமாயும் நாதபிருதிவியாயும் சுக்கிலம் வன்னி வாயுவாகவும் பாவித்துக் கருவளர்வதற்கு இடமளிப்பது 'கருப்பை' எனவும் கருவைத் தோற்றுவித்து அதற்கு உணவை அளிப்பது 'நாதம்' எனவும், வளர்ச்சிக்கு வேண்டிய சூட்டையும், வாயுவையும் 'விந்து' பெற்றுள்ளது எனவும் இது சூட்டையும், வாயுவையும் நாதத்திற்குத் தந்து தொழில் புரிவதால் நாதம் கருவாக வளர முடிகிறதென்றும் 'உதகமாகிய நீர்' யாவற்றையும் நேர்மையாகவும், செழிப்பாகவும் வளரச் செய்யும் என்பதாகவும் அறிகிறோம். அன்றியும், 'உதகமான நீர்' தனது தீயின் தன்மையாலும், வாயுவின் தன்மையாலும் செந்நீராக மாறி இரத்தமாக மாறி அங்கங்களை உண்டாக்குவதாகவும் கூறப்படுகிறது. இதனால் நீர்போன்ற இரச தாதுவிலிருந்து இரத்தத் தாது முதலில் உண்டாகி அப்பால் மற்ற தாதுக்கள் உண்டாகின்றன என்பதும் புலனாகின்றது.

கருவில் உயிரியல் முறை

சுக்கிர நாடியில் தோன்றி வெள்ளியும்
அக்கிர மத்தே தோன்றும் அவ்யோனியும்
புக்கிடும் எண்விரல் புறப்பட்டு நால்விரல்
அக்கிரம் எட்டும் எண்சாண் அதுஆகுமே (273)

ஆணும் பெண்ணும் கூடும்போது கரு அமையும். அப்போது பெண் விடுகின்ற மூச்சுக்காற்று 12 அங்குல கனஅளவு உடலுக்குள் தங்கி விடுகின்றது. மீதமுள்ள 4 அங்குல கன அளவுள்ள காற்று வெளியே வந்து விடுகின்றது. உள்ளே சேர்ந்த எட்டு அங்குலமே குழந்தையின் உடலாக அமைகின்றது. இது எட்டுசாண் என்ற அளவில் அமைகின்றது என்பது திருமூலர் கண்டறிந்த உயரியல் முறை.

சிசுவின் வாழ்நாள் விவரம்

பாய்ந்து முனஞ்சோடிற் பாராயுளும் நூறாம்
பாய்ந்து பினாலோடிற்பார் வயதெண்பதாம்,
பாய்ந்திடும் வாயு பகுத்தறிந் தவ்வகைப்
பாய்ந்திடும் யோகிக்குப்பாய்ச்சலு மாமே

கலவியில் இடகலையிலானாலும், பிங்கலையிலானாலும், பிருதிவிதொட்டு ஐந்து பூதங்களிலும் சரம் செல்லுமானால், அப்பொழுது செனிக்கும் கருவுக்கு நூறு ஆண்டுகள் வாழ்நாள் உண்டு. அப்புதொட்டு நான்கு பூதங்களிலும் சரம் செல்லுமானால் அப்பொழுது கருவாகிப் பிறக்கும் குழந்தைக்கு எண்பது ஆண்டுகளாகும்.

வாழ்நாளை நீட்டித்தல்

ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும்
காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை உதைக்கும் குறியது வாமே (571)

ஏற்றியிறக்கி இருகாலும் இரண்டு நாசியிலும் சுவாசித்து மூச்சுக்காற்றின் வெளியேற்றத்தைக் குறைத்து காற்றைப் பிடிக்கும் கணக்கை அறிந்து கொண்டால் எமனையே எட்டி உதைக்கலாம் என்கின்றார் திருமூலர்.

நாடி நடையைப் பரீட்சிக்கக்கூடிய இடங்கள்

தாது முறைகேள் தனித் தகுதிச் சந்தோடு
ஓதுறுகாமிய முந்தி நெடுமார்பு
காது நெடுமூக்குக் கண்டம் கரம்புருவம்
போதுறுமுச்சிபுகழ் பத்தும் பார்த்திடே

குதிங்காலினுட் புறம், மர்ம ஸ்தானம் உந்தி, மார்பு, காது, மூக்கு, கண்டம், கரம், புருவம், உச்சி முதலிய பத்து இடங்களில் நாடியைப் பரீட்சிக்கலாம்.

மரண நாடிக் குறிகுணம்

பித்தமடங்கி னாற்பேசாதே போய்விடு,
எத்தியவையம் எழுந்திபுற் கிட்டாதே,
எத்தியவாத மெழும்பின் மருந்துசெய்,
எத்திய மூன்றினியல்பை யறிந்திடே

பித்தமடங்கினாலும், ஐயம் நாடி மட்டும் தனித்து மீறி நடந்தாலும் மருத்துவம் புரிவதில் பயனில்லை. வாதம் எழும்பின் மருந்து கொடு.

நோய்

உடலானது நன்றாக இருந்தால் தான் வாழ்வில் இன்பம் நிலவும். உடல்நலம் குன்றினால் நோய் உண்டாகும்.

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே (724)

உடம்பு அழிந்தால் உயிரும் அந்த உடலை விட்டு நீங்கிவிடும். எனவே உடம்பை அழியாது காக்கும் வழியை நான் அறிந்து கொண்டேன் என்கிறார் திருமூலர்.

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண்டான் என்று
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே (725)

உடலுக்கும் உயிருக்கும் இடையேவரும் பிணக்குதான் நோய்.

கற்பம்

கற்பத்தை யுண்டால் காயம் அழியாது
கற்பத்தி னாலே காணலாம் கைலையை
கற்பத்தி னாலே காணலாம் சோதியை
கற்பத்தி னாலே காலையுங் கட்டிடே

என்ற பாடலின்மூலம் கற்ப மருந்தை உண்டால் நோயின்றி வாழலாம் என அறியலாம்.

நூறு மிளகு நுகரும் சிவத்தின்நீர்
மாறும் இதற்கு மருந்தில்லை மாந்தர்காள்
தேறி இதனைத்தெளி உச்சிக் கப்பிடின்
மாறும் இதற்கு மறுமயி ராமே (847)

நூறு மிளகு தருகின்ற மருத்துவப் பண்பினைச் சிவநீரான அமுதநீர் அளித்துவிடும். சிவநீர் என்ற அமுதநீரை அமுரிநீர் (சிறு நீர்) என்று பின்வரும் பாடலில் தெளிவுபடுத்தியுள்ளார்.

உடலிற் கிடந்த உறுதிக் குடிநீர்
கடலிற் சிறுகிணற் றேற்றமிட் டாலொக்கும்
உடலில் ஒருவழி ஒன்றுக் கிறைக்கில்
நடலைப் படாதுயிர் நாடாலு மாமே.

தெளிதரு மிந்தச் சிவநீர் பருகில்
வளியுறு மெட்டின் மணமும் ஒடுங்கும்
களிதருங் காயங் கனகம தாமே.

கரையரு கேநின்று கானல் உவரி
வரைவரை என்பர் மதியிலா மாந்தர்கள்
நரைதிரை நீக்கி நுகர வல்லார்க்கு
நரைதிரை மாறு நமனுமங் கில்லையே

அஞ்சு யுகத்தின் அழியாமல் காயந்தான்
மிஞ்சிய கற்பம் விளம்பினோம் நூற்றெட்டுத்
தஞ்ச முறவே தாந்தின்ன வல்லோர்க்கு
பஞ்சு நரைபோய்ப் பதிந்தோங்கி வாழ்வரே (980)

மேற்கண்ட பாடலின்மூலம் கற்பமருந்துகள் நூற்றெட்டு எனத் தெளிவுபடுத்துகிறார்.

நந்தி வல்லாரை நாலாறு மாதமும்
பிந்தி கடுக்காய் பரிசோர் வருஷமும்
சிந்தித்துக் கொள்ளையில் சோகரி சாலைநெய்
வந்தித்திர சயலால் வாங்கு வழலையே
(திருமூலர் தீட்சாவீதி 17)

வாங்கு மண்டலம் வாதி விரிசிகொள்
தாங்கு கரந்தையைத் தாக்கிடு மண்டலம்
பாங்காம் நற்சீந்தில் பரிசிலோர் மண்டலம்
நீங்காத வேம்பு மண்டலம் நேரிடே (திருமூலர் தீட்சாவீதி 18)

மேற்காணும் பாடலில் ஆறு கற்ப மருந்துகளை, (வல்லாரை, கடுக்காய். கரிசாலை, சீந்தில், வேம்பு) ஏக மூலிகை தத்துவத்தில் பக்குவமாக்கி ஒரு மண்டலம் உட்கொள்ளச் சொல்கின்றார்.

அட்டாங்க யோகம்

இயம நியமமே எண்ணிலா ஆதனம்
நயமுறு பிராணா யாமம்பிரத் தியாகாரஞ்
சயமிகு தாரனை தியானஞ் சமாதி
அயமுறும் அட்டாங்க மாவது மாமே

இயமம் - தீதகற்றல்
நியமம் - நன்றாற்றல்
ஆதனம் - இருக்கை
பிராணாயாமம் - வளிநிலை அல்லது உயிர்ப்பு
பிரத்தியாகாரம் - தொகைநிலை
தாரணை - பொறைநிலை
தியானம் - நினைதல்
சமாதி - நொசிப்பு

மேற்கண்ட அட்டாங்கயோகத்தில் இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம் ஆகிய நான்கு நிலைகளைக் கடைபிடித்தாலே நரை, திரை, மூப்பு, பிணி இன்றி வாழலாம் எனக் கூறுகிறார்.

ஆனால் சித்தர்கள் அட்டாங்க யோகத்தில் உள்ள எட்டு நிலைக ளையும் கடைபிடித்து நரை, திரை, மூப்பு, பிணி இவற்றுடன் சாக்காடு இன்றி வாழ்ந்தனர்.

முடிவுரை

மேற்கண்ட விளக்கங்களிலிருந்து திருமந்திரத்தில் மருத்துவமும் விளக்கப்பட்டுள்ளது என்பதை அறியலாம்.

13. திருமந்திரம் அளிந்த அகத்தவம் எட்டு



முனைவர். நா.தாமோதரன,
MA.MA.MA.M.Phil,MA.,P.hd
திருமந்திரச் சொற்பொழிவாளர், உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, சிதம்பரம் பிள்ளை மகளிர் கல்லூரி
மண்ணச்சநல்லூர் அஞ்சல், திருச்சி, தமிழ்நாடு,
இந்தியா. அலைப்பேசி.9244604341

திருமந்திரத் திறவுக்கோலால் திரைக்கடல் சூழ்ந்த நரை, பிணி, மூப்புலகில் நிறைகளை நெறிகளைக் கற்றுத்தேர முனைந்துள்ள மாமணிகளே! வாழ்த்துக்கள்.

மனிதர்களை நெறிப்படுத்தி வழிநடத்தவே இறைவழிபாடு ஏற்பட்டது. இறைவழி மார்க்கங்களில் முக்கியமானவை சைவம், வைணவம் எனலாம். மார்க்கங்களில் இறைவழிபாட்டிற்குத் துணைநிற்பதற்காக உருவாக்கப்பட்ட ஆகமங்களில் தலையாயது சிவகாகமம். சீவர்கள் சிவனை அடையும் மார்க்கத்திற்குச் சாத்திரமும் தோத்திரமும் வழிநடை வாகனமாகச் செயல்ப்படுகின்றன.

பன்னிருதிருமுறைகளில் திருமந்திரம் மட்டுமே சாத்திர நூலாகப் பேசப்படுகின்றது. அவமே செய்து உழன்று திரிகின்ற உயிர்கள் உய்வதற்குரிய வழி தவம். தவப்பயன் எயதுதற்கு அடிகோல்வது மந்திரங்கள் என்றால் அதுமிகையல்ல. மந்திர நூல்களுக்கெல்லாம் தாய் நூலாக விளங்கி, சிகரமாக நிற்பது திருமந்திரமே. இந்நூல் யோகம், கன்மம், கிரியை, ஞானம் பற்றிக் கூறுவதுடன் முக்கரணத் தூய்மையுடன் யுவமானப் பவத்தைச் சிவமாக்கும் முயற்சிக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காகத் திகழ்கின்றது.

புறவுலகிலுள்ள புறத்துயர்களையும் அதனால் ஏற்படும் மனமாசுகளையும் நீக்கிட அகத்தவம் அவசியம் மகத்துவம் பொருந்திய அகத்தவத்தை மட்டும் இக்கட்டுரையில் நோக்குவோம். திருமந்திரம் மூன்றாம் தந்திரத்திலுள்ள அகத்தவம் எட்டு என்ற தலைப்பில் 533 ஆம் செய்யுள் முதல் 545 ஆம் வரை அமைந்துள்ள செய்யுள்கள் சிறநெல்லையாக எடுத்துக்கொள்ளப்பட்டு அவற்றுக்குக் கருத்துரைகள் கூறி ஆராய்ப்பட்டுள்ளன..

அகத்தவம் எட்டு (அட்டாங்க யோகம்)

உரைத்தன அவற்கு அரிய ஒன்று மூடிய
நிரைத்த இராசி நிறைமுறை எண்ணிப்
பிரைச்சதம் எட்டும் பேசியே நந்தி
நிரைத்த இயமம் நியமஞ் செய்தானே.

கருத்துரை: அட்டாங்க யோகம் என்பது உடலிலுள்ள பௌதீக புள்ளிகளை உணர்ந்து பேரண்டத்துடன் தொக்கொள்ளும் முயற்சியாகும். இதில் முதல்முயற்சி சுவாசத்தினை நெறிப்படுத்துதல் எனலாம். பதினாறு மாத்திரையளவு பூரகித்துப் பன்னிரெண்டு மாத்திரையளவு ரேசகிக்கும் மற்றவர் போலில்லாமல் பதினாறு மத்திரையளவுமே பூரகிக்கும் முறை கூறப்பட்டுள்ளது. இதற்கு முதற்கண் இயம நியமங்களை அதாவது தீமைகளை ஒதுக்கி, நல்ல வழிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

செய்த இயம நியமஞ் சமாதிசென்று
உய்ய பராசத்தி உத்தர பூருவம்
எய்த கவச நியாசங்கள் முத்திரை
எய்த உரைசெய்வன் இந்நிலை தானே.

கருத்துரை: தியானயோகம் பழகுவதற்கு முன்பான முன்முயற்சியாகச் சில ஏற்பாடுகனைச் செய்து நன்நெறி வழியாகத் தன்னை நெறிப்படுத்திக் கொள்ளக் கூறுப்பட்டுள்ளன.

அந்தெறி இந்நெறி ன்னாது அட்டாங்கத்
தன்நெறி சென்று சமாதியிலே நினமின்
நன்நெறி செல்வாககு ஞானத்தில் ஏகலாம்
புன்நெறி யாகத்திற் போக்கில்லை யாகுமே

கருத்துரை: தியானம் என்ற பெயரிலும் யோகம் என்ற பெயரிலும் வணிக சோக்கில் நடத்தப்படும் இயக்கங்கள் காட்டும் தவறான வழி செல்லாமல் அட்டாங்க யோகம் என்னும் நல்நெறியைக் கடைப்பிடித்து வாழ்வோமாகில் ஞானம் என்ற இறைவுணர்வை அடையலாம்.

இயம நியமமே எண்ணிலா ஆதனம்
நயமுற பிராணயாமம் பிரத்தியாகாரம்
சயமிகு தாரணை தியானஞ் சமாதி
அயமுறும் அட்டாங்க மாவதுமாமே.

கருத்துரை: தீதகற்றல் என்ற இயமம், நன்றாற்றல் என்ற நியமம், அளவிலா இருக்கை என்ற ஆசனம், வளிநிலை என்ற பிராணாயாமம், தொகைநிலை என்ற பிரத்யாகாரம், பொறைநிலை என்ற தாரணை, ஒன்றுதல் என்ற தியானம், நொசிப்பு என்ற சமாதி ஆகிய எட்டும் அட்டாங்க யோகம் என்று அட்டாங்க யோகத்திற்கு இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

தீதகற்றல் (இயமம்)

எழுந்துநீர் பெய்யினும் எட்டுத் திசையுஞ்
செழுத்த ணியமங்கள் செய்மினென் றண்ணல்
கொழுந்தண் பவளக் குளிர்சடை யோடே
அழுந்திய நால்வர்க் கருள்புரிந் தானே. (535)

கருத்துரை: சிவபெருமானை விட்டு நீங்கா நந்திகள் சனகாதி முனிவர்களாகிய நால்வராவர். அவர்கள் சென்ற சனனத்தில் செய்த

நற்செயல்களினால் இச்சனனத்திலும் நற்செயல்களைச் செய்தால் இறைப்பேறு கிடைக்கும் அத்தலைவர்கள் நால்வரும் நியமத்திடை நின்றால் மக்கள் எல்லோரும் அவ்வாறே வாழ்வார்கள்.

கொல்லான்பொய் கூறான் களவிலான் எண்குணன்
நல்லான் அடக்கமுடையான் நடுச்செய்ய
வல்லான் பகுத்துண்பான் மாசிலான் கட்காமம்
இல்லான் இயமத் திடையின் நின்றானே (536)

கருத்துரை: கொலை, பொய், களவு, அடக்கமின்மை, சார்புடைமை, பகிர்ந்துண்ணாமை, குற்றமுடைமை, கட்காமம் ஆகிய எண்வகைத் தீமைகளை அகற்றி வாழ்தல் வேண்டும்

நன்றாற்றல் (நியமம்)

ஆதியை வேதத்தின் அப்பொருளானைச்
சோதியை அங்கே சுடுகின்ற அங்கியைப்
பாதியுள் மன்னும் பராசக்தி யோடுடன்
நீதி உணர்ந்து நியமத்த னாமே. (537)

கருத்துரை: எல்லாப் படைப்பிற்கும் முதல் காரணமாகவும் தமிழ் வேத ஒலிகளுக்கு முடிவில்லாத ஈற்றுப்பொருளாகவும் விளங்கிடும் சிவம் அகன்ற பேரொளியாக இருக்கின்றார். அவர் அனலாகவும் பெண் கூறாகவும் திகழ்கின்றார். இந்த உண்மையினை உணர்ந்து கொண்டோர் நீதியைத் தெரிந்தவர்கள் ஆகின்றனர். திருவருள் முறைப்படி இறைவனைக் கண்டு வணங்குபவர்கள் அகத்தவம் என்ற யோகம் கைவரப்பெற்றவர்கள்

தூய்மை அருளுண் சுருக்கம் பொறை செவ்வை
வாய்மை நிலைமை வளர்த்தலே மற்றிவை
காமம் களவு கொலையெனக் காண்பவை
நேமீரைந்தும் நியமத்தானாமே (538)

கருத்துரை: உள்ளும் புறமும் தூய்மையாக இருத்தல், அருளுடன் வாழ்தல் ஊனைச் சுருக்கிச் சிக்கனமாக இருத்தல், பொறுமை, செம்மை, வாய்மை, மானம், காமகற்றல், களவு,கொலை அகற்றல் ஆகிய பத்து நன்நெறிகளே நியமம் எளப்படும்.

தவஞ்செபஞ் சந்தோடம் ஆத்திகந் தானஞ்
சிவன்றன் விரதமே சித்தாந்தக் கேள்வி
மனஞ்சிவ பூசையொண் மதிசொல்வீர் ஐந்து
நிவம்பல செய்யிள் நியமத்தா னாமே. (349)

கருத்துரை: தவம் செய்தல், செபம் செய்தல், இறையருளை எண்ணி மகிழ்தல் ஆன்மீக அன்பர்களுக்குத் தானங்கள் செய்தல், சித்தாந்த நூல்களை ஓதல் ஓதுவித்தல், கேட்டல், கேட்பித்தல், நாடல் ஆகிய ஐந்தும் சால நினைந்து ஒழுகுபவர்களுக்கு நியமம் பத்தும் தானே வந்தடையும்.

இருக்கை (ஆதனம்)

பங்கயமாதி பரந்தபல் ஆதனம்
ஆங்குளவாம் இருநாலும் அவறறினுள்
சொங்கில்லையாகச் சுவத்திகம் எனமிகத்
தங்க இருப்பத் தலைவனுமாமே. -540

கருத்துரை: பங்கயம் என்னும் ஆசனம் முதலாக இருபத்தினான்கு ஆசனங்கள் உள்ளன. ஆவற்றுள் சிரமில்லாத எளிமையான சாத்தியப் படக்கூடிய ஆசனம் சுவத்திகம். இதுவே மற்ற ஆசனங்களுக்கு எல்லாம் தலையாய ஆசனம்.

ஓரணையப்பதம் ஊருவின் மேலேறிட்டார்
வலித்ததன் மேல்வைத்து அழுகுறத்
சீர்திகழ் கைகள் அதனைத்தன் மேல்வைக்கப்
பார்திகழ் பத்மாசனமென லாகுமே (541)

கருத்துரை: தாமரை இருக்கையைப்போன்ற இவ்வாசனம் எவ்வாறு செய்ய வேண்டும் என்று செயல்முறை விளக்கம் இப்பாடலின் கருத்தாக அமைந்துள்ளது. தோடைகள் இரண்டின்மேல் உள்ளங்கால்கள் இரண்டும் மலர்ந்திருப்பதுபோல் வைத்து அங்கைகள் இரண்டினையும் கோர்த்து மலர்ந்திருப்பதுபோல் வைதது, நன்றாய் நிமிர்ந்து அமர்ந்து மூச்சினை இயல்பாக செல்ல அதனைக் கவனித்து அமர்நதிருப்பது பத்மாசனம். இவ்வாசனம் கம்பீரமான தோற்றத்தைக் கொடுத்து சீரான சுவாசம் நலைத்திருக்கச் செய்யும்.

துரிசில் வலக்காலைத் தோன்றவே மேல் வைத்து
அரிய முழற்தாள் இளங்கையை நீட்டி
உருசியோடு உடல் செவ்வே இருத்திப்
பரிசு பெறுமது பத்திராசனமே. (542)

கருத்துரை: குற்றமற்ற வலதுக்காலை வெளித்தோன்றுமாறு இடத்தொடையின்மேல் வைத்து இரண்டு முழந்தாள்களிலும் அங்கைகளை மேல்நோக்கி அமைத்து நீட்டி அமாந்திருக்க வேண்டும். உடம்பு நிமிர்ந்து இருக்குமாறு செய்து பயிறல் பத்திராசமாகும். உடல் தளர்ச்சியின்றி கிளர்ச்சியுடன் இருக்கலாம்.

ஒக்க அடியினை உருவில் ஏறிட்டு
முக்கியுடலை முழங்கை தனில்ஏற்றித்
தொக்க அறிந்து துளங்காது இருந்திடில்
குக்குட ஆசனங் கொள்ளலுமாமே (543)

கருத்துரை: பாதங்கள் இரண்டையும் மாற்றித் தொடைகள்மேல் ஏறுமாறு வைத்து உடல் பளுவினை முழங்கைகள் தாங்குமாறு அமைத்து அசைவின்றி இருத்தல் குக்குடஆசனம் எனப்படும்.

பாத முழற்தாளிற் பாணிகளைநீட்டி
ஆதர வோடும்வாய் அங்காந்து அழகுறக்
கோதில் நயணங் கொடிமூக்கிலே உறச்
சீர்திகழ் சீங்காதனமெனச் செப்புமே (544)

கருத்துரை: முழங்கால்கள்மேல் கைளை வைத்து அவற்றின் மேல் கைகளை நீட்டி விருப்பமுடன் மேல்நோக்கி, பிறகு கண்கள் மூக்கின் நுனியினை நோக்குமாறு அமர்ந்திருப்பது சிங்காதனம்

பத்திரங் கோமுகம் பங்கயங் கேசரி
சொத்திரம் வீரஞ் சுகாதனம் ஓரேழு
முத்தம மாமுது ஆசனம் எட்டெட்டுப்
பத்தொடு நூறு பல ஆசனமே (545)

கருத்துரை: பத்திரம் முதல் சுகாதனம் வரை சொல்லப்பட்ட ஆசனங்கள் ஏழுடன் மாமுது ஆசனமும் சேர ஆசனம் எட்டு வகைப்படும். எட்டெட்டு அறுபத்து நான்கு (64) அடிப்படையான விருத்தி ஆசனங்கள் மனிதர்களுக்கானவை. அத்தோடு ஒரு பத்து (10) விலங்குகளுக்கானவை. அத்தோடு ஒரு நூறு (100) மற்ற பறவை, நீரில் வாழ்கின்ற உயிரினங்களுக்கானவை. ஆக நிகரமான ஆசனங்கள் நூற்றி எழுபத்தினான்கு ஆசனங்கள். இந்நிலை ஏழுவகை மதங்களுக்கும் உரியனவாம். உலகு ஒருமையோடு பேணும் தகுதி இயல்பாவே வரும்

வளிநிலை (பிராணாயாமம்)

ஐவர்க்கு நாயகன் ஆவ்வூர்த் தலைமகன்
உய்யக்கொண்டு ஏறுங்குதிரை மற்றொன்றுண்டு
மெய்யர்க்குப் பற்றுக் கொடுக்குக் கொடாதுபோய்ப்
பொய்யரைத் துள்ளி விழுந்திடுந் தானே. (546)

கருத்துரை: ஞானேந்தரங்களை இயக்குவது மனது. இந்தமனத்தை சுவாசப்பயிற்சியினால் கட்டுப்படுத்தலாம். அதன்மூலம் ஐம்புலன்களை முறையாக நெறிப்படுத்தலாம்.

ஆரியனல்லன் குதிரை இரண்டுள
வீசிப்பிடிக்கும் விரகறிவாரில்லை
கூரிய நாதன் குருவின் அருள் பெற்றால்
வாரிப் பிடிக்க வகப்படுந் தானே. (547)

கருத்துரை: ஆதிகுருவாகிய சிவனின் அதாவது இறைவனின் திருவருளினால் குருவருள் கிடைக்கும். இந்தக் குருவின் வழிக்காட்டுதலால் மனம் செமையுற்றால் பிராணாயாமம் சித்திக்கும்.

புள்ளினும் மிக்க புரவியை மேற்கொண்டாற்
கள்ளுண்ண வேண்டாந் தானே களிதருந்
துள்ளி நடப்பிக்குஞ் சோம்பு தவிர்ப்பிக்கும்
உள்ளது சொன்னோம் உணர்வுடை யோருக்கே (548)

கருத்துரை: பறவைகளைவிட வேகமாகச் செல்லக்கூடியது சுவாசம். இதனை குருவருளாலும் திருவருளாலும் முறைப்படுத்தினால் இறையடியை எய்திடும் பெரும்பேறு சித்திக்கும்.

பிராணன் மனத்தொடும் பேராதடங்கிப்
பிராண னிருக்கிற் பிறப்பு இறப்பில்லை
பிராணன் மடைமாறிப் பேச்சறிவித்துப்
பிராணனடைபேறு பெற்றுண் டீர்நீரே. (549)

கருத்துரை: பிராணனாகிய உயிர்ப்புச் சிவகுருவினருளினால் மனத்துடன் அடங்கி இருந்தால் உயிர்களுக்குப் பிறப்பு இறப்பு என்ற இருப்பிணியில்லை.

ஏறுதல் பூரகம் ஈரெட்டு வாமத்தால்
ஆறுதல் கும்பம் அறுபத்து நாலதில்
ஊறுதல் முப்பத்திரண்டு அதிரேசகம்
மாறுதல் ஒன்றின்கண் வஞ்சகமாமே. (550)

கருத்துரை: சிவசிவ என்ற அலகுகொண்டு சுவாசத்தினைக் கவனித்துச் செயல்பட்டால் எமபயம் இல்லை

வளியினை வாங்கி வயத்தில் அடக்கில்
பளிங்கொத்தக் காமம் பழுக்கினும் பிஞ்சாம்
தெளியக் குருவின் திருவருள் பெற்றால்
வளியினும் வேட்டு வளியனு மாமே. (551)

கருத்துரை: அகத்தவப் பயிற்சியினால் முதுமையிலும் இளமையுடன் இருக்கலாம். இளமையில் அகத்தவப் பயிற்சி மேற்கொள்வதனால் முதுமையைத் தள்ளிப்போடலாம்.

எங்கே இருக்கினும் பூரி இடத்திலே
அங்கே யதுசெய்ய ஆக்கைக்கு அழிவில்லை
அங்கே பிடித்தது விட்டளவுஞ் செல்லச்
சங்கே குறிக்கத் தலைவனு மாமே (552)

கருத்துரை: இடக்கலை வழியாய் பிராணவாயுவைப் பதினாறு மாத்திரை உள்ளே வாங்கி, அங்கே பிடித்து அறுபத்திநான்கு மாத்திரை கும்பகத்து முப்பத்தி இரண்டு மாத்திரை இரேசகம் செய்ய, அங்குச் சங்கொலி நாதங்கள் கேட்கும்.

ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்குங்
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாரில்லை
காற்னைப் பிடிக்குங் கணக்கறி வாளர்க்கு
கூற்றை யுதைக்குங் குறியதுவாமே. (553)

கருத்துரை: பிராணனின் அளவிடுகளை அறிந்தவர்களுக்கு மரண உபாதை இல்லை. மரணம் என்பது தள்ளிப்போகும். ஐயெழுத்து மந்திரஓசை சுவாசத்துடன் இயக்கிடும் கலை அறிந்தவர்கள் மரணமில்லாப் பெருவாழ்வு வாழ்வர்.

மேல்கீழ் நடுப்பக்க மிக்குறப் பூரித்துப்
பாலாம் இரேசகத்தால் உட்பதிவித்து
மாலாகி யுந்தியுட் கும்பித்து வாங்கவே
ஆலாலம் உண்டான் அருள்பெற லாமே (554)

கருத்துரை: சுவாசக் காற்றினை இந்திரிய ஆதாரங்களில் குரு கூறும் அளவுகள்படி கட்டுப்பாடுடன் பயிற்சிச் செய்யதால் யோகம் சித்திக்கும்

இட்டது அவ்வீடு இளகாது இரேசித்துப்
புட்டிப்படத் தசநாடியும் பூரித்துக்
கொட்டிப் பிராணன் அபானனுங் கும்பித்து
நட்டம் இருக்க நமனில்லை தானே (555)

கூட்டம் எடுத்துக் குடிபுக்க மங்கையர்
ஓடுவர் மீளுவர் பன்னிரண் டங்குலம்
நீடுவர் எண்விரல் கண்டிப்பர் நால்விரல்
கூடிக் கொளிற்கோல அஞ்செழுத் தாமே. (557)

கருத்துரை: பஞ்சாட்சர மந்தரத்திரத்தால் நான்கு அங்குல சுவாசித்தினைச் சேமிக்க இயலும். அவ்வாறு சேமித்து வாழ்பவர் இறைவனிடம் என்றேனும் ஒரு நாள் கூடி வாழ்வர். அதாவது சாமீப நிலை அடைவார்கள்.

பன்னிரண் டானை பகல்இரவுள்ளது
பன்னிரண டானையைப் பாகன் அறிகிலன்
பன்னரண் டானையைப் பாகன் அறிந்தபின்
பன்னிரண் டானைக்குப் பகல்இரவில்லையே. (558)

கருத்துரை: பன்னிரண்டு மாத்திரை உயிர்ப்பினை உணர்ந்து வீணாகும் நான்கு மாத்திரை வெளிவிடாது சேமித்தால் ஆத்ம தரிசனம் கிடைக்கும்

தொகை நிலை (பிரத்தியாகாரம்)

கண்டு கண்டுள்ளே கருத்துற வாங்கிடிற்
கொண்டு கொண்டுள்ளே குணம்பல காணலாம்
பண்டு கந்தெங்கும் பழமறை தேடியை
இன்று கண்டிங்கே இருக்கலு மாமே (559)

கருத்துரை: புறத்தே ஓடும் மனத்தை அகத்தே இருத்தப் பழகிக்கொண்டோமானால் முன்பு தேடிய நான்கு வேதங்களை அதாவது மறையின் அரும்பொருளாகிய சிவனைக் கண்டு கொள்ளலாம்

நாபிக்குக் கீழே பன்னிரண்டங்குலம்
நாபிக்கு மந்திரந் தன்னை அறிகிலர்
நாபிக்கு மந்திரந் தன்னை அறிந்தபின்
கூவிக்கொண்டு ஈசன் குடியிருந்தானே. (560)

கருத்துரை: மூலாதாரத்தில் அமைந்துள்ள குண்டலினி சக்தியைச் சுவாச நாசித் தொடங்கி பன்னிரண்டங்குலம் வரை அதாவது ஆதாரப்பீடம் வரை சுவாசக் காற்றை அனுப்பினால் அச்சக்தி எழுந்து சிர உச்சியிலுள்ள சிவத்துடன் ஒன்றலாம்.

பொறை நிலை (தாரணை)

கோணமனத்ததைக் குறிகொண்டு கீழ்க்கட்டி
வீணாத்தன்டு ஊடே வெளியுத்தான் ஆக்கி
காணாக்கண் கேளாச் செவியென்று இருப்பார்க்கு
வாணாள் அடைக்கும் வழியதுயாமே (568)

கருத்துரை: மனத்தை இந்திரிய வாயில்களிலிருந்து விடுவித்து நெறிப்படுத்தி, விழிமேல் நோக்கி இருந்தால் வாழ்நாள் வளரும்

மலையார் சிரத்திடை வானீர் அருவி
நிலையாரப் பாயும் நெடுநாடி ஊடே
சிலையார் பொதுவில் திருநடமாடுந்
தொலையாத ஆனந்தச் சோதி கண்டேனே. (569)

கருத்துரை: சிரசின்மேல் விளங்கிடும் சிற்சபையின் ஓசையோடுக் கூடிய சோதியைத் தாரணையில் காணலாம்.

மேலை நில்தினாள் வேதகப் பெண்பிள்ளை
மூலநிலத்தில் எழுகின்ற மூர்த்தியை
ஏல எழுப்பி இவளுடன் சந்திக்கப்
பாலனும் ஆவான் பார்நந்தி ஆனையே (570)

கருத்துரை: மூலாதாராத்தில் உள்ள சிவனைச் சகசராத்திலுள்ள சக்தியோடு சேரும்படி செய்தால் என்றும் இளமை நிலைக்கும்.

கடைவாசலைக் கட்டிக் காலை எழுப்பி
இடைவாசல் நோக்கி இனிதுள் இருத்தி
மடைவாயிற் கொக்குப்போல் வந்தித் திருப்போர்க்கு
உடையாமல் ஊழி இருக்கலுமாமே (571)

கருத்துரை: சுவாசத்தின் சூக்கும வாசல் வழியே இறையொளி வரும்வரை கொக்குபோல் காத்திருக்க வேண்டும். யோக மார்க்கத்தில் அவசரம் கூடாது. பொறுமை வேண்டும்.

கலந்த உயிருடன் காலம் அறியில்
கலந்த உயிரது காலின் நெருக்கங்
கலந்த உயிரது காலது கட்டிற்
கலந்த உயிருடல் காலமும் நிற்குமே (572)

கருத்துரை: உடலினுடைய காலஎல்லையை அதாவது ஆயுளை தாரணையினால் அறிந்து அதை வென்று நீண்டகாலம் ஆயுளை நீடிக்கலாம்

வாய் திறவாதார் மனத்திலோர் மாடுண்டு
வாய் திறப்பாரே வளியிட்டுப் பாய்ச்சுவர்
வாய் திறவாதார் மதிவிட்டு மூட்டுவர்
கோய் திறவாவிடிற் கோழையமாமே (573)

வாழலுமாம் பலகாலும் மனத்திடைப்
போழ்கின்ற வாயு புறம்படாப் பாய்ச்சுறில்
ஏழு சாலேகம் இரண்டு பெருவாய்தல்
பாழி பெரியதோர் பள்ளி அறையே (574)

கருத்துரை: பேசாஅனுபூதி பெற்றவர்களே சாலேகம் என்ற இறை அண்மையினைப் பெறுவார்கள். அதாவது இறைவன் இருக்குமிடத்தில் இருப்பார்கள்.

நிரம்பிய ஈரைந்தில் ஐந்திவை போனால்
இரங்கி வழித்திருந்து என்செய்வை பேதாய்
வரம்பினைக் கோலி வழி செய்குவார்க்குக்
குரங்கினைக் கோட்டை பொதியலுமாமே (575)

நொசிப்பு (சமாதி)

சமாதி குறித்து 598 முதல் 611 வரை பதினான்குச் செய்யுள்களில் திருமூலரின் ஆக்கப்பதிவுகள் உள்ளன. அட்டாங்கயோகத்தில் சமாதி என்பது சிகரநிலை. உயிர்கள் இறையிடம் ஒன்றி இரண்டற விரவிடும் நிலை. ஆதியில் அதாவது பிறப்பிற்கு முன்பிருந்து நிலைக்கு உயிரைக் கொண்டுச் செல்வது சமாதி எனக்கருதப்படுகின்றது.

இயமநியங்களை ஒழுங்காகச் செய்து கடமையாற்றி வாழ்ந்தால் சமாதி சித்திக்கும் நாதமும் விந்துவும் மேருவின் கண் ஒன்றாகிவிடில் அந்தமில்லா சுந்தரச் சோதியினை அறியலாம் மனம் செம்மையானால் உயிர்க்காற்று இயங்கும். அல்லாவிடில் இயங்காது. மனத்துள் இறையினைக் கண்டு மகிழ்வு கொண்டிருப்பவர்களுக்கு மனவொடுக்கம் ஏற்படும். சுவாசத்தினைச் சுழுமுனையில் கட்ட வல்லார்கள் கூபத்தை உரைக்க மாட்டார். கண்டக்கூபத்தில் வற்றாத அருள் ஊற்று தரும் அமுத்தினைப் பருகிடுவார். மூலாதாரத்திலுள்ள மூக்கூட்டுச் சக்தியின ஆக்ஞையிலுள்ள மூக்கூட்டுச் சக்தியுடன் இணைக்க வல்லவர்கள் மேலை வாசல் வழியைக் காணும் திறன் பெறுவர். இவர்களுக்கு மரணப்பயமில்லை.

நிறைவுரை: அட்டாங்க யோகத்தில் பிரத்யாகாரம், தாரணை, தியானம், சமாதி என்ற் நான்கு யோங்களும் குருமகமாக அணுக வேண்டிய யோகங்கள். மிகந்தக் கவனமுடனும் எச்சரிக்கையுடனும் செய்ய வேண்டியப் பயிற்சிகளாகும். மனிதன் மனிதநேயத்துடன் வாழும் வாழ்வியல் சிந்தனையே கருதியே திருமூலர் அட்டாங்கயோகம் என்ற தந்திரத்தை அமைத்துள்ளார் எனலாம்.

சித்தர்கள் வழிமுறைகளை நித்தமும் பயின்ற மனிதர்கள் தெய்வநிலை எய்த இயலும். அற்புத உண்மையினை உலகிற்கீந்த திருமூலரின் தொலைநோக்குத் திறன் போற்றற்குரியது.

14. திருமந்திரத்தில் முழுமையான முதல்வன்

(அடிமுடி தேடல்)



மீ.கோமதி,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை.
சிதம்பரம் பிள்ளை மகளிர் கல்லூரி,
மண்ணச்சநல்லூர், திருச்சி மாவட்டம் - 621 005
அலைபேசி எண்: 89031 86484

முன்னுரை

ஆகமங்களில் தலையாயது சைவாகமம். சைவத்தின் திரட்சி பன்னிருத் திருமுறைகளில் திருமந்திரம் ஒன்றே சாத்திர நூல் மற்ற பதினோரு நூல்கள் தோத்திர நூல்கள். தொல்காப்பியர் கூறும் மந்திரம் தானே மறையோர் தேயம் என்ற சொல்லடை திருமந்தித்திரத்தைக் குறிக்கும் எனலாம். மூவாயிரம்தமிழ் என்று திருமூலரே கூறுகின்றார். அப்பெருங்கடலில் ஒரு அலைத்திவளையை எமது சிறுக்கரத்தினால் எடுத்து இப்பெருமைமிகு மாநாட்டு மலருக்குக் கட்டுரையாக ஈங்குச் சமர்ப்பித்துள்ளேன்.

பிரமனும் மாலும் பிரானேநான் என்னப்
பிரமன்மால் தங்கள் தம்பேதைமையாலே
பரமன் அனலாய்ப் பரந்துமுன் நிற்க
அரனடி தேடி அரற்று கின்றாரே. (358)

செய்யுள் கருத்து: மூலசக்தியிலிருந்து தோன்றி இயங்குவன சீவ சக்திகள். இந்தச் சீவச் சக்திகள் தங்களுடைய பேதமையாலே தங்களுக்குள் யார் பெரியவர்? என்று வாதிடுகின்றன. அப்போது மூலசக்தி தன்முழுமையினைக் காட்டுகின்றது. சீவசக்திகள் ஆதியந்தமில்லா அந்த மூலசக்தியின் தொடக்கத்தையும் முடிவினையும் காணமுயல்கின்றன.

தத்துவம்: இவ்வுலகில் தோன்றுவன எல்லாம் அழிகின்றன. இது ஏன்? முடிவில் அழிவதாக இருந்தால் உயிர்கள் ஏன் தோன்றுகின்றன? தோன்றுவதற்குமுன் உயிர்கள் எங்கிருந்தன? அழிவதற்குப் பின் உயிர்கள் எங்குச் செல்கின்றன? என்று அறிவதே அடிமுடி தேடல்

அடிமுடி காண்பார் அயன்மால் இருவர்
படிகண்டிலர் மீண்டும் பார்மிசைக் கூடி
அடிகண்டிலேன் என்றச்சுதன் சொல்ல
முடிகண்டேன் என்றயன் பொய் மொழிந் தானே. (359)

செய்யுள் கருத்து: பிரமனும் விஷ்ணுவும் சிவபெருமானுடைய அடிமுடிகாண முயன்றனர். நீர் சக்தியாகிய விஷ்ணு கீழ்நோக்கிச்

செல்லும் பன்றி வடிவத்தில் பரமனின் அடியினைக் காண்பதற்குச் சென்றார். காற்று சக்தியாகிய பிரமன் மேல்நோக்கிச் செல்லும் அன்ன வடிவத்தில் பரமனின் முடியினைக் காண்பதற்குச் சென்றார். சோதியாய் நின்ற ஆதியின் திருவடியினைக் காண இயலவில்லை என்று விஷ்ணு கூறினார். அவர்தம் திருமுடியினைக் கண்டேன் என்று பிரமன் பொய் உரைத்தார்.

தத்துவம்: எந்த வகை உணவு எந்த வடிவத்தில் உண்டாலும் அது நீராகவும் காற்றாகவும் மாறுகின்றது. நீர் கீழ்நோக்கிச் செல்லும் இயல்புடையது. காற்று மேல்நோக்கிச் செல்லும் இயல்புடையது. நீர் தன்மையுடைய காக்கும் கடவுளான விஷ்ணு கீழ் நோக்கிச் செல்லும் பன்றி வடிவத்தினை எடுத்தார். இறைவன் திருவடியினைக் காண முற்பட்டார். ஆனால் அவரால் அத்திருவடியினைக் காண இயலவில்லை என்ற உண்மையைக் கூறினார். இதுவே சுத்த மாயை என்னும் விஷ்ணு மாயை ஆகும். காற்று தன்மையுடைய பிரமன் மேல்நோக்கிச் செல்லும் அன்ன வடிவத்தினை எடுத்தார் முடியினைக் கண்டேன் என்று பொய் உரைத்தார் இதுவே அசுத்தமாயை என்னும் லோக மாயை. சுத்த மாயை அடக்கத்தினை வெளிப்படுத்தும் அசுத்த மாயை ஆணவத்தினை வெளிப்படுத்தும்.

ஆமேலுலகுற நின்றஎம் அண்ணலுந்
தாமேழுலகில் தழற்பிழம்பாய் நிற்கும்
வானேழுலகுறும் மாமணி கண்டனை
நானே அறிந்தே வனாண் மையாலே. (360)

ஆமேழுலகம் என்பது நாவலந்தீவு, இறலித்தீவு, கிரவுஞ்சத்தீவு, குசைத்தீவு, இலவந்தீவு, தெங்குத்தீவு, புட்சரத்தவு என ஏழு தீவுகளைக் குறிக்கும். இதனைக் கீழ்க்கண்ட பிங்கல நிகண்டு பாடலால் அறியலாம்.

முதலது நாவலந் தீவே யுடைய, திறலியின் றீவே
கிரவுஞ்த் தீவே, குசையின் றீவே யிலவந் தீவே
தெங்கந் தீவே புட்கரந் தீவென றேத்திய பெருந்
தீ வேழிற்கும் பெயரே.

தாமேழுலகம் என்பது அதலம், விதலம், சுதலம், தராதலம், இரசாதலம், மகாதலம், பாதாளம் என்ற ஏழு வகை கீழுகங்களைக் குறிக்கும் அவை வருமாறு: இதனை மாணிக்கவாசகப் பெருமான் - பாதாளம் கீழ் ஏழினும் பாதமலர் என்று திருவெம்பாவையில் கூறியுள்ளார்.

வானேழுலகம் என்பது சுவர்க்கம், பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், ஜகலோகம், தபோலோகம், சத்தியலோகம் என்ற ஏழவகை மேலுலகங்களைக் குறிக்கும். இதனை அபிதான சிந்தாமணி (பக்.258) வாயிலாக அறியலாம்

செய்யுள் கருத்து: இயல்பாகவே ஏழு உலகங்களிலும் பரந்து நிற்பவர் சிவபெருமான். உலகமாகவே இருப்பவர் அவர். சிவன் வேறு உலகம் வேறல்ல. அவர் மேலுலகம் ஏழினும் கீழுலகம் ஏழினும் விரிவடைந்து ஒளிப்பிழப்பாக நிற்பவர். அவர் திருவருளால் தான் அவர் திருவடியினைக் காண இயலும்.

தத்துவம்: மனிதர்கள் உடலிலுள்ள தாதுக்கள் ஏழினையும் கட்டுப்படுத்துவது மனம். அது ஆணவமின்றி அடக்கமுடன் இருந்தால் தான் வாழ்க்கை வளமாகும்

ஊனாய் உயிராய் உணர்வங்கியாய் முன்னஞ்
சேணாய் வானோங்கித் திருவுருவாய் அண்டத்
தாணுவும் ஞாயிறுந் தண்மதியுங் கடந்து
ஆண்முழத் தண்டமுமாகி நின்றானே. (361)

செய்யுள் கருத்து: மனிதர்களின் உடம்பாகவும் அதனுள் இயங்கும் உயிராகவும் உயிருடன் இயக்கப்படும் உணர்வாகவும் உள்ள இறைவன் சூரியன் சந்திரன் ஆகிய கோள்களை எல்லாம் கடந்து, எவராலும் அணுக முடியாத அடிமுடி உடையவனாக, தூணாக உயர்ந்து நிற்பவர்.

தத்துவம்: பிண்டத்தை இயக்கும் ஈசனே அண்டத்தையும் இயக்குகிறார். பிண்டம் பிழை மாசுகளில்லாமல் இருக்க வேண்டுமானால் அண்டத்தில் விரிந்து பரந்துள்ள அந்தக் கருணைக்கடலை வந்தனை செய்து சிந்திக்க வேண்டும். முன்வினைப்பயனால் உணர்வுகள் எழுகின்றன. அவைகளைக் கடந்து நின்று, பிறவிகளிலிருந்து விடுவித்துக் காப்பவர் இறைவன்.

நின்றான் நிலமுழு தண்டத்துள் நீளியன்
அன்றே அவனடி அஞ்சினர் ஆய்ந்து
சென்றார் இருவர் திருமுடிமேற் செல
நன்றாங்கு கழலடி நாடவொண்ணாதே. (362)

செய்யுள் கருத்து: சிவனது புகழும் அவர்தம் அடியார்கள் புகழும் எவ்வாறு நீண்டுகொண்டே செல்கிறதோ அதுபோல இறைவன் தம்மொளி பிழம்பின் தூண் வடிவத்தினை நீட்டிக்கொண்டே சென்றார். இப்பிழப்பினைக் கண்டு அரியும் அயனும் அஞ்சினார். அதனை அளக்க முயன்று தோற்று நாணி திரும்பினர். இக்கருத்தைக் கீழ்க்கண்ட திருக்குறளால் அறியலாம்.

தத்துவம்: இறைவனது புகழும் அவர்தம் அடியார்தம் பெருமைகளும் அண்டமுற நீளும் தன்மையன. இதனைத் தேவர்கள் பொறுப்பதில்லை. அஞ்சவதற்குரிய இறைவனை எண்ணி அஞ்சாதவர்கள் பேதமுடைமையவர்கள் ஆவர். துஞ்சிடும் மாயை, துணை வராது. கடவுளைக் கண்டவர்களால் அவரைக் காட்ட இயலாது. இறை நம்முள் இருக்கிறார். அனைத்துமே இறை. அவ்விறை சக்தி எங்கும் நீக்கமற இருக்கின்றது.

சேவடி ஏத்தும் செறிவுடை வானவர்
மூவடி தாவென்றானும் முனிவரும்
பாவடியாலே பதஞ்செய் பிரமனுந்
தாவடியிட்டுத் தலைப்பு எய்து மாறே. (363)

செய்யுள் கருத்து: எங்கும் நீக்கமற விளங்கிடும் சிவபெருமான் திருவடியினை ஏத்துகின்ற வானவர்களும் மாபலியை வஞ்சித்து உலகளந்த திருமாலும், முனிவரும், வேதங்கள் பாடும் பிரமனும் அடிமுடி காணாது அலைந்து திரிந்தனர்.

தத்துவம்: எத்துணைப் பெரியவர்கள் ஆனாலும் தான் தனது என்ற எண்ணம் இருக்கும் வரை இறைவனின் திருவடியினைக் காண இயலாது. புவியாளும் பேரரசனாலும் தான் அரசன் என்ற எண்ணத்தினை நீக்கித் தான் வெறும் துரும்பு என்ற அடக்கம் வந்தால் இறையருளைப் பெற இயலும்.

தானக் கமலத் திருந்த சதுர்முகன்
தானக் கருங்கடல் ஊழித் தலைவனும்
ஊனத்தின் உள்ளே உயிர்போல் உணர்கின்ற
தானப் பெரும்பொருள் தன்மைய தாமே. (364)

செய்யுள் கருத்து: செந்தாமரையை உறைவிடமாகக் கொண்டு உறைந்திருக்கும் பிரமனுக்கும், கருங்கடலை உறைவிடமாகக் கொண்டு உறைந்திருக்கும் திருமாலுக்கும் ஊழித்தலைவனாகிய உருத்திர னுக்கும் அவரவர் உடம்பில் உயிராக இருப்பவர் சிவபெருமான். அனைவரையும் ஆட்டுவிக்கிறார்.

தத்துவம்: படைத்தல்., காத்தல், அழித்தல் ஆகிய அனைத்து இயக்கங்களுக்கும் மூலதாரமாக இருப்பவர் சிவபெருமான்.

ஆலிங்கனம் செய்து எழுந்த பரஞ்சுடர்
மேலிங்கனம் வைத்ததோர் மெய்நெறி முன்கண்டு
ஆலிங்கனம் செய்து உலகம் வலம்வருங்
கோலிங்கம் அஞ்சருள் கூடலுமாமே. (365)

செய்யுள் கருத்து:- உலகிலுள்ள அனைத்து உயிர்களையும் அரவணைத்து, அருள் செய்பவர் சிவபெருமான். அவர்தம் மெய்நெறி கண்டு 'சிவயநம' என்ற ஐந்தெழுத்தை அணைத்துக் கொண்டால் அந்தப் பெருமானுடன் இரண்டறக் கலந்துவிடலாம்.

தத்துவம்: மண், நீர், வெப்பம், காற்று, வெளி என்ற ஐம்பெரும் பூதங்கள் உயிர்களைத் தழுவிச் செல்கின்றன. இதைத் தேடி ஏன் அலைய வேண்டும்? இந்திரிய சுகங்களை விடுத்தால் இறைவனை அடையலாம்.

வாள் கொடுத்தானை வழிப்பட்ட தேவர்கள்
ஆள் கொடுத்து எம்போல் அரனை அறிகிலர்
ஆள் கொடுத்து இன்பம் கொடுத்துக் கோளாகத்
தாள் கொடுத்தானடி சாரகிலாரே. (366)

செய்யுள் கருத்து: வானவர்களுக்கு இறைவன் அறிவு என்ற வாளைக்கொடத்தார் இறைவனக்கு அடிமையாகி அவர்தம் திருவடி சேர்வதைப் பற்றி அவர்கள் சிந்திக்கவில்லை. வாள் என்ற இறைவன் கொடுத்த அறிவினைப் பயன்படுத்தவில்லை.

தத்துவம்: இறைவன் அறிவாகிய ஒளியைக் கொடுத்தார். ஆனால் நாம் அதனைப் பயன்படுத்தி அவரை அறிகிறோமா? அல்லது குறைந்தபட்சம் நம்மை நாம் அறிந்து கொண்டோமா? மனமாயையில் கிடந்து உழல்கின்றோம். இந்தத் தந்துவம் கந்தரநுபூதி ஐந்தாம் செய்யுளில் கூறப்பட்டுள்ளது.

மகமாயை களைந்திட வல்லபிரான்
முகமாறு மொழிந்து மொழிந்திலனே
ஆகமாயை மடந்தையர் என்றயரும்
சுகமாயையுள் நின்று தயங்குவதே — கந்தரநுபூதி-5

ஊழி வலஞ்செய்தங் (அங்கு) கோரும் ஒருவற்கு
வாழி சதுமுகன் வந்து வெளிப்படும்
வீழித் தலைநீர் விதித்தது தாவென
ஊழிக் கதிரோன் ஒளியை வென்றானே. (367)

செய்யுள் கருத்து: பல ஊழிக்காலங்கள் நல்லறிவுடன் வழிபட்ட ஒரு அடியாருக்குப் படைக்கும் தொழிலை மேற்கொள்ளும் பதவியினைக் கொடுத்தார். அவன் நான்முகனாகத் தோன்றினான். ஆலம் விழுதினைப்போல் உள்ள சடைமுடியின்கண் விளங்கும் வான்புனலை வேண்டும் என்று விண்ணப்பித்தான். எல்லா ஒளிகளையும் வென்று தனிப்பேரொளியாக நிற்கும் சிவபெருமான் தலைநீர் தந்தருளினார்.

தத்துவம்: எத்துணைப் பெரிய பதவியும் எவ்வளவு அதிகாரம் இருந்தாலும் அவற்றின்பால் பற்றின்றி இறைவனிடம் விண்ணப்பித்தால் வேண்டுவன வேண்டியவாறு அடையப் பெறலாம்.

நிறைவுரை

ஐம்பெரும் கூறுகளுக்கும் (பஞ்சப்பூதங்கள்) ஐந்துவகை வெளிப்பாடுகளுக்கும் முழுமுதற் கடவுள். முக்கண் முதல்வன். எல்லாத் தேவர்களுக்கும் உயர் மேலாண்மையுடையப் பரம்பொருள் அத்திருவருள் தெய்வம். ஈரேழு பதினான்கு உலகங்களுக்கும் அப்பாற்பட்ட முதல்வன் சிவபெருமான். சிவமாகவும், சக்தியாகவும் சிவசக்தி வடிவமாகவும் உள்ளவன் இறைவன். மண்ணிலும் விண்ணிலும் என்னிலும் உள்ள பரமன் எல்லாமாக விளங்கிடும் முதல்வர். அவரே முழுமையான சிர்நிறை அருட்செறிவு. இங்ஙனம் சிவப்பெருமான் முழுமையான முதல்வன் என்பதைத் திருமந்திரம் காட்டுகின்றது.

15. திருமந்திரத்தில் நிலையாமை

ப. ராஜசுலோச்சனா
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வுத்துறை
சிதம்பரம்பிள்ளை மகளிர் கல்லூரி, மண்ணச்சநல்லூர்
திருச்சி மாவட்டம், தமிழ்நாடு.
கைபேசி: 9751910593

இலக்கியங்கள் கலைக்காக மட்டுமின்றி சமயக் கருத்துக்களையும், அறக்கருத்துக்களையும் வாழ்வியல் நெறிமுறைகளையும் உணர்த்துகின்றன. இவ்வனைத்துக் கருத்துக்களையும் தன்னுள் கொண்ட ஒப்பற்றநூல் திருமந்திரம். இதன் ஆசிரியர் திருமூலர் ஆவார். இது சைவத் திருமுறைகளில் பத்தாம் திருமுறையாக வைத்துப் போற்றப்படுகிறது. 'காயமே இது பொய்யடா வெறும் காற்றடைத்தப் பையடா' என்ற சித்தர் வாக்கிற்கு இணங்க, திருமந்திரத்தில் காணப்படும் நிலையாமைக் கோட்பாடுகளை இக்கட்டுரை வெளிப்படுத்த முயல்கிறது.

நிலையாமைச் சிந்தனைகள்: தமிழ்இலக்கியத்தில் பல்வேறு இலக்கியங்கள் நிலையாமைக் கொள்கைகளை எடுத்துக்கூறுவதாக உள்ளது. அதில் திருக்குறள், நாலடியார், திருவெண்பா, திருமந்திரம் என எண்ணற்ற நூல்கள் உள்ளன. அதில் திருமந்திரத்தில் கூறப்படுகின்ற நிலையாமைக் கருத்துக்கள் சிறப்பானதாகக் காணப்படுகிறது. இக்கருத்தினை மக்களுக்கு உணர்த்த திருமூலர் கையாண்ட உவமை நலன்கள் சிறப்பானதாகக் காணப்படுகிறது.

நிலையாமையின் வகைபாடுகள்: நிலையாமையை ஆன்றோர் பெருமக்கள் நான்கு வகைகளாகக் கூறுகின்றனர். அவை யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை, உயிர் நிலையாமை என்பனவாம். இந்த நான்கு நிலையாமைகளையும் திருமந்திரம் வாழ்வியல் நெறிமுறைகளுடன் கலந்த தத்துவங்களாக விளக்கிக் காட்டியுள்ளது. நிலையாமைக் கோட்பாடுகள் ஏனைய இலக்கியங்களில் எவ்வாறு காணப்படுகிறது என்று காண்போம்.

திருக்குறளில் திருவள்ளுவர் முப்பத்து நான்காவது அதிகாரமாக 'நிலையாமை' என்ற அதிகாரத்தினை அமைத்துள்ளார். இவ்வதி காரத்துள் மேற்குறிப்பிட்ட நான்கு வகையான (செல்வம், யாக்கை, நிலையாமை, உயிர்) நிலையாமைகளும் இடம்பெற்றுள்ளன என்பதை அறியமுடிகிறது. இதில் யாக்கை நிலையாமை கூறவந்த வள்ளுவப் பெருந்தகை மரணத்தை உறக்கத்தோடு ஒப்புமைப்படுத்தி விளக்கியுள்ளார். அவருடைய இக்கூற்று,

உறங்குவது போலும் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு (குறள்.339)

என்று குறிப்பிட்டு உள்ளார்.

திருமூலரைப் போன்றே ஏனைய சித்தர்களின் பாடலிலும் நிலையாமைக் கருத்துக்களைக் காணமுடிகிறது. சித்தர் ஒருவர் மனித வாழ்வின் இயல்பினைக் கூறும்போது,

நந்த வனத்தில் ஓர் ஆண்டி
நாலாறு மாதமாய் குயவனை வேண்டி
கொண்டு வந்தான் ஒரு தோண்டி
கூத்தாடி கூத்தாடி போட்டுடைத் தாண்டி (கடுவெளிச்சித்தர்)

என்ற பாடலின்மூலம் அச்சித்தரின் நிலையாமைக் கொள்கையை உணர முடிகிறது.

இரட்டைக் காப்பியங்களுள் ஒன்றான மணிமேகலையிலும் நிலையாமைக் கோட்பாடுகள் காணப்படுகின்றன. இந்த இளமைப் பருவமும், உடம்பும், பெருஞ்செல்வமும் நிலையற்றது. எனவே மாண்டார்க்கு இம்மை மற்றும் மறுமையில் அணி செய்ய வல்லது அறமே ஆகும்.

இம்மையும் நில்லா யாக்கையும் நில்லா
வளவிய வான்பொருள் செல்வமும் நில்லா
புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்
மிக்க அறமே விழுத்துணை ஆவது (மணி.22 (135-138)

இவ்வாறு எடுத்து இயம்புகிறது. இவைபோன்று எண்ணற்ற இலக்கியங்கள் எடுத்து இயம்பும் நிலையாமைக் கோட்பாடுகள் திருமந்திரத்தில் பல்வேறு நிலைகளில் விளக்கப்பட்டுள்ளது.

யாக்கை நிலையாமை: பிறக்கின்றபோதே மனிதனின் இறப்பும் நிர்ணயிக்கப்படுகின்ற ஒன்று, இறைவன் படைத்த இந்த உயிரானது மீண்டும் இறைவனையே சரணடைகிறது. அதுவரையில் இந்த உலகத்தில் அந்த உயிர் எண்ணற்ற உயிர்களோடு கலந்து அவற்றின் அன்பினைப் பெற்று வாழ்கிறது. ஆனால் அந்த உயிரிடம் செலுத்தப்படுகின்ற அன்பு யாவுமே, அந்த உயிர் யாக்கையோடு இணைந்து இருக்கும் நிலையில் மட்டுமே சாத்தியம். உடலைவிட்டு, உயிர் பிரிந்த நாளில், உடலைவிட்டு உயிர்பிரிந்தது போன்றே, அன்பு செலுத்தியவர்களின் மனத்தினை விட்டும் அவர்கள் பிரிந்து விடுகின்றனர் என்ற கருத்தினைக் கூறவந்த திருமூலர்,

ஊரெல்லாங் கூடி ஒழுக்க அழுதிட்டு
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுப்போய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிற் தார்களே (318)

என்று குறிப்பிடுகிறார். இந்தக் கருத்தினையே வலியுறுத்தித் திருவெண்பாவும்,

தொட்டுத் தடவி துடிப்பொன்றுங் காணாதே
வெட்டப் பிணமென்று பேரிட்டுக் - கட்டி
எடுங்களத்தா என்னாமுன் ஏழைமட நெஞ்சே
நெடுங்களத்தான் பாதம் நினை (திருவெண்பா 8)

என்று கூறுகிறது. ஏழாம் திருமுறையினை அருளிய சுந்தரரும்,

மணமென மகிழ்வர் முன்னே மக்கள் தாய்த்தந்தை
கற்றம் பிணமெனக் கடுவர் போர்த்தே

என்று குறிப்பிடுகிறார். ஒருவன் எத்துனைப் பெருஞ்செல்வந்தராயினும் இறப்பு என்ற ஒன்றினை யாவருமே அடையாமல் இருந்தது இல்லை. இதனை ஒரு பாடலின்மூலம் விளக்க வந்த திருமூலர் 'ஒருவன் தன்னுடைய அரும்பெரும் முயற்சியின் விளைவாகப் பெரும் செல்வத்தினை ஈட்டி ஓர் அரண்மனை ஒன்றினைக் கட்டினான். அவன் கொடைவள்ளலாகவும் இருந்ததால், தனது செல்வ வளத்தினால் அவன் பல்லக்கில் பயணம் செய்யும் தன்மை உடையவனாகவும் இருந்தான். அவனது உடம்பிலிருந்து உயிர் வெளியேறிய உடன் அவன் நான்குபேர் சுமக்கும் பல்லக்கில் பயணித்தான். அப்போது ஊரார் அவனைத் தலைவனே என்று கூவி அழைத்தபோதும் அவன் திரும்பி வருபவனாய் இல்லை என்பதைத் திருமூலர்,

மன்றத்தே நம்பிதன் மாடம் எடுத்தது
மன்றத்தே நம்பி சிவிகை பெற்றேறினான்
மன்றத்தே நம்பி முக்கோடி வழங்கினான்
சென்றத்தா வென்னத் திரிந்திலன் தானே (322)

என்ற பாடலின்வழி உணர்த்துகிறார். யாக்கை நிலையாமைக்கென்றே ஒரு தனிப்பிரிவினை எழுதிய திருமூலர், செல்வம் நிலையாமை பற்றியும் கூறியுள்ளார்.

செல்வம் நிலையாமை: மனிதனுடைய வாழ்வில் ஏற்றம், தாழ்வு என்பது இயல்பு. மனித மனமாது இன்றைய அளவில் சிற்றின்பத்தை மட்டும் நாடிச் செல்வதாக உள்ளது. இறைவனின் திருவடி என்ற பேரின்ப வாழ்வினை மறந்துவிட்டுச் செல்வத்தினைச் சேர்க்கும் முயற்சியால் ஈடுபட்டு உள்ளது. அத்தகைய அற்ப உயிர்களுக்குத் திருமந்திரம் அறிவுரை கூறுகிறது.

இறைவனின் திருவிளையாட்டில் நேற்றுச் செல்வந்தனாக இருந்த ஒருவன், இன்று செல்வத்தினை இழந்து நிற்கிறான். இது எதனைப் போன்றது எனின், வானத்தில் திரிகின்ற நிலவினது உருவமானது வளர்ந்தும் தேய்ந்தும் மாறிமாறி வருவதைப் போன்று உள்ளது. எனவே, இதனை மடநெஞ்சங்களுக்கு உணர்த்த,

இயக்குறு திங்கள் இருட்பிழம்பொக்கும்
துயக்குறு செல்வத்தைச் சொல்லவும் வேண்டா
மயக்கற நாடுமின் வானவர் கோனைப்
பெயற்கொண்டல் போலப் பெருஞ் செல்வமாமே (343)

இந்த மந்திரம் துணைசெய்கின்றது. இன்றைய காலத்தில் செல்வத்தினை வைத்து அனைத்துக் காரியங்களைச் செய்து முடித்துவிடலாம் என்ற இறுமாப்பில் இன்றைய மானுடவாழ்வு அமைந்துள்ளது. அத்தகைய உள்ளம் கொண்ட மனிதர்களுக்குப் பொருள்தேடி வாழ்வதே வாழ்வு என்பதனை அறிவுறுத்த வந்த திருமந்திரம், தன்னுடைய நிழலே தனக்கு உதவாத காலமும் வரும். அதுபோலத் தன்னுடைய செல்வமும் தனக்கே உதவாத காலமும் வரும் என்பதை,

தன்னது சாயை தனக்குத வாதுகான்

என்ற திருமந்திரத்தின் பாடல் கூறுகிறது. இக்கருத்தினை அப்படியே பிரதிபலிக்கும் விதமாக,

வெய்யிற்கு ஒதுங்க உதவா உடம்பின் வெறுநிழல்போல்
கையிற் பொருளும் உதவாது காணும் கடைவழிக்கே

என்று அருணகிரி நாதரும் கூறுவது இங்கே ஒப்பிட்டு எண்ணத்தக்கது ஆகும்.

இளமை நிலையாமை: இன்றைய காலகட்டத்தில் மனிதர்கள் தமது பெரும்பாலான நேரத்தினைத் தமது உடலினை ஒப்பனை செய்து கொள்வதற்கே செலவிடுகின்றனர். ஆனால் யாக்கை, செல்வம் இவற்றினைப் போன்றே இளமையும் நிலையாமை என்றே கருதப்படுகிறது. இதனை அறியாது இந்தப் பரந்த உலகத்தில் பக்குவமடையாத ஆன்மாக்கள் அலைந்து கொண்டுதான் உள்ளது. அறிவித்தால் அறியும் தன்மை கொண்ட உயிர்களுக்கு இத்தகைய உணர்வினை அறிவிக்க வந்த அரும்பெரும் நூல் திருமந்திரம். இதில் இளமை நிலையாமையைப் பல்வேறு உதாரணங்கள் மூலம் எளிமையாகக் கூறுகிறது.

ஒவ்வொரு நாளும் கிழக்கில் தோன்றும் சூரியன், தோன்றும்பொழுது இளமையாகத் தோன்றினாலும், நண்பகல் பொழுதில் இளமை நீங்கி இறுதியில் மாலைநேரத்தில் முதுமையாகிக் கருநிறத்துடன் மறைந்து விடுகிறது. இதனைப்போன்றே தாய்ப்பசுவின் உடலிலிருந்து வெளிவரும் கன்றானது சில ஆண்டுகளில் முதிர்ந்து அதுவும் தாய்ப்பசுவால் இறுதியில் மரணத்தைத் தழுவுகின்றது. தாவரங்களுக்கு ஒளிச்சேர்க்கை மூலம் உணவினை வழங்கும் சூரியனுக்கே இந்த நிலை என்றால் மனிதன் மட்டும் இதற்கு விதிவிலக்கு ஆகாது என்பதனை உணர்த்தும் திருமந்திரம்,

கிழக்கெழுந்து ஓடிய ஞாயிறு மேற்கே
விழக்கண்டுந் தேறா விழியிலா மாந்தர்
குழக்கன்று மூத்தெரு தாய்ச்சில நாளில்
விழக்கண்டுந் தேறார் வியனுலக கோரே (351)

இவ்வாறு உரைக்கின்றது. ஆடவரைப் பெண்கள் விரும்புவதற்குக் காரணம் அவர்களின் இளமைத் தோற்றமே ஆகும் என்ற கருத்தினை,

விரும்புவர் முன்னென்ன மெல்லிய மாதர்

என்கின்ற பாடல் சிறப்பாக விளக்குகிறது.

உயிர் நிலையாமை: இந்த உலகத்தினைப் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்கிற ஐந்தொழில்களைப் புரியும் இறைவனுக்கும் தோற்றம் முடிவு என்பது இல்லை. இதனைப் போன்றே உலகத்தில் பிறப்பெடுக்கின்ற உயிர்களுக்கும் தோற்றம், முடிவு என்பது இல்லை. இதனையே சாத்திர நூல்கள் 'பதியினை போல் பசு பாசம் அனாதி' என்று குறிப்பிடும். இறைவனைப் போன்றே அனாதியாக இருக்கின்ற உயிரும் நிலைத்த தன்மை உடையதன்று. அதுவும் ஒவ்வொரு உடலாக மாறி மாறிக் குடிபுகுந்து கொண்டுதான் உள்ளது. இதனைத் திருமந்திரம் விளக்கமாக விவரிக்கிறது. இதனை ஓர் உவமைமூலம் விவரிக்கிறார். 'நிலத்தின் உரிமையாளர் தன்னுடைய நிலத்தினை ஐந்து உழவருக்கு அளித்தார். அந்த ஐவரும் அந்த நிலத்தில் தன்னுடை சீரிய முயற்சிகளால் உழவினைச் செய்து இலாபம் ஈட்டினார். ஆனால் நிலத்தின் உரிமையாளர், அந்த நிலத்தினை அடுத்த ஆண்டு வேறு ஒருவருக்கு மாற்றித்தர எண்ணினார்' அதனைப் போன்றே உயிரானது ஓர் உடலுக்குச் சொந்தமன்று. அது பல உடல்களுக்கும் பொருந்தும் என்பதை

ஐவர்க் கொருசெய் விளைந்து கிடந்து
ஐவரும் அச்செய்கையைக் காத்து வருவார்கள்
ஐவர்க்கு நாயகன் ஓலை வருதலால்
ஐவரும் அச்செய்கையைக் காவல் விட்டாரே (362)

இந்த மந்திரம் குறிப்பிடுகிறது. இதில் நில உரிமையாளர் உயிருக்கும், ஐந்து உழவர்கள் உடலுக்கும் ஒப்புமையாகக் கூறப்பட்டு உள்ளது.

தொகுப்புரை: திருமந்திரத்தில் வெளிப்படும் நிலையாமைக் கருத்துகளைக் கற்கும் ஒருவனின் வாழ்வு அன்புகலந்த வாழ்வாக அமைகிறது. தான் ஒரு கருவி மட்டுமே என்பதை உணர்ந்து தன்வாழ்வினை ஒழுங்குப்படுத்திக் கொள்கிறான். ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களும் அவனைவிட்டு மெல்ல மெல்ல அகல்கின்றன. உலகப் பற்றிலிருந்து விடுபட்டு இறைவனின் திருவடியைச் சரணடைவதற்கு இந்நிலையாமைக் கோட்பாடுகள் அடிகோல்கின்றன. இவ்வாறாக நிலையாமைக் கோட்பாடுகள் திருமந்திரத்தில் வெளிப்படுகின்றன.

பார்வை நூல்கள்: 1.திருமூலரின் திருமந்திரவிருந்து - திருசம் பந்தம், 2. திருமந்திரம் - தருமை ஆதீனம் வெளியீடு, 3. மணிமேகலை - வர்த்தமானன் பதிப்பகம், 4. திருக்குறள் பரிமேலழகர் உரை, 5. தமிழ் இலக்கிய வரலாறு - கண்மணி பதிப்பகம்

16. திருமந்திரத்தில் குருவணக்கம்



லோ. கவிதா
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத் துறை,
சிதம்பரம்பிள்ளை மகளிர் கல்லூரி
மண்ணச்சநல்லூர், திருச்சி மாவட்டம் - 621 005.
தமிழ்நாடு. கைபேசி: 9943147095

சைவசமயக் கோட்பாடுகளின்படி குருவருள் இருந்தால்தான் திருவருள் கிடைக்கும். குரு என்பதற்கு விளக்கம் கூறும் கழகத்தமிழ் அகராதி, ஆசான், தந்தை, சோறு, நிறம், ஆசாரியன், ஞானாசிரியன், உபாத்தி யாயன், குருகுலத்தலைவன், ஆரியன், இறைவன், ஈசன், ஐயன், கடவுள் என்று பொருள் கூறுகின்றது. இத்தகைய பொருளில் இறைவனைக் குருவாக வணங்கியவர் மாணிக்கவாசகர்.

சைவசமய மடங்கள் குரு-சிஷ்யப் பரம்பரையைப் பெரிதும் போற்றி வருகின்றன. அவ்வகையில் சைவம் வளர்த்தவர்களில் முதலானவர் திருமூலர். இவரின் பத்தாம் திருமுறையாகிய திருமந்திரத்தில் குருபற்றியும், உபதேசம் பற்றியும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

திருமூலர் வரலாறு

திருமூலர் வரலாற்றை அறிந்து கொள்வதற்குத் துணைசெய்யும் நூல்கள் சுந்தரர் பாடிய திருத்தொண்டத்தொகை, நம்பி ஆண்டார் செய்த திருத்தொண்டர் திருவந்தாதி, சேக்கிழார் செய்த பெரியபுராணம், உமாபதி சிவாசாரியர் பாடிய திருத்தொண்டர் புராணசாரம் என்பன.

சுந்தரர்வாக்கின்மூலம் திருமூலர் என்ற பெயர் மட்டும் அறிய முடிகிறது. சுந்தரருக்குப்பின் வந்த நம்பி ஆண்ட நம்பிகள் பாடிய பாடல்கள்மூலம் திருமூலர் வரலாற்றை,

> **குடிமன்னும் சாத்தனூர்க் கோக்குலம் மேய்ப்போன் குரம்பைபுக்கு**
> **முடிமன்னு கூனல் பிறையாளன் தன்னை முழுத்தமிழன்**
> **படிமன்னு வேதத்தின் சொற்படியேவர விட்டென் உச்சி**
> **அடிமன்ன வைத்த பிரான் மூலன் ஆகின்ற அங்ஙணனே**

என்று அறியமுடிகிறது. சாத்தனூர்ப் பசுக்களை மேய்த்தவன் உடம்பில் புகுந்து சிவபெருமானைப் பற்றி வேதத்தில் கூறியதைத் தமிழில் பரப்பியவன் 'திருமூலர்' என்று இப்பாடல் எடுத்தோதுகின்றது. இதன்மூலம் திருமூலரின் வரலாற்றினை உணரலாம்.

திருமந்திரத்தின் சிறப்பு

பிறப்பாகிய கடலைக் கடத்தற்குத் திருமூலரின் திருமந்திரம் தெப்பமாகத் திகழ்கின்றது. இம்மந்திரம் திருமந்திரமாலை, மூவாயிரம்

தமிழ், தமிழ் மூவாயிரம் என்றெல்லாம் அழைக்கப்படுகின்றது.

மந்திரமாலை உறைப்பொருங் கூடி நின்றேதலும் ஆமே
மூலம் உரை செய்த மூவாயிரம் தமிழ்
முத்தி முடிவது மூவாயிரத்திலே

மேலும் தனிப்பாடல் ஒன்று திருமந்திரத்தின் சிறப்பை,

திருமந்திரமே சிவகதிக்கு வித்தாம்
திருமந்திரமே சிவமாம் - அருமந்த
புந்திக்குளே நினைந்து போற்றும் அடியார் தமக்குச்
சந்திக்கும் தற்பரமே தான்

என்று கூறுகிறது. அதாவது திருமந்திரம் சிவகதிக்கு வித்துமாய், சிவமாய், அடியார்கட்கு மேம்பட்ட பொருளுமாய் விளங்குவது என்று கூறுகிறது.

குருவாகத் திகழ்பவன்

நந்தி என்ற சொல்லை இறைவனுக்குத் தொண்டுகள் செய்யும் நந்திக்குக் கூறாமல், குருபரனாய் வரும் நந்தியாகிய முக்கண் மூர்த்தியே 'நந்தி' என்று கூறுகிறார் திருமூலர். அவரே குருவாக வந்து உபதேசம் புரிவார் என்பதை உபதேசத்தில்,

களிம்பறுத்தான் எங்கள் கண்ணுதல் நந்தி
களிம்பறுத்தான் அரள் கண் விழிப்பித்துக்
களிம்ப றுக்காத கதிர்ஒளி காட்டிப்
பளிங்கில் பவளம் பதித்தான் பதியே (114)

என வரும் பாட்டால் விளக்குகிறார். கண்ணுதல் நந்தியாகிய ஞானாசிரியன் திருவருட் சக்தியை மனத்தில் பதிய வைப்பவனாகத் திகழ்கிறான் என்றும் கூறுகிறார்.

குருவின் திருவடி மான்பு

ஆராய்ந்து பார்த்தால் ஞானாசிரியன் திருவடிகளே சிவமாக விளங்குவன ஆகும். அத் திருவடிகள் ஆன்மா சென்றடைவதற்குரிய வீடுகள் ஆகும். அனைவரும் சரண்புக வேண்டிய இடம் அந்தத் திருவடிகளே ஆகும். இந்த உண்மைகளை உள்ளத்தில் சிந்தித்தால் சிவலோகமும் அத்திருவடியே என்பது புலனாகும்.

திருவடியே சிவம் ஆவது தேரில்
திருவடியே சிவலோகம் சிந்திக்கில்
திருவடியே செல்கதியது செப்பில்
திருவடியே தஞ்சம் உள் தெளிவோர்க்கே (138)

ஆசாரியனது திருவடி சாதாரண திருவடி அன்று, அதனை எப்போதும் நினைப்பவர் எல்லாம் அடையப்பெறுவர் என்றும் திருமூலர் கூறுகிறார்.

ஞானகுரு

கண்ணுதற் பரமனே ஞானகுருவாக வந்து தமது இயற்கைத் திருவருளினால் ஆன்மாவைப் பக்குவப்படுத்துபவன் ஆவான். ஆராய்ந்து பார்த்தால் இந்த ஞானகுரு பாசஞானம் அற்று, கலசம் ஏற்படும்போதும், அதன் பொருட்டு மனம் நெகிழும் போதும், மலம் அகற்றி இறைவனை நாடச் செய்பவனே ஆவான் என்பது புலனாகும். இதனை,

விண்ணின் றிழிந்து வினைக்கீடாய் மெய்கொண்டு
தண்ணின்ற தாளைத் தலைக்காவல் முன்வைத்து
உண்ணின் றுருக்கியொ ரொப்பிலா ஆனந்தக்
கண்ணின்று கட்டிக் களிம்பறுத் தானே (113)

என்று திருமந்திரம் கூறுகிறது. சீவர்களாகிய நாம் ஞானகுருவின் திருவடிகளை வணங்கி அவன் திருமேனியைத் தரிசித்து, ஐந்தெழுத்தை ஓதவும் வேண்டும். இங்ஙனம் செய்தால் நந்தியாம் குருவினது பாதம் நம் மனத்தில் பதிந்து நிற்கும் என்பதைத் திருமூலர்,

சந்திப்பது நந்தி தன்திருத் தாளினை
சிந்திப்பது நந்தி செய்ய திருமேனி
வந்திப்பது நந்தி நாமம்என் வாய்மையால்
புந்திக்குள் நிற்பது நந்தி பொற்பாதமே (141)

என்று கூறுகிறார். மேலும் இத்துணையும் குருவின் திருவருளால் அன்றிக் கிடைத்தல் அருமை என்பதைத் திருமூலர்,

அருவன்றியே நின்ற மாயப் பிரானைக்
குருவன்றி யாவர்க்குங் கூட வொண்ணாதே

என்று அருளியுள்ளார்.

குருவின் பரிசத்தால் ஏற்படும் பயன்

உலோகங்களைப் பொன்னாக்கும் மருந்தில் அதில் கலக்கப்பட்ட பொருட்கள் எல்லாம் முதன்மையான பொன்னாக மாறுவதுபோல, நல்ல குருவானர் தீண்டிய உலகங்கள் யாவும் மும்மலங்களையும் (மூன்று அழுக்குகள் ஸ்ரீ ஆணவம், கன்மம், மாயை) ஒழித்து மங்கலமான முத்தி இன்பம் அடையச் செய்வான்.

பரிசன வேதி பரிசித்ததெல்லாம்
வரிசை தரும் பொன் வகையாகுமா போல்
குருபரி சித்த குவலயம் எல்லாம்
திரிமலம் தீர்ந்து சிவகதி ஆமே (2054)

என்று திருமூலர் குருவை வணங்கி மோட்ச நிலையை அடையும் வழிவகையைக் கூறியுள்ளார்.

குருஉபதேசம் கேட்டபின் கிடைக்கும் அட்டமாசித்திகள்

நாம் அட்டமாசித்தியை (அணிமா, மகிமா, கரிமா, லகிமா, அழியா உடல் அடையும் பிராத்தி, தானே பரகாயம் புகும் பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம்) அடைவதற்குச் சுற்றத்தாருடன் சூழ்ந்திருத்தல் கூடாது. எப்பொருளின்மீதும் ஆசை கொள்ளக்கூடாது. பொறுமை

வேண்டும். குரு உபதேசம் வேண்டும். பன்னீராண்டு பொறுமையோடு இருந்த பின்னே அட்டமாசித்தியைப் பெறமுடியும்.

நாடும் பிணியாம் நஞ்சனம் சூழ்ந்தக்கால்
நீடும் கலைகல்வி நீள்மேதை கூர்ஞானம்
பீடொன்றினால் வாயாச் சித்திபேதத்தின்
நீடுத்துரங்கேட்டல் நீள்முடி ஈர் ஆறே (646)

என்ற பாடலடிகளில் குருவிடம் உபதேசம் பெற்ற பின்னரே அட்டமாசித்தியைப் பெறமுடியும் என்கிறார்.

குருவழிபாடே சிறந்த வழிபாடு

சிவபெருமானைப் பல தேவர்கள் வழிபட்டனர். அப்பெருமானை மட்டும் வழிபட்டால் போதாது. மக்களாகிய நாம் அப்பெருமானை வழிபட்டுப் பலன் பெற வேண்டுமெனில் குருவையும் வழிபடுதல் வேண்டும்.

இறையை வழிபட்டார் எண்ணிலாத் தேவர்
அவனை வழிபட்டங் காமாறொன்றில்லை
அவனை வழிப்பட்டங் காமாறு காட்டும்
குருவை வழிபடின் கூடலும் ஆமே (304)

இறைவனின் திருவருளைப் பெறுவதற்கு அவ்விறைவனாகிய குருவின் திருவருள் வேண்டும் என்கிறார் மூலர்.

குருபக்தியே சன்மார்க்கம்

சன்மார்க்கம் என்பது நல்வழி ஒருநிலை தன்மை ஆகும். இதனை ஞானமார்க்கம் என்றும் கூறுவர். இம்மார்க்கத்தில் குருவைக் காணுதல், பூசித்தல், நினைத்தல், அவரைத் தொட்டுக் கும்பிடுதல், அவரது புகழைப் பரப்புதல், அவரது திருவடிகளைச் சிரமேல் கொள்ளுதல் ஆகிய இந்நெறியில் குருபக்தியைக் காட்டுபவர்கள் மோட்சமாகிய இன்பத்தை அடைவர். அதாவது குரு அதனை அனுபவிக்கச் செய்வார்.

தெரிசிக்கப் பூசிக்கச் சிந்தனை செய்யப்
பரிசிக்கக் கீர்த்திக்கப் பாதுகம் சூடக்
குருபக்தி செய்யும் குவலயத் தோர்க்குத்
தருமுத்திச் சார்பூட்டும் சன்மார்க்கம் தானே (1479)

என்று இறைவனைக் குருவாக எண்ணி வழிபட்டு நற்கதி அடையும் பேற்றினைத் திருமூலர் விளக்கியுள்ளார்.

நிறைவுரை

'பாலில் படுநெய்போல் மறைய நின்றுளன் மா மணிச் சோதியான்' என்னும் அப்பர் திருவாக்கிற்கிணங்க அனைத்து உயிரின் அகத்தும் மறைந்து விளங்கும் குருவாகிய இறைவனின் திருவருளைப் பெற்று முத்தி அடைவதற்குரிய சிறந்த வழியைத் திருமூலர் விளக்கியுள்ளார்.

திருச்சிற்றம்பலம்

17. திருமந்திரமும் சித்தர் பாடல்களும் - ஒப்பாய்வு



முனைவர் செ. அகிலாண்டேஸ்வரி
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத் துறை,
சிதம்பரம்பிள்ளை மகளிர் கல்லூரி
மண்ணச்சநல்லூர், திருச்சி 621 005. தமிழ்நாடு.
கைபேசி: 9842665597

உலகில் தோன்றி மறைகின்ற எண்ணற்ற உயிரினங்களுள் உயர்ந்ததாகக் கருதப்பெறுவது மானிடப்பிறவியே. தாவரச் சங்கமத்துள் உள்ள அனைத்துப் பிறவிகளையும் பிறந்திளைத்த உயிரானது, மனிதப்பிறவியை எய்தும்பொழுது உன்னதநிலை அடைகின்றது பிறப்பற்ற நிலையை எய்துவதற்கான வாய்ப்பும் மிகுதியாகின்றது. எனவேதான் ஔவையாரும் 'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்கின்றார். இவ்வரிய மானுடப்பிறப்பைப் பெற்ற பலர், தங்கள் பிறப்பின் நோக்கத்தை மறந்து மாயையில் உழல்வர். மாயையாகிய சேற்றில் உழல்கின்ற மாக்களைக் கைத்தூக்கிக் கரையேற்றக் காலந்தோறும் பல்வேறு ஞானிகளும், மகான்களும் தோன்றுகின்றனர். அத்தகைய ஞானியர் கூட்டத்தில் குறிப்பிடத்தக்கவர்கள் 'சித்தர்கள்' ஆவர்.

சித்தர்-விளக்கம்

'சித்தர்' என்ற சொல்லுக்குப் பல்வேறு விளக்கங்கள் தரப்படுகின்றன. அவற்றுள் சில பின்வருமாறு:

1. சித்தம், மனம், புத்தி, அகங்காரம் என்ற நான்கும் அந்தக் கரணங்கள் ஆகும். மனம், புத்தி, அகங்காரம் ஆகியவற்றின் செயல்பாட்டிற்குச் சித்தமே காரணம். இத்தகைய சித்தத்தை அடக்கியவர்கள் சித்தர்கள் எனப்பட்டனர்.
2. இறைவன் சத் (Reality), சித் (Intelligence), ஆனந்தம் (Bliss) என்ற முக்கூறாக விளங்குபவன் ஆவான். இவ்விறைவனை, 'சித்' வடிவமாக வணங்குபவர்கள் சித்தர்கள் ஆவர்.
3. 'சித்தி' என்ற சொல்லுக்கு 'நிறைவேறுதல்' அல்லது 'கைவரப்பெறுதல்' என்பது பொருளாகும். சிவயோகம் சித்தியானவர்கள் சித்தர்கள் எனப்பட்டனர்.

பதினெண் சித்தர்கள்

தமிழகத்தைப் பொறுத்தவரையில் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பே சித்தர்கள் வாழ்ந்து வந்தனர். எனினும் 'சித்து', 'சித்தர்' என்ற சொற்கள் சங்கஇலக்கியத்திலும், தொல்காப்பியத்திலும்

காணப்படவில்லை. தொல்காப்பியம் மற்றும் திருக்குறளில் காணப்படும் 'நிறைமொழி மாந்தர்' என்ற சொல் சித்தர்களைக் குறிப்பதாகக் கூறுகின்றனர் (நம் நாட்டுச் சித்தர்கள், டாக்டர் இரா.மாணிக்கவாசகம்)

சித்தர்கள் பலர் வாழ்ந்திருந்தாலும், தமிழகத்தைப் பொறுத்தவரை பதினெண்சித்தர்களே முக்கியத்துவம் பெறுகின்றனர். இப்பதினெண் சித்தர்கள் யார் என்பது குறித்துப் பல்வேறு கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. எனினும் அபிதான சிந்தாமணி, கலைக்களஞ்சியம் ஆகியன 'திருமூலரை' பதினெண் சித்தர்களுள் ஒருவராகக் கூறுகின்றது.

திருமூலர்-வாழ்வும் வாக்கும்

திருமூலர் வரலாற்றினை விளக்குவதாக நம்பியாண்டார் நம்பியின் 'திருத்தொண்டத் தொகை' மற்றும் தெய்வச் சேக்கிழாரின் 'பெரிய புராணம்' ஆகிய இரண்டும் அமைகின்றன.

கயிலாயத்திலிருந்து வான்வழியே ஒருமுறை சென்ற சிவயோகியார் ஒருவர், காவிரிக்கரையின் அருகிலுள்ள சாத்தனூர் என்ற ஊரில் பசுக்கூட்டங்கள் அழுது புலம்புவதைக் கண்டார். அப்பசுக்கூட்டத்தை மேய்த்து வந்த இடையனாகிய மூலன் இறந்துப்பட்டதால், அவை துன்புற்றன என்பதை உணர்ந்த யோகியார் கூடுவிட்டுக்கூடுபாய்தல் என்ற சித்து விளையாட்டின்மூலம் தன்னுயிரை மூலனின் உடலில் செலுத்தினார். அவ்வாறு செய்யும்முன்பு தன்னுடலை ஒருமரப் பொந்தில் பத்திரப்படுத்தினார். பின் மூலனாக எழுந்த யோகியார் பசுக்கூட்டங்களை நெறிப்படுத்தினார். வீட்டிற்குச் சென்ற மூலரை நெருங்கிய மனைவியிடம் தான் 'மூலனல்ல' என்று உரைத்தபொழுது, அவள் அவரை நம்பாது ஊர்ப் பெரியவர்களிடம் முறையிட்டாள். அவர்கள் அவரை வினவ, மூலர் தம்முடைய உடலைக் காண்பிக்க மரப்பொந்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு அவரின் உடலைக் காணவில்லை. இது இறைவனின் திருவிளையாடலே என்று உணர்ந்த மூலர், 'நீங்கள் என்னைத் தொடர்வது வீண்' என்று மக்களிடம் கூறிவிட்டுத் திருவாவடுதுறைக்குச் சென்றார். அங்கு யோகநிலையில் அமர்ந்து திருமந்திரத்தை இயற்றினார்.

இங்குக் கயிலாயத்திலிருந்து வான்வழியே வந்தவர் சுந்தரானந்தர் என்ற சித்தர் என்று கூறுவர். மேலும் 'கூடுவிட்டுக்கூடுபாய்தல்' என்பதும் சித்து விளையாட்டே. எனவே திருமூலரைச் சித்தர் மரபைச் சேர்ந்தவர் என்பர். சைவசமய சந்தானாசிரியர்களுள் ஒருவரான உமாபதி சிவாச்சாரியர் தாம்இயற்றிய 'திருத்தொண்டர் புராணசாரம்' என்ற நூலில் திருமூலரின் வாழ்வைப் பின்வரும் பாடல்மூலம் விளக்குகின்றார்.

கயிலாயத் தொருசித்தர் பொதியில் சேர்வார்
காவிரிசூழ் சாத்தனூர் கருதும் மூலன்

பயிலாநோ யுடன்வீ யத்துயர் நீடும்
பசுக்களைக்கண் டவன் உடலில் பாய்ந்து போத
அயலாகப் பண்டை உடல்அருளால் மேவி
ஆவடுதண் டுறை ஆண்டுக் கொருபாவாகக்
குயிலாரும் அரசடியில் இருந்து கூறிக்
கோகிலா வடகயிலை குறுகி னாரே

இதன்மூலம் திருமூலர் சித்தர்மரபில் வந்தவரே என்ற செய்தி உறுதியாகின்றது.

திருமூலரின் திருமந்திரம் மூவாயிரம் பாடல்களைக் கொண்டது. சைவச்சமயத் திருமுறைகள் பன்னிரண்டினுள் பத்தாம் திருமுறையாகப் போற்றப்பெறுவது. ஒன்பது தந்திரங்களையும் 232 அதிகாரங்களையும் கொண்டுள்ளது.

மூலன் செய்த மூவாயிரந் தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது
காலை எழுந்து கருத்தறிந்து ஓதிடின்
ஞானத் தலைவனை நண்ணுவர் அன்றே (99)

என்று திருமூலர் தம்நூல் குறித்துக் கூறுகின்றார்.

சித்தர்கள் தாம் அரிதின் முயன்று, தவவாழ்க்கை மேற்கொண்டு உணர்ந்த மெய்ஞானத்தை இலக்கியங்களாகப் படைத்துள்ளனர். இவ்விலக்கியங்கள் பல்வேறு தொகுப்புகளாக வெளிவந்துள்ளன.

சித்தர் இலக்கியப் பாடல்களுக்கும் திருமந்திரத்திற்கும் இடையே உள்ள ஒப்புமைத் தன்மையை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

(அ) தமிழ்

சித்தர்கள் தமிழில் பாடுவதைப் பெரும்பேறாகக் கருதினர். திருமூலர்

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாயத் தமிழ்ச் செய்யுமாறே (152)

என்று கூறுகின்றார்.

சித்தர் ஞானக்கோவையில் காணப்படும் ஞானக்கும்மி என்ற பகுதியில் ஒரு பாடலைக் காணலாம்.

அம்பிகை வாலை பதம்போற்றி - அருள்
ஆனந்தக் கும்மித் தமிழ்பாட
தும்பிமுகனுக் கிளையவ னாஞ்சிவ
சுப்பிர மணியனுங் காப்பாமே (ஞானக்கும்மி. பா.2)

(ஆ) உள்ளம் பெருங்கோயில்

சித்தர்கள் இறைவனைத் தனக்குள்ளே தேடி வெற்றி கண்டவர்கள். இறைவன் உள்ளத்தில் இருக்கின்றான் என்றார் திருமூலர்,

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரனார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே (1823)

அ.ஃதாவது உள்ளமாகிய மனமண்டலம் சிவனுறையும் கருவறை. ஊனாலாகிய உடம்பு ஆன்மாவின் ஆலயம். வள்ளலாகிய தலைவனைச் சென்று வழிபடுவதற்கு வாய் கோபுர வாசல். இவ்வாறு வழிபடுவோருக்கு ஞானேந்திரியங்கள் ஐந்து ஒளிபொருந்திய விளக்காகும் என்கின்றார்.

சிவவாக்கியரும் இறைவனை வெளியே தேடாது, உம் உள்ளத்தில் தேடுங்கள் என்கின்றார்.

ஆடுகின்ற எம்பிரானை அங்குமிங்கும் என்றுநீர்
தேடுகின்ற பாவிகாள் தெளிந்ததொன்றை ஓர்கிலீர்
காடுநாடு வீடுவிண் கலந்து நின்ற கள்வனை
நாடி ஓடி உம்முளே நயந்துணர்ந்து பாருமே

(சிவவாக்கியர் சித்தர் பாடல்கள் 266)

இறைவனை மனிதர்கள் தம்முள் தேடி அறிய வேண்டும் என்பதே சித்தர்நெறி. இக்கருத்தை வலியுறுத்துவதில் திருமூலரும், சித்தர் மகான்களும் ஒன்றுபடுகின்றனர்.

நிலையாமை

மக்களை நன்னெறிப்படுத்த எண்ணிய சித்தர்கள் உலக நிலையாமையை எடுத்தோதினர். நிலையில்லா உலகில் மனிதனுடைய இறப்பிற்குப் பிறகு அவனை அம்மனிதன் செய்த பாவ புண்ணியங்களே தொடரும் என்பதைப் பல்லாற்றானும் அறிவுறுத்தினர்.

பண்டம்பெய் கூரை பழகி விழுந்தக்கால்
உண்டஅப் பெண்டிரும் மக்களும் பின்செலார்
கொண்ட விரதமும் ஞானமும் அல்லது
மண்டி அவருடன் வழிநட வாதே (144)

பட்டினத்தாரும் தம்பாடலில் இறைவன்மீது கொண்ட அன்பே சதமென்று கூறுகிறார்.

நல்லார் இணக்கமும் நின்பூசை நேசமும் ஞானமுமே
அல்லாது வேறு நிலையுளதோ? அகமும் பொருளும்
இல்லாளும் சுற்றமும் மைந்தரும் வாழ்வும் எழில் உடம்பும்
எல்லாம் வெளிமயக்கே இறைவா, கச்சி ஏகம்பனே!

(பட்டினத்தார் - திருகச்சி ஏகம்பமாலை சித்தர் பாடல்கள், ப.118)

மனிதனை அவனது வினைச்செயல்கள் மட்டுமே பின்தொடரும் என்ற கருத்திலும், அதனை எடுத்தோதும் முறையிலும் சித்தர்களும் திருமூலரும் ஒன்றுபடுகின்றனர்.

மூடநம்பிக்கைகளைச் சாடுதல்

திருமூலர் தம்முடைய நூலின்மூலம் பெரும் சமுதாயப்புரட்சியைச் செய்துள்ளார். சித்தர்களும் தம்முடைய பாடல்களில் மூட நம்பிக்கை களைச் சாடுகின்றனர். சாதிமத வேறுபாடுகள் இல்லை என்பதை,

ஒன்றே குலம் ஒருவனே தேவன்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே (2104)

என்ற பாடல்மூலம் உணர்த்துகின்றார். இறைவன் ஒருவனே என்பதும் அவனை வணங்கும் அனைவரும் ஓர்குலம் என்ற கருத்தும் இப்பாடல்மூலம் உணர்த்தப்படுகின்றது.

சிவவாக்கியரும் இக்கருத்தை,

சாதியாவ தேதடா சலந்திரண்ட நீரெலாம்
பூதவாச லொன்றலோ பூதமைந்து மொன்றலோ
காதில் வாளி காரை கம்பி பாடகம்பொ னொன்றலோ
சாதிபேத மோதுகின்ற தன்மை யென்ன தன்மையே
(சிவவாக்கியர் சித்தர் பாடல்கள் ப.18)

என்ற பாடல் மூலம் உணர்த்துகின்றார்.

எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் நிறை என்பதைத் திருமூலரும், சித்தர்களும் வலியுறுத்துகின்றனர்.

மேலும் இறைவனை உள்ளன்புடன் வணங்கினால் மட்டுமே அடைய முடியும் என்பதைத் திருமூலர் தம்திருமந்திரத்தில் வலியுறுத்துகின்றார். எலும்பை அறுத்து வறுத்தாலும் உள்ளத்தில் அன்பு இல்லாவிட்டால் இறைவனை அடையமுடியாது என்றுமவர் கூறுகின்றார். மேலும் ஆலயங்கள் பல சென்று தீர்த்தங்கள் பல ஆடுவதில் எவ்வித நன்மையும் இல்லை. உள்ளத்தில் உள்ள தீர்த்தங்களை ஆடினால் மட்டும் வினை கெடும் என்றும் கூறுகின்றார்.

உள்ளத்தின் உள்ளே உளபல தீர்த்தங்கள்
மெள்ளக் குடைந்து நின்றாடார் வினைகெடப்
பள்ளமும் மேடும் பரந்து திரிவரே
கள்ள மனமுடைக் கல்விஇல் லோரே (509)

சிவவாக்கியரும், காலை மாலை நீரில் மூழ்கி எழுபவர்களை மூடர்கள் என்று சாடுகின்றார். நீரில் இருக்கும் தேரையைப் போன்றவர்கள் இவர்கள் என்று அவர்களை இழித்துரைக்கின்றார்.

காலை மாலை நீரிலே முழுகுமந்த மூடர்காள்
காலை மாலை நீரிலே கிடந்த தேரை யென்பெறும்
காலமே யெழுந்திருந்து கண்கள் மூன்றி லொன்றினால்
மூலமே நினைந்திராகில் முத்தி சித்தி யாகுமே
(சிவவாக்கியர் சித்தர் பாடல்கள்)

மேலும் தீர்த்தம் ஆடலால் எவ்விதப் பயனுமில்லை என்றும் கூறுகின்றார்.

தீர்த்தம் ஆடவேணுமென்று தேடுகின்ற தீனர்கள்
தீர்த்தம் ஆடல் எவ்விடம் தெளிந்துநீர் இயம்புவீர்
தீர்த்தமாக உம்முளே தெளிந்துநீர் இருந்தபின்
தீர்த்தமாக உள்ளதும் சிவாய அஞ்செழுத்துமே

ஆக உள்ளத்தில் இறைவனை வைத்து அன்புடன் வணங்க வேண்டும் என்பதும், அவ்வாறு அன்பில்லாதவர்கள் மேற்கொள்ளும் நியம நிஷ்டைகளால் (பூசனை முறைகள்) எவ்விதப் பயனுமில்லை என்ற கருத்தும் இங்கு ஒன்றுபட்டுக் காணப்படுகின்றது.

இவ்விதம் விரிந்த ஆய்வுகளை மேற்கொண்டால் சமயம், வழிபாடு, யோகநெறி ஆகியவை குறித்த கருத்துகள் திருமூலர் மற்றும் சித்தர் பெருமக்களிடம் ஒன்றுபடுவதைக் காணலாம்.

கருத்துப்புலப்பாட்டுத் தன்மையில் மட்டுமல்லாது பாடல்கள் அமைப்பிலும் திருமந்திரம் சித்தர் பாடல்களுடன் ஒத்தியைந்து காணப்படுகின்றது.

சித்தர் பாடல்கள் குறித்த ஆய்வுகளை மேற்கொண்ட முனைவர் இரா.மாணிக்கவாசகன் சித்தர் பாடல்களின் தன்மைகளாக,

1. குழூஉக்குறிச் சொற்களைக் கையாளுதல்
2. எளிமை
3. சந்த நயம்

ஆகியவற்றைச் சுட்டுகின்றார்.

உடம்பார் அழியின் உயிரார் அழிவர் (திரு. 724) முதலிய திருமந்திரப் பாடல்கள் சந்தநயத்திற்குச் சான்றாகின்றது.

பட்டிப் பசுக்கள் இருபத்தி நாலுள
குட்டிப் பசுக்களா ரேழுள ஐந்துள (2834)

போன்ற பாடல்கள் மறைபொருளுக்குச் சான்றாகின்றன.

மேற்கூறியவற்றின்வழி கருத்துநிலைகளில் திருமந்திரம் தமிழைப் போற்றுதல், உள்ளமே பெருங்கோயில் எனல், மூடநம்பிக்கைகளைச் சாடுதல் ஆகியவற்றிலும் எளிமை, சந்தநயம், குழூஉக்குறிச் சொற்களைக் கையாளுதல் முதலிய வடிவஅமைப்பிலும் சித்தர் பாடல்களுடன் ஒத்தியைவது அறியப்படுகின்றது.

துணைநூற்பட்டியல்

1. திருமந்திரம் - ஜி. வரதராசன் உரை
2. சித்தர் பாடல்கள் - பூம்புகார் பதிப்பகம்
3. நம்நாட்டுச் சித்தர்கள் - முனைவர் மாணிக்கவாசகன்
4. சித்தர்கள் வரலாறு - எஸ்.பி. இராமச்சந்திரன்

18. திருமூலர் - ஓர் மீள்பார்வை



முனைவர் பொ. சத்தியபாமா
தமிழ்த் துறைத் தலைவர்
மீனாட்சி மகளிர் கல்லூரி, சென்னை-24.
கைபேசி: 9842665597

முன்னுரை

இலக்கியம் மனித வாழ்க்கையை அறிந்து கொள்ள உதவும் ஒரு கருவி. மக்களுக்காகப் படைக்கப்படும் இலக்கியம் வாழ்வில் தன்னலத்தைப் பேணி பிறர் நலம் சிந்தித்து பொதுநலம் காணும் இலக்கியங்கள் ஏராளம். அவற்றுள் முதன்மை இடத்தைப் பெறுவது திருமந்திரம். திருமந்திரத்தை அலசி ஆராய்ந்த கட்டுரைகள் ஏராளம். திறனாய்வு நூல்களும் ஏராளம். இருந்தபொழுதினும் திருமூலரின் வரலாற்றை ஓர் மீள்பார்வையாகப் பார்ப்பதே கட்டுரையாளரின் நோக்கம். கூறியது கூறலாகக் கருத இடம் இல்லாத வகையில் அமைக்க இக்கட்டுரை முயல்கிறது.

சைவத் தோத்திரங்கள் பன்னிருதிருமுறைகளாக வகுக்கப் பட்டுள்ளன. இறைவனைப் புகழ்ந்து போற்றப்படுவன தோத்திரப்பாடல்கள் எனப்பட்டன. ஆனால் திருமூலரின் திருமந்திரம் பன்னிரு திருமுறைகளில் பத்தாவது திருமுறையாகக் கருதப்படுகிறது. ஆனால் திருமந்திரப்பாடல்ள் சாத்திரப்பாடல்கள் அடங்கிய நூலாகக் கருதப்படுகிறது. இவரது வரலாற்றைச் சேக்கிழார் பெரியபுராணத்தில் கூறியதைத்தான் அனைவரும் ஏற்கும் மரபாகக் கருதப்படுகிறது.

நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன் (பெரியபுராணம்)

என்று சுந்தரமூர்த்தி நாயனார் மிகவும் பக்திச்சிறப்போடு திருத்தொண்டத் தெகையில் குறிப்பிட்டுள்ளார்.

திருமூலரின் வரலாறு

திருக்கயிலை மலையில் நந்திபெருமானின் சீடர்களில் ஒரு சிவயோகியார் இருந்தார். ஆவர் சிவாகமங்களில் வல்லவர். அட்டமாசித்தி எனும் எட்டுவிதச் சித்திகளில் ஆற்றல் பெற்றவர். பொதியமலையில் உள்ள அகத்தியரைக் கண்டுவர விருப்பம் கொண்டார். யோகியார். அதனால் தென்திசைக்கு வந்தார். பொதிகைமலையில் உள்ள பல இடங்களையும் கண்டு வழிபட்டுப் பல இடத்துக்கும் விருப்பம்போல் சென்று வந்தார். அப்படிச் செல்லும் சமயம் திருவாடுதுறைக்கு வந்து திரும்பும் சமயம் காவிரிக்கரையில் உள்ள சாத்தனூரில்

மாடுமேய்ப்பவன் இறந்து கிடக்க மாடுகள் அனைத்தும் அவனைச் சுற்றிக் கண்ணீர் சிந்தி நிற்பதைக் கண்டார். அவன் மாடு மேய்க்கும் ஆயர்குலத்து மூலன் எனப்படுபவன் ஆவான். மாடுகளின் துன்பம் நீக்கக் கருணை கொண்ட சிவயோகியார் அந்த மூலனைப் பார்த்தார். அட்டமாசித்தியைப் பெற்ற சிவயோகியார் தம்உடலை மறைவாக ஓர் இடத்தில் வைத்துச் சூக்குமவடிவில் இறந்த மூலனின் உடம்பில் புகுந்து உயிர்ப்பை உண்டாக்கினார்.

உயிர்பெற்ற சிவயோகியாரை மூலன் என்று எண்ணிய மாடுகள் மூலனை மோந்தன. தன்நாவால் நக்கின. பின்பு புல் மேய்ந்தன. கவலை தீர்ந்த மாடுகள் மூலனைப் (சிவயோகியார்) பின் பின்பற்றின. யோகியாரும் மாடுகளை ஓட்டிச்சென்று சாத்தனூரில் அவரவர் வீட்டில் விட்டுச் சென்றார். நெடுநேரம் ஆகியும் வராததைக் கண்டு மூலனின் மனைவி சிவயோகியாரைத் தம்கணவன் எனக் கண்டு அவனுடன் உரிமை கொண்டு ஊடினாள். மூலனின் உடம்பில் இருந்த யோகியார் அம்மணி! என்றழைத்து உடல் தான் உன் கணவனுடையது. உயிர் எனக்குச் சொந்தமானது என்றார். சிவனை வழிபட்டுத் துன்பம் தீர்க்க என்று பேசினார். சிவயோகியாரின் பேச்சு விசித்திரமாக இருப்பதைக்கண்ட மூலனின் மனைவி என்கணவனுக்குப் பேய் பிடித்துவிட்டது என முறையிட்டாள். அங்கு கூடியிருந்த பெரியவர்களிடம் நியாயம் கேட்டாள். அப்பெரியவர்களும் மூலனின் மனைவி பேசுவதில் அர்த்தம் இருப்பதைக் கண்டு சிவயோகியாரிடம் பேசிப்பார்த்தார்கள். பின் அவர் சிவ யோகியாரே மூலன் இல்லை என்பதை உணர்ந்து, இவர் உன் கணவர் அல்ல எனத் தீர்ப்பு வழங்கினர். பின் யோகியாரும் தன் இருப்பிடத்திற்குச் சென்றார்.

மறைத்து வைத்த தன்உடல் காணாது வருத்தம் கொள்கையில் தம்ஞானத்தால் அதைப் பிறர் எரியூட்டினர் என உணர்ந்தார். பின்திருவாடுதுறையில் அரசமரத்தடியில் அமர்ந்து சிவயோகத்தில் ஆழ்ந்தார். இதனைக் கீழ்வரும் பாடல்மூலம் தெரிந்துகொள்ள முடிகிறது.

சேர்ந்திருந் தேன்சிவ மங்கைதன் பங்கனைச்
சேர்ந்திருந் தேன்சிவன் ஆவடு தன்துறை
சேர்ந்திருந் தேன்சிவ போதியின் நீழலில்
சேர்ந்திருந் தேன்சிவ நாமங்கள் ஓதியே (61)

என்று திருமூலர் கூறும் பாடல் வரியால் சிவஆகமத்தில் மூழ்கிய இன்பநிலையை அவரே கூறுவதைக் காணமுடிகிறது. மேலும் இவர் 3000 ஆண்டுகள் வாழ்ந்தார் என்றும் 3000 பாடல்கள் பாடினார் என்றும் மரபுவழிக் கதையும் உண்டு. இதனைக் கீழ்வரும் பாடல் எடுத்துக் காட்டுகிறது.

நந்தி அருளாளே நாதனாம் பேர்பெற்றேன்
நந்தி அருளாளே மூலனை நாடினேன்
நந்தி அருளாளே அது என் செயும் நாட்டினில்
நந்தி வழி காட்ட நான் இருந்தேனே (51)

என்ற பாடல் வரிகள்மூலம் இவர் நந்தி எம்பெருமானின் சீடர் எனக் கூறமுடிகிறது.

'இன்றைய அறிவியலார் உடம்பில் உள்ள (ஜீன்ஸ்) மூலவிதை அணுக்களைச் செம்மை செய்து பழக்கினால் 1200 ஆண்டுகள் மனிதனை வாழச் செய்ய முடியும் என்றும் அதற்கான வாய்ப்புக்கள் மனிதஉடம்பில் இருப்பதாகவும் கூறுகின்றனர்'.[1] இப்படிப்பட்ட யோகசித்தியால்தான் திருமூலரும் 3000 ஆண்டுகள் வாழ்ந்திருக்கக் கூடும் என அறிய முடிகின்றது.

திருமூலரின் காலம்

திருமூலரின் காலத்தைக் கணக்கிட அகச்சான்றுகள் கிடைக்க வில்லை. பதஞ்சலி, வியாக்கிரபாதர் ஆகிய இருவரும் நடராசப் பெருமானின் திருத்தாண்டவத்தை நேரில்கண்டு வழிபட்டவர்கள். இவர்களோடு திருமூலரும் நந்திப்பெருமானிடம் உபதேசம் பெற்றவர் என அறிய முடிகிறது. இதனைக் கீழ்வரும் திருமந்திர வரிகள் நமக்கு உணர்த்துகின்றன.

மன்றுதொழுத பதஞ்சலி வியாக்கிரன்
என்ற இவர் என்னுடன் எண்மரும்ஆமே (50)

என்று திருமூலருடன் இன்னும் எட்டுப்பேர் நந்திப் பெருமானிடம் உபதேசம் பெற்றனர் எனக் கூறமுடிகிறது. 'தட்சிணாமூர்த்தியிடம் பாடம் கேட்ட சனகர் சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் ஆகிய நால்வரும் சிவயோக மாமுனி ஒருவரும் பதஞ்சலியும் வியாக்கிரபரதரும் தானும் என்று எட்டுப் பேர் என அறியலாம்'.[2] இவர்கள் யாவரும் வரலாற்றுக்கு முற்பட்டக்காலத்தில் வாழ்ந்தவர்கள் ஆவர். எனவே இவர்களை வைத்துத் திருமூலரின் காலத்தை ஆராய இடமில்லை. எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரமூர்த்தி நாயனார்தான் இவர்சொல்லிப் பாடியுள்ளார். திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் திருமூலர் பெயரைக் கூறாவிட்டாலும் திருமூலரின் திருமந்திரப் பாடல்களின் சொல்லாட்சியைக் கையாண்டுள்ளார். 'திருமந்திரச் செய்யுட்கள் வெண்தளை பயின்று வருகின்றன. வெண்பாவுக்கும் விருத்தத்திற்கும் இடைப்பட்டது இதன் யாப்பு. நூல்முழுவதும் ஒரே வகைப்பாட்டினால் இயன்றது. சித்தாந்த சாத்திரம் தோன்றுவதற்கு முன் சைவசமைய முதல்நூலாகத் திருமந்திரம் விளங்கியது. சிறந்த ஆகமமாகச் சைவரால் போற்றப் பெறுவது இந்நூல் தேவார மூலவர்க்கும் முந்தியதாகக் கருதப்படுகிறது. ஞானசம்பந்தர்

ஆவடுதுறைக்குச் சென்ற ஞான்று கொடியமரத்தின் கீழிருந்து தமிழ் மனம் வர அங்கிருந்து திருமந்திரம் வெளிப்படுத்தப்பட்டது என்றும் கருதப்படுகிறது'.[3] ஆதலின் திருஞானசம்பந்தருக்கும் முற்பட்டது திருமந்திரம் எனலாம்.

திருமந்திரமாலையில் தமிழ் மண்டலம் ஐந்து எனக் கூறுகிறார். சேர, சோழ, பாண்டிய, தொண்டை, கொங்கு என்ற ஐந்து பகுதிகளும் தமிழகம் எனலாம். அப்படியானால் திருமந்திரம் அதாவது திருமூலரின் காலம் கி.பி மூன்றாம் நூற்றாண்டு எனலாம். சங்ககாலம், திருவள்ளுவர் காலம், சிலப்பதிகாரம், மணிமேகலைக் காலம் ஆகியவற்றிற்கும் அடுத்தக் காலம் எனவும் கருத இடமுண்டு. எனவே திருமூலரின் காலத்தை கணக்கிட்டு இதுதான் என்று கூற வாய்ப்பில்லை.

திருமந்திர அமைப்பு

மந்திரம் என்ற சொல்லிற்கு அதைச்சொல்பவனை அது காப்பாற்றும் என்பதே பொருள். 'திருத்தொண்டர் புராணம்' பெரியபுராணமானது போலவும் 'இராமகாதை' என்று கம்பன் வைத்த பெயர் கம்பராமாயணம் என்று மாறியது போலவும் திருமூலர் வைத்த பெயர் மாறித் திருமந்திரமாக மாறி இருக்கலாம் எனத் திருமந்திரக் கூற்றிலிருந்து தெரிந்துகொள்ள இடமுண்டு.

செப்பும் சதாசிவம் எனும் இப்பேர்பெற்றும் (65)

இதே போன்று,

சதாசிவன் தத்துவமுத்தமிழ் வேதம்
இதாசனியாதிருந்தேன் நின்றகாலம் (73)

போன்ற திருமந்திர பாடல்வரிகள்மூலம் சதாசிவ ஆகமம், முத்தமிழ்வேதம் என்ற பெயர் மாறித் திருமந்திரமாக மாறியிருக்க வாய்புண்டு. எனவே மந்திரம் என்ற சொல்லிற்கு அதைச் சொல்பவனை அது காப்பாற்றும் என்பதே பொருள். மந்திரம் என்பது தெய்வீக அடைமொழி 'திரு' என்பதும் சேர்ந்து திருமந்திரம் என உருப்பெற்றிருக்கலாம். இந்நூலின் பெயர் ஆசிரியரே வைத்தார் என்று சொல்ல இயலாது.

வேதம் கடவுள் சொல்ல மனிதர் கேட்டுச் செய்தது என்பர். கடவுள் சில மனிதர்களுக்கு அருள்செய்து நூல் செய்யச் சொன்னதுதான் சிவாகமங்கள் என்றும் கூறுவர். எனவே பொதுவாகச் சிவாகமங்கள் தந்திரம், மந்திரம், உபதேசம் என மூன்று பிரிவுகளாகச் சொல்லப்படும் நிலையைத் திருமந்திர வரிகள்மூலம் காணமுடிகிறது. இதனைக் கீழ்வரும் பாடல் வரியால் காணலாம்.

தந்திரம் ஒன்பது சார்வு மூவாயிரம்
சுந்தர ஆகமஞ் சொல்மொழிந் தானே (83)

என்று திருமந்திர ஆகம உறுப்புக்களைக் காணமுடிகிறது. திருமந்திர நூலில் இறுதியில் இவர் மாணாக்கர் பாடியதாகக் கொள்ளப்படும் பாடல் ஒன்று உண்டு அதில்

மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ்
மூலன் உரை செய்த முந்நூறு மந்திரம்
மூலன் உரை செய்த முப்பது உபதேசம்
மூலன் உரை செய்த மூன்றும் ஒன்றாமே (2997)

என்ற பாடலில் திருமூலரே தந்திரம், மந்திரம் உபதேசமாகக் கூறியிருப்பதாக இப்பாடல் உணர்த்துகிறது.

இன்னும் சிலர் இதற்கு விளக்கம் கூறுமிடத்து 'மூவாயிரம் என்பது தந்திரம் என்றும் முந்நூறு என்பது திருமந்திரமாலை என்றும் உபதேசம் உபதேசமாகவே வழக்காற்றில் உள்ளது'[4] என்று விளக்கம் அறித்துள்ளனர். இருந்தாலும் திருமூலர் பாடிய 3000 பாடல்களும் தந்தரம் ஒன்பது என்றே வழங்கப்படுகிறது. அதனையே மக்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்பதும் பெறப்படுகிறது. எனவே 3000 பாடல்கொண்ட திருமந்திரம் தனியான நூல் எனக் கொள்ளவேண்டும்.

தந்திரம் என்பது பின்பற்றும் முறை என்பதாகும். ஒன்பது வகையாகக் கூறிய பகுப்புக்கள் மக்களால் பின்பற்றத்தக்கன என்பதால் தந்திரம் என்றார். இதனையே தொல்காப்பியரும்

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப (29)

அதாவது நிறைமொழி கொண்ட தவமுடைய பெரியோர் இறைவனின் அருளாகிய ஆனையில் தொடர்புகொண்டு பல பொருள்களையும் சில சொற்களில் மறையச் செய்து கூறும் சொல் மந்திரம் எனப்படும் என்கிறார். இப்படிப்பட்ட திருமந்திர நூலைப் பயில்வோர் பயன்பெறுவர் என்கின்றனர்.

இதனைத் திருமூலரும் தம்பாடல் வரிகள்மூலம் திருமந்திரப் பயனை ஓதுகிறார். தம்நூலைப் பயில்வோர் தம்மைப்போல் இன்பம் அடைவர் என்கிறார். அதேபோன்று என்றும் கடவுளைத் தம்மைப்போல் நேரில் கண்டு அனுபவிப்பர் என்கிறார். இதனைக் கீழ்வரும் திருமந்திர வரிகள்மூலம் காணமுடிகிறது.

நான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
வான்பற்றி நின்ற மறைபொருள் சொல்லவும்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான்பற்றப் பற்றத் தலைப்படும் தானே (66)

எனவே தான்பெற்ற இன்பத்தை இந்த உலகம் முழுவதும் பெறவேண்டும் என்று கூறுபவர் தாம் அந்த இன்பத்தைப் பெற்ற முறையை விளக்கிக் கூறுகிறார்.

மறைபொருள் - ஓம் என்னும் பிரணவம்
வான்பற்றிநிற்றல் - உடம்பில் வானமாகியதைப் பற்றி நிற்பது ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
- ஓம் என்பதை முறைப்படி சொன்னால் உடம்பைப் பற்றிய உணர்வை எழுப்புதல்
தான் பற்றப் பற்ற - ஒருவன் இந்தமந்திரத்தை விடாது தொடர்ந்து ஓதுதல்
தலைப்படும்தானே - பரம்பொருள் தானகவே வந்து சேர்தல்

தான் இறைவனைக் கண்ட இன்பநிலையைத் திருமூலர் இவ்வாறு பகுத்துக் கூறுகிறார். தாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறவேண்டும் என்ற உயர் நோக்கிற்காக இயற்றப்பட்ட திருமூலரின் உயர்ந்த உள்ளத்தைக் காணமுடிகிறது. அவரது உயர்ந்த உள்ளத்தை நாமும் பின்பற்றுவோம்.

முடிவுரை

மேற்கூறிய செய்திகளிலிருந்து திருமந்திரம் எதற்காக இயற்றப்பட்டது என்று அறிந்துகொள்ள முடிகிறது. திருமூலரின் காலப் பகுப்பு பற்றி முடிந்த முடிபாகக் கூறப் போதிய அகச்சான்றுகள் கிடைக்கவில்லை. நந்திஎம்பெருமானின் சீடர்கள் யார் யார் என்பதும் திருமூலர் நந்திபெருமாளிடம் உபதேசம்பெற்ற நிலையையும் அறிந்துகொள்ளத் திருமந்திரம் வழிகாட்டுகிறது. இதன் அமைப்பும் திருமூலர் எப்படியெல்லாம் இறைவனை அடைந்தார் என்ற வழிமுறைகளையும் காணமுடிந்தது. அறிவியல் அடிப்படையாக ஒரு மனிதன் தம்அணுக்களைப் பழக்கித் தம்கட்டுக்குள் கொண்டு வந்துவிட்டால் அவன் 100 என்ன? 1200 ஆண்டுகள் வரை உயிர் வாழலாம் என்பது திருமந்திரம் காட்டும் அறிவியல் செய்தி.

குறிப்பு:

1. ஞானபரம்பரை - டாக்டர் நா. மகாலிங்கம் தொகுதி 6 - பக் - 3
2. லேது - பக் - 6
3. தமிழ் இலக்கிய வரலாறு - மது. ச. விமலானந்தம்-பக் 102
4. ஞானபரம்பரை - டாக்டர் நா. மகாலிங்கம் தொகுதி - 6 பக் - 6

19. திருமூலரின் பல்துறைச் சிந்தனைகள்

முனைவர் ந. கிருட்டினமூர்த்தி
நிறைசான்றிதழ் - நாட்டுப்புறடிவியல்,
ஒப்பிலக்கியம், தலைவர், உலகத் தமிழ்ப் பேரவை
காரைக்கால் 609 602. அலை 93450 05865

எல்லாப் பொருளும் இதன்பாலுள – இதில்
இல்லாத பொருள்ஏதும் இல்லை யாதலால்

என்பர் திருக்குறளைப் புகழ்ந்துபோற்றும் சான்றோர். இக்கூற்று திருமூலரின் திருமந்திரத்திற்கும் மெத்தப் பொருந்தும்.

இறைநெறி பரப்ப எழுந்த திருமந்திரம் இறைநெறியை மட்டுமல்லாது உலக நோக்கிலான எண்ணிலடங்காப் பல்துறைச் சிந்தனைகளைப் படரவிட்டு மணம்வீசித் திகழும் மாபெரும் படைப்பு. ஒருபொருள் குறித்து விளக்கவந்த பல்துறைச் சிந்தனைகள் திருமந்திரத்தின் வேர்களை வலுவூட்டுவதாக அமைகின்றன.

பக்திநெறி பரப்பும் பனுவல்களை யாத்த திருமூலர் அந்நெறியைப் போற்றுதற்கும் பல்லோரும் பல்விதமாய் உணர்ந்து பறைசாற்றுவதற்கும் பல்துறைச் சிந்தனைகளை ஆங்காங்கே பொறித்துச் செல்வது அவரின் நுண் ணாற்றலுக்குச் சான்று பகர்வதாய் அமைகிறது. இந்நிலையில் திருமூலர் காட்டும் பல்வேறு துறைச் செய்திகளில் குறிப்பாகப் பத்துத் துறைச் செய்திகளை மட்டும் இக்கட்டுரை வகைமாதிரி ஆய்வாக மேற்கொள்கிறது.

திருமூலரின் திறன் காட்டுவனவாகக் கீழ்வரும் துறைச் செய்திகள் முகிழ்த்து மணம் வீசுகின்றன:

1. மானுடவியற் சிந்தனை
2. அறவியற் சிந்தனை
3. தத்துவவியற் சிந்தனை
4. கல்வியியற் சிந்தனை
5. கணிதவியற் சிந்தனை
6. எண்ணியற் சிந்தனை
7. அணுவியற் சிந்தனை
8. உழவியற் சிந்தனை
9. தாவரவியற் சிந்தனை
10. விலங்கியற் சிந்தனை

மானுடவியற் சிந்தனை

அறவியல் உள்ளிட்ட அனைத்துச் சிந்தனைகளுக்கும் அடிப்படையாய் அமைவது மானுடவியற் சிந்தனை. மனிதன் ஒரு சமுதாய விலங்கு என்னும் கூற்று மனிதனோடு பிறவற்றை ஒப்புநோக்கும் தன்மையில் அமைவதே.

மானுடம் என்பது மனிதனின் முறையான மற்றும் முறையற்ற ஒழுகலாறுகளின் சங்கமம். முறையற்ற தன்மை சமுதாய முணுமுணுப்புக்கும் முறையான தன்மை அதே சமுதாய வரவேற்புக்கும் கட்டியங் கூறுவதாய் அமையக் காணலாம்.

திருமூலர் மானுடவியலின் முழுத்தன்மையையும் அறிந்தவராய் இருத்தலுக்கு அவரது பல பாடல்களைச் சான்று காட்டலாம். குறிப்பாக, மனிதன் மனிதனாய் வாழ்ந்தாலே போதும்; அவனுள் இறைவந்து குடிகொள்ளும் என்றும் இறைவனுக்கான ஆரவாரப் பூசனைகள் எவையும் தேவையற்றவை; பிற மனிதர்களுக்கும் அவனுக்காய் உதவக் காத்திருக்கும் விலங்குகளுக்கும் ஒருவன் செய்யும் சேவைகளே இறைவனை ஈர்க்கப் போதுமானவை என்றும் புரட்சிகரக் கருத்துகளை மிகத் துணிவுடன் கூறியவர். இதனை,

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கங்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே (1792)
படமாடக் கோயிற் பகவற்கொன் றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயில்
படமாடக் கோயிற் பகவற்க தாமே (1821)

என்னும் இவ்விரண்டு பாடல்களும் விரித்துரைக்கக் காணலாம்.

ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்னும் அமரத்துவ சிந்தனை அன்றைய சமுதாயத்தில் இவரைத் தவிர வேறெவரும் கனவிலும் மனங்கொண்டிலர் எனலாம்.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகுங்கதி யில்லைதுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே (2066)

என்ற பாடல் இன்றைக்கும் எம்மதத்தினரும் ஏற்றுப் போற்றும் சமரசத்தன்மை கொண்டிலங்கக் காணலாம்.

அறவியற் சிந்தனை

மானுடவியலின் ஒரு கூறாக அமையும் அறவியற் சிந்தனை திருமூலரின் படைப்புகளில் பரவலாகக் காணப்படுகிறது. அறவியல் என்பது மனிதனின் முறையான வாழ்வு நெறியில் தாம் நடந்துகாட்டுவதையும் பிறரிடம் நடந்தாகவேண்டுமென எதிர்பார்ப்பதையும் உள்ளடக்கிய சிந்தனைத் தொகுப்பு. தர்மம் அல்லது அறம் அழிவற்றது; என்றும் நின்று நிலைக்கக் கூடியது; எத்தகு இடர்கள் ஏற்படினும் இறுதியில் வெல்வது என்பன போன்ற கருத்துகளும் **தருமத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும்; தர்மம் மறுபடி வெல்லும்** என்ற கீதையின் பாதையும் இங்கு எண்ணிப் பார்க்க வேண்டிய செய்திகள்.

பிறருக்கு ஒன்றை ஈவதே இனிய அறமென்றும் ஆசையைத் துறப்பதைவிடச் சிறந்த அறம் ஏதுமில்லை என்றும் இன்சொல்லால் பிறரை மகிழ்விப்பதும் ஏற்ற அறமே என்றும் அறத்திற்குப் புதியவடிவம் தருவதைத் திருமூலரிடம் காணமுடிகிறது.

ஆசையே துன்பத்திற்குக் காரணம் என்ற புத்தரின் வாக்கும், **மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்** என்னும் வள்ளுவர் நோக்கும் திருமூலரின் அறவியல் போக்காக இருப்பதை,

ஆசை யறுமின்கள் ஆசை யறுமின்கள்
ஈசனோ டாயினும் ஆசை யறுமின்கள்
ஆசை படப்பட ஆய்வருந் துன்பங்கள்
ஆசைவிடவிட ஆனந்த மாகுமே (2570)

ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்
பார்த்திருந் துண்ணன்மின் பழம்பொருள் போற்றன்மின்
வேட்கை யுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்
காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே (107)

யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே (109)

ஆகிய பாடல்கள் நிலைநிறுத்தக் காணலாம்.

தத்துவவியற் சிந்தனை

தர்க்கம் என்றும் வன்மை மென்மைகளை ஆய்வு செய்தல் என்றும் குறிப்பிட்ட கருதுகோளுடன் ஒரு கருத்தை நிறுவுதல் என்றும் தத்துவவியலை ஒருவாறு வரையறுக்கலாம். எதனையும் ஒரு காரண காரியத்தோடு அணுகுவது இதன் அடிப்படைத் தன்மை ஆகும். **புகை தன் ஆதியாய அனல் காட்டல் போல / சீதமின்மை பனியின்மை காட்டல் போல** எனும் இலக்கியத் தொடர்கள் இக்கருத்தை நிறுவும். குறிப்பிட்ட ஒரு கருத்தைத் தெளிவுபடுத்த அதனோடு தொடர்புடைய சிந்தனைகள் பலவற்றை இணைத்துக் காணும் இத் தத்துவப் போக்கைத் திருமூலர் மிகச் சிறப்பாகக் கையாளுகிறார். நெய்க்குத் தொன்னை ஆதாரமா? தொன்னைக்கு நெய் ஆதாரமா? எனப் பிரித்தறிய இயலாதிருக்கும் எல்லாம் தத்துவார்த்த அடிப்படையின. காற்று வந்து மரம் அசைந்ததா? மரமசைந்து காற்று வந்ததா? முந்தியது கடலா அலையா எனப் பின்னிக்கிடக்கும் தொடர்களில் மின்னும் தத்துவம் திருமூலரின் தனிப்பெருந் தவம்.

தத்துவம் எங்குண்டு தத்துவன் அங்குண்டு
தத்துவம் எங்கில்லை தத்துவன் அங்கில்லை
தத்துவ ஞானத்தின் தன்மை யறிந்தபின்
தத்துவன் அங்கே தலைப்படுந் தானன்றே (2774)

விளக்கைப் பிளந்து விளக்கினை யேற்றி
விளக்கினுக் குள்ளே விளக்கினைத் தூண்டி
விளக்கில் விளக்கை விளக்கவல் லார்க்கு
விளக்குடை யான்கழல் மேவலு மாமே (2773)

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே (2251)

என்னும் பாடல்கள் தத்துவம் விரிப்பன. தகைசால் மறைபொருளைத் தம்முள் பொதித்துவைத்திருப்பன.

கல்வியியற் சிந்தனை

கல்வி என்னும் மூன்றெழுத்து மந்திரம் பற்றிப் பேசாத இலக்கணமும் இல்லை, இலக்கியமும் இல்லை. தொல்காப்பியம் தொடங்கிச் சங்க இலக்கியம் முழுமைக் குள்ளும் இக்கால இலக்கியத்திலும் பரந்து விரிந்து கிடக்கும் கல்விச்சிந்தனையை விரிவாக விளக்காமல் திருமூலரின் கல்விச் சிந்தனைக்குச் சான்றாக அவரது,

கல்லாத மூடரைக் காணவும் ஆகாது
கல்லாத மூடர்சொல் கேட்கக் கடன்அன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லராம்
கல்லாத மூடர் கருத்தறி யாரே (304)

என்ற ஒரேஒரு பாடலைச் சுட்டி, கல்வியில்லாத மனிதன் மனிதனே அல்ல; கல்லாத மூடரால் சமுதாயம் கருத்தழிந்து சீர்குலையும் எனும் அவரது சிந்தனைப் போக்கினை மனங்கொள்வோம்.

கணிதவியற் சிந்தனை

இறைநெறி காட்டவந்த திருமூலர் அதனை இனிமை பயக்குமாறு காட்டுதற்குப் பல்துறைச் சிந்தனைகளைப் பின்புலமாக ஏற்கிறார். இது அவரது நுண்ணறிவுத் திறனைக் காட்டுவதாய் அமைந்து வியப்பின் எல்லைக்கே இட்டுச்செல்கிறது. கணிதவியலில் மிக இன்றியமையாத சதுரம், வட்டம், முக்கோணம், நாற் கோணம், அறுகோணம், எண்கோணம் முதலானவற்றைப் பரம்பொருளோடு இணைத்துப் பேசும் திருமூலரின் கணக்கியல் அறிவு கணக்கிற்கொள்ள வேண்டிய ஒன்று.

வலையமுக் கோணம் வட்டம் அறுகோணந்
துலையிரு வட்டந் துய்ய விதமெட்டில்
அலையுற்ற வட்டத்தில் ஈரெட் டிதழாம்
அலைவற் றுதித்தனன் ஆதித்த னாமே (1942)

சத்திநாற் கோணஞ் சலமுற்று நின்றிடும்
சத்தி அறுகோணஞ் சயனத்தை யுற்றிடுஞ்
சத்திநல் வட்டஞ் சலமுற் றிருந்திடுஞ்
சத்தி யுருவாஞ் சதாசிவன் தானே (1715)

என்னும் மேற்குறித்த இவ்விரு பாடல்கள் பண்டைய கணக்கியல் அறிஞராய்த் திருமூலரை இனம்காட்டத்தக்கன.

எண்ணியற் சிந்தனை

கணக்கியலின் ஒரு கூறாய் ஆனால் பன்முகப் பரிமாணங்களோடு திகழ்கிறது திருமூலரின் எண்ணியற் சிந்தனை. இது சித்து விளையாட்டாய், சுழல் விளையாட்டாய்ப் பல பாடல்களில் அமைந்து அவரது கவித் திறமையையும் எண்ண ஓட்டத்தையும் பிரதிபலிக்கக் காண்கிறோம். ஒரு மனிதரின் பேரறிவாற்றலை அவர்தம் கணக்கியல் அறிவால் இன்றும் முடிவு செய்யக் காணலாம். ஆசு கவி, மதுர கவி, சித்திர கவி, வித்தார கவி எனக் கவிஞரைத் திறன் அடிப்படையில் வகைப்பாடு செய்த காலம் திருமூலர் காலம். நாற்கவிராச நம்பி என்ற பெயர் இலக்கிய வரலாற்றில் இருந்தமை அதற்குச் சான்று பகரும். நாற்கவிகளோடு மட்டுமன்றி எண் விளையாட்டு, புதிர் விளையாட்டு போன்ற உத்திகளைப் புகுத்திச் சோதனைக் கவிதைகள் பலவற்றைத் திருமூலர் படைத்திருப்பதை நம்மால் அறியமுடிகிறது.

மூன்றினில் அஞ்சாகி முந்நூற் றறுபதாய்
மூன்றினில் ஆறாய் முதற்பன்னீர் மூலமாய்
மூன்றினில் அக்க முடிவாக முந்தியே
மூன்றிலும் ஆடினான் மோகாந்தக் கூத்தாமே (2738)

ஏழினில் ஏழாய் இகழ்ந்தெழுந் தேழதாய்
ஏழினில் ஒன்றாய் இழிந்தமைந் தொன்றாகி
ஏழினிற் சன்மார்க்கம் எங்கள் பரஞ்சோதி
ஏழிசை நாடகத் தேஇசைந் தானன்றே (2737)

பத்துப் பரும்புலி யானை பதினைந்து
வித்தகர் ஐவர் வினோதகர் ஈரெண்மர்
அத்தகு மூவர் அறுவர் மருத்துவர்
அத்தலை ஐவர் அமர்ந்துநின் றாரன்றே (2848)

என்னும் பாடல்கள் எண்ணின்பம் கூட்டி, எழுத்தின்பம் காட்டிச் சொல்லின்பம் ஊட்டும் திருமூலரின் அற்புத ஆற்றலை உணர்த்தி நிற்கின்றன.

அணுவியற் சிந்தனை

அணு மிகச்சிறிய நுண்கூறு. இன்றைய புரோட்டான், எலக்ட்ரான், நியூட்ரான் என்னும் பெயர்களைக் கண்டிராத அக்காலத்து இலக்கிய அந்தஸ்து மிக்க சொல். திருக்குறளின் பெருமை கூறவந்தோர்இ

அணுவைத் துளைத் தெழுகடலைப் புகட்டி
குறுகத் தரித்த குறள்

எனச் சிறு அணுவின் பெருமையும் ஆற்றலும் அறிந்து உவமை கூறினர். அத்தகு அணு பற்றித் திருமூலரின் சிந்தனையிலும் சிறப்பான இடம் இருந்திருப்பதை உணரமுடிகிறது. அணுவைப் பிரித்து அதன்மூலம் அண்டங்களையே பிளக்கும் ஆற்றல் பெறச் செய்யலாம் என்ற அறிவியல்

அறிவு திருமூலரின் பல பாடல்களில் இலைமறை காயாக வெளிப்படக் காணலாம். பல பாடல்களில் அணு பற்றிய அவரது சிந்தனை விரிந்தாலும்,

அணுவில் அணுவினை ஆதிப் பிரானை
அணுவில் அணுவினை ஆயிரங் கூறிட்
டணுவில் அணுவை அணுகவல் லார்கட்
கணுவில் அணுவை அணுகலு மாமே (1971)

படர்கொண்ட ஆலதின் வித்தது போலச்
சுடர்கொண் டணுவினைத் தூவழி செய்ய
இடர்கொண்ட பாச இருளற வோட்டி
நடர்கொண்ட நல்வழி நாடலு மாமே (1972)

அணுவுள் அவனும் அவனுள் அணுவுங்
கணுவற நின்ற கலப்ப துணரார்
இணையிலி யீச னவனெங்கு மாகித்
தணிவற நின்றான் சராசரந் தானே (1973)

என்னும் பாடல்கள் அவரது அணு குறித்த அறிவுக்குச் சான்றாய் அமையக் காணலாம்.

உழவியற் சிந்தனை

உழவன் சேற்றிலே கால் வைக்காவிட்டால் சோற்றிலே கைவைக்க முடியாது என்ற உண்மையைத் திருமூலர் நன்கு உணர்ந்திருந்தார். **உழுவோர் உலகத்தார்க்கு ஆணி, சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்** என்னும் வள்ளுவப் பெருந்தகையின் வாக்குகளையும் திருமூலர் அறிந்திருந்தார். இதற்கு,

பள்ளச்செய் ஒன்றுண்டு பாழ்ச்செய் இரண்டுள
கள்ளச்செய் யங்கே கலந்து கிடந்த
துள்ளச்செய் யங்கே உழுவுசெய் வார்கட்கு
வெள்ளச்செய் யாகி விளைந்தது தானன்றே (2831)

இடாக்கொண்டு தூவி எருவிட்டு வித்திக்
கிடாக்கொண்டு பூட்டிக் களறி முளையை
மிடாக்கொண்டு சோறட்டு மெள்ள விழுங்கார்
கிடாக்கொண்டு செந்நெல் அறுக்கின்ற வாறே (2838)

ஏற்றம் இரண்டுள ஏழு துரவுள
மூத்தான் இறைக்க இளையான் படுத்தநீர்
பாத்தியிற் பாயாது பாழ்ப்பாய்ந்து போயிடிற்
கூத்தி வளர்த்ததோர் கோழிப்புள் ளாகுமே (2833)

என்னும் பாடல்கள் சான்று பகர்கின்றன. உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்யும் நிலையில் திருமூலர் சொல்லேர் உழவராக மட்டுமின்றி நல்லேர் உழவராகவும் நம் கண்முன் தெரிகிறார்.

தாவரவியற் சிந்தனை

தாவரங்கள் நம் தாய் மண் தந்த வரங்கள். **புறக்காழனவே புல்லென மொழிப, அகக்காழனவே மரனென மொழிப** எனத் தாவரங்களின் இலக்கணத்தை வரையறுப்பார் தொல்காப்பியர். திருமூலருக்குத் தாவரவியலில் தணியாத தாகம் இருந்தமைக்கு,

கொட்டியும் ஆம்பலும் பூத்த குளத்திடை
எட்டியும் வேம்பும் இனியதோர் வாழையும்
கட்டியுந் தேனும் கலந்துண்ண மாட்டாதார்
எட்டிப் பழுத்துக் கிளைக்கின்ற வாறன்றே (2861)

தட்டத்து நீரிலே தாமரை பூத்தது
குட்டத்து நீரிற் குவளை எழுந்தது
விட்டத்தி னுள்ளே விளங்கவல் லார்கட்குக்
குட்டத்தி லிட்டதோர் கொம்மட்டி யாகுமே (2863)

என்னும் அவரது பாடல்கள் சான்று பகரக் காணலாம்.

விலங்கியற் சிந்தனை

ஓரறிவு முதல் ஐந்தறிவு வரை உள்ள தாவரங்கள் தவிர்ந்த பிற உயிரினங்களான விலங்குகள், பறவைகள் பற்றிய சிந்தனைகள் திருமூலருக்கு மிகப்பெரிய அளவில் இருந்திருப்பதற்கு அவரது பல பாடல்கள் சான்று பகர்கின்றன.

திகைக்கின்ற சிந்தையுள் சிங்கங்கள் மூன்று
நகைக்கின்ற நெஞ்சுள் நரிக்குட்டி நான்கு
வகைக்கின்ற நெஞ்சினுள் ஆனைக்கன் றைந்து
பகைக்கின்ற நெஞ்சுக்குப் பாலிரண் டாமே (2174)

அன்ன மிரண்டுள ஆற்றங் கரையினில்
துன்னி யிரண்டும் துணைப்பிரி யாதன்னந்
தன்னிலை யன்னந் தனியொன்ற தென்றக்கால்
பின்ன மடவன்னம் பேறணு காதன்றே (1969)

கூகையும் பாம்புங் கிளியொடு பூஞையும்
நாகையும் பூழும் நடுவில் உறைவன
நாகையைக் கூகை நணுக லுறுதலுங்
கூகையைக் கண்டெலி கூப்பிடு மாறன்றே (2851)

என்னும் பாடல்கள் நடப்பன, பறப்பன, ஊர்வன பற்றிய பேரறிவு பெற்றிருந்தார் திருமூலர் என்பதற்கு ஏற்ற சான்று பயப்பன.

இவ்வாறு திருமூலரை அவர்தம் படைப்புக் கண்ணாடிகொண்டு கண்ணுறும்போது அவர் ஒரு மானுடவாதியாய், கல்வியாளராய், கணித மேதையாய், எண்ணியற் புலமையாளராய், அணுவியல் அறிஞராய், உழவியற் கலைஞராய், தாவரவியல் வல்லுநராய், விலங்கியல் பேராசிரிய ராய்ப் பன்முகப் பேராற்றல் பெற்றுத் திகழ்வதைக் காணமுடிகிறது.

பயன்நூல்: திருமந்திரம், சென்னை : கழகம், 1969.

20. திருமூலரின் மூப்பு, இறப்புச் சிந்தனைகள்

முனைவர் ஔவை இரா. நிர்மலா
தமிழ் இணைப்பேராசிரியர்
காஞ்சி மாமுனிவர் பட்டமேற்படிப்பு மையம்
புதுச்சேரி email : avvainirmala@gmail.com
அலை 94424 96242

உலகில் தோன்றிய எந்த ஓர் உயிரும் எதிர்கொள்ள வேண்டிய இருபெரும் நிகழ்வுகளாக மூப்பும் இறப்பும் திகழ்கின்றன. மூப்பைத் தள்ளிப்போட இயலுமே தவிர முற்றாக அதனைத் தவிர்த்தல் இயலாது என்கின்றனர் மருத்துவ உலகின் மூப்பியல் துறையினர். இறப்போ அவ்வாறன்றி எப்போது, எப்படி, எங்கு நிகழுமென்று அறுதியிட்டுக் கூறவியலாத - ஓர் அவசர நிகழ்வாக - எதிர்பாராச் செயலாக - காலத்தின் கட்டாயமாக அமைகிறது. தனித்தன்மை மிக்க இவ்விரு கூறுகளும் இலக்கியங்களில் பேசப்படும் தன்மை இயல்பானதும் பொருத்தமானதும் ஆகும். அந்நிலையில் திருமந்திரம் வாயிலாக அறியப்படும் திருமூலரின் மூப்பு, இறப்புச் சிந்தனைகளை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

மனித வாழ்க்கைப் பருவங்கள்

உயிர் வாழ்வின் வளர்ச்சி உடலியல் மாற்றங்களைக் கொண்டு வருகின்றது. காலை எழுந்தவர்கள் நித்தம் நித்தம் மாலை வருவதைக் கண்டு எவ்விதக் கவலையுமின்றி இன்புறுகின்றனர். ஆனால் உண்மையில் இது அவர்களின் வாழ்நாள் ஒவ்வொன்றாகக் கழிந்து ஒவ்வொரு கூறுபாடும் அழிவதையே காட்டுகிறது (**திருமந்திரம்** (சென்னை : கழகம், 1969, 226). பிறவி பெற்ற ஒவ்வொரு உயிரும் இம்மாற்றம் அடைவதிலிருந்து தப்புவதில்லை.

கிழக்கெழுந் தோடிய ஞாயிறு மேற்கே
விழக்கண்டுந் தேறார் விழியிலா மாந்தர்
குழக்கன்று மூத்தெரு தாய்ச்சில நாளில்
விழக்கண்டுந் தேறார் வியனுல கோரே (221)

எனவரும் திருமூலரின் பாடல், பசு பிறப்பின்போது கன்றின் நிலையிலிருந்து பின் வயது மூத்து எருதாகி விடுவதைச் சுட்டிக்காட்டுகிறார். இத்தகைய உடல் மாற்றம் பிற உயிர்வகைகளைக் காட்டிலும் மனிதப்பிறவியில் கவனிக்கத்தக்க வேறுபாட்டுடன் அமைவதைக் காணலாம்.

குழந்தை பிறந்தது முதலாக உடலின் பல்வேறு உறுப்புகளும் உடலின் உள்ளே இயங்கும் மண்டலங்களும் சிறிது சிறிதாக வளர்ச்சியடைந்து ஒரு குறிப்பிட்ட உயர்நிலையை எட்டுகின்றன. அதன்பின்னர் உடலின் 'வளர்ச்சி' என்ற நிலைமாறி ஒரு குறிப்பிட்ட காலஅளவு வரை அவ் உயர்நிலையின் 'சமநிலை' காக்கப்படுகிறது. அதற்கடுத்த நிலையில் உடலின் வளர்ச்சி 'வீழ்ச்சி'யை நோக்கிச் செல்கிறது. இதனைத் திருமூலர்,

முட்டை பிறந்தது முந்நூறு நாளினில்
இட்டது தானிலை ஏதேனும் ஏழைகாள்
பட்டது பார்மணம் பன்னிரண் டாண்டினிற்
கெட்ட தெழுபதிற் கேடறி யீரே (207)

என்னும் பாடல்மூலம் புலப்படுத்துகிறார். கரு முட்டையானது பத்து மாதங்களில் குழந்தையாக உருவாகித் தாயின் கருப்பையை விட்டு வெளிவருகிறது. அது படிப்படியாக வளர்ந்து பன்னிரண்டு ஆண்டுகள் எய்தும்போது முழுவளர்ச்சி பெறுகிறது. அதன்பின் முழுவளர்ச்சி எட்டிய அவ்வுடல் எழுபது ஆண்டுகள் அளவில் பெரும் வீழ்ச்சியைச் சந்திக்கிறது என்று இப்பாடலின் வாயிலாகப் புலப்படுத்துகிறார். எழுபது வயதில் உடலுறுப்புகள் அதிகளவு தளர்வினைச் சந்திக்கின்றன என்னும் மூப்பியல் துறையினர் கூறும் முடிபுகளுடன் இச்செய்தி ஒரளவு பொருந்தி வரக் காண்கிறோம்.

மனிதவாழ்வினைக் குழந்தைப்பருவம், பிள்ளைமைப் பருவம், இளமைப்பருவம், நடுத்தர வயதுப்பருவம், முதுமைப்பருவம் எனப் பலவாறு பகுத்துக்காணலாம். திருமூலர் பாலன் இளையன் விருத்தன் எனநின்ற காலம் (225) என மனித வாழ்க்கையை மூன்று பருவங்களில் அடக்கிக் காண்கிறார். மேற்கூறிய மனித உடல்வளர்ச்சியின் மூன்று படிநிலைகளான வளர்ச்சி, சமநிலை, வீழ்ச்சி ஆகிய மூன்றையும் முறையே பாலன், இளையன், விருத்தன் என்னும் முப்பருவப் பாகுபாடு சமன்செய்யக் காணலாம்.

மூப்பை அறியும் வாயில்

மூப்புக் காலத்தில் பல்வேறு உடலியல் மாற்றங்கள் தோன்றுமாயினும் ஒருவர் முதுமையடைகிறார் என்பதை 'முடி நரைத்தல்' என்னும் கூறு எளிதாகப் புலப்படுத்தி விடுகிறது. இம்மாற்றம் எளிதில் புலப்படக்கூடியதாக இருப்பதோடு, எல்லாவற்றுக்கும் முதன்மையதாகவும் அமைகிறது. எனவே பெரும்பாலான புலவர்கள் முதுமையைச் சுட்டுமிடத்து முடி நரைத்தலையே அதிகமாகச் சுட்டுகின்றனர்.

மாறு திருத்தி வரம்பிட்ட பட்டிகை
பீறு மதனைப் பெரிதுணர்ந் தாரிலை
கூறுங் கருமயிர் வெண்மயி ராவது
ஈறும் பிறப்புமா ராண்டெனும் நீரே (234)

என்னும் பாடலில் நல்லபட்டாடையும் காலத்தால் நைந்துவிடும். அதேபோன்று மனிதருடைய வாழ்நாளாகிய அகலவையைக் காலம் ஈர்ந்து செல்கிறது; கருமயிர் உருமாறி வெண்மயிராய் நரைக்கிறது என்று மூப்புப் பருவத் தோற்றத்தை எடுத்தியம்புகிறார் திருமூலர்.

மூப்புக்காலத் துன்பம்

மூப்புக்காலம் என்பது உடல்தளர்வுறும் காலமாகும். அதனால் இளமையில் எளிதாகச் செய்ய முடிந்த காரியங்கள் முதுமையில் செய்ய இயலாத நிலையடைகின்றன.

தேய்ந்தற் றொழிந்த இளமை கடைமுறை
ஆய்ந்தற்ற பின்னை அரிய கருமங்கள்
பாய்ந்தற்ற கங்கைப் படர்சடை நந்தியை
ஓர்ந்துற்றுக் கொள்ளும் உயிருள்ள போதே (223)

என்னும் பாடல் மூலமாக, இளமைக்காலத்தில் செய்யவியன்ற காரியங்கள் முதுமையில் செய்வதற்கு அரியனவாகிவிடுவதைத் திருமூலர் சுட்டுகிறார்.

மகளிர் இகழ்தல்

முதுமையுற்ற ஆடவரைக்கண்டு மகளிர் வெறுத்தொதுக்கும் தன்மையைச் சம்பந்தர், ஐயடிகள் காடவர்கோன், திருமங்கையாழ்வார் முதலியோர் தத்தம் பாடல்களில் புலப்படுத்தியுள்ளனர். 'காலினோடு கைகளுந் தளர்ந்துகாம நோய்தனால்/ ஏலவார் குழலினார் இகழ்ந்துரைப்ப தன்முனம்' என்று சம்பந்தர் (233:9) தம் தேவாரத்தில் குறிப்பிடுகிறார்.

விரும்புவர் முன்னென்னை மெல்லியன் மாதர்
கரும்பு தகர்த்துக் கடைக்கொண்ட நீர்போல்
அரும்பொத்த மென்முலை ஆயிழை யார்க்குக்
கரும்பொத்துக் காஞ்சிரங் காயும்ஒத் தேனே (224)

என்று திருமூலர் இளமையில் மகளிருக்குக் கரும்பாய் இனித்த தான், மூப்பில் எட்டிக்காயாய்க் கசக்கும் தன்மையைக் கூறுகிறார். இவ்வாறு மூப்புற்ற ஆடவரைக் கண்டு மகளிர் வெறுப்பதன் காரணம் யாது?

கொம்பும் அரவமும் வென்றதுண் ணேரிடை
வம்புண் குழலார் வாசல் அடைத்திக ழாதமுன்
செம்பொன் கமுகினந் தான்கனி யும்செழுஞ் சோலைசூழ்
நம்பன் நறையூர் நாம்தொழு தும்எழு நெஞ்சமே
(நா.தி.பி. 1481)

என்னும் பாடலுக்குப் பெரியவாச்சான்பிள்ளை,

(கொம்புமித்யாதி) வஞ்சிக் கொம்பையும் அரவையும் வல்லிக் கொடியையும் மற்றுள்ளவர்களையும் தோற்பிக்கவற்றான இடையை யுடையராய், பரிமளிதமாக குழலையுடைய ஸ்திரீகளானவர்கள். (வாசலித்யாதி) முற்காலம் இவனை விரும்பி, பின்பு வெறுவிய னானவாறே, புறம்பே தள்ளிக் கதவடைப் பார்கள்; இவற்றான் பின்னையும் சாபலத்தாலே போகாதே புறம்பே நிற்கும்; லஜ்ஜித்து இவன் அங்கு நின்றும் கால் வாங்கிப் போகைக்காக, இவனுக்குப் 'போக' யோக்யதை யில்லாமையைச் சொல்லிப் பரிபவிப்பர்கள்; இப்படிப் பட்டவர்கள் பரிபவோக்தி செவிப்படுவதற்கு முன்னே...

(ஸ்ரீ வைஷ்ணவ க்ரந்த முத்ராபக ஸபை (பதி.), பெரிய திருமொழி (4-7 பத்துக்கள்), காஞ்சீபுரம் : ஸ்ரீ கீதாசார்ய அச்சுக்கூடம், 1909).

என்று விளக்கம் அளிக்கிறார்.

இவ்வுரையினை ஒப்புநோக்கும்போது, மூப்புற்ற போதும் இல்லற வேட்கை தணியாதிருத்தலும் அதன் காரணமாக மகளிரை நாடும் செயலும் வெளிப்படுகின்றன. ஆனால் மூப்புக்கால உடலியல் மாற்றங்களும் அதனால் ஏற்பட்ட செயல்திறன் குறைபாடும் அம்மகளிர் வெறுத் தொதுக்கும்

காரணிகளாய் அமைகின்றன. அதனால் மனத்தில் ஏற்படும் ஆழமான துன்பத்திலிருந்து தன்னைக் காத்துக்கொள்ளும் கேடயமாக இறையுணர்வு அமைவதை மேற்காட்டிய திருமூலரின் பாடல் உய்த்துணர வைக்கிறது.

மூப்பைத் தவிர்த்தல்

எக்காலமும் இளமையோடு இருக்கவேண்டும் என்ற விழைவு எல்லா மனிதருக்கும் எழுவது இயல்பே. மார்க்கண்டேயன், யயாதி முதலியோருடன் தொடர்புடைய 'இளமையோடு இருத்தல்' பற்றிய புராணக்கதைகள் இளமை விழைவையும் மூப்பை வெறுத்தலுமாகிய மக்களின் மனப்பாங்கைப் புலப்படுத்துகின்றன. யோகத்தால் நரை, திரை அணுகாது உடலைக் காக்கக் கூடும் என்றும் இளமைக்காலத்தில் யோகப்பயிற்சி அற்றோரும் முதுமையில் யோகத்தைக் கைக்கொண்டாலும் இளமையை மீண்டும் பெறலாம் என்னும் கருத்தும் சித்தர் பாடல்களில் குறிப்பிடப்பெற்றுள்ளன. சித்துகளிலும் யோகத்திலும் வல்லவரான திருமூலரும் மேற்குறித்த செய்திகளைப் பலபாடல்களில் குறிப்பிட்டுள்ளார்.

மேலையண் ணாவில் விரைந்திரு காலிடிற்
காலனும் இல்லை கதவுந் திறந்திடும்
ஞாலம் அறிய நரைதிரை மாறிடும்
பாலனு மாவான் பராநந்தி ஆணையே (784)

என்னும் திருமந்திரப் பாடல் 'பிராணாயாமப் பயிற்சி' இறப்பினைத் தவிர்ப்பதுடன் உலகோர் அறியுமாறு மூப்பைப் புலப்படுத்தும் கூறுகளான நரையையும் திரையையும் மாற்றி இளமையை மீட்டுத்தந்துவிடும் என்று ஆணையிட்டுச் சொல்கிறது.

இறப்பு உறுதி

இறப்பு உறுதியானது. பிறந்த எல்லா உயிர்களும் இறந்தேயாக வேண்டும்.

தழைக்கின்ற செந்தளிர்த் தண்மலர்க் கொம்பில்
இழைக்கின்ற தெல்லாம் இறக்கின்ற கண்டும் (229.1-2)

என்று கூறும் திருமூலர் வெட்ட வெட்டத் தழைத்து வளர்வதாய் நாம் நினைக்கும் தாவரங்களே இறத்தல் என்னும் வினையைத் தவிர்க்கவியலாது போகும்போது மனிதனுக்கு நிச்சயமாக இறப்பு உண்டு என்பதைப் புலப்படுத்துகிறார். அவ்வாறு இறப்பு நிகழ்ந்தவிடத்து அதனை மாற்றத்தக்க வழியும் இல்லை.

உடம்பொ டுயிரிடை விட்டோடும் போது
அடும்பரி சொன்றில்லை (220)

என்று உடலை விட்டு உயிர்பிரியும்போது அதனைத் தடுக்கும் வழி இன்மையையும் புலப்படுத்துகிறார்.

இறப்பை அறிய இயலாது

இறப்பு நிகழ்தல் உறுதியானதே என்றாலும் இறப்புநேரும் காலத்தை யாராலும் கணித்தறிய முடியாது. அழைக்கின்றபோது அறியார் (229.4) என்று திருமூலர் இறப்பு நிகழும் காலம் அறியாத தன்மையைக் குறிப்பிடுகிறார்.

அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடி யாரொடு மந்தணங் கொண்டார்
இடப்பக்க மேஇறை நொந்தது என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே (192)

என்னும் பாடல் எப்பொழுதும்போல் உணவு உண்டு படுத்தவர்கள் அப்படியே உயிரை விட்டுவிட்ட அகால இறப்பை எடுத்துரைக்கிறது. முப்பு தோன்றுவதற்கென்று கால எல்லை இருப்பதுபோல் இறப்பு நிகழ்வதற்கு எந்தவித வரையறையும் இல்லை.

தன்னை அறியாது தான்நல்ல ரென்னாதிங்
கின்மை யறியா திளையரென் றோராது
வன்மையில் வந்திடுங் கூற்றம் வருமுன்னந்
தன்மையின் நல்ல தவஞ்செய்யும் நீரே (112)

என்ற பாடல் இளமைக்காலமாயினும் இறப்பு நிகழ்ந்துவிடுவதை எடுத்துரைக்கிறது.

இறப்பிற்கு முன் இறைதொழுதல்

உடலை விட்டு உயிர் பிரிந்த பிறகு அவ்வுடல் ஒரு முடிவினை எய்தி விடுகிறது; மண்ணோடு மண்ணாகி அழிந்துவிடுகிறது. ஆனால் இத்தகையதொரு முடிவை உயிர் அடைவதில்லை. உயிர் என்றும் நிலைபேறுடையது. அதற்கு 'மறுமை' என்ற நிலை உண்டு என்ற நம்பிக்கைகள் உலகளாவியதாகக் காணப்படுகின்றன. மத வேறுபாடின்றி உலகின் அனைத்து மதங்களும் பாவம், புண்ணியம், சொர்க்கம், நரகம் ஆகியவற்றைப் பரிந்துரைக்கின்றன.

பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாருங் காண இயமன்றன் தூதுவர்
செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தில்
மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பாரே (242)

என்ற திருமூலரின் பாடல் மறுமை நம்பிக்கையை ஆணித்தரமாக முன்வைக்கிறது. உயிரை எமதூதர்கள் கொண்டு செல்வர் என்றும் பாவம் செய்வோர் நரகம் செல்வார்கள் என்றும் சமுகத்தில் நிலவிவரும் நம்பிக்கையை இங்கே திருமூலர் பதிவுசெய்கிறார். இறப்புத் துன்பத்தைப் போக்கி மறுமை இன்பத்தை எதிர்கொள்ள இறைவனை வழிபடும் வழியைச் சமயப் பெரியோர் அனைவரும் ஒருமனதாக எடுத்துரைக்கின்றனர்.

பாய்ந்தற்ற கங்கைப் படர்சடை நந்தியை
ஓர்ந்துற்றுக் கொள்ளும் உயிருள்ள போதே (223)

என்று திருமூலரும் இறப்பிற்குமுன் இறைவனைத் தொழவேண்டும் என்னும் கருத்தினை முன்வைக்கிறார். இறப்பதற்கு முன் இறைவனைத் தொழுதல் வேண்டும் என்னும் கருத்தைப் பல பாடல்களில் திருமூலர் (112, 229) வற்புறுத்துகிறார்.

இறப்பால் கொள்ளவேண்டிய சமுக உணர்வு

தவிர்க்க இயலாத இறப்பினைக் கண்டாவது மக்கள் நல்வழியில் செல்ல முயலவேண்டும். சமுக நலனில் அக்கறை கொள்ள வேண்டும். ஆனால்

சமூகச் சூழலில் மக்கள் இறப்பையும் மிகச் சாதாரணமாக ஏற்றுக்கொண்டு விழிப்புணர்வு பெறாமல் இறக்கின்றனர். இறந்தவருக்காகச் சிறிதுநேரம் அழுதுவிட்டு இறந்தவரின் உடலை எரித்துவிட்டு அந்த நினைப்பையும் விட்டுவிட்டு எப்பொழுதும்போல் தத்தம் பணிகளில் ஈடுபடுகின்றனர்.

ஊரெலாங் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே (189)

என்னும் திருமூலரின் பாடல் மக்களின் சமுதாய விழிப்புணர்வற்ற தன்மையை எடுத்துக்காட்டுகிறது.

மரணமிலாப் பெருவாழ்வு

சாதாரண வாழ்வு வாழும் மக்களால் இறப்பினைத் தவிர்க்கமுடியாது என்றாலும் யோகவழி நிற்பின் வாழ்நாள் நீட்டம் பெறலாம். நூறாண்டு இன்பமாய் வாழலாம். யோகநிலையில் அணுவளவும் பிசகாது இருப்போர் மரணமிலாப் பெருவாழ்வு வாழக்கூடும் என்ற சித்தர்களின் சிந்தனையைத் திருமூலரின் பாடல்வழியும் அறியமுடிகிறது.

கூத்தவன் ஒன்றிடுங் கூர்மை அறிந்தங்கே
ஏத்துவர் பத்தினில் எண்டிசை தோன்றிடப்
பார்த்து மகிழ்ந்து பதுமரை நோக்கிடிற்
சாத்திடு நூறு தலைப்பெய்ய லாமே (737)

சாத்திடு நூறு தலைப்பெய்து நின்றவர்
காத்துடல் ஆயிரங் கட்டுறக் காண்பர்கள்
சேர்த்துடல் ஆயிரஞ் சேர இருந்தவர்
மூத்துடன் கோடி யுகமது வாமே (738)

ஆகிய பாடல்கள் மனிதன் மரணமிலாப் பெருவாழ்வினை யோகம் மூலம் எய்தக்கூடும் என்பதைக் கூறுகின்றன. திருமூலரும் யோகநிட்டை காரணமாக மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்தவர் என்று சொல்லப்படும் கருத்தும் இதனோடு ஒப்புநோக்கத் தக்கது.

இவ்வாறு திருமூலர், மூப்பு இறப்புப் பற்றிய பன்முகப் பரிமாணங்களைத் தம் படைப்பில் வாய்க்குந்தோறும் பரவலாகச் சொல்லிச்செல்வதை அறியமுடிகிறது. மக்களின் சாதாரண நடப்பியல் வாழ்வில் தவிர்க்க இயலாதனவாகக் கருதப்படும் மூப்பையும் இறப்பையும் சிறந்த யோக முறைகளாலும் தெய்வீக நெறிகளாலும் நிச்சயமாக வெற்றிகொள்ள இயலும் என்பதை உறுதியாகக் குறிப்பிடுகிறார். மரணமிலாப் பெருவாழ்வு குறித்த இன்றைய சர்ச்சைக்குரிய சிந்தனை இவருக்கு இருந்தமையும் இவருடைய பாடல்கள் வாயிலாக அறியமுடிகிறது. இவற்றை அறிவியல் அடிப்படையில் நிரூபிக்க தகுந்த ஆதாரங்கள் இல்லாத நிலையில் இச்சிந்தனைகள் எதிர்கால ஆய்வுக்கு விடப்படுகின்றன.

21. திருமந்திரத்தில் காலம் போற்றும் பண்பாட்டு நெறிகள்

முனைவர் பா. ஜான்சிராணி

முன்னுரை

பண்புடைமை என்பது நற்குணங்கள் யாவும் நிறைந்தது. நிலத்தைப் பயன்படுத்துவதுபோல மனிதனின் மனத்தினைப் பயன்படுத்தி வாழ்வது பண்பாடு. பண்பாடு மனித சமுதாயத்தில் உறுப்பினர் என்ற நிலையில் அமைவது, அறிவு நம்பிக்கை கலை, சட்டம், நீதிகள், பழக்கவழக்கம், ஆற்றல், ஒற்றுமை எனப்பல வேறு கூறுகளை உள்ளடக்கியது என 'டெய்லர்' கூறுகின்றார்.[1]

திருமந்திரத்தின் பண்பாட்டு வகை

திருமந்திரத்தில் பண்பாட்டினை இரண்டாகப் பிரித்துக் கூறுகின்றனர். அகப்பண்பாடு, புறப்பண்பாடு என்றும் மனிதனின் ஒழுங்கு, கட்டுப்பாடு, நாகரீக வாழ்வு, நம்பிக்கை, அருள், புலனடக்கம் இவை அகவாழ்வும் எனவும், புற மக்களின் புறத்தோற்ற வளர்ச்சி கூறுகளைப் புறப்பண்பாடு எனப்பாகுபாடு செய்கின்றார்.

திருக்குறள் கலித்தொகையில் பண்பாட்டுச் செய்திகள்

மனிதர்கள் அனைவரிடமும் அன்பும், இரக்கமும் கொண்டு இருப்பவர் பண்புடையவர் எனத் திருவள்ளுவர் கூறுகின்றார்.

பண்புஉடையார் பட்டு உண்டு உலகம் அது இன்றேல்
மண்புக்கு மாய்வது மன் குறள். 996

என்று கூறுகின்றார். பண்புடையவர்கள் பகுத்து உண்பதாலும் பழி முதலான குணங்கள் அல்லாதவர்கள் எனவும் ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடிப்பவர்களே பண்பு உடையவர்கள் எனக்கூறுகின்றார்.

நல்லந்துவனார் இயற்றிய கலித்தொகையில் நெய்தற்கலியில் பண்பு பற்றிய செய்திபினைக்கூறுகின்றார்.

பண்பு எனப்படுவது பாடு அறிந்து ஒழுகுதல் கலி 132

கலித்தொகையில் பண்பால் உலகம் நிலைத்து நிற்கின்றது என்ற கருத்தை முன்மொழிந்துள்ளார்.

புறநானூற்று நூலில் பண்பாடு

தனக்கென வாழாது பிறருக்காக வாழ்கின்றவர்களால் இவ்வுலகம் நிலைத்து உள்ளது என்ற கருத்தை, புறநானூறு தரும் செய்திகளைப் பின்வரும் பாடலின் வாயிலாகக் காணலாம்.

உண்டாலம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இவரே முனிவிலர்
துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவதஞ்சிப்
புகழெனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர் விலர்
அன்ன மாட்சி யனையராசித்
தமக்கென முயலபு நோன் தான்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே புற. 182

போர்புரியும் போர்க்கலத்தில் அறத்தையும் பண்பாட்டினையும் நிலைத்து நிறுத்தியவர்கள் என்று புறநானூறு பாடலின் வாயிலாக உணரலாம்.

ஆவும் ஆனியல் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்
தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போல் புதல்வர்ம் பெறா அதீரும்
அம்பு கடி விடுதும் நும் அரண்சேர்மின்
அறத்தாறு நுவலும் பூட்சை புற. 9

பிறர்க்கு நல்லதையே விரும்பி செய்யும் மனிதஉள்ளத்தை இவ்வுலம் பாராட்டும் என்ற கருத்தை முன்மொழிந்துள்ளது இப்பாடல் வரிகள்.

திருமந்திரம் உணர்த்தும் பண்பாடு

திருமந்திரம் அன்பு, அறம், ஈகை முதலிய செய்திகளைப் பெரிதும் முன்மொழிந்துள்ளது. மன்னன், அறநெறியில் நின்று மக்களின் முன்னேற்றத்திற்கும் சமூதாய முன்னேற்றத்திற்கும் பசு, பெண்டிர், அறவோர், துறவோர் முதலானோரின் முன்னேற்றத்துக்கும் பெரிதும் பாடுபட வேண்டும் என பண்பாட்டினைப் பெரிதும் நிலைநிறுத்திக் கூறியுள்ளது என்ற செய்தியைப் பின் வரும் பாடல் வாயிலாக உணரலாம்.

ஆவையும் பாவையும் கற்றற வோறையும்
தேவர்கள் போற்றும் திருவேடத் தாரையும்
காவலன் காப்பவன் (243)

என்று முன்மொழிந்துள்ளது.

ஒழுக்கம் அன்பு அருள் ஆசாரம்
உபசாரம் உறவு சீனம்
வழுக்கிலாத் தவம் தானங்கள்
வந்தித்தல் வணங்கல் வாய்மை
அழுக்கிலாத துறவு அடக்கம்
அறிவொரு அர்ச்சித்தல் ஆதி
இழுக்கிலா அறங்கள் ஆனால்
இரங்குவான் பணி அறங்கல் சிவஞானசித்தியார் 113

என்று சிவஞான சித்தியாரின்மூலமாக அனைத்து அறப் பண்புகளுக்கான அறச்செய்திகளைத் திருமூலர் முன்மொழிந்

துள்ளதையும், மக்களை எல்லா நிலைகளின் நிலையிலும், சீர்படுத்தி ஒழுக்கம், பொறாமை, சபலம், ஊக்கம், கடமை, தியானம், காழ்ப்பு, தீமை என அணைத்து ஒழுக்கப் பண்புகளில் நிலைபெற்றால் ஒழுக்கவாழ்வு உயரும்நிலையில் முன்னிறித் துள்ளதை உணரலாம்.

திருமந்திரத்தில் பண்பாட்டின் நெறிமுறைகள்

திருமூலரின் பண்பாட்டின் நெறிமுறைகள் இன்றைய வாழ்வில் முறைகளுக்குப் பெரிதும் தேவையானதாகக் கருதப் படுகின்றது. திருமூலர் தனிமனித பண்பாட்டின் ஒழுக்கங்களை அன்பு, அருள், அறன் போன்ற செய்திகளை ஒழுக்கத்தின் வாயிலாக முன்மொழிந்துள்ளார்.

இறைவழிபாட்டால் எளியமுறையை எவ்வாறு பின்பற்ற லாம் என்ற செய்தியைப் பின்வரும் பாடல்களின் வாயிலாக முன்மொழிந்துள்ளார்.

எளியஅனல் தீபம் இடல் மலர் கொய்தல்
அளிதின் மெழுகல் அது தூர்த்தல் வாழ்த்தல்
பனிமணி பற்றல் பல் மஞ்சனல் ஆதி
தனி தொழில் செய்வது தான் தாசமாக்கம் (7)

மேலும்,

புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அது கண்டருள் புரியா நிற்கும்
எண்ணிலா பாவிகள் எம் இறை ஈசனை
நண்ணறி யாமல் நழுவுகின்றாரே (1475)

என்ற பாடல்களின் வாயிலாகத் திருமூலர் முன்மொழிந் துள்ளதை உணரலாம். அடியார்களுக்கு உதவி செய்வது. ஆண்டவனுக்கு உதவுவது என்ற தத்துவத்தின் பண்பாட்டினைப் பின்வரும் பாடல்மூலம் உணர்த்துகின்றார்.

படமாடக் கோயில் பகவற் கொன்றீயில்
தட மாடக் கோயில் நம் பர்க்கங்காகர்
நடமாடக் கோயில் நம்பர்க் கொன்றீயில்
படமாடக் கோயில் பகவந் தொமே (1717)

அசுரம் ஆயிரம் ஆரியர்க்கீயில் என்
சிகரம் ஆயிரம் செய்து முடிக்கிலென்
பகரும் ஞானிபகல் ஊண் பலத்துக்கு
நிகரிலை என்பது நிச்சியம் தானே (1824)

என்ற செய்திகளை முன் மொழிந்துள்ளார்.

முடிவுரை

திருமந்திரம் என்ற நூல் மனித வாழ்வில் தத்துவங்களுக்கு அடிப்படையான நூலாக அமையாமல் மனித வாழ்க்கைக்குச் சிறந்த நூலாக உலகம் போற்றும் தத்துவ நூலாக அமைகின்றது. வளர்ந்து வரும் அனைத்துச் சமுதாய நாகரிக ஒழுக்கப் பண்பாற்றிக்குத் தனிமனித உயரிய சிந்தனைகளுக்குத் தத்துவ நூலாக முன் மொழிந்துள்ளதை அனைவரும் அறியலாம்.

22. திருமந்திரத்தில் காலத்தால் அழியாத சமுதாய வாழ்வும் சிந்தனைகளும்

முனைவர் **க. சங்கர்**
உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை,
ஆல்ஃபா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, போரூர்,
சென்னை 116. கைபேசி 9444300228
மின்னஞ்சல்: munaivarsankar@gmail.com

முன்னுரை

திருமந்திரம் என்ற நூல், நிறைமொழி மாந்தராகிய திருமூலர் மொழிந்த மறைமொழி. திருமுறை ஆசிரியர், சைவத் சித்தாந்தி, சித்தர் என்ற சிறப்புகளோடு வாழ்வியல் நெறி வகுத்தவர் என்ற சிறப்பையும் திருமூலர் பெறுகின்றார். பத்தாம் திருமுறையாக உள்ள திருமந்திரம், தோத்திர நூல், சாத்திர நூல், வாழ்வியல் நூல் என்ற மூன்று நிலைகளில் வைத்துப் போற்றப்படுகின்றது. இந்நூலைத் திருமூலர் ஏன் படைத்தார்? அவரே கூறுவது இது,

> என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
> தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே

தமிழ்செய்தல் என்பது ஆகமத்தைச் செய்தல் எனப் பொருள்படும்.

திருமூலர் திருவாவடுதுறையில் இருந்த ஓர் அரச மரத்தின் கீழ் அமர்ந்தார். மூவாயிரம் ஆண்டு தவம் செய்தார். ஆண்டுக்கு ஒரு பாடலை இயற்றினார் என்பது செவிவழிச்செய்தி. பெரிய புராணத்திலும் இச்செய்தியே பேசப்படுகின்றது. இவ்வாறு இச்சிறப்புக்குரிய 'திருமந்திரம்' காலத்தால் அழியாதது என்றால் அது மிகையாகாது.

சமுதாயம்

சமுதாயம் என்பது குறித்து அறிஞர்களிடையே பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. சமுதாயத்திற்கு அடிப்படை குடும்பம் என்பதே அனைத்துக் கருத்துகளின் தொகுப்பாகவும் முடிவாகவும் அமைகின்றது.

குடும் என்ற மூலக் கருவிலிருந்துதான் சமூகம் வளர்ந்திருக்கிறது என்கிறார் பாஸ்கல் கிஸ்பர்ட். பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்து கூட்டு வாழ்க்கை மேற்கொள்ளும் போது சமுதாய உணர்வு வளர்ச்சியடைகிறது.

சமுதாயச் சிந்தனையாளரான திருமூலர், மனித இனத்திற்கு வகுத்து வைத்த வழக்கங்கள், வழிமுறைகள், விதிமுறைகள் மிகப் பல. அவை, மனிதன் தன்னையொத்த பிறிதொரு மனிதனின் இன்பத்திலும் துன்பத்திலும் பங்குகொண்டு, ஒழுக்க நெறி நின்று, பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பி, ஆரவாரமும் வேறுபாடும் நிறைந்த சாதிகள், மதங்கள், சடங்குகள், மூடநம்பிக்கைகள் முதலியனவற்றிற்கு இடமளிக்காது. அன்பு, அறிவு, அருள் மிக்கவனாக வாழவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார்.

திருமந்திரத்தில் அன்பு

அன்பு என்பது அகத்தே உணரும் மென்மையான உணர்வு. இதற்குப் புறவடிவம் என்ற ஒன்று இல்லை. அன்பு ஒருவனை உந்த அவன் ஆக்கம் தரும் செயலில் ஈடுபடுவான். அதுவே அன்பின் அடையாளமாகக் கருதப்படும். அன்பு தெரிந்தவர்களிடையேயும் பழகியவர்களிடையேயும் மலரக் கூடியது. ஆனால், அருள் என்னும் அன்பின் குழவி எல்லா மனிதரிடையேயும் வேறுபாடு காண இயலாத நிலையில் தோன்றுவது. உலகில் அன்புடையோர் பலர் உள்ளனர். ஆனால், அருள் உடையோர் மிகச் சிலரே. அன்பும் அருளும் மனித சமுதாயத்தை உயர்த்துவன ஆகும். இறைவனிடம் ஏற்படும் அன்பு முதிர்ந்து இறையன்பு ஆகும். உறவுகளிடம் ஏற்படும் அன்பு கவிழ்ந்து உறவின்பு ஆகும். இதனை, அனுபவம் அற்றவர் அன்பாகிய சக்தியும் அறிவாகிய சிவமும் இரண்டு என்பர். அன்பின் முதிர்ச்சியால் சிவமாகிய அறிவு விளங்கும் என்பதை உயர்ந்தவர் தாழ்ந்தவராகிய எவரும் உணர்வதில்லை. அன்புதான் சிவத்தை விளங்கச் செய்வது என்பதை எல்லாரும் அறிந்த பின்பு அன்பே வடிவாய்ச் சிவமாம் தன்மையை அடைந்திருவார் அல்லது அடைந்திருந்தார். அன்புஉள்ளம் உடையவர்களுக்கு அன்பும் சிவமும் ஒன்று என்பது தெளிவாகும். மேலும்,

பொன்னைக் கடந்து இலங் கும்புலித் தோலினன்
மின்னிக் கிடந்து மிளிரும் இளம்பிறை
கன்னிக் கிடந்த சுடுபொடி ஆடிக்குப்
பின்னிக் கிடந்ததுஎன் பேரன்பு தானே *(271)*

கூத்தன் பொன்னின் ஒளியையெவென்ற புலித் தோலை உடுத்தவன். மின்னல் ஒளிபோல் விளங்கும் பிறைச்சந்திரனைச் சூடியவன். அப்பிறையானது பொருந்தியிருந்த வெண்ணீற்றின் ஒளியில் விளங்குபவன். அப்பெருமானுக்கு எனது பேரன்பு பொருந்தியுள்ளது. இதனை மாணிக்கவாசகரும்,

ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த
இன்பமே என் அன்பே திருவாசகம் 388

என்று சிவனைக் குறிப்பிடுகிறார்.

மனிதனின் மனத்தில் அன்பு குடிகொண்டால், அனைவரையும் இறைவனாகப் பார்க்கும் பக்குவம் வந்துவிடும். இதனை இச்சமுதாயம் பெற்றுவிட்டால் வன்முறைகளுக்கு இடம் இல்லாமல் போய்விடும். ஒற்றுமையும் ஒருமைப்பாட்டு உணர்வும் அன்பு வழியினால் உருவாகும் என்பதைக் காலத்தால் அழியாத திருமந்திரம் மனித குலத்திற்கு உணர்த்துகிறது.

திருமந்திரம் உணர்த்தும் அறம்

சமுதாயத்தில் நல்லவை அனைத்துமே அறம் என்றே பொதுவாகக் கருதப்படும். இந்த அறம், 1. ஒழுக்கம், 2. வழக்கம், 3. நீதி, 4. கடமை, 5. ஈகை, 6. புண்ணியம், 7. அறக்கடவுள், 8. சமயம் என்னும் எட்டும் பொருள்களில் வழங்கி வருகின்றது.

அறம் சார்ந்து தோன்றிய பழக்கவழக்கங்கள் மேலை நாட்டிலும் நம்நாட்டிலும் ஒழுக்கத்தை வலியுறுத்துவனவாகி உள்ளன. ஒழுக்கத்தின் அடிப்படையில் நன்மை தீமைகள் வரையறை செய்யப்படுகின்றன. இவற்றின் தொடர்பில் இரு வினைகள் தோன்றி உயிரைப் பற்றுகின்றன. வினைப்பற்று உள்ளவன் பிறவி தொடரும். பிறவி தொடர்ந்தால் உயிர் இறைவனைச் சென்று சேர முடியாது. எனவே உயிர் பேரின் பத்தில் திளைப்பதற்கான அடிப்படையாக ஒழுக்கத்தை வற்புறுத்தும் அறம் விளங்குகிறது. மேலும்,

தாம் அறிவார் அண்ணல்தான் பணிவார் அவர்
தாம் அறிவார் அறம் தாங்கி நின்றார் அவர்
தாம் அறிவர் சில தத்துவர் ஆவர்கள்
தாம் அறிவார்க்குத் தமர் பரன் ஆமே (251)

என்கின்றது திருமந்திரம். தம்மை அறிபவர் சிவபெருமானது திருவடியை வணங்குபவர் ஆவர். தம்மை அறிபவரே அறத்தை மேற்கொண்டு செய்பவர் ஆவர். தம்மை அறிபவரே உண்மையை உணர்பவர் ஆவார். தம்மை அறிபவர்க்கு இறைவனே உறவினன் ஆவான்.

திருமந்திரம் உணர்த்தும் சமுதாயம்

வேதத்தில் குறிப்பிடப்படும் அறங்களை மனிதன் ஓதி உணர்தல் வேண்டும் என்று திருமந்திரம் குறிப்பிடுகிறது. அந்தக் காலத்தில் வழக்கத்திலிருந்து பதினெட்டு மொழிகள் சொல்லும் அறதைக் கடைபிடித்தல் நன்று என்றும் கூறுகின்றது. வேதமும்

நூல்களும் குறிப்பிடும் அறத்தினைக் கடைப்பிடிப்பவர் தவத்தினை மேற்கொள்வர். முத்தியும் அடைவர். இதனை,

திறந்தரு முத்தியுஞ் செல்வமும் வேண்டின்
மறந்தும் அறநெறியே ஆற்றல் வேண்டும் (258)

என்று திருமந்திரம் குறிப்பிடுகின்றது. இதனை ஒழுக்கத்தின் அறம் என்றும் கூறலாம்.

உண்மைக்கு மாறானது பொய். பிற உயிர்களுக்கு தீங்கு ஏற்படாது நன்மை விளையும் என்றார் பொய்யும் ஏற்கத் தக்கதே என்பது வள்ளுவர் வாக்கு. ஆனால் பொய்யால் துன்பம் ஏற்படும் என்று கூறி, அதனை விலக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறது மணிமேகலை. திருமந்திரம் பொய் என்ற சொல்லை, இந்த உலகம் பொய்யானது என்னும் பொருளில் எடுத்தாளுகிறது. மெய் என்ற சொல் ஆதியும் அந்தமும் இல்லாத இறைவனைக் குறிக்கும் ஒரு சொல்லாகிப் பயன்படுத்தப்படுகிறது. மேலும் கொல்லாமைக்கு திருமந்திரத்தில்,

பற்றாய நற்குரு பூசைக்கும் பன்மலர்
மற்றோர் அணுக்களைக் கொல்லாமை ஒண்மலர்
நற்றார் நடுக்கற்ற தீபமுஞ் சித்தமும்
உற்றாரும் ஆன அமர்த்திடமே (197)

என்னும் பாடல் கொல்லாமைக்குச் சிறந்த சான்றாகும்.

புலால் மறுத்தல், கள்ளும் காமமும், களவு, பொற் கூறல் முதலான பாதகங்களை அறவே நீக்கி, அன்பும் அறமும் சார்ந்த ஒழுக்கநெறி நின்ற சிவனடி சார்ந்தோர் பேரன்பமாகிய வீடுபேற்றைப் பெறுவார். திருமந்திரம் சமுதாயத்திற்குத் தரும் அறம் இதுவே ஆகும்.

முடிவுரை

திருமந்திரம் அன்பு, அறம், ஈகை முதலியவற்றைப் பெரிதும் வலியுறுத்துகின்றது. இறைவனின் அன்பும் உறவின் அன்பும் மக்களை நல்லநெறியில் கொண்டு செல்கிறது. சமுதாயத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்புள்ள செய்திகள் திருமந்திரத்தில் நிரம்பிக் கிடக்கின்றன.

உலக அரங்கில் தமிழ்ச் சமுதாயமும் இந்திய நாடும் சிறந்த இடத்தைப் பெறுவதற்கான சமுதாயக் கருத்துகளும் சிந்தனைகளும் திருமந்திரத்தில் பரவலாகக் காணப்படுகின்றன. அதனால் தான் திருமந்திரத்தை காலத்தால் அழியாதது என்கின்றோம். அது மிகை அல்ல.

சான்று: 1. பாஸ்கல் கிஸ்பர்ட், சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள், ப. 128

திருமந்திரத்தில் திருமந்திர மாலை



சு. முத்து
சித்த மருத்துவ பண்டிதர், வர்ம ஆசான்,
சென்னை 100.
கைபேசி 9841269585
மின்னஞ்சல்: s.muthu9229@gmail.com

கடவுள் வாழ்த்து

ஐந்து கரத்தனை ஆணை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்துஅடி போற்று கின்றேனே (2)

இப்பாடல் இடைகாலச் செறுகலாகத் திருமந்திரம், திருமந்திர மாலைக்குப் பொதுவாகப் பாடப்பட்டுள்ளது.

யோகம் பற்றிய சித்தர்களின் பொதுக் கருத்துகளையும் தலை சிறந்த ஞானிகளின் கருத்துகளையும் இரண்டறக்கலந்து கிடைத்துள்ளது திருமூலரின் திருமந்திரம் என்ற யோகநூல். இதில் அமைந்துள்ள ஒன்பது பகுதிகளும் தந்திரம் என்று அழைக்கப் படுகிறது. இந்த ஒன்பது தந்திரத்தில் அட்டங்கா யோகத்தைப் பலவாராக விவரித்துக் கூறுகிறது.

திருமந்திரம் 3000 பாடல் கொண்ட தொகுப்பு நூலாகும். இதில் சுனிய சம்பாஷினி என்ற பகுதி 65 பாடல்களைக் கொண்டது. இதில் மந்திர சாத்திரம் பற்றிய பொதுச்செய்திகள் கூறப்படுகின்றன. திருமந்திர மாலை எனும் இந்நூலையும் திருமூலரே எழுதினார் என்பர்.

மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ்
மூலன் உரை செய்த முந்நூறு மந்திரம்
மூலன் உரை செய்த முப்பது உபதேசம்
மூலன் உறை செய்த மூன்றும் ஒன்றாமே

இப்பாடல் திருமந்திரத்தின் இறுதியில் காணப்படுகிறது. ஆதலால் திருமூலர் எழுதியது மூன்று நூல்கள் என்று தெரிகின்றது. அவை, 1. திருமந்திரம் - 3000 பாடல்கள், 2. திருந்திர மாலை - 300 பாடல்கள், 3. (திருமந்திர) உபதேசம் - 30 பாடல்கள். இந்த மூன்று நூல்களில் திருமந்திர உபதேச நூல் நடைமுறையில் இல்லை.

தந்திரம் கலை (திருமந்திரம்) என்பது சரியை, கிரியை என்று கூறப்படும். இதில் பூசை விதிகள் மந்திரச் செய்கைகள் யாவும் தந்திரம் எனப்படும். கலை என்பது அறிவு எனப்படும்.

இதனாலேயே திருமந்திரத்தின் உட்பகுதிகள் தந்திரம் என்று கூறப்பட்டன. அவை எட்டு வகையான மந்திரச் செய்கைகள் பற்றிக் கூறுகின்றது. வசியம், மோகனம், தம்பம், உச்சாடனம், ஆகாஷணம், வித்வேஷணம், பேதனம், மாரணம் முதலிய எட்டுச் செயல்கள்.

தன்னை அடைந்தவர்களைக் காப்பதும், தத்துவ மந்திரங்களின் பொருள்களை விளக்குவதும் தந்திரம் என்று ஆகமங்கள் கூறுகின்றன.

தந்திரம் என்பது பொதுஅறிமுகம். மந்திரம் என்பது நேரிடையான சிறப்பு அனுபவம். எனவே உபதேசக் கலை என்பதில் கற்று தத்துவர்த்தங்களாகிய ஞானச் செய்தியாக திருமந்திரத்தில் கூறப்பட்டுருக்கின்றது.

சரியை, கிரியை இரண்டும் தந்திரங்கலையிலும் - யோகம் மந்திரக்கலையிலும் - ஞானம் உபதேசக் கலையிலும் அடங்கும்.

மந்திரம் என்னும் சொல்லைப் பிரித்துப் பார்த்தால்,

மந் = நினைத்தல் (அறிதல், உணர்தல்)

திரம் = காத்தல்

அதாவது நினைப்பவரைக் காப்பது மந்திரமாகும்.

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப — தொல் 1435

தமிழின் மிகப்பழைமையான நூலில் மந்திரம் இவ்வாறு விளக்கப்பட்டுள்ளது.

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும் — குறள் 28

இதனால் மந்திரத்தின் சிறப்பு தெளிவாகப் பெற்றுள்ளது.

அருளோடு சொன்னாலும், சினத்தோடு கூறினாலும் நினைத்துக் கூறியது நினைத்தபடியே பலிக்கும் நிறைமொழியை உடைய பெரியோர்களின் பெருமையை, அவர் கூறிய மறை மொழியாகிய மந்திரத்தின் சக்தி காட்டிவிடும். அதாவது அவர்தம் பெருமை என்பது அவர் செய்த தவத்தின் ஆற்றலைக் கூறியதாம்.

இருபது ஏழுத்துக்களுக்குள் அடங்கியது மந்திரமாகும். அதற்கு மேம்பட்டது மாலா மந்திரம் எனப்படும். இதை மகா மந்திரம் எனவும் கூறுவர். காயத்ரி மந்திரம் 24 ஏழத்துக்களால் ஆனது. இம்மந்திரமாலை நூல் பெரும்பாலும் 12 எழுத்துக்களாலேயே ஒவ்வோர் அடியும் பாடப்பட்டுருக்கிறது. கடவுள் உருவம் தூலம் - சூக்குமம் - ஆதி சூக்குமம் என மூன்று வகைப்படும் எனக் கூறி உள்ளன.

தூலம் = வெளியில் தெரிவது
சூக்குமம் = வெளியில் தெரியாதது
அதி சூக்குமம் = மிகவும் இரகசியமானது

மந்திரம் என்பது கடவுளின் தூல வடிவம் ஆனது. எல்லா உயிர்களுக்கும் உயிராக இருப்பது கடவுளின் சூக்கும வடிவமாகும்.

சத் (உண்மை) - வித் (அறிவு) - ஆனந்தம் (இன்பம்) ஆகிய வடிவமாகவே உள்ள சித்சக்தியே அதிசூக்கும வடிவமாகும். இது மந்திரமாலையில் கூறப்பட்டுள்ளது.

நினைத்தால் நினைக்கப்பட்டவருக்குத் தும்மல்வரும் என்பதைத் திருக்குறளின் புலவி நுணுக்கம் அதிகாரத்தில் காணலாம். இதுபோல் கடவுள் பற்றிய மந்திரம் உச்சரித்ததும் கடவுள். அருள் உச்சரித்தவனுக்குக் கிடைக்கும் என்று உணரலாம். இவற்றைச் செய்வது மாயை எனும் சக்தியாகும். அது மூன்று வகைப்படும் அவை, 1. சுத்த மாயை, 2. அசுத்த மாயை, 3. பிரகிநதிமாயை கடவுள் வடிவமாக இருப்பது சுத்த மாயை. இது நன்மை தவிர வேறு எதுவும் தராது.

கடவுளுக்கும் மனிதனுக்கும் நடுவில் உள்ளது அசுத்த மாயை இதில் நன்மை, தீமை ஆகிய இரண்டும் உண்டு பிரகிநதி மாயை என்பது மூவகைக் குணங்களுக்கும் கட்டுப்பட்டு. தத்துவங்கள் 36 ஆக உள்ள பகுதியைச் சூழ்ந்தது. இது தெளிவடைய முடியாத பகுதி என்று கூறப்பட்டுள்ளது.

மந்திரவகைகள்

மந்திரங்கள் பலவகைகளில் தலைசிறந்த 71 வகையாகக் கூறப்படும். அவற்றிலும் சிறந்தது 24 மந்திரங்கள், 1. மூல மந்திரம், 2. பீஜ மந்திரம் (விதை மந்திரம்), 3. பஞ்ச மந்திரம், 4. சடங்கு மந்திரம், 5. சம் ஹிதா மந்திரம், 6. காயத்ரி மந்திரம், 7. அஜபா மந்திரம், 8. பிராணப் பிரதிட்டா மந்திரம், 9. அட்டகர்ம மந்திரம், 10. பஞ்ச கிருத்திய மந்திரம், 11. எகாட்சர மந்திரம், 12. கிரியட்சரி மந்திரம், 13. பஞ்சாட்சர மந்திரம், 14. சடாட்சர மந்திரம், 15. அட்டாட்சரா மந்திரம், 16. நவாட்சரி மந்திரம், 17. பஞ்ச தசாட்சரி மந்திரம், 18. பிராசாத மந்திரம், 19. அட்டகர்ம மந்திரம், 20. நியாச மந்திரம், 21. கபச மந்திரம், 22. உபதேச மந்திரம், 23. தனித் தனித் தெய்வ மந்திரம், 24. எல்லாப் பொருள்களுக்கும் உரிய அதி தேவதை மந்திரங்கள்

இந்த நூலில் மூல மந்திரமாகக் கூறப்படுவது பஞ்சதசாட்சரி என்னும் ஸ்ரீவித்தை மந்திரமே ஆகும். இதைப் போல மேலும் பல மந்திரப்பகுதிகள் உள்ளது.

ஆண்பெண் மந்திரம்

விசயம் செய்தல், உச்சாடணம், விட நிக்கவும் என்னும் காரணங்களுக்குப் பயன்படும் மந்திரங்கள் ஆண் மந்திரம் எனப்படும். நோய் நீக்குவதற்குரிய மந்திரங்கள் யாவும் பெண் மந்திரமாம். மற்றக் காரியங்களுக்கு நபுஞ்சக (ஆண் பெண் கலப்பு) தெய்வப் பயன்கள் உரியணவர்மம் என்று கூறுகிறது.

ஆண் தெய்வப் பெயர்களைக் கொண்ட பூசைப்பகுதி மந்திரம் என வழங்கப்படும். பெண் தெய்வப் பெயர்களைக் கொண்ட பூசைப் பகுதி வித்தை என வழங்கப்படும் இரண்டுமே வேதத் தொடர்பும் விதிமுறை மரபும் கொண்டவையாகும் என்று கூறுகின்றன.

தந்திரம், மந்திரம் என்பவற்றை அடுத்து வருவது எந்திரம் ஆகும். கோடுகளால் வரைந்து அறைகள் உண்டாக்கி அதில் ஓசையை வெளிப்படுத்தியும் எழுதியும் வழிபடுவது எந்திரமாகும். இதையே சக்கரம் என்றும் கூறுவர்.

மந்திரம் - உயிர் போன்றது
எந்திரம் - பிராண சக்தி போன்றது
விக்ரஷம் - உடம்பைப் போன்றது
தந்திரம் - உபதேசிக்கும் அறிவு

மூல எந்திரம் - பூசை எந்திரம் - தியான எந்திரம் - தாரண எந்திரம் - ரட்சா எந்திரம் - விரயோக எந்திரம் - ஆறாதாரச் சக்கரம் - அஷ்டகர்ம சக்கரம் - ஏரொளிச் சக்கரம் - காலச் சக்கரம் இராசிச் சக்கரம் - முக்கோணச் சக்கரம் முதலிய பல சக்கரங்கள் உள்ளன.

எய்தி வழிப்படில் எய்தாதன இல்லை
எய்தி வழிப்படில் இந்திரன் செல்லமும்
எய்தி வழிப்படில் எண்சித்தி உண்டாகும்
எய்தி வழிப்படில் ஏய்திடும் முத்தியே

இந்த எந்திரத்தை ஏற்று முறைப்படி வழிபாடு செய்தால் அடைய முடியாத எல்லாப் பயனும் அடையலாம். இந்திரன் போல் செல்வமும் பெறலாம். அட்டமாசித்திகளும் கிடைக்கும் முக்கிப் பேறும் இறுதியில் உண்டாகும் என்று இப்பாடலில் திருமூலர் கூறியுள்ளார். மேலும் அட்டாசித்திகளையும் எண்ணியலால் எந்திரத்தையும் திருமந்திர மாலையும் மிக சிறப்பாகக் கூறியுள்ளார். திருமந்திரத்தில் வாழ்வியல் நெறி, யோக முறைகளையும் தாண்டி மந்திர மாலை மூலமாகவும் ஒருவனுக்குச் சிவ கடாக்ஷம் பிறவாமையும் முக்தி கிடைக்கும்.

திருமந்திரமே சிறப்பு பொக்கிஷம், திருந்திரமே வாழ்வின் பொக்கிஷம், திருமந்திரமே காலத்தின் பொக்கிஷம். இதை அறிந்தவன் வாழ்வாங்கு வாழ்வான்.

24. திருமூலரின் திருமந்திரம் தந்த வாழ்வியல்



இளம் டாக்டர் ஹேமாத்திரிதாசன்
17, சூர்யா நகர், அனெக்ஸ் 2,
குன்றத்தூர், சென்னை 69.
கைபேசி 8148583523
மின்னஞ்சல்: hemathiridasan@gmail.com

சித்தர் பாரம்பரியத்தின் தலைவராய் விளங்கியவரும் முதல் சித்தரும், சித்தர்களுள் சக்கரவர்த்தியுமானவர் திருமூலர். அவர் திருமந்திரம் என்ற பொக்கிசத்தை உலகத்திற்கு கொடுத்து உள்ளார். திருமந்திரம் சைவத் திருமுறைகள் பன்னிரண்டில் பத்தாம் திருமுறையாக வைக்கப்பட்டு உள்ளது. திருமந்திரத்தில் திரு என்பது தெய்வத் தன்மை பெற்றது, மந்திரம் என்பது வேதம், ஐந்தெழுத்து இரகசியச் செய்திகள், மந்திரச் சக்தி தரும் மந்திர எழுத்துக்கள் ஆகும். முதன் முதலாகத் தமிழில் யோகத்தை விரிவாகக் கூரியவர். சுமார் 1700 ஆண்டுகளுக்குமுன் தோன்றியவர் திருமூலர். இன்றைய அறிவியல் கண்டறிந்தை எல்லாம் மெஞ்ஞானத்தால் சித்தர்கள் கண்டறிந்து கூறி உள்ளனர்.

திருமந்திரத்தில் சங்கச் சாயலோ, சமய காலத்துச் சாயலோ இல்லை. இருண்ட காலம் கி.பி. 3 முதல் 5 வரை. அக்காலத்தில் தமிழகத்தைப் பல்லவர்கள் (கி.பி. 4 முதல் 7 வரை) ஆண்டனர். அவர்கள் வடமொழியை ஆதரித்தனர். திருமூலர் கூறுவது ஆகமாந்தம். இம்முறை கி.பி. 4 முதல் கி.பி. 5 வரை பொருந்தும் என்கின்றனர். வருடத்திற்கு ஒரு பாடலாக 3000 பாடல்கள் பாடப் பட்டு உள்ளது. இதன்மூலம் அவர் 3000 ஆண்டுகள் இருந்தார் என்பது அறியப்படுகிறது. திருமந்திரமே சாத்திரத்திற்கும், சிவகதிக்கும் வித்து, இதுவே சிவம் ஆகும்.

யான் பெற்ற இன்ம் பெறுக இவ்வையகம் (85)
ஒன்றே குலம் ஒருவனே தேவனும் (2104)
அன்பே சிவம் (270)

விழுமிய பொருளை எளிமையில் எடுத்துரைக்கும் சிறப்பு திருமந்திரத்திற்கு உண்டு. திருமூலர், உடலை வளர்த்தே உயிரை வளர்த்தே என்று உயிருக்கு உடல் முக்கியம் என்பதை வலியுறுத்துகிறார். ஒவ்வொருவருள்ளும் இறைவனைக் காண முடியும் என்றார். அறிவை அறிவால் அறிந்தவர்கள் சித்தர்கள், மனிதன் உட்பட அனைத்து உயிரினங்களும் நோயின்றி வாழ மருத்துவம் கூறியவர்கள். திருமூலர் கூடுவிட்டுக் கூடுபாய்தல் என்ற கலையை நன்கு அறிந்தவர்.

திருமூலர் காலச் சமுதாநிலை

இவர் காலத்தில் பல சமயங்கள் இருந்துள்ளன. சைவம், வைணவம், சமணம், சாங்கியம், பௌத்தம் முதலான சமயங் களுள் மனிதர்களுக்குள் பூசல்களும் பகைமையும் தோன்றி யுள்ளன. சமயப் பற்று உள்ளவர்களை,

நீங்காச் சமயத்துள் நின்றொழித் தார்களே

என்று சாடுகின்றார். சமயத்துறையில் ஈடுபட்ட முதிர்ந்த அறிவு உள்ளவர்கள் கூட இறைபற்றிய தெளிவு இன்றி இருந்தனர் என்கின்றார். இவர் ஆறுசமயங்கள் என்று கூறுவதால் மக்கள் இடையே காழ்ப்புணர்வு இருந்தது என்பது தெரிகின்றது. அதனால்தான் திருமூலர் சமயங்கள் ஆறும் ஒன்றே; அவற்றின் தலைவன் ஒருவனே என்கின்றார். பேரூர் ஒன்றுக்கு வழி ஆறு. அதாவது ஓர் ஊரை அடையப் பல வழிகள் இருக்கலாம். இதுபோல்தான் இறை என்பது ஒன்றுதான். அதை அடையத்தான் பல சமயங்கள் எழுந்துள்ளன. அந்த இறையையும் நாம் நம்முள் காணமுடியும் என்று கூறி அடைவதற்கான வழிமுறைகளையும் கூறுகின்றார். இருந்தாலும் உருவவழிபாடு மக்களிடையே இருப்பதால்தான் பல வேறுபட்ட கருத்துகள் எழுந்துள்ளன. எனவே இது தேவையில்லை என்கின்றார். உருவவழிபாடு என்பது நாம் உள்ளத்தால் இறையை உணர இது ஒரு வழிகாட்டியாக அமையும் என்பதற்காகத் தான் வைத்தனர். எனவே நமக்கு வழிகாட்டி வழி தான் காட்டும் என்று புரிந்து கொள்ள வேண்டும். அது எந்த ஊரையும் சென்று அடையாது. வாகனத்தின்வழி அல்லது நடந்து சென்று நாம்தான் அடைய வேண்டும். எனவே சமயங்கள் அன்பை வலியுறுத்துகின்றன; சமரச எண்ணத்தை ஏற்படுத்துகின்றன. அன்புதான் இறைவன் என்பது திருமூலர் கோட்பாடு. எனவே இவர் அன்புநெறியே சிவநெறி என்பதால் அன்புநெறியை வற்புறுத்துகின்றார்.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார் (257)

என்ற பாடலில் இறைவன் வேறு அன்பு வேறு அல்ல இரண்டும் ஒன்றே என்பதை உணர்த்துகின்றார்.

பொருளைச் சேர்த்து வைத்துத் தாமும் உண்ணாது பிறருக்கும் தராதவர்களால் சமூகத்திற்கு எவ்விதப் பயனும் இல்லை என்கின்றார். உடல், இளமை, செல்வம் முதலியன என்றும் மயக்கத்தைத் தருவன. உலகியல் வாழ்வில் அவை நிலைத்து இருப்பதில்லை. எனவே, அவை நிலையானவை அல்ல என்பதை முதல் தந்திரத்திலேயே எடுத்துரைக்கின்றார்.

இறப்பில்லாத பெருநிலையை அடையலாம் எனும் கொள்கை கொண்டவர் திருமூலர். பின்வந்த சித்தர்கள் பலரும் இதனைக் கூறியிருப்பதை நாம் அறியமுடிகின்றது. இம்மெய்யினுள் மெய்யான இறைவனைக்காண உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன் என்று கூறுகின்றார்.

கடவுள்

கடவுள் வாழ்த்துள் கடவுள் என்ற சொல் இல்லை. ஆனால் எங்கும் கடந்து நின்றவன், பொது இயல்பினன் என்பது காட்டப் படுகின்றது. சிவன், பசு, பாசத்து நாதன், பரமன், ஈசன், கண்ணுதலான், அரன், வாணுதல் பாகன், பிஞ்ஞகன், நந்தி எனும் சொற்கள் சிவனைக் குறிக்கின்றன. சிவனைக் குருவாகக் கொண்டு நெறிகாட்டுவதுபோல் அமைகின்றது. கடவுள் வாழ்த்தில் வரும்,

நரைபசு பாசத்து நாதனை உள்ளி
நரைபசு பாசத்து ஒருங்கவல் லார்க்குத்
திரைபசு பாவச் செழுங்கடல் நீந்திக்
கரைபசு பாசங் கடந்தெய்த லாமே (49)

என்ற பாடல் ஆன்மாவாகிய பசு பாசத்தன்மைகளை உணர்ந்து பதியோடு பொருந்தியிருந்தால் பாவக்கடலைக் கடந்து முக்திக்கரையை அடையலாம் என்பதை உணர்த்துகின்றது.

பொதுவாகச் சைவக்கோட்பாட்டினர், பதி-பசு-பாசம் என்னும் முப்பொருள் உண்மையினைப் பேசுகின்றனர். திருமூலர் இம்மூன்றும் ஒன்றோடொன்று தொடர்புடையவையாக விளக்குகின்றார். மனத்தினால் நினைத்து காணமுடியாத ஒளியினையும், வாயினால் சொல்லி விளக்க முடியாத பிரணவத் தொனியையும் எனக்கு உணர்த்தினான். பின் நான் அவனது திருவடிகளான விந்துநாதங்களை எனது தலையில் குடி நின்றேன் என்கின்றார் என்று மூலாரின் கூற்றாகும்.

ஐம்புல மயக்கத்தில் வாழ்வது பொய், அதிலிருந்து விடுபட்டு ஞானவாழ்வில் தலைப்படுதலே மெய் எனக்கூற வேண்டும். மனம்மொழிமெய்களை அடக்கி மௌனியாக வாழ்தலே, ஞானி ஒருவன் வாழ்க்கை என்கின்றார். வேட்கையை விடுத்து, ஞானத்தைச் சார்ந்தவர்களே தம் உண்மை நிலையை அறிய முடியும் என்பதைத் தெளிவாகக் கூறுகிறார் வாழ்வியல் நோக்கத்தைத் திருமூலர்.

அன்பே சிவம், அறிவே கடவுள்

என்கிறார்.

25. திருமந்திரம் பேசும் கடவுள் துகள்



ச. அகிலாவதி
ஆசிரியர்,
புதுக்கோட்டை

திமூலர் ஆன்மிகத்தை அறிவியலினுள் புகுத்திய ஞானி. திருமூலர் ஆன்மிகம் கடந்து, அறிவியல் கடந்து, மதம் கடந்து, மனிதன் செழிக்க 'அன்பே சிவம்' என்று போதித்த மகான். 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்னும் உயர்ந்த தத்துவத்தை இந்த உலகிற்கே தந்தருளிய மாமேதை.

திருமந்திரம் ஓர் அறிவியல்

இந்நூலில் அற்புதங்களும் இரகசியங்களும் ஆச்சரியங்களும் ஏராளம். இன்னும் மனித ஆற்றலினால் கண்டுபிடிக்க முடியாத பேருண்மைகள் இந்நூலில் புதைந்துள்ளன. ஆன்மிகத்தை அறிவியலாக்கிய திருமூலரின் சிந்தனை ஆற்றலும் சக்தியும் மகத்தானது. திருமந்திரம் உலகிற்கே வழிகாட்டும் ஓர் அறிவியல் நூல். இதை உணர இன்றைய அறிவியலுக்கு ஒரு நூற்றாண்டு தேவைப்படலாம். இந்நூலில் காணப்படும் அறிவியல், கணிதவியல், மருத்துவவியல், புவியியல் குறித்த விவரங்கள் அளவிட இயலாதவை. திருமந்திரம் கூறும் அனைத்துச் செய்திகளுமே ஒரு தெளிவான சிந்தனையை நோக்கியே பயனித்துள்ளது.

திருமந்திரம் ஒரு குட்டி வேதம்

இறைவனால் அருளப்பட்ட வேதங்கள் ஆகமங்களின் சாரமாகவே திருமந்திரம் கருதப்படுகிறது. தன்னுடைய குருநாதர் நந்திப்பெருமானின் அருள் பெற்ற எட்டுப்பேரில் தானும் ஒருவர் என்று திருமூலர் குறிப்பிடுகிறார். இறைவனிடமிருந்து வேதங்களையும் ஆகமங்களையும் நந்திப்பெருமான் பெற்றுச் சிவகாமம் என்னும் கருவிநூலைப் படைத்ததாகவும் தன் குருநாதரிடமிருந்து சிவகாமத்தைப் பெற்றுத் திருமந்திரமாலை அருளியதாகவும் குறிப்பிடுகிறார் திருமூலர். ஆகமங்கள் 28 என்றாலும் அதன் சுருங்கிய வடிவமாக ஒன்பது ஆகமங்களின் சாரமாகவே திருமந்திரம் உருப்பெற்றுள்ளது.

ஆறாரின் தன்மை அறியா திருந்தேனுக்கு
ஆறாறின் தன்மை அறிவித்தான் பேர்நந்தி
ஆறாறின் தன்மை அருளால் அறிந்தபின்
ஆறாறுக் கப்புற மாதுகின் றானே

திருமன்திரம் பேசும் கடவுள் துகள்

இன்று உலக ஆய்வாளர்கள் தேடிக்கொண்டிருக்கும் ஒரு அறிய உண்மையைப் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திருமூலர் சொல்லியுள்ளார்.

மேவிய சீவன் வடிவது சொல்லிடில்
கோவின் மயிரொன்று நூறுடன் கூறிட்டு
மேவிய கூறது ஆயிரம் ஆயினால்
ஆவியின் கூறு நாறாயிரத்து ஒன்றே

திரு. 7-ம் தந்திரம் சீவன் 29

அதாவது சிவனுடைய வடிவைச் சொல்ல வேண்டுமாயின் ஒரு பசுவின் முடியை எடுத்து அதை நூறு கூறிட்டு, பின்பு அதில் ஒன்றை எடுத்து 1000 ஆகப்பிரித்து, அதில் ஒன்றை 4000 ஆகப்பிரித்தால். அதில் ஒன்றே சிவனின் வடிவு என்று கூறியுள்ளார்.

இப்பொழுது இன்றைய ஆய்வாளர்களின் கண்டுபிடிப்பைப் பார்ப்போம். ஒரு ஹைட்ரஜன் அணுவின் சுற்றளவு 0.000000212mm. சரி இப்பொழுது திருமூலர் கூற்றுப்படி கணக் கிட்டுப்பார்ப்போம். ஒரு மனிதனின் முடியானது 30-80 மைக் ரோன் ஆக உள்ளது. எனவே நாம் 50 மைக்ரோன் என்றே வைத்துக் கொள்வோம். ஒரு மயிரின் சுற்றளவு 50 மைக்ரோன். 100 மைக்ரோன் = 0.1mm. 50 மைக்ரோன் = 0.05mm. இப்பொழுது திருமூலர் கூறியவாறு ஒரு முடியை 100 ஆகப் பிரிப்போம் 0.05/100 = 0.0005mm. அதில் ஒன்றை 1000 ஆல் வகுப்போம் 0.0005/1000 = 0.0000005mm. இப்பொழுது நமக்குக் கிடைத்த பதிலை 4000 ஆல் வகுத்து நாம் சிவனின் உருவத்தின் அளவைக் காணலாம் என்கிறார். திருமூலர் 0.0000005/4000 = 0.000000000125mm.

ஆகவே இவர் சிவனின் அளவாகக் குறிப்பிடுவது சராசரியாக 0.000000000125mm. இப்பொழுது கடவுள் எனக் கருதப்படும் அளவானது நம் அறிவியல் ஆய்வாளர்களால் அளக்கப்பட்ட ஹைட்ரஜன் அணுவை விடப் பன்மடங்கு சிறியதாக உள்ளது. சரி அதைவிடச் சிறியதாக என்ன இருக்க முடியும் என்கிறீர்களா? அதைத் தான் ஷிக்ஸ்போசோன் என்ற பெயரில் இன்றைய ஆய்வாளர்கள் தேடிக்கொண்டிருக்கிறனர். நாம் பொதுவாகச் சொல்லுவோம். 'அவனின்றி ஓர் அணுவும் அசையாது' என்று. இப்பொழுது ஹிக்ஸ் போசோனில் சொல்வது அணு தனியாகச்

செயல்படவில்லை என்பதே. அதற்குள் அணு ஒன்று உள்ளது. அது தான் கடவுள் துகள் (God's particle) என்றும் போஸோன் கண்டுபிடிப்பு. அதன் அளவு இன்னும் அறியப்படவில்லை அறியப்படும் பொழுது மேலும் புரியும் திருமூலரின் மகத்துவம்.

ஹிக்ஸ்போசோனின் உருவம்

சிவனின் அளவைச் சொன்ன திருமூலர் சிவனின் உருவத்தை யும் சொல்லியுள்ளார். அவ்வளவு சிறிய சிவனின் உருவம் எப்படியிருக்கும் என்று நமக்கு ஓர் ஆர்வம் உண்டாவது இயல்பு. இதோ அவனின் உருவஅழகைச் சொல்லும் திருமூலரின் வார்த்தைகள்.

கரந்துங் கரந்திலன் கண்ணுக்குந் தோன்றான்
பரந்த சடையான் பரும்பொன் நிறத்தான்
அருந்தவர்க்கல்லால் அணுகளுமாகான்
விரைந்து தொழப்படும் வெண்மதியானே

ஆறாம் தந்திரம் - தவம் - 3

இதில் அவர் கூறியிருப்பது என்னவெனில் அனைத்திலும் கலந்தும் கலக்காமல் இருப்பவன். கண்ணுக்குத் தெரியாதவன், பரந்த சடையுடையவன் பசும் பொன்நிறத்தில் இருப்பவன். நினைப்பவர்க்கெல்லாம் கிடைக்காதவன், அனைவரையும் மயக்கும் வெண்ணிலவானவன். இதுதான் திருமூலர் சித்திரிக்கும் சிவனின் வடிவம். இப்பொழுது திருமூலரின் கூற்றுப்படி நம் கண்முன்னே ஒரு மனிதனைப் பரந்த முடியுடன் நினைத்துக் கொள்வோம். இப்பொழுது உங்கள் கண்முன்னே தெரியும் சிவனின் வடிவம் பொன்னொளியுடன் இருப்பதாக நினைத்துக் கொள்வோம். இபொழுது திருமூலரின் கூற்றுப்படி அந்த உருவத்தை கண்ணுக்குப் புலப்படாத சிறிய உருவமாக மாற்றுங்கள். இந்தத் துகள் தான் இன்றைய ஆய்வாளர்கள் அடையாளங் காணப்பட்டிருக்கும், அனுமானம் செய்து கொண்டிருக்கும் அந்தக் கடவுள் துகளாக இருக்கலாம். என்ன ஆச்சரியமூட்டும் தகவல். கடவுள் துகள் மேலும் மெய்ப்பிக்கப் படும்பொழுது திருமந்திரம் தனியிருக்கையில் அமர்ந்து கோலோச்சும்.

அறிவியல் அரங்கேறிய சிதம்பரம் நடராஜர் கோயில்

சர்வதேச ஆன்மிக அமைப்புகள் கடந்த சில ஆண்டுகளாக, சிலகோடி டாலர்களைச் செலவு செய்து தீவிர ஆராய்ச்சி செய்து, சிதம்பரம் நடராஜர் கால் பெருவிரலில் தான் மொத்த பூமியின் காந்த மையப்புள்ளி இருப்பதாகக் கண்டறியப்

பட்டுள்ளது. வரும் செய்திகள் இன்றைய நவீன அறிவியல் உலகத்தையே ஆச்சரியத்தில் மூழ்கடித்துள்ளது. மிகப்பெரிய வானவியல் ஆராய்ச்சிக் கூடங்கள், சிறந்த அறிவியல் ஆராய்ச்சி யாளர்கள், நவீனகருவிகள், கோப்புகள், கணினிகள் என்று எதுவுமே இல்லாத காலத்தில் சிதம்பர நடராஜர் கோவிலின் சிறப்புகள் பற்றித் திருமூலர் பேசியுள்ளார் என்பது நம்மை வியப்பில் உச்சத்திற்கே அழைத்துச் செல்கிறது. நடராஜரின் ஆனந்த தாண்டவம் ''காஸ்மிக்டான்ஸ்' என்று பலவெளிநாட்டு அறிஞர்களால் அழைக்கப்படுகிறது. அணுத்துகள் அசைந்த படியே இருக்கும் என்ற உண்மையை உணர்த்துவதற்காகவே ஆடும் நடராஜர்சிலை வடிவமைக்கப்பட்டது என்பது ஆன்மிகத்தில் ஒரு மைல்கல்.

அதுவே மனிதன் வடிவல் சிவலிங்கம். அதுவே சிதம்பரம் அதுவே சதாசிவம், அதுவே அவரின் நடனம் என்று பொருள் படுகிறது. சிதம்பரம் நடராஜர் கோவில் இன்றைய அறிவிய லுடன் மட்டுமல்ல மனிதர்களின் உடற்கூறுகளும் பொருந்து வதும் அதிசயமே. ஆகவேதான் நம்மை அங்குச் சென்று வழிபட வைத்துக் காந்த சக்திக்கு உட்பட்டு நோயின்றி வாழத் திருமூலர் வழிகாட்டியுள்ளார்.

சிதம்பர ரகசியம்

இங்கு இறைவன் ஆகாய உருவில் இருக்கிறார் என்பதை உணர்த்துவதே. அகண்டப் பெருவெளியில் நிறைந்திருக்கும் இறைவனை, வெறும் வெளியையே காட்டி, இங்கு வழிபட வகை செய்யப்பட்டுள்ளது. இது சிதம்பர இரகசியமாகப் பார்க்கப் பட்டாலும் உண்மை இந்த உலகின் அறிவியல் கோட்பாடு.

திருக்குறளும் திருமந்திரமும்

திருமந்திரமும் திருக்குறளும் ஒன்றை ஒன்று தழுவியதாகப் பார்க்கப்படுகிறது. இந்த இரண்டு நூல்களுமே தனி தனிதனின் நேர்த்தியான வாழ்விற்குத் தேவையான வாழ்வியல் நுணுக்கங் களை அள்ளித்தரும் வாழ்வியல் கருவூலமாக உள்ளது. திருமந்திரம் சமயம் சார்ந்து சைவர்களுக்கு இந்த அருநிதியமாக மட்டுமே பார்க்கப்படுகிறது. ஆனால் குறள் உலகப் பொது மறையாக உயர்ந்து நிற்கின்றது. இரண்டு நூல்களுமே உடல், மனம், ஆன்மா பற்றி உரைக்கக் கூடிய ஒரு மகத்தான படைப்பு. திருமந்திரத்தில் கூறப்பட்டுள்ள உயிர்சக்தி, ஒளிநிலை, நாம் கண்டிராத காட்சிகள், பயன்படுத்தியிராத இயக்கங்கள் எல்லாம் வியப்புக்குரிய விஷயங்கள். குரு, இலக்கணம், சிவநெறி, சக்தி பற்றிய அருமையான விளக்கமாய் திருமந்திரம் அமைந்துள்ளது.

நான் பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரந்
தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே

சிறப்புப்பாயிரம் - வேதச்சிறப்பு - 3

திருக்குறள் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பிரிவுகளில் வாழ்க்கை அறநெறிக் கருத்துக்களை வகுத்துள்ளது. திருமந்திரம் வீடுபேறு என்னும் நான்காவது பிரிவையும் தன்னகத்தே கொண்டுள்ளது. ஒருவன் அறம், பொருள், இன்பம் என்னும் அறநெறிப்படி வாழ்ந்தால் வீடுபேறு என்பது இறைவனின் அருட்கொடையாகக் கிடைக்கும் என்று வள்ளுவம் பேசுகிறது.

பெரும் சேர்த்த பெருமகான்கள்
தன்னிலவு ஆர்சடையார் தாம் தந்த
ஆகமப் பொருளை மண்ணின் மிசை
திருமூலர் வாக்கினால் தமிழ் வகுப்பு என உணர்ந்தாள்

சேக்கிழார்

கடவுளைத் தேடிய தாயுமானவர், ஔவையார், நம்பியாண்பானி நம்பி, பட்டிணத்தார், வள்ளலார் போன்ற பெரும் புலவர்கள் எல்லாம் திருமந்திர மாலையில் கூறப்பட்டுள்ள சைவ சித்தாந்த பக்தி நெறிகளைப் பார்த்துப் பரவசமுற்று வியந்து பாராட்டி, புகழ்ந்து அதைப் பின்பற்றியதாக வரலாற்றுச் செய்திகள் கூறுகின்றன. தமிழர்களின் வாழ்வியல் கருவூலமான திருமந்திரம் சொல்லியிருக்கும் பக்தி நெறிகளை, வாழ்வியல் நுணுக்கங்களை மனிதகுலம், மதங்களைக் கடந்து பின்பற்றத் தொடங்க வேண்டும். 'திருமந்திரம்' பேசும் ஆன்மிக அறிவியலை, எல்லையற்ற பேராற்றலாய் இந்த உலகம் உணரத் தொடங்குமேயானால் இன்னுமொரு உலகப் பொதுமறை தமிழின் வாயிலாக இந்த உலகிற்குக் கிடைக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

26. திருமந்திரம் மனநலம் பற்றிய சிந்தனைகள்



இரா. வேம்பு
ஆய்வியல் நிறைஞர்,
இராணி மேரி கல்லூரி,
சென்னை – 4.

முன்னுரை

மனம்போல் வாழ்க்கை என்பது முன்னோர்களின் வாக்கு. நமது எண்ணங்களே நமது வாழ்க்கையைத் தீர்மானிக்கின்றன. இதனையே பன்னிரு திருமுறைகளுள் பத்தாம் திருமுறையான திருமந்திரத்தில் குறிப்பிட்டிருக்கும் மனநலம் பற்றிய கருத்துகளை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்க மாகும்.

பன்னிரு திருமுறைகளுள், பத்தாம் திருமுறையாகத் திகழ்வது திருமந்திரம். இதை தமிழ் மூவாயிரம் என்றும் கூறுவர். இந்நூல் ஒன்பது தந்திரங்களும் நூற்றிதொண்ணூற்றைந்து உள் தலைப்பு களுள் உள்ளது. இவை வேதாந்த சித்தாந்த வெளி வாசல் தாண்டி நாதாந்த வடிவாக நாதனைக் காணும் ஞானம் உடையது திருமந்திரம். இவையே தமிழர் சமயம், தத்துவம், அறம் முதலியவை பேசப்படுகிறது. இந்நூல் பெரும்பாலும் பக்திக்கு முதலிடம் தருகிறது. இதுவே இதன் சிறப்பு. எனவேதான் இது வாழ்விற்கு வழிகாட்டியாக விளங்குகிறது.

பதினென் சித்தர்களுள், ஒருவராகக் குறிப்பிடப்படுபவர் திருமூலர். இவர் அட்டமா சித்திகள் கைவரப் பெற்ற தவயோகி ஆவார். இவர் திருக்கயிலாய மலையில் இருந்து புறப்பட்டுத் தென்னாடு வந்து திருவாவடுதுறை திருத்தலம் அடைந்து அங்கு எழுந்தருளியுள்ள 'செம்பெரன் தியாகேசரை' வணங்கி, கோயிலில் மேற்குப்பக்கம் உள்ள படர் அரசமரத்தடியில் அமர்ந்து யோக நிட்டை புரிந்து ஆண்டுக்கொரு பாடல் என்று மூவாயிரம் காலம் வாழ்ந்து, மூவாயிரம் தமிழ் பாடல்களைப் பாடினார் என்றும் இதுவே திருமந்திரம் என்றும் கூறப்படுகிறது. இவரது இயற்பெயர் சுந்தரநாதன் எனச் சில குறிப்புகள் குறிப்பிடு கின்றன. இவரின் திருமந்திரம் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முந்தையது என்றும், திருமூலர் பல கோடி ஆண்டுகள் வாழ்ந்தவர் என்றும் குறிப்புகள் குறிப்பிடுகின்றனர்.

நல்லவற்றையே மனம் நாடும் போது வாழ்க்கை வளமாகிறது. எதிர்மறை சிந்தனைகள் வாழ்க்கையை சீர் குலைத்து விடுகின்றன. இதனையே திருமந்திரம் மனித உடல் என்பது கண்ணால் பார்க்கக் ஒன்றிப் பாதிக்கக் கூடியவை ஆகும். அதனால்தான்

மனதில் ஏற்படும் துன்பங்கள் உடலில் பாதிப்பினை ஏற்படுத்து கின்றன. இதனை மருத்துவ உலகம் ஏற்றுக் கொள்கிறது. நம் உடலில் உறைந்து நிற்கும் பதினாறு கலைகளும் பதினாறு பாகங்களில் உறைந்திருக்கின்றன.

'சாந்தேரக்ய உபநிடதம் மகரிஷி உத்தாலகர் தன் மகன் சுவதே கேதுவுக்கு இது பற்றி உரைக்கும் போது உணவு உட்கொள்ளுதல் என்பதை ஒரு கலையாகவே சொல்லிக் கொடுக்கிறார்'.

ஒன்றிய ஈஎண் கலையும் உடல்உற
நின்றது கண்டுமூ நினைக்கிலர் நீதர்கள்
கன்றிய காலன் கருத்துழி வைத்தபின்
சென்று அதில் வீழ்வர் திகைப்பு ஒழியாரே திரு 863

உணவு தான் மனமாக மாறுகிறது. நீரின் நுண்ணிய பொருள் பிராணனாக மாறுகிறது. வாக்கு என்பது ஒளி மயமானது என்கிறார். மனம் என்பதைத் தெளிவாக வைத்திருக்க வேண்டு மாயின் சாத்வீக உணவுகளை உட்கொண்டால் தான் பதினாறு கலைகளையும் கைக்கொள்ள முடியும். அத்தனை கலையும் கைவரப் பெற்றவர்கள் மனதை அடக்கியவராவர்கள். சொர்க் கமும் நரகமும் அவரவர் இல்லத்திலேயே உருவாக்கப்படுகிறது. ஒருவனுடைய நலமும், நோயும் அவனது மனநிலையைப் பொறுத்தே அமைகிறது.

கொன்றனை அனைத்தும் அனைத்துமூ நினைக் கொன்றன
தின்றனை அனைத்துமூ அனைத்துமூ நினைத் தின்றன
(பட்டினத்தார்)

நீ எல்லா உயிர்களையும் தின்றாய் அதனால் அவை உன்னைத் தின்றன என்று பட்டினத்தார் கூறியுள்ளார்.

மனத்துக்கண் மாசுஇலன் ஆதல் அனைத்துஅறன்
ஆகுல நீர பிற (குறள் 34)

மனத்தில் குற்றமுடைய நோக்கமில்லாமல் செய்கிற நல்ல செயல்கள் தான் அறம் என்பது. ஒரு சுயநல நோக்கத்தைக் கொண்டு எந்தத் தர்மம் செய்தாலும் அது அறமாகாது.

மன அழுக்கு மறைந்தது

களிம்பு அறுத்தான் எங்கள் கண்ணுதல் நந்தி
களிம்பு அறுத்தான் அருள்கண் விழிப்பித்துக்
களிம்பு அணுகாத கதிர் ஒளி காட்டிப்
பளிங்கில் பவளம் பதித்தான் பதியே (114)

எம் இறைவனாகிய நந்தி, மன அழுக்கைத் துடைத்தெறிந்து அவனுடைய அருள் நோக்கினால் அகக் கண் திறந்து அஞ்ஞான இருளகன்று ஓடியது. அழுக்கு, குற்றம், குறை அன்பான பேரொளிப் பிழம்பான அவன் திருவருட் பார்வையால் தூய்மை பெற்று பளிங்கு போன்ற உள்ளத்துள்ளே சிவன் குடிக் கொண்டுள்ளான்.

மாயா விளக்கு மன விளக்கு

மனத்து விளக்கினை மாண்பட ஏற்றிச்
சினத்து விளக்கினைச் செல்ல நெருக்கி
அனைத்து விளக்கும் திரிஒக்கத் தூண்ட
மனத்து விளக்கது மாயா விளக்கே (602)

உள் மனதில் ஒரு சுடர் ஒளிவிட்டுக் கொண்டே இருக்க, அந்த ஒளி நன்கு பரவிப் பெருகத் தூண்டும் பொழுது சினமாகிய கோபம் குறைந்து எல்லாவற்றையும் ஒளிபெறச் செய்து, சுழுமுனையாகிய ஒளி மனத்துள் விளக்கொளியானது.

உள்ளத்துள் ஒளி உதயம்

இளைக்கின்ற நெஞ்சத்து இருட்டறை உள்ளே
முளைக்கின்ற மண்டலம் மூன்றினும் ஒன்றித்
துளைப்பெரும் பாசம் துருவிடும் ஆகில்
இளைப்பின்றி மார்கழி ஏற்றம் அதாமே (614)

மனிதமனம் இந்த உலக இச்சைகளில் சிக்கித் தவிக்கிறது. அவற்றை அடைய ஏங்கி இளைக்கிறது. எனவே இந்த மனம் இருக்கின்ற உடம்பினுள்ளே உருவாகின்ற மூன்று மண்டலங் களிலும் சிந்தை கலந்து உச்சித் துளை வழியாகப் பரம்பொருள் சிந்தனையாகிற பற்று வளருமானால் தடையின்றிச் சித்தா காசத்தில் சிவசோதி தரிசனம் தானேக்கிட்டும்.

மனத்துக்குள்ளே மகிழ்ச்சி பொங்கும்

மன்மனம் எங்குண்டு வாயுவும் அங்குண்டு
மன்மனம் எங்கில்லை வாயுவும் அங்கில்லை
மன்மனத் துள்ளே மகிழ்ந்துருப் பார்க்கு
மன்மனத்து உள்ளே மனோவலம் ஆமே (620)

மனம் நினைக்கின்றபோது பிராணன் உணர்வு நினைவோடு இருக்க, அங்கு மனம் நினைப்பதை மறந்து விட்டால் வாயுவின் இயக்கம் நின்று விடும். எனவே மனதுக்குள்ளே சிவ சிந்தனையில் ஆழ்ந்த தியான யோகத்தில் திளைத்திருப்பவர்களுக்கு அந்த மனமானது அசைவற்று இருக்கும்.

மனக் குதிரை அடங்க

விண்டுஅலர் கூடமும் விஞ்சத்து அடவியும்
கண்டு உணர்வாகக் கருதி இருப்பார்கள்
செண்டு வெளியில் செழும் கிரியத்திடை
கொண்டு குதிரை குசைசெறுத் தாரே (621)

தியான யோகத்தில் ஈடுபட்டுச் சமாதிநிலையில் கூடி இருப்பவர்களுக்கு, மனவெளியில் ஆண்டவன் அருள் வெள்ளம் ஊற்றெடுத்துப் பாயும் போது இறைவனது பரம்பொருள் மேலேழும்பி, தத்துவம் வெளிப்படும். இதனை உணர்ந்து அவன் நினைவோடு இருப்பவர்களுக்கு உச்சி தலையாகிய மலையில் உணர்வுகள் ஒடுங்கி நிற்கும்போது மனமென்னும் கயிற்றால் பிராணன் என்னும் குதிரையை இழுத்துக் கட்டுதல் வேண்டும்.

அடங்கும் மனது அமுத ஊற்று

உருஅறியும் பரிசு ஒன்று உண்டு வானேரர்
கருவரை பற்றிக் கடைந்தமுது உண்டார்
அருவரை ஏறி அமுதுண்ண மாட்டார்
திருவரை யாம்மனம் தீர்த்துஅற்ற வாறே (625)

உள்ளத்துள் உள்ள இறைவனை அறிந்துணர வழி இருக்கிறது. அவை விண்ணுலகத்திலுள்ள தேவர்கள் பாற் கடலைக் கடைந்து அதன்மூலம் வெளிப்பட்ட அமுதத்தை உண்டு அதன்மூலம் அழியா நிலை அமரத்துவம் பெற்றவர்கள். மனமாகிய மலை உச்சியிலே ஏறி அதில் ஊறும் அமுதத்தினை பருகத் தெரியாதவர்கள், தியானத்தில் பரம்பொருளை எண்ணித் தியானிப்பவர் மனம் ஒரு நிலைப் படும்போது சிவசொரூபம் அங்கே காண இயலும். இக்காட்சி எவ்வளவு அமுதம் உட்கொண்டாலும் இதற்கு இணையாகாது.

சிதம்பர நடனம்

சித்தம் திரிந்து சிவமயம் ஆகியே
முத்தம் தெரிந்துற்ற மோனர் சிவமுத்தர்
சத்தம் பெறலாம் ஐந்தில் தொடக்கற்றோர்
சித்தம் பரத்தில் திரு நடத்தோரே (652)

அலைபாயும் மனதை அடக்கி இறைவனாகயி சிவன்பால் செல்ல விட்டு முத்தியாகிய வீட்டினை உணர்ந்தறிந்து தவமிருப் பவர்கள் சிவமுத்தர்கள் ஆவார். இவர்கள் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்புலன் இச்சையை விட்டொழிந்த வர்கள் ஆதலால் இவர்களின் மனம் தூய்மையாக இருப்பதால் பரம்பொருளோடு கலந்து ஆனந்த நடனமிடுவார்கள்.

உள்ளமே கோயிலாக

வாய்ந்து அறிந்துள்ளே வழிபாடு செய்தவர்
காய்ந்த அறிவாக்க கருணை பொழிந்திடும்
பாய்ந்து அறிந்துள்ளே படிக்கதவு ஒன்றிட்டுக்
கூய்ந்தறிந்து உள்உறை கோயிலும் ஆமே (810)

தியானம் செய்பவர்கள் உள்ளத்தினுள்ளே இறைவனை வழி பட்டு அதனால் மன இருளை மாய்க்கின்ற இறைவனின் அருட் கருணையை மழைப் போலப் பொழியப் பெற்று மகிழ்வார்கள்.

மனத்தை அடக்க மந்திரம் பயில்க

சேவிக்கு மந்திரஞ் செல்லுந் திசைபெற
ஆவிக்குள் மந்திரம் ஆதார மாவன
பூவுக்குள் மந்திரம் போக்கற நோக்கிடில்
ஆவிக்குள் மந்திரம் அங்குச மாமே (959)

மந்திரங்களால் தியானம் செய்யும்போது அவை உடலெங்கும் பரவி, அவை மூலாதாரத்திலிருந்து மற்ற ஆதார நிலைகளுக்கும்

சென்று மனமாகிய மலரில் நினைவை நிலை நிறுத்தி ஐந்தெழுத்து (நமசிவாய) மந்திரத்தை முறையாகத் தியானித்தால், இந்த மந்திரமானது புலன் இச்சை ஆகிய மத யானையை அடக்கும் சக்தியாக அமைந்துள்ளன.

மனத்துள்ளே தவம்

மிகப் பழங்காலம் தொட்டே, ஒன்பது குண்டங்களையும், தவ யோகிகள் தமது வலிமையால் போற்றி வழிபட்டு வருகின்றன. அதனால் அவர்கள் அக்னியை எழச் செய்யும் வலிமையாள ராவர்கள். மனஉறுதியைப் பெற உடலையும் மனதையும் நலத்தோடு வைத்துக் கொள்ள உடற்பயிற்சி, யோகம், தவம் முதலியன தேவைப்படுகின்றன. மனத்தில் துன்பம் எதுவும் இல்லாமலிருந்தால் அவன் எவ்வளவு கடுமையான வேலை களையும் திறம்படச் செய்ய இயலும்.

மனநிலை நன்குடையவர்கள் என்றுமே இளமைப் பொலிவுடன் திகழ்வார்கள். உலகத்திலுள்ள பெரும் சாதனையாளர்களைப் பற்றி ஆராய்ந்து பார்த்தால் அவர்களிடம் மனநிலை இருந்திருக்றிது. நாம் தெய்வத்தை மனமுருக நினைத்தால் அவன் தான் நமக்கு அமைதியையும் ஆனந்தத்தையும் தருவான்.

வாழ்வில் வெற்றி பெற எண்ணுபவர்கள் அனைவரும் தங்கள் மனதில் கடுகளவும் சினத்தினை நினைக்க கூடாது.

உள்ளம் பெருங்கோயில் ஊனும்பு ஆலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவான் சிவலிங்கம்
கள்ளப் புலனைத்தும் காளா மணிவிளக்கே (1823)

மனமானது ஒரு பெரியகோயில் இந்த உடம்பு என்னும் ஆலயத்தில் சிவபிரானை தவிர வேறு ஒன்றும் இல்லை. இந்த புலன் ஐந்தும் ஓர் உன்னத நிலையில் மேலான மோட்சத்தை அறி முடியும்.

முடிவுரை

இவ்வாறாகப் பல ஆண்டுகளுக்கு முன்னரே, சித்தர்களால் எழுதப்பட்ட வாழ்க்கைத் தத்துவங்கள், இன்றும் மக்கள் மத்தியில் காணப்படுகின்றன. தற்காலத்திலும் மனதளவில் ஒருவருக்குக் கெடுதல் செய்ய நினைத்தால் கடவுள் நம்மை தண்டிப்பார் என மக்கள் நம்புகின்றனர். இவ்வாறே சித்தர்களே யோக பயிற்சியாலும், தவத்தாலும் ஆன்மீக சக்தியை வளர்த்து மனம் அடங்கி தம்முடைய மனத்திற்குள்ளே இறைவனோடு ஒன்றியிருப்பதை உலகிற்க்கு எடுத்து உபதேசித்தார்கள்.

27. நல்வாழ்வு வாழ திருமூலர் தந்த திருமந்திரம்



ச. ரமேஷ், M.A., M.Phil. (Soc.)
திருமந்திர பட்டய மாணவர்,
24, மங்கையர் தெரு, தி.நகர், சென்னை 17.
கைபேசி: 7299544234
மின்னஞ்சல்: natureliving50@yahoo.com

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது முதுமொழி. மனிதன் நோயின்றி வாழ வேண்டும்; வாழும் வழி அறிய வேண்டும் அறிந்தவின் உடல் வளர்த்தால் அது உயிர் வளர்க்கும்.

உடம்பை வளர்க்கும் உறுபொருள் உடம்புக்குள்ளே இருக்கிறது. அந்த உறுபொருள் என்பது வேறொன்றும் அல்ல, அது நம் உடலுக்குள்ளே இருந்து வெளியில் வரும் சிறுநீர்தான். 1700 ஆண்டுகளுக்கு முன்தோன்றிய திருமூலர் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்றார். இந்த தத்துவம் தந்த திருமூலர் உடம்பை வளர்க்கவும் அதன்மூலம் உயிர் வளர்க்கவும் தனது திருமந்திரத்தில் காட்டியுள்ள நல்லமருந்து சிறுநீர் மருத்துவம்! இதனை அவர் அமுரி, சிவநீர், வான்நீர், அமுதநீர், உவரி, தேறல் என்றெல்லாம் குறிப்பிடுகிறார்.

- உடலில் கிடந்த உறுதிக் குடிநீர்
- தெளிவரும் இந்தச் சிவநீர்
- கரை அருகே நின்ற கானல் உவரி
- வீர மருந்து
- விண்ணோர் மருந்து
- நாரி மருந்து
- ஆதி மருந்து
- சோதி மருந்து

என்றெல்லாம் திருமூலரால் சிறப்பித்துக் கூறப்படும் இந்தச் சிறுநீர் ஆரோக்கிய பானம் ஆகும். அறிவியல் வளர்வதற்கு முன்னரே இன்றைய அறிவியல் கண்டறிந்ததையெல்லாம் மெய்ஞ்ஞானத்தால் கண்டறிந்தது நம் நாடு. தமிழ் இலக்கியத்தில் இதற்கு ஏராளமான சான்றுகள் இருக்கின்றன.

இன்றைய உலகில் 'பணம், காசு' சேர்ப்பது எளிதல்ல என்றாலும் நோயின்றி வாழ்வது அவ்வளவு எளிதல்ல. இன்றைய சுற்றுச்சூழல் நோய் சூழலுக்குள் தள்ளி அதில் நம்மைச் சிக்க வைத்து விடுகிறது. அன்றாடம் உண்ணும் உணவு, பருகும் நீர், உள்வாங்கும் காற்று ஆகியவற்றின்மூலம் உடலைப் பாதிக்கும் மாசுகள் உடலுக்குள் செல்கின்றன. அதனால் ஏற்படும் நச்சுத்

தன்மையால் பலவிதமான நோய்கள் தாக்குகின்றன. நோயிலிருந்து பாதுகாத்துக்கொள்ளும் ஆயிரக்கணக்கான மருந்துகளும் ஒரு நோயைத் தீர்த்துப் பக்கவிளைவாக மறுநோயை ஏற்படுத்தி விடுகின்றன.

எல்லா நோய்களுக்கும் பாதிக்கப்பட்ட எல்லா உறுப்பு களுக்கும் ஒரே மருந்தை நாம் பயன்படுத்துவதில்லை. நோய் மற்றும் பாதிக்கப்பட்ட உறுப்புக்குத் தக்கபடி வெவ்வேறு மருந்துகளைப் பயன்படுத்துகிறோம். ஆனால் நமது உடலில் உற்பத்தி ஆகும் சிறுநீர் நோய் தீர்க்கும் ஆற்றல் படைத்த அற்புதமான மருந்து. சாதாரண நோய்கள் முதல் கடுமையான நோய்கள் வரை சிறுநீரை சிகிச்சை முறையில் பயன்படுத்தி உடல் நலத்தைப் பலப்படுத்தலாம். சிறுநீர் என்றதும் பலர் முகம் சுளிக்கலாம்; அருவெறுப்பு உணர்வு ஏற்படலாம். இது நமக்கு கற்பிக்கப்பட்ட மனநிலை, சரிவர சுத்தம் செய்யப்படாத ஒரு கழிப்பறையின் துர்நாற்றம் நம் எல்லோர் மனத்திலும் பதிவாகி இருக்கிறது. இந்த மனோபாவத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொண்டவர்கள் சிறுநீர் பருகி உடல் வளர்த்து அதன்மூலம் நீண்ட ஆயுளைப் பெறலாம்.

உலக நாடுகளில் சிறுநீர் மருத்துவ சிகிச்சை தீவிரமடைந் துள்ளது. இந்திய அளவிலும் சிறுநீர் சிகிச்சை பற்றிய விழிப்புணர்வு அதிகரித்து வருவதால் இந்திய அளவில் சிறுநீர் சிகிச்சை முறை பற்றி ஆறு மாநாடுகள் நடைபெற்றுள்ளன. சிறுநீர் என்பது கழிவு நீரல்ல, ஒரு நீர்த்தொட்டியிலிருந்து அதிகப்படியான நீர் வெளியேறுவது போன்றது அது. நாம் உண்ணும் உணவில்மூலம் உடலில் சேர்ந்த சத்துக்கள் யாவும் - நீரில் கரையும் சத்துக்கள் எல்லாம் சிறுநீரில் கரைந்திருக்கும். அதன் காரணமாகச் சிறுசீர் என்பது நமது உல் நமக்காக உற்பத்தி செய்து தரும் சத்துமிகுந்த டானிக் ஆகும். காசு செலவு செய்யாமல் கிடைக்கும் டானிக்! அது உடல்நலனைப் பாதுகாக்கும் சத்துநீர்; அதில் நோய்க்கிருமிகள் வாழ முடியாது.

உடலில் நோய் எதிர்ப்பு சத்தியை அதிகப்படுத்தும் அதில் பலவகையான வைட்டமின் சத்துக்களும் தாது உப்புகளும் உடலுக்குத் தேவையான வேதிப்பொருள்களும் ஹார்மோன் களும் என்சைம்களும் இருக்கின்றன. சிறுநீர், நச்சுத்தன்மையை முறிக்கும், போமாவிலிருந்து பாதுகாத்து, நோய் எதிர்ப்பு திறன் வளர்க்கும். உடலுக்கு வலவேற்றும், ஒளியேற்றும். 'ஒளி தரும் ஓராண்டில்', 'களி தரும் காயம் கனகம் அதாமே' என்றார் திருமூலர். உடம்பு பொன்போலப் பிரகாசிக்கும், ஓராண்டு

தொடர்ந்து சிறுநீர் பருகி வந்தால் மேற்கண்டவை நடக்கும் என்று கூறுகிறார் திருமூலர். இந்தச் சிறுநீர் செயலற்ற உடல் உறுப்புகளை இயக்க வைக்கும். இரத்தத்தைச் சுத்தப்படுத்தும், செரிமான மண்டலத்தையும் மூச்சுப் பிரச்சினைகளையும் ஒழுங்குபடுத்தும்; உடலைச் சரியாக நிர்வாகம் செய்ய சிறந்த நிர்வாகியாகத் திகழும். நோயாளிகளுக்கும் ஆரோக்கியமானவர் களுக்கும் ஏற்றது சிறுநீர். இதனைப் பருகலாம், உடல்மீது பூசலாம், நரைமுடியைக் கருமையாக்கத் தலைக்குத் தேய்த்துக் குளிக்கலாம் செலவில்லாத மருந்து இது.

எயிட்ஸ், புற்றுநோய், காசநோய், ஆஸ்துமா, சிறுநீரக் கோளாறு எனப் பல கொடிய நோய்களுக்குச் சிகிச்சை அளிக்கப் பயனுள்ள விலைமதிப்புமிக்க உயிர்காக்கும் மருந்துகள், ஊசி மருந்துகள் சிறுநீரைப் பயன்படுத்தி இப்போது புதியமருந்து உற்பத்தியாளர்களால் தயாரிக்கப்படுகின்றன.

வெளிநாடுகளில் அறுவை சிகிச்சைக்கு முன்னர் சிறுநீர் ஊசி செலுத்துகின்றனர். சிறுவர்களுக்குச் சிறுநீர் அருந்தக் கொடுத்து வந்தார் அம்மை, போலியோ, மஞ்சள் காமாலை தடுப்பூசி களுக்கு அவசியம் இருக்காது. தடுப்பூசிகளால் ஏற்படும் பக்கவிளைவுகளைப் பற்றிப் பயமும் தேவையிருக்காது. சிறுநீர் சிறந்த ஆண்டிபயாட்டிக் என்பதால் வெளிநாடுகளில் அழகு சாதனப் பொருள்களில் இது சேர்க்கப்படுகிறது. இப்போக்கு பிரான்சில் அதிகரித்து வருகிறது. இன்றைய அழகுசாதனப் பொருள்கள் உடல் நலத்துக்குத் தீங்கிழைக்கின்றன. சிவாம்பு (சிவநீர் - சிறுநீர்) சேர்க்கப்பட்ட அழகு சாதனப் பொருள்கள், மலிவான, பக்கவிளைவுகள் இல்லாத அமிம்சை வழிமுறையைச் சேர்ந்தவை.

சிறுநீர் சிகிக்கையை ஏற்றுக்கொள்ளும் குடும்பத்தினர் நற்பயன் பெறுவர். குடும்பத்தினர் ஆரோக்கியம் பெருகும். மருத்துவச் செலவும், நேரமும் மிச்சம் ஆகும். நோயிலிருந்து அனைவரும் விடுதலை ஆகலாம், நோயின்றி வாழலாம். நீண்ட ஆயுள் பெறலாம். சிறுநீர் சிகிச்சை பெற நோய்க்கான அறிகுறிகள் தேவையில்லை. சிறுநீரைப் பருகுவது, உடலில் தடவுவது - இதுவே சிறுநீர் சிகிச்சை ஆகும்.

இது அடிப்படை மருத்துவம் செலவில்லாத மருத்துவமுறை பலவிதமான இரசாயன மருந்துகளுக்கு ஒரே ஒரு மாற்று மருந்து இது. இதன் சிறப்பைச் சீர்தூக்கி, ஆராய்ந்து அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா (NASA) 1971 ஆம் ஆண்டிலேயே ஆய்வறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளது. மனிதச்சிறுநீரின் இயற்பியல் மற்றும் வேதியியல் பண்புக்

கூறுகளை ஆராய்ந்து வெளியிட்டுள்ளது. நீண்ட விண்வெளிப் பயணங்களின்போது சிறுநீரைச் சுத்திகரித்துக் குடிநீராக்கிப் பயன்படுத்தும் முறை பற்றியும் அந்த நூல் குறிப்பிடுகிறது. குடிநீரில் உள்ள சத்துக்கள் பற்றியும் பட்டியலிடுகிறது. அவ்வளவு தூரம் போகவேண்டாம். நீண்ட காலம் உயிர்வாழ்ந்த இந்தியப் பிரதமர் மொரார்ஜி தேசாய் வாழ்நாளெல்லாம் சிறுசீர் பருகியவர், நீண்ட ஆயுளுடன் வாழ்ந்தவர்.

பழங்குடி மக்கள் சிறுநீர் சிகிச்சையைக் காலங்காலமாகப் பயன்படுத்தி வருகின்றனர். கொடிய பாம்புக்கடியால் உடலில் ஏறிய நஞ்சை முறிக்க வெற்றிகரமாகச் சிறுநீர் சிகிச்சையைப் பயன்படுத்தி வந்துள்ளனர். இந்தச் சிறுநீர் சிகிச்சையைப் பற்றி 1700 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழகத்தில் வாழ்ந்த திருமூலர் தனது திருமந்திரத்தில் (பத்தாம் திருமறை) அரிய கருத்துக்களாகப் பலவற்றைத் தெரிவித்துள்ளார். இக்கருத்துகள் படிக்கும் போதும் தெரிந்து கொள்ளும்போதும் வியப்பளிக்கின்றன.

திருமூலர் என்ன சொல்கிறார்?

உடலில் கிடந்த உறுதிக் குடிநீர்க்
கடலில் சிறுகிணற்று ஏற்றம் இட்டால் ஒக்கும்
உடலில் ஒருவழி ஒன்றுக்கு இறைக்கில்
நடலைப் படாதுஉயில் நாடலும் ஆமே (845)

இப்பாடலில் தலைப்பு அமுதாரணை. அமுரி என்பது சிறுநீரைக் குறிக்கும். தாரணை என்றால் உட்கொள்ளுதல் என்று பொருள். உடலுக்கு உறுதிதரும் இந்த குடிநீரானது அதாவது சிறுநீரானது, கடல் அருகில் தோண்டிய கிணற்றுநீரை இறைப்பது போன்றது. கடல்நீர் உப்புகரிக்கும், மணலில் தோண்டிய ஊற்று நீர் நல்ல குடிநீராக இருக்கும் அது போன்றதே இந்த அமுதநீர். உயிர்சத்து ஊறும் மூலாதாரத்திற்கு அருகே சிறுநீர் வெளிவரும் வழி உள்ளதை நினைவுப்படுத்திக் கொள்ளாம். உடலில் இருந்து வெளியேறும் இந்தச் சிறுநீரைப் பருகினால் உடலுக்கு வரும் துன்பம் ஏதும் இல்லாமல் உயிர் வாழலாம். சிறுநீர் பருக உடலுக்கும் உயிருக்கும் கேடு நேராது. திருமூலர் சிறுநீர் பருகி வந்தால் உடல் பொன்னிற மாகும் என்றிார்.

தலைமுடி கறுப்பாகும்

நூறு மிளகு நுகரும் சிவத்தின்நீர்
மாறும் இதற்கு மருந்து இல்லை மாந்தர்கள்
தேறில் இதனைத் தெளி உச்சிக் கப்பிடின்
மாறும் இதற்கு மறுமயிர் ஆமே

சிவத்தின் நீர் எனப்படும் சிவநீர் - சிறுநீர், நூறு மிளகு அளவுக்கு இந்தச் சிறுநீரை உட்கொள்ள வேண்டும். அப்படி உட்கொண்டு வந்தால் உடலுக்கு நன்மை செய்வதில் இதைப் போன்ற வேறு ஒரு மருந்தைக் காணமுடியாது. மக்கள் இதன் சிறப்பினை உணர்ந்து தலையிலே தேய்த்துக் கொண்டால் நரைமுடி மாறிக் கறுமை நிறம் பெறும். சிறுநீரைப் பருக வேண்டும், தலையில் தடவிப் பயன்பெற வேண்டும் என்கிறார் திருமூலர்.

ஒளிபெறும் – உடம்பு பொன்னாகும்

தெளிதரும் இந்தச் சிவநீர் பருகில்
ஒளிதருமூ ஓராண்டில் ஊனம் ஒன்றில்லை
வளிஉறும் எட்டின் மனமும் ஒடுங்கும்
களிதரும் காயம் கனகம் அதாமே (846)

அவரவரர் சிறுநீரைத் தொடர்ந்து பருகிவந்தால் ஓராண்டில் உடல் பொன்னிறமாகும் என்கிறார் திருமூலர். தெளிவுதரும் இந்த சிவநீரைக் (சிறுநீர்) குடித்து வந்தால் ஓராண்டில் உடலில் மினுமினுப்பு வரும். உடலுக்கு ஒரு குறைவும் வராது. தூங்கி எழுந்தபின் வெளிவரும் நீரில் முதல் தாரை பித்தகுணம் உடையதாகவும், கடைசித் தாரை சத்தற்றதாகவும் இருக்கும். எனவே முதல் தாரையையும் கடைசித்தாரையையும் விட்டு விட்டு நடுவில் உள்ள தாரையை அவரவர் சிறுநீர் போக்கு - பிடித்து அருந்தினால் உடலுக்கு நல்லது.

நரை திரை இல்லை

கரைஅருகே நின்ற கானல் உவரி
வரைவரை என்பர் மதியிலா மாந்தர்
நுரைதிரை நீக்கி, நுகரவல்லார்க்கு
நரைதிரை மாறும் நமனும் இங்கில்லையே (848)

உயிரணு ஊறும் கரைப்பக்கம் இருந்து வரும் சிறுநீர் தாரை (உவரி-சிறுநீர்)யை வெளியேற்றிவிட வேண்டும் என்று மதியில் லாத மூடர்கள் கூறுவார்கள். ஆனால் நுரைத்து வேகமாக வெளிவரும் சிறுநீரையும், வேகம் குறைத்துக் கடைசியாக வெளியேறும் சிறுநீரையும் விட்டுவிட்டு, இடையிலே வரும் சிறுநீரைப் பிடித்து அருந்தி வந்தால் முதுமையும் இல்லை, முப்பும் இல்லை என்கிறார் திருமூலர். இன்றைய தினம் உடல்பருமன் பலருக்கும் மிப்பெரிய சிக்கலான பிரச்சனை. இந்நிலையில் உடம்பு இளைக்க வழியைக் கூறுகிறார்.

உடம்பு இளைக்க ஒருவழி

அளக நல்நுதலாய் ஓர் அதிசயம்
களவு காயம் கலந்த இந்நீரில்
மிளகு நெல்லியும் மஞ்சளும் வேம்பிடில்
இளகும் மேனி இருளும் கபாலமே (849)

அழகிய கூந்தலும், ஒளிபொருந்திய நல்ல நெற்றியையும் உடைய பெண்ணே! உனக்கோர் வியப்பூட்டும் சேதியைச் சொல்கிறேன். உடலில் மறைவாக இருக்கும் இந்த சிறுநீரோடு மிளகு, நெல்லிக்காய், மஞ்சள், வேப்பங்கொழுந்து ஆகியவற்றைச் சேர்த்து அரைத்து உட்கொண்டால் உடம்பு இளைக்கும், தலைமுடி கறுமை நிறம் அடையும். மருந்து நல்லமருந்து என்ற தலைப்பில் பின்வருமாறு கூறுகிறார்.

வீரமருந்து என்றும் விண்ணோர் மருந்து என்றும்
நாரி மருந்து என்றும் நந்தி அருள் செய்தான்
ஆதி மருந்து என்றும் அறிவார் அகலிடம்
சோதி மருந்து இதுசொல்ல ஒண்ணாதே (850)

சிறுநீர் உடலுக்கு வீரியத்தைக் கொடுக்கக் கூடிய மருந்து என்றும், விண்ணுலகத் தேவர்கள் பருகும் மருந்து என்றும், பெண்தரும் பேரின்ப மருந்து (நாரி மருந்து) என்றும், எம்பெருமான் நந்திதேவன் அருளிச் செய்தான். ஆதிமருந்து என்றும் அறிவார்கள். அகன்ற இவ்வுலகுக்கு வழிகாட்டும் ஒளி போன்ற சோதிமருந்து என்றும் கூறும் திருமூலர், இதன் அருமை பெருமைகளைச் சொல்லி முடியாது என்றும் கூறுகிறார்.

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவுமாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன், உயிர் வளர்த்தேன்

என்ற பாடலில் உடம்பைப் பேணி வளர்க்காமல் போனால் உயிர் வாழ முடியாது. அதனால் மெய்ஞ்ஞானம் கிட்டாது. அதனால் உடலைப் பேணும் வழிமுறை (உபாயம்) அறிந்து பின்பற்றி உடல் வளர்த்துச் சிறப்புடன் வாழலாம் என்கிறார் திருமூலர். வழிமுறை (உபாயம்) என்ன என்பதை இன்னொரு பாடலில் கூறுகிறார் திருமூலர்.

உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன கோவில் கொண்டாடி என்
உடம்பினை யானிருந் தோம்பு கின்றேன்

தன் உடம்புக்குள் உறுபொருள் இருப்பதை அறிந்து கொண்டேன் என்கிறார். அந்த உறுபொருள்தான் சிறுநீர் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

வித்தக மாகிய வேடத்தர் உண்டஊன்
அத்தன் அயன்மால் அருந்திய வண்ணமாஞ்
சித்தம் தெளிந்தவர் சேடம் பருகிடின்
முத்தியா மென்றுநம் மூலன் மொழிந்தததே

வித்தம் என்பதில் உள்ள வித்து என்பது விதையின் பொதுப் பெயர். அகம் என்பது உள்ளிருக்கும் மைக்கரு அல்லது கருமையம். இதற்கு ஏற்றார்போல் ஒவ்வொரு வித்தகத்துக்குத் தகுந்தவாறு உயிர்களின் உருவம், குணம், அறிவு ஆகியவற்றில் வேறுபட்டிருக்கும். அப்படியென்றால், ஜீவன்கள் உண்ட உணவு, நம் நடலில் முத்தொழில் புரிகின்ற சிவன், பிரம்மன், திருமால் நம் இரத்தத்திலிருந்து அருந்தியதற்கு ஒப்பாகும். இதனைச் சிந்தித்து தெளிந்தவர்கள் மும்மூர்த்திகள் அருந்தியபின் மிச்சத்தைப் (சேடம்) பருகினால் (கைவழியாக அருந்துவது) முக்தி பெறலாம் என்று இத்திருமூலன் வாயிலாக உணர்த்துகிறேன் என்கிறார்.

உடல்நலம் பேண மூச்சுப்பயிற்சியின் முக்கியத்துவம் பற்றியும் கூறுகிறார். மூச்சுப் பயிற்சியை முறையாகச் செய்யத் தெரிந்தவர் கள், எடுத்தப்பிறவியின் பயன் அறிந்தவர்கள் ஆவர்.

- உடல்நலனில் அக்கறை உள்ளவர்கள் நாள்தோறும் குறிப்பிட்ட நேரம் ஒதுக்கித் தியானம் செய்ய வேண்டும்.
- மூச்சுப்பயிற்சியில் ஈடுபட வேண்டும்.
- உடற்பயிச்சியைச் செய்யவும் தவறக்கூடாது.
- உணவுக் கட்டுப்பாட்டின்மூலம் உடல்நலம் பேண வேண்டும்.
- குடல்சுத்தம் செய்ய வேண்டும்.
- விரதம் கடைபிடிக்க வேண்டும்.
- இத்துடன் சிறுநீர் பருகிவந்தால், தேவைக்கு ஏற்ப சிகிச்சையாகவும் பயன்படுத்தி வந்தால் உடல் நலம் பெருகும், ஆயுள் அதிகரிக்கும்.

திருமூலர் கூறும் மருத்துவக் கருத்துகள் விலைமதிப்பு மிக்க கருத்துக்களாகும். சிறுநீர் சிகிச்சை பற்றி உலக அளவில் ஆயிரக்கணக்கான இணையதளங்கள் உள்ளன.

28. சமூகத்தைக் கட்டமைக்கும் தனிமனித ஒழுக்கம்



தா.மார்டின் செல்லதுரை
தனி அலுவலர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை
9840798342

சூழ்நிலைகளை அனுசரித்துத் தனக்கும் தன் சகமனிதனுக்கும் நன்மைகள் உண்டாகும்படிச் செயல்படுவது மனிதத்துவத்தின் மிகச்சிறந்த பண்பு. மனிதத்துவம் என்பது மேன்மை என்பதாகக்கூடப் பொருள் கொள்ளலாம். மேன்மை தனக்கு மட்டுமே என்ற குறுகிய வட்டத்துக்குள் உட்படாதது. அது பறந்து விரிந்து சகமனிதர்மேல் கொள்ளும் நேயத்தை உள்ளடக்கியது. நேயம் சுயநலம் விரும்பாதது. பிறர் நலத்தைப் பெரிதாக விரும்புவது.

திருமூலர் மனிதஉடலைத் திருக்கோயிலாகக் கருதுகின்றார். மானுடஉடலின் மகத்துவத்தை மிகுந்தப் பாங்குடன் விளம்புகிறார் திருமூலர்,

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக்கு உள்ளே உருபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண்டான் என்று
உடம்பினை யான்இருந்து ஓம்புகின் றேனே (725)

வெறும்உடம்பல்ல இது. இந்த உடம்புக்குள் இருக்கின்ற மிகச்சிறந்த செல்வமாகிய தெய்வத்தை நான் கண்டுகொண்டேன். அந்தச்செல்வமும் உத்தமுமாகியபரம்பொருள் இந்த உடம்புக்குள் கோயில் கொண்டுள்ளான் என்பதை நான் அறிந்தபின்னே இவ்வுடம்பைப் பேணிப் பாதுகாத்துவருகின்றேன் என்று கூறுகின்றார்.

எனவேதான்,

உள்ளம் பெருங்கோயில்
ஊனுடம்பு ஆலயம்

என்று அவற்றைப்பேணிப்பாதுகாக்கும் அவசியத்தை வலியுறுத்துகின்றார்.

இங்கு எனது உடல் என்று திருமூலர் தனிமைப்படுத்தாமல் ஒவ்வொரு தனிமனிதனின் உடலையும் திருக்கோயிலாகக் குறிப்பிட்டுக் காட்டுவதை உணரவேண்டும். இதன்மூலம் அனைத்து மக்களும் இறைவன் உறைகின்ற திருஅவதாரங்களே என்பதை ஒவ்வொரு தனிமனிதனும் உணரும் அவசியத்தை உருவாக்கிச் சமுதாயத்தைத் தெய்வீகம் கமழும் மாபெரும் அமைப்பாக முன்னெடுக்க விரும்புகின்றார்.

சமூகம் சிறப்படைந்தால் மட்டுமே தனிமனித வாழ்வு சிறப்படையும். தனிமனித பங்களிப்பில்லாமல் சமூகம் சிறப்படைவதற்கு வழியில்லை. தனிமனிதப்பங்களிப்புக்கு எளிய நடைமுறை உத்தி ஒன்றைத் திருமூலர் முன்வைக்கின்றார்.

அவ்வியம் பேசி அறங்கெட நில்லன்மின்
வெவ்வியன் ஆகிப் பிறர்பொருள் வவ்வன்மின்
செவ்வியன் ஆகிச் சிறந்துண்ணும் போதொரு
தவ்வி' கொடுண்மின் தலைப்பட்ட போதே (196)

'அவ்வியம் பேசி அறம்கெட நில்லன்மின்' அடுத்தவர்மீது, உன்னுடன் வாழும் சகமனிதர் மீது பொறாமை கொண்டு அல்லது வெறுப்புகொண்டு அவதூறான வார்த்தைகளைக் கூறி அவர்களுக்கு அநியாயம் செய்யாதீர்கள். ஏனெனில் அவர்களின் உடல்களும் திருக்கோயில்களே. ஒவ்வொரு உடலாகியத் திருக்கோயிலுக்குள்ளும் உள்ளம் என்ற கருவறைகள் உண்டு. அதில் இறைவன் உறைகின்றார். எனவே யாரையும் பழித்துப்பேசுவதோ அவர்களுக்கு அநியாயம் செய்ய நினைப்பதோ இறைவனையே பழித்து அவனுக்கே அநியாயம் செய்வதாக இருந்துவிடும். ஆகவே ஒவ்வொரு தனிமனிதனும் உணரும் வகையில் "அவ்வியம் பேசி அறம்கெட நில்லன்மின்" என்கிறார்.

இவ்வாக்கு தனிமனித உறவுகளைச்சமூகத்தில் இறுக்கிப்பிணைக்கச் செய்வது. ஒருவரை ஒருவர் முரண்பாடு கொண்டிராமல் உறவுக்குள் பிணைந்து இருக்கச்சொல்வது ஒருவர்மீது ஒருவர் விருப்பமும் அக்கரையும் கொள்வதன்மூலம் சமூகத்தில் ஒற்றுமையை ஓங்கச் செய்வது. சமூகத்தில் ஒற்றுமை ஏற்பட்டாலே அமைதியும் சாந்தமும் நிலைபெற்றுவிடும் என்பது திருமூலரின் உள வெளிப்பாடு.

வெவ்வியன் ஆகிப்பிறர் பொருள் வவ்வன் மின்
வவ்வல்-கவர்ந்து கொள்ளுதல். பிறர்பொருள் வவ்வல்மின்.

ஒருவர்மீது ஒருவர் அன்பும் நேசமும் கொண்டிருக்கும் சமூகத்தில் பிறர்பொருள் மீதான கவர்ச்சியோ விருப்பமோ உண்டாவதில்லை. வெவ்வியன் ஆகி என்ற வார்த்தை வெறித்தனத்துடன் என்பதாகக் கூடப் பொருள்படும். நல்லசமூகத்தில் பிறர்க்கு உரிய பொருள்கள்மீது நாட்டமோ அல்லது வெறித்தனத்துடன் அவற்றை அபகரிக்கவேண்டும் என்ற எண்ணமோ ஏற்படுவதில்லை. காரணம் ஒருவர்மீது ஒருவர் அக்கரைக் கொண்டுள்ள சமூகம் என்பதால் இருப்பவை எல்லாருக்கும் பொது என்ற மனப்பக்குவம் இயல்பாக அங்கு உருவாகிவிடும்.

இங்கு அச்சமற்ற ஒருசமூகத்தை தனிமனித ஒழுக்கத்தின்மூலம் திருமூலர் படைக்க விரும்புகின்றார். பயம்கொண்டிராத சமூகம் சமூகப் பாதுகாப்பை உறுதிசெய்கிறது. பாதுகாப்பான சமூகத்தில் துன்பம் இருப்பதில்லை. நமக்குரியது பறிபோகுமோ? என்ற பயமும் அச்சமும் இருப்பதில்லை. அச்சமற்ற மக்களைக் கொண்டுள்ளச் சமூகம் தன்னைத்தானே நிர்மாணித்துக் கொள்ளும் ஆற்றலைப் பெறுகிறது. இந்த ஆற்றல் வல்லமையை வெளிப்படுத்தி மேலும்மேலும் வளர்வதற்கான புதியஉத்திகளை உருவாக்கித் தருகிறது. இவ்வாறான செயல்முறைகளை தனது உள்உணர்வில் அறிந்த திருமூலர் "பிறர்பொருள் வல்லன்மின்" எனச்சுருங்கச் சொல்லி பாதுகாப்பான சமூகத்தை நிர்மாணிக்க ஒவ்வொரு தனிமனிதனையும் ஊக்குவிக்கன்றார்.

"செவ்வியன் ஆகிச் சிறந்துண்ணும் போது"

சிறந்த குடிமகனாக உங்கள் வாழ்வில் நீங்கள் சுகத்தை அனுபவிக்கும்போது என்கிறார். இதன்மூலம் அவரின் கனவும் நினைவும் எல்லாமும் சமூகத்தில் ஒவ்வொரு தனிமனிதனும் சிறந்த வாழ்வு வாழ வேண்டும் என்பது விளங்கும். சிறந்த சமூகத்திற்கு அடையாளம் ஒவ்வொரு தனிமனிதனும் சிறந்த வாழ்வு வாழ்வதற்கு உரிமை பெற்றிருக்க வேண்டும். சிறந்த வாழ்வை அனுபவிக்கும் உரிமைப் பெற்றிராத தனிமனிதர்களைக் கொண்ட சமூகத்தில் அறம்குன்றி சமூகத்தின் வளமையும் இல்லாமல்போகும் என்பதால் ஒவ்வொரு மனிதனும் சிறந்த வாழ்வுக்கு உரியவன் என்பதைச் சொல்லி அவனுக்குரிய உரிமையை முன்நிறுத்துகின்றார்.

திருமூலர் அருளும் இந்த வாக்கின்மூலம் சிறந்த வாழ்வுக்கு அருகதை பெறுவதென்பது ஒவ்வொருவரின் உழைப்பிலும் செயல்படுவதிலுமே உள்ளது. இது உளவியல் சார்ந்த அணுகுமுறை என்பதை அறிய வேண்டும். உழைப்பும் கடமையைச் செய்வது ஒவ்வொரு தனிமனிதனின் விருப்பமாக மலரும்போது அச்சமூகத்தின் வளமை அண்ணார்ந்துப்பார்கும்படி உயர்ந்துவிடுகிறது.

தற்போதைய சமூகத்தில் வறுமை, பஞ்சம், பட்டினி போன்றசீர் கேடுகளுக்குக் காரணம் வளமை இல்லாமை என்பதல்ல. வளமை உண்டு. இயற்கை தனது வளமை அனைத்தையும் மனிதர்க்கு வாரி வழங்கியுள்ளது. எனினும் வறுமை, பஞ்சம், பட்டினி சூழ்ந்து சமூகம் சீர்கேடடைந்துள்ளதைக் காணமுடிகிறது. இதற்குக் காரணம் வளமை அனைத்தும் ஒருசில விழுக்காட்டினரிடமே குவிந்து பெரும்பான்மையான மக்களை இல்லாமைக் குரியவர்களாக்கியதை யார்தான் மறுக்க முடியும்? உழைப்பிருந்தும் உயர்வில்லையே என்ற ஏக்கம் அறம் பிறழ்ந்த செயல்களைச் செய்யத் தூண்டி அதனால் சமூகத்தில் வஞ்சம், பகைதோன்றி சமூகத்தின் சீரழிவுக்குக் காரணமாகியுள்ளதே உண்மை.

எதிர்காலத்தில் நிகழவிருக்கும் இக்கேடுகளைத் தன் யோகச்சிந்தையில் உணர்ந்த திருமூலர்,

"தவ்வி' கொடுண்மின் தலைபட்ட போதே"

என்று குரல் கொடுக்கின்றார். இல்லையென்று தவித்துப் பசியால் வாடுவோரை நீங்கள் கண்டுகொண்டால் அவர்கள் முதலில் உண்பதற்கு ஓர் அகப்பை உணவை அவர்களுக்குத் தந்துவிட்டு பிறகு நீங்கள் உண்ணத் துவங்குங்கள் என்கிறார்.

ஆழ்ந்து சிந்திக்கையில் சமூகநோக்கில் இதன் உட்பொருள் நன்கு விளங்கும். உங்களுக்குரிய செல்வத்தை அல்லது சேர்த்த வளமையை அனுபவிப்பதில் உங்கள் மனது முழுநிறைவைப் பெறவேண்டுமாயின் அதில் ஒருபகுதியை அனுபவிப்பதற்கு உரிமைபெற்றும் ஏதோ காரணங்களால் உரிமை மறுக்கப்பட்டு வாடும் சகமனிதர்க்குப் பகிர்ந்தளிப்பதன் மூலம் உங்கள் வாழ்வின் நிறைவை நீங்கள் பூர்த்தி செய்ய முடியும் என்கிறார்.

இங்கு உரியவர்களுக்கானபங்கை பகிர்ந்தளிக்கவேண்டும் என்ற கடமை உணர்வு இருப்போர்க்கு உணர்த்திக் காட்டும் திருமூலர் இல்லாமை இல்லாத சமூகத்தைப் படைக்க முனைகின்றார்.

இதன்மூலம் வாழ்வியல் நெறியைச் சிறந்தபாங்குடன் முன்வைக்கும் திருமூலர் சமூகத்தில் ஒருமனிதன் இன்னொரு மனிதனை எளிதில் புரிந்துகொள்வதற்கு வழி ஏற்படுத்துகின்றார். இவ்வாறு ஒருவரைஒருவர் புரிந்துகொள்வதன்மூலம் சமூகம் ஒழுங்குபடுத்தப்பட்டு முரண்பாடற்ற இயல்பு வாழ்க்கைக்கு ஏற்ற சமூகமாக மாறுகிறது. அங்கு மனித உரிமைகள் உறுதிப்படுத்திப்படுகின்றன.சமப்பங்கீடு விரும்பும் மனிதர்களிடம் முரண்பாடுகள் இருப்பதில்லை. எல்லோருக்கும் எல்லாமும் என்ற அறிவுசார் அணுகுமுறையே மக்கள் விரும்பும் அறநெறியாக அங்குக் கொள்ளப்படும்.

சிறந்த சமூகத்திற்கான அடித்தளம் அச்சமூகத்தில் அறம் நிலைத்திருக்க வேண்டும். அறம், பொருள், இன்பம் இம்மூன்றும் ஒன்றையொன்றுப் பின்னிப் பிணைந்து இறுகி இருக்க வேண்டும். நிலைத்த பிணைப்பை ஒவ்வொரு தலைமுறையும் தனது அடுத்த தலைமுறைக்கு விட்டுச்செல்ல வேண்டும். அதுவே அறம். என்றென்றும் நிலைத்திருப்பதற்கான செயன்மையாகும்

ஒழிந்தன காலங்கள் ஊழியும் போயின
கழிந்தன கற்பனை நாளுங் குறுகிப்
பிழிந்தன போலத்தம் பேரிடர் ஆக்கை
அழிந்தன கண்டும் அறம்அறியாரே (261)

என்றும் நிலைத்த இன்பத்தையும், குறைவுபடாத செல்வத்தையும் பெறுவதற்கு நிலைத்த அறமே மாமருந்து என்பதைத் திருமூலர் விளக்க முற்படுகையில் ஒவ்வொரு தனிமனித வாழ்விலும் காலம் விரையமாவதைச் சுட்டிக்காட்டி ஓடிக்கொண்டிருக்கும் இக்காலங்கள் ஒவ்வொருவர் வாழ்விலும் ஒவ்வொரு ஆண்டையும் கழித்துக் கொண்டே பல யுகங்கள் கடந்துவிட்டதை நினைவூட்டிக் கழியும் காலங்களில் அறச்செயல்கள் விடுபட்டுப்போனதை உணர்த்துகின்றார். அவ்வாறு அறச்செயல்கள் விடுபட்டுப்போனதாலேயே இன்றளவும் வறுமை ஆழ வேறூன்றிப்போயுள்ளதை அறியமுடிகிறது.

அறச்செயல்கள் சமூகத்தில் நடைபெறச்செய்வது ஒவ்வொருவருக்கும் கடமையாகிறது. கடமை தவறுவதால் ஒவ்வொருவர் மனத்திலும் கட்டி எழுப்பிய சுயநலக்கோட்டைகள் பேராசை என்ற மாடமாளிகைகள் எல்லாம் ஒருநாள் நிச்சயம் குன்றிப்போகும், துச்சமாகச் சரிந்தும்போகும். அதுமட்டுமல்ல இக்கோட்டை கொத்தளங்களைக் கட்டிய சுயநல எண்ணம் கொண்டிருந்த இவ்வுடல் சாறுபிழியப்படும் கரும்புபோல சக்கையாக மெலிந்து தளர்ந்து ஒருநாள் அழிந்துபோகும். அவ்வாறு இவ்வுடல் அழிந்துபோகும் முன்னமே அறம் அறியப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார் திருமூலர்.

பிழிந்தன போலத்தம் பேரிடர் ஆக்கை
அழிந்தன கண்டும் அறம்அறி யாரே...

ஏன் இவர்கள் அறம் அறியாமல் வாழ்ந்திருக்கின்றனர்? இக்கேள்வியின்மூலம் அறவாழ்வின் அதிமுக்கியம் குறித்த விழிப்புணர்வைச் சமூகத்திற்கு ஊட்டுகின்றார்.

சாறுநிறைந்தகரும்பு மக்களால் விரும்பப்படும். பிழிந்து சாறு அகற்றப் பட்ட பின்பு அது வெறும் சக்கையாக வெளியில் கொட்டப்படுவதற்கும் மனிதரால் மிதிக்கப்படுவதற்குமே வீசி எறியப்படும். மனிதவாழ்வின் உண்மைநிலையும் இதுதான்.சாரமாகிய இன்பமும் பொருள் வளமும் சமூகத்தில் நிலைபெற வேண்டுமாயின் அறம் ஒன்றே சிறந்ததாகும். அறம் நிலைபெற்றிறாத சமூகத்தில் இன்பம் இருப்பதில்லை. சுகமும் அங்குத்தங்குவதில்லை. எனவேதான் தனிமனித வாழ்வின் சிறப்பை அறம்கொண்டு வளர்த்தெடுக்க முனையும் திருமூலர் இவ்வாறு சிறந்த மனிதர்கள்மூலம் சிறந்த சமூகத்தை நிர்மானிக்க முயல்கின்றார்.

அறம் பொதிந்த சமூகம் உருவாக என்னதான் செய்ய வேண்டும் என்பதை வரையறை செய்யும் திருமூலர் அதற்கான வழியையும் காட்டுகின்றார்.

பற்றது வாய்நின்ற பற்றினைப் பார்மிசை
அற்றம் உரையான் அறநெறிக்கு அல்லது
உற்று உங்களால் ஒன்றும் ஈந்தது வேதுணை
மற்று அண்ணல் வைத்த வழிகொள்ளுமாறே (259)

ஆண்டவன் கட்டளை இதுதான் என்பது பிறப்பின் இரகசியம். பிறப்பின் இரகசியம் அறிந்தவர்க்கு இறைவன் இடும் கட்டளை எதுவென்பது நன்கு விளங்கிவிடும். ஆலயமாகிய உங்கள் உடலில் உள்ளமாகிய கருவறையில் இறைவன் உறைந்திருப்பதே பேரின்பம். அவ்வாறில்லாமல் அதில் இறை குடிகொள்ளாதிருப்பின் அது இன்பத்தையும் பேரின்ப வீடடையும் வழியையும் ஏற்படுத்தாது. எனவே,

உற்று உங்களால் ஒன்றும் ஈந்தது வேதுணை

என்கிறார்.

நீங்கள் இல்லாத ஏழைக்கு ஒன்றைக் கொடுத்து உதவிய அந்த இரக்ககுணமே உங்களுக்கு உற்றதும் எந்நாளும் கைவிடாததுமான உற்ற துணையாகும். இப்படிப்பட்ட கருணை உள்ளம்கொண்டு வாழ்தலே வாழும் உயிர்கள் பேரின்பவீட்டினை அடைவதற்குப் பரம்பொருள் உருவாக்கித் தரும் பாதையாகும் என்கிறார் திருமூலர்.

அறம் செய்வதற்கு ஏற்ற இடம் கூடி வாழும் சமூகமே என்பது திருமூலர் கண்டுகொண்ட மெய்ஞானமாகும். எனவேதான்,

நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்று கூறுகின்றார். நான் பெற்ற இறையருளானது, நான் உணர்ந்து அறிந்துள்ள பேரின்ப ஞானமாகிய மறைபொருள் பற்றிய அறிவு, என்னோடு சேர்ந்து வாழும் மக்களும் பெற்று உயர்வடைய வேண்டும் என்கின்றார்.

தனிமனித ஒழுக்கமே சமூக கட்டமைப்பின் அடித்தளம் அதுவே அறம் வளர்க்கும் பேரின்ப வாழ்வு. இதுவே திருமந்திரக் கோட்பாடுகளில் மிகமுக்கியமானது.

29. திருமந்திரத்தில் சிவபூஜை



வி.இந்துமதி
முனைவர் பட்ட ஆய்வாளர்
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை
கைப்பேசி எண்: 7639272260

முன்னுரை

சிவ பூஜை என்பது பூ, புகை, விளக்கு, நீர், திருவமுது இவைகளைக் கொண்டு சிவனைப் பூசிக்கலாம் இது ஐவகைச் சக்தியும் அமைத்து ஆசனமூர்த்தி மூலமந்திரங்களால் ஆசனம் இட்டு, அவ்வாசனத்தில் மூர்த்தியை எழுந்தருளச்செய்து, அதில் மூர்த்திமானாகிய சிவனைப் பாவனைசெய்து வெளிப்படுத்தி, தூய மெய்யன்பால் துதித்து வழிபட்டுச் சிவவேள்வி செய்யலாம். இது சாதனங்களைத் திரட்டி வெளியிற் பூசிப்பதும் எல்லாவற்றையும் மனத்தாலே படைத்துக்கொண்டு மனத்தைப் பூசிப்பதும் என இருவகைப்படும். புறப் பூசை கிரியை எனவும், அகப் பூசை ஞானபூசை எனவும் பெயர்பெறும் திருமூலதேவ நாயனார் இவ்விரு வகைப் பூசைகளைத் தொகுத்து இருபத்து நான்கு மந்திரங்களால் உணர்த்துகின்றார். சிவனே முதல் என்றறிந்து அருளொளி விளக்கப் பெற்றபோது அகத்தாலும், புறத்தாலும் அரசனைப் பூசித்தலன்றி வேறுநினை நிகழ்த்தாமை அருளொளியை அடுத்துச் சிவபூசை ஓதப்பெற்றது அதிகார முறைமையும் இதனையே விளக்கும்.

உடம்பே ஆலயம், உயிரே சிவம்

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே (1823)

உள்ளிருக்கும் மனமே சிவனிருக்கும் கருவறை. ஊனாலாகிய உடம்பே எம்பெருமானுக்கு ஆலயம். உள்ளத்தை ஐந்தெழுந்தால் வழிபடும்வாய் கோபுரவாசலும் மெய்ப்பொருளுண்மை அறிந்தவர்க்கு உயிரேசிவலிங்கம் மெய்வாய் புலன்கள் ஐந்தும் அழகுமிக்க மணி விளக்காய் பெருங்கோயில், நன்னிலத்துப் பெருங்கோயில் என்பது மாடக்கோயிலை உணர்த்தும். உள்ளம் உடம்பாகிய ஆலயத்து உயர்ந்த இடத்தில் உள்ளமையால் பெருங்கோயில் எனப்பட்டது. உயிர் மலத்தைச் சார்ந்திருந்தபோது மலத்தால் அறியாமைமிக்குப் பிராணனை அறியாது தடுத்த புலன்கள், சிவத்தைச் சார்ந்த இறைவனைக்காட்டும் மணிவிளக்குப்போல உபகாரம் படுதலான் 'கள்ளப் புலன்' எனபதாகும்.

உள்ளம் குளிரும் திருப்பாட்டுகள்

வேள்வியில் இடப்பட்ட அவிசினை ஏற்கும் சிவ பெருமானுக்கு நாம் நிவேதிக்கக்கூடிய பொருள் எல்லாப் பொருளுமே அவனுடையதாய் இருக்கும்மோ சிவத்தின் உள்ளத்தைக் குளிர்விக்கக்கூடிய சிறந்த திருப்பாட்டுகளைக் காலையும், மாலையும் நாம் பாடுவோம். இறைவனுக்கு அன்புடன் பாடப்படும் பாடல்களே நிவேதனம்.

வேட்டவி யுண்ணும் விரிசடை நந்திக்குக்
காட்டவும் நாமிலங் காலையும் மாலையும்
ஊட்டவி யாவன வுள்ளங் குளிர்விக்கும்
பாட்டவி காட்டுதும் பாலவி யாமே. (1824)

உள்ளம் குளிர்விக்கும் பாட்டு இறைவனுடைய திருவுள்ளத்தை மகிழ்விக்கும் தோத்திரப்பாடல்கள் ஆகும். இப்பாடல்கள் இறை வனுக்குக் காட்டப்படும் பால் உணவாக கருதப்படுகிறது.

பான்மொழி பாகன் பராபரன் தானாகு
மான சதாசிவன் தன்னையா வாகித்து
மேன்முகம் ஈசான மாகவே கைக்கொண்டு
சீன் முகஞ் செய்ய சிவனவ னாகுமே (1825)

பால்போலும் மொழியினை உடைவாளாகிய பராசக்தியை ஒருபாகத்து உடையவனாகிய பராபரனேயாகும் சதாசிவமூர்த்தியை நினைத்து உச்சமுகம் ஈசானமாகப் பாவித்துச் சீலத்தோடு ஏனைய முகங்களையும் அவ்வத்திசைகளில் பாவிக்க பெருமான் வெளிப்படுவர் என்பதாகும். சிவபூசையில் சிவலிங்க மாகிய அருவுருவத் திருமேனியில் உச்சிமுகம் ஈசானமாகவும், கிழக்கு முகம் தத்புருடமாகவும், தெற்குகம் அகோரமாகவும், மேற்குமுகம் வாமதேவமாகவும், வடக்கு முகம் சத்தியோசாதமாகவும் கொள்க என்பது திறந்து ஞானபூசையிலே உயிரைச் சிவமாகப் பாவித்து முற்கூறியவாறு முகங்களைப் பாவிக்க, தானே சிவம் ஈசன் எனவும், புறப்பூசையில் வைத்த குறியினைமாகப் பாவிக்கின், பாவனையால் பூசிக்கப்பெறும் சிவன் சிவலிங்கத்தினடமாகத் தோன்றுவனெனவம் பொருள் கொள்ளப்படும். சீல் + மகம் = சீல் = சீலம் அதாவது ஒழுக்கம், பயிற்சி என்றும் முகங்களைப் பாவித்துபப் பயிலுதல் என்பதாகும்.

சிவபூசைக்குரிய உபகரணங்கள்

தியானமும், வாய்மையும் உடையவரே ஈசனைக் காணற்குரியவர்கள், பூவும், நீரும், பஞ்சாமிர்தம் போன்றவற்றைக் கொண்டு பூசிப்பவர்கள் வல்லவர்கள் என்று கருதப்படுகிறது. வல்லவர்கள் தம்அன்பான பாடல்கள் மூலமும், உபகரணங்கள் மூலமும் இறைவன் பூசைகள் செய்து அதன்மூலம் இறைவனை காணற்குரியவர்கள் ஆகின்றனர்.

மஞ்சன மாலை நிலாவிய வானவர்
நெஞ்சினுள் ஈசன் நிலைபெறு காரணம்

அஞ்சமு தாம்உப சாரம்எட் டெட்டொடும்
அஞ்சலி யோடுங் கலந்தர்ச்சித் தார்களே (பாடல் - 1827)

திருமஞ்சனத்தையும், பூமாலைகளையம் சாதனங்களாகக்கொண்டு வழிப்பாட்டால் விளங்கிய தேவர்கள் மனதில் இறைவன் என்றும் இடைவிடாது வீற்றிருத்தற்குரிய காரணம் அவர்கள் பஞ்சாமிர்தம் பதினாறு உபசாரங்கள் இவைகளைக்கொண்டு உச்சி மேல் கைகுவித்தலாகிய நமஸ்கார முத்திரையுடன் வழிபடுவார்கள்.

மஞ்சனம்

மஞ்சனம் - என்பது இறைவனை நீராட்டுவதற்குரிய நீர், மாலை, பூவும் அதனாளாகிய மாலையும் ஆகும். பூவும். நீரும் சாதனங்காளகக் கொண்டு பூசித்தால் இறைவனின் அருளை பெறலாம் என்பது பொருள்.

அஞ்சமுதம்

அஞ்சமுதம் என்பது பழம், தேங்காய், தேன், நெய், சர்க்கரை ஐந்தும் கூட்டிச் செய்யப்படுவது இவை இரசபஞ்சாமிர்தம் எனவும், பலபஞ்சாமிர்தம் எனவும் இருவகைப்படும்.

அஞ்சலி

அஞ்சலி கரம்குவித்தல் என்பது பொருள். இது நமஸ்காரமுத்திரை எனப்படும். இது சிவபெருமான் ஒருவற்கே உரியது. பரதமும் நமஸ்காரமுத்திரையால் சிவனைப் பாவித்தனர் என்பார்கள்.

பூவும், நீரும்

புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
ஆண்ணல் அதுகண்டருள்புரி யாநிற்கும்
எண்ணிலி பாவிகள் எம்மிறை யீசனை
நண்ணறி யாமல் நழுவுகின் றாரே (1828)

சிவபூசையாகிய பதிபுண்ணியத்தைச் செய்பவர்கள் பூவும், நீரும் கொண்டு பூசை செய்வார்கள். சிவபெருமான் அவற்றை அன்புடன் ஏற்றுக்கொண்டு அருள்புரிவார். சிவனைப் பூசிக்க பூவும், நீரும் கொண்டு பூசை செய்பவர்களுக்கு இறைவன் அருள் புரிய காத்துக் கொண்டிருக்கிறார் என்பது பொருள். எளிமையான சாதனங்களின் மூலம் சிவபூசை செய்தால் இறைவன் அருள் முழுமையாகக் கிடைக்கும்

நவதீர்த்தங்கள்

அத்த னவதீர்த்த மாடும் பரிசுகேள்
ஒத்த மெய்ஞ் ஞானத் துயர்ந்தார் பதத்தைச்
சுத்தம தாக விளக்கித் தெளிக்கவே
முத்தியா மென்றுநம் மூலம் மொழிந்ததே (1829)

சிவபெருமான் உயிர்களை உய்யக்கொள்வதற்காக அருளிய ஒன்பது தீர்த்தங்களிலும் மூழ்குவதால் விளையும் நன்மைகள் யாவும், உண்மைஞானத்தால் உயர்ந்தார் திருவழகுகழுவிய நீரைக் தெளித்துக்கொள்வதன்மூலம் கிடைக்கப்பெறுகிறது.

பிரார்த்தனை செய்தல்

சிவபூசையில் செய்யப்படும் பிரார்த்தனை மூலம் இறைவனை அடையமுடியும்.

மறுப்புற்று விவ்வழி மன்னிநின் றாலுஞ்
சிறப்பொடு பூநீர் திருந்தமுன் ஏந்தி
மறப்பின்றி யுன்னை வழிபடும் வண்ணம்
அறப்பெற வேண்டும் அமரர் பிரானே (1830)

உயிர்கள் பிறவிச்சூழலில் அகப்படின், அதற்குரிய வினைவயப்பட்டு மயங்கி செய்வன தவிர்த்து, மறந்துவிடும். ஆதலின் தனக்கு ஒரு தலைவன் உள்ளான் அவர் சிவனே என்பதும், அவனே நினைக்கத் தக்கவன், பூசிக்கத் தக்கவன் என்பதை மறந்துவிடாமல் பூவும், நீரும் ஏந்தி இறைவனைப் பிரார்த்திக்க வேண்டும் 'பிறவாமை வேண்டும் என்னும் மந்திரம் பெரியபுராணத்துப் பிறப்புண்டேல் நின்னை என்றும் மறவாமைவேண்டும்' என்ற பகுதியை நினைவூட்டுகிறது.

ஆயிரம் திருநாமங்கள்

ஆரா தனையும் அமரர் குழாங்களுந்
தீராக் கடலும் நிலத்துமை தாய்நிற்கும்
பேரா யிரமும் பிரான் திரு நாமும்
ஆரா வழியெங்கள் ஆதிப் பிரானே (1831)

ஆயிரம் திருநாமங்களையும், சிவபெருமானது சிறப்புத் திருநாமங் களையும் சொல்லிப் பொருந்திப் பூசிக்கும் சாதனையால் ஆதிப்பிரானாகிய சிவன் வெளிப்படுவார். அப்போது நீங்கள் வாழ்கின்ற இந்த நிலத்தில் வழிபாடுகளும், தேவர்கள் கூட்டம் அலைஓயாத கடலும் ஆகிய எல்லாம் உமது ஏவல் உமதாய்நிற்கும் என்பது பொருள். பேராயிரம் கூறிய பரவுதல் பெருமானுக்கு விருப்பமாதலால், பேராயிரம் பரவி வானோரேத்தும் பெருமானை 'பூவனூர்ப் புனித புனிதன் திருநாமந்தான் நாவில் நூறு நூறாயிரம்' ஆயிரம் திருநாமம் சொல்லி நயம் போற்றுவோம் என்பது திருமுறைப் பிரமாணங்கள் ஆகும். பிரான் திருநாமம் என்பது சிவாய தேவாய, பவாய தேவாய முதலிய ஒன்பது நாமங்களாம். அவற்றுள் சிறந்தது சிவன் என்னும் நாமம்.

பஞ்சகவ்யம்

ஆனைந்தும் ஆட்டு அமரர் கணந்தொழத்
தானந்த மில்லாத் தலைவன் அருளது
தேனுந்து மாமலர் உள்ளே தெளிந்ததோர்
பாரையு குணமும் படைத்து நின்றானே (1832)

சிவனருள் சிந்தையில் நிறைந்தது. அவ்வருளில் இறைவன் வான் முதலிய ஐம்பூதங்களின் குணமாக விளங்குகிறது. பசுவிடமிருந்து அடையப்பெறும்பால் முதலிய ஐந்தானும் திருமஞ்சனம் செய்து தேவர்கள் கூட்டம் வணங்க, தனக்கு ஓர் உறுதியும் இல்லாத அநாதிநித்தியனாக விளங்கும் முதல்வன் திருவருள் தேனைப் பிலிற்றுகிற பெரியதாமரை போன்ற இதயத்துள்ளே தெளிந்திருந்தது. ஒப்பற்ற முதல் பார் முதலிய பூதங்கள் ஐந்தினுக்கும், ஐங்குணங் களையும் படைத்தருளுகிறான்.

ஐந்து பஞ்சகவ்யம்

ஐந்து பஞ்சகவ்யம் என்பது பால், தயிர், மோர், நெய், கோசலம் என்பனவாம். இவற்றுள் நீக்கிக் கோமயம் கோடலும் ஒன்று. பால், தயிர், நெய், வெண்ணெய், மோர் என்பாரும் உளர்.

முடிவுரை

இதயத்தாமரையின் உள்ளே நிலவும் பெருமாள் அழைக்க, 'கையில் பூவை எடுத்துக் கொண்டு மூடி, தாமரை மொட்டுப்போலக் குவித்து, சிவ மூலமந்திரத்தையும், அகாரமுதல் உன்மனை வரையுள்ள பதினாறு பிரசாத மந்திரங்களையும் உச்சரித்து, ஆவாகன முத்திரையால் புஷ்பங்களை சதாசிவ மூர்த்தியினுடைய உச்சியிலே வைத்து ஒளிமயமானவரும், அருவமானவரும், அறிவு ஆனந்தமயமான வருமாகிய பரசிவத்தைக் கன்மசாதாக்கியத்தில் விளங்குகிறவராகத் தியானித்து, ஆறு குணங்களோடு கூடிய அங்க தியானங்களைச் செய்து மூர்த்தியின் இதயத் ஸ்தாபன முத்திரையால் தாபித்து வணங்க வேண்டும். சிவபூசை செய்தல் ஒன்றே பிறந்ததன் பயனைத் தரும்செயல் ஆகும். அதனைச் செய்யின் இறைவன் முன்னின்று அருள்செய்வார். ஆவன் திருவடியைச் சேரலாம் என்பது கருத்து.

30. பிரபஞ்ச இரகசியத்தின் ஓவியர் மு. நமசிவாயம்



கட்டுரையாக்கம்: **P.** குமார் **& S.** குமார்
'திருமூலர் அறக்கட்டளை'
சென்னை, தமிழ்நாடு.
http: www.tirumular.com / www.tirumular.org
email: admin@tirumular.com / pk@tirumular.com / skumar@tirumular.com
தொலைபேசி: +91 44 4555 4027 / +91 9092755532

'நான் வேலைபார்த்த நூலகத்தில் இரண்டரை இலட்சத்திற்கு மேலான புத்தகங்கள் இருந்தன. ஆனால் நான் படித்தது திருமந்திரத்தை மட்டும்தான். அந்தப் புத்தகம் மட்டும்தான் என்னை நோக்கி வந்தது' இப்படி விவரிக்கிறார் இந்தக் கட்டுரையின் நாயகர் மு. நமசிவாயம் அய்யா. ஒருங்கிணைந்த மதுரையில் முத்துத் தேவருக்கும்-சீனி அம்மாளுக்கும் மகனாக 1954இல் பிறந்தார். 15 ஆண்டுகள் மதுரையில் தொடக்க கல்வி பயின்றவர், பின்னர் உசிலம்பட்டியில் உயர்கல்வி முடித்த பின்னர், நூலக-அறிவியலில் மேற்படிப்பு மதுரையில் முடித்தவருக்கு சென்னை கல்வித்துறை இயக்குனர் அலுவலகத்தில் இரண்டாண்டு (1980-1982) வேலை. அதன் பின்னர் 1983இல் தமிழ்நாடு ஆவண காப்பக நூலகத்திற்கு மாற்றப்படுகிறார். இது அரசர் கால பட்டயங்கள் உத்தரவுகள், வரைபடங்கள், மன்னர்கள் மற்ற நாட்டு அரசர்களுக்கு எழுதிய கடிதங்கள், ஆவணங்கள், பின்னர் பிரிட்டிஷ் இந்தியாவின் ஆட்சியாளர்களின் ஆவணக் கடிதங்கள், பிரிட்டனின் உத்தரவுகள், வரைபடங்கள், இந்திய விடுதலைக்கு முன்னர் சென்னை மாகாணத்தில் போடப்பட்ட அரசு உத்தரவுகள், பெரிய பெரிய ஒப்பந்தங்களைப் பத்திரப்படுத்தும் 'ஆவணக்காப்பகம்' ARCHIVES. பின்னர் நாடு விடுதலை அடைந்த பின்னர் இந்த ஆவணக்காப்பகம் தமிழ்நாட்டரசின் கீழ்வந்து பராமரிக்கப்பட்டு வருகிறது, அங்கே ஒரு நூலகம், அது ஆராய்ச்சி-மேற்படிப்பு, ஆய்வுக்கான நூல்கள், ஆவணங்கள் போன்ற சேவைகள் சிறப்பு அனுமதி பெற்றப் பின்னர் ஆய்வு செய்ய தனி நபர்கள், மாணவர்களுக்கு அனுமதித்து வருகிறது. இந்த நூலகத்தில் அய்யா 2009 முதல் வரை நூலகராக பணியாற்றி வந்துள்ளார்.

திடீர் உடல்நலக் குறைவும் உடல் தொல்லைகளும்

எழும்பூரில் வேலை பார்த்து வந்த மு. நமசிவாயம் முதலில் மயிலாப்பூரிலும், அதன் பின்னர் சைதாப்பேட்டையிலும் வசித்து

வந்துள்ளார். தினமும் அலுவலகத்துக்குத் தொடர் வண்டிப் பயணம். இரண்டு மகள்கள், ஒரு மகன் என அவரது குடும்பம் இனிதே சென்றுவந்த நேரத்தில் அவருக்குத் திடீர் அடிக்கடி உடல்நலக் குறைவும் இரத்த அழுத்தங்களும் ஏற்பட்டன. திடீர் படபடப்பு, கை கால் நடுக்கம் இப்படி இனம்புரியாத நடுக்கம். இரத்த அழுத்தம்,நெஞ்சு வலி, அதனால் அவரது பணிகள் பாதிக்கப்பட்டன. எல்லா உடல் நல ஆலோசனை, மருத்துவ ஆய்வு எல்லாம் செய்தாகிவிட்டன. மருத்துவ ரீதியாக 1990 முதல் - 1998 வரை எல்லா மருந்துகளும் கொடுத்தாகிவிட்டன. எல்லா பரிசோதனைகளும் செய்தாகிவிட்டன. ஒரு தொடர் மருத்துவக் கவனிப்பும் செய்தாகி விட்டது, ஒரு கட்ட ஆய்வுக்குப் பின்னர் மருத்துவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை, ஆனால், அவரது படபடப்பு உணர்ச்சியும் குறையவில்லை. அவருக்கு அப்போது கடவுள் வழிபாடெல்லாம் கிடையாது. ஆனால் மருத்துவரோ அவரைத் தியான பயிற்சி செய்து பாருங்களேன். எங்காவது முறையாகத் தியானம் பழகுங்கள் என்று சொல்லி அனுப்பிவிட்டனர்,

'SIMPLIFIED KUNDALINI YOGA-SKY என்ற மனவளக்கலை மன்றம்'

உலக சமாதான அறிவுத் திருக்கோயில் என்ற பிரார்த்தனை தளத்தையும், வாழ்க-வளமுடன் என்ற எண்ண அலைகளையும் மனவளக்கலை மூலம் உலகுக்கு வழங்கி வந்த வேதாத்திரி மகரிஷியின் சைதாப்பேட்டை கிளையில் மு. நமசிவாயம் அறிமுகத் தியானப் பயிற்சி எடுக்கிறார். தியானத்தில் உட்கார பழகுகிறார். 6 மாத பயிற்சிக்குப் பின் அவரது உடல் உபாதைகள் குறைகின்றன , ஆனால் நிறைய அகக்காட்சிகளைக் காண்கிறார், அதுபற்றி மனவளக் கலை மன்றத்தில் சொல்ல, 'நீங்கள் மகரிஷி சொன்ன மாதிரி பயற்சி செய்யாமல் ஏதோ வேறு மாதிரி செய்கிறீர்கள்' என்று பதிலுரைக்கின்றனர்.பிறகு அவர் அங்கே செல்லவில்லை. ஆனால் தியானம் மட்டும் தொடர்ந்து செய்து வந்தார். பாடத்தையும் கணித-சூத்திரத்தையும் ஆசிரியரிடமிருந்து கற்றுத் தேர்ந்த பின்னர் ஆசிரியர் நம் கூடவே வர மாட்டார். அதுபோலப் பயிற்சியும் ஆர்வமும் அய்யாவைப் பிரபஞ்ச வெட்டவெளிக்கு அழைத்துச் சென்றது.

அகக்காட்சிகள் தெரியத் தெரிய கைகள் பரபரத்தன

மு. நமசிவாயம் இப்படித் தொடர்கிறார் 'எங்கேயோ நான் கொண்டுசெல்லப்படுவேன் பேரானந்தமாக இருக்கும், புதிய புதிய காட்சிகளை நான் கண்டேன்,மறுநாள் காலை வேலைக்கு சைதாப் பேட்டையிலிருந்து தொடர் வண்டியில் போகும்போதே இரவு கண்ட காட்சிகள் நினைவுக்கு வரும், அலுவலகத்துக்குப் போனபின்னர் உடனே அதைப் படமாகச் சிறிய காகிதத்தில் போட்டுவிடுவேன். இப்படி போட்டுப்

போட்டு சிலரிடம் காண்பித்த வேளையில் என்னை ஒழுங்குபடுத்தியது என்.எஸ்.வள்ளுவன் என்ற இளைஞர், நான் இருந்ததோ ஆவண காப்பக நூலகம். பல பேர் ஆராய்ச்சி நோக்கில் அங்கே நிறைய விடயங்களை அங்கே தேடுவார்கள். அப்படி அங்கே 'சிந்துசமவெளி நாகரிக வட்டெழுத்துகளை ஆராய்ச்சி செய்து வந்த அவர்தான் என்னை இப்படி வெறுமனே காகிதத்தில் போடவேண்டாம், என்னென்ன அகக்காட்சிகள் வருகின்றனவோ, தெரிகின்றனவோ அதை நோட்டுப் போட்டு வரையுங்கள் என்றார் பின்னர் அதை அப்படியே செய்து வந்தேன் பலப் பல காட்சிகள் பலப்பல அனுபவங்கள். ஒரு சக்தி என் கையை நகர்த்தியது. அதுதான் இப்படி வரைய வைத்தது , நான் முறையாக ஓவியம் பழகியதில்லை ஆனால் மிகத் தெளிவாக வரைந்தேன். நித்தம் நித்தம் ஒரு புதிய அனுபவம்.. இப்படி இருக்கையிலே ஒருநாள் அங்கு ஒரு அன்பர் வந்தார். அவரோ பத்திரிக்கை நிருபராய் இருந்து பின்னர் இராமலிங்க அடிகளாரின் வள்ளலார் பாதையிலே பயணித்த சாது, அவர் என் ஓவியப் புத்தகத்தைப் பார்த்து 6ஆம் திருமுறையைப் படிக்கச் சொல்லிச் சென்று விட்டார். என் காதிலே அது ஆறாம் திருமந்திரம் என்று பதிவாகிவிட்டது.

எங்களது நூலகத்தில் இரண்டரை இலட்சத்திற்கு மேற்பட்ட புத்தகங்கள் அத்தனையும் அருமையான ஆய்வு நூல்கள் அரிய புத்தகங்கள், 'ஏம்ப்பா அந்த ஆறாம் திருமந்திரத்தை எடுத்தா' என்று என் உதவியாளருக்கு உத்தரவிட்டேன். அவர் 'திருமந்திரம்' என்ற அரிய புத்தகத்தை என் மேசையில் கொண்டுவந்து வைத்தார் அதை புரட்டியபடியே, 'என்னப்பா நான் ஆறாம் திருமந்திரம் கேட்டேன் நீ இந்தப் பெரிய புத்தகத்தை வைத்து விட்டாய் என்றேன். என்னுடைய இன்னொரு உதவியாளர் எனக்கு' அய்யா தமிழர்களின் சமய நூல்களை 12 திருமறைகளாகத் தொகுத்துள்ளனர்.அதில் '10ஆம் திருமுறையென்பது திருமந்திரம்' எடுத்துச் சொல்கிறார். பிறகு நான் அந்தத் திருமந்திரத்தைப் படிக்க ஆரம்பிக்கிறேன்.. இறையருள் எனக்கு பெரும் உதவி செய்துள்ளது. வந்த சாதுவோ வள்ளலாரின் 'அருட்பா' (6ஆம் திருமறை) என்று கைகாட்ட, என்கைக்கு வந்ததோ திருமந்திரம். பொதுவாக மூவாயிரம் தமிழ் என்ற திருமந்திரம் பல பேருக்குப் புரியாது. ஆனால் பிறகு ஒவ்வொரு நாளும் ஆழ்ந்து ஆழ்ந்து கூர்ந்து படிக்கிறேன். படிக்க,படிக்க நான் போட்ட பல படங்களுக்கு அங்கே தொடர்பு இருப்பது போல் எனக்குப் புலப்பட்டது. அப்போதுதான் சிந்துசமவெளி நாகரிக வட்டெழுத்து ஆராய்ச்சியாளர் வள்ளுவன் சொன்னார். You deciphered the TIRUMANTIRAM hymns என்றார். யாரும் பயணித்து காணக் கிடைக்காத காட்சிகளை நீங்கள் கண்டு இதைப் படம் போட்டுள்ளீர்கள் என்றார். நான் கண்ட பல அகக் காட்சிகளுக்குப்

பல பாடல்கள் அங்கே இருந்தன. மேலும் பல பாடல்களின் பொருள் நன்றாகப் புரிந்தது. என்று முடிக்கிறார் மு.நமசிவாயம்.

பறந்ததும்-வரைந்ததும்-படித்ததும்-கிடைத்ததும்

1990 முதல் 1998 வரை அவருக்கு உடம்பில் பல அவஸ்தைகள். ஒரு 100 அடி நடந்தால் கூட அவருக்குப் பயம் ஆட்படும். உடம்பில் எல்லா நோய்களும் இருந்தன. ஆனால் தியானம் பழக பழக, உட்கார உட்கார அவர் பிரபஞ்சத்திற்குள் பயணித்திருக்கிறார், பல அகக்கலைக் காட்சிகளைக் கண்டு களித்துள்ளார். அந்தப் பிரபஞ்ச சக்தியே அவரை அதையெல்லாம் ஓவியமாக வடித்துள்ளது. எந்த நூலகத்தில் பணியாற்றினாரோ அந்த நூலகமே திருமந்திரத்தை அறிமுகப் படுத்துகிறது, அங்கேயே புத்தகமாக்கி, (தனி கைப்பிரதி) எதிர்கால இளைஞர் ஆய்வுக்காக தமிழ்நாடு ஆவண காப்பக நூலகத்திற்கே அர்ப்பணித்துவிட்டார். அவர் சொல்கிறார், 'நான் ஓவியனல்லன், ஆனால் கிறுக்கியிருக்கிறேன். நான் மீனவனல்லன். ஆனால் ஒரு பெரிய பிரபஞ்ச குளத்தில் கையைவிட்டுத் துழாவினேன் பெரிய பெரிய அரிய மீன்கள் கிடைத்துள்ளன, 'நான் ஒரு கணித ஆசிரியன். கணித சூத்திரங்களைக் கண்டுபிடித்து ஆவணப்படுத்தி விட்டேன், அவ்வளவுதான், நானே 100 மார்க்குகள் எடுப்பது என் வேலை அல்ல, உங்கள் கூடவும் வர முடியாது, நீங்கள்தான் அதைப் புரிந்து 100க்கு 100 எடுக்க வேண்டும், எல்லாமே பறக்கும் தட்டுகள். அது உங்களைப் பிரபஞ்சத்திற்கு அப்பால் அழைத்துச் செல்லும், வேறு வேறு அகக் காட்சிகளைத் தரக்கூடும், மூலரும் திருமந்திரமும் உதவும்'.


பின்னர் 2004 இலிருந்து அவருக்கு நடக்கக் கூட முடியாதவருக்குச் சக்தி அதிகரிக்கிறது, சென்னையைச் சுற்றி, காஞ்சிபுரத்தை சுற்றி தொண்டை மண்டல கோயில்களுக்கெல்லாம் செல்கிறார், உண்மையான ஜீவசமாதி என்றால் என்ன, உயிரின் நிலை என்ன? எல்லாவற்றையும் அறிந்து 2009 இல் விருப்ப ஓய்வுபெற்று. கூடுவாஞ்சேரியில் வந்து உட்கார்ந்து விட்டார். அவருக்கு இப்போது எங்கேயும் போக நாட்டமில்லை. படித்தது திருமந்திரம் மட்டும்தான் கிடைத்ததோ பிரபஞ்ச இரகசியம்!. அவர் வரைந்த ஓவியத்திற்கும் இணைத்த திருமந்திரப் பாடலுக்கும் அவரே சர்வ தேசப் பல்கலைக் கழகம் அதைத்தான் எங்கள் 'திருமூலர் அறக்கட்டளை' கொண்டாடுகிறது.

திருமூலர் அறக்கட்டளையில் அய்யாவின் புத்தகம்

கடற்கரையோரத்தில் சிப்பிகள் பொறுக்கிச் சிறுபிள்ளைகள் விளையாடுவதுப்போல; நாம் சிறு சிறு திருமந்திர மாலைகளை கோர்த்து புரிந்துகொள்ள முயற்சிக்கிறோம், அழகு பார்க்கிறோம் ஆனால்


பெருங்கடலோ பெரிய பெரிய பிரமாண்டத்தைப் பலப்பல 'லெமூரியாக்களை உள்ளடக்கி வைத்துள்ளது அதுபோலத்தான் திருமூலரின் மூவாயிரந்தமிழ். அதைப் போலத்தான் எங்கள் நமசிவாயம் அய்யாவும். அவர் இந்தப் பிரபஞ்ச இரகசியங்களைத் திருமூலரின் திருமந்திர உதவியோடு வரைந்து ஓவியமாக்கி ஒட்டு மொத்த உலக சமூகத்திற்கே தந்து விட்டார் (சுமார் 210 படங்கள் Inner journey> Yaathirai 2001, Occult images > Cosmic dances இப்படி). மலேசிய திருமந்திர மாநாட்டு ஏற்பாட்டளார்களே, இந்த 2016இல் இங்கே கூடிய தமிழ் கூறும் நல்லுலகமே. இந்த ஆண்டு 2016 நவம்பரில் வருகிற ஐப்பசி திங்கள் அசுபதி நட்சித்திரத்துக்கு முன்னர் அதாவது அனைத்துலகத் திருமூலர் குருபூசைக்கு முன்னர், சர்வதேச தரத்துடன் இந்தப் பிரபஞ்ச இரகசியம் ஆங்கிலத்தில் வண்ணப் புத்தகமாக உங்கள் கையில் இருக்கும்! நன்றி

'என்றும் உங்களுடன்-திருமூலர் ஆணையின்படி'



பார்த்திடம் எங்கும் பரந்தெழு சோதியை
ஆத்தம தாகவே ஆயந்தறிவார் இல்லை
காத்துடல் உள்ளே கருதி இருந்தவர்
மூத்துடல் கோடி யுகங் கண்டவாறே

இருந்த இவ்வட்டங்கள் ஈராறி ரேகை
இருந்த இரேகைமேல் ஈறாறு இருத்தி
இருந்த மனைகளும் ஈறாறு பத்தொன்று
இருந்த மனை யொன்றில் எய்துவன் தானே (914)



தான் ஒன்றி வாழிடம் தன் எழுத்தேயாகும்
தான் ஒன்றும் அந்நான்கும் தன்பேரெழுத்தாகும்
தான் ஒன்று நாற்கோணம் தன் ஐந்தெழுத்தாகும்
தான் ஒன்றில் ஒன்றும் அவ்அரன்தானே

31. திருமந்திரம் காட்டும் பக்தி நெறி

முனைவர் **கா.ஆறுமுகம்**
சென்னைக் கிறித்தவக் கல்லூரி
தாம்பரம், சென்னை - 59.
கைபேசி: 8531075209

முன்னுரை

மானுடம் சிறப்பாக வாழவேண்டும் என்ற சிந்தனையும், முன்னோர் மொழிந்த நற்கருத்துக்கள் பரவலாக்கப்பட வேண்டும் என்னும் விழைவும் மேலோங்கி உள்ளன. அவ்வகையில் மனித வாழ்வைச் சிறக்க வைப்பதிலும், பண்படுத்துவதிலும்சைவத்திருமுறைகள் பெரும்பங்கு வகிக்கின்றன. இறைவனுக்குரிய அடையாளம் யாது? என்று வினவியவர் பலர். அடையாளம் கூறமுடியாமல் திகைத்தவர் பலர். ஆனால் இறைவனுக்குரிய அடையாளத்தை அழகுற விளக்கியவர் இவரே. இவரது திருமந்திரம் 3000 பாடல்களையும் 9 தந்திரங்களையும் 232 அதிகாரங்களையும் கொண்டு விளங்குகின்றது. இந்நூல் பதி, பசு, பாசம் பற்றி விரிவாக பேசுகின்றது. அவ்வகையில் திருமூலர் காட்டும் மனித வாழ்விற்குத் தேவையான பக்தி நெறிகளை ஆராய்வதே இக்கட்டுறையின் நோக்கம்.

இறைவன் இருக்குமிடம்

'உள்ளம்பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்' என்பதே திருமூலரின் பக்திநெறி. எனவே உடம்பை ஓம்ப வேண்டும். அதன் மூலம் உட்பொருளாய் விளங்கும் இறைவனை அடைய வேண்டும். 'ஊத்தைச் சரீரம்' என்று உடலை இழிவாகக் கருதியவர் அதன் மெய்ப்பொருளை அறிந்தபின், தன் அறியாமையை உணர்ந்து இறைவன் உறையுமிடம் நம் உடம்பே என்பதை உணர்த்துகிறார்.

உடல்ஐம்புலன்களால் ஆனது என்பது வெளித்தோற்றம். ஐம்புலன்களை வெல்லும் ஆற்றல் மக்களுக்கு இல்லை. அத்தகு ஆற்றலை வழங்கி உய்விக்க வல்லவன் இறைவனே என்பதால்தான் 'ஐந்து வென்றனர்' என்கிறார். திருவள்ளவரும் 'பொறிவாயில் ஐந்தவித்தான்' என்று கூறுகிறார். தவத்தால் வெல்வது மனித முயற்சி. இறைவனோ இயல்பாக வெல்பவன். விண், வெளி, தீ, நீர், மண் ஆகிய பஞ்சபூதங்களின் சேர்க்கையே உலகமாகும்.

ஓலி, ஸ்பரிசம், உரு, சுவை, மணம் என்னும் பஞ்சபூதத் தன்மைகள் தன் மாத்திரைகள் எனப்படுகின்றன. இவ்வுடலுள் குடிகொண்டிருப்பது

உயிர். உயிருள் புகுந்து உறைபவன் இறைவன் உடம்பிலுள்ளஆறு தலங்களிலும் விநாயகர், பிரமன், திருமால், உருத்திரன், மகேசுவரன், சதாசிவம் என்னும் ஆறுமூர்த்திகளும் அமர்ந்து தொழில் செய்கிறார்கள் என்பது யோக ரகசியமாகும். இந்த ஆறு நிலைகளிலும் பரவி நிற்பது ஓர் இறைவனே. அந்த ஒன்றுதான் ஆறாக விரிந்து நிற்கிறது. இதனையே 'ஆறு விரித்தனன்' என்கிறார் திருமூலர். அதுமட்டுமல்ல, ஆறு ஆதார நிலைகளுக்கு அப்பால் ஏழாவதாக இருப்பது ஸஹஸ்ராதம் என்பதாகும்.இதனை ஆகாசம், சிதம்பரம், ஞானமாற்றம் என்றெல்லாம் அழைக்கின்றனர். இதனை 'ஏழும்பர்ச் சென்றனர்' என்கிறார். 'எட்டுணர்ந்தான் என்பது இறுதி நிலை.

இறைவனின் தன்மைகள்

சித்தர்நெறி சிவநெறியே ஆகும். சிவனே ஒப்பற்றவன்.

சிவனோடுஒக் குந்தெய்வம் தேடினும் இல்லை
அவனோடுஒப் பார்இங்கு யாவரும் இல்லை (5)

அவன் அறவாழ் அந்தணன், பிறப்பால், வல்லவன், பாவங்களை அழிப்பதில் தீயினும் வெய்யன். அன்பர்களை ஆட்கொள்வதில் நீரினும் தண்ணியன். அரவணைப்பதில் தாயினும் நல்லவன். கையில் வெண்னையை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைவதைப் போன்றே இறைவன் இருக்குமிடத்தை அறியாமல் இல்லாத இடம் தேடி அலைந்தவரே திருமூலர்.அனுபவத்தின் வழி இறைவன் ஒவ்வொருவர் உடலுக்குள்ளே உறைந்திருக்கிறான் என்பதை உணர்த்துகின்றார்.

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான் என்று
உடம்பினை யான்யிருந் தோம்புகின் றேனே (725)

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே (724)

என்று உணர்ந்து பாடுகின்றார். உடம்பே பரமாத்மா உறையுமிடம் என்பதை இங்குப் பதிவு செய்கிறார்.

அறிவே தெய்வம்

உள்ளத்துள்ளே இறைவனைக் காணாது காடு, மலை, கடல், ஆறு, தீர்த்தம் என்று எங்கேங்கோ தேடி அலையும் வீணரை மூடர் எனச் சுட்டுகிறார்.

உள்ளத்தின் உள்ளே உளபல தீர்த்தங்கள்
மெள்ளக் குடைந்து நின்றாடார் வினைகெடப்

பள்ளமும் மேடும் பரந்து திரிவரே
கள்ள மனமுடைக் கல்வி இலோரே (509)

என்று உண்மையான பக்தி நிலையை இனம் காட்டுகிறார். மேலும் அறிவு வடிவானவன் இறைவன் என்று அறியாதிருந்த தனக்கு இறைவனே தான் அறிவு வடிவானவன் என்று உணர்த்தினான்.

அறிவுவடிவு என்று அறியாத என்னை
அறிவுவடிவு என்று அருள் செய்தான் நந்தி (2357)

அன்பே கடவுள்

அறிவை அறிந்தவன் அன்பே கடவுள் என்பதை உணர்வான். இதனை,

அன்பும் சிவமும் இரண்டெ ன்பர் அறிவிலார்
அன்பே சிவமானது ஆகும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே (270)

என்று கூறுகிறார்.

மக்களுக்குச் செய்யும் தொண்டு

கடவுளுக்குச் செலுத்தும் அன்பை மட்டும் அவர் போதிக்க வில்லை. மக்களுக்குத் தொண்டு செய்யும் அன்பையும் அவர் வலியுறுத்துகின்றார். இதனை,

படமாடக் கோயில் பகவற்கு ஒன்று ஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடக் கோயில் பகவற்கு அது ஆமே (1857)

கோயில் படமாக உள்ள கடவுளுக்கு ஒன்று தந்தால் நடமாடும் கோயில்களாக உள்ள உயிர்களிடத்தில் உள்ள கடவுளுக்கு அது பயன்படுவதில்லை. நடமாடும் உயிர்களிடத்தில் உள்ள கடவுளுக்கு ஒன்று தந்தால் படமாக உள்ள கடவுளுக்கும் அது சென்று சேரும் என்று கூறுவது உயிர்களுக்கும் நாம் நன்மை செய்வதை வலியுறுத்தும் நோக்கில் கூறுவதாகும். வெறும் இறைவன் மேல் உள்ள பக்தியை மட்டும் வைத்து யாதொன்றும் பயன் கிடையாது என்பதை வலியுறுத்துகிறார்.

உன் மனத்தை நீ நோக்கு

பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு
மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினால்
பார்ப்பான் பசு ஐந்தும் பாலாய்ச் சொரியுமே (2883)

எல்லோரும் அகத்தை மட்டும் பார்ப்பது இல்லை. ஆனால் புறத்தை நன்றாகவே ஆராய்கின்றோம். அவ்வாறு உள்ளே ஆராய்ந்துவிட்டால்,

உள்ளே ஐந்து பசு விருப்பம் போல் மேய்ந்து திரிவதைக் காண்பான். மனம் ஐந்து புலன்களாய் அலைவதைக் காண்பான்.மேலும், மேய்ப்பார் இல்லாமல் வெறிபிடித்துத் திரியும் மாடுகள் அவை மேய்ப்பவர் அவற்றின் வெறி அடங்குமாறு செய்தால் அந்தப் பசு ஐந்தும் ஞானப்பாலைச் சொரியும். பொல்லாதவை நல்லவையாக மாறிப் பயன் தருவதைக் காணலாம்.

உணவளிப்பதன் பயன்

யாவர்க்கு மாம்இறை வற்குஒரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்குஒரு வாயுறை
யாவர்க்கு மாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம் பிறர்க்குஇன்னுரை தானே (252)

என்பதில், பசுவிற்கு உணவுகொடு, பசித்தவருக்கு ஒரு கைப்பிடி உணவு கொடு அல்லது ஆறுதலான வார்த்தைகளைக் கூறு என்று மனிதர்கள் அன்புடனும்ஈகையுடனும் வாழ வழி சொல்கின்றார்.

முடிவுரை

அன்பே சிவம் என்ற வரியை மனதில் கொண்டாலே போதும் இவ்வுலக மக்களின் சில குறுகிய மனப்போக்குகள் குறைந்து நல்வழியே பிறருக்கும். தன்னை அறிந்தவர் ஆதலால் தன் அனுபவத்தின் வழி உட்பெருஞ் சோதியான இறைவனைத் தன்னுள் கண்டவர். நிலையற்ற உடம்பையும் உயிரையும் நிலைத்ததாக ஆக்கிக கொள்ள இறைவனோடு கலக்க வேண்டும் என்று வற்புறுத்துபவர். உள்ளம், உடம்பு, உயிர் மூன்றும் ஒன்றோடொன்று இயந்தவை. ஆதலால் உயிர் உய்ய, உடம்பையும் உள்ளத்தையும் பேண வேண்டும். இறைவன் கொள்கலம் என்பதே திருமூலரின் பக்தி நெறி ஆகும்.

துணைநூல் பட்டியல்

1. மாணிக்கவாசகன், ஞா.திருமந்திரம் (உரையாசிரியர்), உமாபதிப்பகம், சென்னை, 2009.
2. சீனீ வேங்கடசாமி, மயிலை, தமிழர் மதம், பாரிநிலையம், சென்னை, 1998.
3. மேலது. சைவமும் தமிழும், பாரிநிலையம், சென்னை, 2011.
4. சைவத் தத்துவங்கள், இணைய தளக்களஞ்சியம், தமிழ் இணையப் பல்கலைக்கழகம், 2000.

32. திருமந்திரத்தில் வள்ளுவம்

முனைவர் ஆ.பாக்கியலட்சுமி
உதவிப் பேராசிரியார்,
பக்தவச்சல நினைவு மகளிர் கல்லூரி
சென்னை. கைபேசி: 9840438183

மனிதனை மனிதனாக்குவதற்குச் சில அடிப்படையான மனப் பயிற்சிகள் இன்றியமையாதது. அப்பயிற்சிகளை மனித சமுதாயத்திற்கு வழங்கி, மனிதர்களை மனிதர்களாக்கிப் பின்அவர்களை வானவர் நிலைக்கு உயர்த்த வேண்டும் என்ற உயர்ந்த நோக்கிலே எழுந்த பேரிலக்கியங்களே தமிழ்மொழியிலுள்ள சித்தர் இலக்கியங்கள். சித்தர் இலக்கியங்கள் மனித யாக்கையில் வாழுகின்ற மாக்களின் மனங்களில் உள்ள மாசினை அகற்றி மனிதப் பண்புள்ள மக்களாக மனிதரை மாற்ற முயற்சித்தன.

மக்கட்பண்பின் மனமாண்பைத்தீர்மானிப்பன அவரின்கொள்கைகளும், ஒழுக்கநெறிகளும், குறிக்கோள்களும், இலக்குகளுமேஆகும். மனித வடிவம் உள்ளவரெல்லாம் மனிதராக மாட்டார். இதனைத் தொல்காப்பியனார்,

உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே (தொல் -நூ.484)

என்கிறார். இதில் மக்களால் மனிதன் என்று சுட்டிக் கூறப்படுபவர் மட்டுமே உயர்திணை என்றும் மற்றவை அனைத்தும் அஃறிணை எனவும் கூறுபவர் என்கிறார். சித்தர் பாடல்கள் இதனைப் பக்திநெறிவழியாகவே உணர்த்த முயன்றன எனலாம். இதற்குக் காரணம் நம்நாட்டு மக்களும் பக்திமனம் சார்ந்த மரபில் வாழ்ந்ததே எனலாம். இதனைப் பாரதியாரும்

யாகத்திலே தவ வேகத்திலே - தனி
யோகத்திலே பல போகத்திலே
ஆகத்திலே தெய்வ பக்திகொண்டார்தம்
அருளினிலே உயர்நாடு - இந்தப்
பாருக்குள்ளே நல்ல நாடு - எங்கள்
பாரத நாடு

என்று பாடுகிறார். சித்தர்கள் காடுகளிலே தவம் செய்து ஆன்மநேயம் கூடி, சமாதி நிலையிலே வாழ்ந்து வருகின்றனர். இமய மலையிலும் பொதிகை மலையிலும் இன்றைக்கும் அம்மரபு இருந்து வருகின்றது. புயல், மழை, பனி, வெயில் என எந்த ஓர் இயற்கையும் அவர்களைத் தொடுவது இல்லை. அவர்கள் ஒளியாக நின்று இந்த மனித சமுதாயத்தைப் பேணிக்காத்து வருகின்றனர்

தொல்காப்பியனார் ஐவகை நிலங்களுக்கு உரிய தெய்வங்களைச் சுட்டினாலும் தமிழர் சமயங்கள் இரண்டே. சிவனைத் தெய்வமாக் கொண்டு வழிபடும் முறையினைச் சைவம் என்றும் திருமாலைத்

தெய்வமாகக் கொண்டு வழிபடும் நிலையினை வைணவம் என்றும் கூறுவர். சைவத்தை வைணவத்தைத் தமிழர் இரு கண்களாகக் கருதினர். இவற்றுள் சைவசமய நூல்களைப் பன்னிரு திருமுறைகளாகத் தொகுத்துள்ளனர். அவற்றுள் பத்தாவது திருமுறையாக விளங்குவது திருமந்திரமாகும். இ.ஃது ஒன்பது தந்திரங்களாக அமைக்கப்பட்டுள்ளன. திருமந்திரம் பாயிரம் தவிர்த்து ஒன்பது பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. முதல் தந்திரம் வாயுரை வாழ்த்தாகவும் செவியறிவுறுத் தலாகவும் உள்ளது. இரண்டாம் தந்திரம் மும்மலத்தவர்களாகிய சகலர்கள் நடந்துகொள்ளவேண்டிய முறைகளை அறிவுறுத்துகின்றது. மூன்றாம் தந்திரம் யோக சாதனைகள், ஆன்மிகப்பயிற்சி, உடம்பைப் பாதுகாக்கும் வழிமுறைகளைப்பற்றி விளக்குகின்றது. மந்திரங்கள், மந்திரங்களை வடிவ நிலைப்படுத்தும் சக்கரங்களின் அமைப்புமுறை, வழிபடும் முறை, அதனால் உண்டாகும் பயன்கள் ஆகியவைப்பற்றி நான்காம் தந்திரம் எடுத்துரைக்கின்றது. ஐந்தாம் தந்திரத்தில் வீடுபேற்றிற்கான நால்வகை நெறிகளும் முப்பொருள் உண்மையும் அவற்றின் நிலைகளும் ஆகிய சைவசமய நெறிமுறைகளைப் பேசுகின்றது. முப்பொருள் உண்மைகளைக் கேட்டறிந்தோர் அவற்றை முற்றுணர்வு பெறுவதற்கு வேண்டிய சாதனங்களை ஆறாம் தந்திரம் உணர்த்துகின்றது. ஏழாம் தந்திரம் ஐம்பொறிகளை அடக்கும் முறையையும் சிவநெறியில் நிற்போர் கடைபிடிக்கவேண்டிய நல்லுரைகளையும் உரைக்கின்றது. சிவனோடு கூடுதல் என்னும் சிவயோக நிலையினை எட்டாம் தந்திரம் உணர்த்துகின்றது. ஒன்பதாம் தந்திரம் சிவனை அணைவதால் ஏற்படும் வீடுபேற்று இன்பநிலையை உணர்த்துவதாக அமைந்துள்ளது.

திருமந்திரத்தில் உலகப்பொதுமறையாக விளங்கும் திருக்குறளின் கருத்துக்கள் விரவிக் கிடக்கின்றன. அவற்றை ஒப்பிட்டு நோக்குதலே இக்கட்டுரையின் நோக்காம்.

உள்ளம் ஓம்புதல்

துறவறம் என்பது உறவுகளையும் உடமைகளையும் துறப்பது மட்டுமன்று. ஆமைப்போல, ஒருவன் தன் ஐம்பொறிகளையும் அடக்கும் திறன்பெற்றால் அ.ஃது எக்காலத்திற்கும் பாதுகாப்பாக அமையும் என்பதாம். அவ்வாறு ஐம்புலன் அடக்குவோர் நிகரற்றவர் ஆவார் என்பதை,

> **ஒருமையுள் ஆமைபோல ஐந்தடங்கல் ஆற்றின்**
> **எழுமையும் ஏமாப் புடைத்து** (126)
> **உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்**
> **வரனென்னும் வைப்பிற்கோர் வித்து** (24)

என்றும் திருக்குறள் கூறுகின்றது. இக்கருத்தொடு திருமந்திரத்தில் 'இந்திரியங்களாகிய மும்மத யானைகள் பிளிறிக்கொண்டு எழுகின்றன. அவற்றை அடக்க அறிவாகிய கோட்டையை வைத்தேன். ஆனால் அவை அக்கோட்டையினின்றும் தப்பியோடி வெளியே கேடு தரும் புலன்களில் மண்டி உடம்பாகிய கரும்பை அழிக்கத் திமிர்கொண்டு

அலைகின்ற என்றும் அவற்றைப் பிரணவமாகிய ஐந்தில் ஒடுங்கினால் நாதாந்தமாகிய அகலிடம் அமையும். இதுவே மேலான தவம். இதுவே சிவபதம். இதில் ஒடுங்கி நின்றவாரே அருளுடையார் திரு ஐந்தெழுத்தை ஓதினால் இவை யாவும் சித்தியாகும் இதனைப் பற்றித் திருமந்திரம்,

முழக்கி எழுவன மும்மத வேழம்
அடக்க அறிவென்னும் கோட்டையை வைத்தேன்
பிழைத்தன ஓடிப் பெருங்கேடு மண்டிக்
கொழுத்தன வேழம் குலைக்கின்ற வாறே (2034)

ஐந்தில் ஒடுங்கில் அகலிடம் ஆவது
ஐந்தில் ஒடுங்கில் அருந்தவம் ஆவது
ஐந்தில் ஒடுங்கில் அரன்பதம் ஆவது
ஐந்தில் ஒடுங்கில் அருளுடை யாரே (2035)

எனப் பேசுகிறது. கருத்து மேற்சொன்ன குறள்களை ஒப்பு நோக்கி இன்புறத்தக்கதாய் அமைந்துள்ளது.

ஆசைகளைத் துறத்தல்

தான் அல்லாத உடம்பை 'நான்' எனவும் தனக்கு உரிமை இல்லாத பொருளைத் 'தனது' எனவும் நினைக்கின்ற அகந்தையாகிய மயக்கத்தை அறுத்தெறிந்து வாழ்கின்றவர்கள் உயர்ந்தவர் வாழும் உலகில் இடம்பெறுவர் என்பதை,

யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும் (346)

என்ற குறள் உணர்த்துகின்றது. இக்கருத்து,

ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்கள்
ஆசை படப்பட ஆய்வரும் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்தம் ஆமே (30)

என்று திருமந்திரம் கூறுகின்றது. எவ்வகையான ஆசையைச் செலுத்தாதுவிடுங்கள் ஆசையைச் செலுத்த அவற்றால் உயிருக்குத் துன்பமே வரும். ஆசையை அறவேவிட்டால் ஆனந்தம் உண்டாகும்.

துன்பம் செய்யாமை

அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போற் போற்றாக் கடை (315)

என்பது குறள். இதற்குத் 'துறந்தார்க்கு உயிர் முதலியவற்றை உள்ளவாறு அறிந்த அறிவினான் ஆவதொரு பயன் உண்டோ, பிறிதோர் உயிர்க்கு வரும் இன்னாதவற்றைத் தம் உயிர்க்கு வந்தனபோலக் குறிக்கொண்டு காவாவிடத்து' என்று பரிமேலழகர் உரையில் கூறுகிறார். உலகில் உயிர்களிடத்தில் அன்புகாட்டுதலே சிறந்தது என்றும், அடுத்த நிலையில் ஆறறிவற்ற உயிர்களிடத்தும் அன்புகாட்டிப் பேணுதல் என்றும், மூன்றாம் நிலையாகப் பிறர்க்கு ஈந்து உண்ணல் என்பதனை யும், நான்காம் நிலையில் அதற்கும் மேலாகத் தான் உண்ணும்போது ஒரு கைப்பிடி பிறர்க்கு ஈந்து உண்ணுதலே மனிதமாகும் என்ற கருத்தை,

உள்ள சரியாதி ஒட்டியே மீட்டென்பால்
வள்ளல் அருத்தியே வைத்த வளம்பாடிச்
செய்வன எல்லாம் சிவமாக்க் காண்டலால்
கைவளம் இன்றிக் கருக்கடந் தேனே (2977)

சீவன் எனச்சிவன் என்னவே றில்லை
ஐவ னார்சிவ னாரை அறிகிலார்
சீவ னார்சிவ னாரை அறிந்தபின்
சீவ னார்சிவ னாயிட்டு இருப்பாரே (2017)

யாவார்க்கு மாம்இறை வற்கு ஒரு பச்சிலை
யாவார்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க்கு இன்னுரை தானே (252)

காட்டி நிற்கும் திருமந்திரப் பாடல்கள் மேற்சொன்ன திருக்குறள் கருத்தொடு ஒப்பிட்டு நோக்கதக்கதாய் அமைந்துள்ளது.

உடலோம்பல்

உடலோம்பல் குறித்துத் திருமந்திரம்,

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த்தேனே (724)

என்றும்

உடம்பினை முன்னம் இழுக்கென்று இருந்தேன்
உடம்பினுக்கு உள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டானென்று
உடம்பினை யானிருந்து ஓம்புகின் றேனே (725)

எனப் பேசுகிறது.இக்கருத்து,

மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று (941)

என்ற குறளோடும்

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் (948)

என்ற குறளோடும் ஒப்பு நோக்கதக்கதாய் அமைந்துள்ளன.

இரண்டு நூல்களும் மனித மனஅழுக்கை நீக்கி மானிட மேன்மைக்காகப் பாடிய மகான்களின் நூல்கள் என்பதால் இரண்டிலும் பல கருத்துக்கள் ஒன்றி வருகின்றன.

துணைநூற்பட்டியல்

1. திருமந்திரம் 2000, கழகப்பதிப்பு
2. திருக்குறள் 1925. பரிமேலழகர் உரை, கழகப் பதிப்பு
3. தொல்காப்பியம் சு.வே.சு. 2005, மணிவாசகர் நூலகம்.
4. தமிழ் இலக்கிய வரலாறு - தமிழண்ணல், மதுரை
5. தமிழ் அகராதி, நர்மதா பதிப்பகம்.

33. திருமந்திரம் வாழ்வின் வழிகாட்டி

முனைவர் கி.இலட்சுமி
தமிழ்த்துறைத் தலைவர்
ஸ்ரீகன்யகா பரமேஸ்வரி மகளிர் கலை
மற்றும் அறிவியல் கல்லூரி, சென்னை
கைபேசி: 7299156011

சமய இலக்கியங்கள் நிரம்பிய சுந்தர மொழி நம் தமிழ்மொழி. சாதாரண மனிதனை உயர்ந்தவனாக சிறந்தவனாக மேம்பட்டவனாக உருவாக்குவது சமயம். சமயத்தின் அறநெறி உலக வாழ்க்கையோடு இறை வாழ்க்கையையும் இணைத்து மனிதன் மேல்நிலை செல்ல வழிகாட்டுகின்றது. நமது சமயம் விஞ்ஞானத்தால் உணர முடியாத மெய்ப்பொருளைத் தனது மெய்ஞ்ஞானத்தால் இனிது எடுத்து இயம்புகின்றது. நமது சமய சித்தாந்தம் அறிவியல் நோக்கில் மெய்ப்பொருளை நிலைநிறுத்தும் உண்மைகளின் முடிவு. இவ் உண்மைகளை பூவினுள் மணம்போன்று தமிழ் இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன.

சித்தர் இலக்கியத்தில் சமுதாய சீர்திருத்தக் கருத்துகள் மிகுந்துள்ளன.தமிழ்ச் சமுதாயத்தில் பெருநோயாக உள்ள சாதியைச் சித்தர்கள் கடுமையாகச் சாடினர். உயிர் மட்டுமன்று உடலும் நித்தியமானது என்பது அவர்கள் கோட்பாடு. சித்தர்களில் திருமூலர் முதன்மை இடம் வகிக்கின்றார். அவர் பாடிய திருமந்திரம் 3027 பாடல்களைக் கொண்டது. இது சைவ சித்தாந்தத்தின் அடிப்படையை விளக்குகின்றது. 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்னும் திருமூலர் கோட்பாட்டைப் பகுத்தறிவாதிகளும் ஒப்புக் கொள்கின்றனர்.

திருமந்திரம் சிறப்பாகச் சிவாகம உண்மைகளையும் உலக மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் நல்வாழ்க்கை முறையினையும் ஞானயோக நுண்பொருள்களையும் ஒருங்கே இனிய தமிழில் விரித்துரைக்கின்றது. திருமந்திரத்தின் தந்திரங்கள் பல்வித உட்பொருளை உணர்த்தும் சமயக் களஞ்சியமாகத் திகழ்கின்றன.

இறைவனின் தோற்றம்

கோயிலில் மரத்தால் செய்யப்பட்ட யானையைக் கண்ட குழந்தைக்கு மரம் புலப்படுவதில்லை. மரம் என்று தெளிவு பெற்ற தாய்க்கு யானைப் புலப்படுவதில்லை. இவற்றைப் போன்று உலகத்தையும் உலகப் பொருட்களையும் இறைவனாகவே காண்பவர்க்கு உலகத் தோற்றம் புலப்படுவதில்லை. உலகத்தோற்றம் புலனாகுவர்க்கு இறைவன் புலனாவதில்லை.

இந்த அழகிய உலகியல் உண்மையை உணர்த்துகிறது கீழ்க்காணும் திருமந்திரப்பாடல்.

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதல் பூதம் (2290)

இருகோயில்

'உள்ளம் பெருங்கோயில்' என்கிறார் திருமூலர். உலகில் உள்ள இரு கோயில்களை திருமந்திரத்தின்வழி வெளிக்காட்டுகின்றார். முதற்கோயில் படமாடும் கோயில்;இரண்டாவது நடமாடும் கோயில். கோயிலாவது உயிர்கள். மனிதர்கள் கடவுளைப் படமாக எழுதிவைத்து வழிபட்டமையால் படமாடக் கோயில் என்கிறார். ஆண்டவனுக்கு ஈவதை அடியவர்க்கு ஈந்தால் அது ஆண்டவனைச் சென்று அடையும். நடமாடும் கோயிலாக உள்ள அடியவர்க்குச் செய்யும் பூசை படமாடக் கோயில் இறைவனுக்குச் செய்யும் பூசையாகும்.

படமாடக் கோயில் பகவற்க் கொன்றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க் கங்காகா
நடமாடக் கோயில் பகவற்க் கொன்றீயில்
படமாடக் கோயில் பகவற்க தாமே (1857)

என்னும் பாடல் உயிர்களைக் கோவிலாக எண்ணி வழிபட வைக்கின்றது.

பதி பசு பாசம்

பதி என்பது இறைவன்; பசு என்பது உயிர்; உலகம் என்பது பாசம். பதி நிலையானது; பசு தளையால் கட்டுண்டது; உலகம் மாறுவது - மாயமானது. எந்த ஒன்று முன்ஒரு கணத்தில் இருந்தது போன்று அடுத்த கணத்தில் இல்லாது மாறிக்கொண்டிருக்கிறதோ அது மாயை. இதனை இயங்கியல் தன்மை என்பர்.

பதி நிலையாக இருக்க, உலகம் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இரண்டுக்கும் நடுவே தன்வினைகளால் கட்டுண்ட உயிர் உலகினைக் காண்கின்றது. மாயையின் கைப்பிடியில் உயிர் தவிக்கின்றது. நிலையானது எது என்று உணர்ந்து இறைவனைத் தேடுகின்றது. அதன் அடிப்படையில் வழிபாடு பிறக்கின்றது. வழிபட்டவழி நடக்கையில் வாழ்க்கை சிறக்கின்றது.

வழிபடு பொருளை உணர்ந்து வழிபடலும், மற்றவர் உணர வைத்தலும் பூசைகளில் சிறந்த பூசை இதனைத் திருமூலர்,

பின்னை நின்று என்னே பிறவி பெறுவது
முன்னை நன்றாக முயல்தவம் செய்கிலர்
என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே (81)

எனப்பாடிப் பிறவித்தளையிலிருந்து நீங்குவதற்கு தவம் செய்வதொன்றே சிறந்த வழி எனக் காட்டுகின்றார். இறைவனைத் தமிழால் வெளிப்படுத்துவதும் பெருந்தவமே என்றும் கூறுகின்றார்.

இது வாழ்வையே தவமாகக் கொள்ளும் பெருநிலையை உணர்த்துகின்றது.

ஐந்தெழுத்து வழிபாடு

இறைவனை வழிபட பெரும் முயற்சி தேவையில்லை. நமசிவய என்னும் ஐந்தெழுத்து மந்திரமே போதுமானது.நமசிவாய என்னும் இம்மந்திரம் பஞ்ச பூதங்களை உற்பத்தி செய்தது. இறைவன் ஐம்பூத மாக இருக்கிறான்; இவ் உலக உயிர்கள் அனைத்தும் ஐந்தெழுத்து மந்திரத்தால் படைக்கப்பட்டன. சீவனை மரண காலத்தில் காப்பதும் இந்த ஐந்தெழுத்து மந்திரமே!

அஞ்செழுத்தாலைந்து பூதம் படைத்தனன்
அஞ்செழுத்தாற்பல யோனி படைத்தனன்
அஞ்செழுத்தாலிவ் வகலிடந் தாங்கினான்
அஞ்செழுத்தாலே அமர்ந்து நின்றானே (966)

சுகையும் வழிபாடும்

எளிதாக கிடைக்கும் பச்சிலைக் கொண்டும் இறைவனை வணங்கலாம். பச்சைப் புல்லைக் கொண்டு பசுவின் பசியாற்றலாம். ஒரு கைப்பிடிச் சோறு கொண்டு உயிர்களின் பசிப்பிணியைத் தீர்க்கலாம். அதுவே உயர்ந்த அறப்பணி என்பதை திருமந்திரம் வலியுறுத்துகின்றது.

யாவர்க்குமாம் இறைவற்கு ஒரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்குஒரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போது ஒருகைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே (252)

அன்பே சிவம்

கடவுள் உருவமாகவும் அருவமாகவும் விளங்குபவன். இறைவனை வழிபடத் தேவை அன்பு மட்டுமே.ஆருயிர்க்கெல்லாம் அன்புகாட்டி வாழ்தலே வாழ்க்கை என்னும் வள்ளலார் நெறியைத் திருமூலரும் வலியுறுத்தியுள்ளார்

வினைப்பயன்

ஆற்று மணலை ஆறு சுமக்காமல் வெள்ளம் கொண்டு செல்வதைப் போன்று மனித வாழ்வின் பயணம் முன்வினைப்படியே தொடர்கின்றது.

ஆறிட்ட நுண்மணல் ஆறே சுமவாதே
கூறிட்டுக் கொண்டு சுமந்தறி வாரில்லை
நீறிட்ட மேனி நிமிர்சடை நந்தியைப்
பேறிட்டு என்உள்ளம் பிரியகில் லாவே (2805)

இவ் உயரிய உண்மையை மணலை உவமையாகக் கொண்டு விளக்குகின்றார் திருமூலர்.

ஆசையை விடுமின்

உயிர்களின் உறுதியைக் குலைப்பது ஆசை.

ஆசையறுமின்கள் ஆசையறுமின்கள்
ஈசனோடாயினும் ஆசையறுமின்கள்
ஆசை படப்பட ஆய்வருந் துன்பங்கள்
ஆசைவிடவிட ஆனந்தமாமே (2615)

ஆசையே உயிர்களின் துன்பத்திற்கு அடிப்படையாகிறது. எவ்வகையாயினும் ஆசை கேட்டை உண்டாக்கும். எனவே, இறைவன்மீதும் ஆசை வைக்காதீர்கள். ஆசை ஒன்று பலவாகும்;அது துன்பமாகும். ஆசையை விடுவதால் ஆனந்தம் அடையலாம் என்கிறார் திருமூலர்.

ஐம்புலன்களை அடக்குதல்

ஐம்புலன்களை அடக்கி வெற்றி கொண்டவனே ஞானியாக முடியும்; இறைவனைக் காண முடியும் என்பது தவறான கருத்து என்கிறார் திருமூலர். அறிவற்ற மூடர்களே ஞானம்பெற ஐம்புலன்களை அடக்கு என்று கூறுவர். புலன்களை அடக்குவதால் ஞானத்தை அடைய முடியாது. தான் என்னும் ஆணவத்தை கைவிட்டு தந்திர யோகத்தைக் கற்றுத் தேர்ந்தவர்களால் மட்டுமே ஞானம் அடைய இயலும் என்கிறார் திருமூலர்.

அஞ்சும் அடக்கு அடக்கு என்பார் அறிகிலார்
அஞ்சும் அடக்கில் அமரரும் அங்கு இல்லை
அஞ்சும் அடக்கில் அசேதனமாம் என்றிட்டு
அஞ்சும் அடக்கா அறிவு அறிந்தேனே (2009)

மேற்காணும் பாடல் அறிய வேண்டியவற்றை அறிய வேண்டியதன் முதன்மையை உணர்த்துகின்றது.

உடலை ஓம்புவீர்

இறைவன் எங்கும் தனியாக இல்லை. நமது உடம்புதான் இறைவன் இருக்கும் இடம். உடம்பைப் பேணுவதே நமது பணி. உடம்பினுள் இறைவனைக் காணும் சித்தர் கொள்கையை விளக்குகின்றது கீழ்க்காணும் திருமந்திரப்பாடல்.

முடிவுரை

திருமந்திரம் தரும் மூச்சுப்பயிற்சி உடலுக்கும் உள்ளத்துக்கும் உறுதி தருகின்றது.

திருமந்திரம் தரும் காட்சிப் பயிற்சி வேறாகவும் உடனாகவும் இருக்கும் இறைவனை காணவும் உணரவும் வழிவகுக்கிறது.சாத்திரத் திருமுறையாக அமைந்த இச்சைவத் திருமுறை அழியும் தன்மையுள்ள நமது உடலை யோகத்தின்வழி பக்குவமாக்கிச் சிற்றின்பங்களின் பிடியில் இருந்து விலக்கி அனைத்து உயிர்களிடத்தும் அன்பு செலுத்துவதால் சீவனைச் சிவனாக்கி மரணமில்லா பெருவாழ்வு வாழலாம் என்பதை எளிய பாடல்கள்வழி உணர்த்துகின்றது.

34. திருமந்திரமும் திருக்குறளும் - ஓர் ஒப்பீடு



தேவி. மு.
முனைவர்பட்டஆய்வாளர்
தமிழ் இலக்கியம் மற்றும் சுவடிப்புலம்
உலகத் தமிழாராய்ச்சிநிறுவனம்
தரமணி, சென்னை - 600 113.

முன்னுரை

உலகமக்கள் தங்கள் வாழ்வில் பின்பற்றவேண்டிய அறநெறிகளை வள்ளுவர் தனக்கே உரித்தான தனிப்பாணியில் திருக்குறளில் வடித்துள்ளார். அவ்வகையில் திருமூலரின் திருமந்திரத்தில் திருக்குறள் சிந்தனைகள் எவ்வாறுஊடுருவிக் காணப்படுகின்றதுஎன்பதைஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகஅமைகின்றது.

நூற்பகுப்பு

திருக்குறள் முப்பாலாகப் பகுக்கப் பெற்றுள்ளது. ஒவ்வொருபாலும் இயல்களாகவும், இயல்கள் அதிகாரங்களாகவும் உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது. அறத்துப்பாலில் 38 அதிகாரங்களும், பொருட்பாலில் 70 அதிகாரங்களும், காமத்துப்பாலில் 25 அதிகாரங்களும் பெற்றுள்ளன.

திருமந்திரம் 9 தந்திரங்களாகப் பகுக்கப் பெற்றுள்ளது. பாயிரத் தையும் சேர்த்தால் 10 பகுதியாகும். தந்திரங்கள் அதிகாரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளன. மொத்தம் 232 அதிகாரங்கள் உள்ளன.

திருக்குறளிலுள்ளஅதிகாரத் தலைப்புகளில் சிலதிருமந்திரத்தில் வேறுபாடின்றிக் காணப்படுகின்றன. திருக்குறளில் முதலதிகாரமாக உள்ளகடவுள் வாழ்த்து,திருமந்திரத்திலும் பாயிரத்தின் முதலதிகாரமாக அமைந்துள்ளது. அதுபோலவேமுதல்தந்திரத்தில் சிறிதும் மாற்றமின்றிக் கொல்லாமை,புலால் மறுத்தல், பிறன் மனை நயவாமை, நல்குரவு, அன்புடைமை, கல்வி, கல்லாமை, நடுவுநிலைமை என்னும் அதிகாரத் தலைப்புகள் உள்ளன.

திருக்குறளின் அதிகாரப் பெயர்களைத் திருமந்திரம் பெற்றிருந்தாலும் திருமூலரின் திருமந்திரப் பாடல்கள் சிவநெறியில் ஒழுகுவார்க்குரிய சிறப்பியல்களைக் கூறும் முறையில் அமைந்திருத்தலைக் காணமுடிகின்றது. திருக்குறள் பொதுநிலைஅறத்தினைக் கூறுகின்றது. திருமந்திரமோசமயநெறிகளையும் அதனோடுசேர்த்துவழங்குகின்றது.

அதிகாரங்களின் ஒற்றுமைவேற்றுமை

திருக்குறளில் அறத்துப்பாலில் வரும் நிலையாமைஎன்னும் அதிகாரம் திருந்திரம் முதல்தந்திரத்தில் யாக்கைநிலையாமை,செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை, உயிர்நிலையாமை என நான்கு வகையாக அமைந்துள்ளது. பெரியாரைப் பிழையாமைஎன்னும் குறள் அதிகாரம் சிவநிந்தை,குருநிந்தை,மயேசுரநிந்தைஎனத் திருமந்திரத்தில்

விரிவடைந்துள்ளது. தவம், கூடாவொழுக்கம் என்னும் குறளில் இடம்பெறும் அதிகாரங்கள் திருமந்திரத்தில் தவநிந்தை அவவேடம், ஞானவேடம், சிவவேடம் எனவிரிவடைந்துள்ளன.

வான்சிறப்புஎன்னும் அதிகாரம் வான் சிறப்பென்றும், கேள்வி அதிகாரம் கேள்வி கேட்டமைதல் என்றும், அருளுடைமை என்ற அதிகாரம் அருளுடைமையின் ஞானம்படுதல் என்றும் சிறிது மாற்றத்துடன் காணப்படுகின்றது. மகளிர் இழிவுஎன்னும் திருமந்திர அதிகாரம் வரைவின் மகளிர்என்னும் குறளதிகாரத்தின் மாற்றமாகக் கருதலாம்.

அரசாட்சியின் முறையைக் குறளின் இறைமாட்சியாகவும்,தானச் சிறப்பைக் குறளின் ஈகையாகவும் கருதலாம். தானம் யாருக்கு செய்ய வேண்டும், யாருக்குச் செய்யக்கூடாது என்பதைப் பாத்திரம், அபாத்திரம் என இரண்டுஅதிகாரமாகப் பகுத்துத் திருமந்திரம் கூறுகின்றது.

திருக்குறளில் உள்ளசிலசொற்கள்,சொற்றொடர்கள் மற்றும் கருத்துகள் எவ்வாறுதிருமந்திரத்தில் இடம்பெற்றுள்ளனஎன்பதைப் பற்றிக் காண்போம்.

கடவுள் வாழ்த்து

திருக்குறள் கடவுள் வாழ்த்தில் உள்ளமுதற்குறளின் சொல்லும் பொருளும் திருமந்திரத்தில் பல்வேறுவகையில் இடம்பெற்றுள்ளன.

அகரமுதலஎழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றேஉலகு (குறள்.1)

இக்குறளில்வரும் ஆதிபகவன் என்னும் சொல் திருமந்திரத்தில் ஆதிஎன்றும் பகவன் என்றும் தனித்தனியாகவும், ஆதிபகவான், ஆதிப்பிரான், வேதப்பகவனார்எனச் சிறுமாற்றங்களோடும் காணப் படுகின்றன.

ஆதிப்பிரான் அமரர்க்கும் பரஞ்சுடர் (319)
அறிவுடையார்நெஞ்சொடுஆதிப்பிரானும் (2364)

என்னும் திருமந்திரப் பாடல்வரிகளில் ஆதிப்பிரான் என்னும் சொல்லாட்சி இடம்பெற்றுள்ளது.

வான்சிறப்பு

மழையின் சிறப்பையும் இன்றியமையாமையும் கருதிதிருக்குறள் மழையைஅமிழ்தம் எனச் சுட்டுகின்றது.

வானின் றுலகம் வழங்கிவருதலான்
தானமிழ்தம் என்றுணரற் பாற்று (குறள்.11)
திருமந்திரம் இக்கருத்தினையே,
அமுதூறு மாமழைநீரதனாலே (248)

என்றுதொடங்கும் பாடலில் குறிப்பிடுகின்றது. மழைஎன்னும் வருவாய் தன்வளத்திற் குறையுமானால் உழுதுபயிரிட்டு வாழும் குடிமக்கள் ஏர்பிடித்து உழுதலைக் கைவிடுவர் என்று திருக்குறள் சுட்டுகின்றது. ஆனால் திருமந்திரம் கோயிலில் பூசைகள் நடைபெறுவது தடைப்பட்டால் வாரிவளம் குன்றும் என எடுத்துரைக்கின்றது. வாரிவளம் (14) என்று

குறளில் பயின்றுள்ள தொடர் அப்படியே திருமந்திரத்திலும் வந்துள்ளமை நோக்கத்தக்கது.

அன்புடைமை.

மானிடவாழ்வில் அன்பு அளப்பரிய மதிப்பினைத் தரும். அதுபோல அன்பும் அளப்பரிய மதிப்பாகும். இதனை வள்ளுவர் அன்புடைமை எனும் அதிகாரத்தில் பலவாறு குறிப்பிட்டுள்ளார். அதேபோலத் திருமூலரும் மந்திரத்தின்வழி அன்பின் முக்கியத்துவத்தை இறைநிலை யோடு உணர்த்துகிறார்.

அன்பும் சிவமும் இரண்டென்பர்அறிவிலார் (270)

எனத் தொடங்கும் பாடல்மூலம் அன்புதான் இறைவன் என்று அறிந்த பின்னர், அன்புடையோர் யாவரும் இறைவனாகவே வாழ்ந்திருப்பர். மற்றவர் இறைவனைஅறியாத மூடர்களாகத்தான் திரிவர்என்கிறார். இதுவள்ளுவரின்,

அன்பின் வழியதுஉயர்நிலை அ.்திலார்க்கு
என்புதோல் போர்த்தஉடம்பு (குறள் 80)

எனும் குறட்பொருளோடுபொருந்துமாறுஉள்ளது.

அருளுடைமை

மனிதப் பிறப்பில் அறம்,பொருள், இன்பம், வீடு எனும் நான்கு நெறிகளுள் இறுதியான வீடுபேற்றை அடையச் சிறந்த வழி இறைவழியாகும். அவ்வழி சென்றோர் அடையும் நிலையைப் பற்றியதே அருளுடைமை. இறைவனின் அருளைப் பெற்றவர் தம்வாழ்வில் துன்பங்கள் ஏதும் பெறார் என்பதையே திருமூலர்,

பிரான்அருள் உண்டிடனில் உண்டுநற்செல்வம் (1645)

எனும் பாடல்மூலம் இறையருள் நமக்குக்கிடைத்தால் நற்செல்வ மாகியசிந்தையும், நல்லஅறிவுவளமும், பெருமைகளும் நம்மைத் தேடிவரும். மேலும் அவன் அருளால் தெய்வநிலையை அடையும் பெரும்புகழும் கிட்டும் என்று உணர்த்துகின்றார். இதன்மூலம் இறையருள் உடையவர்க்குத் துன்பம் ஏதும் இல்லை, அருட்செல்வமே செல்வங்களில் எல்லாம் சிறந்த செல்வம், அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை எனக் குறள் காட்டுகின்றது.


இனியவை கூறல்

மனமகிழ்ந்து ஒருவனுக்கு வேண்டிய பொருளினைக் கொடுத்தலினும் அவனைக் கண்டபொழுதுமுகம் இனியனாய் இனியசொல்லையும் கூறுவனாயின் நன்று.

முகத்தான் அமர்ந்தினிதுநோக்கிஅகத்தானாம்
இன்சொலினதேஅறம் (93)

இக்குறள் இன்சொல் இயம்புதல் அறத்தின் பாற்படும் என்று கூறுகிறது. திருமந்திரமும் இக்கருத்தினைத் தழுவியே இன்சொல் பேசுதலைஅறத்தின் கூறாகவேகுறிப்பிடுகிறது. யாவரும் இயன்ற வகையில் அறம் செய்யலாம். அறம் புரிதல் எளிய வழி என்பதனை,

யாவர்க்குமாம்பிறர்க் கின்னுரைதானே (252)



இப்பாடல்வரி இனியவை கூறுதலை அறநெறியாக்க குறிப்பிட்டிருப்பது நோக்கத்தக்கது.

நடுவுநிலைமை

மனிதன் தன் செயல்பாடுகளால் மதிக்கப்படுவதுபோல, அவனது நடுவுநிலைத் தன்மையால் தான் பிறரிலிருந்து உயர்ந்து காணப்படுகிறான். இந்நடுவுநிலை என்பது நியாய அநியாயங்களின் தன்மைகளைக் கண்டறிந்து அவற்றுக்கு ஏற்றவாறு நேர்மையுடன் நடந்து கொள்ளுதலே. இதனை வலியுறுத்தும் வகையில் திருமந்திரம்,

நடுவுநின்றார்க்குஅன்றிஞானமும் இல்லை (320)

எனும் பாடலில் நடுவுநிலை தவறாது அறவழியில் நின்றவர்களுக்கே ஞானம் கிட்டும். மற்றவர்களுக்குக் கிட்டாது. நடுவுநிலைமையில் நின்று வாழ்பவர்களுக்கு நரகத் துன்பமில்லை. மேலும் உயர்ந்த தேவநிலை அடைவர் என்று கூறுகின்றது. இதனையேகுறளும்,

செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவின்றி
எச்சத்திற்குஏமாப்புஉடைத்து (112)

நடுவுநிலை நின்றவரின் செல்வவளம் அழிவில்லாமல் அவனுடைய வழியில் உள்ளவருக்கும் உறுதியானநன்மை தருவதாகும் என்று கூறுவது திருமந்திரத்தோடு ஒப்புநோக்கத் தக்கது.

கொல்லாமை

உயிரினங்களைக் கொலைசெய்வதைப் பற்றித் திருமூலர், எல்லா உயிரும் இறைவனின் படைப்பு எல்லா உயிரும் ஒரேதன்மை உடையன. இவ்வாறு இருக்கப் பிறஉயிரை வதைத்து உண்பதுதகுமா என்கிறார். உயிரினங்களைக் கொலை செய்பவரை மாக்கள் என இழிபிறவியாகக் கூறுவதோடு எமதூதர்கள் எனவும் கூறுகின்றார். இதனை,

கொல்லிடுகுத்தென்று கூறியமாக்களை (198)

என்று கூறுகின்றார். இதனையே வள்ளுவர்,

கொலைவினையர்ஆகியமாக்கள் புலைவினையர்
புன்மைதெரிவார்அகத்து (குறள். 329)

என்றகுறளில் உயிரினங்களைக் கொல்லாமை பற்றித் தெளிவாக எடுத்துரைக்கின்றார்.

நிலையாமை

நல்லமுறையில் உணவைச் சமைத்து உண்டார். தன்இளம் மனைவியுடன் இன்பம் அனுபவித்து இடப்பக்கம் வலிக்கின்றது என்று மனைவியுடன் கீழேபடுத்தார். படுத்தவர் அப்படியே எழுந்திராமல் இறந்து விட்டார்.

உறங்குவதுபோலும் சாக்காடுஉறங்கி
விழிப்பதுபோலும் பிறப்பு (குறள். 339)

என்ற வள்ளுவரின் கருத்து திருமந்திரப்பாடலோடு ஒத்துள்ளது. இதனை,

அடப்பண்ணிவைத்தார்அடிசிலைஉண்டார் (148)

என்றபாடல் தெளிவு படுத்துகின்றது.

வெகுளாமை

சினத்தை வலியார் மேல் காட்டல் தனக்குத் தீமைபயக்கும். எளியவர் மேல் காட்டின் அதனைவிடத் தீமைதருவன வேறில்லை. இதனை,

செல்லா இடத்துச் சினந்தீதுசெல்லிடத்தும்
இல்லதனின் தீயபிற (குறள். 302)

என்கிறார்வள்ளுவர். திருமந்திரத்தில்,

வெல்லும் அளவில் விடுமின் வெகுளியை (2303)

என்னும் பாடல்வரி இக்குறளோடுஒத்துப் போவதைக் காண முடிகின்றது.

அரசுநீதி அறிதல்

ஒருநாட்டில் படைகள் வீரமுடையதாக இருந்தாலும் அவ்வரசருக்கு வெற்றி புகழைத் தேடித் தருவது நீதிமுறையே. நீதியாவது ஒருபாற் கோடாமல் நடுநிலைமைத் தவறாமல் அரசரால் பின்பற்றப் படுதல் வேண்டும். நீதிக்கு தலையாய சான்றாக விளங்குவது மன்னனது நீதி, மகன், ஓட்டிய தேர்க்காலின் இடையே புகுந்து கன்று இறந்தது என்பதற்காகவும், ஆவின் துயரம் நீக்குவதற்காகவும் தன்மகனைத் தேர்க் காலில் இட்டுத் தேரூர்ந்த மனுநீதி சோழன் நீதி உயர்ந்தது. இத்தகைய சிறந்த அரச நீதியைக் கற்றவனாக அரசன் இருக்க வேண்டும் என்று திருமந்திரம் வலியுறுத்துகிறது. அவ்வரசநீதியை அறியா அரசனை, கல்லா அரசன் என்றும் அவனைக் காலனோடு ஒப்பிட்டும் கூறுகிறார்.

கல்லா அரசனும் காலனும் நேரொப்பர் (95)

கூன்பாண்டியன் ஆளுடைய பிள்ளையார் திருமடத்தில் தீவைக்க இணங்கியதுகல்லா அரசன் கொடுமைக்கு எடுத்துக்காட்டு இக்கருத்தையே வள்ளுவரும்,

கல்லாபிணிக்கும் கடுங்கோல் அதுவல்லது
இல்லைநிலக்குப் பொறை (570)

என்று விளக்குகின்றார்.

பெருமை

பிறப்பொக்கும் எல்லாஉயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமையான் (972)

என்னும் இக்குறள் மக்களுக்குள் பிறப்பினால் உயர்வு,தாழ்வு இல்லை என்று குறிப்பிடுகிறது. மக்களிடைய வேறுவாடு கருதாமல் சமனாக ஒழுகுதல் உயரியபண்பாகும். இதனைத் திருமந்திரம்,

ஒன்றேகுலம் ஒருவனேதேவனும் (2014)

என்னும் பாடல் வரியினால் புலப்படுத்துகின்றது.

முடிவுரை

திருமந்திரமும் திருக்குறளும் வெவ்வேறு காலத்தில் இயற்றப் பட்டவை என்றாலும் இருநூல்களிலும் உள்ள பெரும்பான்மையான கருத்துக்கள் ஒத்துக் காணப்படுகின்றன. இருநூல்களும் வாழ்க் கைக்குத் தேவையான அனைத்துக் கருத்துக்களையும் மக்களுக்குத் தெளிவாக விளக்குகின்றன.

35. திருமந்திரத்தில் சமுதாயக் கருத்துகள்



முனைவர் **க.சேக்மீரான்**
தமிழ் இணைப்பேராசிரியர்
மாநிலக்கல்லூரி
சென்னை - 600 005.

தமிழக வரலாற்றிலும் தமிழ்மொழி இலக்கிய வரலாற்றிலும் நீங்காத இடத்தினைச் சித்தர்களும் சித்தர் இலக்கியங்களும் இடம்பெற்றுள்ளன. சித்தர்கள் என்ற சொல்லிற்கு 'இறைமைத் தன்மை அடைந்தவர்கள்' என்றும் 'உலகியலைத் துறந்தவர்கள்' என்றும் 'உலகியல் நடப்பிற்கு மாறானவர்கள்' என்றும் 'சித்துக்கள் ஆடுவதில் வல்லவர்கள்' என்றும் 'சித்தத்தை அடக்கியவர்கள்' என்றும் 'சித்த வைத்தியத்தைக் கண்டறிந்தவர்கள்' என்றும் 'மனத்தின் ஆற்றலை அகமுகமாக ஒருமுகப்படுத்தித் தம்முள்ளே இறைவனைக் கண்டு அவனோடு ஒன்றிக் கலந்தவர்கள்' என்றும் பலவாறாக விளக்கம் தருகின்றனர்.

மனத்தின் ஆற்றலை உள்முகமாக ஒருமுகப்படுத்தித் தம்முள்ளே இறைவனைக் கண்டு அவனுடன் இரண்டறக் கலந்தவர்களையே சித்தர்கள் என்று அழைக்கின்றனர் எனலாம். சித்தி, சித்தம் என்ற சொற்கள் பண்படுத்துவது என்னும் பொருளில் வழங்கி வருகின்றது. பண்பட்ட மக்களால் கூறப்பட்டதை மந்திரம் என்றனர். மந்திரம் என்பதற்கு 'மறைபொருள்' என்று கூறுவர். இதனைத் தொல்காப்பியனார்,

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப (தொல்-நூ.1434)

என்று கூறுகிறார். இந்நூற்பாவிற்கு உரைகூற வரும் பேராசிரியர் 'சொல்லிய சொல்லின் பொருண்மை யாண்டும் குறைவின்றிப் பயக்கச் சொல்லும் ஆற்றலுடையவர்' என்று உரைக்கின்றார். இக்கருத்தினைத் திருவள்ளுவரும்,

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும் (குறள் 28)

என்கிறார். இதற்குப் பரிமேலழகர் தம் உரையில் 'நிறைமொழி மாந்தர் என்பது அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப் பயன்களைப் பயந்தேவிடும் மொழி' என்று விளக்குகிறார். எனவே தொல்காப்பியனாரும் திருவள்ளுவரும் குறிப்பிடுகின்ற 'நிறைமொழி மாந்தர்' எனப்பட்டோர் சித்தர்களே எனத் துணியலாம்.

சித்தர்கள் என்ற சொல்லுக்குச் சித்தி கைகூடினவர்கள் என்று பொருள். இந்தச் சித்தி அவர்களுக்கு எவ்வாறு கிட்டியது என்பதைத் திருமூலர்,

யோக சமாதியின் உள்ளே அகலிடம்
யோக சமாதியின் உள்ளே உளஒளி
யோக சமாதியின் உள்ளே உளசக்தி
யோக சமாதி உகர்ந்தவர் சித்தரே (1490)

என்று கூறுகிறார். சித்தர்களுடைய குறிக்கோள் இதுதான். திருமூலர் சொல்லுகிற யோகசமாதி, இந்த உடம்பிலேயே தெய்வ சக்தியைக் கலந்து கூடுகிற தவயோகமாய் இருக்கிறது. அந்தத் தவயோகமே சித்தர்களுடைய தவநெறியாகும். இந்நெறிவழியில் மனிதச் சமுதாயத்தைக் காப்பதே சித்தர்களின் குறிக்கோள். அதனால்,

யான்பெற்ற இன்பம் பெறுகஇவ்வையகம்

என்ற கருத்துச் சித்தர் இலக்கியத்தின் நோக்கம்.

ஊருக்கு வெளியே பச்சிலைக் காட்டில் சித்தர்கள் வாழ்ந்தபோதும் சமுதாயத்தை விட்டுவிலகி நின்றபோதும் சித்தர்பாடல்களில் சமுதாயக்கருத்துக்கள் விரவிக் கிடப்பதைக் காணமுடிகிறது. சித்தர்களில் ஒருவராய்க் கருதப்படுகிற திருமூலரின் திருமந்திரத்தில் பரவியும் விரவியும் கிடக்கும் சமுதாயக் கருத்துக்களை நோக்குவாம்.

சமயப்பொறை

மதத்தாலும் சாதியாலும் மனிதக்குலம் பிரிந்து சண்டையிட்டுச் சச்சரவுக்குள் ஆட்பட்டு மால்வதற்கு அடிப்படைக் காரணியாய் அமைவது கடவுட்கோட்பாட்டைத் தெளிவாக உணர்த்த திருமூலர்,

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகுங்கதி இல்லைநும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந்து உய்மினே (2104)

என்ற பாடலைப் பாடியுள்ளார். இப்பாடலில் மனிதனின் உய்வுக்கு வழிகாட்டிப் படைத்துக் காத்துக் கண்ணுக்குப் புலனாகாமல் நின்று உலக உயிர்களை ஆட்டிவைக்கும் இறைவனுக்கு எல்லா உயிர்களும் ஆட்பட்டவை. அந்த இறைவன் ஒருவனே மக்கள் அனைவரும் ஒரு குலம். அவனை அன்பால் அடைவதே உயர்ந்த நெறி. இதை மனத்துள் நிறுத்தித் தெளிந்தால் நன்மைகிட்டும். இதுவே நன்னெறி என்று போதிக்கிறார்.

உடல்நலம் பேணல்

சமயங்கள் அனைத்தும் உடலைப் பொய்யென்றும் சோற்றுத் துறுத்தியென்றும் ஒன்பது ஓட்டைகளின் புகலிடம் என்றும் கூறி உடலை வருத்தி உண்ணா நோன்பிருந்து இறைவனை அடைய வேண்டுமென்று கூறுகையில் திருமூலர் உடம்புதான் அடிப்படை என்றும் உடலை வளர்க்கும் உபாயமே உயிர்வளர்ச்சிக்கு அடிப்படையாய் அமையும் என்றும் கூறுகிறார். இதனை,

உடம்பினை முன்னம் இழுக்கு என்று இருந்தேன்
உடம்பினுக்கு உள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்று
உடம்பினை யான்இருந்து ஓம்புகின் றேனே (725)

என்று கூறுகிறார். இப்பாடலில் உடம்புக்குள் உத்தமன் கோவில் கொண்டான் என்று அவர் குறிப்பிடுவதிலிருந்து உடம்பின் தேவையைச் சமுதாயம் அறிய வேண்டுமென்றும் வற்புறுத்துகின்றார். மேலும் உடம்பு ஆசைகளை ஒரு மனிதன் நிறைவேற்றிக் கொள்வதற்காக வழங்கப்பட்ட ஒன்று மட்டுமன்று. அது உயிர் வாழ்வதற்கு அமைவிடமாய் இருப்பது. இறைவன் வாழுமிடம். நீர் நிரம்பி உள்ள மண்குடம் உடைந்து போனால் அதிலுள்ள நீரும் வெளியேறிப் பயனற்றதாகிவிடும். மண்குடம் உடல் என்றால் அதில் உறையும் நீர் உயிராகும். எனவே உடலை ஆசைகளை நிறைவேற்றுவதற்குரிய கருவியாகக் கருதாமல் உயிரைத்தாங்கி நிற்கும் கலமாய் கருத வேண்டுமென்பதை,

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே (724)

என்று பாடுகிறார்.

ஈத்துவக்கும் இன்பம்

பிறக்கும்போது கொடுவந்தாரு மில்லை பிறந்து மண்மேல்
இறக்கும்போது கொடுபோவதில்லை இடைநடுவில்
குறிக்கும் இச்செல்வம் சிவன்தந்த தென்று கொடுத்தறியாமல்
இறக்கும் குலாமருக்கும் என்சொல்வேன் கச்சி ஏகம்பனே

என்று கச்சி சிவாச்சாரியார் பாடுவார். அ.தாவது பிறக்கும்போது எதையும் கொண்டுவராத நமக்கு இறக்கும்போது எதையும் கொண்டு போகிற உரிமை இல்லை. இறைவன் நமக்குக் கொடுத்த செல்வத்தை ஊரார்க்குக் கொடுத்து இன்புற வேண்டும். இதை அறியாத குலாமர்கள் அனைத்தையும் சேர்த்துவைத்துத் தானும் அனுபவியாமல் பிறர்க்கும் கொடுத்து அதன்மூலம் கிட்டும் இன்பத்தையும் அனுபவியாமல் இறந்து போகிறார்களே என்று எண்ணித் துன்பப்படுகிறார். இக்கருத்தைத் திருமூலர் மேலும் பலமடங்கு மேலே சென்று மக்களுக்கு.

யாவர்க்குமாம் இறைவற்கு ஒரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே (252)

என்று கூறுகிறார். இப்பாடலில் இறைவனை வணங்குவதற்கு ஒரு பச்சிலை போதுமென்றும் பசுவுக்கு அன்பு செய்ய ஒரு வாயுறைதீனி போதுமென்றும் நாம் உண்டு கொண்டிருக்கும்போது ஒருவர்

வந்துவிட்டால் அவருக்கு ஒரு பிடிசோறு கொடுத்து உண்ண வேண்டும். மேற்சொன்ன மூன்றும் எல்லோராலும் முடியும் என்றும் கூறுகிற திருமூலர் மேற்சொன்னவை முடியாவிட்டாலும் மற்றவரிடத்தில் இனிமையாகப் பேசுவது கூடவா முடியாது என்று ஆதங்கப்படுகிறார்.

ஆசை அறுமின்

யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும் (குறள் 346)

என்பது திருக்குறள். எவனொருவன் எல்லாம் 'எனது' என்கிற ஆசையையும் எல்லாம் 'நான்' என்கிற கர்வத்தையும் விடுகிறானோ அவன் வானோர்கள் வாழுகிற மேலான உலகத்திற்குச் செல்வான் என்று வள்ளுவர் பேசுகிறார். அவரே,

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு (குறள் 350)

என்றும் கூறுகிறார். அ.·.தாவது பற்றற்றவனாக இருக்கிற இறைவன் பாதங்களை உலகப் பற்றுக்களை அறுத்துப் பின்னால் பற்றுங்கள் என்கிறார். இதில் இறைவன்மீது பற்று வைப்பது தவறாகாது என்கிறது திருக்குறள். திருமூலர் இதற்கு ஒருபடி மேலே சென்று இறைவன்மீது வைக்கிற ஆசையையும் அறுக்கவேண்டுமென்பதை,

ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்கள்
ஆசைப் படப்பட ஆய்வரும் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்தம் ஆமே (30)

என்கிறார். பற்றையும் ஆசையையும் துறந்தால் உலகத்தில் சண்டை இல்லை. ஏற்றத்தாழ்வில்லை. அப்பொழுது சமயப்பொறை உடைய சமதர்ம பூக்காடாய் சமுதாயம் மாறும் என்பது திருமூலரின் உள்ளக்கிடக்கை. ஏனெனில் மனிதன் இறந்துவிடுவான் என்று சொன்னால் அவனுக்கு எதுவுமே நிரந்தரமில்லை. ஊர் கூடி அழும் பெயரை மாற்றிப் பிணமெனப் பெயரிடும். சுடுகாட்டில் கொண்டுசென்று சுடும். நீரில் மூழ்கி இறந்தவரின் நினைவைத் துறக்கும். இதுதான் உலக இயல்பு இதனை,

ஊரெலாங் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே (145)

என்று திருமூலர் கூறுகிறார். இது மனைவி வீட்டு மட்டில், உறவு தெருமட்டில், பிள்ளை காட்டுமட்டில் என்று கூறுகிற பட்டினத்தார் பாடலோடு ஒப்புநோக்கத்தக்கதாய் உள்ளது.

36. திருமந்திரத்தில் வாழ்வியல்



V.K. KAVITHA, M.A., M.Ed., Mphil., UGC-NET
Assistant Professor in Tamil
G.R.T. College of Education,
G.R.T. Mahalakshmi Nagar,
Chennai Tirupathi Highway, Tiruttani-631209

தமிழில் மெய்ப்பொருள் உணர்வு தொன்மையான இலக்கியங்களியே காணப்படுகிறது. ஆயினும் திருமூலரின் திருமந்திரமே இவ்வகையில் முதல் நூலும் முழுமையான நூலுமாகும். மூவாயிரம் பாடல்களடங்கிய இந்நூல் பொது அறம், மந்திரம், சோதிடம், மருத்துவம், பக்தி, யோகம், தவம், ஞானம், சித்தாந்த அடிப்படை விளக்கம் ஆகிய அனைத்தும் தருகிறது. இந்நூல் 9 தந்திரமும் 232 அதிகாரங்களும் அடங்கியுள்ளன. இதன் காலம் கி.பி.ஐந்தாம் நூற்றாண்டு.

திருமந்திரம் பெயருக்கு ஏற்றபடி மந்திரம்போல் சுருங்கிய சொற்களில் ஆழ்ந்த பொருள் திட்பமாக அமைந்த பாடல்களும் கொண்டது. இது வேதம் ஆகமம் ஆகிய இரண்டிற்கும் விளக்கம் தருகிறது. எனவே சைவ ஆகமமாகப் போற்றப்படுகிறது. சைவத் திருமுறைகள் பன்னிரண்டினள் பத்தாவது திருமுறையாகப் பெரியோர் களால் வைக்கப்பட்டுள்ளது.

தோத்திரத்திற்குத் திருவாசகம் சாத்திரத்திற்குத் திருமந்திரம் எனச் சான்றோர் கூறுவர். திருமந்திரம் சைவ சித்தாந்தத்தின் முதல் நூலாகக் கருதப்படுகிறது.

அன்பு

அன்பு அனைத்து உயிர்களிடத்தும் காணப்படும் ஒன்று. வள்ளலார் வாடியபயிரைக் கண்டபோதல்லாம் வாடினேன் என்று ஓரறிவு உயிர்மீதும் அன்புக் காட்டியவர். திருவள்ளுவரோ அன்புக்கென்று ஒரு அதிகாரமே வைத்தவர்.

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கண்நீர் பூசல் தரும் (குறள் 71)

அன்புக்கு அடைக்கும் தாழ்ப்பாள் உண்டோ? அன்பு நிறைந்தவரின் கண்ணீரே அவருடைய அன்பை பலபேர் அறியும்படி செய்துவிடும் என்கிறார். திருமூலரோ பல ஆண்டுகளுக்கு முன்அன்பின் மேன்மையை, பக்தியின் சிறப்பை அறிவுறுத்துமிடத்தில், அவர்,

அன்பும் சிவமும் இரண்டுஎன்பர் அறிவிலார்
அன்பே சிவமானது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே (270)

'அன்பு சிவம் என்பவை இரண்டு பொருள் அல்ல, அன்பே சிவம் என்பதை உணர்ந்தவர் சிலரே. அவர்களே ஞானிகள் அவர்களே கடவுள் தன்மை பெற்றவர்கள்' என்கிறார்.

ஒழுக்கம்

ஒழுக்கம் தான் அனைவருக்கும் உயர்வைத் தருவதால் அவ்வொழுக்கத்தை உயிரைவிட மேலானதாகக் கருதி போற்ற வேண்டும். இதனை,

ஒழுக்கம் விழுப்பத் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும் (குறள் 131)

திருமூலர்

பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு
மேய்ப்பாரும் அன்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினால்
பார்ப்பான் பசஐந்தும் பாலாய்ச் சொலியுமே (2883)

எல்லோரும் வெளியே பார்வையைச் செலுத்துகிறார்கள். உள்ளே பார்வையைச் செலுத்தி மனதை ஆராய்கிறார்கள் சிலரே. அப்படி உள்ளாராய்ச்சி செய்கிறவன் என்ன காணமுடியும்? உள்ளே ஐந்து பசு விருப்பம்போல் மேய்ந்து திரிவதைக் காண்பான் மனம் ஐந்து புலன்களாய் அலைவதைக் காண்பான். மேய்ப்பவர் இல்லாமல் வெறிபிடித்துத் திரியும் மாடுகள் அவை. மேய்ப்பவர் ஏற்பட்டு அவற்றின் வெறி அடங்குமாறு செய்தால் அந்தப் பசு ஐந்தும் ஞானப்பாலைச் சொரியும். பொல்லாதவை நல்லவையாக மாறிப் பயன் தருவதைக் காணலாம். இதுபுலன் ஒழுக்கத்தை எடுத்துக் கூறுகிறது.

ஒருமைப்பாடு

மனித குலம் ஒன்றே, மனிதர்களாகிய நாம் வழிப்படுகிற கடவுளும் ஒன்றே, என்ற ஒருமைப்பாட்டுக் கருத்து ஏழாம் திருமந்திரப் பகுதியில் ஒரு பாடலில் வலியுறுத்தப்படுகிறது.

ஒன்றே குலமமுடம் ஒருவனே தேவனும்!
நன்றே நினைமின் நமனில்லை நாள்நாமே!
சென்றே புகும்கதி இல்லைதும் சிந்தித்து
நின்றே நிலைபெற நீர்நினைந்து உய்மின்!

மனிதர்கள் வழிபடும் தெய்வமும் ஒன்றுதான் நல்லவற்றையே நினையுங்கள்! நம்மை அழிக்கும் எமன் என்று யாரும் இல்லை! நல்லநாள் என்பதெல்லாம் நாமாகக் கற்பனையாய் வைத்துக் கொண்டவைதாம்! விதி என்பதும் விதித்த விதிப்படியே நாம் சென்று முடிவோம் என்னும் கதி என்பதும் பொய்! அப்படி எதுவும் இல்லை! நம்அறிவின் வழி நின்று நிலைபேறும்.

நிலையாமை

மரணம் உணர்த்தும் நிலையாமை பற்றி உண்மை எவ்வளவு பெரியது! அதைத் திருமூலர் சொல்லும் முறையோ மிக எளியது! ஊரார் எல்லோரும் கூறுகிறார்கள் ஒலி எழுப்பி அழுகிறார்கள் பழைய பெயரை விட்டுப் பிணம் என்று பெயர் சொல்கிறார்கள். சுடுகாட்டுக்குக் கொண்டுக் போய்ச் சுட்டுவிடுகிறார்கள். பிறகு நீரில் மூழ்கிக் குளித்துவிட்டு அந்த நினைப்பும் இல்லாமல் மறந்து விடுகிறார்கள்.

ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணம்என்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே. (145)

என்று நிலையாமை தத்துவத்தை உணர்த்துகிறது.

முடிவுரை

மனிதன் நிலைபெறுவதற்கு அன்பு, ஒழுக்கம், நிலையாமை பற்றியும் விதந்து கூறப்படுகிறது.

துணைநூல் பட்டியல்

1. மாணிக்கவாசகன், ஞா.திருமந்திரம் (உரையாசிரியர்), உமாபதிப்பகம், சென்னை, 2009.
2. சீனீ வேங்கடசாமி, மயிலை, தமிழர் மதம், பாரிநிலையம், சென்னை, 1998.
3. மேலது. சைவமும் தமிழும், பாரிநிலையம், சென்னை, 2011.
4. சைவத் தத்துவங்கள், இணைய தளக்களஞ்சியம், தமிழ் இணையப் பல்கலைக்கழகம், 2000.

37. திருமந்திரம் உணர்த்தும் அட்டாங்கயோகம்



ந.ஞானரதம்
சோதிட முனைவர்பட்ட ஆய்வாளர்
திருமந்திரமும் வாழ்வியலும் பட்டய மாணவி
சென்னை.

முன்னுரை

தனிமனித வாழ்விலும் பொதுவாழ்விலும் பேணப்பட வேண்டிய ஒழுக்கங்கள் பலவும் இலக்கியங்களில் வலியுறுத்தப்பட்டுள்ளன. பக்திஇலக்கியங்களில் முக்தியைப் பற்றிப் பேசும் இலக்கியங்களே எண்ணற்றவை. கடலெனப் பரந்து விரிந்திருக்கின்ற அவற்றுள் முத்தாகவும் மானுடச் சமுதாயத்திற்குச் சொத்தாகவும் திகழ்கிறது திருமூலரின் திருமந்திரம். மனிதவாழ்வை நலத்துடனும் வளத்துடனும் வாழ்வதற்கு வழிகாட்டும் ஒளி விளக்காய் திகழும் இந்நூலில் உள்ள அட்டாங்கயோகத்தை விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

நலவாழ்வு

நோயற்ற வாழ்வே குறைவற்ற வெல்வம். மானுட சமுதாயத்தின் அடிப்படைத் தேவை நலவாழ்வு. இத்தகை நல்வாழ்விற்கான நெறிமுறை களனைத்தும் பண்டைக்காலம்முதல் தமிழ் இலக்கியங்களில் நன்கு ஆராய்ந்து கூறப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டுச் சித்தர்களே நல்வாழ்விற்கு வேண்டியனவற்றைப் பயின்றும் பழக்கத்தில் கொண்டும் பயிற்றுவித்தும் சிறந்த உடல் நலத்தையும் அறிவுக்கூர்மையையும் புலனடக்கதையும் எய்தி நெடிது வாழ்ந்துள்ளனர். இதனையே திருமூலர் அட்டாங்கயோகம் எனக் கூறுகின்றார்.

அட்டாங்கயோகம்

சைவத் திருமுறைகளில் பத்தாம் திருமுறையான திருமூலர் திருமந்திரம் ஒன்பது ஆகமங்களின் கருத்தை ஒன்பது தந்திரங்களில் விளக்குகின்றது. வீராகமத்தின் சாரமான மூன்றாம் தந்திரத்தில் முதலாவதாக இடம்பெற்றிருக்கிற எட்டு வகையான யோகநிலைகளைக் குறித்துப் பேசுவது அட்டாங்கயோகம்.

அட்டாங்கயோகம் என்பது எட்டு அங்கங்களைக் கொண்டது. அவை:

1. இயமம் - தீயவை தவிர்த்தல்
2. நியமம் - நல்லன செய்தல்
3. ஆசனம் - அமர்தல், நிற்றல், இருத்தல்

4. பிராணாயாம் - மூச்சுப்பயிற்சி
5. பிரத்தியாகாரம் - புலனடக்கம்
6. தாரணை - ஒன்றையே நினைத்தல்
7. தியானம் - அதனையே தொடர்ந்து நினைத்தல்
8. சமாதி - சிவம் உணர்தல்

இவ்வெட்டு அங்கங்களை உள்ளடக்கியது அட்டாங்கயோகம்.

இயம நியமமே எண்ணிலா ஆதனம்
நயமுறு பிரணாயாமம் பிரத்தியாகாரம்
சயமிகு தாரணை தியானம் சமாதி
அயமுறும் அட்டாங்கம் ஆவதும் ஆமே (552)

என்கிறார் திருமூலர்.

இயமம்

இயமம் என்பது தீது அகற்றல் என்ற பண்பினைக் குறிப்பது. இது மனிதனை மனிதனாக்கும் பண்பு. இவ்வியமத்தின் தலையான பண்புகள் கொல்லாமை, பொய்யாமை, கள்ளுண்ணாமை, பொறிவழிச் செல்லாமை, பிறரிடமிருந்து பொருள்களை ஏற்றுக்கொள்ளாமை என்பது. இயமத்தில் உள்ள சாதகனுக்கு ஆராய்ச்சி குணம் மிகவும் அவசியமானது. தானே எல்லாவற்றையும் எண்ணும் எண்ணமும் பிறரால் எண்ணப்படும் எண்ணமும் உடையவனே இயமத்தில் இருந்து தீதகற்றும் சாதகன் ஆவான்.

கொல்லான் பொய்கூறான் களவிலான் எண்குணன்
நல்லான் அடக்கு முடையான் நடுச்செய்ய
வல்லான் பகுந்துண்பான் மாசிலான் கட்காமம்
இல்லான் இயமத் திடையில்நின் நானே (554)

பொதுவாக நல்லதே நினைத்து, நல்லதே செய்து வாழ்வதே இயமத்துள் அடங்கும். இவற்றைப் பின்பற்றுவதால் உடலும் மனமும் நல்வாழ்வை அடைவது உறுதி.

நியமம்

தூய்மை அருள்ஊண் சுருக்கம் பொறைசெம்மை
வாய்மை நிலைமை வரைதரே மற்றிவை
காமம் களவு கொலையெக் காண்பவை
நேமிசு ரைந்து நியமத்த னாமே (556)

நியமத்தை மேற்கொள்ளுபவர் தெய்வநம்பிக்கை உள்ளவராக இருத்தலே யோகநெறிக்கு முதற்படி. மேலும் அகத்திலும் புறத்திலும் தூய்மை உடையவராக இருத்தல் வேண்டும். குறைவான உணவு அருளுணர்வு, பெருமை, செம்மை, வாய்மை, காமம் அகற்றல், களவு செய்யாமை, கொலை அகற்றல் முதலிய பண்புகள் உடையவராக இருத்தல் வேண்டும். அவர் தவம், செபம், மகிழ்வு, கொடை, சிவவிரதம், சிவபூசை, சோதி தரிசனம் என்பன போன்றவற்றையும் பெற்றிருக்க வேண்டும் என்கிறார் திருமூலர்.

ஆசனம்

இருத்தல் என்றழைக்கப்படும் ஆசனமானது சாதகனுடைய உடலைச் செம்மைப்படுத்துவது. சாதகனின் உடலானது அமர்தல், இருத்தல், நிற்றல் ஆகிய மூன்று நிலைகளிலும் செவ்வனே இருந்தால்தான் அட்டாங்கயோகத்தின் அடுத்த படிநிலைகள் கைவரப்பெறும்.

பத்திரம் கோமுகம் பங்கயங் கேசரி
சொத்திரம் வீரஞ் சுகாதனம் ஓரேழும்
உத்தம மாமுது ஆசனம் எட்டெட்டுப்
பத்தொடு நூறு பலஆ சனமே (563)

பங்கயம் எனப்படும் பத்மாசனம் என்னும் ஆசனம் தொடங்கிப் பல நூறு ஆசனங்கள் இருந்ததை இப்பாடல்மூலம் அறியமுடிகின்றது.

பிராணாயாமம்

மூச்சுக்காற்றை முறைப்படுத்துவது பிராணாயாமம். சித்தர்கள் இதனை வாசியோகம் என்றழைப்பர். வாசியோகம் என்பது மூச்சுக் காற்றினை உள்ளிழுத்து, நிறுத்தி, வெளியிடுதல் என்ற முறையால் முறையாகப் பயிலுதல் ஆகும். வாசியோகத்தில் காற்றை இழுப்பது பதினாறு மாத்திரை அளவு ஆகும். காற்றை வெளியிடுவது முப்பத்திரண்டு மாத்திரை அளவாகும். உள்ளே நிறுத்துவது அறுபத்தி நான்கு மாத்திரை அளவாகும். பிராணாயாமாகிய வாசியோகமே உடலுள் இறைவனைக் காணப் பயன்படும் வழியாகும்.

ஏறுதல் பூரகம் ஈரெட்டு வாமத்தால்
ஆறுதல் கும்பம் அறுபத்து நாலதில்
ஊறுதல் முப்பத் திரண்டதி ரேசகம்
வஞ்சகமாமே மாறுதல் ஒன்றின் கண்

என்று திருமந்திரம் உரைக்கின்றது.

பிரத்தியாகாரம்

ஐம்புலன்களையும் அடக்கி, மனத்தை வெளியுலகச் சிந்தனை யிலிருந்தும் பற்றுகளிலிருந்தும் விலக்கிக் கொள்ளலே பிரத்தியாகாரம். உள்ளத்தைக் கடந்து செல்லுதலே கடவுளைக் காணும் ஆனந்தத்திற்கு வழி. ஆனந்தத்தைத் தாண்டி பரமானந்த நிலைபெற, காலத்தை வெல்ல, உள்ளத்தை ஒளிவிடும் சோதியை ஒரு மனப்பட்டுத் தியானத்தில் வேண்டும். மாயையிலிருந்து விடுபட்டு மனத்தெளிவு பெறும் வழியே பிரத்தியாகாரம்.

குறிப்பினுள் உள்ளே குவலயம் தோன்றும்
வெறுப்பிருள் நீங்கி விகிர்தனை நாடும்
சிறப்புற சிந்தையைச் சிக்கென்று உணரில்
அறிப்புறு காட்சி அமரரும் ஆமே (587)

இப்பாடலில் மனத்தை வெறுப்பு, பகை எனும் இரண்டு சிந்தனைக ளிலிருந்து விலக்கி, சிந்தையைச் சிறப்புறச் செய்தலே மனிதவாழ்வின் மிகஉன்னத நிலை.

தாரணை

உந்தி, இதயம், உச்சி என மூவிடத்தும் உள்ளத்தை நிலை நிறுத்துதல். மனம் என்கிற சிமிழைத் தாரணை எனும் சாவி கொண்டுத் திறக்க தெரியவேண்டும். அவ்வாறு திறக்கத் தெரியாதவர்கள் கோழைகளே. ஞானத்தீயை மூட்டிச் சோதி ஒளியைக் காண தியான வழியே நல்வழி. ஆசைகள் அரித்துத் தின்னுகிற உடம்பை அழிவிலிருந்து மீட்டு, மூச்சுக்காற்றை நிலைத்திருக்க வைத்தலே தாரணை. இதனைத் திருமூலர்,

நல்வழி நாடி நமன்வழி மாற்றிடும்
சொல்வழி யாளர் சுருங்காப் பெருங்கொடை
இல்வழி யாளர் இமையவர் எண்திசைப்
பல்வழி எண்தினும் பார்வழி ஆகுமே (637)

என்று குறிப்பிடுகின்றார். பிராணனுடன் மனத்தைப் பொருத்தி நடுநாடியின் வழியே செலுத்தி வாழ்நாளாகிய ஆயுள் அழியாமல் இருக்கும் நிலையைத் தாரணை என்கின்றார் திருமூலர்.

தியானம்

தியானம் என்பது தாரணையில் எதை நினைத்து மனத்தில் தரித்தோமோ அதையே தொடர்ந்து நினைத்தல் தியானம் ஆகும். தியானங்கள் பல உண்டு. அவற்றில் முக்கியமானது உருவம் சார்ந்தது, அருவமானது என இரண்டு வகைப்படும். தியானிக்கும் முறையை திருமூலர்,

கண்ணாக்கு மூக்குச் செவிஞானக் கூட்டத்துட்
பண்ணாக்கி நின்ற பரம்பொருள் ஒன்றுண்டு
அண்ணாக்கின் உள்ளே அகண்ட ஒளிகாட்டி (579)

என்று பாடுகிறார். மாயா விளக்கான மனவிளக்கை ஏற்றி, மங்காத விளக்கான உயிர்ச்சோதியைத் தியானமெனும் தூண்டுகோலால் மட்டுமே சுடர்விக்க முடியும்.

சமாதி

ஆதியாகிய இறைவனோடு இரண்டற ஒன்றி நிற்கும் நிலையே சமாதி. சிவத்தை உணரும் இந்நிலையே அட்டாங்கயோகத்தின் இறுதி அங்கம். சிவபெருமானின் அழகிய பெரு ஒளியில் ஒன்றுவதே சமாதி என்கிற நிலையை,

விந்துவும் நாதமும் பேருவில் ஓங்கியுற்
சந்தியிலான சமாதியிற் கூடிடும் (599)

என்று பாடுகிறார். தவம், தியானம் இவற்றின் பலன்கூட, ஏழு நிலைகளை யும் கடந்து வந்தால் சமாதி நிலையை எய்துதல் சாத்தியம். சமாதி நிலையில் இருந்து தியானம் செய்பவர்க்குப் பல யோகங்கள் கைகூடும். அவர்க்கு எண்வகைச் சித்திகளும் 64 கலைகளும் கைவரப் பெறும்.

முடிவுரை

இவ்வாறு அட்டாங்க யோகத்தின்மூலம் எவ்வாறு மனத்தை அடக்கி மூச்சை சீர்ப்படுத்தி, ஆசனத்தில் அமர்ந்து, தியானம் செய்து சமாதிநிலை அடைந்து மனம் அமைதியடைகிறது என்பதைத் திருமூலர் மிகவும் அழகாக விளக்குகின்றார்.

38. திருமந்திரத்தில் தனிமனித நலன்



முனைவர் மார்த்தாண்டபூபதி
உதவிப் பேராசிரியர்
சென்னை.

முன்னுரை

இன்றைய சமுதாயத்தில் தனிமனிதன் ஒருவனாகத் தனித்து வாழ இயலாது. பிறரோடு இணைந்துவாழ வேண்டியிருக்கிறது. தான் மற்றவரோடு பழகுவதன்மூலம் அவர்க்கு நன்மைகள் ஏற்படப் பழகுவதும் வாழ்வதும்தான் சிறப்பாகும். தமக்கு ஏற்படுகின்ற நன்மைகளைத் துறந்துவிட்டுப் பிறர் நன்மைகள் அடைகின்ற விதத்தில் வாழ்தல் வேண்டும். தனக்குக் கிடைக்கக்கூடிய நன்மைகளையும் பயன் களையும் துறப்பதன்மூலம் பிறருக்கு நன்மைகள் கிடைக்குமெனின் அவற்றைத் துறப்பதுதான் மனிதநலனாகும். பிறர் துயரைத் தன் துயராக எண்ணுதலும் ஒரு தனிதமனித நலனாகும். இத்தனி மனிதநலனை திருமூலர் தம்திருமந்திரத்துள் எவ்வாறு காட்டுகின்றார் என்பதை இக்கட்டுரையின்வழி காணலாம்.

வாழ்வியல்

மனிதர்கள் பல்வேறு வகையான வாழ்க்கை முறைகளைக் கைக்கொண்டு வாழ்பவர்கள். மனிதனுடைய வாழ்வியல்நெறி எப்படி அமைந்துள்ளதோ, அதைப் பொருத்தே அவனுடைய வெற்றியும் தோல்வியும் அமைகின்றன. சிந்தனை வளம், அறிவு, எதிர்காலத்தைப் பற்றிய சரியான கணிப்பு ஆகியவற்றைப் பெற்றுள்ளவர்களின் வாழ்க்கை வளமான, நிறைவான வாழ்வாக அமைகின்றது. தமிழகத்தில் பல நூற்றாண்டுகளுக்குமுன் வாழ்ந்த திருமூலரின் வாழ்வு அதைப் போன்றதாகும். திருமூலரின் வாழ்வு, நிறைவாழ்வு. அவருடைய வாழ்வியல் நெறி போற்றத்தக்கது; பின்பற்றத்தக்கது.

இறையன்பு, உறவன்பு,ஈகை, சாதிமதச்சடங்கு, மதம், யாக்கை, இளமை, செல்வம், உயிர் நிலையாமை, கொல்லாமை, புலால் மறுத்தல், பிறன்மனை நயவாமை, மகளிர் இழிவு, நல்குரவு, ஆகுதி வேட்டல், அந்தணர் ஒழுக்கம், வான்சிறப்பு, அறம் செய்வான் திறம், அறம் செய்யாதவன் திறம், அன்பு செய்வாரை அறிவன் சிவன், கல்வி, கேள்வி, கல்லாமை, நடுவுநிலைமை, கள்ளுண்ணாமை, பெரியாரைத் துணைக்கோடல் என்பவை திருமந்திரம் வெளிப்படுத்தும் வாழ்வியல் நெறிகளாகும்.

பின்பற்றத் தக்க வாழ்வியல் பெருநெறிகள்: கோவில் மிக மிக அவசியம். ஆலயத்தில் சிவலிங்கத்தைப் பெயர்த்தெடுத்தாலும், மதிற்கல் ஒன்றை இடித்தாலும் அரசு அழிந்துவிடும். கோயிற்பூசை தடைப்பட்டால் உலகில் மழை பொய்த்துவிடும். மன்னர் ஆற்றல் குன்றுவர். களவு மிகும். ஒழுக்கம் தவறிய பிராமணன் பூசை செய்தால் மன்னன் நோய்வாய்ப்படுவான். கடவுளைத் தன்னைக் காட்டிலும் எளியனாக எண்ணி இகழ்தலும்,நானே கடவுள் வேறு கடவுள் இலர் என இகழ்தலும் சிவநிந்தனையேயாகும். குருவை நிந்தனை செய்வோர் நாயாகவும் புழுவாகவும் பிறந்து துன்பப்படுவர் என்று கூறும் திருமூலர்,**இம்மை மறுமைகளை உணர்ந்த ஞானியரின் உறவு கொண்டேன். அதனால் பிறவிச் சூழலில்இருந்து விடுபட்டுப் பேரின்பம் கண்டேன்** என்கின்றார்.

இன்பமாய் வாழ்வதற்கும், துன்பத்துடன் வாழ்வதற்கும் முற்பிறப்பு களில் செய்த செயல்களே காரணம். இன்பமாய் வாழ விரும்பினால் முதலில் ஆசையைவிட வேண்டும். ஆசைதான் நாம் அனுபவிக்கும் துன்பங்களுக்கு எல்லாம் காரணமாக உள்ளது. ஆசை இருப்பதால் பிறருடைய துன்பங்களைப் பொருட்படுத்துவது இல்லை, உதவும் எண்ணம் மனத்தில் தோன்றுவது இல்லை; மனசாட்சியைத் துறந்து தவறுகள் செய்கின்றோம் என்கின்றார் திருமூலர்.

பிற உயிரைக் கொல்லாமலும் கொன்றதைத் தின்னாமலும் இருக்கும் உயர்ந்த நெறி நின்று இறைவனை வணங்க வேண்டும். நல்ல பிறப்பை அடைந்தவர்கள் முற்பிறப்பில் நல்லதவம் செய்தவர்களே ஆவர். பிறப்பும் இறப்பும் இல்லாதது எதுவோ, அதுவே கடவுள் எனப்படும். பிறப்பில்லாத இறைதான் பிறப்பை ஒழிக்க முடியும். இந்த இறைவன் மிகுந்த கருணை உடையவர். விருப்புவெறுப்பின்றி வணங்குபவர்களுக்கு நன்மை செய்பவர், மறதி நீக்குபவர். உலகைக் கடந்து ஞான சூரியனாய் விளங்குபவர்; தீயினும் வெப்பம் உடையவர்; நீரினும் குளிர்ந்த தன்மை உடையவர் என்கின்றார்.

பொறாமையின் காரணமாக மற்றவர்களைப் பற்றிப் புறங்கூறுதல் கூடாது. இதனால் புண்ணியம் குறையும். அத்துடன் யாரைப் பற்றிப் புறங்கூறினாலும், அவர் செய்த பாவத்தில் ஒரு பகுதி, புறங்கூறிபவரை வந்தடையும். தீயகுணம் உடையவராய்ப் பிறர் பொருளுக்கு ஆசைப்படக் கூடாது. அப்படி பெறப்பட்ட அப்பொருள் பிறரால் கொண்டு செல்லப்பட்டுவிடும். முன்னே செய்த புண்ணியத்தால் நல்லபடியே நீ உண்கின்றாய். அந்த நேரத்தில் ஒரு பிடி உணவு பிறருக்குக் கொடுத்து உண்ண வேண்டும் என வலியுறுத்துகிறார் திருமூலர்.

நற்பண்புகள் நிறைந்த உள்ளத்துள் பொய், களவு, வஞ்சனை, பேராசை, கோபம் போன்ற அழுக்குகள் இருக்காது. கங்கைநீர் புறத்து உள்ள உடல் அழுக்கைப் போக்கும். நற்பண்பாகிய தீர்த்தங்கள் மன அழுக்கைப் போக்கும் என்கிறார்.

செய்யும் செயல்கள் இப்பிறப்பில் நன்மை தீமைகளை அளிக்கின்றது. இனி வரும் பிறப்பிற்கும் காரணமாகின்றது. பிறவி எடுத்ததன் நோக்கமே வினைகளைத் தீர்க்கவே ஆகும். வினைகள் யாவும், நம்மூலம் இறை யால் செய்யப்படுகின்றது. நாம் கருவியாகத்தான் செயல்படுகின்றோம். எனவே எதுவும் நம்மால் மட்டுமே நடந்துவிடாது. எந்த ஒன்றும் நம்மைக் கொண்டு செய்விக்கப்படுகின்றது. இதைத் தெளிவாக உணர்ந்தால்தான் வினைகள் பெருகாது. இந்த உடம்பும், நம்மிடம் உள்ள செல்வமும் நிலையில்லாதவை. இந்த உணர்வு ஆழமாகப் பதிய வேண்டும். அப்பொழுதுதான் தன்னல உணர்வு குறையும். நேற்று இருந்தவர் இன்று இல்லை என்பது உலக நியதி. எனவே உடம்பு நிலையானது என்று வாழ்ந்து துன்பப்படக் கூடாது; நமதுசெல்வமும் அதுபோன்று நிலையற்றதுதான் என எடுத்துரைக்கிறார்.

கொல்லாமை

இறைவழிபாட்டில் பலியிடுதல் இடம்பெறுகின்றது. பிற உயிரினங் களைப் பலியிடுதல் பொதுவாகச் சக்திக்குரிய வழிபாடாகக் கருதப் படுகின்றது. இத்தகைய வழிபாட்டைத் திருமந்திரம் கடிந்துரைக்கிறது.

பற்றாய நற்குரு பூசைக்கும் பன்மலர்
மற்றோர் அணுக்களைக் கொல்லாமை ஒண்மலர்
நற்றார் நடுக்கற்ற தீபமுஞ் சித்தமும்
உற்றாரும் ஆன அமர்ந்திடம் உச்சியே

என்னும் இத்திருமந்திரப் பாடல் கொல்லாமைக்குச் சிறந்த சான்று. மலர், அதன் காம்பிலிருந்து நீங்கிய நிலையில் பூசைக்குரியதாக அமையும்பொழுது மலருக்கு அல்லது செடிக்கு அணுக்களின் இழப்பு இல்லை. இது புறவழிபாடு. இரண்டு கண்களாகிய மலர்களை இணைத்து மாலையாக்கி, உச்சியில் மனத்தினைப் பதித்து இருப்பவரது நெற்றியில் ஒளியாக இறைவன் வெளிப்படுவான் என்பது அகவழிபாடு. இவ்வக வழிபாட்டில் அணுக்களுக்கும் அழிவில்லை. இவ்வாறு திருமந்திரம் கொல்லாமையை வலியுறுத்துகிறது.

புலால் மறுத்தல்

திருமூலர் புலாலுண்ணும் புலையரை நீசர் என்கிறார். அவர்களை எல்லாரும் காண எமதூதர்கள் பற்றி மடித்துத் தீயநரகத்தில் மல்லாக்கத் தள்ளுவர். பின்பு அவர்கள் தப்பிச் செல்லாமல் தடுப்பர் என்பதைத் திருமூலர்,

பொல்லாப் புலாலை நுகரும் புலையரை.
மல்லாக் கத் தள்ளி மறித்து வைப்பாரே

என்ற பாடலில் கொடிய பின்விளைவுகளை எண்ணியாவது புலாலை மறுக்கச் சொல்கிறார்.

பிறன்மனை விழையாமை

பிறர்மனைவியை விரும்புவது என்பது இனிமையான மாம்பழத்தைச் சேமிப்புப் பொருளாக நினைத்து அறையிலே வைத்துவிட்டுத் தகுதியற்ற புளியம் பழத்திற்காகப் புளியமரத்தில் ஏறி வருந்துவது போன்றது என்பதை,

பொருத்தம் இலா புளிமாங்கொம்பு ஏறிக்
கருத்துஅறி யாதவர் கால்அற்ற வாறே (22)

என்று பிறர் மனைவியை விரும்பினால் வருத்தம் அதிகமாகும் என்பதை இதன் மூலம் தெளிவுப்படுத்துகிறார் திருமூலர்.

நிலையாமை

உடல் ஆரோக்கியமாக இருந்தபோது கூடி மகிழ்வாக இருந்த சுற்றத்தாரும், மனைவியும், பிறரும் உடல் வலுவிழுந்த பிறகு வருதில்லை என்பதைத் தெளிவாக விளக்குகிறார் திருமூலர். இதில் உடல் விழுந்தவுடன் உடன் வருவது அதாவது ஜீவனுடன் வருவது விரதபலன்களும், ஞானச் செறிவும் மட்டும் என்பது,

பண்டம் பெய்கூரை பழகி விழுந்தக்கால்
உண்ட அப்பெண்டிரும் மக்களும் பின்செலார்
கொண்ட விரதமும் ஞானமும் அல்லது
மண்டி அவருடன் வழிநட வாதே (144)

என்ற பாடலின் கருத்து. அதனைத் தொடர்ந்து உயிர் பிரிந்த அந்த உடலைச் சுடுகாட்டில் தீயிட்டு அழித்துவிட்டு மறந்து விடுவர் என்பதை அழகாகப் பதிவு செய்திருக்கிறார். இதைவிட நிலையா மையைப் பாடியவர்கள் யாரும் இருக்க முடியாது.

பிறர்பொருள் விரும்பாமை

பிறரது பொருள்மீது நாட்டம் கொள்ளக்கூடாது. அந்த நாட்ட மானது தீய பழக்கவழக்கத்தையும், தீயஎண்ணத்தையும் உண்டாக்கி விடும். அதன் விளைவு ஒருமனிதன் நல்லவனாக வாழஇயலாத நிலையை உருவாக்கும். எனவே, இந்நிலை ஏற்பாடாதவாறு, இதைப் பிறர் உணர்வுகளுக்கும் மதிப்பளித்து மனிதன் வாழ வேண்டும். இதுவே நல்ல செயல் என்கிறார் திருமூலர். காட்டாக,

அவ்வியம் பேசி அறங்கெட நில்லன்மின்
வெவ்விய வனாகிப் பிறர்பொருள் வல்வன்மின்
செவ்விய னாகிச் சிறந்துண்ணும் போதொரு
தவ்வி கொடுமின் தலைபட்ட போதே

என்னும் பாடல் விளக்குகின்றது.

ஒற்றுமையுடன் இருத்தல்

சமூக ஏற்றத் தாழ்வுகள் இல்லாநிலையைத் திருமூலர் குறிப்பிடுகின்றார். அதாவது இன்று சாதி, சமய, இனமொழி, நிறம் ஆகியவற்றால் மனிதஇனம் அழிந்துக் கொண்டு இருக்கிறது. இவ்வாறு வீணே அழிய வேண்டாம் என்று திருமூலர் கூறுகின்றார். எனவே,

ஒன்றே குலம் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமம்இல்லை நாணாமே
சென்றே புகும்கதி இல்லை நும்சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந்து உய்மினே (2104)

என்று முழங்கினார். உலக உயிர்கள் அனைத்திற்கும் ஏற்றத்தாழ்வுகள் இல்லை. அனைவரும் மனிதகுலத்தைச் சார்ந்தவர்கள். எனவே அனைவருக்கும் கடவுள் ஒன்றே, அதில் வேறுபாடு இல்லை, என்ற சமரசநிலையை முதலில் உலகுக்குக் காட்டியவா திருமூலர்.

மனிதநேயம்

எல்லோரும்போய் வழிபடும் கோயிலை இறைவன் குடிகொண் டிருக்கும் படமாடும் கோயில் என்றும், மனிதர்களை நடமாடும் கோயில் என்றும் இருவகைப் படுத்தி, படமாடும் கோயிலில் உள்ள இறைவனுக்கு உணவு படைத்தால் பசித்த மனிதனுக்கு போய்ச் சேராது. ஆனால் பசித்தோர்க்கு உணவு படைத்தால் அது இறைவனைப் போய்ச் சேர்கிறது என்னும் கருத்தை,

நடமாடும் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடும் கோயில் பகவற்கு அ.்.து ஆமே (1836)

என்ற பாடலில் திருமூலர் சுட்டியிருக்கும் பாங்கு தனிமனித நேயத்தை வெளிப்படுவதாக இருக்கின்றது.

தியானம் செய்தல்

உடம்பின் உறுப்புகளும், மனமும் ஒருங்கிணைந்த நிலையில் நோய்கள் வலுவிழக்கின்றன. மனவொருமைப்பாடு இன்மையே பல நோய்களுக்குக் காரணமாகின்றது. எனவே மனத்தை ஒருமைப்படுத்துவதற்காகத் திருமூலர் தியானம் மற்றும் யோகவழிகளை விவரிக்கிறார். யோகப்பயிற்சியை முறையாகச் செய்வார் உடம்புக்கு நோய் எதுவும் வருவது இல்லை. இதனை,

நாசிக் கதோமுகம் பன்னிரண் டங்குலம்
நீசித்தம் வைத்து நினையவும் வல்லையேல்
மாசித்த மாயோகம் வந்து தலைபெய்தும்
தேகத்து யென்றும் சிதைவில்லை யாமே (58)

என்ற பாடல் உணர்த்துகின்றது. உடல்நலம், மனநலம் வலியுறுத்த திருமூலர் கூறுகின்றார்.

தனிமனிதனிடம் இருக்கக் கூடாதவை

பிறரைக் கோபித்தலும், எதையாவது எண்ணுதலும், வினைகளைச் செய்தலும், உண்ணுதலும், சுவைத்தலும், பிறருக்குத் தீமைச் செய்தலும், குறைவுபடுதலும், விளங்குதலும், தற்பெருமை தான் கூறுதலும் ஆகிய இக்குணங்கள் யாவும் பக்குவமடைந்தவர்களுக்கு நன்மை, தீமை விளைவதில்லை. இதனை,

கன்றலும் கருதலும் கருமம் செய்தலும்
தின்றலும் சுவைத்தலும் தீமை செய்தலும்
பின்றலம் பிறங்கலும் பெருமை கூறுதலும்
என்றிவை இறைபால் இயற்கை அல்லவே (1663)

என்று கூறுகின்றார். பக்குவமடைந்த ஆன்மாக்களிடம் இருக்கக் கூடாத ஒன்பது குணங்கள்,

1. கன்றல் சினம், பொருளின் மேல் கொண்ட ஆசை நிறை வேறாத நிலையில் அது சினமாகிறது.
2. கருதல் சிவத்தை எண்ணாது அவனால் படைத்த பொருளை எண்ணுவது. இதனால் இறைவுணர்வு தடைபடும்.
3. கருமஞ்செய்தல் பொருள்கள்மேல் கொண்டபற்றால் அதனை அடைவதற்கே, மனம் முயற்சி செய்யும்.
4. தின்றல் அளவோடு உண்ணாமல் கூடாஒழுக்கத்திற்காகக் கண்டதை உண்ணுதல்.
5. சுவைத்தல் ஐம்பொறிகளுக்கும் அடிமைப்பட்டு இதனினும் இது நன்று என்று பலவற்றைச் சுவைத்தல்.
6. தீமை செய்தல் நம் கருத்துக்கு மாறானவர்களிடம் பகைகொண்டு அவருக்குத் தீமை செய்தல்.
7. பின்றல் சிவத்தைக் கருதாமல் பழிபாவம் செய்து குறைபட வாழ்தல்.
8. பிறங்கல் தம்மை உலகோர் புகழவேண்டும் என்பதற்காகவே பெருமையைத் தேடுதல்.
9. பெருமை கூறல் தன்பெருமையைத் தானே கூறல்.

இவ்வகையான ஒன்பதுகுணங்களுடன் இருப்பவன் அபக்குவன். இதனை நீக்கினால் மட்டுமே பக்குவனாக முடியும். பிறப்பும் இறப்பும் மாறி மாறி இடையறாது வருவதால் அனைத்திற்கும் அஞ்ச வேண்டுவது அவசியமாகிறது.

முடிவுரை

பண்பட்ட நல்ல நிலத்திலேதான் நல்லவை விளையும். பண்பாடுள்ள நல்ல சமுதாயத்திலேதான் நல்லவை பிறக்கும். தமக்காக வாழாமல் மற்றவருக்காக வாழ எண்ணுகின்ற, வாழ்கின்ற உயர்ந்த நிலையும் மனிதநலனாகும். இந்நலன் எல்லோருக்கும் அமைந்திருக்கும் வேண்டும் எனத் திருமூலர் கூறுகின்றார். மேலும் கொல்லாமை, புலால் மறுத்தல், பிறன்மனை நயவாமை, நல்குரவு, அரசாட்சி முறை, அறன் வலியுறுத்தல், அன்புடைமை, கல்வி, கேள்வி, கல்லாமை, நடுவு நிலைமை, கள்ளுண்ணாமை, பொறையுடைமை, பெரியாரைத் துணைக்கோடல், கூடாவொழுக்கம், கேடு கண்டிரங்கல், புறங்கூறாமை, வாய்மை அவாவுறுத்தல் போன்ற பல தலைப்புகளால் மனிதன் மேற்கொள்ள வேண்டிய நலன்களைத் திருமூலர் உணர்த்துகின்றார்.

39. திருமந்திரத்தில் சைவசமயக் கோட்பாடுகள்

முனைவர் சொர்ணபிரபா
உதவிப் பேராசிரியர்
தமிழ்நாடு தொழிலாளர் கல்வித் துறை நிலையம்
சென்னை - 5

முன்னுரை

வாழ்க்கை என்பதன் பொருளை அறிந்துகொள்ள மனிதன் ஈடுபடும் செயல்கள் யாவும் சமயம் என்னும் அமைப்பை நோக்கியே செல்கிறது. மனித வாழ்வில் நம்மவர்களோடும், சமூகத்தோடும், அன்பாய், ஒழுக்கமாய் வாழ்வதற்குச் சமயங்களானது வழிகாட்டுகின்றது. சமயங்கள் பல உள்ளன. எனினும் மற்றெல்லாச் சமயங்களைக் காட்டிலும் முதன்மையான, சைவசமயத்தையும் அவை சுட்டும் வழிபாட்டுக் கோட்பாடுகளையும் அறிவதே திருமந்திரத்தில் சைவசமயக் கோட்பாடுகள் என்ற இவ்வாய்வின் நோக்கம்.

சமயம்

சமயம் என்பது இறைவன், உலகம், மனிதன் ஆகிய மூன்று அடிப்படைத் தத்துவங்களின் உறவாகும். இந்த உலக வாழ்க்கையின் மறைபொருளை மனிதனுக்கு விளக்குவது சமயமே. பிறருக்கு நன்மை செய்வதிலும், பிறரிடம் அன்பு காட்டுவதிலும், பிறிதோர் உயிர்க்கு இரக்கம் காட்டுவதிலும், உண்மை பேசுவதிலும் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் தூய்மையோடு இருக்க வேண்டும் என்பதைச் சமயம் வலியுறுத்துகின்றது. திருமூலர் இறைவன் ஒருவனே அவன் எல்லாப் பொருட்களிலும் நிறைந்து உள்ளான் என்பதை

ஒன்று அவன்தானே; இரண்டு அவன் இன்னருள்;
நின்றனன் மூன்றினுள்; நான்கு உணர்ந்தான்; ஐந்து
வென்றனன்; ஆறு விரிந்தனன்; ஏழு உம்பர்ச்
சென்றனன்; தான் இருந்தான்; உணர்ந்து எட்டே (1)

என்ற திருமந்திரப் பாடல் உரைக்கின்றது. இந்தப் பாடலில், ஒன்றான இறைவனே எல்லாப் பொருளிலும் நிறைந்திருப்பதாகச் சுட்டிக் காட்டுகின்றார். மனிதனுடைய உடலானது பல்வேறுபட்ட தன்மைகளைக் கொண்டிருப்பதுபோன்று இறைவன் ஒருவன் இதைப் பட்டினத்தார்,

ஒன்றென்றிரு! தெய்வம் உண்டென்றிரு! (பா.எண். 20)

என்று கூறுகின்றார்.

சைவமே பண்டுதொட்டுத் தமிழ்மக்களின் சமயமாகும். பண்டைக் காலத்தில் இந்தியா முழுவதிலும் மத்திய ரேகைக்கு இருமருங்கிலும்

உள்ள நாடுகளிலும் சிவவழிபாடும் சூரிய வழிபாடும் பரவியிருந்ததைப் பல இடங்களில் அகழ்ந்தெடுக்கப்பட்ட சின்னங்கள் சான்றுரைக்கிறது. ஒருகாலத்தில் சைவசமயமே ஐந்து கண்டங்களிலும் பரவியிருந்த தெனத் திருமூலர் தெரிவிக்கின்றார். தமிழில் பன்னிரண்டு திருமுறை களும் பதினான்கு மெய்கண்ட சாத்திரங்களும் பிரமாண நூல்களாக அறியப்படுகின்றன (சைவ சித்தாந்தம் பொ.சங்கரப்பிள்ளை)

பன்னிரு திருமுறைகள்

1,2,3 - திருஞானசம்பந்தர்
4,5,6 - திருநாவுக்கரசர் தேவாரங்கள்
7 - சுந்தரமூர்த்தி நாயனார்
8 - மாணிக்கவாசகரின் திருவாசகம்
9 - திருவிசைப்பா, திருப்பல்லாண்டு
10 - திருமூலரின் திருமந்திரம்
11 - பத்து அடியார்களின் 40 பிரபந்தங்கள்
12 - சேக்கிழாரின் பெரிய புராணம்

பதினான்கு மெய்கண்ட சாத்திரங்கள்

உந்தி கன்று உயர்போதஞ் சித்தியார்
பிந்தியிருபா உண்மை பிரகாசம் வந்த அருட்
பண்பு வினாபோற்றி கொடிபாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்ப முற்று.

(திருவுந்தியார், திருக்களிற்றுப் பாடியார், சிவஞானபோதம், சிவஞான சித்தியார், இருபா இருப.ஃது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், போற்றிப் ப.ஃறொடை, கொடிக்கவி, வினாவெண்பா, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறி, சங்கற்ப நிராகரணம்.) ஆகியவை யாகும்

சைவசித்தாந்த கருத்துக்களைத் தொல்காப்பியம் முதலிய சங்க நூல்களிலும் காணமுடிகிறது.சைவ சமயக் குரவர்களாகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திசுவாமிகள் மற்றும் மாணிக்கவாசர் ஆகியோருக்குச் சிவஞானம் போதித்த சைவ சந்தானக்குரவர்களாகிய மெய்கண்டார், அருள்நந்தி சிவம், உமாபதிசிவம் மற்றும் மறைஞானசம்பந்தர் ஆகியோருக்கும் காலத்தால் முற்பட்டவர் திருமூலர். சைவத்தின் கோட்பாடுகளாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியவற்றைத் திருமந்திரத்தில் அருளியுள்ளார். சிவனிடமிருந்து நந்தியம்பெருமாளும், நந்திதேவரிட மிருந்து திருமூலரும் ஞானம் பெற்றதை,

நந்தி திருவடி நான்தலை மேற்கொண்டு
புந்தியின் உள்ளே புகப்பெய்து, போற்றிசெய்து
அந்தி மதிபுனை அரனடி நாள்தோறும்
சிந்தைசெய்து ஆகமம் செப்பலுற்றேனே (73)

நந்தியின் திருவடிகளைத் தமது தலைமேற்கொண்டு சிவனின் திருவடிகளை நாள்தோறும் நினைந்து தியானித்துத் திருமந்திரம் என்னும் ஆகமநூலினைச் செய்யத் தொடங்கியதாகத் திருமூலர் உரைக்கிறார்.

சைவ சித்தாந்த சாரம்

இறைவன் ஒருவன். அவன் தத்துவங்களைக் கடந்தும் தத்துவங்களில் கலந்தும் நிற்கிறான். ஒன்றாகி, வேறாகி, உடனாகி நிற்கிறான்.

ஒரேபொருளான சிவனே சக்தியுடன் இரண்டறக் கலந்தான். நான்முகன் திருமால் உருத்திரன் என்று மூன்று நிலைகளில் நிற்பவன். அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கினையும் உணர்ந்தவன். மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்பொறிகளையும் அடக்கி வென்றவன். மூலாதாரம் தொடங்கி ஆறு ஆதாரங்களிலும் விரிந்து நின்றவன். ஏழாவது சக்கரமாகிய துரியதளத்தில் பொருந்தியிருப்பவன். எட்டு மூர்த்தங்களாகவும் விளங்குபவன் என்று திருமூலர் தெரிவிக்கிறார்.

அனுபவம் அற்றவர் அன்பாகிய சக்தியும் அறிவாகிய சிவமும் இரண்டு என்பர் அதன்பின் முதிர்ச்சியால் சிவமாகிய அறிவு விளங்கும் என்பதை உயர்ந்தவர் தாழ்ந்தவர் ஆகிய எவரும் உணர்வதில்லை. அன்புதான் சிவத்தை விளங்கச் செய்வது என்பதை எல்லாரும் அறிந்த பின்பு அன்பே சிவமாய் வடிவாய் அதன் தன்மையை அடைந்திருந்தார் என்கிறார்.

சைவ சித்தாந்தம் உணரத்தும் பதி பசு பாசம் எனும் மூன்றும் மெய்ப்பொருட்கள். ஆன்மாவாகிய பசு பாசங்களிலிருந்து நீங்கிப் பதியை அடையும் வழியினைச் சைவ சித்தாந்தம் கூறுகிறது. பசுவாகிய உயிர் பதியாகிய சிவனைச் சென்று சேரும்போது பந்தமும் உயிரும் சிவனைச் சென்று அடையாது.

பதிபசுபாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப்போல் பசுபாசம் அனாதி
பதியினைச் சென்றுஅணுகாப்பசு, பாசம்
பதி அணுகின் பசு, பாசம் நிலாவே (115)

சைவசமயக் கடவுள்

சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டது சைவசமயம். இவர்கள் சிவனை, ருத்திரன், சர்வன், உக்ரன், பவன், பசுபதி, மகாதேவன், வாமதேவன், ஈசன், மகேஸ்வரன், பரமசிவன் எனப் பல திருப்பெயர் களால் அழைத்தனர்.

திருமந்திரத்தில் சைவக்கோட்பாடுகள்

பத்தாம் திருமுறையான திருமந்திரத்தில் மெய்ப்பொருட்கலையாகிய சிவஞானக்கலை அனுபவத்திற்கே உரியதாக இருப்பதால் அக்கலை

யைத் தாமே உடனிருந்து காட்டினால் மக்கள் இருந்தறியமாட்டார்கள். ஈடேறமாட்டார்கள் என்பதையுணர்ந்து தத்துவக்கலையை இருந்து பார்த்துப் பல்வேறு கொள்கைகளை, அதாவது சமயபேதங்களையும், அவற்றுள் சிறந்த நெறியையும் அந்நெறியினைக் கடைபிடித்த நிலை வேறுபாடுகளையும் அவற்றின் இலக்கணங்களையும் திருமூலர் ஐந்தாவது தந்திரத்தில் விளக்குகின்றார்.

ஊரும் உலகமும் ஒக்கப் படைக்கின்ற
பேரறி வாளன் பெருமை குறித்திடின்
மேருவும் மூவுல காளி யிலங்கெழுந்
தூரணி நால்வகைச் சைவமு மாமே (1419)

இதன்பொருள் எல்லா உலகையும் ஒருசேரப் படைக்கின்ற பேரறிவாளனாகிய சிவனின் பெருமையானது, மேருமலையும் மூவுலகையும் அருளும் இறைவனிடமிருந்து உண்டான பூமியும் நால்வகைச் சைவமும் ஒப்பத்தரும் என்றவாறும், சுத்த சைவமாகிய சைவசித்தாந்த நெறியைப்பற்றி ஐந்தாம் தந்திரத்தில் சுத்த சைவம், அசுத்த சைவம், மார்க்க சைவம், கடுஞ்சுத்த சைவம் என நான்கு பிரிவுகளாகப் பகுத்துக் காட்டியுள்ளார்.

சுத்தசைவம்

சடங்குகளில் நில்லாமல் தலைவனையும் பதியையும் தன்னையும் பசுவையும் தளையையும் பாசத்தையும் உணர்ந்து, தளையின் நீங்கித் தலைவனின் திருவடியை அடைதல் சுத்தசைவமாகும். இதனைக் கீழ்வரும் பாடல்மூலமாகக் காணலாம்.

சத்துஅ சத்தும் சதசத்தும் தான்கண்டு
சித்துஅ சித்தும் சேர்வுறா மேநீத்தும்
சுத்த மசுத்தமுந் தோய்வுறா மேநின்று
நித்தம் பரஞ்சுத்த சைவர்க்கு நேயமே (1420)

அழிவு இல்லாதது, அழிவுடையது என்ற இரண்டு தன்மைகளும் உடையவை எவை என்று அறிந்து கொள்ள வேண்டும். அறிவும் அறியாமையும் ஆகியவை சேராமல் விட்டுவிட வேண்டும். சுத்த மாயை, அசுத்த மாயை என்ற இரண்டிலும் பொருந்தாமல் நின்று அழிவற்ற மேலாம் பொருளான இறைவனைப் பார்த்திருப்பது சுத்த சைவர்க்கு அழகாகும் என்று கூறுகின்றது.

அசுத்த சைவம்

வேடம் பூண்டு சரியை கிரியை என்ற இரண்டு நெறியில் நிற்பவர் பற்றிக் கூறுவது அசுத்த சைவம். அசுத்த சைவத்தைப் பற்றித் திருமூலர்,

இணைஆர் திருவடி ஏத்தும் சீர்அங்கத்து
இணைஆர் இணைக்குழை,ஈரணை முத்திரை
குணம்ஆர் இணைக் கண்டமாலையும் குன்றாது
அணைவாம் சரியை கிரியை யினார்க்கே (1423)

என்று கூறுகிறார். இப்பாடலில் இரண்டு திருவடிகளையும் புகழ்பவரின் பெருமை உடைய உடம்பில் இரண்டாய் பொருந்திய இரண்டு காதணிகளும், திருநீறும், தலைமாலையுமான இரண்டு அடையாளங்களும், இரண்டு கண்டமாலைகளும் என்னும் இவை சரியை கிரியை வழிநிற்பவர் அணியப்படுபவையாகக் கூறப்படுகின்றது. சரியை கிரியை வழிநிற்பவர்களை அசுத்தசைவம் என்று கூறுகின்றது.

மார்க்கசைவம்

சைவமார்க்கத்தில் நின்று வேதாந்த சித்தாந்த நுண்பொருளை அறிந்து ஆன்மபோதம் கெட்டுச் சிவபோதத்தில் திளைத்திருப்பவரின் சைவமே மார்க்க சைவம். இம்மார்க்க சைவர் இயல்பைப் பற்றி,

மாறாத ஞான மதிப்பற மாயோகத்
தேறாத சிந்தையைத் தேற்றிச் சிவமாக்கிப்
பேறான பாவனை பேணி நெறிநிற்றல்
கூறாகும் ஞானி சரிதை குறிக்கிலே (1423)

எந்நாளும் ஒரு தன்மையான ஞானத்தில் மதிப்பு இல்லாது சிறந்த யோகமும் பெரிது எனத் தெளிந்து கொள்ளாத சிந்தையைத் தெளிய வைக்க வேண்டும். அந்தத் தெளிந்த சிந்தையில் சிவத்தை ஆக்கி, சிவோகம் பாவனையைச் செய்து முறையாய் நிற்றலே ஞானிக்குரிய சரியை. இதுவே மார்க்க சைவர் இயல்பு எனத் திருமூலர் குறிப்பிடு கின்றார்.

கடுஞ்சுத்த சைவம்

ஞானநிலையில் ஆடம்பரம் ஏதும் இல்லாது தான் அவனாய் நிற்கும் நிலை கடுஞ்சுத்த சைவம். இச்சைவத்திற்குத் திருமூலர்,

சுத்த சிவனுரை தானத்தில் தோயாமல்
முத்தர் பதப்பொருள் முத்திவித் தாமூலம்
மத்தகை யான்மா அரனை யடைந்தற்றால்
சுத்த சிவமாவ ரேசுத்த சைவரே (1440)

இறைவனால் அருளப்பட்ட ஆகமங்களில் கூறப்பட்ட பரமுத்திகளில் சாராமல், முத்தர் கண்டப் பிரணவம் பதத்தால் உணர்த்தப்படுவதே மேன்மை கொண்ட பரமுத்திக்குமூலம். அதையுணர்ந்த ஆன்மா பிரணவப் பொருளான இறைவனை அறிந்து உலக பந்தங்களை விட்டு நீங்கினால் சுத்த சிவமாகும் பேறு பெறுபவரே கடுஞ்சுத்த சைவர்.

முடிவுரை

சைவத்துக்கு மேல் சமயமில்லை, சிவத்துக்குமேல் தெய்வமில்லை என்பர் சான்றோர். அத்தகைய சிவனைப் பற்றியும், அந்தச் சிவனை வழிபடும் அடியார்களின் சமயமான சைவச் சமயத்தின் வகைப் பாடுகளும், இறைவன் ஒருவனே என்ற தத்துவத்தையும் இவ்வாய்வுக் கட்டுரையில் காட்டப்பட்டுள்ளது.

40. திருமந்திரம் - ஓர் மருத்துவப் பேரறிவியல்

மருத்துவர் ம.பா.அகத்தியர்
அகத்தியர் வைத்தியசாலை,
சென்னை, தமிழ்நாடு.
அலைபேசி : 99418 66065

பழமையில் பழமையான தமிழ் பேரறிவியலை இறைவன் நந்திதேவருக்கும், நந்திதேவர் அதைத் திருமூலருக்கும் கற்பித்தார் என்பதும், திருமூலர் தம்திருமந்திரத்தில் தமிழ் மருத்துவ பேரறிவியலை பற்றியும் பிறப்பின் பயனையும் பின்வருமாறு கூறுகிறார்.

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே

மேலும், தமிழ்மொழியின் சிறப்பினையும், திருமந்திரத்தின் சாரமாய் திகழும் சாகாக் கலையைப் பற்றி உலகில் முதன்முதலில் ஆராய்ந்து அதற்கான உபாயங்களையும் உணர்த்தி மூன்றாயிரம் ஆண்டுகள் நீடுழி வாழ்ந்து, அதை அவரின் சீடர்களான காலங்கிநாதர், போகநாதர் போன்ற சித்தர்களுக்கும் உபதேசித்து அதன் வழியே சித்தமருத்துவத்தை வளர்த்தெடுத்தார். உலகமக்கள் உடலாலும், உள்ளத்தாலும் துன்பப்படும் போது, பெருங்கருணை யோடு அதைப் போக்கும் உபாயத்தையும் வழங்கி வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கான வழியை செய்தார் என்பதனை,

தமிழ்மண் டலமைந்துந் தாவிய ஞானம்
உமிழ்வது போல வுலகந் திரிவார்
அவிழு மனமும் மெம்மாதி யறிவுந்
தமிழ்மண் டலமைந்துத் தத்துவ மாமே

என்று விளக்கியுள்ளார்.

திருமந்திரம், மனிதஇனம் இன்பமாக வாழ்வதற்கும், நீண்ட ஆயுளுடன் நோய் நொடியில்லாது வாழ்வதற்கும், உணவு கட்டுப் பாட்டுடன் உடலை பேணிக்காத்து அறம்சார்ந்த நன்னெறியில் இறைஉணர்வுடன் வாழ்ந்து, பிறவியின் பயனை அடையும் வரையும், மீண்டும் பிறவாத நிலை எய்திடும் நுட்பங்களையும் மருத்துவத்திற்குப் பொருந்தும் வகையில் அமைத்தார் திருமூலர் என்று கூறுவது மிகையாகாது. மனிதனின் மன்தில் தோன்றும் நல்ல எண்ணங்கள் வைரத்திற்கு ஒப்பானவை என்பதாலேயே மனம்போன போக்கில் வாழாமல், சிந்திக்கும் திறனால் ஆழமாகவும், வேகமாகவும் மனதுக்குள்ளே பிறக்கும் எண்ணங்களை உள்மன உந்துதலால் சமப்படுத்தி செம்மைப் படுத்திடவும், உள்ளத் திற்கு மருந்து அளிப்பதும் திருமந்திரம் என்பதும் திண்ணமே.

திருமூலரின் உயிர்கூற்றினை இக்காலப் பருப்பொருளியல் பேரறிஞர்களும், உடலமைப்புப் பேரறிஞர்களும், உடலியக்க பேரறிஞர்களும் வியப்புற்று ஆராய்ந்து "பல சூட்சுமத்தைத் திறக்கும் திருமந்திரம்" என்று

முன்னமைத்துக் கொள்கின்றனர் என்பதே திருமூலரின் பெருமையாகக் கீழ்காணும் பாடலினை உணர முடிகிறது.

நண்ணிய ஞானத்தின் ஞானாதி நண்ணுவோன்
புண்ணிய பாவங்கடந்த பிணக்கற்றோன்
கண்ணிய நேயங்கரை ஞானங்கண்டுளோன்
தண்ணியன் சுத்தன் சிவமுத்தன் சித்தனே

மேலும் சித்தமருத்துவம் தோன்றிய காலம் வரையறுக்க முடியாது என்றபோதும் திருமூலர் காலத்திலிருந்தே தமிழ் மருத்துவமாம் சித்தமருத்துவம் தொடர்ந்து வந்திருக்க வேண்டும் என்றே கொள்ளலாம். சீவன் சிவனே என்று சித்தர்கள் நுட்பங்களை நன்கு ஆராய்ந்து போற்றி வளர்த்து எடுத்திட்ட திருமந்திர பேரறிவியல் நூலில் கூறப்பெற்றுள்ள மருத்துவமும், வாழ்வியலும், அதன் உண்மை பொருளையும் பற்றியே இக்கட்டுரை அமைக்கப் பட்டுள்ளது.

மனிதஉடல் நோய்வாயில் ஈடுபட்டழியாமல், உடலை துன்புறாது காக்கும் மருத்துவமுறைகளையும், மனநிலை கெடாமல் இருக்கும் யோகம் தியானமுறையையும், சாவைத் தடுத்து உடலை வளர்த்தற்காய முறைகளையும் தூவெளியின் துணையோடு ஏணிப்படிபோல் அமைத்து, தத்துவம் முப்பதாறினையும் கடந்த மாற்ற மனங்கழிய தோற்றநிலையில் நின்றார் திருமூலர். மனிதனின் உடலமைப்பிற்கான இரசம், இரத்தம், சதை, கொழுப்பு, தவளம், எலும்பு, நரம்பு என்னும் ஏழுதாதுக்களையும், அவற்றைத் இயக்கும் வாயுக்களையும், நாடியையும், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றங்களின் பொறிபுலன்களை 96 தத்துவமாக வகுத்து திருமூலர் கீழ்வரும் பாடலில் கூறுகிறார்.

முப்பது முப்பது முப்பத்தறுவரும்
செப்ப மதிகளுடைக் கோயிலுள் வாழ்பவர்
செப்ப மதிகளுடைக் கோயிற் சிதைந்தபின்
ஒப்பவனை வரும் ஓட்டெடுத்தாரே

படைப்பின் தத்துவம் முழுமையும், செயல்களும் பேசும் திறமையும் கருவிலேயே உயிர்தங்கும் உடலாக இறைவன் படைத்தான் என்று உடலின் அமைப்பைப் புரியட்ட காயம் என்று அழகாகத் திருமூலர் கூறுகிறார்.

எட்டி னிலைந்தாகு மிந்திரியங்களும்
கட்டிய மூன்று கரணமு மாயிடும்
ஒட்டிய பாச முணர்வது வாகவே
கட்டிய விழ்ந்திங் கண்ணுதல் காணுமே

மேலும் இன்பத்துன்பங்களை நுகரும் உயிரையும், உடலையும் பற்றிய உண்மையுரை முப்பத்தாறோடு அறுபதுங்கூட்டி நுண்பொரு ளாகிய மேலறிவுக் கருவிகளைப் பற்றிய, ஆழ்ந்த செய்தியை எளிமையாக விளக்கியுள்ளார். மேலும் உடலில் உள்ள உயிர், உடலிலிருந்து ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய முச்செயலையும் செய்யும் சக்தியாக வாதம், பித்தம், கபம் என்று முறையே நின்று, ஐம்புலன்களையும் இயக்கி அறியும் வகையாய் இயங்குமிடம் ஒன்றாகக் கொண்டு உடலை வளர்க்கிறது என்று கூறுகிறார். மனித

உடல்நிலையை நன்கு அறிந்து நோய் வாராதிருக்கவும், உடலடையும் வேறுபாடுகளையும், தட்பவெப்ப வேறுபாடுகளையும் அறிந்து அதற்கு ஏற்ற செரிப்பு தன்மைக்கு உகந்த உணவு வகை களை உண்டு வாதம், பித்தம், கபம் மாறுபாடாகாதபடி தடுக்க வேண்டியனவற்றைத் தடுத்து, வாழ்வதற்கான முதற்காரணத்தை பாடலாகத் திருமூலர் கூறுகிறார்.

உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கு முபாய மறிந்தேன்
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே

என்று உடம்பை வளர்ப்பதற்காகவே உணவு உண்டேன் என்கிறார் திருமூலர். அதேவேளையில் உயிர் இவ்வுடலில் நிலை யாது என்பதும் உண்மை. உடல் அழியும் தன்மையுடையது என்று உணராத மக்களுக்கு உணர்த்திடும் வகையில் கீழ்காணும் பாடலில் திருமூலர் உணர்த்துகின்றார்.

நில்லாது சீவன் நிலையன்றென்று எண்ணி
வல்லார் அறத்தும் தவத்துளும் ஆயிணர்
கல்லா மனிதர் கயவர் உலகினில்
பொல்லா வினைத்துயர் போகஞ் செய்வாரே

உயிரானது இதைப்போலப் பிறவிப்பெருங்கடலில் சிக்கியபின் மீண்டும், மீண்டும் உடலை எடுத்து ஒரு தாயின் கருவில் எவ்வாறெல்லாம் குறிபேதமையில் உருவாகிறது என்பதையும், ஆணும் பெண்ணும் கலந்து இன்புறும் காலத்தில் சுக்கில சுரோணிதம் சந்திக்கும் நேரத்தில் அபானவாயு எதிர்க்கும்போது உண்டாகின்ற கருவானது ஞானம் பெற்ற மாமனிதராகப் பிறக்கும் என்றும், மேலும் சுக்கிலத்தின் வீரியம் அதிகமாகும்போது கருவில் வளரும் குழந்தை ஆணாகவும், சுரோணிதத்தின் வீரியம் அதிகமாகும்போது கருவில் பெண் குழந்தையாக வளர்ந்து கர்ப்பம் சம்பவிப்பதாகப் பாடலில் திருமூலர் கூறுகிறார்.

இன்புறு காலத்து இருவர் முன்பூறிய
துன்புற பாசத் துயர்மனை வானுளன்
பண்புற காலமும் பார்மிசை வாழ்க்கையும்
அன்புறு காலத் தமைத் தொழிந்தனனே

ஆண்மிகில் ஆணாம் பெண்மிகில் பெண்ணாம்
பூணும் இரண்டொன்றிப் பொருந்தில் அலியாகும்
தான்மிக வாகில் தரணி முழுதுமாளும்
பான்மை மிகுந்திடில் பாய்ந்ததும் இல்லையே"

ஏர எதிர்க்கினில் அயனதானாகும்
நேரொக்க வாகினி கர்போதம் தானாகும்
மாற எதிர்க்கின் மறையவன் தானாகும்
பேரொத்த மைந்தனும் பேரரசு ஆளுமே

மேற்சொன்ன பாடலில் வாழ்வின் சக்தி விசேஷத்தினால் உள்நிறைந்து நின்ற வாயு விகாரமடைந்து அபானனின் சமத்து வத்தினால் பிறக்கும்

குழந்தை இந்தப் பூமியையே ஆளக்கூடிய பேரரசனாகப் பிறக்கும் அளவுக்குச் சூக்குமத்தை இந்த மக்களுக்கு திருமந்திரம் உணர்த்துகின்றது. இவ்வாறு உருப்பெற்ற கருவில் தசநாடிகளும், தசவாயுக்களும், முத்தோடமும், ஆறுஅதாரமும், மூன்று மண்டலங்களும் உள்ளடக்கியே கரு வளர்ந்து நிறைவாய் பிறக்கும் என்று கூறுகிறது கீழுள்ள பாடல்.

வளமான பத்தில் வழங்கும் தசவாயு
உளமாம் இடைபின் சுழிஎன மூன்றுண்டு
களமான சக்கரம் காட்டியது ஆறுண்டு
தளமான மண்டலந்தான் மூன்றும் பாருமே

மேலும் மனிதன் தன்அகப்புற உறுப்புகளைப் பற்றி மட்டுமே கண்டு அறிந்திடாமற் அடிப்பகுதியில் இருக்கும் ஆதாரங்களையும் அடையாளம் கண்டு, குண்டலினி சக்தியைக் குருவின் உபதேசத் தால் அறியப்பெற்று யோகப் பயிற்சியின்மூலம் குண்டலினி சக்தியை எழுப்பி படிப்படியாகச் சிரசில் உள்ள குருபதம் எனப்படும் ஆயிரம் இதழ் கொண்ட தாமரை வளையத்தில் கொண்டு சேர்க்க ஞானம் அடையமுடியும் என்று திருமூலர் கூறுகிறார். இதுவே பாற்கலத்தைப் பால்நோக்கிப் பேணுவதுபோல உடம்பினுள் உயிர் வளர்ச்சி அடைந்து, மெய் உணர்வு பெறும் காயசித்தி என்றே கூறுகிறார். நாவின் நுனியை மேலுயர்த்திப் பின்புறமாக மடித்து மேல் அன்னத்தில் உள்ள உள்நாக்கினை நெருங்கச் செய்து பிராணனை வசியப்படுத்தி, குண்டலினி சக்தியை முதுகுதண்டு வழியே உயர்த்திட்டால் உயிர் பிரியாது உடலில் பலகாலம் வாழும் என்று கீழ்வரும் பாடலில் உணர்த்துகிறார்.

இருந்த அப்பிராணனும் உள்ளே எழுமாம்
பரிந்த அத்தண்டுடன் அண்டம் பரிய
இருந்த அப்பூவுடன் மேல்எழு வைக்கின்
மலர்ந்தது மண்டலம் வாழலுமாமே

இத்தகைய அரிய உபாயங்களைச் கூறிய திருமூலர், உடலி லிருந்து உயிர் பிரியும் நாடி நடையையும், மனிதனைப் பீடிக்கும் நோய்களின் தொகுப்பினையும், அதை நீக்கம் பெறும் வழியையும் கூறுகிறார். மேலும் அவை புழக்கத்திலும் பயன்பாட்டிலும் தொன்றுதொட்டு இன்றுவரை இருந்து வருகிறது.

சங்கை கேணோய் தான்தனித்த நாலாயிரம்
சங்கை கேணானூற்று நாற்பத்தெட்டு என்பர்காண்
சங்கைகேள் இவ்வளவும் தானுடலில் உண்டாகில்
சங்கைகேள் எல்லாம் தவிடுபொடி யாமே

என்ற பாடலின்மூலம் மனிதனுக்கு ஏற்படும் நோய்களின் தொகுப்பாக 4448 பிரித்துரைக்கிறார். மேலும் சாக்குறி குணங் களைப் பற்றி வேறு எந்த மருத்துவ முறையிலும் கூறப்படாத அரிய மருத்துவக் கருத்துகள் திருமந்திரத்தில் கூறப்பட்டுள்ளது.

புக்கிய உந்தியில் கைபொருத்த வோர்விரல்
எக்கி குதித்தால் இதுகாண் மகாதோடம்

அக்கிய உந்திதான் ஆதாரம் வாய்விற்கு
வைக்கும் தலமென வகுத்தனர் தாதிதே

பித்தம் அடங்கினால் பேசாதே போய்விடு
எத்திய ஐயம் எழும்பிடில் கிட்டாதே
பொத்திய வாதம் பொருமின் மருந்துசெய்
எத்தி இம்மூன்றின் இயல்பை அறிந்திடே

என்ற பாடலின்மூலம் யூகப்புத்தியால் ஒரு மருத்துவன் நோயாளியின் நாடிநடையை அறிந்து, அந்த நாடியில் வாதம், பித்தம், கபம் வேகமாக நடக்கின்றதா அல்லது அடங்கி நிற்கின்றதா என்பதை உணர்ந்து மருத்துவ பரிகாரம் செய்திட வேண்டும் என்றும், நாடிநடையைப் பார்க்கும்போது பித்தநாடி அடங்கி காணப்பட்டால் உடலை விட்டு உயிர் நீங்கும் அறிகுறியாக எடுத்துக்கொண்டு, சித்தபரிகாரம் செய்ய வேண்டியதில்லை என்கிறார். அது சாகுங்குறி என்றும், கைவிடுங்குறியாதலால் உபகாரம் செய்ய வேண்டாம் என்றும் ஔசதம் தந்தாலும் உடல்நிலை தேறி வராது என்று திருமூலர் உரைக்கிறார். மென்மை யான நடையில் இருக்கும் வாதநாடி மறுபடியும் எழும்பினால் அந்த நோயாளிக்கு சிகிச்சை அளித்துக் காப்பாற்ற முடியும் என்று சாகாக்குறியாகவும் கபநாடி அதிகமாக மிகுந்து ஓடினால் சாகுங்குறியாகவும் எண்ணி தடுமாற்றமடையாமல் மருத்துவர் நோயாளியை அணுகும் விதத்தையும் திருமந்திரத்தில் கூறுகிறார். மேலும் சுவாசமானது மூக்கின் வழியாக ஓடாமல், வாயின் வழியே செல்லுமாயின் அந்த நோயாளி மூன்றாம்நாள் நிச்சயம் இறந்து விடுவான் என்றும் கூறுகிறார். மனிதப்பிறவியே திருவருளை அடைவதற்கும், இறையுடன் இரண்டறக் கலப்பதற்கும் ஏற்றதாய் இருக்கும்போது, உடலில் உள்ள நோய்கள் நீங்கப்பெற்று, நெடுங்காலம் நரை, திரை, மூப்பு இன்றி நெடிய ஆயுளோடு வாழ்ந்து உயர்வான இப்பிறவியில் உடலின் துணையுடனேயே இறைவனை அடையும் உபாயத்தைத் திருமூலர் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே தந்தருளியுள்ளார்.

41. திருமந்திரத்தில் திருனர்



முனைவர் கி. அய்யப்பன்
முனைவர்பட்ட மேலாய்வாளர்
இந்திய மொழிகள் மையம்
ஜவஹர்லால் நேருபல்கலைக் கழகம்
புதுதில்லி 110 067. பேசி: 099626 60279

சமூகத்தில் விளிம்புநிலையில் திருநங்கையர், திருநம்பிகள் வாழ்ந்து வருகின்றனர். தமிழ் இலக்கியங்களில் இவர்களைப் பற்றிய பதிவுகள் காணப்படுகின்றன. இலக்கியங்களில் இவர்கள் அலி, பேடி, பேடு முதலிய பெயர்களால் குறிப்பிடப்பட்டுள்ளனர். பால் திரிந்த மக்களும் அவர்களைக் குறிக்கும் சொற்களும் பின்வருமாறாம். 'ஆண்மை திரிந்து பெண்மை கொண்டவன் பேடி; பெண்மை திரிந்து ஆண்மை கொண்டவள் பேடன்; இவ்விருவருக்கும் பொதுப்பெயர் பேடு. இம்மூவர்க்கும் பலர்பால் பெயர் முறையே பேடியர் பேடர் பேடுகள் என்பன. புணர்ச்சி உணர்ச்சி யில்லாததும் பால் காட்டும் உறுப்பால் ஆணும் பெண்ணுமல்லாததும் அலி. பேடி என்னும் பெயர் பேடிமார் பேடிகள் எனவும் பலர்பால் ஏற்கும்' (தொல்காப்பியம், சொல்லதிகாரம்- சேனாவரையம், 1956: 7) என்று கழகப்பதிப்பின் குறிப்புரை கூறுகின்றது.

ஆண்மை திரிந்த பெயராவது பேடி. அச்சத்தி ஆண்மையிற் திரிந்தாரைப் பேடி யென்ப வாகலான். 'தெய்வசிலையார் அலி மூவகைப்படும் என்கிறார். ஈண்டு அப்பெயர் பெற்றது அலி யென்று கொள்க. அலி மூவகைப்படும்: ஆணுறுப்பிற் குறைவின்றி ஆண்டன்மை இழந்ததூஉம், பெண்ணுறுப்பிற் குறைவின்றி பெண்டன்மை இழந்ததூஉம், பெண்பிறப்பிற் தோன்றிப் பெண்ணுறுப்பின்றித் தாடிதோற்றி ஆண்போலத் திரிவதூஉமென. அவற்றுட் பிற்கூறியது ஈண்டுப் பேடி எனப்பட்டது' (தொல்காப்பியம், சொல்லதிகாரம்- தெய்வசிலையார், 1929: 11). 'பெண் தன்மையிலிருந்து பிறழ்ந்து ஆண் தன்மையை அதிகம் பெற்றவர்களை அலி என்ற சொல் குறிக்கிறது'(முனிஷ், 2013: 60) என்று கூறும் முனிஷின்கருத்தை ஏற்கமுடியாது. ஏன் எனில்அலி என்பவன், பெண்ணிலும் ஆணிலும் சேராத உறுப்பை உடையவன். இது ஆணலி, பெண்ணலி என இருவகைப்படும். ஆணுருவம் இருந்தால் ஆணலி எனவும், பெண் ணுருவம் இருந்தால் பெண்ணலி என்றும் சொல்வதுண்டு (Sambasivampillai,1931: 125). மேற்கண்டவற்றின் அடிப்படையில், பெண்தன்மையிலிருந்து பிறழ்ந்து ஆண் தன்மை அதிகம் பெற்றவர் களையே அலி என்று கூறும் முனிஷின் கருத்து சரியானவையாகத் தோன்றவில்லை. அவர்களை ஆணலி என்று கூறுவதே சரியானதாகும். முன் சொல்லப்பட்ட அலி, பேடுக்கான விளக்கங்கள் அடிப்படையில் அலி, பேடு சொற்கள் ஒரே பொருண்மையைக் குறிப்பதாகவே உள்ளதைக் காணமுடிகிறது.

இவர்களுக்கு அரவாணி என்னும் பெயர் 12-05-1998 அன்று முதல் வழங்கப்பட்டு வருகிறது. இப்பெயரை வைத்தவர் ஆர். இரவி அப்போதைய விழுப்புரம் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர். திருநங்கை எனும் பெயரை முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர் நர்த்தகி நடராஜ். இவர் ஒரு திருநங்கை என்பது குறிப்பிடத் தகுந்த ஒன்றாகும். அதன் பின்பு அரசியல் சார்ந்த நிலையில் 2007ஆம் ஆண்டில் திருநங்கை எனும் பெயரை சமூகத்திற்கு அடையாளப் படுத்தியவர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள். இப்பெயர்களும் மாறி தற்போது ஆணாய் பிறந்து பெண்தன்மை அதிகம் உள்ளவரை திருநங்கை(பேடி)என்றும், பெண்ணாய் பிறந்து ஆண்தன்மை அதிகம் உள்ளவரை திருநம்பி(பேடன்)என்றும் அழைக்கின்றனர். இத்தகையோர் திருனர்(பேடு, அலி) என்ற ஒரே சொல்லால் குறிப்பிடப்படுகின்றனர். இந்தப் பின்புலத்தில் திருநங்கை, திருநம்பி இருவரையும் குறிக்கும் ஒரே சொல்லாக திருனர் எனும் சொல் பயன்படுத்தப்படுகிறது. இத்தகைய மூன்றாம்பாலாக உள்ள திருனரைப்(அலி, பேடு) பற்றித் திருமூலர் திருமந்திரத்தில் (471, 472, 476, 1872) பதிவு செய்துள்ள பாங்கினை இக்கட்டுரை ஆராய்கிறது.

திருமந்திரம்

இந்நூல் திருமூலரால் எழுதப்பட்ட ஒரு தமிழ் சைவசமயம் சார்ந்த நூல். "இதன் காலம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டு.இது ஒன்பது தந்திரங்களைக் (இயல்கள்) கொண்டது. மூவாயிரம் பாடல்கள் உடையது. சராசரியாக ஒவ்வொரு பாடலும் நான்கு வரிகளாகவும், ஒவ்வொரு வரியும் நான்கு சொற்களைக் கொண்டதாகவும், மொத்தம் 192000 சொற்களைக் கொண்டது. திருமந்திரம் எடுத்துக் கொண்ட பொருளை எளிய சொற்களால் அனைவருக்கும் புரியும்படி திருக்குற ளைப்போல் சுருக்கமாகவும், தெளிவாகவும் கூறுகிறது" என்பதை விக்கிப் பீடியா இணையப் பக்கங்கள்மூலம் தெரிந்து கொள்ளமுடிகிறது.

இந்நூல் சைவத் திருமுறைகளுள் பத்தாவதாக இடம்பெற்றுள்ளது. தமிழ் மொழியில் பெருஞ்சிறப்புக்கு உரிய முதன்மையான நூல்களைத் தொகுத்து உரைக்கும் ஒரு பழம்பாடல் உள்ளது. அதில் திருமந்திரமும் இணைக்கப் பெற்றிருப்பது இதன் சிறப்பிற்குச் சான்று கூறி நிற்கிறது. சைவ ஆகமங்களின் சாரமாகத் திகழும் இந்நூலை, தமிழில் எழுந்த சைவசமயஞ் சார்ந்த ஒரு கலைக்களஞ்சியம் என்றே கூறலாம். திருமந்திரம் ஒன்பது உட்பிரிவுகளைக் கொண்டது. ஒவ்வொரு பிரிவும் ஒரு 'தந்திரம்' எனகுறிப்பிடப்படுகிறது. இந்த ஒன்பது தந்திரங்களும், ஆகமங்கள் ஒன்பதின் சாரமாக அமைந்துள்ளன. ஆகமங்கள் 28, அவற்றுள் ஒன்பதின் சாரமாக 9 தந்திரங்கள் அமைந்துள்ளன. அந்த ஆகமங்கள் வருமாறு: காரணம், காமிகம், வீரம், சிந்தம், வாதுளம், வியாமளம், காலோத்தரம், சுப்பிரம், மகுடம் என்பன. இதில் இரண்டாம் தந்திரத்தில் 471, 472, 476 ஆகிய மூன்று பாடல்களிலும், ஏழாம் தந்திரத்தில் 1872 ஆவது பாடலிலும் அலி, பேடு என்ற சொற்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆண் பெண் திருனர் பிறப்பு பற்றி திருமந்திரம்

திருமந்திரம் சைவ சமயம் சார்ந்த நூலாக இருந்தாலும் மனித வாழ்வின் இயல்புகளை கூறுவதாகவும் அமைகிறது. இதன் அடிப்படையில் ஆண், பெண் மற்றும்அலிப்பிறப்பு பற்றியும் பேசுகிறது.

மாண்பது வாக வளர்கின்ற வன்னியும்
காண்பது ஆண்பெண் அலியென்னுங் கற்பனை
பூண்பது மாதா பிதாவழி போலவே
ஆம்பதி செய்தான்அச் சோதிதன் ஆண்மையே

(திருமந்திரம், இரண்டாம் தந்திரம் : 471)

பெருமைக்குரியதான பரம்பொருள் ஒன்றியிருக்கின்ற இந்த உடம்பிலிருந்து வளர்கின்ற உயிர்ப்பான நெருப்பை ஆண் என்றும், பெண் என்றும், இரண்டும் அற்ற அலி என்றும் வேறுபடுத்திப் பிரித்தறிய முயலுவது வெறும் கற்பனையே ஆகும். அப்படி வளர்கின்ற உயிர்கள் அந்தந்த உயிர்களின் தாய், தந்தையின் தன்மைகளையே கொண்டிருக்கும்படி உடலைப் படைத்துள்ளது ஒளி வடிவமாகிய பரம்பொருளின் வல்லமையே ஆகும் (மாணிக்கவாசகன், 2006 : 210).

ஆண்மிகில் ஆணாகும் பெண்மிகிற் பெண்ணாகும்
பூணிரண் டொத்துப் பொருந்தில் அலியாகும்
தாண்மிகு மாகில் தரணி முழுதாளும்
பாணவ மிக்கிடில் பாய்ந்ததும் இல்லையே

(திருமந்திரம், இரண்டாம் தந்திரம் : 472)

உடலுறவின்போது ஆணிடம் தோன்றும் சுக்கிலம் அதிகமானால் பிறக்கின்ற குழந்தை ஆணாக இருக்கும் (ஆண்மிகும்). பெண்ணிடம் உண்டாகும் சுரோணிதம் மிகுந்தால் பிறக்கின்றது பெண் குழந்தையாகும். இந்தச் சுக்கிலம் சுரோணிதம் இரண்டும் சமமாகக் கலந்து தோன்றினால் பிறப்பது அலியாகும். ஆணின் முயற்சி உடலுறவின்போது அதிகமானால் உலகம் முழுதாளும் வல்லமை உடைய குழந்தை பிறக்கும். ஆணின் விந்து தன்மையதாகக் கெட்டிப்பட்டதாயின் அது வெளிப்பட்டுப் பெண்ணின் சுரோணிதத்துடன் சேர்ந்தும் பயனில்லை. (மாணிக்கவாசகன், 2006 : 211)

குழவியும் ஆணாம் வலத்தது வாகில்
குழவியும் பெண்ணாம் இடத்தது வாகில்
குழவி இரண்டாம் அபானன் எதிர்க்கில்
குழவி அலியாகும் கொண்டகால் ஒக்கிலே

(திருமந்திரம், இரண்டாம் தந்திரம், 476)

உடலுறவின் போது, ஆணுக்கும் பெண்ணுக்கும் மூச்சுக்காற்று வலது பக்க மூக்கு வழியாக வெளிப்பட்டால், பிறக்கின்ற குழந்தை ஆணாகும். மூச்சுக்காற்று இருவருக்கும் இடப்பக்கம் வெளிப்பட்டால் பெண்குழந்தை பிறக்கும் (அபானன் - மலக்காற்று) அயனவாயு எதிர்த்து வந்தால், சுக்கிலம் சிதறி இரட்டைக் குழந்தைகள் பிறக்கும். இருவருக்கும் இடப்பக்க மூச்சுக் காற்றும், வலப்பக்க மூச்சுக் காற்றும்

சமமாக இருக்குமானால் குழந்தை அலியாகப் பிறக்கும் என்கிறது திருமந்திரம். அதே சமயத்தில் மானிடர்களை ஆண், பெண்ணுக்கு அடுத்த நிலையில் திருனரும் வைக்கப்பட்டிருந்தனர் என்பதை திருமந்திரம் வழி அறியமுடிகிறது.

இறைவனின் வடிவங்களை கூறுமிடத்து திருனர்

இறைவன் எங்கும் நிறைந்த பரம்பொருள். திருமந்திரம் இறைவனின் வடிவத்தை பேசும் இடத்து ஆண், பெண் அல்லாதவன் என்று கூறும்.அடுத்ததாக பேடு அல்லாதவன் என்கிறது. இப்பதிவின் மூலம் திருனர் சமூகத்தில் இருந்திருக்கிறார்கள் என்பதை உணர முடிகிறது. அதே சமயத்தில் திருமந்திரம் மானிடர்களான ஆண், பெண்ணுக்கு அடுத்த நிலையில் உள்ள திருனரையும் மானிடர் என்ற நிலையிலே பதிவு செய்துள்ளது.

பெண் அல்ல ஆண் அல்ல பேடு அல்ல மூடத்துள்
உள்நின்ற சோதி ஒருவர்க்கு அறிஞனாக்
கண்இன்றிக் காணும் செவிஇன்றிக் கேட்டிடும்
அண்ணல் பெருமையை ஆய்ந்தது மூப்பே

(திருமந்திரம், ஏழாம் தந்திரம், 1872)

இறைவன் ஆணல்ல, பெண்ணல்ல, இரண்டும் இல்லாத தன்மையின பேடும் அல்ல. அறிவும் மனமும் செயலற்று, நிற்கின்ற நிலையில் மனத்துள்ளே உதித்தெழும் சோதிஒளி, எல்லோராலும் எளிதில் அறிய முடியாதது. அது அறிவால் உணரப்படும் பொருள். கண்ணில்லாமல் காணும். அது மனத்தால் அறியப்படும் பொருள். எவை காதின்றிக் கேட்கும்? இத்தகைய ஆற்றலாளனை பரம்பொருளின் ஆற்றலை உணர்ந்தறிவதே ஞானத்தின் முதிர்வு என்று இப்பாடலில் கூறப் படுகின்றது.

இறைவன்,பெண், ஆண், பேடு என்ற பாகுபாடு உடையவன் அல்லன். அண்டகோசத்தால் மூடியிருக்கும் போது உள்ளே உள்ள அச்சோதியை எவராலும் அறிதற்கு இயலாது. கண்ணான கருவி இல்லாமலேயே காணும். செவி இல்லாமல் கேட்கும்.சோதிக்குள் சோதியாய் விளங்குவான். அத்தகைய சிவத்தின் பெருமையை ஆராய்ந்து அறிவதே முதிர்ந்த ஞானம் ஆகும்.

திருமந்திரம் திருனரின் பிறப்பு பற்றியும், இறைவனை வழிபடும் இடத்து ஆண், பெண்ணிற்கு அடுத்த நிலையில் திருனரையும்(பேடு) கூறுகிறது. பக்தி இலக்கியங்களில் இறைவனை வழிபடும் இடத்து ஆண், பெண்ணுக்கு அடுத்த நிலையில் அலி (தேவாரம், அப்பர்,2895. நாலாயிர திவ்ய பிரபந்தம், 2245, நம். திருவாய்.2.5.10) என்று கூறும் மரபிலிருந்து வேறுபட்டு ஆண், பெண்ணிற்கு அடுத்த நிலையில் அலிக்கு பதிலாக பேடு (பாடல் எண்: 1872) என்று குறிப்பிடுவதன் மூலம்

இக்கட்டுரையில் முன்பே கூறியுள்ளபடி அலி, பேடு என்பதன் பொருள் ஒன்றே என்பது இதன் மூலமும் உறுதிப்படுத்தப்படுகிறது. தற்காலத்தில் திருனர்கள் தங்களை சமூகத்தின் அனைத்து நிலையிலும் மூன்றாம் பாலினமாக அங்கீகரிக்க வேண்டும் என்று போராடிவருகின்றனர். தில்லி உச்ச நீதி மன்றமும் 15-04-2014 அன்று வழங்கியுள்ள தீர்ப்பில் திருனர்களை மூன்றாம் பாலினமாக அங்கீகரித்து அனைத்து இடங்களிலும் உரிய அங்கீகாரம் கொடுக்க ஆணை பிறப்பித்துள்ளது. ஆனால், பலநூறு ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய திருமந்திரம் திருனரை ஆண், பெண்ணுக்கு அடுத்த நிலையில் பார்க்கிறது. மேலும், திருனர்கள் பிறப்பும் ஆண், பெண் போன்றே இயற்கையானதே என்பதைத் தெளிவு படுத்துகிறது.

அலிப்பிறப்பு தோன்றும் விதம் பற்றி திருமந்திரத்தின் 471, 472, 476 ஆகிய பாடல்களில் விளக்கப்படுகின்றது. பல துறைகளிலும் அறிவியல் வளர்ந்து விட்ட இக்காலத்திலும் அலி பிறப்புப் பற்றி சரியான புரிதல் இல்லாத நிலையில் ஏறக்குறைய 1500 ஆண்டுகளுக்கு முன்பே திருமந்திரம் ஆண், பெண், அலிப்பிறப்பைப் பற்றி பேசியுள்ளதைத் தமிழனின் அறிவியல் சிந்தனைக்கு சிறந்ததொரு எடுத்துக்காட்டாக கொள்ளலாம்.இந்த பின்புலத்தில் திருனரின் பிறப்பு பற்றிச் சமூகம் தெரிந்துகொள்ள சிறந்ததொரு ஆதாரமாக திருமந்திரம் விளங்குகிறது.

உதவிய நூல்கள்

- மாணிக்கவாசகன், ஞா (விளக்கவுரை), 2006, திருமூலர் திருமந்திரம், உமா பதிப்பகம், சென்னை.
- இராமலிங்க தம்பிரான் சுவாமிகள் (பதிப்பாசிரியர்), 1974, திருமந்திரம், முதல் மூன்று தந்திரங்கள், தருமை ஆதினம், தருமபுரம்.
- தொல்காப்பியம், சொல்லதிகாரம்- சேனவரையம்,1956, கழக வெளியீடு, சென்னை.
- தொல்காப்பியம், சொல்லதிகாரம்- தெய்வசிலையார் உரை,1929, கரந்தை தமிழ்ச்சங்க பதிப்பு, கரந்தை.
- முனிஷ்.வெ., 2013, காலந்தோறும் தமிழ் இலக்கணங்களில் மூன்றாம் பாலினம், சொல்லங்காடி, சென்னை.
- Sambasivampillai> T.v.> 1931> Tamil- English Dictionary> The Research Institute of Siddhar|s Institute of Science> Chennai.
- http://orinam.net/ta/resources-ta/family-and-friends-ta/terminology ta/#sthash.PcU60GeK.dpuf https://ta.wikipedia.org/s/1due

42. திருக்குறளும் திருமந்திரமும்

வித்துவான் - கவிஞர்
முனைவர் சேது இராமலிங்கம்
அலைபேசி: 9444680251

எட்டையபுரம் சின்னச்சாமி பெற்ற பெரியசாமியாகிய சுப்பிரமணிய பாரதியார் ஆயிரக்கணக்கான புலவர்களை அறிந்த பன்மொழிப் புலவர். கம்பன், வள்ளுவன், இளங்கோவன் ஆகிய மூன்று தமிழ்புலவர்கள் போல் உலகில் இதுவரை எவரும் பிறந்திலர் என்று மூன்று புலவர்களைப் பாரதியார் பாராட்டுதலை ரா.பி.சேதுப்பிள்ளை தமிழின்பம் எனும் நூலில் பதிவு செய்வர். திருமால் ஈரடியால் உட்புலனாகும் மூவுலகளந்தார். ஆனால் வள்ளுவர் ஒன்றே முக்கால் அடியால் உலகோர்கட்கு புலனாகா உள்ளங்களை அளந்தார். திருமந்திர ஆசிரியர் நான்கடிக் கவி விரத்தத்தால் மூவுலகோர் உள்ளம் அளந்தார். திருமூலர் 3000 பாக்களால் உலகம் அளந்தார். வள்ளுவர் திருமந்திரத்தில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பகுதியால் 1330 பாக்களால் உலக உள்ளங்களை அளக்க முயன்றதை போல், வீரமாமுனிவர், சிகன்பால்கு போன்ற மேனாட்டார்கள் போற்றிப் புகழ்வர்.

அன்பின் வழியது உயிர்நிலை

அன்பு என்ற சொல் தமிழ் முதல் எழுத்தாகிய அகர உயிரையும், தமிழின் கடை எழுத்தாகிய 'ன்' என்ற மெய்யையும், 'பு' என்னும் உயிர் மெய்யையும் தாங்கி நிற்கும்.

அன்பு என்ற பண்பு உயிராகவும், மெய்யாகவும், உயிர் மெய்யாகவும் விளங்கும். முதல் நிலையினரும் கடை நிலையினரும் அன்பால்தான் இணைய இயலும்.

ஈருயிர் அன்பால் உடன்பட்டுச் சேர்ந்து ஓர் உடன்படு மெய் தோன்றும். உயிர் உருவற்றது. உருவற்ற இரண உயிர் இணைய ஓர் உடன்படு மெய் தோன்றுவதுபோல இரு அன்பு உயிர்கள் உடன் பட்டு இணையுங்கால் உடம்படு மெய்யாம் மகவு தோன்றும்.

அன்புதான் வழியது உயிர் நிலை (குறள் 80:1)

திருமந்திரம் அன்பின் வடிவே இறைவன் என்பர்.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆளும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆளும் அறிந்தான்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே (270)

அன்பு வடிவாய் இறையடியார் என்பர்.

மக்கள் தொண்டே மகேசன் தொண்டு

ஆருயிர்கட்குச் செய்யும் தொண்டு ஆண்டவனுக்குச் செய்யும் தொண்டாம். மன்னுயிர்கட்குச் செய்யும் தொண்டு மரணத்தின் தடைக்கல் என்பர் வள்ளுவர்.

வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குக் கல் (குறள் 38)

அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே.
(தாயுமானவர் பராகண்ணி)

மன்னுயிரைத்தம் முயிர்போல் எண்ணெணிச் செய்யும்
மன்னுயிர்த் தொண்டர் தம்உள்ளம் இறைவன்
உறைகோயில் அத்தகைய அடியார் அடிக்கேவல்
செய்வதே என் விருப்பம் என்பது இராமலிங்க
வள்ளலார் கருதுகோள்.
எத்துணை யும்பேத முறாதெவ்வுயிரும்
தம்முயிர்போல் எண்ணி உள்ளே
ஏத்துரிமை உடையவராய் உவர்கின்றார்
யாவரவர் உளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடமென நான் தேடுவதேன் அந்த
வித்தகர் தம்அடிக்கேவல் செய்திடஎன்
சிந்தை மிக விழைத்ததாலோ (திருவருட்பா)

திருமூலர் நடமாடும் கோயிலாகிய மன்னுயிர் சீவனது படமாடக் கோயில் கொண்டுள்ள பரமனுக்கு அதுபோய்ச் சேரும் என்பார்.

நடமாடக்கோயில் நம்பர்க்கொன்றீயின்
படமாடக் கோயில் பகவற்கதுஅமே (திரு. 185:3-4)

யாக்கை நிலையாமை

முட்டையிலிருந்து வெளிப்போந்த குஞ்சுமீண்டும் முட்டையுள் நுழையாது. அதுபோல மெய்யிலிருந்து வெளிப்போந்த உயிர் மீண்டும் மெய்யில் வந்து புகாது.

குடம்பை தனித்தொழியப் புட் பறந்தற்றே
உடம்போடு யிரிடை நட்பு (குறள் 338)

மண்ணால் அமைந்தமட்பாண்டம் தீயினைச் சேர்ந்தது. விண்பெய்த மழைநீரால் மீண்டும் மண்பாண்டம் மண் ஆகும். மண்ணில் தோன்றிய மாந்தரை மண்ணே மாந்தலால் இறப்பர்.

மண்ணென்று கண்டீர் இருவகைப் பாத்திரம்
திண்ணென்று இருந்தது தீயினைச் சேர்ந்ததுத
விண்ணின்று நீர்விழின் மீண்டுமண் ஆனாற்போல்
எண்ணின்ற மாந்தர் இறக்கின்ற வாறே (43)

ஐம்பூதத்தால் ஆன மெய்மண்ணில் வீழ்கிறது. தீயில் எரிகிறது. புயலால் தூக்கி எரியப் பெறுகிறது. நீர் வெள்ளத்தால் அடித்துச் செல்லப் பெறுகிறது. விண்ணில் பறக்கும்போது கூட கிருபானந்த வாரியார் போல் விண்ணில் கலந்து விடுகிறது.

துடுப்பால் மண்பாண்டத்தில் வேகாத அரிசியைக் கிண்டி எரியால் வேக வைக்கிறோம். இந்த மெய்யை எரியாகிய நெருப்பால் வேக வைக்காமல் வேகாத அரிசியை இடாமல் பக்குவமான தவத்தால் மெய்யினை அழியாமல் காத்தல் நன்று.

துடுப்பால் அரிசியை வேகவைத்துப் பக்குவப்படுத்தல் போல் மெய்யினையும் தவத்தால் தவிர்ப்பன தவிர்த்துப் பக்குவப்படுத்தி பிறவிக்கடல் கடத்தல் நன்று.

துடுப்பிடு பானைக்கும் ஒன்றே அரிசி
அடுப்பிடு மூன்றிற்கும் அஞ்செரி கொள்ளி
அடுத்தெரி யாமல் கொடுமின் அரிசி
விடுத்தன நான்களும் மேற்சென்றனவே (193)

இறைவன் திருவடியை இடைவிடாது நினைத்துத் தவமிருத்தலே நீடு வாழும் வழி என வள்ளுவர் உரைப்பர்.

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார் (குறள் 3)

தவித்துச் செய்வது தவம்

ஐம்பொறிகளை ஐம்புலன் மீது செல்லாது தவிர்ப்பது தவம்.

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறி நின்றார் நீடுவாழ்வார் (குறள் 6)

இறைவன் திருவடி மறவாமை பிறவாமைக்கு மருந்து
பிறவாதிருக்க வரம் பெறல் வேண்டும் பிறந்து விட்டால்
இறவாதிருக்க மருந்துண்டு காணிது எப்படியோ
அறமார் புகழ்ந்தில்லை அம்பலவாணர் அடிக்கமலம்
மறவாதிரு மனமே அதுகாண்றல் மருந்துனக்கே
(பட்டினத்தார்)

திருவடி தொழுது தெளிவுண்டாக்கல்

உடல் தெளிவுக் உணவு உதவும். உளத் தெளிவுக்கு திருவடித் தொழுகை உதவும். விருப்பு வெறுப்பால் வரும் துன்பத்தை விருப்பு வெறுப்பற்ற இறையடி தொழுது வெல்லுதல் வேண்டும்.

அறக்கடவுள் வடிவான இறையடி தொழுதால்
பிற ஆழியான மறமாகிய பாவக்கடல், பவக்கடல்
எளிதில் கடந்து தவ உருப்பெறலாம்
அவ உருநீங்கும்

அறஆழி அந்தணன் தான்சேர்ந்தார் கல்லால்
பிறஆழ் நீந்தல் அரிது (குறள் 8)

திருவடி யேசிவம் ஆவது நேரில்
திருவடி யேசிவ லோகம் சிந்தித்தல்
திருவடி யேசெல் கதியது செப்பில்
திருவடி யேதஞ்சம் உள்தெளி வார்க்கே (38)

நிறைவுரை

திருமூலர் 3000 பாக்களையும் 'ஏ' என்றே நிறைவு செய்வர். ஏய் (பொருந்து) என்பதன் கடைக்குறையே 'ஏ' எனும் எழுத்து. திருக்குறள் கருத்தும் திருமந்திரக் கருத்தும் பல இடங்களில் ஒத்த நிலையில் உருக்கொண்டுள்ளன.

புலமிக்கவரைப் புலமை தெரிதல்
புலமிக்கவர்க்கே புலனாம்-நலமிக்க
பூம்புனல் ஊர் பொதுமக்கள் காகாதே
பாம்பறியும் பாம்பின்கால் (பழமொழி)

எப்பொருள் யார்யார்வாய் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு (குறள் 385)

43. திருமூலர் கூறும் துறவு நிலை



முனைவர் பா.சுமத்திரா
உதவி பேராசிரியர் தமிழ்த்துறை
காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரி, (தன்னாட்சி)
சென்னை-600002

உலக வாழ்க்கை என்பது மிகவும் சிறப்பான ஒன்று. மக்களின் வாழ்க்கையை உலகத்தார் இல்வாழ்க்கை என்றும் துறவு வாழ்க்கை என்றும் பகுத்துள்ளனர். இவ்விரு வாழ்க்கை நிலையின் சிறப்பினையும் மேன்மையினையும் போற்றாதார் இவ்வுலகில் எவரும் இல்லை எனலாம்.

திருவள்ளுவர், திருமூலர், நாலடியார் என இப்பட்டியல் நீண்டு கொண்டே செல்கின்றன. சங்க இலக்கியங்கள் ஒவ்வொன்றும் இல்வாழ்க்கையின் அகம், புறம் பற்றிய சிறப்பு செய்திகளை மிகவும் நாகரிகமாகவும் எதார்த்த நிலையிலும் எடுத்தியம்புகின்றன.

அவ்வாறிருக்கத் திருமூலர் திருமந்திரத்தின் வாயிலாகத் துறவு வாழ்க்கையினை எந்நிலையில் காட்டுகின்றார்; அறவு என்பவர் யார்? போலித் துறவிகளுக்குரிய அடையாளங்கள் என்ன? வீடுபேற்றை எந்நிலையில் அடைய இயலும் என்பது போன்ற சில கருத்துகளைத் திருமந்திரத்தின் வழிநின்று இக்கட்டுரை கூற விழைகின்றது.

துறவு வாழ்க்கை

இல்வாழ்க்கை போலவே துறவு வாழ்க்கையும் மிக உன்னதமான ஒன்றுதான். இல்வாழ்க்கை துறவு வாழ்க்கை இவை இரண்டையுமே முன்னோர்கள் 'அறம்' அறவாழ்க்கை என்றுதான் கருதி வந்துள்ளனர். அதன் வழி இல்லறம், துறவறம் இவை இரண்டையும் காப்பது நல்லறம் என்கின்றனர்.

மனிதரை மூன்று வகையிராகப் பகுத்துக் காட்டுகின்றார் பட்டினத்தார். அவர்கள்,

1. இல்லறத்தார்
2. இல்லறம் துறந்தார்
3. இல்லம் துறந்து உள்ளமும் துறந்த துறவறத்தார்

இம் மூவகையினரின் ஆன்ம பக்குவத்தைப் பற்றியும் மிகச் சிறப்பாக பேசுகிறார் பட்டினத்தார்.

அறத்தான் இயற்றும் அவனிலுங் கோடி அதிகம்
துறந்தான் அவனின் சத்கோடி உள்ளத் துறவுடையோன்
இருந்தான் அறக்காற்று அறவொடிருந் திருவாதனையற்று
இருந்தான் பெருமையை என்சொல்லுவேன் கச்சியே கம்பனே

- பட்டினத்தார் திருவேகம்ப மாலை

என்கிறார். அதாவது இல்லறத்தில் இருந்து கொண்டு அறம் செய்பவனைக் காட்டிலும் துறவியாக இருக்கும் ஒருவரின் சிறப்பு மேலானது என்றும் இந்நிலையில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டவன் இல்லறத்தானைக் காட்டிலும் பல கோடி மடங்குகளுக்கு மேலானவன் என்றும் இவர்கள் இரு வகையினரைக் காட்டிலும் மிகமிகச் சிறப்புடையவன் உள்ளத்தால் துறவு நிலையை அடைந்து வாழ்பவனே என்று கூறுகின்றார் பட்டினத்தார்.

ஆகவே, உயர்வாகவும் சிறப்பாகவும் போற்றப்படும் துறவு நிலையை அடைந்தவர்தான் திருமூலர். இவர், துறவறத்தின் மேன்மை பற்றியும் அதன் பல்வேறு படிநிலைகள் பற்றியும் திருமந்திரத்தின் வாயிலாக இனிதே விளக்கிப் பேசியுள்ளார்.

திருமூலர் தனது திருமந்திரத்தின் 9 தந்திரங்கள் பற்றியும் பேசுகின்றார். அவற்றுள் ஆறாவது தந்திரம் பற்றி இக்கட்டுரை பேசுகிறது. இப்பகுதியில் துறவு, தவம், தவ வேடம், அவ வேடம், திருநீறு, ஞானவேடம், சிவ வேடம், அபக்குவன், பக்குவன் முதலிய தலைப்புகளில் உண்மையான துறவிகள் பற்றியும் அவர்களின் செயல்பாடுகள் இவை என்பது பற்றியும் அவர்களின் தன்மை பற்றி மிகவும் துல்லியமாக வரையறுத்துக் காட்டுகின்றார் திருமூலர்.

திருமூலர் காட்டும் (கூறும்) முதற்சித்தன்

துறவறத்தில் ஈடுபட்டுள்ள துறவிகளுள் தலைசிறந்த துறவியாகத் திருமூலர் சிசவனைச் சுட்டுகின்றார். சிவபெருமான் நியதிகளை உடையவன் என்பதூஉம் பிறப்பற்ற தனியன் என்பதூஉம் தத்துவக்கோட்டை நீத்தவின் என்பதூஉம் அவர் சீவபோதத்தையே பிச்சையாக ஏற்கின்றார் என்பதூஉம் அடியார்கள் யாவரும் அறிந்த உண்மையாகும். மேலும், சிவபெருமானே சிறந்த துறவி என்பதூஉம் அவனே பற்றுகள் அனைத்தையும் நீத்தவர்களின் பிறவியை நீக்கி முக்தி அளிக்கக்கூடிய வல்லவன் என்பதூஉம் திருமூலர் காட்டும் உண்மை நிலையாகும்.

அறவன் பிறப்பிலி யாரும் இலாதான்
உறைவது காட்டகம் உண்பது பிச்சை
துறைவனும் கண்டீர் துறந்தவர் தம்மைப்
பிறவி யறுத்திடும் பித்தன் கண்டீரே (1616)

எனும் இச்செய்யுள் வழி சிவன்தான் முதற்சித்தன் என்பதைத் தெளிவுப்படுத்துகின்றார் திருமூலர்.

திருவாசகம் கூறும் முதற்சித்தன்

சுடுகாட்டைக் கோயிலாகவும் (உறைவிடமாகவும்) புலியைக் கொன்று அதன் தோலை நல்ல ஆடையாகவும் தாய்-தந்தை தனி ஒருவனான ஈசனே முதற்சித்தன் ஆவான் என்கிறது திருவாசகம்.

கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை
தாயுமிலி தந்தையிலி தான்தனியன் காணேடி (திருவாசகம்)

மேலும், இவ்வாறு ஆன்மாக்களை உலகு துறக்கச் செய்து தவநிலையில் ஈடுபடச் செய்பவனும் சிவனே ஆவான் என்கிறது திருவாசகம்.

துறவிகளின் நல்லொழுக்கம்

தவத்தில் ஈடுபடும் துறவிகள் இன்னின்ன செய்ய வேண்டும் என்று வரையறை செய்கின்றார் திருமூலர். தவவேடம், திருநீறு, ஞானவேடம், சிவ வேடம் ஆகிய பகுதிகளில் துறவிகளின் புற இலக்கணம் பற்றிப் பேசும் திருமூலர் அடுத்த நிலையில் துறவிகள் அணிந்து கொள்ளக்கூடிய பொருட்கள் இவை எனும் வரையறை யையும் தருகின்றார்.

துறவிகளின் பொருட்கள்

திருநீறு, காதில் தாமிர குண்டலம், கழுத்தில் முப்பத்திரண்டு உத்திராட்சங்கள் கோத்த மாலை ஆகியன வேத ஆகமங்களை ஓதி, தீமையில்லாத வீடுபேற்றை வேண்டிச் சிவலோகத்தில் ஈடுபடும் யோகிக்குரிய சாதனங்களாகும். மேலும், உள்ளாடை, கைப்பை, தோகை போன்ற மெல்லிய மேலாடை, சுற்றிய சடை, உடம்பு முழுவதும் அணியும் திருநீறு, அங்கையில் மண்டை ஓடு, பிரப்பங் கோல் ஆகிய அனைத்தும் துறவிக்கு உரியன. இவை மட்டுமல்லாது, காதணியாகிய குண்டலமும் கழுத்தணியாகிய உத்திராட்சமும் சிவசிவ எனும் நாம ஒலியும் ஊதுகின்ற வெண்சங்கும் உயர்நிலை யில் உள்ள ஆறு கட்டிகளும் மண்டையாகிய சட்டியும் குற்ற மில்லாத பாதக்குறடும் யோகத்திற்குரிய இருக்கையும், பட்டம், கோதண்டம் ஆகியனவும் சிவயோகிகளான துறவிகளுக்குரிய பொருள்களாகும் என்கிறார் திருமூலர்.

பூதி யணிவது சாதன மாதியிற்
காதணி தாம்பிற குண்டலம் கண்டிகை
ஓதி யவர்க்கும் உருத்திர சாதனம்
தீதில் சிவயோகி சாதனம் தேரிலே (1662)

என்றும்

யோகிக் கிடுமது உட்கட்டுக் கஞ்சுளி
தோகைக்குப் பாசத்துச் சுற்றம் சடையாதான்
நாகத்து நீறணி யாங்குஅக் கபாலம்
சீகத்த மாத்திரை திண்பிரம் பாகுமே (1663)

என்றும் சிவ வேடம் குறித்து இச்செய்யுள்கள் இரண்டையும் பாடுகின்றார் திருமூலர்.

திருமூலர் குறிப்பிடும் துறவிகள் போல் இன்றளவும் உண்மையாகத் தன்னை இறைவனுக்காக அர்ப்பணித்துக் கொண்டு இல்லற வாழ்வைத் துறந்து சுற்றத்தாரைத் துறந்து உயர்வான, மேன்மை பொருந்திய துறவி எனும் நிலையை அடைந்து துறவறத்தைச் சிறக்க செய்து வருகின்றனர். உணவு, உடை, உறைவிடம் என எல்லா வகையில் தன்னை இறைவன்பால் ஆட்படுத்தி கொண்டு வாழுகின்ற துறவிகளும் இவ்வுலகில் ஏராளமாக இருக்கின்றனர்.

இறைவன் மீது பற்றுக் கொண்டவன் போலவும், இல்லற வாழ்க்கையில் பற்றற்றவன் போலவும் வேடம் தரித்த போலித் துறவிகளும் சிலர் இவ்வுலகில் திரிகின்றனர். அதற்கான சில சான்றுகளையும் கூற முடியும். என்றாலும், இது இன்றைக்கு, நேற்று இல்லை திருமூலர் காலத்திலிருந்தே தொடர்கிறது. அவர்களைப் பற்றி பேச வேண்டும். ஆனால் சூழல் கருதி நல்லவர்களைப் பற்றி பேசும்பொழுது தீயவர்களும் இருக்கின்றனர் என்பதை மட்டும் மனத்தில் கொள்வோம். போலித் துறவிகளையும், போலித் துறவிகளுக்குரிய ஆடையாளங்களையும் தெரிந்து கொள்வோம்.

போலித் துறவி

இம்மை-மறுமை, பிறப்பு-இறப்பு, இரவு-பகல், நன்மை-தீமை, இன்பம்-துன்பம், இல்லறம்-துறவறம் நட்பு-பிரிவு என வாழ்வின் கூறுகள் ஒவ்வொன்றுக்கும் இருநிலைகள் இருக்கின்றன. அவ்வண்ணமே மெய்ப்பொருளாகிய பரம்பொருளை (இறைவனை) அடைவதிலும் இருநிலைகள் இருக்கின்றன.

இல்லற வாழ்க்கையில் தோல்வியடைந்தவர்கள், உண்மைத் துறவிகளுக்குள்ள சிறப்பையும், சமுதாயத்தில் இல்லற வாழ்வில் நிலைத்தவர் துறவிகளைப் பாதுகாத்துப் போற்றுவதையும் கண்டனர். சமுதாயம், துறவிகளுக்குத் தரும் மதிப்பை மட்டும் கருத்தில்கொண்ட ஒரு சாரார் உழைப்பதற்கு எந்த முயற்சியையும் மேற்கொள்ளாமல் போலித் துறவிகளாக நடமாட முற்பட்டனர். அதனை உணர்ந்த திருமூலர் இத்தகைய போலித் துறவிகளின் நடமாட்டத்தைக் கண்டிக்கும் நோக்கத்தில் அவவேடம், அபக்குபவன், இராசதோடம், அசற்குரு நெறி என்னும் தலைப்புளில் தம் கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார்.

போலித் துறவிகளின் அடையாளங்கள்

உண்மையான இறையருளைப் பெற விழையும் துறவிகளைப் போல் சிலர் போலித் துறவிகளாகத் திரிந்து வந்த நிலையில் அவர்களை அடையாளம் கண்டுகொள்வதற்காக சில குறிப்புகளைக் குறிப்பிடுகின்றார் திருமூலர்.

- உண்மையான துறவிகளின் அடையாளங்களையும் பண்புகளையும் அறிதல்
- போலித் துறவிகளின் அடையாளங்களையும் பண்பு களையும் அறிதல்
- மெய்ஞானத்தை உணர்ந்த பின்னர் தான் துறவு வேடம் தரிக்க வேண்டும்.
- உண்மையான ஞானநிலையை அடைந்தவர்களுக்கு எந்த வேடமும் தேவையில்லை (திரு. 1652)
- துறவு என்பது காவி, கமண்டலம் போன்ற வேடங்களில் இல்லை. இது மனம், எண்ணம் சார்ந்த நிலை.
- ஞானத்தால் பற்றற்ற நிலையை அடைவதே உண்மை துறவிக்கான அடையாளம்.
- போலித் துறவிகள் பணம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு ஆரவாரமான பேச்சுகள், பிரசங்கங்கள் என்று சுத்தி திரிவர்.
- போலித் துறவிகள் மாயத் தோற்றத்தாலும், பேச்சாலும், ஆரவாரத்தாலும் மக்களை அசர வைத்துப் பொருளை பிடுங்குகின்றனர்.
- உண்மையான துறவிகள் உயிர் இருந்தும் உலக நாட்டம் இன்றி செத்த பிணம்போல் திரிந்து கொண்டிருப்பர்.
- இவர்களிடம் மனமயக்கம், இச்சை என்பன அறவே இருக்காது.
- அகங்காரம் அழிந்து போகும். இறைவனோடு ஒன்றிய நிலை. செயல் அற்ற நிலைக்கு வந்து விடுவார்கள். இவர்களிடம் ஆரவாரங்களோ, ஆர்ப்பாட்டங்களோ இருக்காது.
- எல்லாம் அவன் செயல்; ஆட்டுவிப்பவன் அவன். இயங்குவது நான் என்ற எல்லையற்ற நிலையை அடைவர். இதுவே உண்மைத் துறவிகளின் அடையாளம்.

முடிவுரை

மனித வாழ்க்கையின் சிறப்பான பகுதி இல்வாழ்க்கை என்றால் அதனை விடவும் சிறப்பான, உயர்வான, மேன்மையான நிலை துறவி என்பது. அவ்வகையில் உண்மையான அன்பை இறைவன் மீது செலுத்தி உலகப் பற்றுகளை அறுத்து இறைவனிடம் பற்று கொண்டவனே உண்மையான துறவி ஆவார் என்பதும், சிவனே முதல் துறவி என்பதும் அவர்களுக்குரிய நல்லொழுக்கம், அடையாளம் எனும் சில வகையான கருத்துகளை இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது. சிவகதி அடைதலே வீடுபேறு என்னும் நிலையாகும். போலித்துறவிகள் பற்றியும் போலித் துறவிகளுக்குரிய அடையாளங்கள் இவை என்பது பற்றியும் இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

ஓம் சிவாய நம

44. ஊழ்வினை - நால்வரும் திருமூலரும்-ஓர் ஒப்புமை



முனைவர் பழ.முருகேசன், M.A., M.E., Ph.d.
பேராசிரியர், பொறியியற் கல்லூரி,
சென்னை-600042

ஊழ் என்பதனைப் பால் வரை தெய்வம், வினை பிராப்தம் என்று பல்வேறு சொற்களால் குறிப்பிடுவது உண்டு. ஊழ் என்பது பண்டைத் தமிழர் கொள்கை. ஊழ் பற்றிய செய்திகள் தமிழ் இலக்கியங்களில் பரந்து கிடக்கின்றன. நாம் அறிந்தோ அறியாமலோ செய்யும் செயல்களுக்கு ஏற்ப வினை அமைகிறது. வினை மூன்று வகைப்படும்.

(அ) இருப்பு வினை (சஞ்சிதம்)
(ஆ) நுகர் வினை (பிராரப்தம்)
(இ) ஏறு வினை (ஆகாமியம்)

நாம் செய்யும் வினைகட்கு ஏற்பவே நமது பிறவிகள் அமைகின்றன.

வினையின் வந்தது வினைக்கு வினையாவது என்பது மணிமேகலை. பிறவிக்கு வித்தாக இருப்பது இருப்பு வினை. இருப்பு வினையில் இருந்து ஒரு பகுதியைக் கழிக்கவே இப்பிறவியை ஆண்டவன் அருளுகின்றான். இதுவே நுகர்வினை எனப்படும். இதனையே விதி, பால்வரைத் தெய்வம், நியதி, முறை, பிராரப்தம் என்றெல்லாம் கூறுவர்.

சங்ககாலத் தொன்மை நூலான புறநானூற்றுப் பாடல் இந்த நுகர்வினையைக் குறிப்பிடுகிறது.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று தொடங்கும் பாடலில், வினையின் வழியே தான் உயிர்கள் செயல்படும் என்று கூறுகிறது.

நீர்வழிப்படுஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப படூவம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம் .....

இங்கே முறை என்பது நுகர்வினை; விதி என்று பொதுவாகப் பாமர மக்களால் கூறப்படும்.

முற்பிறவியில் செய்த வினைகட்கு ஏற்ப, ஒருவன் இப்பிறவியில் இன்ப துன்பங்களை துய்ப்பதுபோல, ஒருவன் செல்வம் உடையன் ஆதலும், வறுமை உடையன் ஆவதும் வினைப்பயனே என்பது திருக்குறள்.

இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளியர் ஆதலும் வேறு (குறள் 374)

அறிவிற் சிறந்தவர் வறியராயும், அறிவிலார் செல்வராயும் இருப்பதற்கும் காரணம் முன்வினையே என்பது வள்ளுவம். அது மட்டுமல்ல, ஒருவன் கோடி கோடியாய்ச் செல்வம் சேர்த்தாலும் தனக்கு விதிக்கப்பட்ட அளவே அவனால் துய்க்க முடியும் என்பதும் வள்ளுவர் வாக்கு.

வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுப்பினும் துய்த்தல் அரிது (குறள் 377)

வினைகட்கு ஏற்ப, இறைவன் இவ்வுடலைக் கொடுத்து இதனைத் துய்த்துக்கொள் என்ற அளவில்தான் ஒருவன் துய்க்க முடியுமே தவிர, அவ்வளவினும் மிகுதியால் அல்ல. இன்னும் வள்ளுவர் சொன்னார்:

உனக்கு அளிக்கப்பட்ட செல்வத்தினை எவ்வளவு தான் வருந்திக் காப்பாற்றினாலும் நல்வினை இல்லை எனில் அஃது உன்னை விட்டுப் போய்விடும்.

நல்வினை இருக்குமாயின், அப்பொருளை எங்கே வீசினாலும் உன்ன விட்டுப் போகா.

பரியினும் ஆகாவாம் பால்அல்ல உய்த்துச்
சொரியினும் போகா தம் (குறள் 376)

இனி, ஊழின் வலிமையைச் சொல்ல வந்த வள்ளுவர்

''ஊழின் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான் முந்துறும்'' (குறள் 380)

இவ்வினையினை இங்குக் கழிப்பதற்கு மாறாக இன்னும் தீவினை செய்து வாழ்வோமானால், அஃது ஏறுவினை ஆகும். அது மேலும் பிறப்பினை உண்டாக்கும்.

எனவே மணிவாசகர்,

''பொல்லா வினையேன் புகலுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகி
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாநின்ற இத்தாவர சங்கமத்துள்
ஏல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்
(திருவாசகம்-சிவபுராணம் 25-31)

இவ்வாறு வினை செய்வதும் அதாவது ஏறுவினை ஆவதும் மீண்டும் பிறப்பதுமாக இருந்தால் இவ்வுயிர்க்கு உய்தி இல்லையா? என்ற வினா எழுகிறது. அதற்கு அருளாளர்கள் உய்தி உண்டு என்று அருளுகிறார்கள்.

சான்றாக, திருஞானசம்பந்தப் பெருமான்

அவ்வினைக்கு இவ்வினையாம் என்று சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடாதிருப்பதும் உந்தமக்கு ஊனமன்றே
கைவினை செய்து எம்பிரான் கழல் போற்றதும் நாம் அடியோம்
செய்வினை வந்து தீண்டப் பெறா திருநீல கண்டம்

என்றார். மேலும், தில்லைத் திருப்பதிகத்தில்,

கற்றாங்க எரிஓம்பி கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம்பலம் மேய
முற்றா வெண்திங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே

என்றார். எனவே, திருக்கோயிலில் தொண்டு செய்வதும், பூக்கொண்டு அரன்தன் பொன்னடி போற்றலும், குளம் அமைத்தலும், நந்தவனம் அமைத்தலும், வினையை அகற்றும் என்பது அவர் கூற்று. திருநாவுக்கரசு பெருமான்,

வானம் துளங்கில்என் மண்கம்பம் ஆகில்என் மால்வரைய
தானம் துளங்கித்தலை தடுமாறில் என் தண்கடலும்
மீனம் படிலென்; விரிசுடர் வீழிலென் வேலை நஞ்சுண்டு
ஊனமொன்றில்லா ஒருவற்கு ஆட்பட்ட உத்தமர்க்கே

(அப்பர் பதிகம் 112)

மேலும்,

விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகில் அவை ஒன்றும் இல்லையாம்
பண்ணிய உலகினில் பயின்ற பாவங்கள்
நண்ணி நின்றறுப்பது நமச்சிவாயவே

எப்படி விறகு, விண்ணுற அடுக்கி இருந்தாலும் அடியில் மூட்டிய தீ அவற்றையெல்லாம் பைபாசுக்கு ஒன்றுமில்லாமல் ஆக்கி விடுமோ அதுபோல இறைவன் திருவடியைப் பேணினால் வினைகள் தூசாகும் என்றார்.

இனி, சுந்தரமூர்த்தி நாயனார்,

ஓவணம்மேல் எருதொன்றேறும் ஓணகாந்தன் தளியுளார்தாம்
ஆவணம் செய்து ஆளும்கொண்டு அரை துகிலொடு பட்டு வீசிக்
கோவணம் மேற்கொண்ட வேடம் கோவையாக
ஆரூரன் சொன்ன
பாவணத் தமிழ பத்தும் வல்லார் பறையும் தாம் செய்த
பாவம் தானே

என்றும் பாடுகிறார்.

திருமூலர் வினைகளைப் பற்றிக் கவலையே படவேண்டாம். அவை சிவ ஞானிகளை ஒன்றும் செய்யா. வினை வழிபட்டாலும் மனத்தளவில் அவை ஒன்றும் செய்யா என்பதனைத் தெளிவுபட உறுதியாகச் சொல்கிறார்.

வான்நின்று இடிக்கில் ஏன்? மாகடல் பொங்கில் ஏன்?
கான் நின்ற செந்தீக் கலந்துடன் வேகில் ஏன்?
தான் ஒன்றி மாருதம் சண்டம் அடிக்கில் ஏன்?
நான் ஒன்றி நாதனை நாடுவன் நானே (2850)

எனவே, எத்தகைய துன்பம் வரினும் அவற்றைப் பொருட்படுத்த வேண்டியதில்லை. அவை எல்லாம் அடியாரை ஒன்றும் செய்யா. மேலும்,

ஆறு இட்ட நுண்மணல் ஆறே சுமவாதே
கூறு இட்டுக் கொண்டு சுமந்தறிவார் இல்லை
நீறு இட்ட மேனி, நிமிர்சடை நந்தியைப்
பேர் இட்டு, என் உள்ளம் பிரியகிலாவே (2849)

அதாவது நமக்கு உண்டான துன்பத்தை நாமே கழிக்க வேண்டும். ஆற்றில் வெள்ளம் வரும்போது பள்ளம் மேடு ஆகும்; வேறொரு வெள்ளம் வரும்போது முன் மேடாக இருந்தது பள்ளம் ஆகும்; பள்ளம் மேடாகும். எனவே, ஒவ்வொருவரும் தம் வினைகளை அனுபவித்தே ஆக வேண்டும். ஆனால் இறைவனையே எண்ணி இருப்பார்க்கு அவ்வினையினால் உண்டாகும் துன்பம் பற்றாது.

எனவே, தாம் செய்த வினைகளிலிருந்து தப்பிக்க முயல வேண்டும். அவ்வினை வரட்டுமே? அவை உம்மை மனத்தில் இறைவன்மேல் அசையாத நம்பிக்கை வையுங்கள். வினை தூசாகும். எனவே, பூ நாளும் தலை சுமப்பல், புகழ் நாமம் செவி கேட்க, நா நாளும் நவின்றேத்தப் பெறலாமே. நல்வினையே என்ற ஞானசம்பந்தர் வாக்கினை உன்னி, அவனடியில் சார்ந்து இருந்து வினையை வெல்வோமாக.

திருச்சிற்றம்பலம்

45. திருமந்திரமும் மானுட வாழ்க்கையும்



பா.அனுராதா, M.A. (Astro)
சென்னை

திருமந்திரம் சொல்லும் பொருளும்

இந்த ஒற்றைச் சொல்லை உச்சரித்தாலே போதும். ஒரு தெய்வீக அலை, அணுக்கள்தோறும் அடித்துவிட்டுப் போகும். தென்னகத்தில், சித்தர் மரபைத் தோற்றுவித்தவர் திருமூலர். ஐந்தாம் நூற்றாண்டைச் சார்ந்தவர். இவர் அருளிய நூலே திருமந்திரம் ஆகும். வைதிக நெறியும் தமிழ் நெறியும் கலந்து, 'திருநெறி' என்றொரு புதிய நெறியை அறிமுகப்படுத்துகிறது திருமந்திரம்.

கடவுள் வாழ்த்துப் பகுதியிலேயே ஒரு மாபெரும் கருத்துப் புரட்சியை நடத்தியிருக்கிறது திருமந்திரம். 'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்' என்ற முற்போக்குக் கருத்தை முன்மொழிந்திருக்கிறது. 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற கொள்கையே திருமூலரது வாழ்வின் நோக்கம். அதுவே அவர் அருளிய திருமந்திரத்தின் நோக்கம். மனிதனின் அறியாமையைப் போக்குவதே தன்னுடைய திருமந்திரத்தின் லட்சியமாகச் சொல்லி யுள்ளார் திருமூலர்.

பிரபஞ்சமே மூன்றில் அடக்கம்

மூன்றெழுத்தில் ஒரு சிறப்பிருக்கிறது. இந்தப் பிரபஞ்சமே மூன்றுக்குள் அடங்கியிருக்கிறது. விண்ணுலகம், மண்ணுலகம், பாதாள உலகம் என்று உலகங்கள் மூன்றாக விரிகிறது. படைத்தல், காத்தல், அழித்தல் என்பவையே மும்மூர்த்திகளின் முதன்மைத் தொழில்கள். விண்மீன்கள், கோள்கள், துணைக்கோள்கள் என வானத்திலுள்ள பொருள்கள் மூன்றாக உள்ளன. திட, திரவ, வாயு என்ற மூன்று நிலைகளில் உலகப் பொருள்கள் உள்ளன. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இவ்வுண்மையை எடுத்துக்காட்டியுள்ளது திருமந்திரம்.

மூன்றே பொருளாய் முடிந்தது அண்டம்
மூன்றே பொருளாய் முடிந்தது பிண்டம்
மூன்றே பொருளாய் முடிந்தது சீவன்
மூன்றே பொருளாய் முடிந்தது வாதமே (252)

அதைப்போல தமிழ்மொழியில் அடிப்படையான உயிரொலிகள் மூன்றே. அ, இ, உ என்பன. இவற்றிலிருந்தே பிற உயிரொலிகள் வளர்ந்தன. அகரம், உகரம், மகரம் ஆகிய மூன்று ஒலியின் கூட்டமைப்பே 'ஓம்' என்னும் வடிவமாகத் திருமந்திரம் உரைக்கிறது. ஓம் என்பதை பிரணவம் என்றும் ஓங்காரம் என்றும் கூறுவர். அ+உ+ம ஆகிய எழுத்துகளின் கூட்டணிதான் 'ஓம்' என்னும் ஓங்காரம். ஓம் எனும் சொல்லைச் சொல்லிப் பார்த்தால் மொழி; எழுதிப் பார்த்தால் எழுத்து; தியானித்தல் அதுவோர் மந்திரம். முக்தி அடைவதற்கான பாதை.

ஓங்காரத்திலிருந்து பஞ்சபூதங்கள், பஞ்சபூதங்களிலிருந்து பலவகை உடல்கள் தோன்றின.

மரணத்தையும் வெல்லும் ஆற்றல்

வாழ்வென்பது பிறப்புக்கும், இறப்புக்கும் இடையே விளையாடப்படுகிற சடுகுடு விளையாட்டு. சுவாசப் பைக்கும் காற்று மண்டலத்துக்கும் இடையேயான வர்த்தகமற்ற தொடர்பு. உலகத் துன்பங்களுக்கு மூலகாரணமே அறியாமைதான். அறியாமை எனும் இருள் மறைந்தாலொழிய இன்பம் ஏற்பட வழியே இல்லை. சிப்பிக்குள் முத்தாக - மண்ணுக்குள் வைரமாக ஏறக்குறைய உலகப் பொருள்கள் அத்தனையுமே ஏதோ ஒரு வகையில் மறைக்கப் பட்டுள்ளது. நிரந்தரமற்றது வாழ்க்கை. விலை மதிப்பற்ற உடல் செய்து, அதை நம்மிடத்தில் கொடுத்தனுப்பினான் இறைவன். நாமோ, அதை மருத்துவரிடம் ஒப்படைக்கிறோம். அளவான உணவு, அளவான போகம், அளவான தூக்கம், முறையான மூச்சுப்பயிற்சி இருந்தால் நம்மை நோய் மட்டுமல்ல; எமதர்மனே நெருங்கிட அஞ்சுவான்.

சாகாமல் இருப்பதற்குக் கல்வியுண்டு
சாக்காடு கொள்வதற்கும் விபரமுண்டு
சாவதும், வாழ்வதும் நம்மால் தானே

எனும் திருமூலரின் பாடலைப் படித்துப் பார்த்தால் மரணத்தையும் வெல்லும் ஆற்றல் நமக்கு உண்டு என்ற நம்பிக்கையைப் பெறலாம்.

இறைவனை அடையும் வழி

இறைவனை அடைவதற்கு வேதங்களோ, மந்திரங்களோ தெரிந்திருக்கத் தேவையில்லை.

யாவர்க்கும் ஆம் இறைவர்க்கொரு பச்சிலை
யாவர்க்கும் ஆம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்கும் ஆம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கும் ஆம் பிறர்க்கு இன்னுரை தானே

பசுவுக்குத் தழை தருவதும், பசியோடு வருபவர்க்கு ஒரு பிடி சோறு தருவதும், இனிய சொற்கள் பேசுவதன் மூலம் பிறரை மகிழ்விப்பதும் கூட வழிபாட்டு முறைகள் தான் என்பது திருமூலர் காட்டுகின்ற சித்தாந்தம்.

மூச்சுப்பயிற்சி

ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும்
காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை உதைக்கும் குறியது வாமே என்று (571)

நீண்ட நாள் வாழ வேண்டுமானால் சுவாசத்தைக் கட்டுப்படுத்தும் மூச்சுப் பயிற்சியை செய்ய வேண்டும் எனத் திருமந்திரம் விளக்குகிறது.

அன்பே சிவம்

அன்பே, வாழ்க்கையின் ஆணிவேர். இந்த பூமி இன்னும் சுழன்று கொண்டிருப்பதற்கு காரணம் அன்பே. அன்பு எங்கிருக் கிறதோ அங்கே தான் தர்மம் குடிகொண்டிருக்கிறது. திருமந்திரம், அன்பையே சிவனாகக் காண்கிறது.

அன்பு, சிவம் இரண்டென்பார் அறிவிலார்
அன்பே சிவமாவது

என்ற சொற்றொடர்கள் இதனை உணர்த்தும். அன்பை ஆதாரமாகக் கொண்டவர்களால் மட்டுமே இன்ப நிலையை அடைய முடியும். உலகிலுள்ள அனைத்தும் மாறிவிட்டன. அன்பைத் தவிர,

சிவலிங்கத்தின் தத்துவம்

கடல் சூழ்ந்த இவ்வுலகமும், பரந்து விரிந்து கிடக்கும் ஆகாயவெளியும், அறுபத்து நான்கு கலைகளும் லிங்க உருவமே. எல்லாம் சிவமயம் என்பது நாம் உணர வேண்டிய தத்துவம்.

மானுடர் ஆக்கைவடிவு சிவலிங்கம்
மானுடர் ஆக்கைவடிவு சிதம்பரம்
மானுடர் ஆக்கைவடிவு சதாசிவம்
மானுடர் ஆக்கைவடிவு திருக்கூத்தே (1726)

என்று மனிதஉடலைச் சிதம்பரமாகவும், சதாசிவமாகவும் குறிப்பிடுகிறது. ஒவ்வொருவருக்கும் அவரவர் உடலே சிவலிங்க மாகும். சிவன் உள்ளத்தில் இருப்பதால் உடல் சிவலிங்கம் தானே!

அறியாமை அறிவினும் மேலானது

உள்ளத்தில் தான் பிரபஞ்சமே உள்ளது. அங்கேதான் ஆதிபகவ னும் எழுந்தருளியிருக்கின்றான். இதைத்தான் திருமந்திரமும்,

தன்னை அறிந்தால் தனக்கொரு கேடில்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை அறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே அர்ச்சிக்கத் தானிருந்தானே

என்று ஞானிகள், இறைவனைத் தேட அறிவை பயன்படுத்து கின்றனர். ஆனால் இறைவனோடு தன்னை கலந்துவிட்டபின், அறியாமை உடையவராகி விடுகின்றனர். இந்த அறியாமை அறிவினும் மேலானது என்று தெரிவிக்கின்றது.

திருமந்திரத்தில் சில மந்திரங்கள்

யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
உடம்பை வளர்த்தேன், உயிர் வளர்த்தேனே
கல்லா அரசனும் காலனும் நேர்
உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
தன்னை அறிவான் தலைவனும் ஆகலாம்
தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை
அறிவுக்கு அழிவில்லை ஆக்கமும் இல்லை
அன்பே சிவம்
அஞ்சும் அடக்கென்பர் அறிவிலார்
காற்றைப் பிடி காலனை அடக்கு

திருமந்திரம், அனைவர் நெஞ்சையும் உருக வைக்கும். உண்மை களை உணர வைக்கும். எல்லோர் நெஞ்சிலும் இடம்பிடிக்கும். வாழ அஞ்சுவோரை வாழவைக்கும். சில கணநேரமாவது சிந்திக்க வைக்கும். மலையாய் இருக்கும் துன்பத்தை, பஞ்சாய் பறக்க வைக்கும் என்னும் நம்பிக்கையைத் தருகிறது.

போற்றி என்பார் அமரன் புனிதன் அடி
போற்றி என்பார் அசுரன் புனிதன் அடி
போற்றி என்பார் மனிதர் புனிதன் அடி
போற்றி என் அன்புள் விளங்க வைத்தானே (44)

தேவரும், அசுரரும், மக்களும், அன்பரும் தூயமனமுடைய ஈசனின் திருவடியை வாழ்த்தினார்கள். அதனைக் கண்ட நான், என் அன்பினால் ஏற்றித் தொழுது வணங்கினேன். ஈசன் என் நெஞ்சில் குடிகொண்டான். எனக்கு ஒளியாகக் காட்சியளிக்கிறான் என்னும் திருமூலர் வாக்கினை உணர்ந்து அவர்வழி வாழ்ந்து இன்பம் எய்துவோம்.

46. திருக்குறளும் திருமந்திரமும் - அதிகார வைப்பு ஒப்பீடு



முனைவர் இரா.சங்கரப்பன், M.A., B.Ed., DGT
சிவகாசி வட்டம்.
சென்னை-600042

முன்னுரை

உலக வரலாற்றில் கி.மு.6ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 2ஆம் நூற்றாண்டு வரையிலும் அரசியல், பண்பாடு, சமூகக் கட்டமைப்பு ஆகிய தளங்களில் மிகப்பெரும் மாற்றங்களை மனித சமூகம் எதிர்கொண்டது. அதன் விளைவாகச் சீனாவில் கான்பூசியசும், இந்தியாவில் திருவள்ளுவரும், திருமூலரும் கிரேக்க நாட்டில் பிளாட்டோ அரிஸ்டாட்டில் போன்ற தத்துவ அறிஞர்கள் தோன்றித் தங்களது மிகப்பெரும் படைப்புகளைத் தந்து மனித வரலாற்றில் நீங்காத இடம்பெற்றுள்ளனர்.

திருக்குறள்-திருமந்திரம் அதிகார ஒப்பீடு

தமிழ்நாட்டில் திருவள்ளுவரும், திருமூலரும் தோன்றி இந்தியத் தத்துவ மரபுக்குப் புதியகொடையை வழங்கியுள்ளனர். வள்ளுவர் இல்லறத்திலிருந்து கொண்டு துறவறத்திற்குப் பெருமை சேர்த்தார். இவ்விருவரும் அறக்கருத்துகளை எடுத்துரைப்பதில் பல்வேறு இடங்களில் ஒன்றுபடுகின்றனர். திருக்குறளில் உள்ள இருபத்தொரு அதிகாரத் தலைப்புகள் உள்ள திருமந்திரத்திலும் இடம் பெற்றுள்ளன. இவை தவிரச் சில அதிகாரத் தலைப்புகள் சில மாறுதல் களுடன் காணப்படுகிறது.

அதிகாரத் தலைப்பு	திருக்குறள் இயல்-அதிகாரம்	திருமந்திரம் தந்திரம்-அதிகாரம்
1. கடவுள் வாழ்த்து	பாயிரம்-1	1-18
2. வான் சிறப்பு	பாயிரம்-2	1-14
3. அன்புடைமை	இல்லறவியல்-8	1-18
4. நடுவுநிலைமை	இல்லறவியல்-12	1-23
5. பொறையுடைமை	இல்லறவியல்-16	2-24
6. பிறனில் விழையாமை	இல்லறவியல்-15	1ஆம் தந்திரம் 8
7. புறங்கூறாமை	இல்லறவியல்-19	8ஆம் தந்திரம் 30

8.	அருளுடைமை	துறவறவியல்-25	6ஆம் தந்திரம் 7
9.	புலால் மறுத்தல்	துறவறவியல்-26	1ஆம் தந்திரம் 7
10.	தவம்	துறவறவியல்-27	6ஆம் தந்திரம் 5
11.	வாய்மை	துறவறவியல்-30	8ஆம் தந்திரம் 38
12.	கொல்லாமை	துறவறவியல்-33	1ஆம் தந்திரம் 6
13.	துறவு	துறவறவியல்-35	6ஆம் தந்திரம் 4
14.	அவாஅறுத்தல்	துறவறவியல்-37	8ஆம் தந்திரம் 40
15.	ஊழ்	ஊழியல்-38	9ஆம் தந்திரம் 13
16.	கல்வி	அரசியல்-40	1ஆம் தந்திரம் 20
17.	கல்லாமை	அரசியல்-41	1ஆம் தந்திரம் 22
18.	கேள்வி	அரசியல்-42	1ஆம் தந்திரம் 21
19.	பெரியாரைத்துணைகோடல்	அரசியல்-45	2ஆம் தந்திரம் 25
20.	கள்ளுண்ணாமை	நட்பியல்-93	1ஆம் தந்திரம் 24
21.	நல்குரவு	குடியியல்-105	1ஆம் தந்திரம் 10

இவை தவிர வரைவின் மகளிர் திருமந்திரத்தில் மகளிர் இழிவு எனவும், கூடா ஒழுக்கம் என்பது அவ வேடம் எனவும், தீவினை அச்சசம் என்பது இயமை எனவும், ஈகை என்பது தானச்சிறப்பு எனவும், வினைத்தூய்மை நியமை எனவும் அரசதோடம் என்பது இறைமாட்சியுடன் ஒப்பிடத்தக்கது. நிலையாமை என்பது யாக்கை நிலையாமை, இளமை நில்லாமை, உயிர் நிலைமை, செல்வம் நிலையாமை என நான்காகப் பகுத்துணரப்படுகிறது.

கடவுள் வாழ்த்து

திருக்குறள், திருமந்திரம் இரண்டிலும் கடவுள் வாழ்த்தில் 'கடவுள்' என்ற சொல் இடம்பெறவில்லை. ஆயினும் திருமந்திரத்தில் கடந்து நின்றான் எங்கும் நின்றானே (14) எனக் குறிப்பிடுவதன்மூலம் கடவுள் என்ற பொருள் புலப்படுகிறது. திருக்குறளில் கூறப்படும் 'எண்குணத்தான் (குறள்-9) என்னும் சொல்லுக்கு ஒப்புநோக்கத்தக்கதாக உள்ளது.

திருமூலர் கூறும்

ஒன்று அவன்தானே; இரண்டு அவன் இன்னருள்
நின்றனன் மூன்றுவள்; நான்கு உணர்ந்தனன் ஐந்து
வென்றனன்; ஆறு விரிந்தனன்; ஏழு உம்பர்ச்
சென்றனன்; தான் இருந்தான்; உணர்ந்து எட்டே (17)

என்ற பாடலில் கூறப்படும் கடவுள் இயல்பும் ஒப்பு நோக்கத் தக்கது. திருக்குறளில் கூறப்படும் கடவுளின் பெயர்கள் சமயச் சார்பற்றவை. ஆனால் திருமந்திரத்தில் கூறப்படும் கண்ணுதலான், பிஞ்ஞகன் போன்ற பெயர்கள் சிவபெருமானைக் குறிப்பிடுகின்றன.

அறத்துப்பால் - இல்லறவியல்

(அ) திருக்குறளில் இல்லறவியலில் கூறப்படும் அன்புடைமை என்னும் அதிகாரத்தில் ''அன்பின் வழியது உயிர்நிலை'' என்று குறிப்பிடுவதன் மூலம் உலக வாழ்விற்கு அடிப்படை யாக அமைவது அன்பு ஒன்றே என்பது. ஆனால் திருமந் திரத்தில் அவன் அன்பினுள் ஆகி அமரும் அரும்பொருளே (279) என்று குறிப்பிடுவதன்மூலம் கடவுள் மாட்டு செலுத்தும் அன்பே உயிருக்கு அடிப்படை எனக் கூறப் படுகிறது.

(ஆ) நடுவுநிலைமை என்னும் அதிகாரத்தில் திருக்குறளில் கூறப் படும் செய்திகள் மானுடத்தின் தகுதி பற்றித் தெரிவிக்கிறது. இதற்கு ஆதாரமாக 'செப்பம் உடையான்', 'தக்கார் தகவிலார்', 'சான்றோன்', 'வாணிகம் செய்வான்', 'நன்றிக்ண் தங்கியான்' போன்ற சொற்களால் அறியலாம். ஆனால் திருமந்திரத்தில் கூறுவது எல்லாவற்றிற்கும் நடுநிலையாக விளங்கும் இறைவனைச் சார்ந்து நிற்றலே'' என்று பொருள்பட இருப்பதாக டாக்டர். ப.அருணாசலம் விளக்கமளிக்கிறார்.

(இ) குறளில் 'பிறனில் விழையாமை' என்னும் தலைப்பு 'பிறர் மனைநய வானம்' என்ற பெயரில் திருமந்திரத்தில் உள்ளது. குறளில் பிறனில் விழைவானைப் பேதை, செத்தவன் என்றும் பழி பாவம் அச்சம், இவனை விட்டு நீங்காது எனவும் கூறுகிறார். திருமந்திரத்தில் 'இனிய பலாச்சுளையை விடுத்து கேடு தரும். பழங்களை விரும்புவன் எனவும் இனிய பழங்களை உண்ணாமல் புளித்த பழங்களை விரும்புவன் எனவும் கூறுகிறார். இதன்மூலம் பேதைமையால் கேடு தேடிக் கொள்வான் எனக் கூறுவது ஒப்புநோக்கத்தக்கது.

(ஈ) பொறையுடைமை என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறுவது பிறர் மனம், வாக்கு, காயத்தால் தமக்குத் தீங்கிழைத்த போதிலும் பொறுத்துக்கொண்டு அறவா நிற்றலைக் குறிக்கிறது.

திறனல்ல தற்பிறர் செய்யினும் நோக்கொந்து
அறனல்ல செய்யாமை நன்று (157)

ஆனால் திருமந்திரம் இறைவனிடத்து ஒருங்கிக் கிடக்கும் யோக நிலையைக் குறிப்பதாக உள்ளது.

பற்றிநின்றார் நெஞ்சில் பல்லிதான் ஒன்றுண்டு
முற்றுக்கிடந்தது மூக்கையும் நாவையும்
தெற்றுக் கிடந்து சிதைக்கின்ற சிந்தையுள்
வற்றாது ஒழிவது மாகனம் ஆமே (539)

என்ற பாடலால் உணரலாம்.

புறங்கூறாமை என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் மனிதனின் தீய நடத்தையைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

அறனழீஇ அல்லவை செய்தலின் தீதே
புறனழீஇ பொய்த்து நகை (182)

ஆனால் ''திருமந்திரம் கூறும் புறங்கூறாமை ஒருவன், உபசாந்த நிலையை அடைந்தபின் அதனைப் பலருக்கும் கூறத் தலைப்பட்டு விடக்கூடாது'' என ப.அருணாசலம் கூறுகிறார்.

கறைமணி கண்டாரைக் காண்குற மாட்டார்
நிறையறிவோம் என்பர் நெஞ்சிலார் தாமே (2512)

''சிவானந்தத்தை உள்ளுணர்வால் அறியாதவர் அதனை அறிவோம் என்று பிறரிடம் கூறுவது போலாகும்'' என்கிறார்.

துறவறவியல்

திருக்குறளில் துறவறவியலில் கூறப்படும் அருளுடைமை என்பது ஒருவன் தன்னையொத்த பிறரிடமும், தன்னின் மெலியாரிடமும் கருணையுடன் நடந்து கொள்வதைச் சொல்கிறது.

மன்னுயிர் ஓம்பிஅருள் ஆள்வார்க்கு இல்லென்ப
தன்னயிர் அஞ்சும் வினை (244)

வலியார்மு தன்னை நினைக்க தான்தன்னி
மெலியார் மேற் செல்லுமிடத்து (250)

இவ்வதிகாரத்தில் வள்ளுவர் கூறுவது மனிதனின் ஈடேற்றம் திருமந்திரம் கூறுவது அடியாரின் ஈடேற்றம்

மன்னவை ராவதும் வானவ ராவதும்
அண்ணல் இறைவன் அருள்பெற்ற போதே (1650)

என்பதால் உணரலாம்.

புலால் மறுத்தல் மற்றும் கொல்லாமை

திருக்குறளில் துறவறவியலில் கூறப்படும் புலால் மறுத்தல் மற்றும் கொல்லாமைக்கும் திருமந்திரம் கூறும் புலால் மறுத்தல் மற்றும் கொல்லாமைக்கும் பெரிய வேறுபாடு ஏதுமில்லை. இறைவனுக்குரிய பூசை மலரைப் போன்றது கொல்லாமை என்கிறது திருமந்திரம்.

''மற்றோர் அணுக்களைக் கொல்லாமை ஒண்மலர் (197)

புலால் உண்பவர்களை எமதூதர்கள் கடுநரகில் வீழ்த்துகள் என்கிறது திருமந்திரம். திருக்குறளில் புலால் மறுத்தவனைத் தெய்வ நிலைக்கு உயர்த்திக் காட்டப்படுகிறது.

கொல்லான் புலால் மறுத்தானை கைகூப்பி
எல்லா உயிரும் தொழும் (260)

எனவே இவ்விரு குறள்களும் கொல்லாமை மற்றும் புலால் மறுத்தல் என்பது ஆன்மீக வாழ்வுக்கு அடிப்படை ஒழுக்கங்களை எடுத்துரைக்கின்றன.

தவம், துறவு, அவா அறுத்தல்

திருக்குறள் கூறும் தவம் உலக நன்மைக்காகத் தன்னலம் கருதாது செயலாற்றுவதைக் குறிக்கும்.

உற்றநோய் நோன்றல் உயிர்க்கு உறுமீன்செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு (261)

இவ்வுலகில் நம்மிடையே வாழ்ந்த வள்ளலார் மற்றும் காந்தியடிகள் போன்றோர் இத்தகைய தவத்தினை மேற்கொண்டு மக்களை நல்வழிப்படுத்தினர்.

திருக்குறள் கூறும் துறவு தவத்திற்கு ஆணிவேர் போன்றது. 'இயல்பாகும் நோன்பிற்கு ஒன்றும் இன்மை' (குறள் 344) எனக் கருதுகிறது. எதன் மீதும் பற்றற்று இருப்பதே தவநெறியின் அடிப்படையாகும். ஞானிகளுக்குத் தவமும் துறவும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாக உள்ளன.

அவா அறுத்தல் என்பது பிறவி அறுத்தலுக்கு வித்தாக வள்ளுவர் கூறுகிறார். 'அவா என்ப எல்ல உயிர்க்கும் எஞ்ஞான்றும் தவாஅப் பிறப்பு ஈனும் வித்து (குறள் 361) என்பதால் விளங்கும். திருமந்திரமும் இதனையே தெளிவுப்படுத்துகிறது. 'துறந்தவர் தம்மைப் பிறவி அறுத்திடும் பித்தன் கண்டீர்' எனவும் திருவருள் பெற்ற வரல்லால் இம்மாதவத்தின் இயல்பறியாரே எனக் கூறுவதிலிருந்து விளங்கும்.

வாய்மை

திருக்குறளில் இவ்வதிகாரம் துறவறவியலில் வைக்கப் பட்டுள்ளது. வாய்மை என்பதற்கு இலக்கணமாக

வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல் (291)

என்ற கூறுகிறது. ஆனால் திருமந்திரம் வாய்மை என்பதற்கு இறைவனை உண்மையோடு நேசிப்பது எனக் கூறுகிறது.

''மெய் கலந்தாரொடு மெய்கலந்தான் தன்னை' (2600) என்ற பாடல்வரி மூலம் அறியலாம். திருவள்ளுவர் கூறும் வாய்மை உலகியல் சார்ந்தது; திருமூலர் கூறும் வாய்மை இறையுணர்வு சார்ந்தது என்பது புலனாகிறது.

ஊழ்

திருக்குறளில் ஊழ் என்னும் சொல் ஆகூழ், போகூழ் மற்றும் இழவூழ், ஊகவூழ் எனக் கூறப்படுகின்றது. ஊழின் ஒருவகை ஆக்கம் தருவது; மற்றொரு வகை நீக்கம் தருவது என இரண்டாகப் பாகுப்படுத்தப்படுகின்றன. ஊழ் என்ற சொல் தெய்வம் நியதி, பால், விதி, வினை, உண்மை, முறை, பொறி என்று பல்வேறு பொருளில் குறிக்கப்படுவதாகச் சுடலி தியாகராசன் கூறியுள்ளார். இந்தியத்

தத்துவ மரபில் கூறப்படும் வினைப்பயன், பிறவிப் பயன் போன்ற கோட்பாடுகள் இதனுடன் இணைந்து சிந்திக்கப்படுகின்றன. திருமூலர் கூறும் இறைவனே கருமத்தின் பயனை உயிர்கட்கு ஊட்டுகின்றான் என்ற கருத்தின் அடிப்படையில் கூறுகிறார் என ப.அருணாசலம் கூறுகிறார். மேலும் இறைவனைச் சார்ந்து நிற்கின்ற ஞானிகள் புறத்தாக்குதலுக்கு ஆளாவதில்லை எனவும் கூறுகிறார்.

வித்தகன் நந்தி விதிவழி அல்லாது
தத்துவ ஞானிகள் தன்மை குன்றா ரன்றே (2847)

பொருட்பால்

கல்வி, கல்லாமை, கேள்வி : தமக்கும் பிறருக்கும் இன்பம் தருவதே கல்வியின் பயன் என வள்ளுவர் கூறுகிறார்.

தாம் இன்புறுவது உலகுஇன் புறக்கண்டு
காமுருவர் கற்றறிந் தார் (399)

என்ற குறளின் மூலம் அறியலாம்.

ஆனால் திருமந்திரம் கூறும் கல்வியின் பயன் வேறுபட்டது.

நிற்கின்ற போதேநிலை உடையான் கழல்
கற்கின்ற செய்மின் கழிந்துஅறும் பாவங்கள் (292)

இதன் மூலம் உயிர் உள்ளபோதே உறுதிப்பொருளான இறைவன் கழல் பற்றிக் கொண்டு இறைஞானத்தைப் பெற வேண்டும் எனக் குறிப்பிடுகிறார். கல்லாமை குறித்து வள்ளுவர் கூறுமிடத்து ''கல்லாத ஒருவன் களர் நிலத்திற்குச் சமம்'' எனவும் ''மானிடப் பிறவிக்குப் பயன் தருவது கல்வி ஒன்றே'' எனவும் குறிப்பிடுகிறது. ஆனால் திருமந்திரம் கூறும் கல்லாமை வேறுபட்டது.

எல்லா உயிர்க்கும் இறைவனே ஆயினும்
கல்லாதார் நெஞ்சத்து காணஒண் ணாதே (312)

இப்பாடல் வரிகளால் திருமந்திரம் கூறும் கல்லாமை இறைவனை மெய்யாக உணராமை என்பதாகக் குறிக்கப்படுகிறது. அடுத்ததாக வள்ளுவர் கூறும் கேள்வி என்பது நல்லறங்களை அறிவுடையோர் வாயிலாகக் கேட்டு உணர்தல் ஆகும் என்பது

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும் (416)

என்பதால் உணரலாம். ஆனால் திருமந்திரம் கூறும் கேள்வி என்பது தேவர்பிரானின் திறனைக் கேட்டு அறிதலைக் குறிக்கிறது.

உறுதுணை ஆவது உயிரும் உடம்பும்
உறுதுணை ஆவது உலகுவது கேள்வி
செறிதுணை ஆவது சிவனடி சிந்தை
பெருதுணை ஆவது கேட்கின் பிறப்பு இல்லை தானே (307)

என்னும் பாடல் வாயிலாக உணரலாம்.

அரசியல் கண்ணோட்டம் - திருமூலரும் வள்ளுவரும்

இந்திய தத்துவ மரபில் இறைவனின் அம்சமாக நாடு காக்கும் அரசனையும் கருதுவது மரபு ஆகும். இதனைத் 'திருவுடையாரைக்

கண்டால் திருமாலைக் கண்டேனே' என அடியார்கள் கூறுவதும், முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறையென்று வைக்கப்படும் (குறள் 388) என வள்ளுவர் கூறுவதும் சான்றாகும்.

திருமந்திரம் பக்தி இலக்கியமாகக் கருதப்படினும் உலகியல் சார்ந்த பல்வேறு கருத்துகளையும் கூற முற்படுகிறது. இராசதோடம் என்னும் அதிகாரத்தில் (முதலாம் தந்திரம் 13ஆவது அதிகாரம்) அசியல் குறித்துக் கூறுவதன் மூலம் திருமூலருக்கு அரசு குறித்த தெளிவான பார்வை உள்ளது புலனாகிறது. ஆன்மிக உணர்வு சிறந்து விளங்கும் நாட்டில் அமைதியும் நீதியும் நீங்காது இருக்கும் எனக் கருதினார். நாடுகளுக்கிடையே போர்கள் நிகழ்வதால் தறிகெட்டு, வறுமை மிஞ்சி, தாழ்வுற்று மக்கள் துன்புறுவர் எனவும் கேடு பயக்கும் எனவும் கருதினார். இதனை

வேந்தன் உலகை மிகநன்று காப்பது
வாய்ந்த மனிதர்கள் அவ்வழியா நிற்பர்
போர்ந்து இவ்வுலகைப் பிறர்கொனத் தாங்கொள்ளப்
பாய்ந்த புலியன்ன பாவகந் தானே (245)

எனக் கூறுவதன் மூலம் உணரலாம். இதனை வள்ளுவர் கூறுமிடத்து அரசன் தகுதிகளாகக் குறிப்பிடுவது யாதெனில்,

கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்
உடையனாம் வேந்தர்க்கு ஒளி (390)

எனக் குறிப்பிடுகிறார்.

முடிவுரை

சமயவழி நின்று மன்னுயிர்க்கு அறத்தினைக் கூறியவர் திருமூலர். உலகியல் வழிநின்று மன்னுயிர்க்கு அறத்தினைக் கூறியவர் திருவள்ளுவர். இவ்விரு பெருமக்களும் தோன்றிய தமிழ்கூறு நல்லுலகம் ''நற்றவ வானினும் நனி சிறந்ததுவே'' எனப் பெருமை கொள்வோமாக.

துணைநூல்கள்

1. திருக்குறள் - உரைக்களஞ்சியம் - ச.தண்டபாணி தேசிகர், மதுரைப் பல்கலைக்கழகம்.
2. திருக்குறள் - புதிய உரை - புலியூர்க் கேசிகன் மணிவாசகர் பதிப்பகம்.
3. திருமந்திரம் - அ.மாணிக்கம் - வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.
4. பன்னிரு திருமுறை - முனைவர் ச.வே.சுப்பிரமணியன் - மணிவாசகர் பதிப்பகம்.
5. திருமந்திரக் கோட்பாடு - டாக்டர் ப.அருணாசலம் - முல்லை நிலையம், சென்னை.
6. பண்பாட்டுப் பார்வையில் திருமந்திரம் - முனைவர் சுடலி தியாகராசன் - உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

47. திருமூலர் திருமந்திரத்தில் சிவதொன்மம்



து. அருண்பாண்டியன்
முனைவர் பட்ட ஆய்வாளர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி, சென்னை.

முன்னுரை

சிவபெருமானை முழுமுதற் தெய்வமாக வழிபடும் சமயம் சைவசமயம். இந்தியாவில் உள்ள இரு பெரு சமயங்களில் சைவசமயமும் ஒன்று. இச்சமயம் பழங்காலச்சிந்து சமவெளிநாகரிகத் திற்கு முந்தைய இலிங்க வழிபாட்டின் தொடர்ச்சியே சிவவழிபாட்டுச் சமயமான சைவம். மேலும் சிந்துசமவெளி நாகரிகத்தில் லிங்கவழி பாட்டிற்கான சான்றுகளும் கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. கிரேக்க, சீனவழிபாடுகளிலும் மற்றும் சிலநாடுகளிலும் இலிங்கவழிபாடு இருப்பதையும் எண்ணிப் பார்க்கவேண்டியுள்ளது. இந்தியாவிலிருந்தே அவ்வழிபாடு பரவியிருக்க வேண்டும். அத்தகைய பழம்பெரும் சமயம் தமிழரின் சைவசமயம். சங்க இலக்கியத்திற்கு அடுத்துத் திருமூலர் திருமந்திரத்தில் சிவபெருமான் குறித்த தொன்மம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் அடுத்தகட்டமாக இத்தொன்மங்கள் பக்தி இயக்க காலத்தில் விரிவடைந்து பழந்தமிழரின் சமய மறுமலர்ச்சிக்கு வகை செய்தன. அத்தகைய திருமூலர் திருமந்திரத்தில் குறிப்பிட்டுள்ள சிவதொன் மங்களைப் பற்றி விரிவாகக் காண்போம்.

சைவம்

ஆரியரின் வருகைக்குமுன்னர்பழந்தமிழரின் வழிபாடு விரிசடைக் கடவுளான சிவபெருமான், முருகன், மாயோன் (திருமால்), கொற்றவை என்ற நிலையில் வழிபடப்பட்டுவந்தது. பின் ஆரிய வருகைக்குபின் சில நூற்றாண்டுகள் வேள்வி சடங்குகள், கிரியைகள் என அரசரும் மக்களும் மோகம்கொண்டு தேவ வழிபாட்டில் மிருக பலி கொடுத்து வந்தனர். இதனை துறவிகள் என்னும் சமணம் சமயம் எதிர்த்து வந்தது. இந்நிலையில் புத்தர்தோன்றி ஆரியரின் மிருக பலி வேள்வியைக் கண்டித்து பௌத்த சமயத்தை உண்டாக்கிதம் சமயத்தைப் பரப்பினார். இந்தியா முழுமையும் பௌத்தமும் சமணமும் வழிபாட்டிற்கு வந்தது. இந்நிலையில் ஆரியரின் சமயம் மட்டுமல்லாது பழந்தமிழரின் சமயமும் நலிவுற்றது. சில நூற்றாண்டுகளுக்குப் பிறகு பழந்தமிழரின் சமயமும் ஆரியரின் சமயமும் இணைந்து புதியதான

வேதசமயத்தை உண்டாக்கின. பக்தி இயக்கம் தொடங்கி சமண பௌத்த சமயங்களை ஒடுக்கிப் புதியதான மறுமலர்ச்சியோடு சைவ சமயம் நிலைப்பெற்றது. அத்தகையநிலைப் பாட்டிற்கு அடித்தறமாக அமைந்தது திருமந்திரம். திருமந்திரம் முழுமையான யோகநூலாக இருந்தமையால் அதனை பத்தாம் திருமுறையில் வைக்கப்பட்டது. எனினும் சிவபெருமானின் தொன்மத்தை எடுத்துக் காட்டியசைவநூல் திருமந்திரம்.

சிவபெருமான் தொன்மம்

தொன்மம் என்பது புராண பழங்கதைகளைக் குறிக்கும் கலைச்சொல் ஆகும். சிவபெருமான் பெரும்பான்மைதிருத்தலத்தில் மூலவர் இலிங்க திருமேனியில் வழிபடப்படுகிறார். இது தொன்மையான வழிபாட்டு வழக்கத்தின் தொடர்ச்சிஎனக் கருதலாம். உற்சவர் ஐம்பொன் சிலைகள் உருவத்தோடு வழிபடப் படுகிறது. சிவன் திருவுருவம் சடைமுடியோடு பிறைச்சந்திரன் மற்றும் தலையில் கங்கையை வைத்துக்கொண்டு உருத்திராட்ச மாலைகளையும் பாம்புமாலைகளையும் அணிந்து மயான சாம்பல் தரித்து புலியாடை உடுத்தி முக்கண்ணோடு ஒரு கரத்தில் சூலத்தோடு உடுக்கை ஏந்தியும் ஒரு கரத்தில் அருளாசி வழங்கியும் மற்ற இருகரத்தில் மானும் தீயை ஏந்திய விதமாக காட்சியளிப்பதாக தொன்மங்கள் காட்டுகின்றன. சிவபெருமானின் தோற்றம் பழங்கால இறைவன் என்பதைக் காட்டுகிறது. இயற்கையும் எளிமையுமான சிவனின் திருவுருவத்தைத் தேவார திருவாசகம் நெஞ்சுருகப் பாடுகிறது. திருமந்திரத்தில் இரண்டாம் தந்திரத்தில் சிவபெருமானின் தொன்மம் பற்றிஎடுத்துரைக்கிறது.

முப்புரம் எரித்தல்

இரும்புகோட்டை, தங்ககோட்டை, வெள்ளிக்கோட்டை ஆகியவற்றை வானத்தில் மிதக்கச் செய்து வாழ்ந்து வந்த அரக்கரைவதைத்து மூன்று உலோககோட்டைகளைச் சிவபெருமான் எரித்ததை,

'திரிகின்றமுப்புரஞ் செற்றபிரானை' (இர.தந் 348)

என்று முப்புரத்தை அழித்த புராணத்தை திருமூலர் பதிவு செய்துள்ளார்.

மூவரில் முதல்வன்

அடைவதற்கு அரிய வனல்ல எளியவன் என்று தொடங்கி மும்மூர்த்திகளில் இருவரான அரி, அயன் சிவபக்தர்கள் என்பதைத் தெரிவித்து சிவவழிபாட்டினால் திருமால் சக்கரப்படையைப் பெற்றதும் நான்முகன் வாளைப் பெற்றதையும்,

'ஆழி கொடுத்தனன் அச்சுதற்க் கவ்வழி
வாழிபிரமற்குவாள் கொடுத்தானே' (இர.தந் 349)

என்று சிவபெருமானின் சூலாயுதத்திற்கு இணையான சக்கரப் படையைத் திருமால் பெற்று அசுரப்படையை அடக்கும் வல்லமைப் பெற்றதையும் நான்முகன் பெற்றபயனையும் திருமூலர் குறிப்பிடுகிறார்.

இராவணன் கர்வம் அழிதல்

இராவணன் பத்துதலைகொண்டசெறுக்காலும் சிவபெருமானிடத்து பெற்றவரத்தாலும் தன் ஆற்றலை பரிசோதிக்க இமயமலையை இருபது கரங்கலால் தூக்கியபோது சிவபெருமான் தம்பக்தனின் பிழைப் பொறுத்து அவனது செறுக்கை அகற்ற இமயமலையைத் தம் காலால் அழுத்த இராவணன் கரம் அகப்பட்டு துடித்தான். பின் இராவணன் செருக்கு அழிந்துதம் உடல் அங்கங்களால் வீணை செய்து சாமகானம் இசைத்தான். இதனால் இராவணனை விடுவித்து அருள் செய்ததான புராணத்தை,

'தாங்கி இருபதுதோளுந் தடவரை' (இர.தந் 350)

என்று திருமந்திரத்தில் குறிக்கப்படுகிறது.

சண்டீசன்

சண்டீசன் எனும் சிவபக்தன் மண்ணால் செய்யப்பட்ட இலிங்கத்திற்கு நாள்தோறும் பால்கொண்டு நீராட்டி வழிபட்டு வந்தான். இதனை கண்ட சண்டீசன் தந்தைமண் இலிங்கத்தை காலால் சிதைத்தார். இப்படிசிவ வழிபாட்டிற்கு ஊறு விளைவித்ததம் தந்தையின் காலை மழுவால் வெட்டினார். இந்நிகழ்வைக் கண்ட சிவபெருமான் சண்டீசனுக்கு தொண்டர் தலைமையை நல்கிக் கயிலாயத்திற்கு அழைத்துச் சென்றார். இந்நிகழ்வு,

உறுவதுஅறிதண்டிஒண்மணற் கூட்டி
மறுமழுவால்வெட்டிமாலைப் பெற்றானே (இர.தந் 351)

என்று திருமந்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் திருமந்திரத்தில் நாயன்மார்களில் ஒருவரான சண்டீசன் பக்தியைமட்டுமே குறிப்பிடுகிறது.

அடி முடி தேடல்

ஒருகாலத்தில் விட்ணுவுக்கும் நான்முகனுக்கும் தம்மில் யார் முதல்வன் என்று போரிட்டுக் கொண்டு இருந்தனர். அச்சமயத்தில் சோதி வடிவில் இலிங்கம் ஆகாயம் நோக்கியும் கீழ்நோக்கியும் விரிந்து காட்சியளித்து. இந்நிலையில் அரிபன்றி உருவம் எடுத்து அந்த சோதியின் அந்தத்தைகாணச் சென்றார். நான்முகன் அன்னத்தில் அமர்ந்து அச்சோதியின் ஆதியைக் காணச் சென்றார். பலகோடி ஆண்டுகள் கழிந்தும் அச்சோதியின் ஆதி அந்ததை அரிஅயனால் காண முடியவில்லை. இந்நிலையில் சிவபெருமான் தோன்றி மூவரும் ஒரே தன்மையானவர்கள் என கூறுவதாகப் புராணங்கள் கூறுகிறது.

இச்செய்தியைத் திருமூலர் ஆதி அந்தத்தைக் காண முடியாத ஆதி தெய்வம் என்பதை,

பரமன் அனலாய்ப் பரந்துமுன் நிற்க
அரனடிதேடிஅரற்றுகின் றாரே (இர.தந் 372)

என்று காட்டி பிரம்மத்தின் அடிமுடியை காண்பது இயலாது என்பதை அறிவித்து அரி அயனுக்கெல்லாம் தலைவன் என்பதைகுறிப்பிடுகிறார்.

நீலகண்டன்

தேவரும் அசுரரும் அமுதம் பெறுவதற்காக மந்தரமலையை மத்தாகவும் வாசுகியைக் கயிராக கொண்டு பாற்கடலைக் கடைந்தனர். அதில் ஆலகால நஞ்சு வெளிப்பட்டது அதன் தாக்கத்தைத் தேவர்களாலும் அசுரலாலும் தாங்க முடியவில்லை. இதனால் அல்லலுற்ற தேவர்கள் சிவனைத் துதித்து நிலைமையை சரி செய்ய வேண்டினர். சிவபெருமான் அந்தஆலகால நஞ்சை அருந்தி தம் கண்டத்தில் நிறுத்திக்கொண்டு பிரபஞ்ச அழிவினைத் தடுத்தார். அதனால் நீலகண்டன் என்று அழைக்கப்பட்டார். நஞ்சுக்கு பின் வந்த அமுதம், செல்வம், எனப் பல்வகைப் பொருட்களைத் தேவரசுரர்கள் பங்கிட்டுக் கொண்டனர். இதனைத் திருமூலர்,

ஓடிவந்தெல்லாம் ஒருங்கியதேவர்கள் (இர.தந் 352)

என்றும் குறிப்பிட்டு பின் சிவபெருமானின் கண்டம் கருத்தமுகம் அதோமுகம் எனக் குறிப்பிட்டு கண்டம் கருத்தது நஞ்சால் விளைந்தது மட்டுமின்றி உலகமக்களின் குற்றங்களைப் பொறுத்ததினால் தான் என்பதினையும்,

அண்டமோடென்டிசைதாங்கும் அதோமுகம்
கண்டங் கறுத்தகருத்தறிவாறில்லை (இர.தந் 521)

என்றும் குறிப்பிடுகிறார்.

தக்கன் வேள்வி

பிராஜபதிதக்கன் தம் தந்தையின் ஆலோசனைப்படி சிவ பெருமானுக்கு தன்மகள் சதியை திருமணம் செய்துவைத்தான்.தக்கன் ஒருசமயத்தில் யாகசாலையில் வரும் போதுசிவன் எழுந்து வரவேற்காததால் 'சிவனுக்குஅவிர்பாகம் தரப்பாடாது' எனசாபமிட்டான். இதனைஎதுவும் பொருட்படாதுசிவன் அமைதிகாத்தார். பின் பலவேலை களில் சிவனைஅவதூறு பரப்பிவந்தார். மேலும் சிவனின்றி யாகத்தை செய்து நடத்தி வந்தான். தம் தந்தைநடத்தும் யாகத்தை பார்க்க வந்த சதிதக்கன் சிவனைப் பற்றிய இழிச் சொல்கைக்க கேட்டு யாகத்தீ புகுந்து மரணமடைகிறாள். இதனால் கோபமுற்ற சிவன் தன் சடையால் உருவாகிய வீரபத்ரனையும் விசயாவையும் அனுப்பி தக்கனைவதைத் யாகத்தையும் அங்குள்ள தேவர்களையும் தண்டிக்க அனுப்பினர். அங்குள்ள தேவர்களின் அங்கங்கள் சிதைக்கப்பட்டன.

விட்ணுவின் அயுதங்கள் பலனற்றுப் போயின. தக்கன் சிரம் கொய்யப் பட்டது. பின் அரியும் அயனும் சிவனிடம் மன்னிப்புகேட்டுசிவனிடம் தக்கனைஉயிர்பிக்கவேண்டினர்.பின் தட்சன் சிவபக்தன் ஆனான். இப்புராணச் செய்தியினை,

தந்தைபிரான்வெகுண் டான்தக்கன் வேள்வியை (இர.தந்353)

என்றபாடல் முதல்

விளிந்தானதுதக்கன் வேள்விவீயச்
சுளிந்தாங் கருள்செய்த தூய்மவழியானே (இர.தந் 361)

என்றபாடல் வரை 8 பாடல்கள் தக்கனின் வேள்விகுறிப்பிடப்படுகிறது.

நான்முகன் சிரம் கொய்தல்

ஒருசமயத்தில் பிரம்மனின் ஆணவம் கொண்ட ஐந்தாவது தலை அரக்கர்களுக்கு உதவுவதாகக் கூறி தேவசுரர் போருக்கு அரைகூவல் விடுத்தது. இதனைஅறிந்தசிவன், ஐந்து தலையோடிருத்த பிரம்மனின் ஒருசிரத்தைக் கொய்து அதனைக் கீழேவிட்டால் உலக அழிவு ஏற்படும் என்பதால் அதனைத் தம் கரத்தில் ஏற்றுக்கொண்டார். இத்தன்மையால் விண்ணவரும் செருக்குறாதவண்ணம் வகைசெய்ததை,

நண்பழியாளனைநாடிச்சென் றச்சிரம்
விண்பழியாதவிருத்திகொண் டனே (இர.தந் 366)

என்றுபதிவுசெய்துள்ளார்.

சிவனின் ஆணை

சிவபெருமான் தேவர்களைக் காத்து அசுரனின் தீச்செயலை ஒடுக்கும் வண்ணம் ஆறுமுகனைதம் நெற்றிக்கனலால் பிறக்கச் செய்து அசுரரை வதைக்க ஆணைப் பிறப்பித்ததை,

அம்பவளமேனிஅறுமுகன் போயவர்
தம்பகைகெல்லென்றதற்பரன் தானே (இர.தந் 520)

என்றுகுறிப்பிட்டு சூரபத்மன் வதம் பற்றி கூறப்பட்டுள்ளது.

நிறைவாக

திருமந்திரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள சிவபெருமான் குறித்த தொன்மங்கள் சிவபெருமானேதனிப் பெருங்கடவுள். பிரபஞ்சத்தை படைத்துகாத்து அழித்துவருபவர். அரிஅயனால் வழிபடக்கூடியவர். எனக்குறிப்பிட்டு ஆலகாலநஞ்சில் உண்ணுதல்,தக்கன் யாகம் அழிதல், பிரம்மன் தலைகொய்தல், இராவணனைத் தண்டித்தல், ஆதிஅந்தமற்ற சோதிரூபம், சண்டீசன் வரம், ஆறுமுகன் என்ற தொன்மங்களைக் குறிப்பிட்டு சைவ சமயத்தின் மேன்மையை எடுத்துரைக்கிறார். மேலும் இத்தொன்மங்கள் பக்தி இயக்ககாலத்தில் சமய மறுமலர்ச்சிக்கு வகைசெய்தன.

48. திருமந்திரம் கூறும் இல்லற வாழ்க்கை



திருமதி.து.பத்மபிரியா எம்.ஏ.,எம்.பில்.
மனை எண்: 47/3A, கலைஞர் சாலை,
அதியமான் நகர், சம்பந்தமூர்த்தி அவின்யூ,
செவிலிமேடு, காஞ்சிபுரம் - 631502.
அலைபேசி : 9884078392
மின்னஞ்சல் : padmapriya27051976@gmail.com

முன்னுரை

உலகத்தையும், உலகஉயிர்களையும் ஆட்டுவிப்பவனே இறைவன். 'அவனன்றி ஓரணவும் அசையாது' என்பது ஆன்றோர்வாக்கு. ஈரேழு உலகமாயினும் அவற்றின்கண் நடக்கும் அத்துணை செயல்களுக்கும் காரணகர்த்தா இறைவன் ஒருவனே. இறைவனின் படைப்பில் மிகச்சிறந்த படைப்பு மானிடப்படைப்பே. ஏனெனில் ஐந்தறிவு உயிரினங்களுக்கு இல்லாத ஒரு சிறப்பு, ஆறாவது அறிவைப் பெற்றிருக்கும் மனிதனுக்கு உள்ளது. அதுஎன்னவென்றால் அதுவே மனம், சொல், செயல், மனம் என்ன நினைக்கின்றதோ, அதையே வாய் சொல்லுகிறது. அதன் வழியே பிற உறுப்புகள் இயங்குகிறது. அத்தகைய சிறப்பு வாய்ந்த பிறவியே மனித பிறவி. இத்தகு சிறப்பு வாய்ந்த ஒன்றைத் தந்தருளிய இறைவனை என்றென்றும் மறவாமல் அவனை நினைப்பதே இறைவனுக்குச் செய்யும் நன்றி கடனாகும்.

அரிது அரிது மானிடராய்
பிறத்தல் அரிது - அதிலும்
ஊன் குருடு செவிடுபேடு நீங்கி
பிறத்தல் அரிது.

என்பது ஔவையார் வாக்கு. இத்தகு மனிதப்பிறப்பில் இறைவனை உணர்ந்த பல அடியவர்கள் இறைவனைப் பல்வகையில் பாடல்களை இயற்றி அவற்றைப் பக்தி இயக்க பாடல்களாக உலகிற்குத் தந்தனர். அவர்கள் வரிசையில் சைவம், வைணவம், பௌத்தம், சமணம் என்ற பல மதங்கள் தோன்றிடினும் சைவமும், வைணவமும் தமிழகத்தின் இருகண்களாக திகழ்ந்தன. அவர்களிடையே சித்தர்கள் எழுதிய நூல்களும் வெளிவந்தன. பெரும்பாலும் சித்தர்கள் சிவனையே தெய்வமாக வணங்கினர். அவர்களில் திருமூலர் என்னும் சித்தர் மிகவும் சிறந்தவராகத் திகழ்ந்தார். சித்தர்கள் பதினென்மர் என்பர். ஆனால் ஆராய்ச்சியாளர்கள் ஆய்ந்ததில் சித்தர்களின் எண்ணிக்கை ஐம்பதுவரை எட்டியுள்ளது என்பர். பதினெண் சித்தர்கள் என்பவர்கள் பின்வருமாறு

1. திருமூலர்	7. கமலமுனி	13. சட்டைமுனி
2. இராமதேவர்	8. போகர்	14. சுந்தரானந்தர்
3. கும்பமுனி	9. மச்சமுனி	15. குதம்பை
4. இடைக்காடர்	10. கொங்கணர்	16. கருவூரார்
5. தன்வந்திரி	11. பதஞ்சரி	17. கோரக்கர்
6. வான்மீகர்	12. நந்திதேவர்	18. பாம்பாட்டி

இவர்களில் திருமூலர் என்னும் சித்தர் எழுதிய திருமந்திரம் என்னும் நூலே மிகவும் புகழ்பெற்றதாக திகழ்கிறது. அவர் தம்முடைய நூலில் பலவகை வாழ்க்கைத் தெளிவுகளைப் பற்றி அளித்துள்ளார். அதில் இல்லறவாழ்விற்கென்று உரைத்த சில பாடல்களை மட்டும் இவ்வாய்வில் காண்போம்.

திருமந்திரம் எழுதிய சித்தர் வரலாறு

திருமூலர் பதினெண் சித்தர்களில் ஒருவர். இவர் கயிலையில் நந்தியம் பெருமானிடம் ஞான நூல்களைப் பயின்றவர். வடநாட்டிலிருந்து தென்நாட்டிற்குப் பல தலங்களையும் வழிபட்டு வருகையில் திருவாவடுதுறை வந்தடைந்தார். அங்கு மூலன் என்பான் ஆநிரை மேய்த்துக் கொண்டிருந்தபோது உயிர் துறந்தான். பிணமாகக் கிடந்த அவன் நிலையைக் கண்டு பசுக்கூட்டம் கலங்கி அழுதது. அவற்றின் துன்பத்தைத் துடைக்க எண்ணிய ஞான போகர் கூடுவிட்டுக் கூடுபாயும் ஆற்றலினால் மூலனது உடலிற்புகுந்து அவனுக்கு உயிர்தந்தார். அதுகண்ட பசுக்கூட்டம் துயர் நீங்கியது. பின் அவ்வூரிலே தங்கித் தவம் புரிந்தார். அவருடைய மூலஉடலை எங்குத் தேடியும் காணமுடியாதலால் மூலன் உடலிலேயே தங்கித் திருமூலர் எனப் பெயர் பெற்று ஆண்டுக்கு ஒரு பாடலாக 3000 பாடல்களை அருளி இறுதியில் திருவாவடுதுறையிலேயே இறைவனடி எய்தினார் என்பர். அவர் அருளிய இப்பாடல்களே 'திருமந்திரம்' என வழங்கலாயிற்று. இது, 'திருமந்திரமாலை' என்றும் 'தமிழ் மூவாயிரம்' என்று அழைக்கப்பெறும்.

'நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்' எனத் திருத்தொண்டத் தொகையில் சுந்தரர் ஈடுபாட்டுடன் திருமூலரைப் பெரிதும் பாராட்டி யுள்ளார். 'மூன்று பத்து மூன்றையு மூன்று சொன்ன மூலனே' எனச் சிவவாக்கியர் புகழ்ந்துரைக்கின்றார். (301)

சக்கர வர்த்தி தவராக யோகியெனும்
மிக்க திருமூலனருள் மேவுநாள் எந்நாளோ!

என்று தாயுமானவர் போற்றுகின்றார். பன்னிரு திருமுறைகளுள் திருமந்திரம் பத்தாம் திருமுறையாக இடம் பெற்றிருப்பதை நோக்கின் இந்நூலின் சிறப்பினை உணரலாம். திருமூலர் மொத்தம் எண்ணாயிரம் பாடல்களைப் பாடினார் என்பர். திருமூலர் கருக்கிடை அறுநூறு என்னும்

நூல் முழுமையாகக் கிடைக்கப் பெறவில்லை. திருமூலர் குணவாகடம், திருமூலர், தியானக்குறிப்பு, திருமூலர் ஞானம், திருமூலர் ஆயிரம் (வைத்தியநூல்) என்னும் நூல்கள் அவர் பெயரில் உள்ளன. இவை எல்லாவற்றையும் ஒருவரே பாடினாரா என்பது சிந்தனைக்குரியது.

சித்தரும் ஆன்மீக வாழ்வும்

நம்பிரான் திருமூலர் அவர்கள் இம்மை, மறுமை பற்றியும், வாழ்க்கை முறைகள் பற்றியும் யோக முறைகள் பற்றியும் நிறைய உபதேசம் செய்திருக்கின்றார். அ.ஃறிணை உயிர்களுக்கும் உபதேசம் செய்திருக்கின்றார். மேலும் மருத்துவத்தின் தந்தை சித்தர்களே ஆவர். போகர் என்னும் சித்தர் திருமூலரால் போற்றப்பட்டவர். ஆவரின் சீடரும் ஆவார். திருமந்திரம் ஒரு வாழ்வியல் நூல். உலக இயக்கமும் மனித வாழ்க்கையும் பின்னிப் பிணைந்துள்ள தன்மைகளைத் தொடர்புபடுத்திக் கூறுவது. ஆன்மா அடைய வேண்டிய பக்குவத்தை இனிது விளக்குவது சமுதாயத்தைச் சார்ந்து வாழும் மனிதன் தன் வாழ்க்கையை இரு பகுதிகளாகப் பகுத்து வாழக் கடமைப்பட்டவன். முதற்பகுதி இல்லறம் பிற்பகுதி துறவறம் இம்முறையிலன்றி, இல்லறவாழ்க்கையை மட்டும் மேற்கொண்டு பிறந்து, உண்டு, உறங்கி, இறக்கும் மனிதரும் உண்டு. மாறாக முற்றிலும் துறவு பூண்டு வாழும் வாழ்க்கையையும் சிலர் மேற்கொள்வர். இம்மூன்று நிலைகளில் வாழும் மனிதர்களின் வாழ்க்கை நெறிகள் திருமந்திரத்தில் சுட்டபெறுகின்றன.

உலகமக்களின் ஆன்மா இறையுணர்வில் திளைத்துப் பிறவி நீக்கம் பெறவேண்டும் என்பது திருமந்திரத்தின் உயரிய நோக்கம். துறவறச் சிறப்பையும், இல்லற மேன்மையையும் ஒருபாடல் உணர்த்துகிறது.

மொழிந்தது மூவர்க்கும் நால்வர்க்கும் ஈசன்
ஒழிந்த பெருமை இறப்பும் பிறப்பும்.

என்னும் பாடலில் 'மூவர்க்கும்' என்பது சிவயோகமாமுனி, பதஞ்சலி, வியாக்கிரபாதர் ஆகிய மூவரைக் குறிக்கிறது. இருநெறியிலும் இறையுணர்வில் ஈடுபட்டுப் பிறவி நீக்கம் பெறுவதே குறிக்கோள் ஆகும். பதிற்றுப்பத்துள் மூன்றாம் பத்து ஆன்மீக வாழ்வினால் இல்லறத்தில் இருந்துக்கொண்டு சுவர்க்கம் சென்றதற்கான சான்றிதனைத் தருகின்றது. பாலைக் கௌதமனார் எனும் புலவர் பல்யானைச் செல்கெழுகுட்டு வனைப்பாடி, 'யானும் என் பார்ப்பினியும் சுவர்க்கும் புகழ் வேண்டும்' என்று பரிசில் வேண்டினார். அவர் விரும்பியபடியே சேர மன்னனும் ஒன்பது பெருவேள்விகளை வேட்பித்தான் பத்தாவது வேள்வியிற் புலவரும் அவர் மனைவியும் காணாராயினர். பாலைக் கௌதமனார் இல்லறத்தில் ஈடுபட்டுப் பின் துறவறநெறியை மேற்கொண்டவர். யாகத்தின் மூலம் தான்மட்டுமல்லாது தன் மனைவியோடும் வீடுபேறடைந்தார். இதனால் வீடுபேறும் அடையும் தகுதி பக்குவப்பட்ட

ஆன்மாக்களுக்கு உண்டு என்பதும், அதில் ஆண் பெண் என்னும் வேறுபாடு இல்லை என்பதும் பெறப்படும் எனவே இல்லறநெறி, துறவறநெறி ஆகிய இருநெறிகளில் நிற்போரும் -வீடுபேற்றையடையும் தகுதியுடையவராவர்.

திருமந்திரம் கூறும் இல்லறம்

முன்னோர், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தான் என்னும் ஐவருக்கும் வேண்டிய கடமையைச் செய்வதே இல்லறத்தின் சிறப்பாகும். (திருக்குறள் : 43) என்னும் திருவள்ளுவர் கருத்துக்களுக்கு ஏற்பத் திருமூலர் தன்னுடைய பாடலில் இதே கருத்தை கூறுகிறார்.

திறந்தரு முத்தியும் செல்வமும் வேண்டின்
மறந்தும் அறநெறியே ஆற்றல் வேண்டும்
சிறந்தநீர் ஞாலம் செய்தொழில் யாவையும்
அறைந்திடல் வேந்தனுக்கு ஆறில்ஒன் றாமே. (244)

என்றுக் கூறுகிறார்.

இல்லறம் என்பதற்குத் திரு.வி.க. பின்வரும் விளக்கம் தருகிறார் 'இயற்கையோடியைந்த வாழ்வு நடத்தலே அறம் அதற்கு மாறுபட்டு வாழ்தல் மறம், ஒருத்தி ஒருவருவனுடனும் ஒருவன் ஒருத்தியுடனும் வாழ்வது இயற்கை அறமென்று இதுகாறும் சொல்லப்பட்டு வந்தது. இவ்வியற்கை அறத்தை உலகம் 'இல்லறம்' என்றுச் சொல்கிறது. இல்லறம் என்பது அறக்கூறுகள் யாவும் சேர்ந்த ஒரு முழுமை என்க. அறம் என்பது ஒரு மரம் போன்றது. திருமணம், பிள்ளைப்பேறு, அன்பு, விருந்தோம்பல், ஒழுக்கம், பொறை, ஒப்புரவு, ஈகை, அருள், தவம், வாய்மை, துறவு, மெய்யுணர்வு முதலியன. அம்மரத்தின் உறுப்புகளாகிய வேர், மன்றம், பட்டை, சுவடு, கோடு, விளார், தளிர், இலை, மலர், காய், கனி முதலியன போன்றன. இவ்வறக் கூறுகள் யாவும் பிறந்து வளர்ந்து பயனளிக்க வேண்டிய தாயகம் இல்லறமாகும்.' (பெண்ணின் பெருமை (அ) வாழ்க்கை.பக்.203) இத்தகைய இல்லறத்தில் இருந்து கடமைகளை இனிது நிறை வேற்றுபவன் இல்லறத்தான் ஆவான்.

திருமந்திரத்தில் களவுமணம் பற்றிய செய்தி இடம்பெறவில்லை பெற்றோரும் உற்றாரும் சூழவிருந்து நடத்தும் கற்பு மணமே பேசப்படுகிறது. இக்கற்பு மணத்திற்கு முன்னோடியாக இன்ன மணப்பெண்ணை இன்ன மணமகனுக்கு இன்ன நாளில் திருமணம் நடைபெறும் என்று முடிவு செய்வர். இதனை,

வாசந்தி பேசி மணம் புணர்ந் தப்பதி (150)

என்னும் பாடலடி குறிப்பிடுகிறது. 'வாசந்தி' என்னும் சொல் 'நிச்சயதாம்பூலம்' என்னும் பொருள்தரும். இவ்வாறு கற்பு வழியில் திருமணம் செய்துகொள்ளும் தலைவனுக்கு இல்லறத்தானுக்கும் உரிமையுடைய பொருள்கள்,

மதுவூர் குழலியும் மாடும் மனையும் (155)

என்று ஒரு பாடற்பகுதியும்,

'ஆர்த்தெழு சுற்றமும் பெண்டிரும் மக்களும்' (157)

என்று மற்றொரு பாடற்பகுதியும் குறிக்கின்றன. அவை, மனைவி, செல்வம், வீடு, சுற்றம், தன்மக்கள் ஆகியன. இவற்றைச் செல்வங்களாகக் கொண்ட இல்லறத்தான், நிலையற்ற வாழ்வை நிலையென்று எண்ணி நல்ல உணவினை உண்டு, மனைவியோடு இன்பம் துய்த்து, நோயுற்று, இறுதியில் இறந்து போகிறான் என்று திருமூலர் அவர்கள் தம்முடைய (158) கூறியுள்ளார். சிறப்பாக வாழ்ந்த இல்லறத்தான் பின் இறந்து போவதை

மையிட்ட கண்ணாளும் மாடும் இருக்கவே
மெய்விட்டுப் போக விடைகொள்ளு மாறே (151)

என்று திருமூலர் அவர்கள் கூறியுள்ளார்.

இல்லறத்தில் ஈடுபட்டுத் தன்னை உணராது உலகாயதமாக வாழ்க்கை நடத்துபவன் இல்லறத்தான் என்பது இவற்றால் அறியப்படும். இவனோடு தொடர்புடைய பிற இல்லற மாந்தர்கள் பலர். அவர்களுள் தாயும் மகளும் குறிப்பிடத்தக்கவர்கள். இல்லறத்தில் உள்ள தாய் சிற்றின்பமாகிய எந்தவொரு நிலையை மட்டும் மகளுக்குச் சொல்லித்தர மாட்டாள். ஆனால் பிற அனைத்து ஒழுகலாறுகளும் தாய்வழி மகள் அறிந்து கொள்வாள்.

அங்ஙனமே கற்புடைய பெண்ணின் பெருமையைத் தெளிவாகக் கூறியுள்ளார். அதாவது கணவனைத் தொழுதலையே நெறியாகக் கொண்டு வாழ்பவள் உறக்கத்தினின்று விழிக்கும் போதே அவனைத் தொழுவாள். எழுந்து பின் தொழுவதில்லை. இந்த ஆழ்ந்த கருத்தையே 'தொழுதெழுவாள்' என்னும் தொடரால் இயல்பாகச் சுட்டுகிறார். இத்தொடரில் ஈடுபாடு கொண்ட திருமூலரும் அரனடியாரை இறைஞ்சி வழிபடல் இன்பம் பயக்கும் எனக் கூறும்போது,

அழிதக வில்லா அரனடியாரைத்
தொழுதகை ஞாலத்துத் தூங்கிருள் நீங்கும்
பழுதுபடா வண்ணம் பண்பனை நாடித்
தொழுதெழு வையகத் தோரின்ப மாமே (1864)

என்றுக் கூறியுள்ளார்.

இல்லறத்திற்கு அன்பு என்பது மிகவும் முக்கியமானது. இன்பப்பிறவி தந்த இறைவன் மக்களுக்குத் துன்பத்தைத் தரும் பந்தத்தை அளித்தான். அது எலும்புச் சட்டம் சேர்த்து மேலே தோலாலும், தசையாலும் பொருந்தச் செய்து, உடம்பினைத் தந்து இறுதியில் தூய்மைப்படுத்தி வீடுபேறு நல்கும் என்பது திருமந்திரம் உரைக்கும் செய்தியாகும். (432)

அங்ஙனம் விருந்தோம்பும் செய்தியினை பாத்திரம், அப்பாத்திரம் என்னும் தலைப்பில் தெளிவாகக் கூறியுள்ளார்.

திலம் அத்தனை பொன் சிவஞானிக்கு ஈந்தால்
பவமுத்தி சித்தி பரபோகமும் தரும். (501)

என்று தெளிவாகக் கூறியுள்ளார். அவ்வாறு அடுத்தவர்க்கு ஈயாமல் இருப்பதை, அழகாக இருந்தும் பயன்தராத மலட்டுப் பசுவுக்குக் குனிந்து நிமிர்ந்து பசுந்தழையிட்டாலும், அதனின்று பாலைக் கறந்து பருகமுடியாது என்னும் கருத்தைக் (505) கூறியுள்ளார்.

இல்லறத்தானுக்கு விதிக்கப்பட்டவையும், விலக்கப்பட்டவையும்

இல்லறம் மேற்கொள்பவன் உறுதியாகப் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் சில உண்டு. இவ்விதிமுறைகளை அழியா இலக்கியங்கள் காட்டும் வாழும் பாத்திரங்கள் வாயிலாக உணரலாம். திருமூலர் குறிப்பிடும் இல்லறத்தானும், மாடு, மனை, செல்வம், மனைவி, மக்களோடு செழுங்கிளை தாங்கும் செல்வனாக வாழ்பவன், அவன் தன் மனையாளைப் பிரியாது வாழ்ந்து அவளோடு பல அறச் செயல்களைப் புரிபவன். துறந்தோருக்குப் பணிவிடை செய்ய வேண்டியது இல்லறத்தானுடைய கடமை எவ்வளவு பொன்னை ஞானிக்கு கொடுத்தாலும் அதனால் இம்மையின்பமும் மறுமைக்குரிய வீடுபேறும் கிட்டும் (501).

இல்லறத்தானுக்கு விலக்கப்பட்டவையாக திருமூலர் கூறுவது, பரத்தையர் தொடர்பு கூடாது என்பது மிகவும் முக்கியமான. இல்லறத்தில் ஈடுபடுபவனுக்கு அளவான காமம் வரையறுக்கப் பட்டுள்ளது. பரத்தையர் தரும் சிற்றின்பம் கனவு போன்றது அதனையே நிலையான வாழ்வில் காணும் நனவு போன்ற உண்மையானது என்று விரும்புதல் கூடாது (பாடல்-205) மற்றொன்று பிறன்மனை நயத்தல் ஆகும். அன்புடைய மனைவி வீட்டிலிருந்து தன் கடமையைச் செய்தாலும் பிறருக்கு உரிமையுடைய ஒருத்தியை விரும்புவர்காமுகர் என்று உரைக்கின்றார். (பா-206) காமம் மிகுவதனால் மனிதனின் பேரின்ப வாழ்விற்கு ஏற்படும் தடைகளை இல்லறத்தானுக்குத் திருமந்திரம் அழகாகக் கூறியுள்ளது.

நிறைவுரை

திருமந்திரம் பலகுறிப்புப் பொருள்களை உள்ளடக்கியது. மானுட வாழ்வை வெற்றிகரமாக்க வேண்டுமானால் குறிக்கோள் வேண்டும். அத்தகைய குறிக்கோளை அடைய இந்நூல் வழிகாட்டுகிறது. சித்தர்களின் இயக்கத்திற்குத் தலைவன் சிவன் என்று கூறுவர். இதனால் திருமூலர் அவர்கள்,

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறவா போற்றி

என்று வணங்கத் தொடங்குவதனை அறியலாம்.

சித்தனாக இருந்தும் இல்லறவாழ்வின் நெறிமுறைகளைப் பற்றியும் வாழ்க்கையின் கூறுகளைப் பற்றியும் தெளிவாகக் கூறியுள்ளார். அறநூல்களில் இல்லற வாழ்க்கையின் சிறப்புகள் நிரம்பியிருப்பினும், இறையோடு கூடிய இல்லறவாழ்வின் சிறப்பினை இந்நூலில் தெளிவாகக் காணலாம். இல்லறவாழ்வைப் பற்றிக் கூறும் பொழுதும், அவற்றை, இறைதத்துவத்தோடு தொடர்புபடுத்திக் கூறுவது மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். திருமந்திரத்தை வாசித்தால் இல்லறவாழ்வின் பயனோடும், இறையருளும், வீடுபேறும் கிடைப்பதும் திண்ணம் என்பது என்னுடைய ஆழ்ந்த கருத்தாகும். திருமந்திரம் என்னும் தெய்வநூல் கிடைத்தது நாம் செய்த பெரும் புண்ணியம் தான். அத்தகைய புண்ணியத்தை உலகமக்கள் அனைவரும் உணர்த்து படித்து வாழ்வில் இன்புறுவீராக!

சிவசிவ என்றிடத் தேவருமாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே

துணைநூற்பட்டியல்

1. திருமந்திரம் தரும் தெளிவு
   டாக்டர்.ஆர்.எ.சுப்பிரமணியன்,
   ஸ்ரீசெந்தில் பதிப்பகம், புதுப்பேட்டை, குடியாத்தம்.
   முதல் பதிப்பு: 2004.
2. திருமூலர், வேமனர் பாடல்களில் காணப்படும் சமய,
   சமுதாயச் சிந்தனைகள்
   ஆசிரியர்:- முனைவர்.பா.அ.முனுசாமி
   தமிழ்ச்செல்வி பதிப்பகம், நகரி, மண்டல், சித்தூர் மாவட்டம்.
   முதல்பதிப்பு - ஆகஸ்ட் - 2010.
3. திருமந்திர வாழ்க்கை
   ஆசிரியர்:- டாக்டர்.ஜி.கௌசல்யா விஜயன்
   விஜயன் பதிப்பகம், சாயிநாதபுரம், வேலூர்.
   முதல்பதிப்பு:- ஜீன் 1998.
4. திருமூலர் வாழ்வும் வாக்கும்
   ஆசிரியர். வித்துவான் டாக்டர் துரை.இராஜாராம்.
   நர்மதா பதிப்பம் - சென்னை. முதல் பதிப்பு - ஆகஸ்ட் 2002.
5. அண்ணாமலை பல்கலைக்கழகம்,
   முதலாமாண்டு - இக்கால இலக்கியம்

49. திருமூலர் திருமந்திரத்தில் இறைமை



வே. அருட்பாமணி
முனைவர் பட்ட ஆய்வாளர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை.

முன்னுரை

திருமந்திரம் திருமூலர் செந்தமிழில் பாடிய வாழ்வியல் நூல் ஆகும். சைவத் திருமுறைகளில் தலைசிறந்த நூல் திருமந்திரம். தோண்டச் சுரக்கும் நீர் போலவும், உண்ணச் சுரக்கும் பால்போலவும், எண்ணச் சுரக்கும் வாழ்வின்பம் தரும் நூல் **'திருமூலர் திருமந்திரம்'** ஆகும். 12 திருமுறைகளில் எதைப் படிக்காவிட்டாலும் **'திருமந்திரம்'** படிப்பதொன்றோ அனைத்துத் திருமுறைகளையும் படிப்பதற்கு ஒப்பாகும் என்பது சான்றோர் வாக்கு.

திருமுறைகளைச் சேய் என்றால் பத்தாம் திருமுறையாகிய திருமந்திரத்தைத் தாய் எனலாம். ஏனைய திருமுறைகள் புகழ் நூல்களாக அமைய, திருமந்திரம் பொருள் நூலாக அமைந்துள்ளது.

சாத்திரங்களில் சிறந்தது திருமூலர் தந்திரம்.
தோத்திரங்களில் சிறந்தது திருவாசகம். -வள்ளலார்

திருமந்திரம் சிவாகமங்களில் சாரம். வேதம் என்பது எவராலும் ஆக்கப்படாதது. மாறாக ஆகமம் என்பது ஆக்கப்பட்டது. ஆகமங்கள் தந்திரம், மந்திரம், உபதேசம் என்ற மூன்றையும் உறுப்பாகக் கொண்டவை.

தந்திரம்

ஆன்மீகத்தில் ஒழுகும் ஒருவன் கடைபிடிக்கவேண்டிய ஒழுக்கங்களைக் கூறுவது தந்திரம்.

மந்திரம்

மனத்தைக் கட்டுப்படுத்தி தெய்வத்தைத் தொழும் முறையினைக் கூறுவது மந்திரம்.

உபதேசம்

முதலும் முடிவும் இல்லா எண்குணத்து இறைவனின் தன்மைகளைத் தான் உணருமாறும் பிறர்க்கு உணர்த்துமாறும் விரித்துரைப்பது உபதேசம்.

தந்திரம், மந்திரம், உபதேசம் எனும் மூவகைத் திறங்களும் ஒருங்கே அமைந்த செந்தமிழ்ச் சிவாகமம் **'திருமந்திரம்.'**

திருமூல தேவனையே சிந்தை செய்வார்க்குக்
கருமூலம் இல்லையே காண்.

உலகமக்கள் உய்வடைவதற்கும், தொல்லை தரும் பிறவி சூழும் தளை நீக்கி அல்லல் அறுத்து ஆனந்தம் பெறுவதற்கும் திருமந்திரம் படைக்கப்பட்டது. திருமந்திரம் முப்பொருள் உண்மையினை இறை (பதி), உயிர் (பசு), தளை (பாசம்) உணர்த்திய நூல் ஆகும்.

சித்தர்கள்

'சித்' என்னும் வடமொழி வேர்ச்சொல்லில் இருந்து **'சித்தர்'** என்ற வார்த்தை உருப்பெற்றது. கடவுளைக் காண முயற்சி செய்பவர்கள் **'பக்தர்கள்'** என்றும் கண்டு தெளிந்தவர்கள் **சித்தர்கள்** என்றும் தேவாரம் கூறுகிறது. காமம், வெகுளி, மயக்கம் இல்லா ஒழுக்கத்துடனும், இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் மூவகைக் காலத்தையும் உணர்ந்தோர் சித்தர்கள்.

யோக மார்க்கத்தில் நின்று வெற்றி பெற்றவர்கள், சித்தி பெற்றவர்கள் சித்தர்கள் ஆவர். **அட்டமா சித்திகள்**

1. அணிமா
2. முகிமா
3. லகிமா
4. பிராத்தி
5. பிராகாமியம்
6. ஈசத்துவம்
7. வசித்துவம்
8. கரிமா

இந்த எட்டுவகை வல்லமைகளையும் பெற்றவர்கள் சித்தர்கள்.

திருமூலர்

திருமூலரின் இயற்பெயர் **'சுந்தர நாதன்.'** இவர் நந்தி தேவருடைய மாணாக்கருள் எண் வகை சித்திகளும் கை வரப் பெற்ற சிவயோகி ஆவார். இவர் மூலன் என்பவனது உடலில் புகுந்திருந்தமையால் **'திருமூலர்'** எனப்பட்டார். சிவயோக நிலையில் அமர்ந்திருந்த திருமூலர் இவ்வுலகம் உய்யும் பொருட்டு **'ஒன்று அவன் தானே'** என்னும் திருப்பாடலைத் தொடங்கி ஆண்டுக்கு ஒரு திருப்பாடலாக மூவாயிரம் ஆண்டுகள் இவ்வுலகில் சிவயோக நிலையில் அமர்ந்து மூவாயிரம் திருப்பாடல்களை அருளினார். அதுவே தமிழ் மூவயிரமாகிய திருமந்திரப் பாடல்கள்.

இறைமைக் கோட்பாடுகள்

அன்பே கடவுள்

உலகம் சிறக்கத் தேவைப்படுவது அன்பு. வாழ்க்கைக்கான ஆற்றலைத் தரும் அகத்திறன் அன்பு. அன்பே வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவம்.

இறைவன் உருவம் அற்றவன். ஒளிமயமானவன் உள்ளும், புறமும் நீக்கமற நிறைந்த இயல்பினன். எவனொருவன் அன்பு வடிவமாக

விளங்கி எல்லா உயிர்க்கும் செந்தன்மை பூண்டு ஒழுகுகின்றானோ அவன் இறைவன் ஆகிறான் என்பது திருமூலரின் சிந்தையில் பூத்த அறிவு மலர் ஆகும்.

திருமூலர் வாக்கின் படி **'அன்பு வேறு', கடவுள் வேறு** அன்று. இரண்டும் ஒன்றே. அன்போடு நம் உள்ளத்தில் உருகி நிற்கும் நிலைதான் இறைவனை எய்த முடியும் என்பது சித்தர்களின் நம்பிக்கை.

அன்பே கடவுளை அடையும் வழி

என்பே விறகாய் இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போல் கனலில் பொரிய வறுப்பினும்
அன்போடு உருகி அகம் குழை வார்க்கன்றி
என்போல் மணியினை எய்த ஒண் ணாதே

எலும்பை விறகு ஆக்கித் தசைகளை அறுத்து நெருப்பில் இட்டு பொன்போல் பொரியும்படியாக வறுத்தாலும் பயன் இல்லை. அன்போடு உருகி மனம் குழைவார் அல்லாமல் மற்றவர்கள் கடவுளை அடைய முடியாது என்கிறார்.

மக்கள் தொண்டு! மகேசன் தொண்டு

கடவுளுக்கு நாம் செலுத்தும் அன்பை மட்டும் போதிக்கவில்லை. மக்களுக்குத் தொண்டு செய்யும் அன்பையும் வலியுறுத்துகிறார். கோயிலில் படமாக உள்ள கடவுளுக்கு ஒன்று தந்தால் நடமாடும் கோயில்களாக உள்ள உயிர்களுக்குப் பயன்படுவது இல்லை. நடமாடும் உயிர்களுக்கு ஒன்று தந்தால் அது படமாக இருக்கும் கடவுளுக்கு சென்று சேரும் என்பதில் இருந்து உயிர்களுக்கு நன்மை செய்வதை வலியுறுத்துகிறார்.

வெறும் இறைபக்தி யாதொரு பயனும் தராது என்பதையும் அற்புதமாக விளக்குகிறார்.

இறைவன் ஒருவனே

சித்தர்களின் கொள்கை இறைவன் ஒருவனே என்பது ஆகும்.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் (2014)

உடம்பில் இறைவன்

நாம் பருவுடலுக்குள் இருக்கும் இருதயகமல வீட்டில் தான் சிவபரம்பொருள் சோதியாக ஒளிர்ந்து கொண்டு இருக்கிறது. பரம்பொருள் நம் உடம்பிற்குள்ளே உள்ள சிற்சபையில் அமரந்து அம்பலத்தில் நடராசராய் நடனமாடி ஒலி செய்து கொண்டு இருப்பதைச் சித்தர்கள் தெளிவாக வரைத்துள்ளனர்.

உடம்பினை முன்னம் இழுக்கென்று இருந்தேன் .....
.....
உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேனே (725)

உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
.....
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே (724)
உடம்பினைப் பெற்ற பயனாவதெல்லாம்
உடம்பினுள் உத்தமனைக் காண். (ஔவைக் குறள்)

தான் படைத்த படைப்புகளிலே மிக உயர்ந்த படைப்பாக ஆறறிவு உடைய மனிதனைப் படைத்து அம்மனித குலத்தின் உயிரையே தனக்குரிய இருப்பிடமாகக் கொண்டு இறைவன் குடியேறி இருக்கிறான் என்பதற்கு அனைத்து வேத நூல்களும் சான்று பகர்கின்றன.

'அன்பின் வழியது உயிர்நிலை' உயிரின் இயக்கத்திற்கு அன்பு இன்றியமையாதது ஆகிறது. ஆவ்வியக்கமே உலகை இய்ககுகிறது.

ஆன்கன்று தேடி யழைக்கு மதுபோல்
நான் கன்றாய் நாடி யழைத்தேனென் நாதனை (2627)

பசுவினது கன்று தாயை நாடிக் கதறி அழைப்பதுபோலக் கன்றின் தன்மையில் இருந்து தாயாகிய சிவத்தைத் தேடி உள்ளத்தில் இருக்கும் இறைவனை உணர வேண்டும் என்கிறார் திருமூலர்.

பரமாத்மா எங்கும் தனியாக இல்லை. நமது உடம்பு தான் பரமாத்மாவின் இடம். ஆதலால் கடவுளைத் தேடி எங்கும் அலைய வேண்டாம். உடம்பைப் பேணுவதே கடவுள் பணி.

நாதமயமான இறைவன் ஊன் பொதிந்த இந்த உடம்பில் விளங்குகிறான் என்பது திருமந்திரக் கருத்து.

அறம்எனும் இறைநெறி

திருமந்திரம் கூறும் அறக்கொள்கை வியப்பானது, ஆனால் அனைவரும் ஏற்கக் கூடியது தக்கார், தகவிலார் என்று பாராத அறம் செய்க என்கிறார் திருமூலர்.

ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்
பார்த்திருந்து உண்மின் பழம்பொருள் போற்றன்மின்
வேட்கை யுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்
காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே (250)

யாவர்க்குமாம் இறைவர்க்கு ஒரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே. (252)

இன்றைய வாழ்க்கைக்குத் தேவையான எளிமையான அற மெய்யி யலைத் திருமந்திரம் வழங்குகிறது. மக்கள் அனைவரும் இன்பமாகவும், ஈகைச் சிந்தனையுடனும் மனித நேயத்துடனும் வாழ வேண்டும் என்பதைத் திருமூலர் வலியுறுத்துகிறார்.

இறைவனாகிய சிவபெருமானை அன்றாட வாழ்வில் இடையறாது அவன் திருவடியைப் பணிந்தால் நம்முடைய குறைகளை நீக்க நம்மைத் தேடிச் சிவபிரான் வருவார்.

போற்றி இசைந்தும், புகழ்ந்தும் புனிதன் அடி
தேற்றுமனின் என்றும் சிவனடிக்கே செல்லவம்
மாற்றிய தென்று மயலுற்ற சிந்தையை
மாற்றி நின்றார் வழி மன்னி நின்றானே. (24)

சிவபெருமான் திருவடியைத் தொழுதும், இசையால் பாடியும் புகழ்ந்து வணங்குவதும், சிவனடியே பெருமை தருவது என்ற தெளிவைப் பெறுதலும், பெற்று இருக்கும் செல்வங்கள் அவன் மனதைத் தேற்றி அறம் பல செய்தால் அவர்களைப் பெருமானே தேடிவந்து நிலையாக நெருங்கி நிற்பான்.

இறைநிலை விரிந்து இருத்தல்

எம்பெருமான் ஈசன் உருவாகவும், அருவாகவும், அருவுருவாகவும் எங்கும் நீக்கமற காணப்படுகிறான். இறைவனது திருவருள் எங்கும் பரவிக் காணப்படுகிறது.

ஆரறிவார் எங்கள் அண்ணல் பெருமையை
யாரறிவார் இந்த அகலமும் நீளமும்
பேரறியாத பெருஞ்சுடர் ஒன்றதின்
வேரறியாமை விளம்பு கின்றேனே (95)

அண்ணலின் பெருமையை முழுவதுமாக அறிந்தவர் யாருமில்லை. பரம்பொருளின் அருளாட்சி இன்னதென்று யாராலும் அளவிட்டுக் கூற முடியாது. பெருஞ்சுடரைப் போன்றும் எங்கும் நிறைந்து உள்ளான்.

அறிவு உதயம்

தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை யறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை யறிவும் அறிவை அறிந்தபின்
தன்னையே யர்ச்சிக்கத் தானிருந் தானே (2355)

தன்னைப் பற்றி உணர்ந்துகொண்டு பேராற்றலாகிய இறை நிலையை அடைய புகழ்ந்து பாடுகிறது.

இறை ஆனந்தம்! பேரானந்தம்

இவ்வுலக வாழ்வு ஈடு இணையற்றது. அவ்வாறு வாழும்போது உலக இயல்புக்கு ஏற்றவாறு ஆசையை அளவோடு கொண்டு பேராசையை விட்டு நீங்கி நல்வாழ்க்கைப் பெற இறைவனை வாழ்த்தி வணங்கி உயர்வோம்.

ஆறு அறுமின்கள் ஆசை யறுமின்கள்
ஈசனோடு ஆயினும் ஆசை யறுமின்கள்
ஆசை படப்பட ஆய்வருந் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்த மாமே (2615)

பொன், பொருள் மேல் கொண்ட நிலையற்ற ஆசையை விட்டு இறைவன் மேல் பற்று கொண்டால் பேரானந்தமே வாழ்வில் ஏற்படுகிறது.

குறையாத மனம்

வாழ்வில் ஒவ்வொரு செயலிலும் வெற்றி பெற இறைவனை வழிபாடு செய்தால் அச்செயல் முற்றிலுமாக நிறைவுபெறும். இதற்கு இறைவனாகிய ஈசன்மேல் குறையாமனம் வேண்டும்.

தேடுகின்றேன் திசையோடு எட்டு இரண்டையும்
நாடுகின்றேன் நலமே உடையான் அடி
பாடுகின்றேன் பரமெ துணையாம் எனக்
கூடுகின்றேன் குறையா மனத்தாலே. திரு 2368

உள்ளமே பெருங்கோயில்

இறைவனை வணங்க உள்ளத்தையே பெரிய ஆயுதமாகக் கொண்டு வழிபட்டு வாழ்வில் ஏற்றம் அடையலாம்.

வீடுபேறு

இல்லற வாழ்வைத் துறந்து இறைவன் மேல்பற்றுக் கொண்டு இறைவன் அடி சேர்தலே வீடுபேறு என்பதைச் செம்மலர் நோன்தாள் சேரல் என்பார் மெய்கண்டார்.

பறக்கின்ற ஒன்று பயனுற வேண்டின்
இறக்கின்ற காலத்தும் ஈசனை உள்ளும்
சிறப்பொடு சேரும் சிவகதி பின்னைப்
பிறப்பொன்று இயாமையும் சேருலகாமே திரு 2108

புலால் மறுத்தல்

பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாரும் காண இயமன் தன் தூதுவர்
செல்லாகப் பற்றித் தீவாய் நகரத்தில்
மல்லாக்கத் தள்ளி மதிக்க வைப்பாரே திரு 489

உள்ளத் தூய்மை உன்னதமானால் உணவுக் கட்டுப்பாடு வரும். இயற்கை உணவை மறந்து செயற்கை உணவு சமுதாயம் தள்ளப்படுவது வருத்தத்துக்கு உரியது.

ஞானானந்தம் பெறும் வழிகள்

கொலையே களவு கள்காமம் பொய்கூறல்
முலைவான பாதகமாம் அவைநீக்கி
துலையாம் சிவனடி சார்ந்து இன்பம் சார்ந்தார்க்கு
இலையாம் இவை ஞானானந்தத்து இருந்ததலே திரு 490

கொலை முதலிய ஐந்தும் பாதகமாம். அவற்றை நீக்கிச் சிவபெருமான் திருவடியைச் சார்ந்து இன்பம் உற்றோர்க்குத் துன்பம் இல்லை. இவை ஞானாந்தம் பெறும் வழியாகும்.

முடிவுரை

திருமந்திரம் ஒரு அனுபவ ஞானத்திரு நூல் செந்தமிழ் சிறக்க எழுந்த ஒரு நூல். மூவாயிரம் பாடல்கள் கொண்டு மக்களை நல்வழிப்படுத்துகிற பேராகமநூல். மக்கள் அனைவரும் உணர்ந்து ஒழுக உயர்வளிக்கும் ஒரு தனி நூல் திருமந்திரம்.

திருமூலரின் 'அன்பே சிவம்' என்ற வரியை மனத்தில் கொண்டாலே போதும். இவ்வுலக மக்களின் சில குறுகிய மனப்போக்குகள் குறைந்து நல்வழிப் பிறக்கும். எந்திரமாக இருக்கும் மனிதன் திருமூலரின் திருமந்திரத்தை உணர்ந்தாலே போதும் மனிதவாழ்வு செம்மையாக இருக்கும். தன்னுள்ளே ஜீவனாக ஒளிவீசிக் கொண்டு இருக்கும் உயிரே சிவம். ஆந்த சிவத்தை அறிந்தவர்களே சித்தர்கள். அறிவாகிய ஜோதியே - ஜீவனே சிவம். நாள்தோறும் அந்தச் சிவத்தை சார்ந்து அதுவாகத்தான் ஆவதற்கு மேற்கொள்ளும் வாழ்க்கை நெறியே சித்தர் நெறி.

சித்தர்களின் கருத்துப்படி இறைவனை அன்பால் அடையலாம். யோகநெறியிலும், தியானத்தின்மூலமும் இறைவனை உணரலாம்.

தென்னாடுடைய சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!

துணை நூல்கள்

1. திருமந்திரத் தெளிவு
   புலவர்.த.கோவேந்தன் டி.லிட்.
   வர்மா பதிப்பகம்.
   சென்னை. முதற்பதிப்பு 1991.
2. திருமந்திர சாரம்
   பி.எஸ்.ஆச்சார்யா.
   நர்மதா வெளியீடு. முதற்பதிப்பு 2007.
3. திருமூலர் காலத்தின் குரல்
   கரு.ஆறுமுகத் தமிழன்
   தமிழினி. இரண்டாம் பதிப்பு 2005.
4. மூவாயிரத்தில் முந்நூறு
   தி.க.சாமிநாதன்
   இம்பீரியல் கிராபிக்ஸ். 2004.
5. தமிழ் இலக்கியங்களில் பக்தி நெறிகள்
   ஆரஞ்சு பப்ளிகேசன்ஸ்
   காஞ்சிபுரம் - முதற்பதிப்பு. டிசம்பர் 2015.
6. சித்தர் பாடல்கள் ஞா.மாணிக்கவாசகன்
   உமாபதிப்பகம். இரண்டாம் பதிப்பு. 2001.

50. திருமூலர் காட்டும் வாழ்வியல் தத்துவம்



ஜி. மனோகர்
YHC, மனவளக்கலையோக ஆசிரியர்
76, வரதராஜன் தெரு,
திருவொற்றியூர், சென்னை-119.
email: gmindustries2010@gmail.com
கைபேசி: 9840678417

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்

எனும் வரிகள் வாயிலாகச் சமய வேறுபாடுகள் நமக்குள் வேண்டாம். இதன் உண்மைப் பொருளைக்கண்டு அதைப் பின்பற்றுங்கள். அதைவிடுத்துக் கருத்து வேறுபாடுகளுக்கும் வெறித்தனமான, என்சமயம் பெரிது, உன் சமயம் சிறுது என்ற மூடநம்பிக்கைகளுக்கும் இடம்கொடுக்காதீர்கள் என்கின்றார் திருமூலர். அனைத்துச் சமயங்களும் அன்பைத்தான் போதிக்கின்றன. அன்பு என்பது ஓர் இயற்கையான உணர்வு. இதைக் காட்டுவது மக்களுக்குச் செய்யும் தொண்டு. இறையை அடையவும், வழிபாட்டு நெறிக்கும் மெய்யுணர்தலுக்கும் அடிப்படைத் தேவை அன்பு நெறியே. இதனைத் திருமூலர் உணர்த்துகின்றார்.

முத-ல் நாம் தெளிவடைய வேண்டும். தெளிவில்தான் ஞானம் தோன்றும். இதனை,

தெளிவு அறியாதார் தீரார் பிறப்பே
செயலற்று இருக்க சிவானந்த மாகும்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிட சிவகதி யாமே!

என்று கூறிப் புரிய வைக்கின்றார்.

விளக்கம்

சிவசிவ என்று எளிய வழிமுறையால் தீவினை மாளும் என்கின்றார். ஐம்புலன்களை அடக்காமலே இவற்றை எல்லாம் பெறமுடியும். இதையே, அஞ்சும் அடக்கமென்பர் அறிவிலார் என்கின்றார். வாசியோகத்தை வ-யுறுத்தக் காற்றைப்பிடி, காலனை அடக்கு என்கின்றனர்.

அகத்தவப் பயிற்சியால் பிராணனை வாங்கி உந்திக்கண் அடக்கி வயப்படுத்தினால் இயற்கையாக உட-ல் ஏற்படும் முதுமை புறத்தே காணப் பட்டாலும் உள்ளே முதுமைப் பண்பு ஒரு சிறிதும் காணப்பட மாட்டாது. இளமைப் பண்பு கிளர்ந்து எழுந்து கொழுந்து விடும். இதனையே பளிங் கொத்துக் காயம் பழுக்கினும் பிஞ்சாம் என்றார் திருமூலர். உயிர்க்காற்றினை மூச்சுப்பயிற்சி முறைப்படி தடுத்து உள்நிறுத்த வல்லவரின் உடல் பொன்னாகும். அதாவது உடல் சிவக்கும். உரோமம் கருக்கும் என்கிறார் திருமூலர். காற்றைப் பிடிக்கின் கூற்றைப் பிடிக்கலாம். உடலுக்கு அழிவில்லை எனப் பிராணாயாமத்தின் முக்கியத்துவத்தைக் குறிக்கின்றார் திருமூலர் பெருமான்.

பிராண வாயுவின் ஓட்டத்தைச் சரம் என்று கூறுவர். வாரத்தின் எந்தெந்த நாட்களில் எந்தெந்த நாசிகளின் வழியே பிராண வாயு ஓடவேண்டும்,

சரவோட்டம் நடைபெறும் என்பதையும் திருமூலர் வாரசரம் பகுதியில் விளக்குகின்றார்.

வெள்ளி, திங்கள், புதன் ஆகிய கிழமைகளில் இடது நாசியின் வழியாகவும், சனி, ஞாயிறு, செவ்வாய் ஆகிய கிழமைகளில் வலது நாசியின் வழியாகவும் பிராண வாயு ஓடுதல் வேண்டும். வளர்பிறை வியாழக்கிழமை இடகலை நாடி வழியாகவும், தேய்பிறை வியாழக்கிழமை பிங்கலைநாடி வழியாகவும் பிரணான் இயங்க வேண்டும். வெள்ளி, திங்கள், புதன் ஆகிய நாட்களில் இடகலை நாசியின் வழியாகப் பிராணன் இயங்கினால் உடலுக்கு அழிவு ஏற்படாது. இதை விடுத்து பிராணவாயு வலம் இடம் மாறிச் செல்லுமானால் உயிருக்கு இடர் வரும். இறப்பு நெருங்கும்.

தச வாயுக்கள்

பிராணன்: மஞ்சள் நிறமானது, அனாகதச் சக்கரத்துடன் தொடர்பு கொண்டு செயல்படுகிறது. மார்புப் பகுதியில் செயல்படுகிறது. முக்கியமாக மூச்சு சுவாசத்தைக் கட்டுப்படுத்துகிறது. இதன் உப பிராணன்தான் 'நாகன்' எனப்படுகிறது. இது விக்கலைக் கட்டுப்படுத்துகிறது.

அபானன்: ஆரஞ்சு நிறத்தில் இருக்கும். இது மூலாதாரத்தை மையமாகக் கொண்டு செயல்படுகிறது. மூலத்தைச் செயல்பட வைக்கிறது. மலம், மூத்திரம் வெளியேறுவதைக் கட்டுப்படுத்துகிறது.

சமானன்: பச்சை நிறமானது, மணிபூரகத்தை ஆதாரமாகக் கொண்டு செயல்படுகிறது. நாபியில் செயல்படுகிறது. ஜீரணத்தைக் கட்டுப்படுத்துகிறது. இதனுடைய உப பிராணன் 'கூர்மன்' எனப்படுகிறது. இது கண்களைத் திறக்க உதவுகிறது.

உதானன்: ஊதா நிறமானது தொண்டையில் விசுத்திச் சக்கரத்தை ஆதாரமாகக் கொண்டு செயல்படுகிறது. மரணத்தின் போது பூத உடலையும், சூக்கும சரீரத்தையும் பிரிக்கிறது. இதன் உப பிராணன் 'கிருகரன்' எனப்படும். இது பசியையும், தாகத்தையும் தூண்டுகிறது.

வியானன்: ரோஜா நிறமானது. இது சுவாதிஸ்டானத்தை ஆதாரமாகக் கொண்டு உடல் முழுவதுமாகப் பரவி நின்று செயல்படும். இது இரத்த ஓட்டத்தைச் சீராக்குகிறது. உப பிராணன்கள் 'தேவதத்தன்' மற்றும் 'தனஞ்சயன்' தேவதத்தன் கொட்டாவி விட உதவுகிறது.

தனஞ்சயன்: மற்ற ஒன்பது பிராணன்களிலும் விரவி நின்று செயல்படுகிறது. உயிர் பிரியும்போது மற்ற ஒன்பது பிராணன்களி-ருந்து பிரிந்து உடலை விட்டு இறுதியாக நீங்கும். தனஞ்சயன் உடலை விட்டு நீங்கிய பிறகே உடல் கெடத் தொடங்கும். சுவாமி அரவிந்தர் சமாதியாகி 48 மணி நேரம் வரை உடல் வெப்பத்துடன் இருந்தது. அதற்குப் பின்தான் உடல் குளிர்ந்தது. இதற்குக் காரணம் யோகியின் மரணத்திற்குப் பின்னும் 48 மணி நேரம் தனஞ்சயன் உடலைப் பிரியாதிருப்பதே.

பிராணாயாமம் பியற்சியினால் ஏற்படும் நன்மைகள்

உலகில் உள்ள மாந்தர்கள் அனைவரும் முழுமையாகச் சுவாசிப்பதில்லை. ஒவ்வொருவரின் நுரையீர-ன் சக்தியை விடக் குறைவாகவே சுவாசிக்கிறார்கள். இதனால் நுரையீரல் நாளடைவில் சிறுத்துப் போகின்றது. பிராணாயாமம்

செய்வதால் நுரையீரல் மீண்டும் அதன் முழு வ-மையையும் அடைந்து பெரிதாகிறது.

பிராணாயாமம் செய்வதால் அதிக ஆக்சிஜன் உள்ளிழுக்கப்படுகிறது. உட-ல் ஒவ்வொரு செல்-ற்கும் ஆக்சிஜன் செல்வதால் உடல் உறுப்புகள் சுறுசுறுப்படைந்து நன்றாகச் செயல்படும். இதனைத் திருமூலர்,

புள்ளினும்மிக்கப் புரவியை மேற்கொண்டால்
கள்ளுண்ண வேண்டாம் தானே களிதரும்
துள்ளிநடப்பிக்கஞ் சோம்பு தவிர்ப்பிக்கும்
உள்ளது சொன்னோம் உணர்வுடை போயிருக்கே

(566)

விளக்கம்

ஆக்சிஜன் அதிகமாக உள்ளிழுக்கப்படுவதாலும், பத்துப் பிராணன்களும் சிறப்பாகச் செயல்படுவதாலும் உடம்பில் நல்ல மாற்றம் உண்டாகும். இளமை திரும்பும் இதனைத் திருமூலர்.

புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை
நெறிப்பட வுள்ளே நினமல மாக்கில்
உறுப்புச் சிவக்கும் உரோமங் கறுக்கும்
புறப்பட்டுப் போகான் புரிசடை யோனே (575)

விளக்கம்

பிரணாயாமம் செய்வதால் வாழ்க்கை சிறந்து வாழ்நாள் அதிகரிக்கும் மனிதன் தினமும் 21,600 முறை சுவாசித்தால் மனிதன் 120 வருடங்கள் வரை வாழலாம். ஆனால் சாதாரண மனிதர்கள் முப்பதாயிரம் தடவைக்கும்மேல் சுவாசிக்கிறார்கள். சாதாரணமாக அளவுக்கு அதிகமாகச் சுவாசித்தால் வாழ்நாள் சுருங்கும். பிராணாயாமம் செய்வதால் சுவாசம் செய்யும் முறையில் மாற்றம் அடைந்து மூச்சு ஆழமாகவும், அழுத்தமாகவும் செல்லும். இதனால் சுவாசிக்கும் எண்ணம் படிப்படியாகக் குறைந்து 21,600 வரை வரும். இதனால் வாழ்நாள் அதிகரிக்கும்.

உயிரினங்களிலேயே அதிக நாள் வாழ்வது கடலாமை. கட-ல் வாழும் இந்த ஆமை சுமார் 500 வருடங்கள் வரை வாழ்கிறது. இதற்குக் காரணம் அது மெதுவாகச் சுவாசிப்பதைக் காணலாம்.

பிராணயாமத்தால் வாழ்நாள் அதிகரிக்கும் என்பதைத் திருமூலர்,

ஏற்றி யிறக்கி இருகாலும் பூரிக்கும்
காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை யுதைக்கும் குறிரியது வாமே! (571)

விளக்கம்

பிராணாயாமம் செய்வதனால் இளமை உண்டாகும் என்பதைத் திருமூலர்,

வளியினை வாங்கி வயத்தில் அடக்கல்
பளியங் கொத்தக் காயம் பழுக்கினும் பிஞ்சாம்
தெளியக் குருவின் திருவருள் பெற்றால்
வளியினும் வேட்டு அளியனு மாமே! (569)

விளக்கம்

பிராணாயாமப் பயிற்சி செய்பவன் காற்றை இழுத்துத் தன்வசப்படுத்தி அடக்கியிருந்தால் உடல் பளிங்கைப் போல் மாசு இல்லாது தூய்மையுடையதாய் முதுமை அடைந்தாலும் இளமைத்தோற்றம் உண்டாகும். இதனைத் தெளியக் குருவின் அருளையும் பெற்று விட்டால் அவன் உடம்பானது காற்றையும்விட மேன்மை உடையதாகும். அவன் எங்கும் செல்லும் ஆற்றலைப் பெற்று மேன்மையடைவான்.

பிராணாயாமத்தில் கும்பகம் செய்வதால் அருள் உண்டாகும் என்பதைத் திருமூலர்.

மேல்கீழ் நடுப்பக்க மிக்குறப் புரித்துப்
பாலாம் இரேசகத்தால் உட்பதிவித்து
மாலாகி உந்தியுள் கும்பித்து வாங்கவே
ஆலாலம் உண்டான அருள் பெறலாமே (572)

விளக்கம்

பிராணாயாமம், செய்பவனுக்குப் பிறவி நீங்கும்.

பிராணன் மனத்தொடும் போது அடங்கிப்
பிராணன் இருக்கின் பிறப்புஇறப்பு இல்லை
பிராணன் மடைமாறிப் பேச்சு அறிவித்துப்
பிராணன் நடைபேறு பெற்று உண்டீர் நீரே (567)

விளக்கம்

உலகை எண்ணாதவனுக்குப் பிராணனும் மனமும் அடங்கி ஒடுங்கின் பிறப்பு இறப்பு இல்லை. சீவன் தன் வியகத்தியில் வைகரி வாக்குத் தோன்றிப் பிராணனும் நிலைதடுமாறிப் பிராணன் ஒடுங்காதபோது பிறப்பு இறப்பில் உழல்வர்.

பிராணாயாமம் செய்வதால் காலனை வெல்லலாம் என்று திருமூலர்,

இட்ட தவ்வீடு இளகாது இரேசித்துப்
புட்டிப் படத்தச நாடியும் பூரித்து
கொட்டிய பிராணன் அபானமும் கும்பித்து
நட்டம் இருக்க நமன் இல்லை தானே (574)

விளக்கம்

இவ்வுடல் தளர்ச்சியடையாமல் இரேசகம் செய்து பத்து நாடிகளும் விம்மும்படி காற்றை உள்ளே இழுத்து நிரப்பிப் பிராணன், அபானன், சேரப்பெற்று நேராய் நிமிர்ந்திருக்க இயமனால் உண்டாகும் பயம் ஏற்படாது.

பிராணாயாமம் செய்வதால் திருவைந்தெழுத்தின் வடிவம் பெறலாம்.

கூடம் எடுத்துக் குடிபுக்க மங்கையர்
ஓடுவர் மீளுவர் பன்னிரண்டு அங்குலம்
நீடுவர் எண்விரல் கண்டிப்பர் நால்விரல்
மீடிக் கொளின் கோல அஞ்செழுத்து ஆமே (576)

விளக்கம்

உடலை இடமாகக் கொண்ட பிராண சக்தி குழந்தையாக இருந்தபோது பன்னிரண்டு விரல் அளவு நீளம் சென்றும் புகுந்தும் இருந்தது. வயது

முதிர்ந்த போது தொண்டைக்கு மேலே தலையில் செல்லும் நான்கு விரல் அளவைத் துண்டித்து விட்டு எட்டு விரல் அளவே செயல்படுகின்றது. மேலே தடைப்பட்ட நான்கு விரல் அளவையும் செய்து கொண்டால் பயிற்சியாளர் திருவைத்தெழுத்து வடிவத்தைப் பெறலாம்.

பிராணாயாமம் செயய்வதால் துரிய புவியில் இருக்கலாம்.

பன்னிரண் டானைக்குப் பக-ர வுள்ளது
பன்னிரண் டானையைப் பாகன்றிகிலன்
பன்னிரண் டானையைப் பாகன் அறிந்தபின்
பன்னிரண் டானைக்குப் பக-ர வில்லையே (577)

விளக்கம்

பன்னிரண்டு விரல் அளவு செயற்படும் பிராணனான கதிரவனுக்குப் பகல் என்றும் இரவு என்றும் காலங்கள் உண்டு. மூக்கி-ருந்து தொண்டை வழியாய் கீழ்நோக்கிப் பாய்வதால் தலையில் உள்ள ஆன்மா அறியவில்லை. கீழ்முகம் அறிந்தால் பிராணன் என்ற கதிரவன் இரவு பகல் இல்லாமல் எப்போதும் ஒளி வீசும்.

பிராணாயாமம் செய்வதால் மனக்குழப்பம் மற்றும் அச்சம் அகலும். சரிவரச் சுவாசிக்காமல் இருந்தால் இரத்தத்தில் கார்பன்டை ஆக்ஸைடு அளவு அதிகரிக்கும். கார்பன்டை ஆக்ஸைடு இரத்தத்தில் கலந்து கார்பானிக் ஆஸிட்டாக மாறும். கார்பானிக் ஆஸிட் உடல் உறுப்புகளை வலுவிழக்கச் செய்யும். மனக்குழப்பத்தையும் அச்ச உணர்வையும் ஏற்படுத்தும். பிராணா யாமம் செய்வதால் ஆக்சிஜன் இரத்தத்தில் அதிகமாகி மனக்குழப்பத்தையும், அச்சத்தையும் விலக்கும்.

பிராணாயாமப் பயிற்சியால் சுத்த சத்வமான சித்தத்தை மூடிய ரஜஸ, தமோ மறைப்புகள் நீங்குகின்றன.

சித்தம் சுத்த சத்துவத்தால் உண்டாகி இருப்பதால் ஒளி வடிவானது.

ரஜஸ், தமஸ் என்பவை பாப வடிவான கிலேசங்களாக அந்த ஒளியை மூடியிருக்கின்றன.

பிராணாயாமப் பயிற்சியினால் இந்த மறைவு நீங்க ஒளி வடிவான சித்தத்தின் காட்சி கிடைக்கிறது.

பிராணாயாமப் பயிற்சியில் சிலசமயம் ஒளி தெரிவதன் காரணம் இதுவே.

அறியாமை நீங்கி அறிவும் துக்கம் நீங்கிச் சுகமும் உண்டாகிறது.

பிராணாயாமம் செய்யும் முறை

1. கபாலபாதி: பத்மாசனத்தில் இருந்துகொண்டு மூச்சை வேகமாக வெளியே தொடர்ந்து விடும் பயிற்சியாகும். தொடர்ந்து 30 தடவை செய்து கொண்டு சிறிது ஓய்வு எடுக்க வேண்டும். திரும்பவும் 30 தடவை வீதம் இரண்டு தடவை செய்ய வேண்டும். கபாலப் பாதியினால் கபாலத்திற்கு நல்ல இரத்த ஓட்டம் கிடைக்கும். கண், மூக்கு, தொண்டை, காது பகுதிக்கும் நல்ல இரத்த ஓட்டம் கிடைக்கும்.

நுரையீரலுக்கு நல்ல பயிற்சி கிடைக்கிறது. நுரையீர-ல் தங்கியிருக்கும் கார்பன்டை ஆக்ஸைடு முற்றிலுமாக வெளியேறி நுரையீரல் விரிவடைகிறது.

நெஞ்சுப் பகுதியையும் வயிற்றுப் பகுதியையும் பிரிக்கும் உதரவிதானம் நன்றாக மேலும் கீழும் இறங்கிப் பயிற்சியடைகிறது. இதனால் ஜீரண சக்தி பெருகும்.

உட-லுள்ள அனைத்து நரம்பு மண்டலத்திற்கும் பயிற்சி கிடைத்து மன இறுக்கத்தால் நரம்புகளில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் சீரடைகின்றன.

இரத்த ஓட்டம் உடல் முழுவதும் அதிகமாகும். இரத்த அழுத்த நோய் உள்ளவர்கள் குருவின் உபதேசப்படிதான் இந்தப் பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு தனி மனுதனுக்கும் இஷ்ட சக்கரம் மாறும். குரு / ஆச்சாரியர் தனி மனிதனின் ஊழ்வினை நிலைகளைப் பகுத்து அறிந்து அதற்கு ஏற்றவாறு குரு இஷ்ட சக்கரத்தைக் குறிப்பிடுவர்.

நாடி சுத்திப் பிராணாயாமம்

மனிதன் தூங்கும் போது உடம்பில் உள்ள எல்லா உறுப்புகளும் ஓய்வு எடுத்தாலும் சிறுநீரகம், நுரையீரல் மற்றும் இதயம் ஓய்வெடுப்பதில்லை. அவை செயல்பட்டுக் கொண்டேதான் இருக்கும். இவை முழுமையாக ஓய்வெடுப்பதில்லை.

ஒரு சிறுநீரகம் ஓய்வெடுக்கும் போது அடுத்த சிறுநீரகம் வேலை செய்யும். அடுத்த சிறுநீரகம் ஓய்வெடுக்கும் போது மறு சீறுநீரகம் வேலை செய்யும். இரண்டு சிறுநீரகங்களும் மாறி மாறி சமநேரம் ஓய்வெடுக்கும்.

இதேபோன்று இதயம் சிறு சிறு பகுதியாக ஓய்வெடுக்கும்.

நுரையீர-ன் வலது பக்கம் உள்ள பகுதி பாதி ஓய்வு மற்றும் பாதி வேலை செய்து கொண்டிருக்கும். சுமார் 30 நிமிடம் ஆனதும் வலதுபக்கம் உள்ள பகுதி முழுதாக வேலை செய்யும். இடது பக்கம் உள்ள பகுதி பாதி வேலை, பாதி ஓய்வு என்று செயல்படும்.

இரண்டு பகுதி நுரையீரல்கள் சமநேரம் ஓய்வெடுக்க வேண்டும். இதில் எது ஒன்று அதிக ஓய்வெடுத்தாலும் அது உட-ன் ஒரு பக்கத்தையும் மனதையும் பாதிக்கும்.

சமனுப் பிராணாயாமம் இரண்டு நுரையீரல் பகுதிகளையும் சமமாக வேலை செய்ய உதவுகிறது.

51. திருமூலர் காட்டும் விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்



எம். வெங்கடாசலபதி
YHC, DYHE, TMV *மனவளக்கலை பேராசிரியர்*
திருவொற்றியூர், சென்னை-119.
email: srivinothengineering@gmail.com
கைபேசி: 9444187969/7299090009

மனித இனம் தோன்றி எத்தனையோ ஆயிரம் ஆண்டுகள் சென்றுவிட்டன. ஆண்டுக்கு ஆண்டு மனிதனுடைய வாழ்க்கையில் புதிய புதிய கருத்துகளும் தேவைகளும் அவற்றை முடித்துக் கொள்ளக்கூடிய திறமைகளும் பெருகிக் கொண்டுதான் வருகின்றன. இந்த அடிப்படையான தேவைகளை அன்போடும் கருணையோடும் சரியை, கிரியை, யோகம், ஞானம் உணராதவர்களுக்கு உணர்ந்தவர்கள் உதவி செய்வதுதான் திருமந்திரம்.

திருமந்திரமும், வாழ்வியலும்

கல்வி முறையானது பல வாழ்க்கைத் துறைகளில் சிறந்து விளங்குகின்றது. இந்தக் காலத்திற்கேற்பக் கல்விமுறை விஞ்ஞானமும், மெய் ஞானமும் கலந்துள்ளதால் திருமந்திரத்திலுள்ள கருத்துரைகளையும் சிறப்புகளையும் மனித குலத்திற்கே வழிகாட்டியாகவும் வாழ்வில் அனுபவம் மிக்க அறிஞர்களுடைய கடமையாம். திருமந்திரத்தில் மூன்றாம் தந்திரம், அட்டாங்க யோகம் முதல் சந்திரயோகம் வரை இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்திங்காரம், தாரனை, தியானம், சமாதி என்ற எட்டையும் யோகத்தின் அங்கமாக அட்டாங்க யோகத்தில் ஆசனம் பிராணயானம், தியானம் என்கிற சில கருத்துகளை எடுத்துக் கொண்டு அவைகளை விஞ்ஞானப் பார்வையில் திருமூலர் கூறியவை ஆராயப்பட்டுள்ளன.

மூன்றாம் தந்திரமான அட்டாங்கயோகம் என்ற தலைப்பில் ஆய்வு கொள்வோம்

எட்டு உறுப்புகளோடு கூடிய யோகம் என்பது கருத்து, இதனை இராசயோகம் என்று கூறுவர். இதற்குப் பதஞ்ச-யையே மேற்கோளாகக் காட்டுவர். ஆயின் திருமூலர்யோகம் இனம்கண்டு பாராட்டக் கூடிய தனிச்சிறப்பு உடையது. இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பவை இவ்வெட்டு உறுப்புகள் ஆகும். யோகத்தின் பயன் ஞானம் என்பது இவற்றின் பயனாகும்.

அட்டாங்க யோகத்தின் பயனைக் கூறும்போது இயமத்தால் அமராபதிக்கே செல்வர். நியமத்தால் சிவபதம் சேர்வர். ஆசனத்தால் அமராபதிச் செல்வன் ஆவர். பிராணாயாமத்தால் சிவகதி சென்று எய்துவர். பிரத்தியாகாரத்தால் அரணாவர். தாரணையால் நமன்வழி மாற்றுவர். தியானத்தால் மும்மூர்த்திகளும் தன்னடமாவர் எனத் திருமூலர் விளக்குகின்றார்.

திருமூலர் காட்டும் ஆசனங்கள்

1. சுவத்திகாசனம் (558)

நீண்ட நேரம் அமர்ந்து யோகசாதனை செய்வதற்கு அமரும் நிலை மிக முக்கமானது. அதில் பங்கய ஆசனம் என்கின்ற பத்மாசனத்தைவிட, சுவத்திகம் என்கின்ற சுகாசனமே சிறந்தது என்கின்றார். இது உட்காருவதற்குச் சுகமானது. ஆசன வகை எட்டில் சுவத்திகாசனம் முதலாகக் கூறப்படுகின்றது.

முறை: முழங்காலுக்கும் தொடைக்கும் நடுவில் இரு பாதங்களையும்கீழே வைத்து உடல் நிமிர்ந்து உட்கார்ந்திருப்பது சுகாசனம்.

பயன்கள்: மனத்தை ஒருநிலைப்படுத்தி மனச்சஞ்சலத்தையும், சோர்வையும் நீக்கும். முழங்கால் மூட்டுவ- நீங்கும்.

2. பத்மாசனம் (தாமரை இருக்கை) (559)

முறை: இருகால்களையும் முயற்சியால் தொடைமேல் சேர்த்து இரு தொடையின் மத்தியிலும் இருகைகளையும் ஒன்றன்மேல் ஒன்றாக மலர்ந்த பாவனையில் வைத்து மூக்குநுனியில் கண்பார்வையை அசைவர வைத்து மூச்சினைக் கவனிப்பது.

பயன்கள்: இது உடலுக்கும், மனத்துக்கும், ஆன்மாவுக்கும் ஒரே நேரத்தில் பயனளிக்கும் உன்னத ஆசனம். குதிங்கால் வ-, இடுப்புவ-, பிடிப்பு, நரம்பு நோய்கள் நீங்குவதுடன் அடிவயிறு பிரச்சினைகள் நீங்கிச் சுவாசம் நேர்படும்.

3. குக்குட ஆசனம் (கோழி இருக்கை) (561)

முறை: குக்குடம் என்பது கோழியாகும். குக்குட ஆசனமாவது பாதங்கள் இரண்டையும் தொடையின்மேல் மாறி ஏற்றிக் கணைக் காலுக்கும் தொடைக்கும் இடையே இருகைகளையும் நுழைத்துத் தரையில் ஊன்றி உடம்பை முழங்கை வரையில் முக்கித் தூக்கி நிறுத்துதல் குக்குட ஆசனமாகும்.

பயன்கள்: கால் நோய், மூட்டுப்பிடிப்பு வாயுத்தொல்லை நீங்கும் உடல் எடையும் குறையும், தொந்தி வராது.

4. கோமுகாசனம் (563)

முறை: கோமுகாசனம் என்பது பசுவின் முகம்போல் இருத்தல். இடப்பக்கம் பின்பாகத்தில் வலக்கால் பரட்டினையும் வலப்பக்கம் பின்பாகத்தில் இடக்கால் பரட்டினையும் சேர்க்க அமைவதால் இது பசுமுகம்போல் தோன்றும்.

5. வீராசனம்

முறை: வீராசனமாவது வலப்பக்கத் தொடையின்மேல் இடக்கால் சேர்த்து இறுமாந்திருத்தல் வீராசனம் ஆகும்.

பயன்கள்: ஆண்களுக்கு விந்து வலுப்பெற்று உயிரணு எண்ணிக்கை கூடும். நீடித்த தாம்பத்தியம்; பெண்கள் மகப்பேறுக்குப் பின் அடிவயிற்றுச் சதை குறையும்.

திருமூலரின் அட்டாங்க யோகத்தின் தியானத்தின் விஞ்ஞான, மெய்ஞான கருத்துக்கள்

மெய்ப் பொருளாக விளைந்தது ஏதெனின்
நற்பொருளாகிய நல்ல வசித்துவம்
கைப்பொருளாகப் கலந்த உயிர்க்கு
எல்லாம் தந்பொருள் ஆகிய தன்மையான ஆகும் (688)

கருத்துரை: உண்மைப் பொருளாகத் தியானம் முதலியவற்றால் உண்டாவது எது வென்றால் நல்லது என்று பாரட்டப்படும் கவர்ந்திடும் தன்மையாகும்தன் விருப்பப்படி செய்யும் உயிர் இனத்துக்கு எல்லாம் சிவமான தன்மையே பெறுவான்.

பூதம் ஐந்து, புலன் ஐந்து அந்தக்காரணம் நான்கு மாயை ஒன்று ஆக சிவம் ஒன்று ஆகப் பதினொரு தத்துவங்களும் புத்தியில் ஒடுங்குவது தியானமாகும்.

இந்த நிலையைப் பெற்றவர்களின் அனுபவங்களே நாதங்களைக் கேட்பதாகும். மணி, கடல், யானை, குழல், மேகம், வண்டு, தும்பி, வளை, பேரிகை, யாழ் எனப் பத்துவித நாதங்களைக் கேட்க முடியும் என்கின்றார் திருமூலர். இந்த நாதங்களைக் கடந்த நிலையே எதார்த்த நிலை எனப்படும். ஓசை முடித்த இடமே திருவருள் வெளிப்படும் இடமாகும். அதுவே அகத்தவம் அத்தவப் பேறே திருவடியுணர்வாகும்.

தியானத்தில் இருவகை பற்றி த் திருமூலர் கூறுகிறார்

வரும் ஆதி ஈரெட்டுள் வந்த தியானம்
பெருவாதே புந்தி புலன் போகுமேவல்
உருவாய் சக்தி பரத்தியான முன்னும்
குரு ஆர் சிவத்தியானம் யோகத்தின்கூறே (598)

கருத்துரை: புத்தியும் புலனும் நீங்கியிருக்கும் தியானம் அதுவடிவோடு கூடிய சக்தியை மேலாக எண்ணுதலான பரத்தியானம் (நிர்குணம்). ஒளிவுடைய சிவனை எண்ணுவதும் சிவத்தியானம் (சகுனம்).

தியானம் செய்யும்போது மனதைப் புருவ மத்தியில் குவிக்க வேண்டும். இதுதான் சுழுமுனை நாடியின் இடம் இதுவே ஆத்மாவின் உறைவிடமாகும் என பல நூல்கள் கூறுகின்றன.

தியானம் செய்யும்போது குண்டலினி சக்தியானது புருவமத்தியில் குவியும் இது ஜீவ சக்தியாகும் (Bio Magnatisiam) இந்தச் சக்தி மூளையின் அடியில் உள்ள நாளம்மில்லாச் சுரப்பியான பிட்யூட்டரியில் சென்று இச்சக்தியே உயிர் இரசாயமாக மாறுகின்றது. இது உடலியியல் இரசாயனமாகும். இந்தச் சுரப்பி பன்னிரண்டு விதமான இரசாயங்களை உற்பத்தி செய்கின்றது. இது உடலைச் சீராக இயங்கச் செய்யும் மற்ற சுரப்பிகளையும், இயக்கும். உடல் வளர்ச்சியையும் உடலில் உள்ள 8 மண்டலங்களையும் இயக்கி வருகின்றது. இந்த உயிரியல் இரசாயனம் குறைந்தாலும் அதிக அளவு சுரந்தாலும் உடலுக்கும் மனதிற்கும் ஆபத்தை விளைவிக்கும். தியானிக்கும்போது மன அலை சூழல் குறைந்து மனம் அமைதி நிலை அடைந்து சுரப்பிகள் அனைத்தும் நல்ல நிலைக்குத் திரும்புகின்றன.

உணர்ச்சி வயப்பட்ட நிலையில் ஜீவசக்தி விரையம் ஏற்பட்டுச் சுரப்பிகள் பழுதுடைந்து நோய் ஏற்படுகின்றது. இதற்கு உதாரணம் சர்க்கரை வியாதி, தைராய்டு வியாதிகள்.

நாட்டம் இரண்டும் நடுமூக்கில் வைத்திடில்
வாட்டமும் இல்லை மனைக்கம் அழிவில்லை
ஓட்டமும் இல்லை உணர்வு இல்லை தான் இல்லை
தேட்டமும் இல்லை சிவன் ஆமே (604)

கருத்துரை: மனிதனே தியானம் செய்யும்போது முக்தி நிலையில் இறைவனாக மாறுகின்றான்.

நயனமிரண்டும் நாசிமேல் வைத்திட்டு
உயர் வெழா வாயுவை உள்ளேயடக்கித்
துயரள நாடியே தூங்க வல்லார்க்குப்
பயனிது காயம் பயமில்லை தானே (605)

கருத்துரை: இருகண் பார்வையும் புருவ நடுவில் வைத்து உயர்வினின்று தாழாத பிராணனை உள்ளே அடக்கத் துன்பம் தரும் மனம் முதலியவற்றை நீக்கி யோக நித்திரை செய்பவர்க்கு எடுத்தவுடல் பயனைத் தருவதாக அமையும் கூற்றுவனால் உண்டாகும் அச்சமும் இல்லை சிவனைச் சிந்தைக்குள் வைத்து வழிபட வேண்டும்.

ஒரு பொழுதுன்னார் உடலோடுயிரை
ஒரு பொழுதுன்னார் உயிருள் சிவனை
ஒரு பொழுதுன்னார் சிவனுறை சிந்தனையை
ஒரு பொழுதுன்னார் சந்திரப் பூவையே (601)

உடலுடன் பொருந்தியுள்ள உயிரை ஒரு பொழுதும் நினைக்கமாட்டார்கள். சிவன் வீற்றிருக்கின்ற சிந்தனையும் ஒரு பொழுதும் எண்ண மாட்டார்கள். சந்திரமண்டலத்தில் விளங்கும் சிவனைத் தியானிக்க வேண்டும் தியானிப்பவர்களுக்குக் கேட்கும் ஒலிகளைப் பற்றித் திருமூலர்,

மணி கடல் யானை வளர்குழல் மேகம்
அணிவண்டு தும்பி வளை பேரிகையாழ்
தனித்தெழ நாதங்கள் தாம் இவைபத்தும்
பணிந்தவர்க்கு அல்லது பாக்க வொண்ணாதே (606)

கருத்துரை: மணி, கடல், யானை, புல்லாங்குழல், மேகம், வண்டு, தும்பி, சங்கு பேரிகை, யாழ் என்பவனவற்றின் நுட்பமான ஒலிகள் பத்தும் தியானத்தை மேற்கொள்பவர்களுக்கின்றி மற்றவரால் அறிய முடியாது. தியானத்தின் போது ஆத்மதரிசனம் கிட்டும்.

நடலித்த நாசிக்கு நால்விரல் மேலே
மடலித்த வாணக்கு இருவிரல் உள்ளே
கடலிந்து இருந்து கருத வல்லார்கள்
சடலத் தலைவனைத்தாம் அறிந்தாரே (616)

கருத்துரை: அசைவை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் கொப்பூழ் சக்கரத்திற்கு நான்கு விரல் மேல் ஊர்த்துவ முகமாய் மேலே செல்லும் வாக்கு

வெளிப்படும் தொண்டை சக்கரத்திற்கு இரண்டு விரல் அளவிற்குக் கீழே இருக்கும் அநாதகச் சக்கரத்தில் கடலில் ஒலிபோல் பொங்கி எழும் ஒலியைத் தியானம் செய்ய வல்லவர் உடலுக்குரிய ஆன்மாவை அறிந்தவர் ஆவர். தியானத்தில் நாதத்தில் இறைவன் விளங்குவதைக் காணலாம்.

ஈசன் இயல்பும் இமையவர் ஈட்டமும்
பாசம் இயங்கும்பரிந்து உயிராய் நிற்கும்
ஓசை அதன்மனம் போல் விடுவது ஓர்
ஓசையாம் ஈன் உணர வல்லார்க்கே (608)

கருத்துரை: இறைவனின் இயல்பும் தேவர் கூட்டச் சேர்க்கையும் பாசத்தின் இயக்கமும் பாசத்தை விட்ட உயிராய் நிற்பதும் நாதமாகும். அதை உணரும் வல்லமை உடையவருக்கு பூவில் வெளிப்படும் நறுமணம் போல் ஈசன் நாதத்தில் விளங்குகிறான் என்பது புரியும்.

நாத முடிவிலே நல்லாள் இருப்பது
நாத முடிவிலே நல்யோகம் இருப்பது
நாத முடிவிலே நாட்டம் இருப்பது
நாத முடிவில் நஞ்சுண்ட கண்டனே (616)

கருத்துரை: தியானத்தால் இறைவன் திருவடியை அடையலாம். தியானத்தால் இறைஉணர்வும் அறநெறியும் அடையும் வினைகள் நீங்கிப்பதிவுகள் கரைத்து இறைவனை பற்றுதல். "உதிக்கின்ற ஆறினும் உள் அங்கி ஐந்தும் உடைத்தூக்கி இருள் நீக்கி அதிக்கின்ற ஐவரும் நாம் ஒருங்கக் கதிக்கின்ற கொன்றை ஈசன் கழல் சேரல்ஆமே.

உதிக்கின்ற ஆறினும் உள் ஐந்தும்
துக்கின்ற தேசு உடைத்தூங்கி இருள் நீங்கி
அதிக்கின்ற ஐவரும் நாதம் ஒருங்கக்
குதிக்கின்ற கொன்றை ஈசன் கழல் சேரல் ஆமே (610)

கருத்துரை: ஆறு ஆதாரங்களின் தோன்றும் ஐந்து வகைத் தீயும் துதிக்கின்ற ஒளியுடன் கூடிய நில ஒளியை அகன்று இயங்குகின்ற ஐந்து தன்மாத்திரைகளில் ஒன்றான சத்தம் ஒருங்கப் பொன்னொளியில் விளங்கும் இறைவன் திருவடியைச் சேரலாம்.

தியானத்தில் ஒளியைக் காணலாம். பள்ளியறையிலே பகலே இருள் இல்லை கொள்ளியறையில் கொளந்தாமல் காக்கலாம். ஒள்ளிது அறையில் ஓர் ஆசனை நீளிது வெள்ளி அறையில் விடிவு இல்லை தானே.

தியானத்தில் ஒளியைக் காணலாம்
பள்ளியறையிலே பகலிலே இருள் இல்லை
கொள்ளியறையில் கொளுந்தாமல் காக்கலாம்
ஒள்ளிது அறையில் ஓர் ஓசனை நீளிது வெள்ளி
அறையில் விடிவு இல்லை தானே (611)

கருத்துரை: ஐம்பொறிகள் ஓய்வு பெறும் பள்ளியறை என்ற பராவத்தையில் ஒளி மட்டும் விளங்கும். இருள் இல்லை. ஒலி மட்டும் இருப்பதால் வேறு அக்கினிக் கொளுத்தாமல் காக்கலாம். ஒளியுடைய இந்நிலையை அறியான் அதுநான்கு காத

தொலைவுடையது. தியானத்தால் அடையப் பெறுவது இருளே அங்கு இல்லாத காரணத்தால் விடிவு இல்லை. தியானத்தில் மூன்று மண்டலங்களிலும் பொருந்திச் சென்றால் ஒளியுண்டாகும்.

இளைக்கின்ற நெஞ்சத்து இருட்டறை உள்ளே
முளைக்கின்ற மண்டலம் மூன்றிலும் ஒன்றித்
துளைப்பெரும் பாசம் துருவிடு மாகில்
இளைப்பு இன்றி மார்கழி எற்றம் அதுரு அமே. (614)

கருத்துரை: உலக இயல் மயங்கித் தவிக்கின்ற உள்ளம் என்ற இருட்டறையில் தோன்றும் மூன்று மண்டலங்களுள் பொருந்தி உச்சிதுளை வழியாகச் சிவத்திடம் மிக்க அன்பு கொண்டு ஆராய்ந்து மேலே சென்றால் துன்பம் நீங்கித் தலையில் விடியற்காலம் போல் வெளிச்சத்தைப் பார்க்க இயலும்.

இங்கே திருமூலர் அழகான விஞ்ஞான விளக்கம் கூறுகின்றார். "உச்சிதுளை வழியாகச் சிவத்திடம் மிக்க அன்பு கொண்டு".

இறை நிலைக்கான நுழைவாயில் துரியம். எனப்படும் சகஸ்தரதாரம் ஆயிரம் தாமரை இதழுடையது என்று வர்ணிக்கின்றார். இவ் வாற்றல் மூளையின் உட்பகுதியில் உள்ள பீனியன் சுரப்பியைச் சிறப்பாக வேலை செய்ய வைக்கின்றது. இதனால் உருவாகும் இரசாயனம் மெலடோனியம் சரடோனியம் இவை சுரப்பதைக் கண்ட மகான் திருமூலர் அமிர்தம் என்று கூறியுள்ளார். இதனால் மூளையின் அனைத்துச் சிற்றறைகளும் இயங்கும். இறை நிலையடைய முடியும். தன் உணர்வோடு "சிவத்திடம் அன்பு கொள்ள முடியும். பிரபஞ்சத்தை அதன் இயக்கத்தை அதன் மூல நிலையை ஆராய முடியும் என்று கூறுகின்றார். மனித வாழ்க்கையிலிருந்து விடுபட்டு ஞானவாழ்க்கையைப் பெற முடியும் என்பது பொருள். "மேலே சென்றால் துன்பம் நீங்கித்" தன் ஆன்மா இறைவனிடம் சரணாகதி அடையும். பரம்பொருள் பேரொளியைக் காட்டி மகிழ்விக்கும்.

கண்ணாக்கு மூக்குச் செவிஞானக் கூட்டத்துள்
பண்ணாக்கி நின்ற பழம்பொருளொன்றுண்டு
அண்ணாக்கினுள்ளே அகண்டவொளி காட்டிப்
புண்ணாக்கி நம்மை பிழைப்பித்தவாறே (599)

கருத்துரை: மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஞானேந்திரியங்கள் கூடுமிடத்தில் நாதத்தை எழுப்பிடும் பழமையான பொருள் ஒன்றுண்டு: அது

அண்ணாக்குப்பகுதியில் எல்லையில்லாத பேரொளியைக் காட்டி மனம் வெளிவழி செல்லாது தடுத்து நம்மைப் பிழைக்கச் செய்வது இந்த அண்ணம் ஆகும். அண்ணத்தின் மேல் பகுதியில் மெலெட்டோனி என்கிற அரிய திரவத்தைச் சுரக்கும் பீனியல் சுரப்பி உள்ளது. இது சுரக்கும் திரவத்தையே ஞானகங்கை என்கின்றனர். இதுவே அண்ணத்தின் சிறப்பு. பெரு வெளியில் பேரொளியைக் காணலாம்.

அண்ணா நயணத்தில் உற்ற ஒளி தன்னைக்
கண்ணாரப் பார்த்துக் கலந்து அங்கு இருந்திடில்
விண்ணாறு வந்து வெளிகண்டிட ஓடிப்
பண்ணாமல் நன்றது பார்கலும் ஆமே (600)

கருத்துரை: ஞானக் கண்ணில் பொருந்திய சோதியை இரண்டு கண்களையும் பொருத்திப் பார்த்து அங்குச் சலனம் இல்லாமல் இருக்க வேண்டும். அவ்வாறிருந்தால் வான கங்கை நன்கு புலப்படும் முறையில் சிதாகாசப் பெருவெளியில் பொருந்தி நிற்கச் செய்யப்படாத சுயம்பு மூர்த்தியைக் காணலாம். சிவமாகிய சோதி நீங்காது.

மனத்து விளக்கினை மாண்பட ஏற்றிச்
சினத்து விளக்கினைச் செல்ல நெருங்கி
அனைத்து விளக்குத் திரியொக்கத் தூண்ட
மனத்து விளக்கது மாயா விளக்கே (602)

கருத்துரை: உள்ளத்தில் விளங்கும் சேதியை மாட்சிமை பொருந்த மேலே செலுத்திச் சினம் என்ற தீயை நீங்குமாறு செய்து எல்லா வற்றையும் விளங்கி நிற்கும் சிவ ஒளியைச் சுழு முனை என்ற திரியைத் தூண்டி நடந்த மனத்தில் சிவம் மங்காத விளக்காய் விளங்கும்.

தியானத்தால் உடல் அழியாது

கொண்ட விரதம் குறையாமல் தான் ஒன்றித்
தண்டுடன் ஓடித்தலைப்பட்ட யோகிக்கு
மண்டலம் மூன்றினும் ஒன்க வளர்ந்தபின்
பிண்டமும் ஊழி பிரியாது இருக்கும் (612)

கருத்துரை: சந்திர மண்டலம் அமைக்க வேண்டும் என்ற கொள்கைக்குக் குறைவு வராமல் தான் ஒன்றுபட்டு முதுகுத் தண்டில் உள்ள சுழுமுனை நாடி விழியால் மேல் நோக்கிச் சென்ற யோகிக்கு அக்கினி மண்டலம் கதிரவன் மண்டலம், திங்கள் மண்டலம், என்ற மூன்றும் ஒத்த வகையில் வளரும். வளர்ந்தபின் எடுத்த உடல் உலகம் இருக்கும் வரை சீவனை விட்டு நீங்காது.

முடிவுரை: அட்டாங்க யோகத்தில் பிரத்யாகாரம், தாரணை, தியானம், சமாதி என்ற நான்கு யோகங்களும் குருமுகமாக அணுக வேண்டிய யோகங்கள், மிகுந்த கவனமுடனும் எச்சரிக்கையுடனும் செய்ய வேண்டிய பயிற்சிகளாகும். மனிதன் மனித நேயத்துடன் வாழும் வாழ்வியல் சிந்தனையைக் கருதியே திருமூலர் அட்டாங்க யோகம் என்ற தந்திரத்தை அமைத்துள்ளார் எனலாம்.

சித்தர்கள் வழிமுறைகளை நித்தமும் பயின்ற மனிதர்கள் தெய்வநிலை எய்த இயலும். அற்புத உண்மையினை உலகிற்கீந்த திருமூலரின் மெய்ஞானமும் விஞ்ஞானமும் என்ற தொலை நோக்குத்திறனை வணங்கிப் பணிவோம்.

52. மந்திரமாவது...



முனைவர் **ஆ.தசரதன்**
பதிப்புத்துறைத் தலைவர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி,
சென்னை 600 113. தமிழ்நாடு, இந்தியா
பேசி: 9444169603 • email : drathasarathan@gmail.com

மந்திரமாவது நீறு... எனும் தொடர் திருஞானசம்பந்தர் திருஆலவாயிலில் பாடிய திருநீற்றுப்பதிகத்தின் முதல் பாடலின் தொடக்கம். திருமேனியில் பூசப்பெறும் திடப்பொருளான திருநீறு நோயுற்றவரின் (பிளவு) நோயைக் குணப்படுத்துவதற்குப் பாடப்பெற்ற பதிகமாகக் கிடைத்துள்ளது

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான் திருநீறே

திருநீற்றைப் பூசியும் பதிகத்தைப் பாடியும் திருஞானசம்பந்தர் (பிளவு) நோயைக் குணப்படுத்தியதாக அறியப்படுவதிலிருந்து இருவகையான செயல்களை அவர் செய்துள்ளார்;

1. திடப்பொருளான திருநீற்றைப் பயன்படுத்தியுள்ளார்;
2. பாடலைப் பாடியதன் மூலம் மந்திர ஒலியை (ஓசை) இசைத்துள்ளார்.

திருஞானசம்பந்தருக்கு முன் வரலாற்று அடிப்படையில் மந்திரம் என்னும் சொல்லுக்குப் பொருள் வழங்கப் பெற்றுள்ளது. அவருக்குப் பின் அச்சொல்லுக்குப் பல்வேறு பொருள்களும் மானிடவியல் அடிப்படையில் சடங்கு நிகழ்ச்சிகளும் தொடர்பு படுத்தப் பட்டுள்ளன.

அகராதிப்பொருள்கள்

நா. கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழி அகராதி, மந்திரம் என்னும் சொல்லுக்குக் கீழ்க்காணும் பொருள்களைப் பதிவு செய்துள்ளது.

ஆலோசனை, இராசமனை, உபநிடத முப்பத் திரண்டில் ஒன்று, உள், எண்ணல், ஒரு தேயம், கடல், கள்(ளு), குகை, குதிரைக் கூட்டம், குதிரைப்பந்தி, கோயில், தாழ்த்திசை, நாப்புடைப் பெயராதுச் சரித்தல், பொருப்பு, வீடு, வேதம்

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேரகராதி (Tamil Lexicon) தமிழ் நூல்களில் வரும் மந்திரம் எனும் சொல் தொடர்பான தொடர்களை எடுத்துக்காட்டிப் பல்வகைப் பொருள்களையும் வகைப் படுத்துகின்றது. அவற்றுள் சில வருமாறு:

மந்திரச் சுற்றம் (மணிமேகலை)
மந்திரக் கிழவர் (கம்பராமாயணம்)
மந்திரசாலை (சூளாமணி)
மந்திரத் தலைவர் (பெருங்கதை)

மந்திரம் தொடர்பான பிற தொடர்கள் தெய்வம் தொடர்பாக வருவதைச் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி எடுத்தாள்கிறது. சமயம் அடிப்படையிலும் மக்களின் நம்பிக்கைகள், சடங்குகள் சார்ந்தும் இவ்வகைத் தொடர்கள் சுட்டுகின்றன.

மந்திரம் என்றால் அரசனின் அரசியல் அவை

தமிழில் மிகப் பழமையான பாடலாகக் கருதப்பெறும் புற நானூற்றின் முதல்பாடல் மண்திணிந்த..... எனத் தொடங்குகிறது. இதை முரஞ்சியூர் முடிநாகராயர் பாடியுள்ளார். இதில் சேரமான் பெருஞ்சோற்று உதியன் சேரலாதனை இப்புலவர் போற்றிப் பாடியுள்ளார். இப்பாடலின், (19ஆம் அடியில் இச்சேரலாதன் தன் 'திரியாச் சுற்றத்துடன் நீடுழி வாழ்க' என வாழ்த்தியுள்ளார். இப்பாடலுக்கு உரையெழுதிய பழைய உரையாசிரியர்

வேறுபாடில்லாத சூழ்ச்சியையுடைய மந்திரச்
சுற்றத்தோடு ஒழியாது நெடுங்காலம் விளங்கித்
துளக்க மின்றி நிற்பாயாக

என்கிறார். 'மந்திரச் சுற்றம்' என்பதைக் கம்பராமாயணமும் குறிப்பிடுகிறது. அமைச்சர்கள் சூழ அரசன் இருப்பதைப் புறநானூறும் கம்பராமாயணமும் குறிப்பிடுகின்றன.

'திரியாச் சுற்றம்' என்பதை நச்சினார்க்கினியர் தொல்காப்பியப் புறத்திணை 36ஆம் நூற்பாவுக்கு உரை எழுதும்பொழுது எடுத்தாள்கிறார். அரசனைக் கூறும் பொழுது,

.....திரியாச் சுற்றமொடு விளங்கி
நடுக்கின்றி நிற்பாய்.....

என்பது அவர் உரையாகும்.

தொல்காப்பியம் செய்யுளியல் 176ஆம் நூற்பாவில்

நிறைமொழி மாந்தர் ஆணையின் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப

என்பதில் கூறப்பட்டுள்ள மந்திரம் என்னும் சொல்லுக்கு மேற்சுட்டிய 'சுற்றம்' அடிப்படையில் பொருள் அமையாது, ஒலி (ஓசை) அடிப்படையில் பொருள் காணப்பட்டுள்ளது. இந்நூற் பாவுக்குப் உரை எழுதிய பேராசிரியர்

புறத்தாற்குப் புலனாகாமல் மறைத்துச்
சொல்லும் சொற்றொடர் எல்லாம் மந்திரம்
எனப்படும்

என்கிறார். இதற்குச் சான்றாதாரமாகத் தமிழைப் பழித்த குயக்கொண்டானை நக்கீரரின் மந்திரப் பாடல்கள் சாகவும் மீண்டும் உயிர்பெற்று எழவும் செய்ததைச் சுட்டிக்காட்டுகின்றார். தொல்காப்பியர் குறிப்பிடும் நிறைமொழி மாந்தரையும் அவர்தம் மறைமொழியையும் திருவள்ளுவரும் குறிப்பிட்டிருப்பது (குறள் 28) சாலச்சிறந்தது. நிறைமொழி மாந்தர் கவிஞராகவும் சாபம் அல்லது வசை பொழியும் திறன் வாய்ந்தவராகவும் சாமியாடியாகவும் மருத்துவராகவும் குறிசொல்பவராகவும் அமையலாம்.

சென்னை ஆசியவியல் நிறுவன இயக்குநர் முனைவர் ஜி.ஜான் சாமுவேல் அவர்கள் முனைவர் ஆ. தசரதன் எழுதிய தமிழில் வசைப்பாடல்கள் (1994) என்னும் நூலுக்கு எழுதிய அணிந்துரையில் இனக்குழுச் சமுதாயக் கவிஞன் தீர்க்கதரிசியாகவும் தெய்வ வழிபாடுகளை முன்னின்று நடத்துபவனாகவும் மருத்துவனாகவும் செயல்பட்டான் என்கிறார். மேலும் அவர், 'இக்கவிஞன் போன் றோரில் சிலர் தனியுடைமை தோன்றிய காலத்தில் செவ்வியல் சார்ந்தும், வேறு சிலர் புராதனச் சடங்குகள், தீர்க்கதரிசன உரைகள், மந்திர உச்சாடணங்கள், சிறுதெய்வ வழிபாட்டு மரபுகளோடு தம்மை ஐக்கியப்படுத்திக்கொண்டு வந்துள்ளனர் எனவும் எழுதியுள்ளார். மேலும்,

தொன்மைச் சமுதாயக் கவிதைகளின் இயல்பினைத் தொடக்கக் காலச்செவ்வியல் இலக்கியமான சங்க இலக்கயத்திலும் நாம் ஓரளவிற்குக் காணமுடிகிறது. முழுக்க முழுக்க அரசவையினைச் சார்ந்து நின்ற இக்கவிஞர்கள் சில நிலைகளில் அரசவை மரபுகளை ஏற்க மறுப்பதையும் அரசர்களோடு முரண்பாடு கொள்வதையும் நாம் காண்கிறோம். இவ்வாறு முரண்படும் போதெல்லாம் தங்களிடம் தெய்வீகத் தன்மை இருப்பதாகப் புராதன சமுதாயம் நம்பியதை வலியுறுத்தி மன்னர்களை இவர்கள் எச்சரிக்கை செய்ய முயல்கின்றனர். இத்தகைய இடங்களில் எல்லாம், இவர்கள் தீர்க்கத் தரிசிகளாகவும் சாபமிடும் ஆற்றல் மிக்கவர்களாகவும் தங்கள் சொற்களால் அழிவை ஏற்படுத்தும் ஆற்றல் கொண்டவர்களாகவும் தங்களைக் காட்டிக்கொள்ள முயல்வதுண்டு

என்கிறார்.

நக்கீரர் போன்ற கவிஞர்களும் முதுவாய்ப் பாணர்களும் முதுவாய் இரவலர்களும் இத்தகையவர் ஆவர். நக்கீரர் திருமுருகாற்றுப்படை பாடுவதற்குக் காரணமாக அமைந்த கதையும் இதற்குச் சான்றாகும்.

நக்கீரருக்கு அமைந்ததாகக் கூறப்பெறும் கதைப் பின்னணி போன்றே திருமந்திரம் பாடிய திருமூலருக்கும் அமைந்திருந்ததைக் குறிப்பிடலாம். திருஞானசம்பந்தருக்கு இருந்ததாகக் கூறப்பெறும் இறை ஆற்றல்கள் மூலம் அவர் ஆண்பனைகளைப் பெண் பனைகளாக மாற்றினார்; இறந்த பெண்ணின் எலும்புகளைக் கொண்டு அவளை உயிர்ப்பித்தார்; பிளவு நோய் கண்ட மன்னனைக் குணப்படுத்தினர். இவரைப்போலவே கவிதை ஆற்றல் கொண்ட பலர் இறை ஆற்றல்களால் ஏராளமான அற்புதங்களைச் செய்துள்ளனர். இவர்கள் எழுப்பும் மந்திர ஒலிகள் போன்றவை மானிடர்களுக்கு நன்மை ஏற்படுத்தியுள்ளன. சமயமும் மந்திரமும் இணைந்து சென்றன.

இவர்களுக்கு மாற்றாக மந்திர தந்திரங்களைக் கொண்டு மக்களை வசியப்படுத்தியவர்களும் இருக்கின்றனர். இக்கூட்டத்தாரே அதிகம்; இவர்கள் கையாளும் முறைகளும் நிறைய உள்ளன. மக்கள் இவர்களையே, இவர்கள் கையாளும் முறைகளையே நம்பு கின்றனர். அதனால் இவை மக்களின் வாழ்வியல் சடங்குகளாக ஏற்கப்பட்டுவிட்டன.

இதனால், மந்திரமாவது..... ஆக்கமும் அழிவும் தருவதாகக் கொள்ளமுடிகிறது. ஆக்கமுறைகளில் அமைந்த தமிழ்நூல்களில் திருமந்திரம் தரும் நிலைகளை ஆராயலாம்.

திருமந்திரம் பாடிய மூலர் என்னும் சொல்லுக்குக் 'காரணமானவர்' என்று பொருள் கூறுகின்றனர்.

இதன் திரண்ட பொருள்: அறமுதலிய புருஷார்த்தங்களை மக்களடைந்துய்யத் திருமந்திரங் கூறுவதன் வாயிலாக நன்னெறியின் கண் நடத்துவதற்குக் காரணமாயிருப்பவர் என்பதாம்.

எனத் திருமந்திரப் பதிப்புரை கூறுகின்றது.

இதன்படி, திருமுருகாற்றுப்படை, திருக்குறள் போன்ற அறநூல்கள் வழியில் வந்த திருமந்திரமும் மக்களுக்கான நன்னெறிக் கருத்துகளைக் கூறுவதாகும். திருமந்திரத்தில் கூறப்பெறும் மந்திரத்திற்குப் பொருள்களாவன.

மந்திர மாவது மாமருந் தாவதும்
தந்திர மாவதும் தானங்கள் ஆவதும்
சுந்தர மாவதும் தூய்நெறி யாவதும்
எந்தை பிரான்தன் இணையடி தானே

(திருமந்திரம், 6ஆம்தந்திரம்)

இப்பாடலின்படி, மந்திரம்

- மருந்து
- தந்திரம்
- தானம்
- சுந்தரம்
- தூய் நெறி

போன்ற பொருள்களில் வழங்கப்படுகிறது. திருமூலர் மந்திரத்தை வரைந்தும் விளக்கலாம் என்கிறார்.

மந்திர சக்கரம் ஆனவை சொல்லிடில்
தந்திரத்து உள்எழுதோன்றெரி வட்டமாம்

(திருமந்திரம் 4ஆம் தந்திரம்)

ஏடுகளிலும் அச்சுத்தாள்களிலும் மந்திரங்கள் வரையப்பட்டிருப் பதைப் பார்க்கலாம்.

மந்திர தந்திரங்கள் போன்றவற்றைச் சிந்தனை செய்யாதவர் அசற்குரு என்கிறார் திருமூலர்.

மந்திர தந்திர மாயோக ஞானமும்
பந்தமும் வீடும் தரிசித்துப் பார்ப்பவர்
சிந்தனை செய்யாத் தெளிவியாது ஊண்பொருட்டு
அந்தகர் ஆவோர் அசற்குரு வாமே

(திருமந்திரம் 7ஆம் தந்திரம்)

இவ்வாறு திருமந்திரத்தில் பலவகைப் பொருள்களில் மந்திரங்கள் விளக்கம்பெற்றுள்ளன. காலந்தோறும் மந்திரம் பல வகையாகக் கையாளப்பெற்று வருவது வெளிப்படை.

துணைநூல்கள்

1. சிவசுப்பிரமணியன், ஆ. மந்திரமும் சடங்குகளும், மக்கள் வெளியீடு, சென்னை, 1988.
2. தசரதன், ஆ. தமிழில் வசைப்பாடல்கள், தமிழ் ஓலைச் சுவடிகள் பாதுகாப்புமையம், சென்னை, 1994 (1996).
3. விசுவநாத பிள்ளை, வே. மாவை. திருமந்திரம் (பதிப்புரை), 1902.
4. திருஞானசம்பந்தர் தேவாரம், திருஆலவாய், திருநீற்றுப் பதிகம்.
5. தொல்காப்பியம், கணேசையர் பதிப்பு, மீள்அச்சு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2008.

53. வாழ்வும் திருமந்திரமும்



முனைவர் **ஜெ.ஜெயவாணிஸ்ரீ,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அரசினர் கலைக் கல்லூரி (தன்னாட்சி),
கும்பகோணம - 612001,
தமிழ்நாடு, இந்தியா.

முன்னுரை

சிவபெருமானின் முதன்மையைப் போற்றுவதையே கொள்கையாக உடைய திருமூலர், 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற கொள்கையுடன் கூறிய பாங்கின் வழி விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

வாழ்வு நிலை

திருமூலர் சிவயோகி. 63 நாயன்மார் களில் ஒரு சிறப்பான சித்தருமாவார். நந்தியின் அருள் பெற்றவரா, இவர் அட்டமாசித்திகள் பெற்றவர். பரகாயம், கூடுவிட்டுக் கூடு பாயும் வினைபுரிந்தவர். பொதிகை மலையிலிருந்த அகத்தியரைக் காண விரும்பினார். அதனால் இமயமலையிலிருந்து பொதிகை புறப்பட்ட தாகவும் வழியில் சிவத்தலங்களைத் தரிசித்துக் காவேரியாற்றில் நீராடி, திருவாவடுதுறை இறைவனை வழிபடப் போனபோது ஒரு காட்சியைக் கண்டார். மாடுமேய்த்துக் கொண்டிருந்த இடையன் மூலன், பாம்பு கடித்து இறந்து போனான். மாடுகள் மேயாமல் துயர்வுற்றன. அம்மாடுகளைக் கண்ட இச்சித்தர், மனமிரங்கிக் கூடுவிட்டுக் கூடுபாய்ந்து அப்பசுக்களின் துயரை நீக்க எண்ணினார்.

சித்தரின் நிலை

தன் உடலை ஒரு புறத்தில் வைத்து விட்டுக் கூடுவிட்டுக் கூடுபாயும் வித்தையின்மூலம், மூலனின் உடலினுள் புகுந்து உயிர் பெற்று எழுந்தார். பசுக்களை மேயவிட்டுப் பின் அதன் வீடு நோக்கி ஓட்டிச் சென்றார். அவரை மூலனின் மனைவி தன் கணவன் என்று நினைத்துத் தொடமுயன்றார். இவர் தள்ளி நின்று 'என்னைத் தொடுவது நீதியல்ல' என்று கூறினார். மூலனின் மனைவி அவ்வூர் நீதிமான்களிடம் முறையிட்டு வழக்குத் தொடர்ந்தாள்.

சித்தர்களின் அறிமுகம்

நீதிமான்கள் மூலரை விசாரிக்க அவர் சிவயோகியாக, தன்நிலையில் நின்று அனைவரும் காணக் கூடுவிட்டுக் கூடு பாய்ந்து காட்டினார்.

இதனையறிந்த மூலனின் மனைவி விலகிச் சென்றாள். பின் தன் உடல் வைத்த இடத்திற்கு மீண்டும் வந்து பார்த்தபோது அவரின் உடல் அங்கில்லை. இது இறைவனின் திருவிளையாடல் என உணர்ந்து திருவாவடுதுறைக் கோயிலின் மேற்குப் பக்கத்திலுள்ள மரத்தடியில் அமர்ந்து பல ஆண்டுகள் தியான நிலையிலிருந்து 3000 பாடல் கொண்ட திருமந்திரத்தை இயற்றினார். இடையன் மூலனின் உடலுள் புகுந்ததால் இவருக்குத் திருமூலர் எனப்பெயர் வந்தது. இவரின் செயலால் தான் சித்தர்கள் இவ்வாறு இருக்கிறார்கள் என அனைவருக்கும் தெரியவந்தது. திருமூலர் மனித உடலைப் பற்றியும் அதனைக் காக்கும் முறையையும் சிறப்பம்சமாகக் கூறியுள்ளார்.

எண்வரிசையில் அடக்குதல்

இறைவனைப் பற்றி ஒன்று, இரண்டு, மூன்று என்று வரிசைப்படுத்திப் பாடலை எழுதியவரில் இவரே முதன்மையானவர்.

ஒன்று அவன்தானே இரண்டு அவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்கு உணர்ந்தான், ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழு உம்பர்ச்
சென்றனன் தான் இருந்தான், உணர்ந்து எட்டே (1)

ஒன்றாய் உள்ளவன் சிவபரம்பொருள். அவன் அருள்சக்தி வேறானால் அப்பொருளானது சிவம், சக்தி என இரண்டாகும். உடல் உள்ளம் உயிர் மூன்றினுள் நின்றனன். அறம், பொருள், இன்பம், வீடு என நான்கையும் உணர்ந்தவன். புலன்கள் ஐந்தினையும் வென்றவன். அவன் வன்னம், பதம், மந்திரம், கலை, புவனம், தத்துவம் என்னும் அத்துவா வாகவும் ஆறாகவும் விரிந்தவன். இவனே ஏழு உலகங்களையும் கடந்தவன் என்பனவற்றை உணர்ந்து அவனை அடைய முயற்சி செய் என விவரிக்கின்றார்.

உயிரின் ஆதாரம்

நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லவும்
ஊன்பற்றி நின்ற உணர்வு மந்திரம்
தான்பற்றப் பற்றத் தலைப்படும் தானே (85)

அதாவது உடம்பில் உயிர் என்ற ஆதாரமுள்ள புருவமத்தியிலுள்ள உயிருணர்வை மனம் தானாகச் செய்யக்கூடிய மந்திரமுள்ளது. அதை இடைவிடாமல் தியானித்தால் வேதத்தின் முடிவும், அகண்டாகாரத்தின் பொருளும் சிவமானது அருள் தரத் தொடரும் எனத் திருமூலர் எழுதிய திருமந்திரத்தை யான் பெற்றுப் பயன் அடைந்ததுபோல, இவ்வுலகோர் அனைவரும் பயனடைய வேண்டும் என்கிறார்.

உடம்பின் உயர்வுக்கு வழி

உடம்பின் சிறப்பைக் கூறவரும் திருமூலர்,

உள்ளத்தின் உள்ளே உள்ள பல தீர்த்தங்கள்
மெள்ளக் குடைந்துநின்று ஆடார் வினைகெடப்
பள்ளமும் மேடும் பரந்து திரிவரே
கள்ள மனம் உடைக் கல்விஇலாரே' (509)

உடலிலேயே இறைவன் உறைகின்றான் என்றும், உடம்பி னுள்ளே பல தீர்த்தங்கள் உள்ளன என்றும், அறியாமல் வெளியில் பல ஊர்களுக்குச் சென்று யாத்திரை செய்கின்றனர். மனத்தின் வஞ்சனையும் குறையாமல் ஞானக்கல்வியும் பெறாமல் உயிர் உணர்வும் அறியாமல் இருப்பதைக் கூறியுள்ளார்.

உடல் காக்க வழி

சாதாரண மனிதர்களுக்குத் தேவையான இறைவுணர்வோடு உடலைக் காப்பாற்றத் தேவையான அறிவுரைகளை மிகவிளக்கமாக யோக நிலையையும் உலகியல் அறிவையும் தத்துவங்களையும் பொருத்திப் பல கருத்துக்களை எளிய பாடல்களாகக் கொடுத்துள்ளார்.

உடல் அழிந்தால் உயிர் ஆற்றலும் அழியும். அப்போது ஞானம் பெற முடியாது. உடம்பினை வளர்க்க யோக நிலையே சரியென அறிந்து அவ்வழியே உயிரை வளர்த்தேன். இக்கருத்தை வலியுறுத்தும் வண்ணம் ஆர்வம் உடையவன் தான் இறைவனைக் காணவோ, உடலைப் பேணவோ முடியுமென விளக்க,

ஆர்வம் உடையவர் காண்பார் அரன்தன்னை
ஈரம் உடையவர் காண்பார் இணையடி
பாரம் உடையவர் காண்பர் பவம்தன்னை
கோர நெறிகொடு கொங்கு புக்காரே (273)

ஆர்வம் உடையவர்கள்தாம் இறைவனைப் பற்றித் தெரிந்து கொள்ளவும், அவருடைய இணையடி சேரவும் முடியும் என்பதையும் தெளிவு படுத்தியுள்ளார்.

உடம்பை முன்னம் குறைத்து எண்ணியிருந்தேன். உடம்பினுள்ளே நாம் பெறவேண்டிய பொருள் இருக்கக் கண்டேன். உடம்பினுள்ளே உத்தமமான இறைவன் உறைகின்றான் என்று உடம்பினை நான் தற்போது காப்பாற்றுகிறேன் எனக் குறிப்பிடுகிறார்.

உடம்பு அழியாமல் காக்கவழி

மூன்று மடக்கு உடைப்பாம்பு இரண்டு எட்டுஉள
ஏன்ற இயந்திரம் பன்னிரண்டு அங்குலம்,
நான்ற இம்முட்டை இரண்டையும் கட்டியிட்டு
ஊன்றியிருக்க உடம்பு அழியாதே (728)

காணும் கண்ணுக்குக் காரிடம் உளம்போல் இறைவன் ஒன்றாகவும் தெற்றென விளங்குகின்ற சோதியாகவும், பிரிவற்றும் உடனாயிருக்கினும், அவன் மறைப்புச் சக்தியால் அவன் உருவை அறியாது என்பதாகும். அதாவது, உடலில் பிரம்மம், விஷ்ணு, உருத்திரம் என்ற மூன்று முடிச்சுகள் சூரிய, சந்திரன் போன்ற கலைகளுடன் உள்ளன. இவை பாம்புகள்போலப் பின்னித் தலைக்குமேல் பன்னிரண்டு அங்குலமாக உள்ளன. ஞானநிலையான யோக நிலையில் கண்பார்வையைச் செலுத்தி நிலையாக இருப்போமேயானால் உடம்பினைப் பாதுகாக்கலாம்.

உள்ளம் காக்க வழி

உள்ளத்து ஒருவனை உள்உறு சோதியை
உள்ளம் விட்டு ஓரடி நீங்கா ஒருவனை
உள்ளமும் தானும் உடனே இருக்கினும்
உள்ளம் அவனை உரு அறியாதே (431)

இறைவனை அறிந்து கொள்ளத் தேடியலைந்து கொள்ள வேண்டிய தில்லை. அன்புள்ளம் கொண்ட தாய் அருமை மகனுக்கு என்று சமைத்த உணவை மறைத்து மகனுக்கு என்று அவனை எழுப்பி, அதனைச் 'சுவைத்து உண்ணச் செய்யுமாறு சொல்வது போல' இறைவன் தன்னை மறைத்து வினையோகத்தில் அனுபவிக்கச் செய்கிறான். இதை உணர இறைவன் நம்முள்ளேயே உறைகின்றான். நம்மை விட்டு ஓடியும், ஒரு நொடியும் விலகாமலிருக்கிறான். எனினும், உள்ளம் அவனை அறியவில்லை.

ஆலயம் இருந்தால் தான் இறைவனை வைத்து வணங்க முடியும். அதுபோல உடலை ஆலயமாகக் கொண்டு வளர்த்தால் நம் வாயே கோபுரவாயில், உயிரே சிவலிங்கம். ஐம்புலனும் (குண்டலினி) ஐந்தலை நாகம். அவை, தம் தலையில் ஏந்திய மணி விளக்கு எடுத்தால் இறைவனைக் காணமுடியும்.

வான்நின்று அழைக்கும் மழைபோல் இறைவனும்
தான்நின்று அழைக்கும்கொல் என்று தயங்குவார்
ஆன்நின்று அழைக்கும் அதுபோல், என்நந்தியை
நான்நின்று அழைப்பது ஞானம் கருதியே (30)

வானில் முழங்கும் இடிபோலக் குரல் எழுப்பி, பொழிகின்ற மழையைப் போன்று, இறைவனும் தானே வலியவந்து அருளைப் பொழிவார் என்று சிலர் தயக்கத்தினைக் காட்டுவார். 'பசுவின் கன்று பால்கருதித் தன் தாய்ப் பசுவை அம்மா என்று அழைப்பதுபோல' நாம் தேடிக் கூவி அழைக்க வேண்டும் என்கிறார்.

யோக வழி

யோகி என்பவர் யோகம் பயிலக் குடும்பத்தை விட்டோ அல்லது ஊரை விட்டோ கானகம் சென்று பயில வேண்டிய அவசியமில்லை என்பதை வலியுறுத்த,

மனையுள் இருந்தவர் மாதவர் ஒப்பர்
நினைவுள் இருந்தவர் நேசத்துள் நிற்பர்
பனையுள் இருந்த பருந்தது போல
நினையா தவர்க்கு இல்லைநீள் இன்பம்தானே (47)

வீட்டிலேயே இல்லற வாழ்வில் முறையோடு வாழ்ந்து பயிலுவதை, பனைமரத்திலே தங்கியிருந்த பருந்து அதிலுள்ள பதனியையோ, நொங்கையோ உண்டு அனுபவித்ததில்லை. அதேபோல உலகில் மனிதன் வாழ்ந்திருந்தாலும் உலகிலுள்ள இறை இன்பத்தை நுகரவில்லையெனக் கொள்ளவேண்டும். இக்கருத்தையே வலியுறுத்தும் ஔவையார், 'தண்டாமரை கயித்தில் பிறந்தும் தன்தேன் உணரா மண்டூகம்' எனக் கூறுவது, தாமரை பூத்த குளத்திலேயே வாழ்கின்ற தவளை, தாமரை மலரிலுள்ள தேனைப் பருகியதில்லை. அதைப்போல மனிதனும் தன்னைச் சுற்றியுள்ள நன்மைகளை அறிந்து கொள்ள வேண்டும். அதை முனிவரேயாயினும் தியானித்து நேசிக்காதவருக்கு இறையான இன்பநிலை இல்லையென உணர்த்துகிறார்.

நன்னடக்கத்தின் வழி

மூன்றாம் தந்திரத்தில் அட்டாங்க யோகநிலை பற்றிக் கூறும்போது, இயமமானது தீயனவற்றைச் செய்யாமல் நல்லனவற்றைச் செய்யும் குறிக்கோளுடன் தன்னடக்கமாக வாழ்வது (பாடல் 552). அங்ஙனம் வாழவேண்டிய நெறிமுறையை,

கொல்லான், பொய்கூறான், களவிலான், எக்குணத்தும்
நல்லான் அடக்கம் உடையான் நடுச் செய்ய
வல்லான், பகுத்துண்பான், மாசிலான், கள்காமம்
இல்லான் இமயத்து - இடையில் நின்றானே (554)

பிற உயிர்களைத் துன்பம் செய்யாமலும், கொல்லாமலும், பொய் கூறாமலும், பிறர்ப்பொருளைக் களவாடாமலும், நல்ல குணங்களுடன் அடக்கமுடையானும் ஆகிய இருவருக்கும் மாறுபட்ட கருத்து இருந்து, வாக்குவாதம் சண்டையிட்டுக் கொள்வோருக்கு நடுநிலையாக இருந்து நீதியை எடுத்துரைக்கும் அறிவுடையவனாக விளங்குபவனும், பகிர்ந்துண்டு குற்றமற்றவனாகவும், கள் உண்ணாமல், காம இச்சைகளுக்கு உட்படாமல் இருக்கக் கூடிய ஒருவரே இமயநெறிக்கு உட்பட்டவனாவான் என்றும் கூறுகிறார்.

நற்செயலின் வழி

தூய்மை, அருள், ஊண், சுருக்கம், பொறை, செவ்வை
வாய்மை, நிலைமை, வளர்த்தலே மற்றிவை
காமம், களவு, கொலையெனக் காண்பவை
நேமிஈர் ஐந்தும் நியமித்த கனமே (556)

தூய்மை, கருணை, குறைந்த உணவு, பொறுமை, நேர்மை, உண்மை, உறுதியுடைமை ஆகியவற்றை வளர்த்தலும், மற்ற காமம், களவு, கொலை போன்ற குற்றங்களைச் செய்யாது பத்துத் தன்மை களையும் உடையவர் நியமத்தில் நடப்பவனாவான் என எடுத்துரைக் கின்றார்.

யாக்கையின் வழி

தன்னது சாயை தனக்கு உதவாது கண்டு
என்னது மாடு என்று இருப்பவர்கள் ஏழைகள்
உன்உயிர் போம், உடல் ஒக்கப் பிறந்தது
கண்ணது காண் - ஒலி கண்டு கொள்ளீரே (170)

தன்னுடனே பொருந்திய நிழலானது தனக்கு உதவாதது கண்டும், அறிவில்லாதவர்கள் தமக்கு வேறான செல்வத்தைத் தமக்கு உதவும் என்று எண்ணுகிறார். உடலோடு ஒன்றாக வந்தது உயிர். உயிர் போகும் போது உடலும் அழிந்து போகும். நிலையான ஒளியை உடல் உள்ளபோதே கண்டு கொள்ளவேண்டும் என்கிறார்.

முடிவுரை

அன்பே சிவமாவதாரும் அறிகிலார் எனக்கூறி, 'அன்பே சிவம்' என்ற கொள்கையை வலியுறுத்தி மனித வாழ்வின் முக்கியதுவத்தை எடுத்தியம்பும் திருமூலர் வழியில் உயிரின் ஆதாரம், உடம்பின் உயர்வுக்கு வழி, உடல் காக்கவழி, யோக வழி, உடம்பு அழியாமல் காக்கவழி, உள்ளம் காக்க வழி, நன்னடக்கத்தின் வழி, நற்செயலின் வழி என உணர்த்தும் வழியைப் பின்பற்றுவோம் என்றால் வீடு பேறு பெற்றுவோம் என்பது உறுதியாகும்.

54. திருமந்திரமும் மனித வாழ்க்கையும்



இரா.ஆனந்தஜோதி
ஆய்வியல் நிறைஞர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை 600113

மனித வாழ்க்கைக்குத் தேவையானவை என்னவென்பதனை எடுத்துக்கூறும் விதமாய் உலகம் முழுமைக்கும் மொழி வளத்தாலும், கடவுள் கொள்கையாலும், நாகரீகப் பண்பாட்டாலும் நலம் பல அளித்து அன்றும், இன்றும் என்றும் தலைசிறந்து நிற்பது. தமிழகமாகும்.செந்தமிழும்,சிவநெறியும் உயிரும் உடம்பும் போலப் பிரிவின்றி, இணைந்து இயங்கும் செந்தமிழ் ஆகமம் திருமந்திரம் எனலாம். அந்த திருமந்திரம் மனித வாழ்வோடு பின்னைப்பிணைந்திருக்கிறது.

மனித அறத்தோடு வாழ வேண்டும். ஆரோக்கியத்துடன் வாழவேண்டும் சிவத்தோடு சிந்தை தெளிந்த மனத்தோடும் வாழ வேண்டும்.இதுவே மனிதன் வாழும் முறைமை. அவ்வாறு வாழ்ந்தால் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து செம்மை பெறுவான் என்று திருமந்திரம் கூறுகின்றது

அன்பேசிவம்

அன்பு சிவம் இரண்டும் வேறெரன்பார் அறிவிலார் (270)

என்று எடுத்த எடுப்பிலே அன்பும் சிவமும் ஒன்று என்று திருமந்திரம் கூறுகிறது.

அன்பிலார் எல்லாந்த தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு (குறள் 72)

அன்பிலார் எல்லாப் பொருளும் தமக்கே என்கிறார். அன்புடையவரோ தன் எலும்பும் பிறர்க்குரியது என்கிறார். என வள்ளுவப் பெருந்தகை அன்பின் திறத்தை எடுத்துக் கூறுகிறார். பக்தியின் சிறப்பை எடுத்துக்கூறும் திருமூலர் 'அன்புசிவம்'என்பது இரண்டு என்று கூறுபவர் அறிவிலாதவர் என்கிறார்.அன்பே அனைத்து உயிர்களின் உயிர்நாடியாக விளங்குகின்றது. அன்பு நெறியே உலகில் மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய பெருநெறி என்று திருமந்திரம் வலியுறுத்துகின்றது.

திருமந்திரம், அன்பின்றி வேறு எந்த வழியில் சென்றாலும் இறைவணக்காண இயலாது என்பதனை மிகத் தெளிவாக எடுத்துக்கூ றுகின்றது. எலும்பை விறகு ஆக்கித் தசைகளை அறுத்து நெருப்பிலிட்டுப் பென்போல் பொரியும்படி வறுத்தாலும் பயன் இல்லை. அன்போடு உருகி மனம் குலைவார்க்கு அல்லாமல் மற்றவர்கள் இறைவனைக்காண இயலாது என திருமந்திரம் எடுத்து இயம்புகின்றது.

என்பே விறகாய் இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போல் கனலிலே பொரியவறுப்பினும்
அன்போடு உருகி அகங்குலை வார்க்கன்றி
என்போல் மணியினை எய்தஒண் ணாதே (272)

என்கிறார் திருமூலர். உள்ளம் உருகும் அன்பே மனித வாழ்வுக்குத் தேவையான அன்பு இதனையே மாணிக்கவாசகப் பெருமாளனும் "கற்றாவின் மனம் போல் கசிந்துருக வேண்டுவனே!"என்கிறார். (திருவாசகம்) திருமந்திரம் வலியுறுத்தும் செய்தி அன்பு செய்தல். அன்பு ஒன்றே நிலையானது. நிலையில்லா இளமை கொண்டு, நிலையில்லா யாக்கைகொண்டு நிலையான அறத்தை அன்பு வழியில் செய்ய வேண்டும். அதுவே மனித வாழ்க்கைக்கு திருமந்திரத்தின் மூலம் திருமூலர் வலியுறுத்தும் செய்தி எனத் தெரிகின்றது.

புலனடக்கம்

மனித வாழ்க்கை செம்மையுற வேண்டுமானால் மனித மனம் செம்மையுற வேண்டும்.நன்றாக வேயப்பட்ட கூரைக்குள் நீர் புகுவதில்லை அதுபோல பண்பட்டு விட்ட உள்ளத்தில் தீமைகள் நுழைவதில்லை.

ஒருமையுள் ஆமைபோல் உள்ளைந் தடக்கி
இருமையுங் கேட்டிருந்தார்புரை அற்றே (177)

ஆமையானது தனது ஐந்து உறுப்புகளையும் இடர் வரும்போது தன்னுள் அடக்குவதுபோல மனிதனும் தன்னுடைய ஐம்புலன்களை அடக்கினால் அவனுக்கு ஏழு பிறப்பிற்கும் நன்மையைத் தரும் என்பதனை திருமந்திரத்தினைப் போல் திருவள்ளுவமும்

ஒருமையும் ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து (குறள் 120)

என்கின்றது

எல்லோரும் வெளியே பார்வையைச் செலுத்துகிறார்கள் .உள்ளே பார்வையைச் செலுத்தி மனதை ஆராய்கிறவர்கள் மிகச் சிலரே. அப்படி உள் ஆராய்ச்சி செய்கிறவன் என்ன காண முடியும்? உள்ளே ஐந்து பசு விருப்பம் போல் மேய்ந்து திரிவதைக் காண்பான். மேய்ப்பர் இல்லாமல் வெறி பிடித்துத் திரியும் மாடுகள் அவை மேய்ப்பவர் ஏற்பட்டு,அவற்றின் வெறி அடங்குமாறு செய்தால் அந்த பசு ஞானப்பால் சொரியும் ,பொல்லாதவை நல்ல வையாக மாறிப் பயன்தருவதைக் காணலாம்.

எனவே மனிதன் வாழ்க்கை மேன்மையுற வேண்டுமானால் ஐம்புலன்களின் ஆசையை நெறிப்படுத்த வேண்டும். என்பதனை திருமந்திரம் எடுத்துக்கூறுகின்றது. " தன்னைத் தானறிய தனக்கொரு கேடில்லை "

"உலகத்தில் காணப்படும் பொருட்கள் நிலையானவை அல்ல என்ற உறுதி வந்தால் மனம் அடங்கி ஆசை ஒழியும் என்று மன அடக்கத்தைப் பற்றி பகவத்கீதை பேசுகிறது.

சினமிக்க கற்றாலும் சித்தியெல்லாம் பெற்றாலும்
மனமிறக்கக் கல்லார்க்கு வாயென் பராபரமே

என்கிறார் தாயுமானவர். மனம் சீர்பெற்றால் தான் மனித வாழ்க்கை சீர்பெறும் என்பது இங்கே வலியுறுத்தப்படுகிறது. இதனையே ஔவையாரும் "மாசற்ற கொள்கை மனதில் அடைந்தக் கால்ஈசனைக் காட்டும் உடம்பு என்கிறார்.

அறநெறி

மனித வாழ்க்கை பல இடர்பாடுகளை உடையது. வாழ்க்கை புரியாதவர்களுக்கு முட்புதர். புரிந்தவர்களுக்கு பூங்கொத்து மனித வாழ்க்கை மகிழ்ச்சியானது, மகத்துவமானது மனிதனாய் வாழும் வரை மனிதன் அறவழியில் வாழ்வதெப்படி அல்லன நீக்கி நல்லவற்றை நாடுவது எப்படி என்பதை திருமந்திரம் விளக்குகிறது.

நெறியைப் படைத்தான் நெருஞ்சில் படைத்தான்
நெறியில் வழுவின் நெருஞ்சில் முள் பாயும்
நெறியில் வழுவாது இயங்கவல்லார்க்கு
நெறியில் நெருஞ்சிமுள் பாய கிலவே (1617)

வாழ்க்கைக்குத் தேவையான நல்வழியும் உண்டு. வாழ்க்கை யைக் கெடுக்கும் தீயவழியும் உண்டு. கடவுளே நெறியையும் படைத்தான் நெருஞ்சி முள்ளையும் படைத்தான். நெறிதவறி நடந்தால் காலில் முள்குத்தும்.நெறிதவறாமல் நடக்க வல்லார்க்கு நெருஞ்சி முள் எந்த இடரும் செய்யாது. ஆகவே, நல்ல வழியில் நேர்மையான முறையில் நடப்பவர்களுக்கு எந்த துன்பமும் அண்டாது என்பது திருமந்திரத்தின் கூற்று இதனையே வள்ளுவமும் "சிறப்பீனும், செல்வமும்ஈனும் அறத்தனூஉங்கு - ஆக்கம் எவனோ உயிர்க்கு - திருக்குறள் -

அறச்செயல்களைக் காட்டிலும் ஆக்கம் தரும் செயல்கள். மனித வாழ்க்கைக்கு-----வேறில்லை----------என்பது இங்கே தெளிவு படுத்தப்படுகிறது. மனித ஒழுக்கநெறிகளில் அறம் என்பது அடிப்படையாகும்.

இடர்படுவோருக்குச் செய்யும் தொண்டு இறைவனுக்குச் செய்யும் தொண்டாகும். அனைவரிடத்திலும் அன்பு செலுத்த வேண்டும். அதே சமயத்தில் தம்மால் முடிந்த தொண்டினை மனிதனுக்குச் செய்யவேண்டும் என்கிறது திருமந்திரம்.

இதனையே திருமுருக வள்ளல் கிருபானந்த வாரியார் சுவாமிகள் இவ்வாறு கூறுவார். தலைமை அஞ்சல் நிலையத்தில் போடப்பட்ட அஞ்சல் அட்டை நம் தெருக்களிள் உள்ள அஞ்சல் பெட்டிக்கு வந்து சேராது. ஆனால் நம்தெருக்களில் உள்ள அஞ்சல் பெட்டியில் போடப்படும் அஞ்சல் அட்டை தலைமை அஞ்சல் நிலையத்திற்குச் சென்றுவிடும் அதுபோலத்தான் ஏழை ஒருவனுக்குச் செய்யும் தொண்டு இறைவனுக்குச்செய்யும் தொண்டு என எளிமையாய் எல்லோருக்கும் புரியும் வகையில் முருகனடியார் திருமந்திரக் கருத்தைக் கூறியுள்ளார்.

மனம் மகிழ்ந்துகொடுப்பதைக் காட்டிலும் முகம் மலர்ந்து இன்சொல் கூறுதலே சிறந்தது என்கின்றது குறள்.

அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து
இன்சொல னாகப் பெறின் (குறள்-92)

எந்தப் பொருளதவியும் செய்ய முடிய வில்லையே என்ற நிலையில் வாழும் மனிதனும் தொண்டு செய்யலாம் என்பதனை திருமந்திரம் எடுத்துக் கூறுகிறது.

இறைவனுக்கு வெற்றிலை பாக்கு வைத்து வழிபடலாம். கோடானுகோடிதெய்வங்கள் கோயில் கொண்டிருக்கும் பசுவிற்கு உணவளிக்கலாம் நாம் உண்ணும்போது பிறருக்கு ஒருபிடி உணவைத் தரலாம். பிறரிடம் பேசும்போதுஇனிய சொற்களைக் கொண்டு பேசினாலே போதும் என்கிறது திருமந்திரம். மனித வாழ்க்கைக்கு தேவையான தத்துவத்தை இதைவிட எளிமையாக எந்த நூலாலும் தரமுடியாது என்பதனை நாம் அறிந்துகொள்ளலாம்.

இறைவன் இருக்கும் இடம்

உடம்பை, ஊற்றைச் சடலம் என்றும், அழுக்கென்றும் நீழ்க்குமிழி என்றும் பலரும் இழித்துக் கூறிய நிலையில் திருமூலர் உடலினை ' ஊனுடம்பு ஆலயம்' என்கிறார்.பொதுவாக மனிதன் இறைவனை எண்ணும்போது வானத்தைநோக்கி வணங்குவதைக் கண்ட திருமூலர் அவ்வாறு வணங்குபவர்களை ' மருளர்காள்' என்று குறிப்பிடுகிறார்.வானுக்குள் தேடாமல்இறைவனை நம்ஊனுக்குள் (உடம்புக்குள்) தேடுங்கள் தேனுக்குள் ஒளிந்திருக்கும் இனிப்புச் சுவை கறுப்போ சிவப்போ என்று பிரித்தறியாத் தன்மை போல இறைவன் நம் உடலில் கலந்திருக்கிறான்.கண்டுபிடித்து அறியாமை நீக்கி அன்புடன் வாழுங்கள் என திருமந்திரத்தின் மூலம் நமக்கு அறிவுறுத்தப்படுகிறது. இறைவன் நம் இதயத்தில் இலங்குவதாக, 'உள்ளத் தில்உறைவதாகக் கூறப்படுகிறது.

இதனால் உடலைப்பேணி பாதுகாக்கவேண்டும்.வலுத்த உடலையும்,நிலைத்த உள்ளத்தையும் கொண்டவர்களாக மனிதன் வாழ வேண்டும் என்பதனை திருமந்திரம் எடுத்துக்கூறி உடலைப் பேணவேண்டும் என்பதைஉடம்பினைக் கோயிலென்றும், அக்கோயிலில் இறைவன் குடிகொண்டிருக்கிறான் என்று உடம்பின் மீது அக்கரை கொண்டு பராமரிக்கவேண்டும் என்பதனை திருமந்திரம் வழி அறியலாம்.

உடம்பு சரியாக இருந்தால்தான் உத்தமனைக்காண முடியும். இதனையே,

உடம்பினைப் பெற்ற பயனாவ தெல்லாம்
உடம்பினுள் உத்தமனைக் காண் என்று ஔவையாரும்,
காயத்தே யுளன் கானூர் முளையினை
வாயத்தால் வணங்கீர் வீனை மாயவே

என்று அப்பரும் பாடுகிறார்.

சிவசிவ என்றிடத் தீவினை மாளும்

என மகாகாரண பஞ்சாக்கரத்தின் மகிமையை மனித வாழ்க்கைக்கு உறுதுணை புரியும் வகையில் ,ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்' என்று இருமையின்றி இயங்காது உலகு. இளமை நிலையாமை,செல்வம் நிலையாமை, யாக்கை நிலை யாமை என நிலையாமை பற்றிய தத்துவத்தைத் திருமந்திரம் எடுத்துக் கூறி யாக்கை நிலையாக இருக்கும் போதே எவ்வுயிரையும் தன்னுயிர்போல் எண்ணிச்செயல்பட வேண்டும் என்று வலியுறுத் தப்படுகிறது.ஒருவன் இறத்தல் தூங்குவது போன்றது. பிறத்தல் தூங்கி விழிப்பது போன்றது என்று திருக்குறள் கூறுகிறது." உறங்குவது போலும்.பிறப்பு(குறள் 339) நிலையாமை பற்றிய உண்மையை, மரணத்தின் பிடியிலிருந்து யாரும் தப்பிக்க முடியாது என்ற தத்துவத்தை திருமந்திரம் மிக எளிமையாகக் கூறியுள்ளது.

நீரில் மூழ்கி நினைப்பொழிந்தார்களே! (145)

எனவே மனிதன் வாழும் காலம் பயனுள்ள வகையில் ஆரோக்கியமாக வாழவேண்டும் என்று வாழவழி சொல்லியிருக் கிறார் திருமூலர்.

3000 பாடல்களில் அரிய பெரிய உண்மைகளைத் தெளிவாக உணர்த்தியிருக்கிறார்.

புற்றீசர்கள் போல் எத்தனை நூல்கள் வந்தாலும் காலத்தை வென்று மனித வாழ்க்கைக்குத் தேவையான அத்தனைவாழ்வியல் முறைமைகளைக் கொண்டு விளங்குவது திருமந்திரம் எனலாம். திருமந்திரம் ஒரு மன இயல் நூல், தத்துவ நூல் சிந்தை நிறைவுடன் வாழ்ந்து செம்பொருள் காண்பதே மனிதப் பிறவியின் நோக்கம். அந்த நோக்கத்திற்கான அத்தனை பொருண்மையும் அடங்கிய ஒரே நூல் திருமந்திரம் என்பதில் ஐயம் ஏதும் இல்லை எனலாம். மனிதன் நல்ல உணவை உட்கொண்டால் உடல் நல்ல நிலையில் ஆரோக்கியமாக இருக்கிறது.அதே போல் நல்ல நூல்களைப் படித்தால் மனிதனிடம் உள்ள தெய்வீக இயல்புகள் வெளிப்படும்.

வனமான மனித சமுதாயத்தை உருவாக்குவதற்கு தேவையான அனைத்து வாழ்வியல் தத்துவங்களையும் அடக்கிய நூல் திருமந்திரம் என்பதில் ஐயமில்லை.

பார்வை நூல்கள்

திருமந்திரம் முதற்பாகம்
கழகப் புலவர் சித்தாந்த பண்டிதர் ,கழக வெளியீடு,1974
திரு.ப.இராமநாத பிள்ளை
திரு.அ. சிதம்பரனார்.
திருமந்திரம் கருத்துரை
டாக்டர் அண்ணாமலை, எம்.ஏ.,பிஎச்.டி
இந்தியப் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவன வெளியீடு - 1997
திருமந்திரம் - மாவை வே. விசுவநாதப்பிள்ளை.

55. திருமந்திரத்தில் கருத்து வளம்



முனைவர் அ. கந்தசாமி
காமராஜ் கல்லூரி,
தூத்துக்குடி- 628 003.

பன்னிரு திருமுறைகளுள் பத்தாவது திருமுறையாகப் போற்றப்படுவது திருமூலரின் திருமந்திரமாகும். இது மூவாயிரம் பாடல்களைக் கொண்டது. இதில் ஒன்பது தந்திரங்கள் உள்ளன. சித்தாந்த சாத்திரங்கள் தோன்றுவதற்கு முன்பாகச் சைவ சமய முதல் நூலாக இது விளங்கியது.

சைவசித்தாந்தக் கருத்துக்கள்

திருமந்திரம் சைவசித்தாந்தக் கருத்துக்கள் பலவற்றையும் தன்னகத்தே கொண்டுள்ளது. பதி, பசு, பாசம் என்ற முப்பொருள்களும் அநாதியானவை. நிலையானவை என்னும் சைவ சமயத்தின் முடிந்த முடிவினைத் திருமூலர்

பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைச் சென்று பாசம் அநாதி
பதியினைச் சென்று அணு காப்பசு பாசம்
பதியணு கில்பசு பாசம்நில் லாவே

என்று அழகுறக் கூறியுள்ளார். இதில், பசுவின் பாசம் பதியினைச் சென்று அணுகாது என்றும், பதியானது பசுவினை அணுகினால் பசுவின் பாசம் நில்லாது என்றும் கூறியுள்ளார். எனவே இப்பாடல் பதி, பசு, பாசங்களின் இலக்கணங் கூறுகிறதெனலாம்.

ஏழாவது தந்திரத்தில் சிவபூசை, குருபூசை, மகேசுவரபூசை, அடியார் பெருமை, போசனவிதி, இந்திரிய அடக்கம், சமாதி, சற்குரு ஆகியவை கூறப்படுகின்றன. இப்பகுதியில் தான்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகும்கதி இல்லை நும் சித்தத்து
நின்றே நிலைப்பெற நீர்நினைந் துய்ம்மினே

என்ற பாட்டும் அமைந்துள்ளது.

திருமூலர் ஆணவத்திற்கு முளையினையும், மாலைக்குத் தவிட்டினையும், கன்மத்திற்கு உமியினையும் உவமையாகக் கூறியுள்ளார். மேலும் அதே செய்யுளில் ஆன்மாவிற்கு அரிசியை உவமையாகக் கூறியுள்ளார்.

ஆணவம் மாயையும் கன்மமும் ஆம்மலம்
காண முளையும் தவிடுஉமி ஆன்மாவும்
தாணுவை ஒவ்வாமல் தண்டுல மாய்நிற்கும்
பேணுவாய் மற்றுநின் பாசம் பிரித்தே

என்பது அச்செய்யுளாகும். ஆன்மா கடவுளுக்கு ஒப்பாகாது, அரிசிக்கு ஒப்பாகும். ஆதலால் பாசத்தினின்றும் (ஆணவம், கன்மம், மாயை) நீங்கிக் கடவுளைக் கருத்தில் இருத்தி வழிபடவேண்டும் என்பது இப்பாடற் கருத்தாகும்.

ஆசை, பிறப்பிற்கு வித்தாகும். ஆசையை அறுத்தல் வேண்டும். ஆசை உண்டாகத் துன்பமே ஏற்படும், ஆசையினின்றும் விலக விலக, ஆனந்தம் ஏற்படும் என்று திருமூலர் வலியுறுத்துகிறார். இதனை,

ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனொடு ஆயினும் ஆசை அறுமின்கள்
ஆசைப் படப்பட ஆய்வரும் துன்பங்கள்
ஆசை விட விட ஆனந்தம் ஆகும்.

என்ற திருமந்திரச் செய்யுளால் அறியலாகும். எளிய இச்செய்யுள் உணர்த்தும் கருத்தோ பெரியது, இதனுடன்

கூடும் அன்பினில் கும்பிட லேஅன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்

என்ற சேக்கிழார் வாக்கினை ஒப்பிட்டு நோக்கலாம்.

சித்தாந்த வேதாந்தம்

திருமூலர், சித்தாந்தமே வேதங்களின் முடிவு என்னும் கருத்து உடையவர், இதற்கு

சித்தாந்த வேதாந்தம் செம்பொருள் ஆதலால்
சித்தாந்த வேதாந்தம் காட்டும் சிவனையே

என்னும் திருமந்திரத் தொடர்கள் ஏற்ற சான்றாகும். இக்கருத்துக்கு திருமந்திரமே மூல நூல் ஆகும். இக்கொள்கை பின்னர் தோன்றிய நூல்களில் அரும்பி, தெய்வமணம் கமழ்தலைக் குமர குருபரர் தாயுமானவர் ஆகியோர் திருப்பாடல்களில் காணலாம்.

கடவுளர் பெயர் கூறப்படும் இடங்கள்

திருமந்திரத்தில் சிவன் என்னும் பெயரே அன்றிச் சிவபெருமானின் பிறபெயர்கள் சிலவும், வேறு கடவுளர் பெயர்கள் சிலவும் கூறப்பட்டுள்ளன.

வான், காற்று, நெருப்பு, நீர், நிலம் ஆகிய ஐம்பெரும் பூதங்களுக்கும் உரிய கடவுளர்களாக முறையே சதாசிவன், ஈசன், அரன், மால், பிரமன் ஆகியோரைத் திருமூலர் சுட்டியுள்ளார். மேலும் பிறிதோரிடத்தில் முருகப்பெருமான் அவுணரைக் கொல்லும் வரலாறு சிவபெருமானின் கூற்றாக இடம் பெற்றுள்ளது. இதனை,

அம்பவள மேனி அறுமுகன் போய் அவர்
தம்பகை கொல் என்ற தற்பரன் தானே

என்னும் திருமந்திரச் செய்யுட் பகுதியால் அறியலாம்.

வயிரவக் கடவுள், ஆறு கைகளை உடையவர், உள்ளத்தில் இருத்தி வழிபடத்தக்க சிவந்த மேனியர் என்று திருமூலர் சுட்டியுள்ளார் மேலும்,

ஆங்கு வடமேற்கில் ஐயனார் கோட்டத்தில்
கோவினுள் ஆடிடும் கூத்தபஷப் பிரானே
அளியார் சிவகாடி ஆகும் சமயக்
களியார் பரமும்
காளியோ டாடிக் கனகா சலத்தாடி

ஆகிய திருமந்திர வரிகளால், ஐயனார், கூத்தப் பிரான் சிவகாமி, காளி ஆகிய கடவுளர் பெயர்களை அறிகின்றோம் இவற்றுள் சிவகாமி என்னும் இறைவனின் பெயர் தேவாரப் பாடல்களில் காணப்படவில்லை.

தலக்குறிப்புகள்

திருமந்திரத்தில் சிதம்பரம், தில்லை, திருக்கடவூர், திருக்கொறுக்கை, திருவாவடுதுறை முதலிய தலப்பெயர்கள் உள்ளன. இவற்றுள் சிதம்பரம் என்னும் பெயர் தேவராப் பாடல்களில் இல்லை. இத்தலங் களைப்பற்றி கூறும் பொழுது, திருமூலர் சிறப்பான செய்திகளைச் சுட்டியுள்ளார்.

சிதம்பரம் பற்றிக் குறிப்பிடுகையில்
எங்கும் சிதம்பரம் எங்கும் திருநட்டம்

என்று கூறியுள்ளார். இறைவனது நடனம் உலகு அனைத்தும் நிறைந்திருத்தலால், உலகு எங்கும் சிதம்பரமாக உள்ளது என்று கூறினார். இதனால் உலகம் முழுவதையும் இறைவன் நடனமிடும் சிதம்பரமாகக் கூறும் திருமூலரின் பேருள்ளம் புலனாகும்.

திருக்கொறுக்கையில் இறைவன் தட்சிணா மூர்த்தியாக யோகத்தில் இருந்தான் என்பது தலவரலாறு. இதை உணர்த்தும் வகையில் திருமூலர் திருக்கொறுக்கையைக் குறிப்பிடும்போது

அருந்தவ யோகம் கொறுக்கை அமர்ந்ததே

என்று பாடியுள்ளமை உளங்கொளற்கு உரியதாகும்.

திருவாவடுதுறையைப் பற்றிக் குறிப்பிடும் திருமூலர்,

சிவன் ஆவடு தண்டுறை
சீருடை யான்பதம் சேர்ந்திருந் தேனே என்றும்

சேர்ந்திருந்தேன் சிவன் ஆவடு தண்டுறை என்றும் கூறியுள்ளார் இத்தொடர்கள் திருமூலர் வரலாற்றைக் காட்டும் அகச் சான்றுகள் எனலாம்.

இவ்வாறு திருமந்திரத்தில் காணப்படும் திருத்தலங்களைப் பற்றி ஆராய்ந்தால், பல உண்மைகள் விளங்கும்.

உடல் இறைவனின் உறைவிடம்

ஆன்றோர்கள் உடலினை இறைவனின் உறைவிடமாகக் கருதிக் காக்க வேண்டும் என விரும்பினர். காயசித்தி எனப்படும் இக்கொள்கை, திருமூலரின் கொள்கைகளுள் ஒன்றாகும்.

உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த்தேனே

என்பது திருமூலர் வாக்கு இதனால், சிவம் மணக்கும் சீவனை வளர்த்தற்கு உடம்பை வளர்த்தல் வேண்டும் என்பது விளங்கும். மேலும்

நடமாடும் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயின்
படமாடும் கோயில் பகவற்க தாமே

என்ற திருமந்திரத் தொடர்கள், அவர் மனித உடலை மாதேவன் குடிகொள்ளும் ஆலயமாக மதிப்பவர் என்பதை விளக்குவனவாகும்.

உள்ளத்தைக் கருவறையாகவும், உடம்பினை ஆலயமாகவும், வாயினைக் கோபுர வாயிலாகவும், உயிரைச் சிவலிங்கமாகவும், ஐம்புலனை மணிவிளக்காகவும் கொண்டு, ஒவ்வொருவரும் உட்பூசை செய்தல் வேண்டும் என்று திருமூலர் வலியுறுத்தியுள்ளார். இதனை,

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய்கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே

என்ற திருமந்திரச் செய்யுளில் தெரியலாம்.

திருமூலர் உடல் வளர்ச்சிப்பற்றிக் கூறுவதன் நோக்கம், உயிர் உடலில் நீண்டகாலம் வாழ்ந்து, இறைவனை முற்றத் துதித்துப் பக்குவப்பட்ட பின்னர் பிறவிப் பிணியை அறுத்துப் பேரின்ப வாழ்வு பெறுதல் வேண்டும் என்பதாகும்.

மும்மைக்கும் பயன்தருவது

ஊயிர்ப்பிணியையும், உடற்பிணியையும் போக்குதற்குக் காரணமாய் உள்ள யந்திர, தந்திர, மந்திர உபதேசங்களின் திறன்களையும், மணிமந்திர மருந்துகளின் இயல்புகளையும் திருமூலர் குறிப்பிட்டுள்ளார்.

யாவர்க்கும் எட்டா இயந்திர ராசனை
நீ வைத்துச் சேமி நினைந்தது தருமே
மந்திரம் ஆவதும் மாமருந்து ஆவதும்
தந்திரம் ஆவதும் தானங்கள் ஆவதும்
சுந்தரம் ஆவதும் தூய்நெறி ஆவதும்
எந்தை பிரான்தன் இணையடிதானே

என்ற திருமந்திரத் தொடர்களைக் கருத்தில் கொண்டால், இத் திருமந்திரத் திருமுறை இம்மை, மறுமை, வீடு ஆகிய மும்மை இன்பப் பேறுகளுக்கும் இன்றியமையாத சிறந்த பொருள்களைத் தன்னகத்தே கொண்டிருப்பது இனிது விளங்கும்.

மருந்துகள்

மருந்துகளைப் பற்றித் திருமூலர் கூறியவற்றை எண்ணும் பொழுது,

நூறு மிளகு நுகரும் சித்தினீர்
மாறும் இதற்கு மருந்தில்லை மாந்தர்கள்
வீர மருந்து என்றும் விண்ணோர் மருந்து என்றும்
நாரி மருந்து என்றும் நந்தி அருள் செய்தான்

ஆகிய பகுதிகள் நம் நினைவிற்கு வருகின்றன.

அளக நன்னுத லாய் ஓர் அதிசயம்
களவு காயம் கலந்த இந் நீரியே
மிளகு நெல்லியும் மஞ்சளும் வேம்பிடில்
இளகும் மேனி இருளும் கபாலமே

என்னும் செய்யுள் யோகியர்க்கு உரிய பஞ்ச கற்பங்களை உணர்த்துகின்றது என்பர். பஞ்சகற்பம் என்பது ஐவகைப் பொருள்களால் ஆகிய மருந்து மிளகு, நெல்லி, மஞ்சள், வேம்பு ஆகிய நான்குடன் கடுக்காயும் சேர்க்கப் பஞ்ச கற்பங்கள் ஆகும்.

எளிமையில் அருமை

உலகியல் செய்திகளை எளிய நடையில் சொல்வது போல் சொல்லி, அவற்றில் அரிய நுண்ணிய மெய்யுணர்வுக் கருத்துக்களை அமைக்கும் ஆற்றல், திருமூலர்க்கே உரிய தனிச் சிறப்பாகும். சான்றாக சில செய்யுட்களைக் காண்போம்.

ஆரியன் நல்லன் குதிரை இரண்டுஉள
வீசிப் பிறக்கும் வீரகு அறிவார் இல்லை
கூரிய நாதன் குருவின் அருள்பெற்றால்
வாரிப் பிடிக்க வசப்படும் தானே

என்ற திருமந்திரச் செய்யுள், அடங்காத குதிரைகள் இரண்டனைக் குருவின் அருள்பெற்றால் அடக்கலாம் எனப் பொருள் தருகின்றது. ஆயினும் இதன் உட்பொருள் இதுவன்று. இடைகலை பிங்கலை என்னும் மூச்சுக்காற்றுகள் இரண்டனையும் குருவின் அருள்பெற்றால் அடக்கலாம் என்பதே இதன் உட்கருத்தாகும். இது யோக உறுப்புகள் எட்டனுள் ஒன்றாகிய பிராணா யாமம் பற்றியதாகும்.

பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு
மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினால்
பார்ப்பான் பசுஐந்தும் பாலாய்ச் சொரியுமே.

என்பது மற்றொரு திருமந்திரச் செய்யுள். பார்ப்பனர் இல்லத்தில் பசுக்கள் ஐந்து கட்டுக்கு அடங்காமல் திரிகின்றன. அவற்றை அடக்கினால் அந்தப் பசுக்கள் ஐந்தும் நிரம்பப் பால் சொரியும். இது இப்பாடற் கருத்து ஆகும். ஆயின் இதன் உட்பொருள் அதுவன்று. மக்களிடத்தில் உள்ள மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய பொறிகள் ஐந்தும் அவர்களுக்கு அடங்காமல் அவை விரும்பியவாறு திரிகின்றன. அவற்றை அடக்கித் தம்வயப்படுத்தினால், அவை அனைத்தும் ஒருவழிப்பட்டுப் பேரின்பப் பெருவாழ் பெறுவதற்கு உதவியாகும் என்பது இதன் உட்கருத்தாகும்.

எங்கும் நிறைந்துள்ள சிவனின் இயல்பினைப் பேசும்போது,

தேனுக்குள் இன்பம் சிவப்போ கறுப்போ
வானுக்குள் ஈசனைத் தேடும் மதியிலீர்!
தேனுக்குள் இன்பம் செறிந்திருந்தாற் போல்
ஊனுக்குள் ஈசன் ஒளிந்திருந்தானே

எனக் கூறுகிறார் திருமூலர்.

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே

என்பது பிறிதொரு திருமந்திரச் செய்யுளாகும். இதன் முதல் இரண்டு அடிகள் மரத்தினை யானை மறைத்தது, மரத்தினுள் யானை மறைந்தது எனப் பொருள் தருகின்றன. ஆயினும் இதன் உட்பொருள் அதுவன்று, மரத்தால் ஆகிய யானையின் உருவத்தைப் பார்த்து இது யானை என்று எண்ணுமிடத்து மரத்தின் தன்மை மறைந்துவிடும். அவ்வாறின்றி இது மரம் என்று எண்ணுமிடத்து யானையின் தன்மை மறைந்து விடும் என்பது இதன் உட்கருத்து. இது இச்செய்யுளின் பின்னிரண்டு அடிகளில் உள்ள மெய்ப்பொருட் கருத்துகளை விளக்க காட்டப்பெற்ற உவமையாகும். எங்கும் நிறைந்துள்ளன அவற்றைப் பூத வடிவங்களாகப் பார்க்கும் பொழுது பரம்பொருள் தோன்றாது அவற்றைப் பரம்பொருளின் வடிவமாகக் காணும் பொழுது, அப்பூதவடிவங்கள் தோன்றா என்பது இதன் கருத்தாகும்.

சிவம் பழுத்தது

வழுதுணை வித்திடப் பாகன் முளைத்தது
புழுதியைத் தோன்டினேன் பூசணி பூத்தது
தொழுதுகொண் டோடினார் தோட்டக் குடிகள்
முழுதும் பழுத்தது வாழைக் கனியே

இச்செய்யுள் கத்தரி விதைக்கப் பாகற்கொடி முளைத்தது, இது நிலத்தின் பழுதாய், இருக்குமோ என்று புழுதியைத் தோண்ட பூசணி பூத்தது. இதனைக் கண்ட தோட்டக் குடிமக்கள் ஓடினர். அவர்கள் ஓடிப்போன பின்பு தோட்டம் முழுவதும் வாழைப்பழம் பழுத்தது எனப் பொருள் தருகின்றது. ஆயினும் இதன் உட்பொருள் அதுவன்று. இதில் கத்தரிவிதை நல்வினை என்றும், பாகற்கொடி தீவினை என்றும், புழுதியைத் தோண்டுதல் மூலகன்மங்களை ஒழித்தல் என்றும், தோட்டக்குடிகள் ஓடியது இந்திரியங்கள் ஐந்தின் கொள்கையை அடக்கிய செயல் என்றும், வாழைக்கனி பழுத்தது சிவானுபவப் பேறு என்றும் கொள்ளுதல் வேண்டும். எனவே, நான் நல்வினை செய்யப்போனேன், அது என் அறியாமையால் தீவினைபால் விளைந்தது, என்ன இப்படி ஆகிவிட்டதே என்று ஆராயத் தொடங்கினேன், அது எட்டுவகை சித்திகளையும் உண்டாக்கி, என்னை அங்கே அழைத்துக் கொண்டு சென்றது. இதனைப் பார்த்துக் கொண்டிருந்த ஐம்பொறிகள் செயலற்று ஒடுங்கின, பின்னர் சிந்தை நிலைத்தது, சிவம் பழுத்தது என்பது இச்செய்யுளின் கருத்தாகும்.

56. திருமந்திரத்தில் சித்தர் நெறி

இரா. ஆனந்தி
முனைவர் பட்ட ஆய்வாளர்
காமராஜ் கல்லூரி, தூத்துக்குடி

பத்தாவது திருமுறையாகிய திருமந்திரத்தில் சித்தர் நெறிகள் அமைந்துள்ள பாங்கினை எடுத்துரைக்கும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

1. மனித உடல்

திருமூலர் உள்ளம் பெருங்கோவில் ஊனுடம்பு ஆலயம் என்று கூறுகிறார். மேலும் திருமூலர் படமாடுங் கோவில், நடமாடும்கோவில் என்று கூறுவதும் ஒப்பிட்டுப் பார்க்கத்தக்கது. தங்கள் உடம்பில் விளங்கும் உத்தமனாகிய பரம்பொருளைக் கண்டு மகிழ்வதற்காகவே உடல் ஓம்புவதைச் சித்தர்கள் வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். உடல் ஓம்புதலில் முதுல் படிநிலையாகத் தழிழ் மருத்துவம் சித்தர்களால் குறிப்பிடப்பெற்று சித்த மருத்துவம் என்று வழங்கப்பட்டது. சித்தர்களுடைய தெய்வக்கொள்கை உடம்பை அடிப்படையாகக் கொண்டது. மெய்ஞ்ஞானத் தேட்டம் உடையவர்களாய் (மரணமிலாப் பெருவாழ்வு பெற்றவர்களாய்) சித்தர்கள் விளங்கினார்கள், விளங்குகின்றார்கள்.

சித்தர்களுடைய குறிக்கோள் யோக சாதனைகள் மூலம் காயசித்தியை அடைவதுவே. சமயவாதிகள் இவர்களைத் தாழ்த்தப் பட்டவர்களாக ஒதுக்கி வைத்ததோடு மட்டுமல்லாமல் மதப்புறம பாளர்கள் என்ற பெயரும் சூட்டி, ஒதுக்கி வைத்தார்கள்.

பெரும்பகுதியான சித்தர் இலக்கியங்களை அழிப்பதிலும் சமயவாதிகள் முனைப்பைக் காட்டினார்கள். சமய சடங்குகளுக்கு, வழிபாட்டு முறைகளுக்கு முக்கியத்துவம் தருவதைவிட, அழியா நித்திய தேகத்தைப் பெற்று பரம்பொருளை அடைவதே சித்தர்களின் குறிக்கோளாய் இருந்தது.

சித்தர்கள் தங்களுடைய உடலை தூலதேகம், யோக தேகம், சித்த தேகம், பிரணவ தேகம் அல்லது மந்திர தேகம், ஞான தேகம் அல்லது திவ்ய தேகம் என்று வகைப்படுத்திக் கொண்டார்கள். தேகத்தை விளக்கும்போது புழுவாக உருவாகி பிறகு தன்னைச் சுற்றி கூடு ஒன்றனை அமைத்துக் கொண்டு பட்டாம்பூச்சியாக முற்றிலும் உருமாற்றம் அடைந்து வருகின்ற நிலை சித்தர் நிலை என்று குறிப்பிடப்பெறுகிறது.

2. இறைவன் ஒருவனே

சித்தர்களின் கொள்கை இறைவன் ஒருவன் என்பதே. ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் (2104) எனத் திருமூலரும் ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு எனப் பட்டினத்தாரும் அருளியிருப்பதை அறிவுடையார் அறிவர்.

மானுட உடல் எடுத்த மனிதரொருவர் நண்பர் சுற்றத்தார் பலரும் கூடியிருக்கும் இடத்தில் தந்தைக்கு மகனாகவும், தன் மகனுக்குத் தந்தையாகவும், அண்ணனுக்குத் தம்பியாகவும், தன் தம்பிக்கு அண்ணனாகவும், மாணவனுக்கு ஆசிரியராகவும், தன் ஆசிரியருக்கு மாணவனாகவும், மனைவிக்குக் கணவனாகவும், தன் மகளுக்குத் தந்தையாகவும், தாத்தாவிற்குப் பேரனாகவும், தன் பேரனுக்குப் பாட்டனாகவும், தன்னிடம் வேலை பார்ப்பவர்களுக்கு முதலாளியாகவும், தன் முதலாளிக்கு வேலையாளாகவும் இருக்கிறான். இப்படி ஒரே ஆள் பல்வேறு நாம ரூபங்களைப் பெற்று ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் செயலாற்றுவதுபோல நாம் அனைவரும் செயலாற்றுகிறோம். ஒவ்வொரு வரும் பல்வேறு பெயர்களைச் செயல்நிலை நோக்கிப் பெறுகிறோம்.

மிகச் சாதாரண மானுட தேகம் தாங்கிய நாமே ஒரே இடத்தில் ஒரே நொடியில் இருபதுக்கு மேற்பட்ட நாம ரூபங்களைப் பெற்றுச் செயலாற்றுவதுபோல ஒரே பொருள் (இறைவன்) செயல்நிலை நோக்கிப் பல்வேறு பெயர்களைப் பெறுகிறது. இதன் உண்மை நிலையை குருமுகமாக அறிந்துகொள்க.

3. குருவின்றி அறிய முடியாது

சித்தர்கள் இறைவனை ஆதி, பெருவளி, பொருள், வஸ்து, அது, ராஜநிலை எனப் பல பெயர்களில் குறியீடாக-பரிபாஷையாக (மறைத்துப் பேசுதல்) கூறியுள்ளார். தெய்வப்புலவர் திருவள்ளுவரும் ஏனைய அருளாளர்களும் இறைவனைப் பொருள், மெய்பொருள், செம்பொருள் எனக் குறிப்பிட்டுப் போற்றிப் பரவுகின்றனர்.

அசையாப் பெருவெளியில் நின்றொளிரும் ஆதியாகிய சிவ பரம்பொருளை நினைந்து நினைந்து அதனுடன் இணைந்து இணைந்து அசைவற்ற நிலையில் இன்புற்றவர்களே சாயுச்சிய முத்தி பெற்றவர்கள். இவர்களே சாயுச்சிய பதவி பெற்றவர்கள். இவர்களே சிரஞ்சீவிகள். இப்படி சாகாத நிலை பெற்றவர்களே சித்தர். அவர்களே சன்மார்க்கிகள், கல்வியைத் தெரிவிப்பதேயன்றி வேறில்லை. சாகிறவன் சன்மார்க்க நிலையைப் பெற்றவனல்லன். இந்த மார்க்கத்தின் உண்மை தெரியவேண்டுமாகில் திருமந்திரத்தைக் கவனிக்கில் விளங்கும் என்கிறார் வடலூர் வள்ளற்பிரான்.

சாற்றும் சன்மார்க்கமாம் தற்சிவ தத்துவத்
தோற்றங்களான சுருதிச் சுடர்கண்டு
சீற்றம் ஒழிந்து சிவயோக சித்தராய்க்
கூற்றத்தை வென்றார் குறிப்பறிந்தார்களே (1477)

சைவப் பெருமைத் தனி நாயகன் நந்தி
உய்ய வகுத்த குரு நெறி ஒன்று உண்டு
தெய்வச் சிவநெறி சன்மார்க்கம் சேர்ந்து உய்ய
வையத்துள் ளார்க்கு வகுத்து வைத்தானே (1478)

தெளிவறி யாதார் சிவனை யறியார்
தெளிவறி யாதார் சீவனும் ஆகார்
தெளிவறி யாதார் சிவமாக மாட்டார்
தெளிவறி யாதவர் தீரார் பிறப்பே (1480)

தான் அவன் ஆகித் தான் ஐந்தாம் மலம் செற்று
மோணம் அது ஆம் மொழிப்பால் முத்தர் ஆவதும்
ஈனம் இல் ஞானானுபூதியில் இன்பமும்
தான் அவனாய் அற்றல் ஆன சன்மார்க்கமே (1481)

பசுபாச நீக்கிப் பதியுடன் கூட்டிக்
கசியாத நெஞ்சம் கசியக் கசிவித்து
ஒசியாத உண்மைச் சொரூபோதயத்துற்று
அசைவான தில்லாமையான சன்மார்க்கமே (1486)

தான் அவனாதல், அதாவது சீவன் சிவமாதல். அசைவானது இல்லாமையே சன்மார்க்கம். சன்மார்க்கம் என்றால் ஞானநெறி, ஒளிநெறி என்று பொருள். அதுவே சித்தர்நெறி. இந்தச் சித்தர்நெறியாகிய குருநெறியை அறிந்து கொள்வதற்குச் சைவப் பெருந் தனிநாயகனாகத் திருவவதாரம் செய்தருளிய நந்தியும் அவர்தம் பரம்பரையில் வந்த மெய்க் குருபிரானின் தனிப்பெருங் கருணையுமே வழி. அருட்பெருஞ் சோதி வடிவமாக உருவெடுத்து வந்துள்ள குருபிரானின் தனிப் பெருங்கருணையன்றி யாரும் சித்தராக முடியாது.

குருவே சிவமென்று கூறினன் நந்தி
குருவே சிவமென்பது குறித்து ஓரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே உரையுணர் வற்றதோர் கோவே (1581)

திருவடி ஞானம் சிவமாக்குவிக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமல மீட்கும்
திருவடி ஞானம் திண்சித்தி முத்தியே (1598)

எனத் தெய்வ திருமூலர் உரைப்பதை உணர்வுடையார் உணர்ந்து உய்தி பெறுக. குருவே சிவம். எனவே குருவை அடையாமல் எப்படி சம்பந்தம் ஆவது? எனவே ஒரு சற்குருபெருமானின் திருவடியினை அடையாதவன் சித்தராக முடியாது.

4. இறைவன் இருக்குமிடம்

இறைவன் எங்கே இருக்கிறான். அவனைக் காட்ட முடியுமா? என்ற கேள்வி பல காலமாகக் கேட்கப்பெற்று வருகின்ற பெரிய கேள்வி. இதற்கு சித்தர்கள் தெளிவாக விளக்கம் கூறியுள்ளனர். இறைவன் அண்டத்திலும் (புற உலகிலும்) பிண்டத்திலும் (உடம்பிற்குள்) ஓர் ஒழுங்கு முறையில் செயல்பட்டுக் கொண்டிருப்பதை அறிந்து உணர்ந்து உரைத்துள்ளனர். இறையாற்றல் அண்டத்தில் செயல்படுவதை மொழிஞாயிறு பாவாணர் ஒன்பது காரணிகள் (காண்க: தமிழர் மதம்) காட்டி விளக்குகிறார்.

5. உடம்பில் இறைவன்

நம் பருவுடலுக்குள் இருக்கும் இமயமலை, கைலாயம், பரலோகம், சொர்க்கம், காசி எனப் பலவாறாகச் சொல்லப்படும் அந்த இருதயகமல வீட்டில்தான் சிவ பரம்பொருள் சோதியாக ஒளிர்ந்து கொண்டிருக்கிறது.

பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு (358)

என்னும் வள்ளுவர் வாக்கிற்கேற்பச் செம்பொருள் கண்டு அதைக் கையகத்ததாகத் - தம்முடைய உடைமைப் பொருளாக அடைய மேற்கொள்ளும் முயற்சி - பயிற்சியுடையவரையே சித்த நெறியாளர் எனப் புகலுதல் பொருத்தமுடையதாகும்.

பரம்பொருள் நம் உடம்பிற்குள்ளே உள்ள சிற்சபையில் அமர்ந்து அம்பலத்தில் நடராசராய் நடனமாடி ஒலிசெய்து கொண்டிருப்பதைச் சித்தர்கள் தெளிவாக உரைத்துள்ளனர்.

காயக் குழப்பனைக் காய நன்னாடனைக்
காயத்தினுள்ளே கமழ்கின்ற நந்தியைத்
தேயத்துளே எங்கும் தேடித் திரிவார்கள்
காயத்துள் நின்ற கருத்து அறியாரே (2071)

நட்டகல்லைத் தெய்வம்என்று நாலுபுட்பம் சாத்தியே
சுற்றிவந்து முணமுணென்று சொல்லும்மந்திரம் ஏதடா!
நட்டகல்லும் பேசுமோ நாதன்உள் இருக்கையில்
சுட்டசட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ (சிவவாக்கியர்:481)

தான் படைத்த படைப்புகளிலே மிக உயர்ந்த படைப்பாக ஆறறிவு உடைய மனிதனைப் படைத்து அம்மனுக்குலத்தின் உயிரையே தனக்குரிய இருப்பிடமாகக் கொண்டு இறைவன் குடியேறியிருக்கிறான் என்பதற்கு அனைத்து வேத நூல்களும் சான்று பகர்கின்றன. பேரறிவுப் பெரும்பொருளாக இறைவன் நம்முள் ஒளிர்வதை.

கண்காணியாகவே கையகத்தே எழும்
கண்காணியாகக் கருத்துள் இருந்திடும்
கண்காணியாகக் கலந்து வழிசெயும்
கண்காணியாகிய காதலன் தானே

எனத் திருமூலரும், தருமையாதீனக் குருமுதல்வர் ஸ்ரீகுருஞான சம்பந்தரும் உணர்த்தியுள்ளனர். நம் உடலுக்குள் இருக்கும் சிவத்துடன் சம்பந்தம் கொள்வது உயிருடன் இருக்கும்போதா? இறந்தபிறகா? செத்தபிறகு சிவலோகம் என்பார்கள். செத்த உடலில் பேரறிவுப் பெரும் பொருளான சிவம் உயிர்த் துடிப்புடன் ஒளிராதே. எனவே உயிருடன் இருக்கும்போதே சிவத்தை அறிந்து சிவமாக வேண்டும். அதற்குரிய வாழ்க்கை நெறியே சித்தர் நெறியாகும்.

6. புருவ நடு (ஆக்ஞை)

இறைவனை அண்டத்திலும் பிண்டத்திலும் (உடம்பிலும்) கண்டுணர்ந்த சித்தர்கள் உடம்பில் எங்கே வீற்றிருந்து ஒளிர்கிறான் எனக் காண முற்பட்டார்கள். ஏன் எனில் அண்டங்களைக் கடந்து சென்று அவனைக் காண முடியாது. அது பெருமுயற்சி, நவகோள் களையும் தன் ஊனுடம்பிற்குள்ளே கண்டு தெளிந்து உடம்பினைப் போற்றிப் பாதுகாக்க ஆரம்பித்தார்கள். உடம்பிற்குள்ளே இறைவன் இருக்கும் இடத்தைச் சித்தர்கள் பல பாடல்களில் கூறியுள்ளனர். சான்றுக்கு ஒருசில பாடல்கள் மட்டும். ஏனையவை குருமுகத்தால் அறிந்துகொள்க.

நெற்றிக்கு நேரே புருவத்து இடைவெறி
உற்று உற்றுப் பார்க்க ஒளிவிடும் மந்திரம்

பற்றுக்குப் பற்றாய்ப் பரமன் இருந்திடம்
சிற்றம் பலம்என்று சேர்ந்து கொண்டேனே (2732)

7. இறைவனின் வடிவம்

நம் ஊனுடம்பிற்குள் ஜோதியாய், சுடராய் ஒளிரும் இறைவனைத் திருவடி எனக் குழுஉக்குறியாகப் பரிபாஷையில் போற்றிப் பரவினர். சைவம், வைணவம், சமணம், பௌத்தம் ஆகிய அனைத்துச் சமயங்களும் இறைவனின் திருவடியினைப் போற்றிப் பரவுகின்றன. அறிவு, ஜோதி, விளக்கு, சுடர், கற்பூரம், உயிர் எனப் பல நிலைகளில் அந்த மெய்ப்பொருளைச் சித்தர்கள் பரிபாஷையில் குறிப்பிட்டுப் போற்றுகின்றனர். சொற்கள் பல அவை குறிக்கும் பொருள் ஒன்றே தண்ணீர் (தமிழ்), வாட்டர் (ஆங்கிலம்), பானி (இந்தி), நீலு (தெலுங்கு), வெள்ளம் (மலையாளம்) எனப் பல மொழிகளில் குறிப்பிட்டாலும் இச்சொற்கள் குறிக்கும் பொருள் ஒன்றே. அதைப் போலத்தான் சித்தர்கள் குறிக்கும் பல சொற்கள் அந்தப் பரம்பொருளாகிய இறைவனை - மெய்ப்பொருளைக் குறிவைத்தே கட்டப் பெற்றுள்ளன.

ஒரு சற்குருபெருமான் பெருங்கருணையோடு உணர்த்தும்போது உயிரே சிவலிங்கமாக, சீவனே சிவமான ஒளிர்வதை உணர முடியும். இதனை உணர்ந்தவதே உய்யவல்லார்.

உய்யவல் லார்கட்கு உயிர்சிவ ஞானமே
உய்யவல் லார்கட்கு உயிர்சிவ தெய்வமே
உய்யவல் லார்கட்கு ஒடுக்கம் பிரணவம்
உய்யவல் லார்அறி வுள் அறிவாமே (2822)

எனத் தெய்வத் திருமூலர்பிரான் திருவாய் மலர்ந்துள்ளதை உணர்ந்து உய்தி பெறுதல் வேண்டும். அறிவாக, பிரணவமாக, ஞானமாக, தெய்வமாக, சிவமாகத் தன் உள்ளத்து உள்ளே ஒளிர்வது தன் உயிரே என்பதை உணர்ந்து தெளிந்தவர் உய்யவல்லார். அவரே சித்தர், ஆதிசோதி அருள்ஞானத் தீ என அகத்திய மாமுனிவர் குறிப்பிட்டிருக்கும் அந்தச் சிவத்தை நாளும் சிந்ததித்து - சந்தித்து வணங்கும் நெறியில் நிற்பவரே சித்த நெறியாளர். சித்தர்கள் திருவடியினையே இறைவனாக மெய்ப்பொருளாக வணங்கினர்.

8. திருவடி வணக்கம் (சித்தர் வணக்கம்)

திருவடி, நற்றாள், தாள், பாதம், மாணடி, இறைவனடி என்றெல்லாம் கட்டப் பெறும் சொற்களின் பொருள்தான் என்ன? என்பதை அறிவுப்பூர்வமாக ஆராய்வோம்.

திருவள்ளுவர் கடவுள் வாழ்த்து எனும் முதல் அதிகாரத்தில் உள்ள பத்துக் குறட்பாக்களில் ஏழில் திருவடி பற்றிக் குறிப்பிடுகிறார். தாள், அடி என வள்ளுவர்பிரான் குறிப்பிடுவது தூல உடலின் பாதங்களை அல்ல. குருகீதை எனும் நூல் பாதத்தின் - குருபாதத்தின் அருமை பெருமைகளைப் பலபட விரித்துப் பேசுகிறது. மாயாஜாலங்கள் செய்வது, குங்குமம், விபூதி, கடவுளர் உருவங்களை வரவழைத்தல், கல்லை வாந்தியெடுத்துச் செய்பவர் குருவாக முடியாது. சீவனைச சிவமாக்கிப் பேசுபவர்தான் குருவாக முடியும்.

ஏதுபிழை செய்தாலும் ஏழையை னுக்கிரங்கித்
தீது புரியாத தெய்வமே - நீதி
தழைக்கின்ற போரூர்த் தனிமுதலே! நாயேன்
பிழைக்கின்ற வாறுநீ பேசு.

எனத் திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் குருபெருமானாகிய முருகப் பெருமானிடம் வேண்டுகிறார். அகர உயிர்ப் பொருள் சிகரமாக (சிகரத்தில் ஏற்றி என்னைச் சிவமாக்கிக் கொண்டது பாரீர் - வடலூர் வள்ளற்பிரான்) குருவாக உருவெடுத்து வருகிறது. அப்படி உரு எடுத்து வந்த குருவே பிரம்மம். அவரே கடவுள், இறைவன் எல்லாம். அவரின் பாத தீர்த்தம் எல்லாப் பாவங்களையும் போக்கிப் பிறப்பறுக்கும். இந்த அரிய பெரிய செயலின் செழுமையை - சிறப்பை, சீர்மையைக் குருகீதை மிக விரிவாக எடுத்துரைக்கின்றது. ஆனால் இன்று குரு எனத் தங்களை கூறிக் கொள்ளுவோரின் செயற்பாடுகள் செம்மையாக இல்லை.

குருமார்கள் என்போரின் தூல உடலின் கால்களையும் கால்களின் படங்களையும் பூசை செய்வதும், கால்களைக் கழுவிய தண்ணீரைப் பாததீர்த்தம் என்று பருகுவதும் இன்று மக்களிடையே நடைமுறையில் இருந்து வருகின்றன. இப்படித் தூல உடலின் கால்களையும், கால்களின் படங்களையும் வைத்துப் பூசை செய்வதாலும், பாதங்களைத் தட்டில் வைத்துக் கழுவிய தண்ணீரைப் பாததீர்த்தம் என்று பருகுவதாலும் மேலே குருகீதையின் சுலோகங்களில் கூறபெற்ற பலன்களைப் பெற முடியுமா? நிச்சயமாகப் பெற முடியாது. பாதம் என்றால் என்ன என்பதை அறிந்து கொள்ளாததால் ஏற்பட்ட விளைவு மேலே கூறப்பெற்ற தவறான பழக்க வழக்கங்கள் ஆகும். (முருகப் பெருமான் அகஸ்திய மாமுனிவருக்கு உபதேசித்தருளிய யோக ஞானம்: 500.பக்.148) என்னும் கருத்துரை கவனத்திற்குரியது. பாதமாகிய திருவடியின் அளப்பரும் செயலினை.

திருவடி யேசிவம் ஆவது தேரில்
திருவடி யேசிவ லோகம் சிந்திக்கில்
திருவடி யேசெல்கதியது செப்பில்
திருவடி யேதஞ்சம் உள் தெளிவார்க்கே (138)
திருவடி ஞானம் சிவமாக் குவிக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமல மீட்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே (1598)

என நுட்பமாக உணர்த்துகிறார் திருமூலர்பிரான்.

ஓங்கார பீடத்து ஒளிர்கின்ற பாதம், ஒன்றாய் இரண்டாகி ஓங்கிய பாதம் என்னும் வரிகள் ஆழ்ந்து சித்திக்கத்தக்கன. பிரணவப்பொருளாக இருப்பது ஓங்காரம். ஓங்காரமாகிய பிரணவன் சுழியில் அமர்ந்து ஒளி செய்து அறிவே தெய்வம் என்றும் அந்த அறிவுப் பொருளே திருவடியாய் நம்முள் ஜோதியாய் ஒளிர்கிறது என்றும் வள்ளலார் குறிப்பிட்டுள்ளார். இங்கு அறிவு எனக் குறிக்கப் பெறுவது ஒரு சற்குருபிரானின் அறிவு. சூக்கும சித்து. அதாவது மன அறிவு, சூக்கும

சித்தாகிய இந்த அறிவிப்பொருள் என்றும் அழியாதது ஆக்கப்படாதது தான்தோன்றி, தோன்றல், திரிதல், கெடுதல் என்னும் மூன்றும் இதற்கு இல்லை.

அறிவுக்கு அழிவில்லை ஆக்கமும் இல்லை
அறிவுக்கு அறிவல்லது ஆதாரம் இல்லை
அறிவுக்கு அறிவை அறிகின்றது என்றிட்டு
அறைகின் றனமறை யீறுகள் தாமே (2358)

என்கிறார் தெய்வத் திருமூலர். அறிவே திருவடி திருவடியே அறிவு. பாதத்தின் பொருளை இவ்வாறு உணர்ந்து நினைவில் வைத்துக் கொண்டால் திருக்குறளில் மாணடி சேர்ந்தார் நிலமிசை நீடு வாழ்வார் என்பதன் உண்மை விளங்கும். குருபிரானின் அறிவு எனும் பாதமாகிய மாணடியுடன் சேர்ந்து இரண்டறக் கலந்து அறிவுரு ஆனால் அழியாமை அடையலாம், என்றும் அழியாத ஞானதேகம் பெற்று நித்திய சுக பூரணப் பெருவாழ்வு என்ற மரணமிலாப் பெருவாழ்வில் வாழலாம் என்பதை உணர வேண்டும். அப்பொழுதுதான் அந்நிலமிசை நீடுழி காலம் காலா தீதனாக வாழலாம் என்ற உண்மையைப் புரிந்து கொள்ள முடியும். அறிவுடன் சேர்ந்து இரண்டறக் கலந்து ஞானகாய வடிவம் பெற்று ஒளி வெளிநிலை அடைந்தால் - அங்கு மனம் இல்லாததால், அது மனம் இறந்த பரிசுத்த நிலை ஆதலால் - மனக்கலையும் இருக்க இடமின்றி இல்லாது ஒழியும் என்ற பேருண்மையைப் புரிந்து கொள்ள முடியும். சற்குரு பெருமான் நம்மிடம் அதை காட்டித் தரப்பெற்று நாம் அதை அறிதலை தன்னை அறிதல் ஆகும். (சுப்பிரமணிய ஞானம்: 500 பக். 155) என்னும் உண்மை யுரையினை உணர்வுடையோர் உணர்வர். உயர்வு ஒன்று மிலார்க்கு ஒன்றுமில்லை.

தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை யறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை யறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே யர்ச்சிக்கத் தானிருந் தானே (2355)

எனத் தெய்வத் திருமூலர் தெளிவாகக் கூறியருளியிருக்கிறார். தன்னை அறிவதுதான் அறிவு. (திருமந்திரம்: 2318. சித்தர் நெறியின் முடிந்த முடிபு தன்னை அறிதலே. தன்னை அறிந்தவரே தலைவனை (சிவத்தை) அறிய முடியும்.

திருவடியே ஞானம், ஞானமே திருவடி. எல்லாமும், அதுவே அதுவே எல்லாமும். என் செய்ய இயலும். எல்லாம் உணரத்தக்கதாய் உள்ளது. குருவின் பாதோதகம் ஆகிய திருவசனம் சகல பாவங்களையும் போக்கும். பிறப்பை வேரறுக்கும். அதனை விரிப்பின் பெருகும். ஞானமாகிய திருவடியினைக் குருவருளால் கண்டு களித்தவர் அடையும் பெரும்பேற்றினை.

விரும்பில் அவனடி வீர சுவர்க்கம்
பொருந்தில் அவனடி புண்ணிய லோகம்
திருந்தில் அவனடி தீர்த்தமும் ஆகும்
வருந்தி அவனடி வாழ்ததவல் லார்க்கே

எனத் திருமூலர்பிரான் உணர்த்துகிறார். இந்த அறிவாகிய திருவடிப்பூவின் வாசைன அண்டசராசரங்களையும் கடந்து வீசும்.

57. திருமந்திரத்தின் சிறப்புகள்

ம. பத்மாவதி
முனைவர் பட்ட ஆய்வாளர்
காமராஜ் கல்லூரி
தூத்துக்குடி.

திருமூலதேவநாயனாரின் திருமந்திரமாலை, திருமந்திரம் என்ற பெயரால் வழங்கப்படும். இந்நூல் சைவத் திருமுறைகளுள் பத்தாவதாக இடமபெற்றுள்ளது. தமிழ் மொழியில் பெருஞ்சிறப்புக்கு உரிய முதன்மையான நூல்களைத் தொகுத்துஉரைக்கும் ஒருபழம்பாடல் உள்ளது. அதில் திருமந்திரமும் இணைக்கப் பெற்றிருப்பது இதன் சிறப்பிற்குச் சான்று கூறிநிற்கிறது. சைவஆகமங்களின் சாரமாகத் திகழும் இந்நூலை. தமிழில் எழுந்த சைவசமயஞ் சார்ந்த ஒருகலைக் களஞ்சியம் எனறே கூறலாம். திருமந்திரம் ஒன்பதுஉட்பிவுகளைக் கொண்டது. ஒவ்வொருபிரிவும் ஒரு 'தந்திரம்'எனக் குறிக்கப்பட்டுள்ளது. இந்த ஒன்பது தந்திரங்களும், ஆகமங்கள் ஒன்பதின் சாரமாக அமைந்துள்ளன. ஆகமங்கள் 28,அவற்றுள் ஒன்பதின் சாரமாக 9 தந்திரங்கள் அமைந்துள்ளன. அந்த ஆகமங்கள் வருமாறு: காரணம், காமிகம், வீரம், சிந்தம், வாதுளம், வியாமளம், காலோத்தரம், சுப்பிரம், மகுடம் என்பன.

தந்திரம் ஒன்பதுசார்வு மூவாயிரம்
சுந்தரன் ஆகமச் சொன்மொழிந் தானே

என்றசிறப்புப் பாயிரப்பகுதி இதனைஉறுதிசெய்கிறது. இந்நூல் மூவாயிரம் பாடல்களைக் கொண்டுள்ளது.

திருமூலர்

திருமூலர் வரலாறு பாயிரப் பகுதியில் இடம் பெற்றுள்ளன. திருமூலர் பெரியபுராணநாயன்மார் வரிசையிலும் இடம் பெற்றுள்ளார். வடநாட்டி லிருந்து தென்னாடுவந்தமுனிவர் ஒருவர் மாடுமேய்க்கும் ஓர் இளைஞன் உடலில் கூடுவிட்டுக் கூடுபாய்ந்து மூலன் எனப் பெயர் பெற்றார். திருவாவடுதுறையில் யோகத்தில் பலகாலம் இருந்து இத்திருமந்திர மாலையைஉலகுக்குவழங்கினார். திருமூலரே,

என்னைநன்றாக இறைவன் படைத்தனன்
தன்னைநன்றாகத் தமிழ்செய்யுமாறே (81)

என்றுகுறிப்பிட்டிருப்பது கருதத்தக்கது. தமிழில் ஆகமங்களின் சாரங்களைத் தொகுத்தளிப்பதே அவர் வருகையின் நோக்கம் என்பது உறுதியாகிறது.

யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் (147)

என்றஅரியதொடர் இப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

விநாயகர் காப்பு

திருமந்திரத்தின் முதல் தந்திரம் முதல் ஒன்பதாவதுதந்திரம் வரையிலான ஒவ்வொரு தந்திரமும் ஒவ்வொரு சமய உண்மையை நுட்பமுற எடுத்துரைப்பனவாக அமைந்துள்ளன. முன்னதாக அமைந்துள்ள பாயிரத்தில் கடவுள் வாழ்த்து, வேதஆகமங்களின் சிறப்பு, திருமூலர் வரலாறு முதிலயன விரித்துரைக்கப் பெற்றுள்ளன. இந்நூல் விநாயகர் காப்புஒன்றுடன் தொடங்குகின்றது.

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறைபோலும் எயிற்றனை
நந்திமகன்தனைஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்துஅடிபொற்றுகின்றேனே

என்பதுதிருமந்திரத்தின் காப்புச் செய்யுள். கடவுள் வாழ்த்துப் பகுதியில் சிவபெருமானின் பெருமைபேசும் 50 பாடலக்ள இடம் பெற்றுள்ளன.

தீயினும் வெய்யன் புனலினும் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருள்அறிவார் இல்லை
சேயினும் நல்லன் அணியன்நல் அன்பர்க்குத்
தாயினும் நல்லன் தாழ்சடையோனே (8)

சிவனின் மேலானகருணைத் திறத்தைச் சுட்டிக்காட்டுகிறது. எனினும் மக்கள் அவன் கருணையையுமுழுவதும் உணர்ந்து வழிபட்டு வாழ்வு பெற்றிலர் என்றதிருமூலரின் மனவருத்தம் இப்பாடலில் பதிவாகியுள்ளது.

வேதஆகமச் சிறப்பு

வேதம்,ஆகமம் என்ற இரண்டு நூல்களைப் பற்றியும் திருமூலர் குறிப்பிடுகிறார். இரண்டுமே இறைவனிடமிருந்துவந்தவை : வேதம் பொது,ஆகமம் சிறப்புஎன்பதும் அவர் கருத்து. ஆகமம் என்றசொல்லுக்கு இந்நூல்கள் வந்தனஎன்பதைக் குறிக்கிறது.

ஆகமம் என்ற சொல்லை மற்றொரு விதமாகவும் பிரித்துப் பொருள் காண்கிறார்கள். ஆ என்பது பாசம், க என்பதுபசு, ம என்பதுபதி, எனவே இம்மூன்றையும் ஆகமம் கூறுகிறது.

திருமந்திரத்தின் - அறியதொடர்புகள்

திருமந்திரம் சைவசமயத்திற்கு மட்டும் உாயி ஒரு சமய நூலாக அமையாது, உலகமக்களுக்கெல்லாம் அறத்தையும், ஆன்ம ஈடேற்றத்தையும், மருத்துவக் கூறுகளையும் எடுத்துரைக்கும் பொது நூலாக அமைந்துள்ளது. கீழேகொடுக்கப்பட்டுள்ள பாடல் பகுதிகள் திருமந்திரத்தின் சிறப்புக்குக் கட்டியம் கூறிநிற்பன.

ஒன்றேகுலமும் ஒருவனேதெவனும் (2104)
சிவனொடுஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை (5)
ஆர்க்கும் இடுமின்: அவர்இவர் என்னன்மின் (250)
ஈசன் அடியார் இதயம் கலங்கிடத்
தேசமும் நாடும் சிறப்பும் அழிந்திடும் (534)
உடம்பார் அழியில் உயிரார் அழிவர்...
உடம்பைவளர்த்தேன் உயிர்வளர்த் தேனே (724)
குருவேசிவம்எனக் கூறினன் நந்தி (1581)
மானுடர் ஆக்கைவடிவுசிவலிங்கம் (1726)

இவைபோன்ற நூற்றுக்கணக்கானஅரியதொடர்கள் திருமந்திரத்துள் இடம்பெற்றுள்ன.

திருமந்தரம், தந்திரங்களும் உள்ளீட்டுச் செய்திகளும்

தந்திரங்களின் உள்ளீட்டுச் செய்திகள்

தந்திர வரிசை	உள்ளீடு
ஒன்று	உபதேசம், யாக்கை நிலையாமை, கொல்லாமை, கல்வி, கள்ளுண்ணாமை
இரண்டு	சிவனின் எட்டுவகைவீரச் செயல்கள் ஐந்தொழில்கள், சிவனையும், குருவையும் நிந்திப்பதால் வரும் துன்பங்கள்
மூன்று	யோகக் கலைகள், அஷ்00டமாசித்திகள்
நான்கு	திருஅம்பலச் சக்கரம், நவகுண்டம், வயிரவமந்திரம்
ஐந்து	இறைவனைஅடைவதற்கு உரிய நூல்கள் நெறிகள் சரியை, கிரியை, யோகம், ஞானம், சக்திநிபாதம்
ஆறு	குருதரிசனப் பயன்,திருநீற்றின் சிறப்பு, துறவுநிலை
ஏழு	ஆறு ஆதாரங்கள், சிவபூசை, குருபூசை, சமாதி அமைத்து வழிபடும் முறை, உயிர் இலக்கணம்
எட்டு	பக்தி நிலை, முக்தி நிலை
ஒன்பது	நுண்பொருள் விளக்கம் (சூனிய சமபாஷணை)

அன்பே சிவம்

திருமந்திரம் ஆகமத்தின் சாரமாகஅமைந்திருந்தாலும் அனைவரும் உணரும் எளிமையும், இனிமையும் உடையபாடல்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது. 'அன்பேசிவம்' என்ற தொடரைப் பலரும் அறிவர். மனிதர்கள் ஏனைய மனிதர்களபால் செலுத்தும் அன்பில்தான் உலகம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. உலகத்தில் தோன்றியகடவுள் சார்புடையமதங்களும், கடவுள் மறுப்புச் சமயங்களும் கூட அன்பினைப் பெரிதும் போற்றியேஉரைக்கின்றன. திருவள்ளுவர் முதலிய அற நூலாசிரியர்களும் அன்பின் சிறப்பையும், இன்றியமையாமையையும் எடுத்துரைத்துள்ளனர். சைவர்களின் இறைவன் சிவன். அவன் யார்? அவன் இயல்புஎத்தகையதுஎன்றவினாக்களுக்குத் திருமூலர் தரும் விடை ஆழ்ந்த பொருட்சிறப்புடையது. அன்புதான் எங்கள் சிவன். சிவம் வேறு அன்பு வேறு என்பார் அறியாமைமிக்கவர்கள். இரண்டும் ஒன்றே என்று உணரும் உணர்வில் இறைமைப் பேறுவாய்க்கும்.

அன்பும் சிவமும் இரண்டுஎனபர் அறிவிலார்
அன்பேசிவமாவதுஆரும் அறிகிலார்
அன்பேசிவமாவதுஆரும் அறிந்தபின்
அன்பேசிவமாய் அமர்ந்திருந் தாரே (270)

என்பதுஅன்பின் சிறப்புரைக்கும் அரியபாடல்.

மரமும் யானையும்

உலகம் வேறு, இறைவன் வேறானவன் என்றுகருதும் கருத்து சமய நம்பிக்கை உடையவர்களிடமும் உள்ளது. குழந்தைமரத்தால் செய்யப்பட்ட யானைபொம்மையைக் கண்டு 'யானை! யானை' என்று அஞ்சித் தாயிடம் தஞ்சம் அடைகிறது. தாயோ இது யானை இல்லை மரம் என்று கூறிக் குழந்தையின் அச்சம் நீக்குகிறாள் என்றால் குழந்தை கண்டது யானையா? மரமா? என்றஐயம் எழுகிறது. யானையாகக் கண்ட குழந்தைக்கு மரம் என்பது புலப்படவில்லை, மரம் என்ற தெளிவு பெற்றதாய்க்கு யானை புலப்படவில்லை. இவற்றைப் போல் உலகத்தையும், உலகப் பொருள்களையும் இறைவனாகவே காண்பார்க்கு அவைபுலப்படுவதில்லை. உலகமாகவேகாண்பார்க்கு இறைமை புலனாவதில்லை. இவ்வழகிய உண்மையைத் திருமந்திரம் மிகஅழகிய கவிதைஒன்றில் வைத்து விளங்குகிறது.

மரத்தைமறைத்ததுமாமதயானை
மரத்தினமறைந்ததுமாமதயானை
பரத்தைமறைத்ததுபார்முதல் பூதம்
பரத்தின் மறைந்ததுபார்முதல் பூதமே (2290)

இக்கருத்தையொட்டியே நாவைக் கண்டால் கல்லைக் காணோம், கல்லைக் கண்டால் நாயைக் காணோம் என்ற பழமொழி எழுந்தது.

எளிய இனியஎடுத்துக்காட்டுகளால் அமைந்துள்ள இத்தகுகவிதைகள் திருமந்திரத்தில் நிறைவாக இடம்பெற்றுள்ளன.

மனிதநேயம்

சைவம் மனிதநேயத்தைவற்புறுத்தும் ஓர் அன்புநெறி. சிற்றுயிர்கள் இடத்தும் கருணைகாட்டவேண்டும் என்று அது வற்புறுத்துகின்றது. இறைவன் உலகத்தையும், நுகர் பொருள்களையும் உயிர்கள் பெற்று இன்புறுவதற்கே படைத்தளித்தான். உயிர்களிடமிருந்து இறைவன் அன்பு ஒன்றைத் தவிர வேறுயாது ஒன்றும் பெற விரும்புவதில்லை. ஆனால் சமயவாதிகள், சடங்குநெறியில் பற்றுக் கொண்டுநின்று, மனிதனின் பசிக்கு உணவிடவிரும் பாது இறைவனுக்குப் படையலிட்டு மகிழ்கின்றனர். இறைவன் மனிதன் அளிக்கும் உணவையும். படையலையும் உண்டுமகிழ்கின்றானாஎன்றால் இல்லை. இறைவன் கவனத்திலும் கணக்கிலுமஅவனுக்குப் படைக்கப்பட்டபடையல் இடம் பெறவதில்லை. அவன் கணக்கில் இடம்பெறவரும்பினால் பசித்திருப் போருக்கு உணவு அளியுங்கள். அதுவே அவனைச் சென்றடையும் அரிய பெருநெறி என்று காட்டுகிறார் திருமூலர்.

படமாடக் கோயில் பகவற்குஒன்றுஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க்குஅங்குஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்குஒன்றுஈயில்
படமாடக் கோயில் பகவற்குஅதுஆமே (1857)

'நம்பர்' என்ற சொல் 'நம்மவர், எம்மைப் போன்ற மனிதர்கள்' என்ற பொருள் தரும். மனிதரின் உள்ளத்தில் இறைவன் குடி கொண்டுள்ளான். எனவே மனிதர்கள் இறைவனின் நடமாடும் கோயில்கள், நடமாடும் கோயில்களாகிய நம் போன்ற மனிதர்க்கு ஒன்று கொடுப்பது இறைவனுக்குக் கொடுப்பதற்கு ஒப்பாகும்.

வாழ்வியல் உண்மைகள்

இறைவனைச் சென்று அடைதற்கு உயிர் எளிய வழி குருவை வழிபடுதலால் கிட்டும். பிறன் மனை நோக்காத பேராண்மையை ஆடவர் பெறல் வேண்டும். காக்கைதன் இனத்தைக் கூவிஅழைத்துக் கலந்து உண்பது போல், சகமனிதர்களோடு கலந்து உண்ணல் வேண்டத்தக்கது. கற்றவர்களுக்கு மட்டுமே பேரின்பம் வாய்க்கும். கேள்விச் செல்வமே மனிதர்களுக்கு உற்றதுணை. மிகுந்த காமமும் கள்ளுண்டலும் கீழோர் என்று அடையாளம் காட்டும். விரும்பியவாறு ஆண் அல்லது பெண் குழந்தை பெற்றுக் கொள்வதற்குரிய முச்சுப் பயிற்சிமுறை (திருமந்திரம் பாடலில் இவ்விவரம் தரப்பட்டுள்ளது: பாடல் எண் - 482) குழந்தைகள் குருடாய்,முடமாய்ப் பிறப்பதற்குரியகாரணவிளக்கம், திருக்கோயில் வழிபாட்டின் இன்றியமையாமை முதலான பல அரிய செய்திகளை வழங்கும் களஞ்சியமாகத் திருமந்திரம் அமைந்துள்ளது.

58. திருமந்திரத்தில் திருவடி

ஆரோக்கியதாஸ்
முனைவர் பட்டஆய்வாளர்
காமராஜ் கல்லூரி
தூத்துக்குடி.

திருவடிபற்றி திருமூலர் எவ்வளவுஅழுத்தம் திருத்தமாக திருமந்திரத்தில் சொல்கிறார் என்றும் மேலும் எவ்வளவு அழகாக ஞானத்தையும் அதற்க்கான பாதையையும் சொல்கிறார் என்பதை இங்கு காணலாம்.

சன்மார்கத்தைதான் திருமூலரும் மற்றும் எல்லாசித்தர்களும் சொன்னார்கள். திருமந்திரத்தில் 138 வதுபாடலில் 'திருவடி' குறித்த சிந்தையினை திருமூலர் பதிவுசெய்கிறார்.

திருவடியேசிவமாவதுதேரில்
திருவடியேசிவலோகஞ்சிந் திக்கில்
திருவடியேசெல் கதியதுசெப்பில்
திருவடியேதஞ்சம் உள்தெளிவார்க்கே (138)

இறைவன் திருவடியே நமது கண்கள்!

இங்கு திருமூலர் திருவடி என்று எதை சொல்கிறார் என்பதை முதலில் விட்டுவிடுவோம். ஆனால் இங்கு கவனிக்கவேண்டியது என்ன என்பதை ஆணித்தரமாக திருமூலர் அய்யா சொல்கிறார். ஆம் நான்கு வரிகளிலும் திருவடி என்று திருப்பிதிருப்பி சொல்கிறார். 'திருவடியிலே சிவமாகிய ஒளி உள்ளது. திருவடியே ஒளியுள்ள ஆத்ம ஸ்தானத்திற்க்கு நம்மை அழைத்து செல்லுமாதலால் அதுவே சிவலோகம். திருவடியே நமக்கு கதிமோட்சம் தரும். திருவடியே கதி என்று இருக்க வேண்டும். திருவடியே தஞ்சம் என பரிபூரணமாக சரணாகதியானாலே நம் உள்ளம் தெளிவாகும்!'

மேலே இருக்கும் விளக்கத்தில் இப்பொழுது 'இறைவன் திருவடி கண்கள்' என்பதை பொறுத்தி படித்து கொள்ளுங்கள்.

எல்லாவற்றுக்கும் தேவைதிருவடி! எல்லாம் பெறதேவைதிருவடி! நாம் நாடவேண்டியதுதிருவடி! இதுதான் மெய்பொருள்.

முன்னதாக திருவள்ளுவர் திருவடிபற்றி சொன்னதை பதிந்திருக் கிறோம். இனி திருமூலர் மட்டுமல்ல வள்ளலார், திருஞானசம்பந்தர், போகர் என்று எல்லா சித்தர்களின் திருவடி.

இந்ததிருவடியான இணையடிக்கு இணையானது எதுவும் இல்லை இந்த உலகத்தில். இந்த இணையடியிலே எல்லாமே அடங்கிவிடும் என்ற அற்புதமான பாடல்.

திருமந்திரத்தில் உள்ள முக்கியமான பாடல் இது. மந்திரம், மருந்து, தானம் மற்றும் தூய்மையான நெறி எது என்று உள்ளடக்கிய பாடல். ஆம், இறைவனைஅடையும் பாதையில் மந்திரம், தானம் மற்றும்

தூய்நெறி எல்லாமே இந்த இணையடியாகிய திருவடிதான் என்று சொல்லும் பாடல்.

மந்திரமாவதும் மாமருந் ஆவதும்
தந்திரமாவதும் தானங்கள் ஆவதும்
சுந்தரமாவதும் தூய்நெறிஆவதும்
எந்தைபிரானதன் இணையடிதானே

திருவடியேகதி, திருவடியே சிலோகம் மற்றும் திருவடியே சரணாகதி என்று சென்ற பாடலில் உள்ள பாடலை பார்ததோம். மேலும் தந்திரம், தானம், சுந்தரம் மற்றும் தூய்நெறி எல்லாம் இதுதான் என்று சொல்கிறார். நாம் வேறு எதுவும் செய்யவேண்டியது இல்லை இந்த திருவடியை பிடித்தால் மட்டும் போதும்.

மேலும் சித்தர்கள் பாடல் என்றாலே புரிந்துகொள்ள மிககடினமாக இருக்கும் என்ற மேலோட்டமான கருத்தை மறுக்கும் பாடல். இறைவனை அடையும் பாதையை எந்தவித கடினமும் இல்லாமல் சாதாரண மனிதனும் புரிந்துகொள்ள கூடியஅளவில் இருக்கும் பாடல்.

இந்தபாடலில் திருவடிதான் மருந்து என்று கூட சொல்லவில்லை மாமருந்து என்று சொல்கிறார். இந்த மருந்தே நம்முடைய பிறவிப் பிணியை தீர்க்கும் மருந்து. நீங்கள் திருவருட்பாவை படித்திருந்தால் இந்த இடத்தில் நிச்சயமாக வள்ளலாரும், திருமூலரும் மிகவும் ஒத்துபோகிறார்கள் என்பதை தெரிந்து கொள்ளமுடியும்.

திருமூலர் மந்திரம், மருந்து, தானம், சுந்தரம் மற்றும் தூய்மையான நெறி இது அனைத்துமே திருவடிதான் என்று சொல்கிறார். வள்ளலார் இந்த திருவடியான மருந்தே உலகத்தில் உள்ள அத்தனை பிரச்சனைகளையும் தீர்க்கும் சச்சிதானந்தமருந்து என்று சொல்கிறார்.

திருவடிபற்றி அதாவது மெய்பொருள் பற்றி இறைவனைகாட்ட கூடியபாதையில் எவ்வளவு முக்கியமானது என்பதை திருமூலர் தனது திருமந்திரத்தில் வெட்டவெளிச்சமாக சொல்கிறார்.

'அரிதுஅரிதுமானிடராய் பிறத்தல் அரிது' என்று. சொல்லியவர் அவ்வையார் தான். அதே வாக்கியத்தை மாறாமல் திருமூலரும் சொல்கிறார் என்பதை இந்தபாடலில் இருந்து புரிந்துகொள்ள முடியும். அதனினும் திருமூலர் ஒருபடிமேலே சென்று அரிதான இந்த மானிடபிறவியை பெற்றும் கூட இந்ததிருவடியை (அ) மெய்பொருளை தெரிந்துகொள்ளாதவர்களை சாடுகிறார்.

பெறுதர்கரியபிறவியைபெற்றும்
பெறுதற் கரியபிரானடிபேணார்
பெறுதற் கரியபிராணிகள் எல்லாம்
பெறுதற் கரியதோர் பேறிழந் தாரே (2090)

திருவடி (அ) தாள் பற்றிதிருமூலர் திருமந்திரத்தில் எவ்வளவு முக்கியமாக சொல்கிறார் எனும் பாடல். இந்த ஒரே தவம் போதும் எல்லாருக்கும் இறைவனை காட்டும் என்றுசொல்லும் பாடல். இந்த ஞான தவத்திற்க்கு ஒழுக்கம் எவ்வளவு முக்கியம் என்பதையும் சொலலும் அற்புதமானபாடல்.

மேற்கொள்ளலாவதோர் மெய்த்தவம் ஒன்றுண்டு
மேற்கொள்ளலாவதோர் மெய்த்தாளும் ஒன்றுண்டு
மேற்கொள்ளலாவதோர் மெய்ந்நெறிஒன்றுண்டு
மேற்கொள்ளலாம்வண்ணம் வேண்டிநின்றோர்க்கே (2113)

மனிதன் மேற்கொள்ள தகுந்த உயர்நத முடிந்தமுடிபான சிறந்த மெய்த்தவம் ஒன்றுண்டு! மெய்தாள் ஒன்றுண்டு! மெய்ந்நெறி ஒன்றுண்டு!

இறைவனையேஅவன் திருவடியையே சேரவேண்டும் என்றவண்ணம் தொழுது அழுது தவம் செய்வார்க்கே ஞானம் - மோட்சம் கிட்டும்!

மெய்த்தவம் - உண்மையானதவம் எதுஎன்றால்,மனிதஉடலேமெய்! இந்தமெய்யிலே இருக்கும், இறைவன் இருக்கும் பொருள் - மெய்பொருள் கண்மணிணே! அதனுள் ஒளியே! இதைசற்குரு மூலம் அறிந்து உணர்நது செய்வதே மெய்த்தவம்!

மெய்த்தாள் - மெய்யிலே - உடலிலேஉள்ளதாள் திருவடிஒன்றுண்டு! அதுவேநம் உயிர் நிலை! அதுவே இரண்டாகபிரிந்து இரு கண்ணாக உள்ளது!

மெய்நெறி - மெய்ததாள் அறிந்து மெய்த்தவம் செய்ய மனிதன் மெய்நெறி வழி நடக்க வேண்டியது அவசியம்! உடம்பே ஆலயம் அதனுள் பரமபொருள் ஜீவனாக கோயில் கொண்டுள்ளான் என்பதை உணர்ந்து உடம்பாகிய ஆலயத்தில் உயிர் குடிகொண்டகோயிலை -கருவறையை-மூலஸ்தானத்தை அடைய மூலவர் அருள்பெற நல்லொழுக்க நற்பண்பினராக வாழ்வது மிகமிக அவசியம்! அதுவே மெய்நெறி.

பரவசம் உண்டாகும் நிலை - விசுத்தி

சோதி இரேகைச் சுடரொளிதோன்றிடிற்
கோதில் பரானந்தம் என்றேகுறிக்கொண்மின்
நேர்திகழ் கண்டத்தேநிலவொளிஎய்தினால்
ஓதுவதுன்னுடல் உன்மத்தமாமே. (582)

மனத்தை உள் நிறுத்தித் தியானம் செய்யும் போது, கீற்று போன்ற சுடரொளி தோன்றினால் அது குற்றம் எதுவும் இல்லாத பாரமானந்தம் ஆகும். அவ்வொளியை நோக்குதலை குறிக்கோளாகக் கொண்டால் நேர்மைவிளங்கும

உரைத்தனவற்கரிஒன்றுமுடிய
நிரைத்த இராசிநிரைமுறைஎண்ணிப்
பிரைச்சதம் எட்டும் முன்பேசியநந்தி
நிரைத்த இயமம் நியமஞ்செய் தானே. (549)

கடிவாளம் இடப்பட்ட நம்முடைய மூச்சுக்காற்று பன்னிரெண்டு அங்குல நீளத்திற்கு இயங்கும் வழியை, நம் குருநாதரான நந்திதேவர் நமக்கு உரைத்தார். அட்டாங்கயோகத்தின் அடிப்படையான இயமங் களையும், நியமங்களையும் நாம் கடைபிடிக்கும்படிஅருள் செய்தார்.

செல்வாக்கெல்லாம் செல்லுபடிஆகாது

மன்றத்தேநம்பிமாடம் எடுத்தது
மன்றத்தேநம்பிசிவிகைபெற் றெறினான்
மன்றத்தேநம்பிமுக்கோடிவழங்கினான்
சென்றத்தாஎன்னத் திரிந்திலன் தானே (149)

விளக்கம்

ஒரு சிறந்த ஆண்மகனை நம்பி என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட நம்பி ஒருவன் ஊரில் நல்ல வசதியான மாளிகை கட்டி வாழ்ந்து வந்தான். அவன் ஊரேபார்த்து வியக்கும்படி பல்லக்கில் ஏறிச் சென்றான். ஊரில் உள்ளவர்களுக்கு எல்லாம் புத்தாடைகளைத் தானமாக வழங்கினான்.

உல்லாச வாழ்வு நிலைக்காது

அடப்பண்ணிவைத்தார் அடிசிலைஉண்டார்
மடக்கொடியாரொடுமந்தணங் கொண்டார்
இடப்பக்கமேஇறைநொந்ததுஎன்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே (148)

நல்ல ருசியாக உணவினை சமைத்து உண்டார். கொடிபோன்ற அழகான பெண்களுடன் உறவுகொண்டார். இடப்பக்கம் வலிக்கிறது என்று சொல்லியவாரே படுத்தார். அப்படியே இறந்துவிட்டார்.

இறந்தால் மறந்துவிடுவார்கள்

ஊரெல்லாம் கூடி ஒலிக்கஅழுதிட்டுப்
பேரினைநீக்கிப் பிணமென்றுபேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப் பொழிந் தார்களே. (145)

ஒருவர் தன் வாழ்நாள் முடிந்து இறந்தவுடன் அவரின் உற்றாரும் உறவினரும் கூடி ஓல்மிட்டு அழுவார்கள். இறந்தவரின் பெயர் நீங்கி பிணம் என்று ஆகிவிடும். இறந்த அவர் உடலை முட்செடியான தூதுவளை நிறைந்தசுடுகாட்டில் வைத்து எரித்து பின்பு குளித்து அவருடைய நினைப்பையும் மறந்தார்கள்.

தவமும் ஞானமும் துணைவரும்

பண்டம்பெய் கூரைபழகிவிழுந்தக்கால்
உண்ட் அப் பெண்டிரும் மக்களும் பினசெலார்
கொண்டவிரதமும் ஞானமும் அல்லது
மண்டிஅவருடன் வழிநடவாதே. (144)
மூலன் உரைசெய்த மூவாயிரந்தமிழ்
ஞாலம் அறியவேநந்திஅருளது
காலைஎழுந்துகருத்தறிந் தோதிடின்
ஞாலத் தலைவனைநண்ணுவர் அன்றே (99)

இந்த உலகமக்கள் யாவரும் தெரிந்து கொள்வதற்காக, நந்தி பெருமானின் அருளினால் பாடப்பட்டது, திருமூலரின் திருமந்திரம்.

59. திருமந்திரத்தில் மனிதப் பண்புகள்

இல. பிரவின் பீற்றர் ஞானையா
முனைவர் பட்ட ஆய்வாளர்
காமராஜ் கல்லூரி.
தூத்துக்குடி.

கொலை செய்வதிலும் கொலை குற்றம் கொலை செய்யத் தூண்டுவது. அதுபோல் ஊன் விரும்பாதவரை உண்ணக் கட்டாயப் படுத்துவது. இதற்கெல்லாம் தண்டனை நிச்சயம் உண்டு என்று திருமூலர் கூறுகிறார்.

கொன்றிலாரைக் கொலச் சொலிச் கூறினார்
தின்றிலாரைச் தினச் சொலித் தெண்டித்தார்
பன்றியாய் படியில் பிறந்து ஏழ்நரகு
ஒன்றுவார் அரன் ஆனைஇது உண்மையே -திருமூலர்

கொலை செய்யும் உணர்வோ அல்லது குறிக்கோளோ இல்லாதவர்களைக் கொலை செய்யத் துண்டியவர்களும். புலால் மறுப் போரைக் கட்டாயம் செய்து புலாலை உண்ண வைப்பதும் பெரும் பாவம் எனகிறார் திருமூலர். அப்படி செய்பவர்கள் பன்றியாய் பிறந்து பெரும் அல்லல் படுவார்கள் என்றும், மேலும் இறந்த பிறகு எழுவகை நரகத் துன்பங்களை அனுபவித்து தவிப்பார்கள் என்று ஆனையிட்டுக் கூறுகிறார்.

ஆதிமூட நித்திரை ஆணவம் தந்த
அதனால் உணர்வோன் அருங்கன்மம் முன்னித்
திதமான கேவலம் இத்திறம் சென்று
பரமாகா ஐயவத் தைப்படு வானே (2162)

நம் உயிரானது ஆணவ அழுக்கால் மூடமாகிய உறக்கம் உண்டாகும் அதனால் அந்த உயிரானது அதன் நல்வினை மற்றும் தீவினைக்கு ஏற்ப நடக்கும் அவ்வாறு நடப்பதால் உயிரானது மேல்நிலை அடையாமல் கீழ்நிலையான ஐந்து அவத்தைகளை அடையும். ஐந்து அவத்தைகள் என்பது ஐம்புலன்களால் ஏற்படும் அவத்தைகளாக பொருள் கொள்ளலாம்.

ஆசான்முன் னேதுயில் மாண வகர்தமைத்
தேசாய தண்டால் எழுப்பும் செயல்போல்
நேசாய் ஈசனும் நீடுஆண வத்தரை
ஏசாத மாயாளதன் னாலே எழுப்புமே (2163)

பாடம் நடத்தும்போது ஒரு மாணவன் உறக்கத்தில் இருந்துதால் ஆசிரியர் தன் நீண்ட பிரம்பால் அவனைத் தட்டி எழுப்புவார் அதுபோல், மனிதன் தன் ஆணவம் என்ற மாயை மறைப்பால் நீண்ட உறக்கத்தில்

இருக்கிறான் இறைவன் தூய மெய்யறிவு என்ற ஒளியூட்டி, அவனைத் தட்டி எழுப்பி மேல் நிலையை அடையச் செய்கிறான்.

பின்னைநின்று என்னே பிறவி பெருவது?
முன்னைநன் றாக முயல்தவம் செய்கிலர்
என்னைநன் றாக இறைவன் படைத்தனன்
தன்னைநன் றாகத் தமிழ்ச் செய்யுமாறே (81)

மனிதர்கள் திரும்பத் திரும்ப பிறந்து வருவதால் என்ன பயனை தருகிறார்கள் இந்த உலகிற்கு. மகத்தான இந்த மனித பிறவியை எடுத்து மக்கள் முந்தி வந்து நன்கு முயன்று நல்ல தவம் செய்யாமல் இருக்கிறார்களே, தவம் செய்ய மக்களுக்கு வாய்க்கவில்லையே அது எனக்கு வாய்த்தது. நான் முயன்ற நல்ல தவத்தால் இறைவன் என்னை பயன்தரும் பிறவியாகப் படைத்தான். அவன் எக்கு மெய் பொருள் அறிவை காட்டி, அவனை பற்றியஆகமப் பொருளை தமிழ் மொழியிலே எழுதுமாறு எனக்கு ஆனையிட்டு இந்த பிறவியை எனக்குக் கொடுத்தான்.

தானே தனக்குத் தனமலை யாய்நிற்கும்
தானே தனக்குத் தன்மாய் மாய்நிற்கும்
தானே தனக்குத் தலைவனும் ஆமே (897)

இறைவன் தானே தனக்கு அருள் உரைக்கப்படும் தலைவியுமாய் நிற்பான். தனக்குத் தானே செல்வம் குறையாத செல்வக் குன்றாக விளங்குவான். தனக்குத் தானே இயல்பில் முழுமுதற் சிவமாய் திகழ்வான். அவனே தனக்கு ஒப்பாரும் மிக்காருமின்றி தானே உலகின் தலைவனாக இருக்கிறான்.

தலைவனு மாயநின்ற தற்புரக் கூத்தனைத்
தலைவனு மாய்நின்ற சற்பாத் திரத்தைத்
தலைவனு மாய்நின்ற தாதவிழ் ஞானத்
தலைவனு மாயநின்ற தாளினை தானே. (808)

உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருள்களுக்கும் தலைவனாக திகழ்பவன் மெய்பொருளான கூத்தப்பெருமான். அவனே உயிர்களை காத்தருளும் சற்பாத்திரமாகவும். அவனே தலை உச்சியில் ஆயிரம் இதழ் தாமரையான மெய்யறிவு சுடராக விளங்குகிறான்.

வெளியில் வெளிபோய் விரவிய வாறும்
ஒளியில் அளிபோய் அடங்கிய வாறும்
ஒளியில் ஒளிபோய் ஒடுங்கிய வாறும்
தெளியும் அரரே சிவசித்தர் தாமே. (124)

வெளியிலிருந்து தோன்றிய ஒரு உயிர்தான் சிவ வெளியான அறிவு பெருவெளியில் போய்க்கலக்கும் தன்மையையும், அன்பே சிவமான அவனது திருவடிகளிலே அன்பர்களின் அன்பு சென்று ஒடுங்கிய இயல்பையும், செம்பொருளாகிய போரொளியிலே சிற்றொளியாகிய உயிரொளி (நம் ஆன்ம ஒளி) சேர்ந்த உண்மையையும் இறையருளால் முழுவதும் உணர்ந்து தெளிந்து கொண்டவரே சிவ சித்தர் ஆவர்.

சித்தர் சிவலோகம் இங்கே தரிசித்தோர்
சத்தமும் சத்த முடியும் தம்முள் கொண்டோர்
நித்தர் நிமலர் நிராமயர் நீள்பர
முத்தர்தம் முத்திமுதல் முப்பத் தாறே. (125)

சித்தர் பெருமக்கள் தம் தவ பலனாய் சிவ வெளியில் பெறக்கூடிய பேரின்பத்தை பெற்றுவிடுவார்கள. ஒலியாகிய நாதத்தையும் அதன் முடிவான நாதாந்தத்தையும் தமக்குள்ளேயே பெற்றுவிடுகிறார்கள். அப்படி பெற்றவர்களே அழியா வாழ்வினை அடைந்து நிலை பெறுவார்கள். விடுதலை பெற்ற இவர்களுக்கு அடிப்படை கோட்பாடாக இருப்பவை முப்பத்தாறு உண்மைகள் ஆகும். (அவை: ஆன்ம தத்துவம் 24, வித்தியா தத்துவம் 7, சிவத்துவம் 5)

முப்பதும் ஆறும் படிமுத்தி ஏணியாய்
ஒப்பிலா ஆனந்தத்து உள்ளொளி புக்கு
செப்ப அரிய சிவம்கண்டு தான்தெளிந்து
அப்பரி சாக அமர்ந்திருந் தாரே. (126)

முப்பத்தாறு உண்மையை உணர்ந்து உணர்ந்து சிவக்களிப்பே தருகின்ற உள்ளொளியில் புகுவார்கள். அங்கே சிவ தரிசனம் கண்டு இன்பத்தில் ஆழ்ந்து இறையுண்மையை உணர்ந்து தெளிவடைவார்கள் அதனால் சித்தர்கள் தெய்வீக தன்மையை அடைந்து விளங்குவார்கள்.

வானத்திலுள்ள திங்களின் கலைச் சுடர்களை தவம் செய்பவர்கள் தனது ஆற்றலால் உடம்பில் வாங்கிக் கொள்ளுதலே சந்திர யோகமாகும். இதனால் சாதகனின் நுண்ணுடம்பும் பருவுடம்பும் தூய்மையடைந்து அனைத்திலும் வெற்றி வாய்க்கும்.

எய்தும் மதிக்கலை சூக்கத்தில் ஏறியே
எய்துவ தூலம் இருவகைப் பக்கத்துள்
எய்தும் கலைபோல ஏறி இறங்குமாம்
துய்யது சூக்கத்துக் தூலத்த காயமே (851)

பெறுகின்ற திங்களின் சுடர்க்கலையானது பருவுடலிலிருந்து சூக்கும் தேகத்திற்கு ஏறியும் சூக்கும தேகத்திலிருந்து பருவுடலுக்கு இறங்கியும் இயங்கும். இந்த நிலையானது வளர்பிறை தேய்பிறை போன்று ஒரு குறிப்பிட்ட நாட்களில் வளர்வதும் ஒரு குறிப்பிட்ட நாட்களில் தேய்வதும் போல் அமைகின்றது. இத்தகைய திங்களின் கலையினால் சூக்கும் உடம்பும் பருவுடம்பும் தூய்மையடைவதால் உயிர் தூய்மையாகும்.

ஆகின்ற சந்திரன் சூரியன் அங்கியுள்
ஆகின்றஈரெட்டு ஆறிரண்டு ஈரைந்துள்
ஏகின்ற அக்கலை எல்லாம் இடைவழி
ஆகின்றி யோகி அறிந்த அறிவே. (852)

உடம்பகத்தில் விளங்குகின்ற திங்கள், ஞாயிறு, தீ என்ற மூன்று சுடருக்கும் முறையே பதினாறு கலைகள், பன்னிரண்டு கலைகள், பத்துக் கலைகள் என்று கூறப் பெறும், இயங்கும் அக்கலைக ளெல்லாம் நடுநாடி வழியே (சுழுமுனையில்) இயங்கச் செய்யும் ஆற்றலை தவத்தோன் அறிந்த அறிவாகும்.

அன்பு செய்வாரை இறைவன் அறிவான்

இன்பத்திலும் துன்பத்திலும் இறைவனை மறவாது அன்பு கொண்டு ஒழுகுவோரை அவன் அறிந்து அருள்புரிவான் என்று உண்மையை இங்கே உறைக்கிறார்.

இழந்ததும் பெற்றதும் ஈசன் அறியும்
உகந்தருள் செய்திடும் உத்தம நாதன்
கொழுந்தன்பு செய்தருள் கூரவல் லார்க்கு
மகிழ்தன்பு செய்யும் அருளது ஆமே. (280)

உயிர்களனைத்தும் தன்னிடம் அன்புகொள்ளாமல் இகழ்ந்திரு தலையும் அன்பு கொண்டு பெற்றதையும் இறைவன் அறிவான் நிலை கேற்பத் தூயவனான் அவன் விரும்பி அருள்புரிவான் மேலும் தன்பால் அன்பு வளர்ந்து அருள் நிறைந்து தனிந்தவர்களுக்கு இறைவன் மகிழ்ந்து உறவாகி அருளொளியைத் தருவான்.

இன்பம் பிறவிக்கும் இயல்வது செய்தவன்
துன்பப் பிறவித் தொழில்பல என்னினும்
அன்பில் கலவி செய்து ஆதிப் பிரான்வைத்த
முன்புஅப் பிறவி முடியது தானே. (281)

இந்த பிறவியில் மாந்தர் அன்பு செய்து அருளின்பம் பெறவே இறைவன் அருள் நெறியை படைத்தான் என்றாலும் மக்கள் மருள்வழியில் சென்று தீவினைகள் பல செய்து பிறவியினைத் துன்பமாக்கிவிட்டனர். இருப்பினும் இறைவனாகிய உயிர்த் தலைவனிடம் அன்புகலந்து உறவாடினால் அவன் அருளாற்றலினால் மாந்தனுடைய பிறவி வாழக்கையை இன்பமாகவே முடித்துக் காட்டுவான்.

அன்பும் சிவமும் ஒன்று

அன்பே சிவம் என்ற வார்த்தையை பல தலைவர்கள் சொல்லியும், திரைப்படங்களிலும் கேள்விப் பட்டிருப்போம். இந்த அழகான வார்த்தையை பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம் சித்தர்கள் கூறியிருக்கிறார்கள். அன்புதான் சிவம், சிவம்தான் அன்பு என்று அனைவரும் உணர வேண்டும். அன்பும் சிவமும் ஒன்று என்பதை திருமூலர் இப்பாடலில் மூலமாக மிக தெளிவாக விளக்குகிறார்.

அன்பும் சிவமும் வேறு வேறு என்று அறிவில்லாதவர்களே கூறுவார்கள். அன்பு தான் சிவம் என்றும், சிவம் தான் அன்பு என்றும் உலக மக்கள் யாரும் அறிந்திருக்கமாட்டார்கள். ஒருவன் அன்புதான் சிவமாகவும் சிவம் தான் அன்பாகவும் இருப்பதாக உணர்நதபின், அவர் சிவத்தன்மையை அடைந்து விடுவார் என்கிறார்.

பிறர் மனைவியை விரும்புவோன்

ஆத்த மனையாள் அகத்தே இருக்கவே
காத்த மனையாளைத் காமுறு காளையர்
காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாமல்
ஈச்சம் பழத்துக்கு இடருற்ற வாறே (201)

உங்கள் அன்பு மனைவி விட்டுகுள் இருக்கம்பொழுது பிறர்க்குரிய மனைவியின் மேல் காமம் வைக்கும் காளை போன்ற இளைஞர்களே இச்செயல் உங்கள் வீட்டில் இருக்கும் சுவையுள்ள பலா பழத்தை உண்ணாமல் வெளியே உள்ள சாதாரண ஈச்சம் பழத்துக்கு ஆசைப்படுவது போலாகும்.

திருத்தி வளர்த்ததோர் தேமாங் கனியை
அருத்தம் என்றெண்ணி அறையில் புதைத்துப்
பொருத்தம் இலாத புளிமாங் கொம்பேறிக்
கருத்தறி யாதவர் காலற்ற வாறே (202)

ஒரு இடத்தில் செல்வத்தை பூட்டி வைப்பது போல் நன்கு வளர்ந்து கனிந்த கனியை தன் வீட்டில் வைத்து விட்டு, சுவை இல்லாத புளிப்பு மாங்காயை பறிக்க மரத்தின் உச்சி கிளைக்கு சென்று கீழே வீழ்ந்து காலை உடைத்துக் கொள்வதுபோல் பிறர் மனைவியின் மீது காமம் கொள்பவர் அழிவர் என்கிறார்.

இறைவன் படைத்தவை

குசவன் திரிகையில் ஏற்றிய மண்ணைக்
குசவன் மனத்துற்ற தெல்லாம் வனைவன்
குசவனைப்போல எங்கள் கோன்நந்தி வேண்டில்
அசைவில் உலகம் அது இதுவாமே. (443)

குயவன் அவனுடைய மண்பாண்டம் செய்யும் சக்கரத்தில் அவன் விரும்பியதுபோல் பலவகை மண்பாண்டங்களை செய்வான் அதேபோல் நம் இறைவனும் பல உயர்களை படைக்கிறார். உயிர்கள் தோன்றுவதற்குமுன் இந்த உலகின் மேற்பரப்பில் அனைத்தும் அசைவில்லாமல் இருந்தன. அப்படி கிடந்த உலகத்தில் இறைவன் அது இது என்று பல அசையும் உயிர்களை படைத்தான்.

ஆதி படைத்தனன் ஐம்பெரும் பூதம்
ஆதி படைத்தனன் ஆசில்பல் ஊழி
ஆதி படைத்தனன் எண்ணிலி தேவரை
ஆதி படைத்தவை தாங்கிநின் றானே. (447)

ஆதியாகிய கடவுள் முதலில் பஞ்ச பூதங்களைத் தோற்றுவித்தான். அவனே இந்த உலகங்களில் பல ஊழிக்காலங்களை உயிர்களின் தோற்றத்திற்காகப் படைத்தான். எண்ணற்ற தேவர்களைப் படைத்தவனும் அவனே. எல்லாவற்றையும் படைத்து, அவனே அனைத்தையும் தாங்கியும் நிற்கின்றான்.

60. திருமந்திரத்தில் யோகக்கலை

து. பாண்டிக்குமார்
முனைவர் பட்ட ஆய்வாளர்
காமராஜ் கல்லூரி
தூத்துக்குடி.

பிணி, திரை, மூப்பு இல்லாத வாழ்க்கை வேண்டும் என்பதே நீண்ட நெடுங்காலமாக மனித குலத்தின் ஆசையாக உள்ளது. அதற்கான வழிமுறைகளைத் தேடும் முயற்சிகளும் காலங் காலமாக நடைபெற்று வருகின்றன. நவீன மருத்துவ விஞ்ஞானமும் இதற்கான விடையை முனைந்து தேடி வருகிறது, இதுவரையில் வெற்றி கிடைக்கவில்லை.

ஆனால் நமது முன்னோர்கள் இதற்கான வழிமுறைகளைப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கண்டுபிடித்து விட்டனர். யோகாசனம், பிராணாயாமம், முத்திரைகள் என முன்னோர்கள் வகுத்து வைத்த வழிமுறைகள் அனைத்துமே மூப்பு, திரை, பிணி என அனைத்தையுமே வெற்றிகொள்ளும் மார்க்கங்களாகும்.

திருமந்திரத்தின் மூன்றாம் தந்திரம் (மூன்றாம் பாகம்) முழுக்க 'அஷ்டாங்க யோகம்' என்பதைக் குறித்தே விவரிக்கிறது. பல சூட்சும இரகசியங்களை விளக்குகிறது. 'அஷ்டாங்கம்' என்ற வடமொழிச் சொல்லுக்கு 'எட்டு பிரிவுகள்' என்பது பொருள். முழுமையான யோகக் கலையானது எட்டு அம்சங்களைத் தனனுள் கொண்டுள்ளது. அவை முறையே.

1. இயமம்
2. நியமம்
3. ஆசனங்கள்
4. பிராணாயாமம்
5. பிரத்தியாகாரம்
6. தாரணை
7. தியானம்
8. சமாதி

இந்த ஒவ்வொன்றையும் குறித்து மிக விரிவாகத் திருமூலர் விளக்கியுள்ளார். தற்போது 'பிராணாயாமம்' எனும் மூச்சுப் பயிற்சி குறித்து திருமூலர் கூறியுள்ள சில உண்மைகளையும், சூட்சும ரகசியங்களையும் மட்டும் காணலாம்.

உயிருக்கு ஆதாரமாக இருப்பது மூச்சுதான். எனவேதான் அதை 'உயிர் மூச்சு' என்கிறோம். மனிதன் உணவின்றி பல நாட்கள் உயிர் வாழ முடியும். நீர் இல்லாமல் கூட சில நாட்கள் உயிர் வாழலாம். ஆனால் காற்று (பிராணவாயு) இல்லாமல் போனால் எட்டு நிமிடங்களில் மரணம் நிச்சயம்! உடலின் இயக்கங்கள் அனைத்திற்கும்இந்த மூச்சுக் காற்றே ஆதாரம்.

ஐவர்க்கு நாயகன் அவ்வூர்த் தலைமகன்
உய்யக்கொண்டு ஏறும் குதிரைமற்று ஒன்றுண்டு
மெய்யர்ககு பற்றுக் கொடுக்கும் கொடாது போய்ப்
பொய்யரைத் துள்ளி விழுந்திடும் தானே. (திருமந்திரம்)

நாம் நமது ஐம்பொறிகளாலேயே இந்த உலகை அளக்கிறோம். ஐம்பொறிகளின் வழியாகக் கிடைக்கும் செய்திகளின், உணர்வுகளின் அடிப்படையிலேயே நமது செயல்பாடுகளும் அமைகின்றன. கண், காது, மூக்கு, வாய், மெய் (தோல்) ஆகிய இந்த ஐம்பொறிகளையே திருமூலர் 'ஐவர்' என்று குறிக்கிறார்.

இந்த ஐவர்க்கும் நாயகனாகவும், இந்த ஐம்பொறிகளும் உறையும் ஊருக்குத் (உடலுக்கு) தலைவனாகவும் ஒருவன் இருக்கிறானாம். நமது மனமதான் (அல்லது சித்தம்) இந்தத் தலைவன்! தலைவன் வலுவாக இருந்தால் ஐம்பொறிகளும், இந்தப் பருவுடலும் அவனுக்கு அடங்கி நடக்கும். தலைவன் வலுவற்றவனாக இருக்கும் பட்சத்தில் ஐம்பொறிகளும் தம் இச்சைக்குச் செயல்படத் துவங்கிவிடும். உடலும் (ஊரும்) அந்தத் தலைவனின் கட்டுப்பாட்டிற்குள் இராது.

இந்த மனம் எனும் தலைவன் ஏறி வரும் குதிரை ஒன்று உள்ளதாம். சித்தர் இலக்கியங்களில் பல சங்கேத மொழிகள் உபயோகத்தில் உள்ளன. அவற்றுள் இந்தக் 'குதிரை' என்பதும் ஒன்று. வேகம், உறுதி, இடைவிடாத ஓட்டம் ஆகியவை குதிரையின் தனிக்குணங் களாகும். குதிரைகள் தூங்கும் போது கூட நின்ற கொண்டேதான் தூங்கும், படுப்பதில்லை. நோய்வாய்ப்படும் போது மட்டுமே குதிரைகள் படுத்துக் கொள்ளும். இந்தக் குணநலன்கள் அனைத்துமே நமது மூச்சுக் காற்றுக்கும் (பிராணன்)பொருந்துகின்றன. எனவே தான் சித்தர் இலக்கியங்களில் பல இடங்களில் மூச்சு அல்லது பிராணனைக் குறிக்க 'குதிரை' என்ற சங்கேதச் (இரகசியம்) சொல்லை உபயோகப் படுத்துகின்றனர்.

குதிரை அடிப்படையில் ஒரு காட்டு விலங்கு. எளிதில் கட்டுப்படாது. ஒரு குதிரையைக் கட்டுக்குள் கொண்டு வருவது என்பது மிகவும் கடினமான ஒரு காரியம். அதில தேர்ச்சி பெற்ற நிபுணர்கள் பல நாட்கள் போராடித்தான் குதிரையை அடக்கி அதன் மேல ஏறி சவாரி செய்ய முடியும். ஒவ்வொரு முறையும் அதன் மேல் ஏற முயற்சி செய்யும் போதும் அது குப்புறத் தள்ளிவிடும். படிப்படியாகவே அதை அடக்க முடியும். ஒருமுறை அதை அடக்கி வெற்றி கொண்டு சேணத்தைப் பூட்டிவிட்டால், தனது வாழ்நாள் முழுவதும் அந்தக் குதிரை தனது எஜமானனுக்கு விசுவாசமுள்ள துணையாக இருக்கும். மூச்சுக் காற்றும் அவவாறே! அடக்குவதும் ஆள்வதும் மிக மிகச் சிரமமான காரியம். இந்த மூச்சு எனும் குதிரை யாருக்கு அடங்கும்?

இறைவனின் திருவடிகளையே பற்றிக் கொண்டு மெய்ஞ்ஞான வழியில் செல்லும் மனிதர்களுக்கே (மெய்யர்க்கு) இந்த குதிரை வசப்படுமாம்! உலக மாயைகளில் சிக்கி, இறை நாட்டம் கொள்ளாது வாழும் பொய்யர்களை இந்தச் சண்டிக் குதிரை கீழே தள்ளிவிடுமாம்.

இந்த ஒரு பாடலில் திருமூலர் பல சூட்சுமமான விஷயங்களை விளக்கியிருக்கிறார். அவற்றைச் சுருக்கமாகக் காண்போம்.

1. ஐம்பொறிகளையும் ஆளும் தலைவன் - சித்தம் (மனம்).
2. இந்த மனம் ஒரு நிலைப்பட்டு உறுதியானால் மட்டுமே ஐம்புலன்களும், பருவுடலும் அந்த சித்தத்தின் கட்டுப் பாட்டிற்குள் இருக்கும்.

இதுவரையில் படைப்பின் சூட்சுமங்களையும் கரு உருவாவதில் இருக்கும் இரகசியங்களையும் குறித்துத் திருமூலரின் சில கருத்துக்களைக் கண்டோம். இனி வேறு சில சூட்சும இரகசியங்களைக் காணலாம்.

1. இந்த மூச்சுக்காற்றை வசப்படுத்துபவர்களுக்கு மட்டுமே மனம் ஒரு முகப்படும்.
2. இறைவனைப் பற்றிக கொண்டு மெய்ஞ்ஞான வழியில் செல்பவர்களுக்கு மட்டுமே மூச்சு கட்டுப்படும்.
3. பொய்ஞானம் எனும் மாயைகளில் சிக்குண்டு உழலுபவர் களுக்கு மூச்சு, மனம், ஐம்பொறிகள், பருவுடல் ஆகிய எதுவுமே வசப்படாது. முக்தி நிலையும் இவர்களுக்கு சாத்தியப்படாது.

குருவின் துணை

பிறந்தது முதல் இறப்பது வரையில் ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒன்றைப் புதிதாகக் கற்றுக்கொள்கிறோம். பல விஷயங்களைப் பிறர் சொல்லிக் கொடுக்கக் கற்றுக்கொள்கறோம். சிலவற்றை இயற்கையை உற்று நோக்கியும் கூடக் கற்றுக்கொள்கிறோம். புதிதாக ஒன்றைக் கற்றுத்தரும் ஒவ்வொருவருமே நமக்கு ஒரு குருதான்!

கல்விக்கு குருவின் துணை மிக அவசியம். அதைவிடவும் ஞானத் தேடலில்- ஞானம் தேடிய பயணத்தில் ஒரு குரு மிக மிக அவசியம். பிராணா யாமம் எனும் மூச்சுப் பயிற்சியை முறையாகக் கற்றுக்கொள்ள ஒரு குரு கட்டாயமாகத் தேவை. இதைக் கீழ்க்கண்ட திருமந்திரப் பாடல் வலியுறுத்துகிறது.

ஆரியன் நல்லன் குதிரை இரண்டுள
வீசிப் பிடிக்கும் விரகு அறிவார் இல்லை
கூரியநாதன் குருவின் அருள் பெற்றால்
வாரிப் பிடிக்க வசப்படும் தானே. (திருமந்திரம்)

'மனம்' என்பதை 'ஆரியன்' என்ற சொல்லால் திருமூலர் குறிப்பிடு கிறார். இந்த மனமானது மிக நல்லதாம். இந்த மனதிடம் இரண்டு குதிரைகள் உள்ளதாம். முதல் பாடலில் ஒரு குதிரை உண்டு எனக் கூறுகிறாரே, இது என்ன முரண்பாடு என்ற கேள்வி எழுகிற தல்லவா? இங்கேதான் மூச்சு குறித்த அடுத்த சூட்சுமரகசியம் பொதிந்து கிடக்கிறது.

முதல் பாடலில் 'குதிரை' என்பது மூச்சு அல்லது பிராணனைக் குறிக்கிறது. இந்தப் பாடலில் அது நமது இடது நாசி, வலது நாசி

ஆகிய இரண்டையும் குறிப்பதாக எடுத்துக் கொள்ளாம். இதுவே இரண்டு குதிரைகள். அல்லது இடது நாசி வழியாகச் செலலும் மூச்சுக் காற்றை ஒரு குதிரை எனவும். வலது நாசி வழயாகச் செல்லும் மூச்சுக் காற்றை மற்றொரு குதிரை எனவும் பொருள் கொள்ளலாம்.

பிராணன் என்பது ஒன்றுதானே? வலது நாசியில் செல்லும் மூச்சுக்கும், இடது நாசியில் செல்லும் மூச்சுக்கும் வித்தியாசம் இருக்க முடியுமா என்ற கேள்வி உங்கள் மனதில் இப்போது எழுந்திருக்கும். ஆம், இரண்டு நாசிகளிலும் செல்லும் மூச்சுக் காற்றுக்கு

தனித்தனித் தன்மைகளும், செயல்பாடுகளும் உள்ளன. எனவேதான் திருமூலர் அதைப் பாகுபடுத்திக் காட்ட இரண்டு குதிரைகள் என்கிறார்.

நாம் நமது இரண்டு நாசித துவாரங்களின் வழியாகவும் ஒரே நேரத்தில் சுவாசிப்பதாக ஒரு தவறான கருத்து நம்மிடையே உள்ளது. உங்களது சுவாசத்தை உற்றுக் கவனித்துப் பாருங்கள். இதிலுள்ள உண்மை புரியும்.

ஒரு நேரத்தில் ஒரு நாசியின் வழியாகவும் அதிகப்படியான காற்று உள்ளே செல்லும். (அடுத்த நாசியில் மிகச் சிறய அளவிலான காற்று உட்புகும்.) சற்று நேரத்திற்குப்பின் (இரண்டு மணி நேரத்திற்குப் பின்) அடுத்த நாசி வழியாக காற்று செல்லத் துவங்கும் இவ்வாறு ஒரு நாளில் இரண்டு மணி நேரத்திற்கு ஒருமுறை என மொத்தம் 12 முறை இந்த இடம் மாறுதல் நடைபெறும். எந்த நேரத்தில் எந்த நாசியில் காற்று செல்லும் என்பதையும் முன்னோர்கள் கணித்து வைத்துள்ளனர்.

நேரம் நாசி

காலை 6-8 மணி வரை வலது நாசி
காலை 8-10 மணி வரை இடது நாசி
காலை 10-12 மணி வரை வலது நாசி
மதியம் 12-2 மணி வரை இடது நாசி
மதியம் 2-4 மணி வரை வலது நாசி
மாலை 4-6 மணி வரை இடது நாசி
மாலை 6-8 மணி வரை வலது நாசி
இரவு 8-10 மணி வரை இடது நாசி
இரவு 10-12 மணி வரை வலது நாசி
இரவு 2-4 மணி வரை வலது நாசி
அதிகாலை 4-6 மணி வரை இடது நாசி

வலதுநாசியின் வழியாக உள்ளே செல்லும் காற்றிற்கு சூரிய கலை என்றும், இடதுநாசியின் வழியாக உள்ளே செல்லும் காற்றிற்கு சந்திர கலை என்றும் முன்னோர்கள் பெயர் சூட்டியுள்ளனர். இந்த இரண்டு சுவாசங்களுக்கும் தனித்தனிப் பண்புகளும் வெவ்வேறு வகையான செயல்பாடுகளும் உள்ளன.

வலதுநாசிக் காற்று (சூரியகலை)

1. உடலுக்குத் தேவையான வெப்பசக்தியைத் தருகின்ற பிராணன் இதுவே.

2. வலதுநாசியின் வழியாக சுவாசம் நடைபெறும் காலகட்டத்தில் உடலின் வெப்ப நிலை சற்றே உயரும்.
3. உடல் சுறுசுறுப்படையும், சோர்வு அகலும்.
4. மூளையும் உடலும் பரபரப்பாக இயங்கும்.
5. இந்த இரண்டு மணி நேரத்தில் நிதானம் குறைவாகவும், வேகம் அதிகமாகவும் இருக்கும்.

இடதுநாசிக் காற்று (சந்திர கலை)

1. உடலைக் குளிர்விக்கும் தன்மை கொண்டது.
2. சந்திரனைப் போன்றே இந்த மூச்சுக் காற்றும் குளுமையான தாகும்.
3. இடது நாசியின் வழியே சுவாசம் நடைபெறும் வேளையில் உடலின் வெப்பநிலை
   சற்றே குறைந்து, உடல் குளிர்ச்சியடையும்.
4. பரபரப்புத் தன்மை குறைந்து, மனத்திலும் உடலிலும் ஒரு சாந்தத் தன்மை உருவாகும்.
5. மூளை அமைதியாகச் சிந்திக்கத் துவங்கும்.
6. அவசரத் தன்மை மறைந்து, நிதானமான மனநிலை நிலவும்.

இந்த இரண்டு வகையான மூச்சுகளையும் (குதிரைகளையும்) அடக்கி ஆளக் கற்றுக் கொண்டால், மனம், ஐம்பொறிகள், பருவுடல் ஆகிய அனைத்துமே நம் கட்டுப்பாட்டிற்குள் வரும். ஆனால் இவற்றை அடக்கும் சூட்சுமம் எவருக்கும் தெரிவதில்லை என்பதையே இந்தப் பாடலின் இரண்டாவது வரி தெரிவிக்கிறது.

'வீசிப்பிடிக்கும் வரகு (உபாயம், வழிமுறை) அறிவார் இல்லை'.

இந்த சூட்சுமங்களைக் கற்றுக் கொண்டு, பிராணன் எனும் குதிரைகளை வசப்படுத்த ஒரு குருவின் துணை வேண்டும். அந்த குருவும் நுண்ணறிவு படைத்தவராக, அந்தக் கலையில் முழுமை பெற்றவராக இருத்தல் வேண்டும். இந்தக் கருத்தே கடைசி இரு வரிகளில் வெளிப்படுகிறது.

கூறிய நாதன் குருவின் அருள்பெற்றால்
வாரிப் பிடிக்க வசப்படும் தானே'

இதில் 'அருள் பெற்றால்' என்ற சொற்களிலும் ஒரு சூட்சுமம் உள்ளது. குருவிடம் சென்று கற்றுக்கொள்வது வேறு, அவரது அருளைப் பெறுவதென்பது வேறு. நீங்களே இதை ஆழமாகச் சிந்தித்துப் பாருங்கள். இதிலுள்ள சூட்சும ரகசியங்கள் புரியும்.

61. திருமந்திரம் கூறும் நெறிகள்

வெ.ச. சரவணன்.
முனைவர் பட்ட ஆய்வாளர்
காமராஜ் கல்லூரி
தூத்துக்குடி.

துன்ப வாழ்வு மாற்றத் திருமந்திரம் கூறும் இருவழிகள்

தெளிவு தருவது நிறைமொழி - மந்திரம். அதனைச் சிந்தித்துச் செயலாக்கும் பொழுது தெளிவு வாழ்வுக்கு அழகையும் தருவதால் மந்தரம் - திருமந்திரம் எனப் போற்றப்படுகிறது. தமிழிலே தெளிவையும் அழகையும் தரும் மூவாயிரம் பாடல்களைத் திருமூலர் பாடிச் செல்ல அந்தத் தொகுப்பு திருமந்திரம் என்னும் ஈடிணையில்லாப் பெருநூலாக இலங்கி சைவத்திருமுறையின் பத்தாவது திருமுறையாகவும் திகழ்கிறது.

இன்று சைவமும் தமிழும் மட்டுமல்ல மானிடம் மாண்புறும் வழிகள் சொலலும் திருமந்திரத்தை இறையருளால் இயற்றிய திருமூலரின் குருபூசையினைச் சைவத்தமிழ் உலகு கொண்டாடுகையில் தமிழ் கூறு நல்லுலகு முழுவதும் திருமூலர் நினைவைப் போற்றி நிற்கின்றது - நிற்க வேண்டும்.

இத்தினத்தில் திருமூலரின் சில மந்திரங்களைச் சிந்திப்பது அறிவையும் தெளிவையும் அருளையும் பொருளையும் தந்து தமிழினத்தை இன்று சூழ்ந்துள்ள இருளையும் மருளையும் நீக்குவதற்கான நெஞ்ச உறுதியையும் தரும் என்பது என் எண்ணம்.

அறுத்தன ஆறினும் ஆன்இனம் மேவி
அறத்தனர் ஐவரும் எண்ணிலி துன்பம்
ஒறத்தன வல்வினை ஒன்றல்ல வாழ்வை
வெறுத்தன ஈசனை வேண்டி நின்றானே

வன்னம் பதம் மந்திரம் தத்துவம் கலை புவனம் என்னும் ஆறுவழிகளாலும் - அத்துவாக்களாலும் - பசுத்தன்மையைப் பேணி, ஐம்புலன்களால் எண்ணற்ற துன்பத்தைத் தேடுகின்றோம். ஒன்றல்ல பல கொடிய வினைப்பயன்கள் வந்து வாழ்வை வருத்துகின்றது. இதனால் வெறுப்புற்ற மனதினராய் வாழ விருப்பற்று நிற்கினறோம்.

எமது சக்தியால் இதனை மாற்ற இயலாது என்னும் நிலையில இறைவனை வேண்டி நிற்கின்றோம். வேண்டுதல் புறத்தே பிறக்கின்றது. தோண்டுதல்-தேடுதல் அகத்தே பிறக்கின்றது. அதே அத்துவாக்களே இறைவன் தன்னை வெளிப்படுத்தும் வழியாகவும் உள்ளது என்ற

மெய்யுணர்வு தோன்றுகையில் அதே அத்துவாக்களைப் பயன்படுத்தியே பொய் நின்று நீங்கி மெய்சார்ந்து வாழ்வில் அமைதியும் ஆனந்தமும் ஏற்படுகின்றது என்பது மெய்கண்டார் அனுபவம்.

திருமந்திரம் இம் மந்திரப் பொருள் அன்றைய மனிதனும் இன்றைய மனிதனும் நாளைய மனிதனும் ஒரே மனிதத்தன்மையைத் தான் கொண்டுள்ளோம். எங்களின் புறம் மாறலாம் வளரலாம் விஞ்ஞானமய மாகலாம். பூகோளமயமாகலாம். ஆனால் மனிதன் மாறவில்லை - மாறவும் முடியாது. மானிடம் என்றும் மானிடமாகவே இருக்கும். ஆசைகளும் தேவைகளும் மானிடத்தின் இயல்பு. அதனை வென்றிட வழி காட்டுவது தெய்வீகத்தின் இயல்பு.

மானிடமும் தெய்வீகமும் கொண்டது அன்மா. அதனை ஆன்மா உணரும் பொழுது அந்த உயிரின் சொல் செயல் சந்தனை தெய்வீக மானதாக மாறும். அத்தகைய தெய்வீகத் தன்மையுள்ளவரே திருமூலர். இந்நிலை எய்தப் பெற்றவரைச் சித்தர் என்பாரும் உளர். இதனால் திருமூலர் சித்தர் என்றும் போற்றப்படுகின்றார்.

சித்தர் ஆயினும் முத்தர் ஆயினும் இறைனுக்குப் பக்தர் ஆகி நிற்கின்ற பொழுதே அவர்களின் முழு ஆற்றலும் அறிவும் அகிலத்திற்குப் பயன் அளிக்கும் என்பது நம் முன்னோர் கருத்து. காரணம் வினையினை கழிக்க வந்த உயிர் வினையின் ஆட்சிக்குள் தான் நிற்குமே தவிர அதனைக் கடந்து செல்லும் வலிமை அதற்கு ஏற்பட முடியாது. அந்த வினையினைக் கடந்து விதியினை மாற்றும் மதியினைத் தந்திடும் ஆற்றல் இறைவன் ஒருவனுக்கே தான உண்டென்பது நம்முன்னோர் சொன்ன உறுதி மொழி. இந்த இறைச்சிந்தனையே அனறும் இன்றும் என்றும மானிடம் பயன் பெறு வழியுமாகும். திருமூலரின் திருமந்திர மொழியும் இதுவே.

மனிதர்களாகிய நாம் எழுத்து (வன்னம்) கருத்து (பதம்) நிறைவான மொழி (மந்திரம்) மெய்மைகளின் விளக்கம் (தத்துவம்) அறியும் வெளிப்படுத்தல் திறன் (கலை) உலக அனுபவப்படுத்தல் (புவனம்) இவைகளின் வழி நாங்கள் எம் சுயத்தைக் கட்டிப்பொடுகின்றோம்.

இந்த நம்மைப் பந்தத்தில் (கட்டிப்போடுதல்) என்பது பசுவைக் கொண்டு போய் மாட்டுத் தொழுவத்தில் கட்டுதல் போன்ற செயல். இதனாலேயே உயிர் என்றாலே பசு என்னும் அழகான உவமானம் பெற்றது. பதி இறைன் உயிர் பசு. உலகம் பாசம். இது நம்முன் னோர்கள் இறைவன் உயிர் உலகம் என்னும் என்றும் உள்ள முபபொருள்கள் பற்றி சொன்ன விளக்கம்.

பதி நிலையானது. பசு தளையால் கட்டுண்டது. உலகம் மாறுவது - மாயமானது. எந்த ஒன்று முன் ஒரு கணத்தில் இருந்தது போல் அடுத்த கணத்தில் இல்லாது மாறிக்கொண்டிருக்கிறதோ அத மாயை. இதனை இயங்கியல் தன்மை என்பர்.

நிலையான பதி. இயங்கும் தன்மையான உலகம். இரண்டுக்கும் நடுவே தன் வினைகளால் கட்டுண்ட நிலையில் உயிர். உயிர் உலகினைக் காண்கின்றது. பதியைக் காணவில்லை. கண்டதையே உண்மையென நினைக்கையில் மயக்கம். உயிர் மயங்குகிறது. ஆன்மா சார்ந்ததன் வண்ணமாகிறது. மாறுவன மாறுகிறது. மாயையில் உயிர் தவிக்கின்றது. நிலையானது எதுவோ அதில் சார்ந்தாலே தனக்கு அமைதி எனப் பகுத்தறிகிறது. ஆந்த நிலையானதைப் பதியை இறைவனத் தேடுகிறது. தன்னலும் மேலானது அது என உணர்கையில் அதன் வழிப்பட முயல்கிறது. அதனைத் தொடரவென அதைத் தொழுகிறது. வழிபாடு பிறக்கிறது. வழிபட்டதன் வழி நடக்கையில் வாழ்க்கை சிறக்கிறது.

வழிபட்டதை உணர இயலாமால் வழி தெரியாது நிற்கையில் வாழ்க்கை அழிகிறது. வெறுப்புவிளைகிறது. இதனாலேயே மாணிக்கவாசகப் பெருமான் 'சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார் - செல்வச் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்' என்றார். இற்நத பின அல்ல இருக்கின்ற பொழுதே சிவானந்தப் பேரின்பத்தில் திளைக்க வைப்பது சொல்லும் பாட்டின் பொருளுணர்ந்து இறைவனைத் தொழுதல் என்பது திருவாதவூரர் திருவார்த்தைகள்.

வழபடு பொருளை உணர்ந்து வழிபடுவதும் - மற்றவர்கள் உணர்நது வழிபட வைத்தலுமே பூசைகளில் எல்லாம் சிறந்த பூசை என்பது அருணந்தி சிவாச்சாரியாரின் சிவஞானசித்தியார் தர விளக்கம். 'ஞானநூல் தனை ஓதல் ஓதுவித்தல் - நல்பொருளைக் கேட்பித்தல் தான் கேட்டல் நன்றா - ஈனமில்லாப் பொருள் அதனைச் சிந்தித்தல் ஐந்தும் - இறைவவன் அடி அடைவிக்கும் எழில் ஞானப் பூசை' என்பது சிவஞானசித்தியார் சுபக்க 275 வது பாடல் வரிகள். இதனையே திருமூலர்

பின்னை நின்று என்னே பிறவி பெறுவது
முன்னை ந்னறாக முயலதவம் செய்கிலர்
என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை ந்னறாகத் தமிழ் செய்யுமாறே

எனப்பாடி பிறவிகள் தொடர்வதற்கு முயல தவம் செய்யாமை காரணம் என்பதை விளக்கிக் கூடவே இறைவனைத் தமிழால் வெளிப்படுத்துவதும் பெருந்தவமே என்பதையும் கூறி தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே தன்னை இறைவன் தோற்றுவித்தான் என்பதையும் எடுத்து விளக்குகின்றார்.

இங்கு முயல் தவம் என்பது தவத்தை வாழ்வில் நின்று வேறான ஒன்றாகக் கருதாது வாழ்வையேதவமாகக் கொள்ளும் பெருநிலையை உணர்த்துகிறது. இதனை விளக்கும் மொழியாகவே

யான் பெற்ற இனபம் பெறுக இவ்வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான் பற்றிப்பற்றத் தலைப்படும் தானே

எனத் திருமூலர் பாடினார்.

அந்த வகையில் திருமந்திரம் தவமொழி மட்டுமல்ல வாழ்வு தருமொழி. நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்னும் உணர்வுடன் மக்களைச் செயல்பட வைக்கும் அழைப்பு மொழி. ஊன் பற்றி நின்று உணர்வினை உயிர்பிக்கும் அத்திருமந்திரத்தைப் பற்றப் பற்றப் தலைவனாம் இறைவனின் தரிசனம் அதன் வழி காணப்பெறும் என உறுதி தருமொழி. துன்பக் கடல் கடக்க உதவும் அறிவுத் தோணி. தானமும் தவமும் கொண்டே வினைக்கடல் வென்று அருட்கடல் புகலாம் என வழி சொன்னது திருமந்திரம்

திளைக்கும் வினைக்கடல் தீர்வுறு தோணி
இளைப்பினை நீக்கும் இருவழி உண்டு
எளைக்கும் தனக்கும் அக்கேடில் புகழோன்
விளைக்குந் தவம் அறம் மேற்றுணையாமே.

நாம் வினைக்கடலில் தவித்துக் கொண்டிருக்கினறோம். அதனை நம் வாழ்வு என்று நம்பிக்கொண்டிருக்கிறோம். இந்த வினைக்கடலைக் கடக்கத் தோணிகளாக - துன்பக் களைப்பை நீக்கும் இரு வழிகள் உ. நமக்கும் நம் சுற்றத்தவர்ககும் குற்றமற்ற தன்மையையும் புகழையும் தரும் தவம் அறம் என்பவற்றை மேற்கொள்ளுதலே அவ்வழிகள்.

இதில் தவம் என்பது உற்றநோய் நோன்றல் உயிர்ககுறுகண் செய்யாமை அற்றே தவத்திற் குரு என்று வள்ளுவர் விளக்குகின்றார். எனக்கு வந்த துன்பத்தைத் கண்ட துவளாது துடிக்காது வெடிக்காது வேகாது புலம்பாது மன உறுதியுடன் அதனை ஏற்று அதனை மாற்ற முயலதலும் எந்த உயிர்க்கும் துன்பம் செய்யாப் பெரு வாழ்வுமே தவம் என்பது குறள் பொருளாகிறது.

இவ்வாறு தன்னில் உறுதியும் பிறரில் உருக்கமும் கொள்கின்ற பொழுதே தன்னலத்தை வெல்லும் வாழ்வு வாழலாம். இது ஒரு தவநிலை இந்தத் தவநிலை குறித்து வள்ளுவர் மிக அழகான குறள் ஒன்று கூறுகிறா. 'தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய மன்னுயி ரெல்லாந் தொழும்' என்பதே அக்குறள். இந்நிலை வருவதற்கு இறையாணை வழி நடத்தல் வேண்டும். இறையாணையே அறம்.

அந்தணர் என்போர் அறவோர் மறறெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுகலான்

என நீத்தார் பெருமையில் அந்தணர் என்போர் அறவோர் - அவர்கள் எல்லா உயிர்கள் மேலும் சிறப்பான கருணை கொண்டு அவைகள்

வாழ்வினைப் பேணி நிற்றலால் என அறவோர் என்பவர்க்கு வரைவிலக் கணம் வகுத்து விட்டே வள்ளுவர் அடுத்தாக அறன் வலியுறுத்தலை தொடங்கி

சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு

எனச் சிறப்பையும் நிறைவையும் தருகின்ற அறத்தினை விட வேறு என்ன உறுதுணை உயிர்க்கு உளது? எனக் கேள்வி எழப்புகின்றார்.

செந்தண்மை பூண்டொழுகல் என்பது இறைவன் ஒவ்வொரு உயிர்க்கும் கொடுத்த இயற்கையான ஆற்றலைப் பேணுதல் அந்த ஆற்றலைப் பயன்படுத்தி உயிர் வாழ்தலை அனுமதித்தலும் எனலாம்.

இதனையே அரசியல் மொழியல் சுதந்திரம் என்பர். இந்தசுதந்தரம் மனிதனின் பிரிக்க முடியாத உரிமை என்பது ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சாசன மொழி. ஆனால் திருக்குறள் முதல் திருமூலர் வகை இந்தச் சுந்திரம் மனிதர்களுக்கு மட்டும் அல்ல எல்லா உயிர்க்கும் அனுமதிக்கப்படல் வேண்டுமெனக் கோருவது நம்தமிழ்ச சிறப்பு.

இந்த வகையில் தான் இந்தச் சுதந்திரத்தை இறையாணை என்றனர் நம்முன்னோர். அந்த இறையாணையை ஏற்று வாழ்தலே அறம். இவ்வாறு தன்னலமறுப்பு என்னும் தவத்தையும் உயிர்நலச் சிறப்பு என்னும் அறத்தையும் பழக்கப்படுத்தி வழக்கப்படுத்துதலே வாழ்வை துன்பமில்லா இன்பப்பெரு வாழ்வு ஆக்குவதற்கான வழி என்பது திருமூலர் மொழி.

இந்த தவத்தையும் அறத்தையும் விளங்கிக் கொள்ள இயலாதவர் களுக்கு அதனை கடைப்படிப்பதற்கானச் சுருக்க வழி ஒன்றையும் திருமூலர் பின்வரும் திருமந்திரத்தால் வகுத்துத் தருகிறார்.

பற்றது வாய்க்கின்ற பற்றினைப் பார்மிசை
அற்றம் உரையான் அறநெறிக்கு அல்லது
உற்று உங்களால் ஒன்றும் ஈந்தது வேதுணை
மற்று அண்ணல் வைத்த வழி கொள்ளுமாறே

என்பது உய்விற்கான சுருக்க வழி சொல்லும் திருமந்திரம். அதன் விளக்கம் - 'உயிர் பற்றாக உள்ள பரம் பொருளை வாய்க்கு வந்தபடி எல்லாம் குறைகள் சொல்லாது - அறநெறி அல்லாத வேறு வழிகளில் சென்று மீட்சி பெறலாம் என எண்ணாது - மற்றவர்களுக்கு உங்களால் இயன்றதை ஈதலே வாழ்வின் பலமாகும் ஆன்மாவின் துணையாகும். இதுவே உயர்ந்தவனாகிய இறைவன் ஆன்மாக்கள் உய்வுற்று விடடைய வைத்துள்ள வழி' என்பதாகிறது.

இங்கு ஈதல் என்பது அருட்கொடை அன்புக்கொடை அறிவுக்கொடை நிதிக்கொடை பொருட்கொடை உணர்வுக்கொடை உழைப்புக்கொடை உண்டிக்கொடை உயிர்க்கொடை எனப பலவாறாக அமைகிறது.

சுருக்கமாகச் சொன்னால் கொடுத்தல் - பகிர்தல் என்பன தன்னல மறுப்பினை ஆணிவேராகக் கொண்ட செயற்பாடுகள்.

இன்றைய காலகட்டத்தில் எம் இனத்தின் இன்மைகள் போக்கி நன்மைகள் செய்ய இந்தக்கொடுத்தல்-பகிர்தல் என்பதே ஒரே வழி.

இன்றைய காலகட்டத்தில் நாம் பிறர்க்கு உதவிடல் வேண்டும் என்பதனைக் குறிக்கும் பெருமந்திரம். பச்சிலை கொண்டு பரமனைப் போற்றலாம். பச்சைப்புல் கொண்டு பசுவின் பசியாற்றலாம். அவ்வாறே ஒரு கைபடிச் சோறு ஊட்டியே பசிப்பிணி போக்கலாமே அதுவும் இல்லையேல் இன்னுரை கூறியே பிறர் துன்பம் ஆற்றலாமே.

எளிமையான மொழியில் நாம் வாழவும் பிறரை வாழ வைக்கவும் ஆணடவன் தரும் அழைப்பாக இதனை ஏற்றுத் துன்புற்று நிற்கும் நம்மக்களுக்கு அன்புற்றுப் பணி செய்ய இத் திருமந்திரம் அழைக்கிறது. தானமும் தருமமும் தள்ளிவைக்கப்படாது செய்யப்பட வேண்டிய மனிதப்பணிகள். அதனைச் செய்தலே அறம். அதனைச் செய்தலே தவம். அறவழியான தன்னலமற்ற வாழ்வே அன்புற்றமர்தல். அறமே இறைவனை நாம் தாங்குவதற்கான வழி. அன்பே இறைவன் எம்மைத் தாங்கவைப்பதற்கான வழி.

அறத்தின் சின்னமாகிய விடைமேல் இறைவன் எழுவது அறத்தாலேயே அவனை அடைய முடியும் என்பதைக் காட்டுகிறது. அதைப் போல் தேவர்க்கும் பிரம்மா திருமாலுக்கும் இறைவனின் திருவடியை மானிடர்க்கு அருளுவது அவன் அனபென்னும் வலையில் மட்டுமே அகப்படுவான் என்பதைக் காட்டுகிறது.

இந்த தன்லமற்ற அன்பு - நன்மைத்தனமே செய்தல் என்னும் சிவத்தன்மை - இதனை அறிவுறுத்தி வாழப்பழக்கி எம்மை வாழ்விக்கும் பேராற்றலே திருமந்திரம். திருமந்திரம தரும் மூச்சுப் பயிற்சி எம் உடலுக்கும் உள்ளத்திற்கும் உறுதி தருகிறது. நோய்நொடியின்றி நூறாண்டு காணவைக்கிறது.

திருமந்திரம் கரும் காட்சிப்பயிற்சி - தியானப்பயிற்சி ஒன்றாயும் வேறாயும் உடனாயும் இருக்கும் இறைவனையும் இறைவல்லமை களையும் காணவும் பெறவும் வைக்கிறது. இதுவே திருமந்திரத்தின் பெருமை.

62. திருமந்திரத்தில் மனம்

சண்முக வடிவு
முனைவர் பட்ட ஆய்வாளர்
காமராஜ் கல்லூரி
தூத்துக்குடி.

விண்நின்று இழிந்து வினைக்கு ஈடாய் மெய்க் கொண்டு
தன் நின்ற தாளை தலைக்காவல் மேல் வைத்து
உள் நின்று உருக்கி ஓர் ஒப்பிலா ஆனந்த
கண் நின்று காட்டி களிம்பு அறுத்தானே (113)

மனம் + ஈசன் = மனோ ஈசன்இமனதை உடைய 'ஈசன், அதாவது மனிதன். நாம் தான் மனிதர்கள். மனதினால், எண்ணங்களால் இயங்குபவர்கள். இயங்குபவர்கள் எனறால் இயக்குவது யார்? என்பது கேள்வி. மனம்தான் நம்மைக் கட்டளைகள்மூலம் இயக்குகின்றது. ஆனால் அந்த கட்டளைகளை அவ்வாறே நாம் உணராமலேயே தானியங்கி நிலையில் இயங்குவதுதான் இங்குக் கூர்ந்து கவனிக்கத்தக்கது. கட்டளைகளின் பிறப்பிடம் மனம். மனம் என்பது வன்பொருள் (hardware). மனதில் சேர்த்து வைக்கப்பட்டுள்ள மனவய தான் software. இதை நாம் எப்படி சேர்த்தோம் என்பதை ஆராய்வது இங்கு அவசியம். நாம் சிறு குழந்தையாக இருந்தபோது தாயின் லைப்பால் என்ற அமிர்தத்தைப் பருகி வளரத் துவங்குகின்றோம். நாம் பிறந்த குடும்பத்தின் சூழ்நிலைக்கும் தம் பெற்றோர்களின் செல்வ வளம் மற்றும் அவர் தம் வாழ்க்கை வசதி உறவினர்களின் ஆதரவு அலலது புறக்கணிப்பு ஆகியவைகளுக்கு. தக்கவாறு நமது உணவு பழக்கம் உண்டாகிறது. உண்ணும் உணவுக்கு தக்கவாறு நம் உடல் வளருகிறது. இதையே 'அன்னமய கோசம்' என்று கூறுவார்கள். குழந்தை தாயின் கற்பப்பையில் வளரும் போது தாயின் வயிற்றில் இருந்து உணவுக்குழாய் பொருத்தப்படுகின்றது. இதை தான் தொப்புள் கொடி என்று கூறுகிறார்கள். தாயின் கற்பப் பையில் இரண்டு செல்கள் எண்ணற்ற செல்களாக வளர்ந்து உணவுக்குழாய் மூலம் வரும் சத்துப் பொருள்களை வைத்து தான் குழந்தையின் இருதயம், நுரையீரல், மூளை போன்ற அத்தனை உறுப்புகளையும் செல்கள், திசுக்கள், உடல் உறுப்புக்கள் என உருவாகி முழுகுழந்தையாக உருப் பெற்று 10 மாத காலத்தில் delivery செய்கிறது. ஆகவே உடலில் உள்ள அத்தனை உறுப்புகளையும் செய்து முடிப்பவர்கள் நம் உள்ளே தான் இருக்கிறார்கள். உற்பத்தி செய்தவர்கள் நம் உள்ளேயே இருக்கும் போது செய்வதற்கு மட்டும் ஏன் வெளியில் உள்ள போக வேண்டும்? என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நம் உடலுக்கு சரியான உயிர்சத்துக்கள் உள்ள உணவுகள் தேவை. அந்த உணவுகளில்

இருந்தே செல்கள் உடலுக்குத் தேவையான ரசாயனத்தை உற்பத்தி செய்யும் ஆற்றல் கொண்டவையாக இருக்கின்றன.

மருத்துவர்கள் கொடுக்கும் மருந்துகள் இரசாயனத்தால் உண்டாகப் பட்டவை. அவை உடலில் உள்ள உயிர் உள்ள செல்களை அழித்து தான் செயல்படுகின்றது என்ற உண்மையை நாம் உணர்ந்து பார்க்க வேண்டும். குழந்தையாக இருந்த போது தாயின் பராமரிப்பில் தான் வளர்கின்றது. அதன் பிறகு தானே உணவு சாப்பிட பழகி உணவை உட்கொள்ள கற்றுக்கொண்டு வளர்கிறார்கள். உண்ணும் உணவை கணக்கிட்டு பார்த்தால் பிரம்மிப்பாக இருக்கும். 50 வயதைக் கடந்த பிறகும் சாப்பாட்டின் மீது உள்ள அவா, ஆசை குறைவதில்லை. 50 வயது உள்ள ஒருவர் உண்ட உணவு, நீர் மொத்தம் எவ்வளவு என்று கணக்கிட்டுப் பார்த்தால் 50 டன். அதாவது 50000 கிலோ. 10 லாரி load. இந்த சிறிய வாய்மூலம் உட்கொள்ளப்படுகிறது.

இந்த உடல் என்ற சாதனம் அவற்றை சீரணம் செய்து கழிவுப்பொருள்களை வெளியேற்றி சத்துப் பொருள்களைக் கிரகித்து உருவாக்கி உரு பெற்றது தான் இந்த உடல் என்ற சரீரம். இந்த பரிணாம உடல் வளர்ச்சியைச் சற்று கூர்ந்து ஆராய்ந்து பார்த்தால் இந்த உடலை உருவாக்கியது யாரென்று நன்றாகப் புரிந்து விடும். மனித உடல் மட்டும் அல்ல அனைத்து ஜீவராசிகளின் உடல் பரிணாம வளர்ச்சிக்கும் காரணம் செல்கள்தான். உடல் வளரும் போதே உள்ளமும் வளர்கிறது. அதாவது குழந்தையாக பிறந்தது முதல் கண்களினால் பார்ப்பவைகள் அனைத்தும் உள்ளத்தில் பதியப் படுகின்றது. அனைத்தும் என்றால் இங்கு ஒன்றே கவனிக்க வேண்டும். நாம் கண்களில் பார்க்கும் போது ஒரே பார்வையில் கால் பாகம் பிரபஞ்சத்தையும் காண்கிறோம். அப்படியானால் முழு பிரபஞ்சத்தையும் நான்கே பார்வையில் நாம் கண்டு முடிக்க இயன்றவர்களாக இருக்கிறோம். அதனார் தான் பிரம்மனுக்கு நான்கு தலைகள் இருக்குமாறு அமைக்கப்பட்டுள்ளது. பார்வையில் தூரத்தில் உள்ளதை தொலைநோக்கி மூலமாகவும், துல்லியமாக பார்க்க நுண்ணோக்கி மூலமாகவும் பார்க்க இயலுவதை ஒத்து நமது பார்வையின் சக்தி உள்ளது. இவ்வளவு இருந்தும் நாம் குறுகிய கண்ணோட்டத்தினால் பார்த்து பார்த்துப் பழகி வருகிறோம்.

நமது உள்ளம் என்பது (highly skphisticated very efficient with infinite memory) என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இந்த உள்ளத்தில் தான் கண்களின் மூலமாகக் கண்ட காட்சிகள் அனைத்தும் பதியப்பட்டுள்ளது. ஒரு நாளைக்குத் தூங்கும் சமயத்தைத் தவிர்த்து வழித்திருக்கும்.

முழுநேரமும் கண்களின் பார்க்கும் பணி நடந்து கொண்டுதான் இருக்கிறது. கண்ட காட்சிகள் அனைத்தும் பதிவு செய்யப்பட்டு வருகிறது. அப்படியானால் சுமார் 12 மணி நேரத்திற்கும் அதிகமாக பார்க்கும் பணியும்பதியும் பணியும் நடந்து கொண்டுதான் இருக்கிறது. இவ்வாறு பதியப்பட்டுள்ள data எவ்வளவு என்று கணக்கிட்டு பார்த்தால்

இவ்வளவு - MB அல்லது GB என்று கணக்கிட்டுப் பார்க்க இயலும். இவ்வாறு கணக்கிட்டு பார்ப்பவர்கள் கணக்குள் அறிந்தவர் ஆவார். பார்வையைப் போலவே கேட்பதும் இந்த அனைத்து விவகாரங்களாகவே நடந்துகொண்டு தான் இருக்கிறது.

உள்ளத்தில் உள்ள பார்வைகளின் பதிவுகளைப் போலவே கேட்பவைகளின் பதிவும் பதிவாகின்றன. செவியும் ஒரு நாளைக்கு 12 மணி நேரத்திற்கு அதிகமாகக் கேட்டுக் கொண்டும் கேட்பவைகளை உள்ளத்தில் பதிவு செய்துகொண்டும் தான்இருக்கிறது. இவ்வாறு பதியப்பட்டுள்ள எவ்வளவு என்று கணக்கிட்டுப் பார்த்தால் இவ்வளவு ஆடீ அல்லது GB என்று கணக்கிட்டுப் பார்க்க இயலும். பார்ப்பது கேட்பது போன்றே ருசிப்பது ஒரு இயக்கம். நாவால் ருசிப்பது அத்தனையும் உள்ளத்தில் பதிவு செய்யப்படுகிறது. வாசனை மூக்கினால் நுகர்ப்படுகிறது. நுகரும் வாசனைகள் அத்தனையும் உள்ளத்தில் பதிவு செய்யப்படுகிறது. தொடுஉணர்வும் பரிசிக்கப்படும் அத்தனையும் உள்ளத்தில் பதிவு செய்யப்படுகிறது. இந்த 5 வகையான பார்த்தல், கேட்டல், ருசித்தல், வாசனை நுகர்தல், ஸ்பரிசிக்கும் தொடு உணர்வுகள் ஆகிய 5 இயக்கங்களும்.

உடலில் நடைபெறுகிறது. பதிவும் செய்யப்படுகிறது. இந்த பதிவுகள் அத்தனையும் உள்ளத்தில் புத்தி என்ற உருவாகிறது. இதுதான ஒருவரின் மனோநிலைமையாகிறது. இந்த மனோநிலைமை வாயிலாகவே வாழ்க்கை நடைபெறுகிறது. இவ்வாறு பதிவு செய்யப்பட்ட பதிவுகளின் மூலமாக மனம் செய்து கட்டளைகளை இடுகின்றது. கட்டளைகளை நிறைவேறுவதில் சிரமம் ஏற்பட்டால் மனம் வேதனை உறுகிறது. கட்டளைகளைத் திருப்தியாக நிறைவேற்றினால் மனம் சந்தோசப் படுகிறது. உட்கொண்ட உணவினால் உருவாகிய உடலும் பதிவுகள் பதியப்பட்ட உள்ளத்தினாலும் நாம் இயங்குகிறோம். இதையே அன்னமய கோசம் என்று மனோமய கோசம் என்றும் கூறுவார்கள்.

புலன், போகம், ஏவல் புலன்களின் மூலமாக உடல்போகத்தை அனுபவிக்கும் பொருட்டு மனம் ஏவல் செய்கிறது. இதுவே கட்டளையாகிறது. நம் மனதின் கட்டளைகளால் மட்டும் இயங்குவது இல்லை. மற்றவர்களின் ஏவல்களாலும் இயங்குகிறோம். அதாவது தாய், தந்தை, ஆசான், உறவினர்கள, அலுவலக உயர் அதிகாரிகள் மேலும் நண்பர்கள், மனைவி, குழந்தைகள், உடன் பிறந்தவர்கள், அக்கம்பக்கத்தில் வசிப்பவர்கள், அரசியல் இயக்கங்கள், பக்தி இயக்கங்கள், அதிகார வர்க்கங்கள் மேற்கூறிய அனைத்து ஏவல்களும் மனித மனங்களால் தோற்றுவிக்கப்பட்டவைகளே. ஆகவே தனி மனித இயக்கமே சமுதாய இயக்கமாகப் பிரதிபலிக்கிறது. சமுதாய இயக்கமே பிரபஞ்ச இயக்கமாகவும் அமைகிறது. இவைகள் தான் எண்ணம். மனித மனங்களில் உருவாகும் எண்ணங்களே பிரபஞ்ச இயக்கமாக இருப்பதை நம்மால் ஓரளவு உணரமுடிகிறது அல்லவா?

ஒவ்வொரு மனித உடலும் அத்துடன் கூடிய மனமும் ஒருங்கிணைந்து இயக்கப்படும்போது அந்த இயக்கத்தை செயல்

படுத்தும் கருவிகள் செயல்படுகின்றது. இவ்வாறாகவே நாம் இயங்கிக் கொண்டுஇருக்கிறோம். மேலே குறிப்பிட்ட கருவிகள் வேறு எதுவும் இல்லை. நமது கண்கள், காதுகள், மூக்கு, நாக்கு, உடல் தான். இவ்விடம் இந்தக் கணம் நாம் உணர வேண்டியது என்ன என்பதைச் சிந்திக்க வேண்டும். மனம் ஒன்றே நினைக்கிறது, உடல் ஏதோ செய்கிறது, கண்கள் எதையோ பார்க்கிறது, நீண்ட சிந்தனையில் இருப்பவைகள், கண்கள்,காதுகள், நாசி, உடல் உடன் இருந்தும் அவைகளின் எந்த செயலையும் உணராமல் மனதில் எழும் எண்ணங்களிலேயே மூழ்கி விடுகின்றனர். அவ்வாறு எழும் எண்ணங்கள் நன்மை, சந்தோசம், லாபம், அதாவது தனக்கு ஆதாயமாக இருந்தால் சந்தோசப்படுகிறது. அதற்கு மாறாக இருந்தால் துக்கப்படுகிறது. இந்த சந்தோசம் மற்றும் துன்பம் வெறும் கற்பனையே. நன்மையும் தீமையும் பிறர் தர வாரா. ஒவ்வொரு மனிதனின் மனோநிலைமைக்கு தக்கவாறு சம்பவங்கள் காணப்படுகிறது. காணும் பார்வைக்கும் மனோ நிலைமைக்கும் தக்கவாறு அந்த சம்பவங்கள் மாறுதலுக்கு உட்பட்டது. உதாரணத்திற்கு ஒரு சம்பவத்தை எடுத்துக் கொள்வோம். இறப்பு என்பது பொதுவாக துன்பம் தரக் கூடிதாகவே அனைவராலும் ஒப்புக் கொள்ளப்படுகிறது.

ஒரு தந்தை தன் குடும்பத்திற்கு தேவையானவைகளை குறைவில்லாமல் கொடுத்து அன்புடன் செயல்பட்டு குடும்பத்தைக் காப்பாற்றுவானாகில் அவன் இறந்து போனான் என்றால் மொத்த குடும்பமும் துவக்கத்தில் மூழ்கி துயரத்தை அனுபவிக்கின்றனர். மற்றொரு தந்தை குடும்பத்துக்கு சொந்தமான பூர்வீக சொத்துக்களை விற்று தனது சொந்த ஆசைகளை மட்டும் அனுபவித்துக் குடிகாரனாகவும் சூதாடி இழப்பவனாகவும் குடும்பத்தின் தேவைகளை பூர்த்தி செய்யாதவனாக இருந்தானேயானால் அவனுடைய இறப்பு குடும்பத்தினருக்கு துன்பம் தருவதற்கு மாறாக சங்கடம் தீர்த்ததாகவே காணப்படுகிறது. இதைத் தான் 'ஏசு நாதர் வருத்தப்பட்டு பாரம் சுமப்பவர்களே என்னிடம் வாருங்கள். இளைப்பாருங்கள். உங்கள் துன்பம் இன்பமாக மாறும்' என்று கூறியுள்ளார். இதையே வள்ளுவர் 'நன்மையும் தீமையும் நாடி நலம் புரிந்த தன்மையால் ஆள்ப்படும்' என்று இயற்றியுள்ளார்.

நன்மையும் தீமையும் நாடி நலம் புரிந்த தன்மையால் ஆளுவது எங்ஙனம்? நன்மையும் தீமையும் காணப்படும் அல்லது காண்பிக்கப்படும் காட்சியே தவிர சத்தியம் அல்ல என்பதனை உணர்ந்து பார்க்க வேண்டும். ஒவ்வொருவரின் மனோநிலைமைக்கு தக்கவாறு காணப்படுகிறது. இதையே திருமூலர் உபயோகத்தில் 'உள்நின்று உருக்கி ஓர் ஒப்பிலா ஆனந்த கண்ணின்று காட்டி களிம்பு அறுத்தானே' என்று அருளி உள்ளார். தனது தவறான எண்ணங்களினால் மற்றவர் மீது பழி போட்டு தானும் துன்பப்பட்டு அவரையும் துன்பப்படுத்தும் மன வேதனைகளே தற்போது உள்ள மிகப்பெரிய பிரச்சினை.

இவைகளை எல்லாம் தவிர்க்க நமது மனம் ஒரு கருவி என்பதை தெரிந்து கொள்ள வேண்டியது தற்போது மிக மிக அவசியமாகிறது.

உடல் இயங்க பல கருவிகள் உள்ளன என்பதை மிக நன்றாக அறிவோம். இருந்தாலும் மனமும் ஒரு கருவி தான் என்பதனை உணர இயலாமல் போவதற்கு என்ன காரணம் எனபதனைச் சற்றே சிந்தித்து பார்க்க வேண்டும். உடலில் கண், காது, மூக்கு, செவி, நாக்கு, வாய், நுரையீரல், கல்லீரல், இருதயம், இரைப்பை, சிறுநீரகம், கை, கால்கள், மூளை, நரம்பு மண்டலம், நாடிகள் எனப் பல இயந்திரங்களின் இயக்கத்தினால் தான் இந்த உடல் இயங்குகிறது. இந்த அனைத்து இயக்கத்திற்கும் மன இயக்கத்திற்கும் மிக நெருங்கிய தொடர்பு உள்ளது என்பதனையும் உணர்ந்து பார்க்க வேண்டும். 'உள்ளதைச் சொன்னோம் உணர்வு உடையோர்க்கே' எனத் திருமூலர் அருளி உள்ளார். உணர்வு என்றால் என்ன என்பதை தெரிந்து கொள்வது அவசியமாகிறது. எண்ணம் இல்லாத போது தான் உணர இயலும். சதாசர்வ காலமும் எண்ணத்தில் திளைத்துக் கொண்டு இருப்பவர்களுக்கு உணர்வு என்பது 10 சதவிகிதம் தான் செயல்படுகிறது. இந்த 10 சதவிகித உணர்வினால் தான் மனிதன் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறான் என்பது 100 சதவிகித உண்மையாகும். ஏதோ தற்செயலாகத் தான் வாழ்க்கை நடந்து கொண்டிருகிறதோ ஒழிய முழு கவனத்துடன் எந்த மனிதனும் வாழ்க்கை நடத்தவில்லை. மனிதன் என்றால் முழு கவனத்துடன் தான் வாழ்க்கையை நடத்த வேண்டும்.

கலாச்சாரம் மிக மிக பழமையானது. கலாச்சாரத்தின் பெருமையே உணர்வுடன் வாழ்வதையே முழு நோக்கமாக கொண்டது என்பது தான். மனதின் செயல் பாடுகளை நன்கு புரிந்து கொண்டால் தான் உணர்வை பற்றி தெரிந்து கொள்ள இயலும். இப்பொழுதும் உணர்வுடன் வாழ்ந்து வருபவர்களும் உலகில் இருக்கத்தான் செய்கி றார்கள. அவர்கள் இயற்கையோடு இசைந்து வாழ்பவர்களாகவே இருப் பார்கள. மனிதனை தவிர மற் ஜீவராசிகள் அனைத்தும் இயற்கையோடு இசைந்து தான்வாழ்கின்றன. ஆகவே தான் அவைகள் உயிர் வாழ்வதை ஒரு பெரிய பிரச்சினையாக கருதாமல் தனக்குத் தேவையானவைகளை அவைகளே தேடி உருவாக்கிக் கொள்கின்றன. மனிதன் மட்டும் தான் அவைகளுக்கு பெரிய பிரச்சினை. ஜீவராசிகள் இயற்கைக்கு ஊறு, விளைவிக்காமல் சூழ்நிலைக்குத்தக்கவாறு தங்களைத் தயார் படுத்திக் கொண்டு வாழ்கின்றன. ஆனால் மனிதன் தன் தேவைகளுக்காக இயற்கையை அழித்து தனக்குயேற்றவாறு மாற்றி அமைக்கிறான். இயற்கைக்கு எதிராக செயற்படுவதால் தான் மனிதன் எண்ணற்ற பிரச்சினைகளுக்கு ஆளாக வேண்டி உள்ளது. இதுவரை நாம் சிந்தித்தது நான் யார்? என்ற கேள்விக்குப் பதிலாக ஏற்றுக் கொள்வோமா? இது ஒரு தத்துவம். இதை ஒப்புக்கொண்டால் தான் மேலே சிந்திக்க இயலும். தத்துவம் எங்கு உள்ளதோ தத்துவன் அங்கு உள்ளான் தத்துவம் எங்கு இல்லையோ தத்துவன் அங்கு இல்லை.

'விண் நின்று இழிந்து வினைக்கு ஈடாய் மெய்க்கொண்டு' என்ற நான்கு வார்த்தைகளுக்கு நான் என்ற இந்த உடல் தத்துவமே எனப் பொருள் கொள்வோமா? சரி என்றால் மேலே உள்ள விண்நின்று இழிந்து என்ற மூன்று வார்த்தைகளுக்குப் பொருள் காண வேண்டும். விண் என்றால் வெளி ஆகாசம். இந்த பிரபஞ்சத்தில் காணப்படும் அனைத்தும் விண்வெளி ஆகாசமாக பூரணத்திலே தான் பொருத்தி வைக்கப்பட்டுள்ளது. சூரியன், சந்திரன், ஒன்பது, கோள்கள், நட்சத்திர மண்டலங்கள், மலைகள், கடல்கள், சமுத்திரங்கள், பூமி, மரங்கள், செடி, கொடிகள், புல் பூண்டுகள், நீர் வாழ்வன, ஊர்வன, நடப்பன, பறப்பன ஆகிய அனைத்து ஜீவ ராசிகளும் மனிதர்களும் அவர்தம் வீடு, வாசல், கோயில்,கோபுரம், குளம், கிணறு அனைத்தும் ஆகாசத்தில் தான் இடன் பெற்று உள்ளன. ஆனால் தோன்றி உருப்பெற்ற ஒவ்வொன்றும் அழியக் கூடியவை. அழிந்த பின் எந்த மாசும் அடையாமல் அதன் அதன் ஆகாசம் மகா ஆகாசத்தில் ஐக்கியமாகி விடுகிறது. உதாரணத்திற்கு ஒரு பானையை எடுத்துக் கொள்வோம். பானையில் வெற்றிடம் உள்ளது. பானை ஆகாசம் மண்ணினால் செய்யப்பட்ட பானை ஓட்டிலும் வெற்றிடம் உள்ளது. பானையை உடைத்தால் பானையில் உள்ள பானை ஆகாசம் மகா ஆகாசத்தில் ஐக்கியம் ஆகி விடுகிறது. மண்ணினால் ஆன பானை ஓடு துண்டுகளாகி விட்டாலும் அதன் அளவுகளுக்கு ஆகாசம் மண் எஞ்சி உள்ளது. துகள்கள் ஆனாலும் அந்த துகளிலும் ஆகாசம் உள்ளது. அணு அளவுக்கு மிக சிறியது ஆனாலும் அணு அளவு ஆகாசம் துகள் அடங்கி உள்ளது. அந்த துகள் வாயுவாக மாற்றப்பட்டாலும் வாயு ஆகாசம் எஞ்சி உள்ளது. குட ஆகாசம், கிணற்று ஆகாசம், சொம்பு ஆகாசம், பேனா ஆகாசம், ஆடு ஆகாசம், மாடு ஆகாசம், யானை ஆகாசம் வீடு ஆகாரம், கார் ஆகாசம், மனித உடல் ஆகாசம், உடலில் கண் காது, மூக்கு, வாய், செவி, சித்தம், அனைத்தும் ஆகாசமே. இதன் உள்ளும் புறமும். ஆகாசம் வியாபித்துள்ளது. எனவே ஆகாசம் பிரம்மம். பிரம்மத்தில் இருந்து என்பதனை விண்நின்று இழிந்து எனப் பொருள் கொள்ள பொருத்தமாக உள்ளதா கூறுங்கள்?

விண்நின்று இழிந்து வினைக்கு ஈடாய் மெய்க் கொண்டு
தன் நின்ற தாளை தலைக்காவல் மேல் வைத்து
உள் நின்று உறுக்கி ஓர் ஒப்பிலா ஆனந்த
கண் நின்ற காட்டி களிம்பு அறுத்தானேசண்முக வடிவு

தன்நின்ற தாளை தலைகாவல் மேல் வைத்து என்பதற்கு ஒரு மனிதன் என்ற சாதனம் அதன் உள் இருக்கும் மனம் என்ற hardwareயில் சேர்த்து வைக்கப்பட்டுள்ள (software data) என்ற பதிவுகளை உருக்கி அதனை மாற்றி அமைத்து ஒரு ஒப்பிலா ஆனந்த கண்நின்று காட்டிகளிம்பு அறுத்தானே. களிம்பு என்றால் உள்ளத்தில் சேர்த்து வைக்கப்பட்டுள்ள எண்ண குவியல்களிலிருந்து வெளிப்பட்ட புலன்,போகம், ஏவல் என்ற எண்ணம், சொல், செயல், வாயிலாக

நடைபெறுகின்ற சம்பவத்தை ஆனந்தமான நோக்கில் (point of view) கண்களுக்கு சந்தோசமான பார்வையில் காண்பித்து மனம் திருப்தி அடைந்தால் முடிவு பெறாத எண்ணத்தின் ஆசைகள் (desires) பூர்தியானால் ஆத்மா என்ற பளிங்கில் சேர்ந்து உள்ள அழுக்கு நீங்கி அதன் உண்மை நிலையகிய ஜோதி சொரூபம், ஞான சொரூபம், ஆனந்த சொரூபமாக சுத்த சிவம் வெளிப்படும். மேற்படி அழுக்கினை நீக்குதலையே களிம்பு அறுத்தான் என்று முதல் உபதேசத்தில் திருமூலர் அருளி உள்ளார்.

உணவே மருந்து 'மருந்தே உணவு'

'உணவே மருநது' என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். 'மருந்தே உணவு' என்ற இன்றைய நிலையையும் கண்கூடாகப் பார்த்திருப்பீர்கள். மனிதன் தனக்குத் தேவையான சரியான உணவுகளைச் சாப்பிடாமல் ஆரோக்கியத்தை அழிக்கும் விஷங்கள் நிறைந்த உணவுகளைச் சாப்பிடுவதினால் தான் நோயாளியாகின்றான். எனவே உணவு முறைகளை மாற்றியவுடன் நோய்கள் எல்லாமே நீங்கிவிடும்.

பழங்கால மனிதன் சுமார் 300 ஆண்டுகள் வாழ்ந்ததாக பைபிள் உள்ளிட்ட பல புத்தகங்கள் மூலம தெரிய வருகின்றன. மனிதனின் ஆயுள் 300 ஆண்டு. அந்த மனிதன் ஒரு நாள் மட்டும் சமைத்த உணவு சாப்பிட்டால் அந்த மனிதனின் ஆயுளில் ஒரு நாள் குறையும். எனவே வாழ்நாள் முழுவதும் சமைத்த உணவைச் சாப்பாடும் மனிதன் 150 வருடங்களுக்கு மேல் உயிர் வாழ முடிவதில்லை. சுவாசிக்க சுத்தமான காற்று, குடிக்க சுத்தமான தண்ணீர் கிடைக்காமையால் மேலும் அவனுடைய ஆயுள் குறைகின்றது.

உணவே மருந்து, மருந்தே உணவு என்பது சித்த மருத்துவம். எனவே தான், பொரும்பாலான சித்த மருந்துகள், உணவாக உட்கொள்ளும் படியே கசாயம்.

63. திருமந்திரத்தில் மும்மலங்கள்

தேன்மொழி
முனைவர் பட்டஆய்வாளர்
காமராஜ் கல்லூரி
தூத்துக்குடி.

மலம் என்பது இந்துசமயத்தின் ஒருதத்துவப் பிரிவாகிய சைவசித்தாந்தம் கூறும் மூன்று உண்மைப் பொருள்களில் ஒன்றாகும். இம்மூன்று உண்மைப் பொருள்கள் பதி (இறைவன்), பசு (உயிர்கள), பாசம் (மலங்கள்) என்பனவாகும். இவற்றுள் மலங்கள் மூன்று வகையாக உள்ளன. இவை மூன்றையும் ஒருமித்துமும் மலங்கள் என்பது வழக்கம். சைவசித்தாந்தத்தின்படி இறைவன், உயிர்கள், மலங்கள் ஆகிய மூன்றும் எப்பொழுதும் நிலைத்திருப்பவை. இவ்ற்றுள் எதுவுமே மற்றொன்றால் படைக்கப்பட்டது அல்ல என்கிறது இத்தத்துவம். இறைவனைச் சென்றடைவதே உயிர்களின் நோக்கம். ஆயினும் குறையுள்ள அறிவு கொண்ட உயிர்கள் இறைவனைச் சேரவிடாமல் உயிாகளின் அறிவை,அறிவற்ற சடப்பொருள்களான மலங்கள் மறைத்துக் கொண்டிருக்கின்றன. இதனால் ஏற்படுகின்ற அறியாமையே உயிர்களின் துன்பங்களுக்குக் காரணம் என்பது சைவசித்தாந்தக் கருத்து உயிர்களை மலங்களின் பிணைப்பிலிருந்து விடுவித்துத் தன்னுடன் சேர்த்துக்கொள்ள இறைவனின் அருள் வேண்டும்,

மலங்களின் வகைகள்

மலங்கள் மூன்று வகையாகஉள்ளன. இவைஆணவம், கன்மம், மாயை எனப்படுகின்றன.

ஆணவம்

மலங்களும் முதன்மையானதுஆணவமலம். இதனால் இது மூல மலம் என்றும் அழைக்கப்படுவதுஉண்டு. தமிழ் நூல்களில் இது இருள் என்றபெயரிலும் வழங்கப்படுகிறது. ஆணவம் இருவகைகளில் உயிர்களைப் பாதிக்கின்றது. ஒன்று,உயிரின் அறிவைமுற்றாகமறைத்தல் இரண்டாவது,அவற்றின் அறிவைக் கீழ் நிலைக்குக் கொண்டுசெல்வது. உயிர்கள் உண்மையையும் பொய்யையும் பகுத்துணராதுமயங்கும் நிலைக்குக் காரணம் இதுவேஎன்கிறதுசைவசித்தாந்தம்.

கன்மம்

கன்மம் என்பதுஅவரவர் செய்யும் வினைகளின் பயன் ஆகும். இதனைவினைஎன்றும் அழைப்பர். செய்யும் வினை நல்வினை ஆனாலும், தீவினை ஆனாலும் அவற்றுக்குரிய பலனை அவற்றைச் செய்யும் உயிர்கள் அடைந்தே ஆக வேண்டியுள்ளது. இதனால் இப்பலன்களை நுகர்வதற்காக உயிர்கள் மீண்டும் மீண்டும் பிறக்கின்றன. உயிர்கள் மீண்டும் பிறக்கும்போது, அவைக்குரிய பலன்களை இறைவன்

அவற்றிடம் சேர்க்கிறான் என்கிறது சைவசித்தாந்தம். வினைகளிலும் மூன்றுவகைஉண்டு. இவை:

பழவினை (சஞ்சிதம்)
நுகர்வினை (பிராரத்தம்)
ஏறுவினை (ஆகாமியம்)

என்பனவாம். இவற்றுள், பழவினை என்பது முன்னைய பிறவிகளில் செய்த வினைகளுக்கான பலன்களாகும். நுகர்வினை, அந்தப் பிறவியிலேயே சேர்த்துக் கொண்டவினைப் பயன்கள். ஏறுவினை என்பது வினைப்பயனை அனுபவிக்கும்போது உருவாகும் வினைப்பயன்களாகும்.

மாயை

மாயை என்பது உயிர்களின் நுகர்ச்சிக்குத் தேவையானவற்றைப் படைத்துக் கொடுப்பதற்காக உள்ளதுஆகும். உடல், உலகு மற்றும் உலகில் காணும் எல்லாப் பொருட்களையுமே மாயையைக் கொண்டே இறைவன் படைக்கிறான் என்கிறது சைசித்தாந்தம். இது ஒருமலம் என்ற வகையில் உயிர்களுக்குப் பகையாகக் கருதப்பட்டாலும், ஆவண மலத்தின் பீடிப்பினால் முழுதுமாக மறைக்கப்பட்டுள்ள அறிவைச் சிறிதளவு வெளிப்படுத்த உதவுவது இம் மாயை என்று சொல்லப் படுகின்றது. சூரியன் இல்லாத இருட்டில் வழிகாட்டும் சிறயவிளக்கின் சுவாலையை இதற்கு உவமையாகக் கூறுகின்றனசித்தாந்த நூல்கள்.

மாயை மிக நுண்ணியது என்றும், அது இறைவனடியிலேயே இருக்கிறது என்றும், ஒருசிறுவிதை எவ்வாறு பெரும் மரங்கள் உருவாவதற்குக் காரணமாக அமைகின்றதோ அதுபோலவே மாயையும் இந்தப் பெரும் அண்டத்தின் உற்பத்திக்குக் காரணமாக அதைகின்றது எனவிளக்குகிறது சைவசித்தாந்தம்.

மாயையும், தூய மாயை (சுத்தமாயை), தூய்மையில் மாயை (அசுத்தமாயை), பகுதிமாயை (பிரகிருதிமாயை) என மூன்று வகையாக உள்ளதாகக் கூறப்படுகின்றது.

பசிஎன்றும் வலிஎன்றும் அறியாதவர்
பலர் படும்பாட்டைநாள் தோறும் உணராதவர்
எதிர்காலக் கனவோடுவாழாதவர்
அவர் இருந்தாலும் சுகமாகவாழாதவர்
அவர் இருந்தாலும் சுகமாகவாழாதவர்

மதுவாலேமகிழ்வாக இருப்பாரவர்
பலர் புகையாலேஉளம்வாழநினைப்பாரவர்
சிலகாலம் மகிழ்வாக இருந்தாலுமே
நெடுங்காலம் துயரோடுவாழ்வாரவர்
வாழ்வில் நெடுங்காலம் துயரோடுவாழ்வாராவர்.

பொன்னானநேரத்தைமண்ணாக்கியோர்
பலர் வாழ்ந்தாலும் பிணமாகவாழ்வாரவர்
கண்போலநேரத்தைமதிப்பாரவர்
சிலகாலம் வாழ்நதாலும் உரமானவர்
அவர் சிலகாலம் வாழ்நதாலும் உரமானவர்.

அரக்கர் குலமேவேரறுந்து
அமைதிநிலைக்கவேண்டுமெனில்
அமைதிவளியைத் தேர்ந்தெடுப்போம்
அனைவரும் சுகமாயவாழ்ந்திடவே

ஆசை

ஆசையின் தன்மையால் அமைதியும் அவதியும். ஆசையுடனே அனைவரும் வாழுவர் ஆசையை அடையவே அனேகர் எண்ணுவர் காசைக் காப்பாற்ற கடவுளை நாடுவர் வேசம்பல தரித்து வெற்றுடலைப் போற்றுவர் மோசம் போகவே மூர்கமாய்ச் சிந்திப்பர் பாசப்பிடிப்பாலே பாடாப்பாடு பட்டிடுவர் மாசை உடல் சுமக்க மோசமாய் உயிர் வாழ்வர். நாசவேலைகள் செய்து நரகத்தை தம் வாழ்வில் காணுவர் பாசம் பற்றற்றோ பரமனைதம் வாழ்வில் காணுவர்.

ஆசையைஅடக்கிடஎல்லோற்கும் இயலாது
ஆசைப்பட்டதுஎல்லாமேகிடையாது
காசால் கடவுறைஅறியவேமுடியாது
கடவுளைஅறிந்தோற்குகவலையேகிடையாது
பேச்சைக் குறைகாகாமல் பெரும்பளிவிலகாது
மூச்சைஅறியாதுமுக்தியேகிடையாது
வாழ்க்கைக்கடலில் வருந்தாதேர் கிடையாது
வருத்தங்கள் ஒருபோதும் நிலைத்திடமுடியாது
திருத்தங்கள் இல்லாமல் திசைகாணமுடியாது
திசைகாணமுடியாமல் நிலையாமைவிளங்காது
நிலையாமைவிளங்காமல் நின்மதிகிடையாது
நின்மதி இல்லாதவாழ்க்கையேவிளங்காது
விளங்காதவாழ்க்கைக்குவிடிவொன்றும் கிடையாது
விடிவொன்று இல்லாமல் இருள்நீக்கமுடியாது
இருள்நீக்கமுடிந்தோற்குமறைபொருள் தெளிவாகும்
மறைபொருள் தெளிவானால் மனம் இறைவசமாகும்
மனம் இறைவசமானால் மடமைகள் தெளிவாகும்
மடமைகள் தெளிவானால் உட்பொருள் தெளிவாகும்
உட்பொருள் தெளிவானால் உயிர் இறைஎன்றாகும்
உயிர் இறைஎன்றாகால் உணர்வுகள் பொய் ஆகும்
உணர்வுகள் பொய் ஆனால் உண்மைதெளிவாகும்
உண்மைதெளிவானால் உட்பொருள் வளிகாட்டும்

உட்பொருள் வளிகாட்டஉயிரதுகரைசேரும்
உயிரதுகரைசேர்ந்தால் பிறவிகள் கிடையாது
பிறவிகள் கிடையாதபெருநிலைஅடைந்தோரின்
வரலாறுபோதும் நமக்குவளிகாட்ட
நாம் செல்லும் பாதைநல்லதாய் அமைந்திட்டால்
நம்பின்னேவருவோற்குநாம் நல்லவளிகாட்டி
நல்லவளிநாம் சென்றுநல்வினைகள் செய்துவிடில்
நம்வாள்வில் ஆசைவரும் அவன் அடிசேர்வதற்கு

அன்பு

அன்பே உள் உறையும் இறைவன் அண்றி அன்பில்லை என்றால் அவன் அசையும் அரக்கன் அன்றோ. அரக்கனும் அவனைத் தெரிந்திட வேண்டின் அன்பெனும் ஆயுதம் ஏந்திட வேண்டுமே. அன்பெனும் ஆயுதம் அனைத்திலும் உயர்ந்தது அரக்கனைக்கூட அளித்திடச் சிறந்தது. அன்பினைத் தொலைத்தவர் அவதியில் வாழ்கிறார் அவர் அமைதியைத் தொலைத்தது அரக்கனோடிணைகிறார்.

அன்பின் தன்மையால் மனிதனும் அரக்கனும் மனிதரூபத்தில் அரக்கனும் வாழ்கிறான் மதம் பிடித்து மனிதனை வாட்டுவான். அவன் மண்ணில் உயிர்களின் எதிரியாய் மாறுவான். வாழ்வில் வருந்தியே அவலம் பல காணுவான்.

நோய்கள் வருமென்ற அச்சம் நீங்கிட மனம் ஓயும் வளியதைநாடிச் சென்றிட பேயாய் அலையும் மனமது ஓய்ந்திட மாயை இருள்நீக்கும் மருந்தினை அறிந்திட நம் உயிரை இறைவனாய் நித்தமும் காணுவோம்.

உடம்பது கோவிலாம் உயிரது தெய்வமாம் அறிந்தவர் ஞானியர் அறியாதோர் மானிடர் மானிடர் வாழ்விலே மாயை இருள் வாட்டுதே ஞானியர் வாழ்வது சோதியாய்த் தோன்றுதே

ஈசனை அறிந்திட இவ்வுடல் போதாது உடம்பதன் துணையோடு உயிரினை முதலாக்கி மறைபொருள் ஈசனை உணர்ந்திடும் முயற்சியில் மகான்கள் வாழுவர் மற்றவர் மாயையில் மூழ்குவர்

மாயையில் வாழ்பவர் பொய்யையெல்லாம் மெய் என்பார். மெய்யை உணராது மெய்வருந்தி வாழ்ந்திடுவார். பொய்யை நம்புவோர் பொய்யரோடு இணைந்திடுவர். மெய்ஞானிவந்தாலும் பொய்யாகப் பார்த்திடுவர்.

காலத்தை நம்பாது போலிக்கோலத்தை நம்பிடுவர். காலன் வரவை மறந்துகாலத்தைக் கணக்கிடுவர். போலிவாழ்வில் நின்று மாயைவழி நடந்திடுவர். மாயை இருள் வளிமறிக்க மெய்ஞானத்தை மறந்திடுவர். கோபம் கொடும்பசியில் மொத்தமாய் மூழ்கிடுவர் காமஅக்கினியில் பெரும் காலத்தைக் களித்திடுவர் மோசம் உலகம் என்று மோசமாய் என்னிடுவர் பாவம் பிணிபோகுமென்று பலர் பாவத்தைச் செய்திடுவர்

ஈவு இரக்கமின்றி இன்றுவரைக் கொலை செய்வோர் பாவம் பாராது பல உயிரைவதை செய்தோர் பாவமூட்டையோடு சாபம் பெறறிரிடுவர் சலிப்புடனே வாழ்ந்திடுவர்

மண்ணுடல் மண்ணாகும் நேரம் வருமுன்னே எம்முடல் இறையுடன் கலந்திடும் வினைகளைக் குறைக்கும் முயற்சியில் எம்முள் இறைவனைத் தினமும் தேடுவோம்.

64. திருமந்திரம், சிலப்பதிகாரம் வழி அரசாட்சி



ப.கல்விராயன், M.A., M.Phil.,
முனைவர் பட்ட ஆய்வாளர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 600 113.
கைப்பேசி : 98844 45400

முன்னுரை

உலகில் உள்ள மொழிகளில் தமிழ் மிகத்தொன்மையான மொழியாகும். தமிழ்மொழியில் உள்ள இலக்கியங்கள் வாழ்வியலையும், மெய்யியலையும் தெளிவாக எடுத்தியம்புகின்றன. திருமந்திரமும், சிலப்பதிகாரமும் மக்களின் வாழ்வியலையும் மன்னன் அரசியலையும் பற்றி பேசுகின்றன. திருமந்திரம் என்பது அணு முதல் பேரண்டம் வரை பேசுகின்றது. சிலப்பதிகாரம் செங்கோன்மை வளைவதால் ஏற்பட்ட விளைவையும் அறத்தால் அரசன் தண்டிக்கப்படுவதையும் காட்டுகின்றது. திருமந்திரம் அரசன் என்பவன் மக்களை ஆளும் மன்னன் மட்டும் அல்லன், பேரண்டத்தை எல்லாம் ஆளும் சிவபெருமானே என்கிறது. அவ்வரசனே நடுநிலையாளனாக நின்று உலகத்தை இயக்கி அரசாட்சி செய்கிறான். அவனே உத்தம அரசனாவான். அவ்வரசனின் அரசாட்சி மற்றும் அவன் நடுவுநிலையும் தன்மையை இக்கட்டுரை ஆய்கிறது.

அரசன்

அரசன் என்பவன் மக்களை ஆளும் மன்னன் மட்டுமல்லன். இவ்வுலகையே ஆளும் சிவபெருமானும் ஆவான். மண்ணாளும் மன்னன் மாண்டுபோவான். உலகாளும் ஈசன் ஆதியும் அந்தமும் இல்லாத அருட்பெரும் சோதியாக விளங்குகின்றார். இதனை,

முன்பு பிறப்பும் இறப்பும் அறியாதார்
அன்பில் இறைவனை யாம்அறி வோம் என்பர்
இன்பப் பிறப்பும் இறப்பும் இலான்நந்தி
அன்பி லவனை அறியகி லாரே (287)

என்று இறைவன் பிறப்பு, இறப்புப் பற்றி என்றும் நிலைத்தவனாக அன்பில் உள்ளான் என்பதனைச் சுட்டுகிறது. மண்ணை ஆளும் மன்னன் மக்களால் மதிக்கப்படுகிறான். மக்களுக்கு காவலாயிருக்கிறான். இதனை,

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறை என்று வைக்கப்படும் (குறள் 388)

என்று மக்களைக் காக்கும் மன்னன் இறைவனாக மதிக்கப்படுவான் என்பதை திருக்குறள் விளக்குகிறது. மண்ணாலும் மன்னன் மக்களைக் காக்கின்றான். இறைவன் மாயப் பிறப்பறுத்து வீடுபேற்றைத் தருகிறான். இதனை,

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார் (குறள் 10)

என்று இறைவனை அடைந்தவர் பிறவாநிலை அடைவதைச் சுட்டுகிறது. இதன்மூலம் மண்ணாலும் அரசனானாலும் விண்ணாலும் அரசனை அடையாமல் வாழமுடியாது என்பதனை அறியலாம்.

ஒழுக்கநெறி

ஒரு மனிதன் உயர்வடைய வேண்டும் என்றால் அவன் ஒழுக்கம் உடையவனாக இருத்தல் வேண்டும். ஒழுக்கமான நல்லப் பண்புகளே ஒருவனை நல்ல மனிதனாக்கும். அதனால் ஒழுக்கத்தை உயிரைவிட மேலாகப் போற்றிக் காக்க வேண்டும் என்பதனை,

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும் (குறள் 131)

என்று திருவள்ளுவர் சுட்டுகிறார். ஒழுக்கம் என்பது நன்னடத்தை எனப்படுகிறது. நன்னடத்தை என்பது இறைவனை அடையும் முயற்சியை மேற்கொள்வதே ஆகும். ஏனென்றால் நன்னடத்தை என்பது பிறவா நிலையைத் தரவேண்டும். நன்னடத்தை போற்றாவிட்டால் மீண்டும் பிறக்கும்நிலை ஏற்படும். இதன் மூலம் நன்னடத்தையே இறைவனைக் காண முயல்வதே என்று அறியலாம். திருமூலர் அந்தணர் ஒழுக்கத்தை,

அந்தண ராவோர் அறுதொழில் பூண்டுளோர்
செந்தழல் ஓம்பிமுப் போதும் நியமஞ்செய்
தந்தவ நற்கரு மத்து நின் றாங்கிட்டுச்
சந்தியும் ஓதிச் சடங்கறுப் போர்களே (224)

என்று அந்தணர் மூன்று காலும் (காலை, மாலை, இரவு) இறைவனை அடைய காற்றை தம் உள்ளே நிறுத்தி பிறவிப் பெருங்கடலை நீந்துவர். இதுவே அவர்களின் ஒழுக்கமாக விளங்குவதனை அறியலாம். இதனால் நல்லொழுக்கம் என்பது இறைவனை அடையும் முயற்சியே என்பதனை அறியலாம். இதனையே ஔவையார் தன் ஆத்திசூடியில் 'ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்' என்று பாடுகிறார். இதன்மூலம் ஒழுக்கம் என்பது காற்றை உள் செலுத்துதலேயாகும். ஊழ் + அகம் என்பதே 'ஒழுக்கம்' என்பதை உணர்ந்துகொள்ள முடிகிறது. இதனை,

பெருநெறி யான பிரணவம் ஓர்ந்து
குருநெறி யாலுரை கூடிநால் வேதத்
திருநெறி யான கிரியை யிருந்து
சொருபம தானோர் துகளில் பார்ப் பாரே (227)

என்றப் பாடல் வரியில் பிரணவம் என்னும் காற்றாலே கடவுளைக் காண்பர் என்பதனை அறியலாம். ஒழுக்கம் என்பது காற்றை நெறிபடுத்தல், காற்று பிடிக்கும் கணக்கறிந்தால் சித்துக்கள் கைவரும். அன்பு நெஞ்சில் நிறைந்திடும். உடம்பு ஒளிபெரும் என்பதனையும் திருமூலரே காட்டுகின்றார். இதனால் ஒழுக்கம் என்பது காற்று அகத்தே நின்றால் தான் கைவசப்படும் என்பதனை உணரலாம்.

அரசாட்சி

மக்கள் எல்லாம் மன்னனையே நம்பி வாழ்வர். அதனால் அரசாட்சி என்பது நடுவுநிலை உடையதாக ஒரு சார்பு இல்லாது நடத்தல் வேண்டும். இல்லையேல் இறைவனாகக் கருதப்படும் மன்னனே காலனாக மாறி காணப்படுவான் என்பதனை,

கல்லா அரசனுங் காலனும் நேரொப்பர்
கல்லா அரசனிற் காலன் மிக நல்லன்
கல்லா அரசன் அறம்ஓரான் கொல்லென்பான்
நல்லாரைக் காலன் நணுகநில் லானே (238)

என்று அறிவில்லாத அரசன் எமனைக் காட்டிலும் கொடியவன். காலன் மிக நல்லவன். அறம் அறியாத அரசன் கொல்லென்பான் கொடியவன் என்பதை உணர்த்துகின்றது.

சிலப்பதிகாரத்தில் உள்ள பாண்டிய மன்னன் அறம் அறியாதவ னாகவே உள்ளான். இதனால் கோவலன் தன் உயிரையே இழக்கிறான். இதனால் சினம் கொண்ட கண்ணகி அரசவைக்குச் சென்று,

வாயி லோயே வாயி லோயே!
அறிவுஅறை போகிய பொறிஅறு நெஞ்சத்து
இறைமுறை பிழைத்தோன் வாயி லோயே!

சிலம்பு. மதுரைக்காண்டம் : 24-26

என்று அரசன் நீதியைத் தவறிவிட்டான். அறிவு துளியும் இல்லாத அரசன் என்று அறம் உரைக்கிறாள்.

ஒரு அரசன் நீதி தவறுதல் கூடாது அவ்வாறு தவறின் அவன் அறம் தவறியவன் ஆவான். பாண்டியன் அத்தவறையே செய்தான். ஆராய்ந்து பார்க்காமல் நீதி வழங்கினான். இதனால் கோபம் கொண்ட கண்ணகி பாண்டியனை,

தேரா மன்னா! செப்புவது உடையேன்

சிலம்பு. மதுரைக்காண்டம்:49

என்று கூறுகின்றாள். மன்னனும் தன் தவறினை உணர்ந்து 'செங்கோல் வளைந்தது' என்று துன்புற்றதனை,

பொன்செய் கொல்லன் தன்சொல் கேட்ட
யானோ அரசன்? யானே கள்வன்!
மன்பதை காக்கும் தென்புலம் காவல்

என்முதல் பிழைத்தது; கெடுகஎன் ஆயுள்! என
மன்னவன் மயங்கிவீழ்ந் தனனே;

சிலம்பு. மதுரைக்காண்டம்:73-77

என்று கொல்லனின் சொல்கேட்டு ஆராய்ந்து அறியாதது தன் தவறு என்று உயிர் விடுகிறான். இவ்வாறு உலக வாழ்வில் மட்டும் அல்லா ஆன்மிக வாழ்க்கைக்கும் அரசாட்சி மிக முக்கியமாகும். இல்லையேல் இறைவனை அடைய முடியாது. இதனை,

கால்கொண்டு கட்டிக் கனல்கொண்டு மேலேற்றிய
பால்கொண்டு சோமன் முகம்பற்றி உண்ணாதோர்
மால்கொண்டு தேறலை உண்ணும் மருளரை
மேல்கொண்டு தண்டஞ்செய் வேந்தன் கடனே திரு 246

என்று காற்றால் குண்டலினி சக்தியை மேலே எழுப்பி, இறைவன் உரையும் அண்ணத்தைக் கண்டு அமுதத்தைப் பருகி இறைவனைக் காண்பர். அவர்களைக் காப்பது வேந்தன் கடமை என்பதை அறியலாம்.

நடுவுநிலைமை

அரசன் என்பவன் தன் அரசாட்சியை நடுவுநிலைமையுடன் நடத்தல் வேண்டும். இல்லையேல் அறம் பிழைத்தவனாவான். அறம் என்பது நடுவுநிலைமையே. நடுவுநிலை தவறின் உடலைவிட்டு உயிர் போதல் உறுதி. இதனை சிலப்பதிகாரத்தில் பாண்டிய மன்னனின் உயிருக்கு அறமே கூற்றாக இருந்ததன்மூலம் அறியலாம். இது போன்றே சிவனை அடைய வேண்டினும் நடுவுநிலைமை வேண்டும். நடுவுநிலையளனாகவே சிவபெருமான் விளங்குகின்றான் என்பதனை,

நடுவுநின் றார்க்கன்றி ஞானமும் இல்லை
நடுவுநின் றார்க்கு நரகம் இல்லை
நடுவுநின் றார்நல்ல தேவரு மாவர்
நடுவுநின் றார்வழி யானும்நின் றேனே திரும:320

என்று நடுவுநின்றார்க்கு நரகம் இல்லை, நடுவுநின்றார் தேவர் ஆவர். நானும் அவ்வழியே நின்றேன் என்கிறார் திருமூலர். சரி நடுவுநின்றல் என்பது என்ன என்று அறிய முற்படின் நடுவுநிற்றல் என்பது 'சுழி' முனை நாடியில் சுவாசத்தை நடத்தல் ஆகும். இதனையே நடுவு நிலைத்தல் என்கிறார்.

பிறவிக் கடலைக் கடக்க வேண்டும் என்றால் நம் மூச்சு காற்றைச் சமஅளவு இடது, வலது நாசியில் ஓடும்படிச் செய்யவேண்டும். அவ்வாறு கடைபிடித்து திருமூலர் கூறும் கால் கணக்கை ஒழுகினால்தான் இறைவனை அடையமுடியும் என்பதே ஆகும். திருவள்ளுவரும் தம் குறளில் இக்கருத்தினை வலியுறுத்துகின்றார்.

ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும் குறள்: 214

என்று தன் சுவாசத்தை இடகலை, பிங்கலை நாடியில் நடுவுநிலை மையுடன் நடத்துபவன் உயிர் வாழ்வான். அதை அறியான் இறப்பை எய்துவான் என்றக் கருத்தை வள்ளுவர் கூறுகின்றார். இவ்வாறாக உலக வாழ்வாயினும் விண்ணுலக வாழ்வாயினும் நடுவுநிலைமை தவறின் மாண்டு போவார். இறைவனை அடையமாட்டார். இதனையே திருமந்திரம் வலிந்து கூறுவதனை அறியலாம்.

சிவனை அடைதல்

அன்பே சிவம் ஆகும். அன்புடையவர் சிவனை காண்பர். சிவன் உமையொருபாகனாக காட்சித் தருகிறான். வடகலை, பிங்கலை நாடியில் சுவாசம் ஓடுகையில் ஏற்படும் சங்கமமேயாகும். இதனை,

தோன்றிய எல்லாந் துடைப்பவன் அவனன்றி
ஏன்றுநின் றாரென்றும் ஈசன் இணையடி
மூன்றுநின் றார்முதல் வன்திரு நாமத்தை
நான்றுநின் றார்நடு வாகிநின்றாரே (323)

என்று திருமூலர் சுழிமுனை நாடியில் இறைவன் நடுவன் என்றதனைச் சுட்டிக்காட்டுகிறார். இதனால் காற்றே கடவுளை அறியும் கல்வியாகவும், கருவியாகவும் விளங்குவதனை அறியமுடிகிறது. இறைவனைக் காணமுடியாது, உணரத்தான் முடியும் என்பர். அவ்வாறே காற்றையும் காணமுடியாது. உணரத்தான் முடியும் என்பதும் உண்மையே. இதனால் காற்றையே கடவுளாக உள்ளதனை வடகரை சித்தரான சிவானந்தர் குறிப்பிடுகின்றார். இதனாலே திருமந்திரம் காற்றைப் பிடிக்கும் கணக்கையே சாகாகல்வியாகக் கூறுகின்றது என்பதையும் அறியலாம்.

முடிவுரை

மனித அறங்களில் நடுவுநிலைமையே பெரிய அறமாகப் போற்றப்படுகிறது. அவ்வறம் தவறினால் அறமே கூற்றாக அமைகிறது. நடுவுநிலைமை என்பது இறைவனை அறியும் வழியாக உள்ளதால் அதைத் தவறினால் அறம் கூற்றாவது சரியே என்பதை மேற்கண்ட ஆய்வின் வழியாகக் காணமுடிகிறது. இறவா கல்வியே கல்வி என்றும், அதுவே உண்மையான அறம் என்றும் திருமந்திரம் சுட்டி இறைவனை அடைய வழி காட்டுவதை இதனால் தெளியலாம்.

65. திருமந்திரம் கூறும் சாகாகல்வி

சி.கங்காதரன், M.A., M.Phil., B.Ed., DNCC., CLIS.,
முனைவர் பட்ட ஆய்வாளர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 600 113.
நட்புக்கு : 99412 37611

முன்னுரை

கல்வி என்பது ஒருவன் தன் வாழ்வின்கண் செப்பமாகத் தெளிந்த அறிவுடன் நடந்து கொள்வதற்கு உதவும், தகுதியுடைய நூல்களைக் கற்றலைக் குறிப்பதாகும். மாந்தன் பெறவேண்டிய 16 வகைச் செல்வங்களுள் ஒன்று கல்விச் செல்வமாகும். 'கல்வி' என்ற சொல் 'கல்' என்பதன் அடியாகப் பிறந்தது. 'கல்' என்றால் 'கல்வி எடு' அல்லது 'தோண்டு' எனப் பொருள்படுவதாகும். ஒருவனுக்குத் தன்னம்பிக்கை தந்து சொந்தக் கால்களில் நிற்கும்படி எது செய்கிறதோ அதுதான் உண்மையான கல்வியாகும்.

கல்வி என்பது தகவல்களை மூளையில் ஏற்றிக்கொண்டு அசை போடாமல் அங்கேயே அடங்கிக்கிடப்பது அல்ல. நல்ல மாந்தர்களை உருவாக்குகிற, நல்வாழ்க்கை தரும் சிந்தனைகளின் சங்கமமாகக் கல்வி இருக்கவேண்டும். ஐந்து நல்ல சிந்தனைகளை ஏற்றுக்கொண்டு, அவற்றையே உங்கள் வாழ்க்கையாக ஆக்கிக் கொண்டால் ஒரு நூலகத்தையேக் கரைத்துக் குடித்ததைவிட அதுவே மிகப்பெரிய கல்வியாகும். கல்வியாவது, தத்தம் தொழிலுக்கு ஏற்ற அறிவுகளைப் பெருக்கிக்கொள்ளலும், உண்மை உணர்வதற்கான விளக்கங்களைக் கேட்டுக் கற்று அறிதலுமாகும்.

கல்வி கற்கும் முறை

கல்வி என்பது ஒரு மாந்தனின் கண்ணாக விளங்குவதாகும். ஆதலால் அதை கருத்தூன்றி கற்றல் வேண்டும். இதனை,

> கல்வி கரையில; கற்பவர் நால்சில;
> மெல்ல நினைக்கின் பிணிபல; தெள்ளிதின்
> ஆராய்ந் தமையுடைய கற்பவே, நீர்ஒழிய
> பாலுன் குருகிற் றெரிந்து — நாலடியார் : 135

என்று கல்வி நிலைத்து நின்று கற்றவருக்கு நன்மையைத் தரும். அதனால் பாலில் கலந்த நீரினை நீக்கி பருகும் அன்னப்பறவைபோல உண்மையான பொருளை உணர்ந்து கற்றல் வேண்டும் என்று நாலடியார் தெரிவிக்கின்றது.

நல்வாழ்விற்கு கல்வி

கல்வி ஒரு மாந்தனை நல்வழிப்படுத்துகின்றது. கல்வி அறிவு இல்லாமல் மாந்தனால் நல்வாழ்வினை அமைத்துக்கொள்ள முடியாது.

கல்வியே உலக நிகழ்வுகள் அனைத்தையும் தன்னுள் அடக்கி தன்னை கற்போருக்குப் பயனைத் தருகிறது. திருமூலர் காட்டும் கல்வி என்பது இவ்வுலகிற்கான கல்வி மட்டுமல்ல அது இறை உலகிற்கான கல்வியாகவும் திகழ்கிறது. இதனை,

குறிப்பறிந் தேனுடல் உயிரது கூடிச்
சேறிப்பறிந் தேன்மிகு தேவர் பிரானை
மறிப்பறி யாதுவந் துள்ளம் புகுந்தான்
கறிப்பறி யாமிகுங் கல்விகற் றேனே (290)

என்று இறைவனை தன்னுள்ளே கண்டதனையும் அவரைக் காணும் கல்வியை தான் கற்றேனே என்று பாடுகிறார். இதன்மூலம் இறைவனை அடைய கல்வியே துணை நிற்பதனை அறியலாம். திருவள்ளுவரும் கல்வி செல்வமே ஒருவருக்கு கேடு இல்லாத செல்வம் என்பதனை,

கேடில் விழுச்செல்வம் கல்வி; ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை (குறள் 400)

என்ற குறள் சுட்டுகிறது. இதனால் கல்வியின் சிறப்பினை அறியலாம். கல்லாதவறாக இருந்தால் அவர் நல்வாழ்வினை அடையமுடியாது. ஏனென்றால், கல்லாதவன் விலங்கோடு ஒப்பவே நடந்துகொள்ளும் அறிவையே பெற்றிருப்பவன் ஆகிறான் என்பதனை,

விலங்கொடு மக்கள் அனையர், இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர் (குறள் 410)

இக்குறள் கற்றவரோடு ஒப்பிட்டால் கல்லாதவர் விலங்கு போன்றவரே என்கிறது. ஏன் கல்விக்கு இவ்வளவு வலிமை என்று எண்ணினால் கல்வியே அறிவை விளங்கச்செய்வது. கல்வியே உண்மைப் பொருளை விளங்கவைப்பதாகும். அதனாலே கல்வி கற்றவனே தன் வாழ்வினை பொருளறிந்து நல்வாழ்க்கையை அமைத்துக்கொள்ள இயலும் என்பதை அறியலாம்.

மயக்கம் தெளிவிக்கும் கல்வி

மாந்த வாழ்வு என்பது அறிவின் துணைகொண்டே செழுமை அடைகிறது. சில நேரங்களில் அறிவை மயக்கும் பொய்யும், மாயையும் தோன்றுகிறது. என்றாலும் உண்மைப் பொருளையும், உண்மை கல்வியையும் அறிந்தவன் இருளை விலக்கி ஒளியைக் காண்கிறான். அவ்வாறு அவன் காண அக்கல்வியே பெருந்துணை புரிகிறது. இவ்வாறு இருளை அறுத்து மயக்கத்தை நீக்கும் சாகாக்கல்வியைத் திருமூலர்,

நூலொன்று பற்றி நுனியேற மாட்டாதார்
பாலொன்று பற்றினாற் பண்பின் பயன்கெடுங்
கோலொன்று பற்றினாற் கூடா பறவைகள்
மாலொன்று பற்றி மயங்குகின் றார்களே (295)

என்ற பாடலின் மூலம் காற்றைப் பிடித்து கபாலத்தில் ஏற்றி அறிவை பெருவார்க்கு, இருள் அகன்று, மயக்கம் தெளிந்து உண்மையை அறிவர். கல்வி என்பது ஐயத்தை நீக்கி உண்மை பொருளைத் தெளிவதாக இருப்பதே ஆகும். அதனைத் திருவள்ளுவர்,

கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின் (குறள் 2)

என்று ஐயத்தை நீக்கிச் சிவனின் பாதங்களை அடைவதே கல்வி என்று குறிப்பிடுவதைக் காணலாம்.

இறை கல்வி

ஒரு மாந்தன் பிறப்பது, இறப்பது என்பது துன்பத்தைத் தருவதாகும். பிறப்பது என்பது இறவாத நிலையை அடைவதற்கே என்ற உண்மைப் பொருளை அறிவதே இறை கல்வியாகும். இதனையே.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார் (குறள் 10)

என்ற குறள் பிறப்பு எனும் கடலை நீந்தக்கூடிய ஆற்றல் இறை கல்வியால் மட்டுமே அடையமுடியும் என்பதனை உணரலாம். திருமூலரும் இறை கல்வியை மாந்தர்கள் அறிந்து இறைவன் பாதங்களை அடையவேண்டும் என்று பேரின்ப வீட்டின் திறவுகோலான இறை கல்வியை திருமந்திரத்திலே கூறியுள்ளார். இதனை,

காதல் வழிசெய்த கண்ணுதல் அண்ணலைக்
காதல் வழிசெய்து கண்ணுற நோக்கிடிற்
காதல் வழிசெய்து கங்கை வழிதருங்
காதல் வழிசெய்து காக்கலு மாமே (712)

என்று இப்பாடலின் மூலம் இரு புருவங்களுக்கு மத்தியிலே கண்ணால் உற்றுபார்த்து இறைவனை காணவேண்டும். அப்பொழுதே இறைவனை அடையமுடியும் என்பதனைக் கூறி காற்றே கடவுளை அறியும் கல்வி எனச் சுட்டுவதனையும் காணலாம். உலகியல் கல்வியைக் கற்பதனால் ஒரு பயனும் இல்லை என்பதனை,

அலகுசால் கற்பின், அறிவு நூல் கல்லாது,
உலகுநூல் ஓதுவது எல்லாம் - கலகல
கூஉந் துணையல்லால், கொண்டு, தடுமாற்றம்
போஒந் துணையறிவார் இல் நாலடியார்: 140

என்று மெய்யியல் கல்வியே கற்கவேண்டும். உலகியல் கல்வியானது கலகல என்னும் வீணான கல்வியாகவே இருக்கும். அக்கல்வி பிறவிக் கடலை நீந்துவதற்கு துணை செய்யாது என்றும், மெய்ஞான கல்வியே இறவாநிலையை அடைய துணைபுரியும் கல்வியாகும். அதனையே கற்கவேண்டும் என்பதனை நாலடியாரின் பாடல் வழியாக வலியுறுத்துவதனை அறியலாம்.

பேரின்பம் தரும் கல்வி

மாந்தர் வாழ்வு இன்ப துன்பங்களுக்கு உட்பட்டது. துன்பம் என்பது இருவகையாக இல்லை. ஆனால் இன்பம் என்பது இரு வகையாகப் பகுத்துக் காணப்படுகிறது. அதனை சிற்றின்பம், பேரின்பம் என்று வரையறைச் செய்கிறது. இவ்வுலக வாழ்வு என்பது சிற்றின்பமாகக் கூறப்படுகிறது. இறைநிலை வாழ்வு என்பது பேரின்பமாகக் கூறப்படுகிறது. இப்பேரின்பத்தை அடைவதே உயிர்களின் கடைசி

இலக்கு என்றும், அதை அடையவே உயிர்கள் முயலவேண்டும் என்றும் தமிழ்மொழியானது கூறுகின்றது. திருமந்திரம் இறைவனை அடையக்கூடிய அனைத்து வழிமுறைகளையும் இறைவனின் பேரன்பையும் எடுத்துக்கூறுகிறது. மாந்தனின் உருவாக்கம் முதல் அவன் வீடு பேறு அடையும் நிலையினையும் மிகத் தெளிவாக 'யான் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம்' என்று திருமூலர் பேரின்பத்தை அடைய திருமந்திரத்தைச் செய்துள்ளார்.

மனதில் அன்பு கொண்டவருக்கே இறைவன் காட்சி தருவான். அன்பினுள்ளே இறைவன் உறைகின்றான். உயிர்கள் இடத்தில் அன்பு செய்பவரே இறைவனைக் காணும் பேரினையும், பேரின்பத்தையும் அடைவார்கள் என்பதைக் குறிப்பிடுகிறார். அன்பே இறைவனாக விளங்குவதனை அவ்வன்பினைப் பெறுவதற்கு மனம் செம்மை கொண்டதாக விளங்கவேண்டும். மனச்செம்மை என்பது ஆணவம், கன்மம், மாயை நீங்கப் பெற்றால்தான் உருவாகும். அதற்குக் காற்றே துணை செய்கிறது. இதனை,

புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை
நெறிப்பட வுள்ளே நின்மல மாக்கில்
உறுப்புச் சிவக்கும் உரோமங் கறுக்கும்
புறப்பட்டுப் போகான் புரிசடை யோனே (575)

என்று நம் உடலை விட்டு உயிர் பிரிவது சுவாசம் நின்று போவதாலே அதனால் சுவாசத்தை நெறிப்படுத்தி தன் உடலுள்ளே நிலைபெற செய்தால் உயிர்நிலைத்து நின்று இறவாத நிலை அடைந்து பேரின்பமான சிவத்தை அடையலாம். சிவன் புறப்பட்டுப் போகமாட்டான். பேரின்பம் என்பது பிறவாத நிலையே. அப்பேரின்பத்தை இறைகல்வியே அளிக்கும் என்பதனையும் மேற்குறிப்பிட்ட பாடல்கள் வழியாக அறியலாம்.

முடிவுரை

கல்வி என்பது ஒரு மாந்தன் தன் வாழ்வின்மூலம் வரலாற்றை அறியத் துணை செய்கிறது. கல்வி இல்லை என்றால் மாந்தன் பகுத்தறிவு கொண்டவனாக விளங்குவது கடினம். கல்வியே மாக்களையும், மக்களையும் வேறுபடுத்திக் காட்டுகிறது. கல்வியானது உலகியலுக்கு மட்டுமல்ல பேரின்ப பெருவாழ்விற்கும் ஏணியாக விளங்கி இறைவனை அடையச் செய்கிறது. அக்கல்வியே நம் முன்னோர்கள் நூல்களின் வழியாக 'உள்ளங்கை நெல்லிக்கனி' போல நமக்கு அளித்துள்ளனர். அதனையே தமிழ்நூல்கள் தாங்கிப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. அந்த வகையிலே திருமந்திரம் முதன்மை பெற்று விளங்கிறது. இருளை நீக்கிப் பிறவாநிலை பெற்றுச் சிவனை அடைய வழி காட்டுகிறது.

66. திருமந்திரத்தில் சக்கர வழிபாடு



ம.பா.சுந்தர், M.Sc., M.Phil., Ph.D
திருமந்திரமும் வாழ்வியலும்
பட்டய மாணவர்
முனைவர்பட்ட ஆய்வாளர்
பாரத் பல்கலைக்கழகம், சென்னை.

முன்னுரை

திருமந்திரத்தின் ஒன்பது பெரும்பிரிவுகள் ஒன்பது தந்திரங்கள் என்றும், தந்திரங்களில் உள்ள பாடல்கள் மந்திரம் என்றும் பெயர் பெற்றுள்ளன. திருமூலர், நான்காம் தந்திரத்தில் பல சக்கர அமைப்பு களைப் பற்றிக் கூறியிருக்கிறார். இச்சக்கரங்களைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

சக்கரம்

சக்கரம் என்பது கோடுகள் குறுக்கும் நெடுக்குமாக இட்டு எழுத்து களைக் கட்டங்களில் அடைத்து வழிபடுவதற்குரியது. ஐந்து எழுத்தால் அறநெறியைக் காத்தல் என்று பொருள். (உ.ம்.) நமசிவாய

சி	வா	ய	ந	ம
ம	சி	வா	ய	ந
ந	ம	சி	வா	ய
ய	ந	ம	சி	வா
வா	ய	ந	ம	சி

எனவே சிவன் உயிரைத் தாங்கும் நமசிவாய என்ற ஒளியாக உள்ளான் என்று கருத வேண்டும்.

ஐந்தின் பெருமையே அகிலட மாவதும்

என்ற பாடலில் பஞ்சாக்கர வடிவமான இறைவன் நமசிவாய சக்கரத்தின்வழி நம்மைக் காக்கின்றான் என்பதைக் குறிப்பிடுகின்றது. நமது உடலில் சக்கரங்கள் எனும் சக்தி மையங்கள் உள்ளன. நமது உடல் உறுப்புகள் அனைத்தும் இந்தச் சக்கரங்களாலேயே இயக்கப்படுகின்றன. நமது ஐம்புலன்களும்கூடச் சக்கரங்களின் ஆளுமையின் கீழ்தான் இயங்குகின்றன. ஒவ்வொரு புலனும் ஒவ்வொரு சக்கரத்தோடு இணைக்கப்பட்டுள்ளன.

வாசனை	(மூக்கு)	-	மூலாதாரம்
சுவை	(வாய்)	-	சுவாதிட்டானம்
பார்வை	(கண்)	-	மணிப்பூரகம்
ஸ்பரிசம்	(மெய்)	-	அனாகதம்
கேள்வி	(செவி)	-	விசுத்தி

எந்தச் சக்கரத்தில் பாதிப்பு உள்ளதோ, தடை உள்ளதோ அந்தச் சக்கரத்தோடு தொடர்புடைய புலன் தனது இயல்புநிலையில் இருந்து மாறுபட்டு அழிவுப்பாதைக்கு நம்மை இட்டுச் செல்லும். இனி, திருமந்திரத்திலுள்ள சக்கரங்களைப் பற்றிக் காண்போம்.

திருவம்பலச் சக்கரம்

திருவம்பலச் சக்கரம் என்றால் பெருவெளியில் ஆனந்தக் கூத்தாடும் சிவன் சத்தியோடு மந்திர வடிவாய் நின்று நிலவும் சக்கரம். திருவம்பலச் சக்கரம் என்பது கோடுகள் குறுக்கும் நெடுக்குமாக இட்டு எழுத்துகளைக் கட்டங்களில் அடைத்து வழிபடுவதற்குரியது. இச்சக்கரத்தை அடுத்து நான்கு சக்கரங்களைத் தொடர்ந்து அமைக்க வேண்டும். இச்சக்கரங்களின் வெளிவட்டத்தில் ஹர ஹர என்றும், அதனை அடுத்த உள்வட்டத்தில் ஹரி ஹரி என்னும், அதற்கும் அடுத்த உள்வட்டத்தில் ஹம்சம் என்ற அசபையையும் அமைத்தல் வேண்டும். நடுவில் உள்ள இருபத்தைந்து இரேகைகளின் முடிவில் சூலம் இடுதல் வேண்டும். சூலத்தின் நுனியில் சந்தியெழுத்தை எழுதுதல் வேண்டும். சூலத்தைச் சுற்றி வளைத்து ஓம் என்பதையும் சூலங்களுக்கு இடையில் திருவைந்தெழுத்தாகிய நமசிவாயத்தையும் எழுதுதல் வேண்டும். இவ்வெழுத்துகளே சிவன் தங்கும் இடமாகும். பஞ்சபூதங்களில் பஞ்சாட்சரம் உள்ளடங்கியது.

1.	பிருதிவி	-	நாற்கோணம்	- நிலம்
2.	அப்பு	-	பிறைவட்டம்	- நீர்
3.	தேயு	-	முக்கோணம்	- தீ
4.	வாயு	-	அறுகோணம்	- காற்று
5.	ஆகாயம்	-	வட்டம்	- வெளி

ஐந்தெழுத்தே பஞ்சபூதங்களாகவும் விளங்குகின்றது. பஞ்சபூதங்களுக்குரிய வரிவடிவம் அ, இ, உ, எ, ஒ என்பன. இவற்றிற்குரிய தூலவடிவம் இருபத்தைந்து கட்டங்களிலும் அடைக்கப்பட வேண்டும். பஞ்சபூதங்களுக்கும் உரிய தூலவடிவங்கள் இன்னின்ன என்பதும் (929) விளக்கப்படுகின்றது. இறுதியில் உள்ள வட்டத்தில் சிவசிவ என்ற மகா வாக்கியத்தை அடைத்ததும் திருவம்பலச் சக்கரம் முழுமை அடைகின்றது.

திருவம்பலச் சக்கரத்தில் இயந்திர வடிவில் எழுந்தருளும் சிவனைத் தாமரை, நீலோற்பவம், செங்கழுநீர், கருநெய்தல், பாக்குப்பூ, மகிழம்பூ,

புன்னை, மல்லிகைப்பூ, செண்பகம், பாதிரி, செவ்வந்தி முதலிய கோட்டுப்பூ, கொடிப்பூ, நிலப்பூ, நீர்ப்பூ ஆகியவற்றால் வழிபடுவர். இவற்றோடு புனுகு, கத்தூரி, சந்தனம், குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம், அகில் குழம்பு முதலிய நறுமணப் பொருட்களைப் பன்னீரில் நன்றாகக் குழைத்துச் சக்கரத்திற்கு இட்டு, அன்போடு அருச்சனை செய்து, அமுதம் நிவேதனம் செய்து விளக்கேற்றி வழிபடுவர்.

இன்புடனேவந் தெய்திடும் முத்தியே (1005)

என்பதனால் இம்மையில் இன்பம் அடைவதற்குரிய பொருட்செல் வங்கள் அனைத்தையும் பெறுவதோடு முத்தியடைவதற்கும் இவ்வழிபாடு வழிவகுக்கும் என்கின்றார்.

வயிரவச் சக்கரம்

அறுபத்து நான்கு சிவமூர்த்தங்களுள் 38ஆவது மூர்த்தம் வயிரவ மூர்த்தம். அந்தகாசுரனை அழிக்க இறைவன் வயிரவக் கோலம் கொண்டார். சட்டர் என்று குறிக்கப்படுபவர் வயிரவர். சக்கரத்தின் மந்திரமாக விளங்குவது பஞ்சாக்கரம் என்பதை,

அஞ்செ முத்தாலே அமர்ந்தனன் நந்தியும் (914)

என்ற மந்திரத்தால் அறியமுடிகின்றது. கோயில்களில் உள்ள, மூர்த்திகளின் சக்தி சக்கரங்களில் வடிவமைத்து எழுதப்பட்டு மூர்த்திக்கு அடியில் வைத்து மூர்த்தியை எழுப்புவர். இத்தகு வழிபாட்டு நிலையாகச் சக்கரம் அமைந்து அருள் கொடுப்பதாய் இருக்கிறது. சக்கரத்தின் வழியாக அம்மூர்த்தியின் மந்திரங்களைக் கூறி வழிபாடு செய்வது மரபாகும்.

பசுவின் பாலைக் கன்றின் வழியாகக் கறந்து கொள்வதுபோல, இறையருளைச் சக்கரங்களின் வழியாகப் பெறுவர் என்பதை,

நின்றது சக்கரம் நீளும் புவியெலாம் (928)

என்ற திருமந்திரப்பாடலால் அறியமுடிகின்றது. பதினைந்து திதிகளில் வழிபாட்டிற்குரியன அல்லாத சப்தமி, அட்டமி, தசமி, துவாதசி, சதுர்த்தசி ஆகியன நீங்க, ஏனைய வளர்பிறைமுதல் சட்டிவரை ஆறு ஆதாரங்களில் பொருந்திப் பின் ஒன்பதாம் திதியாகிய நவமியில் நெற்றிக்கு மேலும், பதினோராந் திதியாகி ஏகாதசியில் பிடரிப்பக்கமும், பதின்மூன்றாம் திதியாகிய பௌர்ணமியில் இடக்காதின் பக்கமுமாக உடலின் பத்து இடங்களில் வயிரவரை அறிந்து நாளும் அவர் உருவத்தை நினைத்துத் தியானம் செய்தல் வேண்டும்.

தியானத்தின் பயனாக வயிரவரைத் தியானிப்பவருடைய பகைவரின் ஆற்றல் குன்றும்; பகைவனைக் கருணை கட்டாது பந்தாடி அழிக்கலாம் என்கின்றது திருமந்திரம்.

ஏரொளிச் சக்கரம்

மூலதார அக்கினி எழுச்சியுற்றுமேல் நோக்கிச் சென்று வியாபகமாகித் தன்னுள் அனைத்தையும் கொண்ட ஒளிநிலை ஏரொளி. இவ்வொளி சிரசில் நாதமாக எழுந்து நிறையும்பொழுது, அதன் நடுவில் இறைவன் விளங்குவான். மூலாதார எழுத்துகளே நிலத்திலிருந்து ஆகாயம்வரை வளர்ந்து சிரசின்மேல் சக்கரமாய் அமையும். இதனை,

வன்னி யெழத்தவை மாபலம் உள்ளன (1232)

என்ற பாடல் தெளிவுபடுத்துகின்றது.

பிரணவம் விந்து நாதமாக, சக்கரமாக உடம்பில் அமையும். பிரணவத்தைச் சிந்தையில் ஒருமுகப்படுத்தி இருத்தினால் இறைவன் விளங்குவான். பிரணவச் சக்கரம் உயிர்களின் அஞ்ஞானத் தடையை நீக்கும். காமாதி அறுபகை நீங்கும்.

சாம்பவி மண்டலச் சக்கரம்

சாம்பவியாகிய சிவசக்தி, இலிங்கத் திருமேனியில் விளங்குவதாக அமைக்கும் சக்கரம் சாம்பவி சக்கரம். 20 வரைகள், நடுவில் இலிங்கம், நாற்கோணங்களில் நந்நான்கு இலிங்கம். நான்கு இடைவெளியில் நான்கு பூ. நாதமும் விடுபட்டு நாதாந்தம் செல்லும் என்பதைக் குறிக்கும் வகையில் சக்கரம் அமைந்து இருக்கும். இதை வழிபட்டால் எல்லா நலமும் ஆனந்த வடிவும் பெறலாம்.

சாம்பவி மண்டலச் சக்கரம் அமைக்கும் முறையைத் திருமந்திரம் இருபாடல்களில் (1300, 1301) விளக்குகின்றது. சிவாயநம என்னும் ஐந்தெழத்தினை மூலாதாரத்தில் இருந்து நடுநாடி வழியாகச் சிரசைக் கடந்து செல்லும்படி நமசிவாய என்று மாற்றினால் சாம்பவி மண்டலச் சக்கரவழிபாடு செய்வோர் ஒளிமண்டலத்தை அடைவார்கள். சக்திமயமான இவ்வொளியில் இரண்டறக் கலந்தவர்கள் நினைப்பவை எல்லாம் நடக்கும். சிவசக்தி ஒளியில் திளைக்கும் இவர்களுக்கு அனைத்து எல்லாப் புறச்செல்வங்களும் தாமே வந்தடையும்.

உயிருக்கு வினைபோகங்களை ஊட்டிய சக்தி ஆன்மாவின் பக்குவமுணர்ந்து சிவனை நோக்கத் தத்துவங்கள் விந்தில் அடங்க, ஆன்மா தன்னை உணர்ந்து தெளிந்த நிலையை விந்துசெயத்தால் அடைகின்றது. இந்நிலையில் உடலில் நாம் உதித்துப் பின் நாதாந்தத்தில் அடங்க, ஆன்மா இறைவனுடன் இரண்டறக் கலந்து முத்தியடையும். வீடுபேறாகிய பெரும்பயன் சாம்பவி மண்டலச் சக்கர வழிபாட்டினால் கிட்டுகின்றது.

புவனாபதி சக்கரம்

புவனை என்ற பெயருடைய சக்திக்குரிய சக்கரம் இது. புவனைக்கு உரிய சக்கரமும் எழுத்துகளும் வழிபாடும் இதில் கூறப் பட்டுள்ளன.

புவனேசுவரிக்குரிய 15 எழுத்துகள் புவனேசுவரிக்குரிய மந்திரம். இம்மந்திரம் சிவனுக்குரிய வடிவம். இச்சக்கரம் அறுகோணமாக அமைக்க வேண்டும். இவை பொன்மை, செம்மை, வெண்மை என்ற மூன்று நிறங்களை உடையது. ஒவ்வொரு நிறத்துள்ளும் ஐயைந்து எழுத்துகள் இடம்பெறுகின்றன. இவை முறையே வாக்பவ கூடம், காமராஜ கூடம், சக்தி கூடம் என்று மூன்று காண்டங்களாகப் பிரிக்கப் படுகின்றன.

புவனாபதிக்குரிய வழிபாட்டை புறவழிபாடு, அகவழியாடு என்று இருவகைப்படுத்தலாம். புவனாதிபதியின் உருவத்தை,

செய்ய திருமேனி செம்பட்டுடை தானுங் (1316)

என்ற திருமந்திரப் பாடல் அழகுபடுத்திக் கூறுகின்றது. புவனாதி பதியை வழிபடுவதால் இம்மை வாழ்வுக்குத் தேவையான எல்லாச் செல்வங்களும் கிடைக்கும். அத்துடன், இம்மை வாழ்வுக்குரிய வீடுபேறும் கிட்டும் என்பது திருமந்திரப் பாடலால் தெளிவாகின்றது.

நவாக்கரி சக்கரம்

நவ, அக்கரி - ஒன்பது அட்சரங்களைக் (எழுத்துகள்) கொண்ட சக்கரம். இது தேவியாகிய சக்தியின் மந்திரம். இதில் ஓர் எழுத்தே ஒன்பது எழுத்தாக மாறி அமையும். அப்படி மாறி 81 வகையாக விரிந்து செல்லும்.

நவாக்கரி சக்கர நானுரை செய்யின்
நவாக்கரி ஒன்று நவாக்கரி யாக
நவாக்கரி என்பத் தொருவகை யாக
நவாக்கரி யக்கிலீ சௌமுத லீறே (1319)

நவாக்கிரி கிலீம் முதல் சௌம் இறுதியாக ஒன்பது பீசங்களைக் கொண்டது. இச்சக்கரத்தை நினைத்தாலும், பூசித்தாலும் நன்மை பெருகும். இருவினைகளும் நீங்கிச் சோதிவடிவாகிய அம்மையப்பனைக் காணமுடியும். இதில் பராசக்தியைக் காயாம்பூ வண்ணம் உடையவளாக நினைத்து வழிபட வேண்டும். நவாக்கிரியை வழிபட்டால் பரமேசுவரனை அடையலாம்.

மனம் ஒன்றி ஆயிரக்கணக்கான முறை நவாக்கரி மந்திரத்தைச் செபித்தல் வேண்டும். இளம்வாலைப் பெண்ணாகச் சக்தி உள்ளத்தில் தோன்றும் அளவும் செபிக்க வேண்டும் என்பதை,

அர்ச்சனை ஆயிரம் ஆயிரம் சிந்தியே (1369)

என்று கூறுகின்றது. தொடர்ந்து தேவியை மனத்தால் வழிபட்டால் தாயும் தந்தையுமாக அருள்புரியும் ஒளிவடிவான நவாக்கரி ஆறுகரங்களை உடையவளாய் வெளிப்படுவாள். ஆறுகரங்களில்,

பந்தமா சூலம் படைபாசம் வில்லம்பு
முந்த கிலீமெழ முன்னிருந் தாளே (1370)

மழு, சூலம், தோட்டி, பாசம், வில், அம்பு ஆகிய ஆயுதங்களுடன் காட்சி தருவாள். சக்தியை வழிபடுபவர்கள் கொல்லாமையை மேற்கொள்வதால் மீண்டும் கருவில் சென்று சேரமாட்டார்கள். இத்தகைய பெறுவதற்கரிய பேறுகளைத் தருபவள் நவாக்கரி. இவ்வுண்மையை உணராது உலகவாழ்வே நிலையென்று இருப்பவர் வீடுபேற்றினைப் பெறாது கெடுவர்.

கடல் சூழ்ந்த உலகின் எல்லா இடங்களிலும் சக்தி கலந்துள்ளாள்; உடலோடு கூடிய உயிர் அழியக் கூடியது; அதனால் அழிவு வராமல் தடுத்து ஆளக்கூடியவள் சக்தி; இதனை உணர்ந்து சிறு தெய்வங்களை வழிபடாமல் அவளை வழிபட வேண்டும்; அப்படி வழிபடுபவர்கள் நாதத்தை உணர்வர்; நாதத்தை உணராதவர்க்கு நாதாந்தமும் முத்தியும் கிட்டாது. இதனைத் திருமந்திரப் பாடலால் அறியமுடிகின்றது (1363).

முடிவுரை

ஒலி அதிர்வுகள் அந்தந்தச் சக்கரங்களில் மந்திரமாக அமைந்து, அதன் ஆற்றலால் பொறிபுலன்கள் தூய்மை அடைகின்றன. இவ்வாறு திருவம்பலச் சக்கரம், வயிரவச் சக்கரம், ஏரொளிச் சக்கரம், சாம்பவி மண்டலச் சக்கரம், புவனாபதி சக்கரம், நவாக்கரி சக்கரம் ஆகிய சக்கரங்களில் எழும் ஒலி ஓம் நமசிவாய. இவ்வொலியாகிய மந்திரம் அதிரும் உடம்பு மந்திரதேகம் என்பதைத் திருமந்திரத்தின்மூலம் அறியமுடிகின்றது.

67. திருமந்திரத்தில் அரசாட்சி முறை

வேணு
முனைவர்பட்ட ஆய்வாளர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி.

முன்னுரை

பன்னிரு திருமுறைகளுள் சிறப்பாகத் திருமந்திரம் எனத் திருப்பெயர் பெற்றுத் திகழ்வது பத்தாம் திருமுறை. இதற்குத் திருமந்திரமாலை மூவாயிரம் என்ற பெயரும் உண்டு. இத்தகைய சிறப்புப் பெயர் பெற்ற இந்நூல் ஒன்பது வகையான தந்திரங்களையும் 3000 பாடல்களையும் உள்ளடக்கிய தலைசிறந்த ஞானப்பெட்டகம். மேலும், பதினான்கு வகையான சாத்திரங்களைக் கூறும் முதல் தத்துவநூல். இந்நூல் ஒன்றே தமிழ் வேதாகம முழுமுதற் கருவூல நூலெனில் மிகையாகாது. இத்தகைய சிறப்புகளைப் பெற்றுள்ள இந்நூல் உலகியல், அருளியல், சமூகவியல், பண்பாட்டியல் முதலான பல செய்திகளை முதன்மை யாகத் தந்து சிறப்பிப்பதோடு தனிமனித வாழ்வு, சமுதாயவாழ்வு மேம்படுத்துவதற்கான செய்திகளையும் தருவதில் முன்னோடியாகத் திகழ்கிறது. இந்நூலில் இடம்பெற்றுள்ள அரசாட்சி முறைகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

கோட்பாடு

ஒன்பது தந்திரங்களுள் முதல் தந்திரம் நீதிநூல்களின் எதிரொலிபோல் சிவதருமத்தைப் பேசுகின்றது. இரண்டாம் தந்திரத்தில் சைவ உலகு ஒன்று தெளிவாகத் தெரிகின்றது. முதல் நான்கு தந்திரங்களும் சிவஞானத்தைப் பெறுவதற்கு விரும்புபவர்கள், தம்மை அகமும் புறமும் தகுதி உடையவர்களாக்கிக் கொள்வதற்குரிய சாதனங்களைக் கூறுகின்றது. ஐந்தாம் தந்திரம் சைவசித்தாந்தச் சமயத் தத்துவங்களைக் கூறுகின்றது. சிவம் அன்றிக் கடவுள் இல்லை. அவனை அடைய தவம் அன்றி வேறு வழியில்லை. சிவகதி தவிர மற்றவை யாவும் அவகதியே யாம். ஓங்காரத்துள் ஒளி இறைவன். அகங்காரத்தை விட்டு அவனை அனுபவத்தில் அறிவதே உயர்ந்த நிலையாகும். இவையே ஐந்தாம் தந்திரத்தின் சாரமாக விளங்குகின்றன.

முதல் நான்கு தந்திரங்கள் ஞானம் பெறும் நிலையில், உணர்ந்து பெறுவதற்குரிய பயன்களை விரித்துரைக்கின்றது. சிவஞானத்தைப் பெறுவதற்கான சாதனங்கள், சரியை, கிரியை, யோகம், ஞானம்,

சமயத்தத்துவங்கள் மந்திரங்களின் படிநிலை வளர்ச்சி போன்றவை உணர்த்தும் மெயப்பொருள்கள் இந்நான்கு தந்திரங்களிலும் ஆய்ந்துரைக்கப் பெற்றது.

அறியாமைதான் மக்களின் துன்பத்துக்குக் காரணமாகின்றது. இதைப் போக்குவதே திருமந்திரத்தின் உயர்ந்த கோட்பாடாகின்றது. மேலும் ஒன்றே குலம் ஒருவனே தேவன். எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பது, திருமூலர் அடைந்த இன்பத்தை அனைவரும் பெறுவது, தமிழின் சிறப்பை வெளிப்படுத்துவது, ஆன்மிகம் பற்றிய தெளிவை ஏற்படுத்துவது, இல்லறத்தான், துறவறத்தான் மேற்கொள்ள வேண்டிய வாழ்வியல் நெறிகளைச் சுட்டுவது, உடலையும், மனத்தையும் செம்மையாய் வைப்பது போன்றனவும் இதன் கோட்பாடாகின்றன.

சித்தர்கள் அனைவரும் சமுதாயச் சீர்திருத்தவாதிகளாக விளங்கினர். திருமூலரும் 113 பாடல்களில் உலகிற்கு அரிய அறிவுரைகளைக் கூறுகின்றார்.

இயங்கும் உயிர்கள் அனைத்தும் இறைவனுடைய கோயில்கள் என்பது திருமூலரின் கோட்பாடு.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நனைமின் (2066)

இது அவருடைய அறிவுரை. உயிர்க்கூட்டம் அனைத்தும் ஒன்றுதான். அவற்றின் தலைவனும் ஒன்றுதான் என்பதே இதன் பொருள்.

அரசாட்சிமுறை

ஒருநாட்டில், மக்கள் அன்பு, ஒழுக்கம், ஒப்பரவு, நீதி இவற்றிற்குட்பட்டு வாழவேண்டும். இல்லையேல், அரசன் அவர்களை நன்னெறியில் செலுத்தித் தானும் நெறியின் நீங்காது வாழவேண்டும். நாட்டையும் மக்களையும் காப்பது அரசன் கடமை.

அறிவற்ற அரசன் காலனுக்கு ஒப்பாவான். அரசன், தானும் நன்னெறியில் வாழ்ந்து நாட்டுமக்களையும் நன்னெறியைக் கடைப்பிடிக்கச் செய்ய வேண்டும். தவவேடம்பூண்டு, ஒழுக்கநெறியில் நில்லாது மறைந்து ஒழுகும் அவவேடத்தவரை அரசன் தண்டித்து உண்மைநெறியில் .செலுத்த வேண்டும். பசுக்கள், பாவையர், இல்லறத்தார், துறவறத்தார் ஆகியோரை அரசன் காக்க வேண்டும். கள்குடியரைத் தண்டிக்க வேண்டும். அறம் செய்ய வேண்டும் என்று அரசனுக்குரிய கடமைகளைத் திருமூலர் கூறுகிறார். திருவள்ளுவர்,

முறைகோடி மன்னவன் செய்யின் உரைகோடி
ஒவ்வாது வானம் பெயல் (559)

என்று அரசனின் கடமையைக் கூறுகிறார்.

உலகம், வான்மழையை நோக்கி வாழ்வதுபோல் அரசனுடைய நீதி வழுவா ஆட்சியை எதிர்நோக்கி மக்கள் வாழ்வர். எனவே, அரசன்,

நடுவுநிலைமையுடன் அறநூல் வல்லவர்களுடன்கூடிச் சிந்தித்து அரசாட்சி நடத்த வேண்டும் என்று திருமூலர் கூறுகின்றார்.

வேதங்களுக்கும், அறத்திற்கும், மக்களின் மகிழ்ச்சிக்கும், நாட்டின் பாதுகாப்புக்கும் அரசனே அடிப்படை. மன்னன் செங்கோல் கோடாது அரசாட்சி செய்தால்தான் நாட்டின் விளைச்சலும், செழுமையும் பாதுகாக்கப்படும். மன்னன், மக்கள் குறைகளைச் செவிமடுத்துக் கேட்க வேண்டும். கொலை, கொள்ளை, களவு, கள் போன்ற கொடிய செயல்களைச் செய்யும் கொடியவர்களைத் தண்டிக்கவும் வேண்டும். நீதியை நிலைநாட்டுவதே அரசன் கடமை.

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின் (560)

என்கிறார் திருவள்ளுவர்.

அறத்தினின்று வழுவிய அரசனைவிட அறத்தினின்றும் வழுவா காலன் மிகநல்லன் என்பதை,

கல்லா அரசனும் காலனும் நேர்ஒப்பர் (95)

என்று கூறுகிறார் திருமூலர். அரசனுக்குப் போர்வெறி, மண்ணாசை கூடாது. அவ்வாறு ஆசை கொள்வது, விளைவு அறியாது பாயும் புலிபோன்றது. மக்கள் மனத்தைப் பயன்படுத்துவதற்குரிய சமயநெறியில் தானும் வாழ்ந்து மக்களையும் அதன்பால் செலுத்துவது அரசன் கடமை என்கிறார். இதனால், அரசனின் கடமை, ஒழுக்கம், பண்பு ஆகியவை வரையறுக்கப்படுகின்றன.

அரசு நீதி அறிதல்

ஒருநாட்டில் படைகள் வீரமுடையதாக இருந்தாலும் அவ்வரசருக்கு வெற்றி புகழைத் தேடித் தருவது நீதி முறையே. நீதியாவது ஒருபாற் கோடாமல் நடுநிலைமை தவறாமல் அரசரால் பின்பற்றப்படுதல் வேண்டும். நீதிக்குத் தலையாய சான்றாக விளங்குவது மனுநீதிசோழன் நீதி என்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய சிறந்த அரசநீதியை கற்றவனாக அரசன் இருக்க வேண்டும் என்று திருமந்திரம் வலியுறுத்து கிறது.

நல்வழி காட்டுதல்

படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்ற ஆறு அங்கங்களை உடையவனே சிறந்த அரசனாக மதிக்கப்படுவான். இத்தகைய சிறப்புவாய்ந்த அரசன் நாளும் நல்வழிகளை ஆராய்ந்து நீதி பரிபாலனம் செய்ய வேண்டும். அங்ஙனம் செய்யாவிடில் நாடும் வளமிழந்து, நாட்டு மக்களும் அறியாமையின் பிடியில் சிக்கி வீணாக அழிவர். மேலும், நாடு ஆள்வோனின் செல்வமும் குறையும் என்கின்றார். இதனை,

நாள்தோறும் நாடு செடுமூட நண்ணுமால்
நாள்தோறும் செல்வம் நரபதி குன்றுமே. (96)

என்ற திருமந்திரப் பாடல் தெளிவுபடுத்துகின்றது.

குடிகளைக் காத்தல்

அரசன் காவலன் என்பவன் எவ்வுயிர்க்கும் பாதுகாவலனாக விளங்குவான். காலம் தாழ்த்தாத தன்மை, கல்லியறிவுடைமை, துணிவு டைமை ஆகிய மூன்று பண்புகளும் அரசனுக்கு இன்றியமையாதது என்று திருக்குறள் கூறுகின்றது. இம்மூன்று பண்புகளில் ஒன்றான துணிவினைக் கைக்கொண்ட தன்நாட்டுக் குடிகளைக் காப்பாற்றுதல் அரசனின் தலையாயக் கடமையாக கருதப்பட்டது. இதனை,

காவலன் காப்பன் காவா தொழிவனேல்
மேவும் மறுமைக்கு மீளா நரகமே (100)

என்ற பாடல் தெரிவிக்கின்றது. பசுவையும், வாய்மை, தூய்மை தவறாத பெண்களையும், அறநெறியில் நிற்பவர்களையும், தேவர்கள் போற்றும் சிவனடியாரையும் காக்கும் கடமை அரசனுக்குரியது. காப்பாற்றாத அரசன் மறுமையில் மீளா நரகத்தை அடைவான் எனத் திருமூலர் குறிப்பிடுகிறார்.

தண்டனை அறிதல்

குடிகளைக் காத்தல், நாட்டைக் காத்தல் மட்டுமின்றி நீதியறிந்து தண்டனை அளித்தலும் அரசின் முதன்மையான கடமையாகச் சுட்டப்பட்டது.

எத்தண்டமுஞ் செய்யும் அம்மையில் இம்மைக்கே
மெய்த்தண்டந் செய்வதவ் வேந்தன்கடனே (102)

சமயநெறியில் நில்லாதாரை நல்வழிப்படுத்தவும், நல்வாழ்வு எய்தவும் தண்டனை அளித்தல் அரசனின் கடமையாகக் கருதப்பட்டதைத் திருமந்திரம் தெரிவிக்கின்றது.

பொய் வேடத்தாரைத் தண்டித்தல்

அஞ்சாமை, ஈகை, அறிவுடைமை, ஊக்கமுடைமை ஆகிய பண்புகளும் அரசனுக்குரிய இயல்பாக திருக்குறள் கூறுகின்றது. இதில் அறிவுடைமை என்னும் பண்பினைக் கொண்டு மெய்யுணர்ந்தவர்கள் போல் நடிக்கும் அற்பர்களை ஆராய்ந்து அத்தகைய புல்லியோரை இனங்கண்டறிந்தும், தண்டித்தும் நன்னெறியில் நிறுத்துதல் வேண்டும். இதனால் நாட்டிற்கும், தமக்கும் நன்மை விளையும் என்பதை,

ஞானிகள் போல நடிக்கின்ற வர்தம்மை
ஞானிக ளாலே நரபதி சோதித்து
ஞானமுண் டாக்குதல் நலமாகும் நாட்டிற்கே (99)

என்ற திருமந்திரப் பாடல் உணர்த்துகின்றது. மேலும், கள்ளினைப் பருகி ஆனந்தம் காண்பவர்கள் தமக்கு உலகினுக்கும் தீமை விளைவிக்கக் கூடியவர்கள் அத்தகையவர்களை இனங்கண்டு தண்டஞ்செய்து நன்னெறிப் படுத்துதலும், அரசனின் கடமையாகக் கொள்ளப்பட்டது.

உண்மையான வேடம் என்பது அதற்குரிய நெறியில் பொருந்தி நிற்றல். அப்படிப் பொருந்த நிற்காவிடில் அந்த வேடம் பயனற்றது. ஆணவம் கெடாதோர் உயர்ந்தாருக்குரிய உச்சிக்குடுமியும், பூணூலும், பிறவும் பூண்டு உலகை ஏமாற்றுகின்றனர். அத்தகைய பொய்ம்மை யாளரைக் கண்டறிந்து அவரின் ஆடம்பரத்துக்கான புற்சின்னங்களை அகற்றுதல் வேண்டும். அதுவே, நாட்டுக்கும் அரசனுக்கும் நன்மை தருவது.

முடிவுரை

கொடைப்பண்பு, செங்கொல் தவறாமை, குடிகளைக் காத்தல் ஆகிய பல பண்புகளை உடைய அரசன், அரசர்களுக்கெல்லாம் சிகரமாக விளங்குவான். அத்தகைய சிறப்புடைய அரசன் எவ்வாறெல்லாம் இருக்க வேண்டும் என்று திருமந்திரம் விளக்குகின்றது. அரசன், அரசநீதி அறிந்தவனாக இருத்தல் வேண்டும். குடிகளைக் காத்து நல்வழிப்படுத்தும் பாதுகாவலனாக விளங்க வேண்டும். குடிகளைக் காப்பதுபோல் தன் நிலப்பரப்பைப் பாதுகாத்தல் வேண்டும். பொய்வேடத்தாரை இனங்கண்டு தண்டித்து நல்வழிப்படுத்த வேண்டும். தனக்கு கிடைக்கும் வருவாயில் ஆறில் ஒரு பங்கு மட்டுமே தான் செலவிட வேண்டும். ஏனைய ஐந்து பங்கினையும் ஐவருக்கு வழங்கிட வேண்டும் என்பன போன்ற கருத்துகள் இக்கட்டுரையில் விளக்கப பட்டுள்ளன.

68. பன்னிரு திருமுறைகளுக்குள் திருமந்திரம்

முனைவர் சு. சுஜா
முது முனைவர்பட்ட ஆய்வாளர்,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை.

தமிழ் இலக்கிய வரலாறு நெடுகிலும் தனிமனிதப் புகழ்பாடும் இலக்கியங்களே மிகுதி. அவற்றுள் சங்க இலக்கியத்திலும் பின் சங்க இலக்கியத்திலும் சில விதிவிலக்குகள் உண்டு. மற்றவை சமயம் என்ற மேற்பூச்சுடனோ இன்றியோ 'தெய்வத்தன்மை' மிகுந்ததாக வழங்கிவருகின்றன. பல்லவர்கால சைவ எழுச்சியின் அடையாளமாக எழுந்த பாடல்களும் பிறவும் சோழர்காலத்தில் திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. அவை பொதுவாகத் தோத்திரங்கள், சாத்திரங்கள், பிரபந்தங்கள், புராணங்கள் என்ற நிலையில் தொகுக்கப்பட்டள்ளன. இசையைக் கருவியாகக் கொண்டு எழும்பிய பக்தி அலையின் பின்னணியை விளக்கும் முகமாக இசைப்பாக்கள் முதன்மையிலும் இயற்பாக்கள் அதனைத் தொடர்ந்தும் தொகுக்கப்பட்டுள்ளதாகக் கூறுவது மரபு. மேற்குறிப்பிட்ட நான்கு பிரிவில் சாத்திரங்கள்/இயற்பா என்ற பிரிவில் அடங்குவதாகத் திருமூலரின் திருமந்திரத் தொகுப்பு இடம் பெற்றுள்ளது.

- திருமூலரின் திருமந்திரப் பாடல்கள் பத்தாம் திருமுறையாகச் சேர்க்கப்பட்டதன் பின்னணி என்ன?
- தமிழ் இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுவது போலத் திருமூலர் சித்தரா- அந்தப் பின்னணியில் அவரது திருமந்திரம் கலகக்குரலாக இருக்கிறதா?

இலக்கியங்களை மீள்வாசிப்பு செய்வதும் அதன் கருத்தியல்களை மிளாய்வுக்கு உட்படுத்துவதும் ஒரு சமூகத்தின் வேரைக் கண்டடைவதில் பெரும்பங்கு கொள்வதால் மேற்குறித்த கேள்விகள் குறித்து ஆராய வேண்டிய அவசியம் உள்ளது.

சுந்தரரின் திருத்தொண்டத்தொகை, சேக்கிழாரின் பெரிய புராணப் பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு மூலரின் பெயர், பிறப்பு, காலம், அவர் வடநாட்டிலிருந்து தென்னாட்டின் திருவாவடுதுறைக்கு வந்தது, அவர் கூடு விட்டுக் கூடு பாய்ந்தது பற்றிக் கண், காது, மூக்கு வைக்கப்பட்டப் பல செய்திகள் இதுவரை பலரால் எடுத்துக்கூறப்பட்டள்ளன. அவரது பாயிரப்பகுதியில் அவரது பெயர், குரு (நந்தி - பல இடங்களில் கடவுளைப் பற்றிக் கூறும் தொனியுடன் நந்தி என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்.) பற்றியும் அவர் பாடிய பாடல்களின் தொகை பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவரது காலம் பற்றிப் பல்வேறு கருத்துகள்

உள்ளன. ஒன்று அவர் கி.பி.4 அல்லது 5 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர், ஞானசம்பந்தர், நாவுக்கரசர் காலத்திற்கு முற்பட்டவர் அல்லது பிற்பட்டவர் என்பது அவற்றில் முக்கியமானது முதல்கருத்து அவரைச் சித்தராக அடையாளப்படுத்துவதன் நீட்சியாக உள்ளது. அடுத்த கருத்து அவர் இயற்றிய திருமந்திரம் பன்னிரு திருமுறைகளுடன் சேர்க்கப்பட்டள்ளதோடு தொடர்பு கொண்டுள்ளது. இராசராசனின் ஆதரவோடு திருமுறைகளைத் தொகுத்த நம்பி பதினொரு திருமுறைகளையும் தொகுத்தார் என்றும் முதல் ஏழு திருமுறைகளை மட்டும்தான் தொகுத்தார் என்றும் ஆராய்சிசியாளர்களிடையே இருவேறு கருத்துகள் உள்ளன. நம்பி, தனது திருத்தொண்டர் திருவந்தாதியில் மாணிக்கவாசகரைப் பற்றிக் குறிப்பிடவில்லை என்பதால் அவர் எட்டாம் திருமுறையைத் தொகுத்திருக்க முடியாது என்கிறார் வெள்ளைவாரணர் (1994). ஆனால் இதற்கு ஆதராம் இல்லை என்பதால் மு. அருணாசலமும் (2005) ஏ.வி. சுப்பிரமணியமும்(2005:107-108) இதனை மறுக்கின்றனர். திருமுறைகண்ட புராணத்தில் ஒரு பாடல் பன்னிரு திருமுறைகளை நம்பி தொகுத்ததாகக் கூறுகின்றது (பா.எண்.8)1. திருமுறைகண்ட புராணம் 14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்பதும் இங்கு சிந்திக்கத்தக்கது. திருமந்திரத்திலும் ஞானசம்பந்தர், மாணிக்கவாசகர்ஞ். பற்றி மூலர் குறிப்பிட்டுள்ளார். எனவே ஞான சம்பந்தர் காலத்திற்கு பிற்பட்டவராகவும் நம்பியின் காலத்திற்கு முற்பட்டவராகவும் மூலர் இருக்கலாம் என்ற முடிவுக்கு வரலாம்.

திருமூலர் பற்றிய இந்த அறிமுகத்தோடு மேற்குறிப்பிட்ட கேள்வி களுக்கு விடைகாணலாம். மேற்குறிப்பிட்ட இரண்டு கேள்விகளும் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாகவே உள்ளன. ஒன்றைப் பற்றிய தெளிவு மற்றதை எளிதாகக் கண்டடைய வழிவகுக்கும். கடவுளைக் காண முயல்பவர்கள் பக்தர்கள், கண்டு தெளிந்தவர்கள் சித்தர்கள் என்ற கருத்த சித்தர்கள் யார் என்பதற்குப் பொதுவான விளக்கமாகக் கூறப்படுகின்றது. திருவாவடுதுறை அருகில் மூவாயிரம் ஆண்டுகள் யோக சமாதியில் இருந்து ஆண்டுக்கு ஒரு மந்திரம் வீதம் பாடியதும் கடவுளைக் காண்பதற்கான 962 தத்துவங்களைக் கடக்கும் வழிமுறைகளைப் பற்றிக் கூறியவர் என்ற நிலையிலும் திருமூலர் சித்தராகக் கட்டமைக்கப்படுகின்றார்.

அவரது திருமந்திரத்தில் ('மூலனுரை செய்த மூவாயிரம் தமிழ்' திரு.3046) 3047 பாடல்கள் உள்ளன. அவை 9 தந்திரங்களாக125 தலைப்புகளைக் கொண்டமைந்துள்ளன. இதில் 61 மிகைப் பாடல்கள் உள்ளன. இம்மிகைப்பாடல்கள் திருமந்திரத்தின் உரைச் சுவடிகளில் மட்டுமே காணப்படுவது குறிப்பிடவும் சிந்திக்கவும் தக்கதாக உள்ளது (ஒரு தொகுப்பு நூல் என்ற வகையில் சங்கத் தொகை இலக்கியங்கள், சங்கப் பின் இலக்கியங்களின் மூலம் மட்டும் உள்ள சுவடிகளுக்கும் உரையுடன் கூடிய சுவடிகளுக்கும் இடையே வேற்றுமை உண்டு என்பதை இதனோடு பொருத்திப்

பார்க்கலாம்.). மந்திரத்திற்கு உரைகாண முயன்றவர்கள் தங்கள் பாடல்களையோ அல்லது தன் உடன் காலத்தில் வாழ்ந்தவர்களின் பாடல்களையோ சேர்த்திருக்கலாம் என்ற முடிவிற்கு இவை இட்டுச் செல்கின்றன. சித்தர் இலக்கியங்களைப் பதிப்பித்த பதிப்பாசிரியர் சிலர் இவ்வாறு தன் உடன் காலத்தவர்கள், தங்கள் நண்பர்களையும் சித்தர்களாக மாற்றியமையையும் அறிய முடிகின்றது (2012:10-14). 28 ஆகமங்களில் காரணம், காமிகம், வரம், சிந்தியம், வாதுளம், வியாமளம், காலோத்தரம், சுப்பிரம் மகுடம் என்ற ஒன்பது ஆகமங்களை அடியொற்றியே திருமந்திரங்கள் 9 தந்திரங்களாகப் பகுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படவதுண்டு (2005:வீஸ்). ஆனால் ஆகமங்கள் என்பது இந்து சமயத்தின் முப்பெரும் பிரிவுகளான சைவம், வைணவம், சாக்தம் ஆகிய சமயங்களின் கொள்கை விளக்கங்களையும் வழிபாட்டு முறைகளையும் கூறும் நூல் வகை ஆகும். ஆகமங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு வகையான வழிபாட்டு முறைகள் பற்றியும் அதிகார மையங் களாக விளங்கும் கோவில்களின் நடைமுறைகளைப் பற்றியும் கூறுகின்றன. இவை வேதங்களை அடிப்படையாகக் கொள்ளா தவை. எனினும் இவை வேதங்களுக்கு மாறானவையும் அல்ல. திருமந்திரமும் கோயில்கள், பூசை விதிகளைப் பற்றியும் குறிப்பிடு கின்றது என்றாலும் பெரும்பான்மை குறைவு. திருமந்திரமாலை என்னும் திருமந்திரத்தின் பெயரில் இடம்பெற்றுள்ள மந்திரம், அதன் உள்ளே கூறப்படும் தந்திரங்கள் உட்பட பல வடமொழிச்சொற்கள் இதனுள் இடம்பெற்றள்ளன. என்றாலும் 'என்னை நன்றாக இறைவன் படைத்தான், தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே' என்று அவர் 'தமிழ்ப்பற்றைக்' காட்டியுள்ளதும் கவனிக்கத்தக்கது.

ஒட்டுமொத்தமாக திருமந்திரத்தை வாசிக்கும்போது கிடைக்கின்ற தனிமனித அனுபவத்தைக் கீழ்வருமாறு தொகுத்துக் கொள்ளலாம்.

1. திருமூலர் என்ற நூலாசிரியர் தன்னைப் பற்றியும் இறையுணர்வின் மீது கொண்ட நாட்டத்தையும் தனது குரு - முதலானவைபற்றியும் அறிமுகப்படுத்தல். இதனைத் தமிழ் மரபில் பாயிரம் என்று வழங்குவது மரபு.
2. அன்புடைமை, நடுவுநிலைமை, புலால் மறுத்தல், பொறையுடைமை, பெரியாரைத் துணைக்கோடல், அவா அறுத்தல், புறங்கூறாமை, கல்வி, கல்லாமை, கூடா ஒழுக்கம், மகளிர் இழிவு, நல்குரவு, செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, உயிர் நிலையாமை என உயிர்கள் பின்பற்ற/தவிர்க்க வேண்டிய தனிமனித ஒழுக்கங்களின் தொகுதி, அறிவுரைகளைக் குறிப்பிடுதல். இவை திருக்குறள், நாலடியார் முதலான சமண இலக்கியங்களை நினைவுபடுத்துபவையாக உள்ளன.

3. அடிமுடிதேடல், தக்கன் கேள்வி, லிங்க புராணம், சிவநிந்தை, மயேசுவர நிந்தை, திருக்கோயில், திருநீறு, சிவவேடம், சிவகுருதரிசனம், சிவபூசை, சுத்த சைவம், கடுஞ்சுத்த சைவம், அடியார் பெருமை முதலான சைவ அடையாளத்திற்கு துணைபுரியும் கருத்துகளை விவரிப்பவை.
4. அட்டமாசித்தி, காயசித்தி, ஆறு அந்தங்கள், ஐந்திந்திரியங்களை அடக்குதல், நாடிகள், வாயுக்கள், உடலை விடுதல், தானே தெய்வமாதல், ஞான உதயம், சமாதி அடைதல் முதலான கடவுளை அடைதல்/ முக்திநிலை கைவருவதற்கான நெறிகளைச் சுட்டுதல்.
5. ஆறு உட்சமயங்கள் பற்றிக் கூறுதல், புறச்சமயங்களை தூஷித்தல், வேதம், சாதி, பார்ப்பன எதிர்ப்பு முதலான சமூகக் கட்டமைப்பை மறுதலித்துக் கேள்வி கேட்டல்.
6. கரு உற்பத்தி, உயிர்களின் பிறப்பு, அவை ஆண், பெண், அலி ஆதல், விந்துற்பணம், விந்து ஐயம் போகசரவோட்டம் - என காம இச்சைகளைக் கட்டுப்படுத்தி வாலை/குண்டலினி என்ற உயிர்ச்சக்தியை எழுப்புதலைப் பற்றி விளக்குதல்.
7. முழுக்க முழுக்க இயற்கையை அடியொற்றிய, பொருள் புலப்பாட்டிற்கு எட்டாத சூனிய சம்பாஷணைகளாக அமைதல்.

இத்தகைய தோற்றம்கொண்ட திருமந்திரம் பத்தாம் திருமுறையாகச் சேர்க்கப்பட்டதற்கான அரசியலை விளங்கிக்கொள்ள வேண்டும் என்றால் அவரை ஒரு சித்தராக மட்டமே பார்க்கும் பார்வையிலிருந்து விலகி வரவேண்டும். திருமந்திரத்தின் பன்முகத் தன்மை இதற்கு நமக்கு உதவக்கூடும். ஆனால் இதே பன்முகத் தன்மையைக் காரணம்காட்டி அதன் ஆசிரியர் ஒருவராக இருக்க முடியாது, அல்லது அதில் இடைச்செருகல் என்னும் புரட்டல் வேலைகள் நிகழ்ந்திருக்க வாய்ப்பு இருக்கிறது என்ற பார்வையைத் திருமந்திரத்தை படித்த ஆய்வாளர்கள் முன்வைப்பதுண்டு (2008:5). அவர்களது கருத்திற்கு வலு சேர்ப்பது போலவே மந்திரத்தில் சைவக் கோட்பாடுகளும் சமணக் கருத்தாக்கங்கங்களும் வேதம், சாதி, பார்ப்பனியத்திற்கு எதிரான நிலைப்பாடுகளும் முன்வைக்கப்பட்டுள்ளதை உரையின் துணையின்றி மந்திரத்தை வாசிப்பவர்களாலேயே புரிந்துகொள்ள முடியும்.

பாயிரப்பகுதியில் வேதச் சிறப்பும் ஆகமச் சிறப்பும் குறிப்பிடப்படுவதற்கு மாறாக அந்தணர்களுக்கு ஆயிரம் அக்ரகாரங்களைக் கட்டிக் கொடுப்பதும், ஆயிரம் கோயில்களைக் கட்டுவதும் ஒரு ஞானிக்குப் பகலில் ஒரு வேளை உணவு அளிப்பதற்கு ஈடாகாது என்கிறது (திரு.1860). இவ்வாறே ஒரு ஞானிக்கு உணவு தருவது கோடி அந்தணர்கள் உண்பதை விடச் சிறந்தது என்று மற்றொரு பாடல் கூறுகிறது (திரு. 61). பிராமண நிந்தனை (திரு.52, 229, 230, 231, 241ஞ்)மேலும் பல பாடல்களில் இவ்வாறு தொடர்கின்றன.

ஆதிப்பிரானும் அணிமணி வண்ணனும்
ஆதிக்கமலத் தலர்மிசையானும்
சோதிக்கில் மூன்றும் தொடர்ச்சியில் ஒன்றெனார்
பேதித்துலகம் பிணங்குகின்றார்களே (104)

ஆன சமயம் அது இது நன்றென்னும்
மாய மனிதர் மயக்கம் அது ஒழி (1545)

கத்தவும் வேண்டாம் கருத்தறிந் தாறினால்
சத்தமும் வேண்டாம் (1634)

நடமாடும் கோயில் நம்பர்க்கொன்று ஈயில்
படமாடும் கோயில் பகவற்கதாமே (1857)

உள்ளத்தின் உள்ளே உள பல திர்த்தங்கள்
மெள்ளக் குடைந்து நின்று ஆடார் வினைகெடப்
பள்ளமும் மேடும் பரந்து திரிவரே (509)

இதுபோல அந்தணர் அதிக்கத்தை மறுத்துப் பொது அறங்களைப் போதிக்கும் போக்கு கொண்ட பாடல்கள் பல உள்ளன.

திருமூலருக்குப் பின்னர் 14, 15ஆம் நூற்றாண்டுகளிலும் அதற்குப் பின்னரும் சித்தர்களாகத் தன்னை வெளிப்படுத்திக்கொண்டவர்கள் பலர். அவர்களில் சிலர் சமணப் பெண்ணேசல்களின் தொடர்ச்சியாகப் பெண்களை வீடுபேற்றிற்கான எதிரிகளாகப் பார்த்தனர். இதே நிலையை மூலரின் மந்திரத்திலும் காணமுடியும். பெண்களை இயமனாக எண்ணினால் உடல் இச்சைகள் நம்மைவிட்டு நீங்கும் (திரு.1953) என்று கூறுகிறார். அதே வேளையில் சக்தியைப் பற்றிப் பேசுகையில் 'வாயு மனமும் கடந்த மனோன்மணி' என்று கூறுகிறார்.

விரும்புவர் மன் என்னை மெல்லியல் மாதர்
கரும்பு தகர்த்துக் கடைக்கொண்ட நீர் போல்
அரும்பொத்த மென்முலை ஆயிழையார்க்குக்
கரும்பொத்துக் காஞ்சிரங்காயும் ஒத்தேனே (180)

புணர்ச்சியுள் ஆயிழைமேல் அன்புபோல
உணர்ச்சியுள் அங்கே ஒடுங்க வல்லார்க்கு
உணர்ச்சி இல்லாது கலாவி உலாவி
அணைத்தலும் இன்பம் அது இதுவாகுமே (283)

புலம்பி னவளொடு பேரகம் நுகரும்
புலம்பனுக்கு என்றும் புலர்ந்திலை போதே (2934)

அகத்தில் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்
மகட்குத் தாய்தன் மணாளனோடாடிய
சுகத்தைச் சொல் என்றால் சொல்லுமாறெங்ஙனே (2944)

அற்புதமாகிய அனுபோகக் காமம்போல்
கற்பனை இன்றிக் கலந்து நின்றானே

இதுபோன்ற சொல்லாடல்கள் மந்திரத்தில் விரவிக்கிடக்கின்றன. சாதி வருணப் பாகுபாட்டின் இறுக்கத்தைத் தளர்த்தும் ஒப்பற்ற பெருங்குரலாகத் திருமூலரின் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற சொல்லாடல்கள் நிறுவன சமயங்களின் தத்துவப் புலத்தைக் கரைத்த நிர்மூலமாக்கியிருக்கலாம்.

அதே வேளையில் திருமூலரின் மீது பூசப்பட்டுள்ள சமயச் சாயத்தை அகற்றிவிட்டுப் பார்த்தால் அவருடைய 'ஆதாரவோதயம்' ஆண்டாளின் நாச்சியார் திருமொழியோடு போட்டியிடக்கூடும். பக்தி இலக்கியத்தின் நாயகன் - நாயகி பாவம் நேரடியான நாயகன் நாயகி உரையாடலாக இழையோடும். இதனோடு சித்தர்களின் பாடல்களைப் புரிந்தகொள்வதற்கு 96 வகைத் தத்தவங்களைப் பற்றிய ஞானம் அவசியம் என்பதை முன்னிறுத்தும் போக்குடைய பாடல்களும் திருமந்திரத்தில் காணப்படுகின்றன.

'நந்தவனத்தில் ஒர் ஆண்டி' என்ற பாடலுக்கும் ஆண், பெண், அலி பிறப்பு பற்றிக் கூறும் கர்ப்பக்கிரியை பற்றிய திருமூலரின் பாடலுக்கும் இடையில் கவித்துவ வேறுபாடு மட்டும் இல்லை. இரண்டு பாடல்களும் பிறப்புத் தத்துவத்தை எடுத்துக்கூறினாலும் மூலரின் பாடல் இதை அறிவியல் பூர்வமாக அணுகியுள்ளது; திருமூலர் சித்தர் என்ற கருத்தியலை ஊடறுத்துச் செல்பவையாக இவை உள்ளன. அறிவியல் பூர்வமான கருத்துகளை எடுத்தக்கூறும் அதே வேளையில் சில மூட நம்பிக்கைகளையும் இவர் எடுத்துக்கூறியுள்ளார். சான்றாக, தருமம் செய்யாதவர்களுக்கு இருமல், சோகை, கோழை, சுரம் எனப் பல நோய்கள் எற்படும் (திரு.263), லிங்கத்தைப் பெயர்த்து வேறொரு இடத்தில் வைப்பவர்கள் பெருநோயால் துன்பப்படுவர் (திரு.515), சிவ தீட்சை பெறாத அந்தணர்கள் வழிபாடு, பூசை செய்தால் வேந்தனுக்கு வியாதியும், நாட்டில் பஞ்சமும் ஏற்படும் (திரு.519), பூசைகள் தவறாக நடந்தால் அல்லது அவற்றில் தடை ஏற்பட்டால் நோய்கள் ஏற்படும், மழை குன்றும், மன்னர்களின் வலிமை குறையும் (திரு.522).

இதுபோன்று தத்துவ முரண்கள் பல திருமந்திரத்தில் காணப்படுவது கண்கூடு. இதனை எடுத்துக்கூறுவதற்கு அவர் பயன்படுத்திய யாப்பு கலிவெண்பா. திருவள்ளுவரைப்போல யாப்புப் பயன்பாட்டில் புதுமையையோ, புத்திசாலித்தனத்தையோ அவர் பயன்படுத்தவில்லை என்றாலும் அவரின் சமகால இலக்கியங்களோடு ஒப்பிடும்போது அதன் கருத்தியல் புதுமையை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். திருமூலர் ஒரு சித்தராக, சைவ சமயியாக, வேதாந்தத்திற்கு எதிரான லோகாயதவாதியாக இயங்குவதை அவரது திருமந்திரத்தின் மூலம் காணலாம். ஆனால்

சமூக அமைப்பு இயங்கியல் பற்றிய அவரது எதிர்ப்பண்பாட்டுச் சொல்லாடல்களைக் கலகக்குரல் என்று அடையாளப்படத்துவது ஆபத்தானது, ஒருவகையில் சமயத்தைக் காப்பாற்றும் முயற்சி யாகவே அமையும். ஒரு இலக்கியம் மட்டுமல்ல ஒரு தொகுப்பு உருவாக்கப்படுவதற்கும் அரசியல் சமூகக் காரணிகள் ஊக்கிகளாகச் செயல்படுகின்றன என்பது வரலாற்று உண்மை. சோழர்களின் அதிகார மேன்மையைச் சைவப் பெருங்கதையாடல் மூலம் நிலை நிறுத்திக்கொள்ள இராசராசனின் துணையோடு உருவாக்கப்பட்ட தொகுப்பு திருமுறைகள். திருமந்திரங்கள் சைவ ஆகமங்களை அடிப்படையாகக் கொண்டது என்ற கரத்தாக்கமும் அவரின் சைவ அடையாளமும் மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டதாலும் திருமந்திரம் திருமுறை என்ற போர்வைக்குள் கொண்டவரப்பட்டது. அவரது பன்முகத்தன்மை தமிழ்ச் சமூகத்தால் மறக்கப்பட்டுள்ளது என்பதாகவும் இதனை அவதானிக்கலாம்.

அடிக்குறிப்புகள்:

1. மந்திரங்கள் எழுகோடி ஆதலினால் மன்னுமவர்
   இந்தவகை திருமுறைகள் ஏழாக எடுத்தமைத்து
   பந்தமுறும் மந்திரங்கள் பதினொன்றம் ஆதலினால்
   அந்தமுறை நான்கினொடு முறைபதினொன்ற ஆக்கினார்
   (திருமுறை கண்ட புராணம். 8)
2. 96 தத்தவங்கள்
   வாசல்கள் 9, ஆன்மதத்துவங்கள் 24, தாதுக்கள் 7,
   கோசங்கள் 5, குணங்கள் 3, மலங்கள் 3, பிணிகள் 3,
   விகாரங்கள் 8, ஆதாரங்கள் 6, மண்டலங்கள் 3, நாடிகள் 10,
   வாயுக்கள் 10, அவத்தைகள் 5 =96

பயன்படுத்திய நூல்கள்

2005 - திருமந்திரம், திருப்பனந்தாள் காசித் திருமடம், ஒன்பதாம் பதிப்பு.

1994 - க. வெள்ளைவாரணர், பன்னிரு திருமுறை வரலாறு முதற்பகுதி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

2005 - மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, பத்தாம் நூற்றாண்டு, பதினான்காம் நூற்றாண்டு, தி பார்க்கர், சென்னை.

2005 - ஏ.வி. சுப்பிரமணியன், தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.

2008 - தி.தங்கவேல், சித்தர்களின் தத்துவமரபு, பாரதி புத்தகாலயம், சென்னை.

2012 - வீ. அரசு, சித்தர் மரபு: நவின சித்து விளையாட்டுகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

69. உடற்கூற்று அறிவியல் நோக்கில் சித்தர்களும் திருமூலரும்



முனைவர் க.முருகேசன்
தமிழ்த் துறைத் தலைவர்
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர் - 641 029.

உடலும் திருமந்திரமும்

இம்மண்ணில் தன்னைப் படைத்த இறைவனை அறிந்து, இறைவன் படைப்பில் பரிணமித்துள்ள பிற உயிர்களையும் அறிந்து, அகண்டாகார சிவபோகமாய் எங்கும் பரந்து விரிந்து பூரணமாய் நிறைந்திருக்கும் இறையருளில் திளைப்பதே மானுடப் பிறப்பின் மகத்தான நோக்கம் எனலாம். இறையருளை அடையும் இலக்கை நோக்கி மனிதனைச் செலுத்தும் திருமுறை இலக்கியங்களில் அறிவுக் கருவூலமாகவும், ஞானநூலாகவும், வாழ்வியற் களஞ்சியமாகவும், நல்வாழ்வியல் மருத்துவக் களஞ்சியமாகவும் திகழ்வது திருமூலரின் திருமந்திரம். மண்ணில் நல்ல வண்ணம் வாழும் வழிகளைச் சுட்டும் இந்த அறநூலில் மருத்துவம், உடல் நலம், மனநலம் பற்றிய பல்வேறு ஆக்கக் கூறுகள் பரவலாகக் காணக்கிடக்கின்றன. மனித வாழ்வின் பன்முக ஒளிவீச்சில் வைரத்தின் பட்டைகளாகச் சுடர்விடும் மருத்துவக்கூறுகளில் உடற்கூற்று இயக்கம் தொடர்பான திருமூலரின் சிந்தனைகளை வெளிப்படுத்திக் காட்டுவதை இக்கட்டுரை நோக்கமாகக் கொண்டமைகின்றது.

புல்லாகிப் பூடாகிப் புழுவாகி மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லா மனிதராய்ப் பேயாக் கணங்களா
வல்லசுர ராகிமுனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்

என்ற மணிவாசகப் பெருந்தகையின் கூற்றின்படி இம்மண்ணில் பிறப்பெடுத்துள்ள ஒவ்வொரு உயிரும் பரிணாம வளர்ச்சியடைந்து இறுதியில் மனித வடிவத்தை அடைகின்றது. மற்ற உயிரினங்களுக்கும் உயிர்களிலேயே மிகச் சிறந்ததாகக் கருதப்படும் மனித இனத்திற்கு வாய்க்கப்பெற்ற புலனறிவுகளாகிய ஐந்தறிவுடன் அக அறிவாகிய ஆறாவதான பகுத்தறிவே ஆகும். பஞ்சபூதங்களின் சேர்க்கைதான் இப்பூதவுடல் என்பதை,

மண்டினிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீமுரணிய நீருமென்றாங்கு
ஐம்பெரும் பூதத்தியற்கை போல

என்னும் புறநானூற்றுப் பாடல் விளக்குகின்றது. இதனைத் தொல்காப்பியம் 'நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்தும் கலந்த மயக்கம் உலகம்' என்றுரைக்கின்றது. இந்த பஞ்சபூதச் சேர்க்கை ஒன்றிலிருந்து ஒன்று தோற்றம் கண்ட தன்மையில், ஒன்றினை நீக்கி இன்னொன்று இயங்க முடியாத அடிப்படையில் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

மானின்கண் வானாகி வாயு வளர்ந்திடும்
கானின்கண்நீருங் கலந்து கடினமாத்
தேனின்கண் ஐந்துஞ் செறிந்தைந்து பூதமாப்
பூவின்கண் நின்று பொருந்தும் புவனமே (385)

என்னும் திருமந்திரப் பாடல் மேற்கண்ட கூற்றினை மெய்ப்பிக் கின்றது. மேலும் இந்த உலகில் உள்ள எல்லாப் பொருட்களும் பஞ்சபூதங்களாலேயே உருவானவை.

எட்டுத் திசையும் எறிகின்ற காற்றொடு
வட்டத் திரையானல் மாநிலம் ஆகாயம்
ஒட்டி உயிர்நிலை என்னும்இக் காயப்பை
கட்டி அவிழ்ப்பான் கண்ணுதல் காணுமே (725)

என்கின்றது திருமந்திரம். மனித உடலில் நிலம்-1 1/4, நீர்1 1/2, நெருப்பு-1, காற்று 3/4, ஆகாயம் 1/2 என்ற விகிதத்தில் கலந்துள்ள கூட்டுச்சேர்க்கை என்பது மருத்துவர்களின் கருத்தாகத் திகழ்கின்றது. மேலும்,

உரமடி மேதினி யுந்தியி லப்பாம்
விரவிய தன்முலை மேவிக்கீ ழங்கி
கருமுலை மீமிசை கைக்கீழிற் காலாம்
விரவிய கந்தர மேல்வெளி யாமே (1964)

என்று உடலினைத் தாங்கும் பாதத்தினை நிலமாகவும், பாதத்தில் இருந்து கொப்பூழ் வரை நீராகவும், கொப்பூழிலிருந்து மார்பு வரை தீயாகவும், கழுத்துக்கு மேலே வானவெளியாகவும் பஞ்சபூதம் அமைந்துள்ளது என்கின்றார் திருமூலர். இதனையே யூகிமுனி என்னும் சித்தர், மண்ணின் கூறாக மனித உடலில் விளங்குபவையே எலும்பு, தோல், தசை, நரம்பு, உயிர்: நீரின் கூற்றாக மனித உடலில் இருப்பவை இரத்தம். சீழ், மூளை, மச்சை: நெருப்பின் கூறாக ஆதாரம், தூக்கம், போகம், பயம், சோம்பல்: வாயுவின் கூறாக காமக்குரோத லோப மோக மத மாச்சரியம்: ஆகியவை திகழ்வதாகக் கூறுகின்றார் (யூகி தத்துவ ஞானம், சித்தர் உடல் தத்துவம், ப. 60).

சீவனின் பருவுடல் பஞ்சபூதக் கூட்டான அணுத்திரள்கள் என்னும் செல்களால் கட்டப்பட்டது என்கின்றார் வேதாத்திரி மகரிசி. இதனையே இன்றைய அறிவியலாளர்,

நிலம் (Protein Matric)
நீர் (Water in cell)
காற்று (Oxygen, Nitrogen, Nitric Oxide)
அக்னி (Cakirues from Glucose)
ஆகாயம் (Vaculoes in Cytoplasum)

எனப் பிரித்துக் காட்டி, இவையனைத்தும் சரியான விகிதத்தில் இணைந்து இருத்தலே செல் உயிருடன் இருக்க உதவுகின்றது என்கின்றனர். எனவே இதனடிப்படையில் நோக்கும் போது நம் மனித உடல் ஐம்பூதச் சேர்க்கை பூதஉடல் என்னும் கருத்து உறுதிப்படுத்தப் படுகின்றது.

விண்களின் கூட்டே மற்ற நான்கு பௌதீகப் பொருள்களின் தோற்றத்திற்குக் காரணமாக அமைகின்றது. நமது உடலில் உள்ள,

- கோடிக்கணக்கான செல்களால் அடுக்கப்பட்ட பரு உடல் நிலமாகவும்
- அதற்கு ஊடே ஓடிக் கொண்டிருக்கும் இரத்த ஓட்டம் நீராகவும்
- நரம்புகிளன் மூலமாக நமது உடலில் மின்சக்தி வெப்பமாகி அது உடலுக்குத் தேவையான 98.6 டிகிரி பாரன்கீட் என்ற அளவில் இயங்கி வரும் வெப்ப ஓட்டம் தீயாகவும்
- உடலிலே உருவாகும் கரியமில வாயுவை வெளியேற்றி உயிர்வளியைப் பிராணவாயு கொண்டு சேர்க்கும் காற்று ஓட்டம் காற்றாகவும்
- உயிராக இயங்குகின்ற விண்துகள்களின் சுற்று ஓட்டம்

விண்ணாகவும் விளங்குகின்றது என்பது வேதாத்திரி மகரிசியின் கருத்து. இந்த ஐந்தும் சரியாக இயங்கும் போது உடல் நலமுடன் சீராக இயங்கும். இல்லையெனில் ஏதேனும் ஒன்று குறைந்தாலோ, அல்லது மிகுதியானாலோ பல நோய்கள் தோன்றும்.

பெறற்கரிய சீருடல்

ஊற்றைச் சரீரம், ஆபாசக்கொட்டில்
ஊன்பொதிந்த பீற்றந்துருத்தி, சோறிடும் தோல்பை
நீர்மேற் குமிழியிக் காயம்
ஊற்றைச் சடலமடி உப்பிருந்த பாண்டமடி

என்றெல்லாம் உடலை இழிவுப் பொருளாகக் கருதிய காலகட்டத்தில், இக்கூற்றுக்களுக்கு எல்லாம் மறுதலிப்பாகத் திருமூலரின் பாடல் அமைந்தது.

உடம்பினை முன்னம்இழுக் கென்றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்று
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே

என்று உடலின் மகத்துவத்தை உணர்த்துகின்றார். உடல் அழியாமல் நலத்துடன் இருந்தால்தான், அதனுள் இருக்கும் சீவனாகிய ஆன்மாவைப் போற்றிப் பாதுகாக்க முடியும். எனவே,

உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திறம்பட மெஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே

என்று பாடுகின்றார் திருமூலர். 'மனித உடம்பும் இந்த மனித வாழ்வுமே தெய்வத்தைக் காண்பதற்கு ஒப்பற்ற சாதனங்கள்' என்பர். உடலைப் பாதுகாப்பதன் மூலமே உயிரைக் காப்பாற்ற முடியும். ஓம்பப்படும் உயிர்தான் சிவத்தோடு கலந்து ஆன்மஈடேற்றம் காணமுடியும். எனவே,

உடம்பினார் பெற்ற பயனாவது எல்லாம்
திறம்பட ஈசனைத் தேடு
உடம்பினைப் பெற்ற பயனாவது எல்லாம்
உடம்பினுள் உத்தமனைக் காண்

என்ற பாடல்கள் உணர்த்தும் உண்மையை உணர்ந்து உடம்பினைப் பேணவேண்டியது அவசியமாகின்றது.

உயிர்ச்சத்தும் உயிர்களின் தோற்றமும்

வீயம்அது ஆகிய விந்துவின் சத்தியால்
அது அகண்டமும் அண்டமும் பாரிப்பக்
காயஜம் பூதமும் காரிய மாயையில்
ஆயிட விந்து அகம் புறம் ஆடுமே

என்பது திருமந்திரப்பாடல், விதையான விந்துவின் ஆற்றலால் அகண்டமும், அண்டமும் தோன்றி விளங்க, ஐம்பூதங்களும் தோன்றி, விந்து அவற்றின் உள்ளும் புறமும் அதுவேயாக விளங்குகின்றது என்று கூறுவதன் மூலம் விந்துவே அண்டமும், உயிர்களும் தோன்றக் காரணமாயுள்ளது என்பதை அறிய முடிகின்றது.

நம் உடல் தோன்ற மூலக்காரணமாக உள்ள விந்து, உண்ட உணவின் சாரத்தால் தாதுவாக மாறி அவற்றிலிருந்து விந்துவாக உருப்பெறுகின்றது. இது ஆண் உடலில் இருபத்தொரு நாட்கள் வளர்கின்றது. அவ்வாறு வளர்ச்சியடைந்த விந்த மூன்று நாட்கள் உடலில் இருக்கும். பின் அவரவர் நிலைக்கேற்ப மனவிந்தாகவோ அல்லது நீங்கவோ செய்யும். இவ்வாறாகக் கரு என்பது முதலில் ஆணின் உடலில் 21 நாட்கள் இருந்து வளர்ந்து மூன்று நாட்களுக்குள்

பெண்ணோடு இணையும் தருணத்தில் கருப்பையைத் தேடிச் சென்றடைகின்றது. இதனை,

கருவை ஒழிந்தவர் கண்டநால் மூவேழ்
புருடன் உடலில் பொருந்துமன் றோரார்
திருவின் கருக்குழி தேடிப் புகுத்த
உருவம் இரண்டாக ஓடி விழுந்ததே

என்று திருமந்திரம் புலப்படுத்துகின்றது.

கருவின் விதியமைப்பு

திருமூலரின் மேற்கண்ட கருத்தினை ஓட்டிய 'நல்லதும் கெட்டதும் ஒவ்வொரு மனிதனின உடல், உள்ளம் அளவிலேயே அதாவது தாயின் கர்ப்பத்தில் சிசுவிற்கு மூளை உருவாகின்றபோதே தீர்மானிக்கப்பட்டு விடுகின்றன என்கின்றார் டாக்டர் கே. லோகமுத்துகிருட்டிணன். இதனையே,

நாதன் ஒருவனும் நல்ல இருவரும்
கோது குணத்தொடும் கூட்டிக் குழைத்தனர்

என்று திருமூலர் குறிப்பிடுகின்றனார். 'வினைப்பயனே ஒரு தேகம் கண்டா' என்று பெரியோர்களும், தற்கால அறிவியலார் 'Genetic Centre' என்று கூறுவதும் இதனையே என்கின்றார் வேதாத்திரி மகரிசி (வாழ்வியல் விழுமியங்கள்).

கரு உருவாதல்

ஆணும் பெண்ணும் அகமும் புறமும் ஒத்து இன்புற்று சேரும்போது கருவின் (சீவனின்) பண்பு, அது வாழ வேண்டிய காலம் வாழ்க்கை ஆகியவை கருவில் அமைத்து விடுகின்றன. இதனை,

இன்புறு காலத் திருவர் முன்பூறிய
துன்புறு பாசத் துயர்மனை வானுளன்
பண்புறு காலமும் பால்மிசை வாழ்க்கையும்
அன்புறு காலத் தமைத் தொழிந்தனனே

என்ற பாடலில் திருமூலர் காட்டுகின்றார். இவ்வாறு அமைந்த கருவில், பூவின் மணத்தைப் பொருந்திய காற்று உலகெங்கும் சஞ்சரிப்பது போல சீவனில் மூச்சுக்காற்றும் சென்று அமைந்து முழுமையாக ஒரு சிசுவாக வளரத் தொடங்குகின்றது.

சுக்கில நாடியில் தோன்றிய வெள்ளியும்
அக்கிரமத்தே தோன்றுமவ் வியோனியும்
புக்கிடும் எண்விரல் புறப்பட்ட நால்விரல்
அக்கரம் எட்டும்எண் சாணது வாகுமே

என்ற பாடலில் ஆணின் சுக்கிலமும் கருப்பையில் தோன்றும் சுரோணிதமும் கலந்து எட்டு விரற்கிடை அளவில் இருந்து நான்கு விரற்கிடை அளவு உள்ளே புகும்போது, எண்சாண் அளவு உடம்பு உருக்கொள்ளும் என்று விளக்கம் அளிக்கின்றார் திருமூலர்.

கருவளர்ச்சி

நீங்கிய நீங்கிநிமிர்ந்த வளர்ந்தோங்கும்
ஓங்கிட ஓங்கிட உறுதியாயம் வாயுலகம்
வாங்கிட வாங்கிட வன்னி தலைக்கொளும்
பாங்கிடப் பாங்கிடப் பத்தாகும் திங்களே

திங்கள் பத்தாகித் தேயுவொடு வாயு சேர்ந்து
அங்கி மலர்த்தி அளியாயக் கீழ்நோக்கி
பொங்கிப் பிறந்த நாள் புகழ்வார்வெறு வீணர்
தங்கிச் செனிக்கையில் தான்நோயும் பிறந்ததே

என்ற பாடல்களில் மேற்கண்ட செய்திகள் பொதிந்துள்ளன.

ஊனுடம்பின் ஆக்கம்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இயற்றப்பட்டதாகக் கருதப்படும் திருமூலரின் திருமந்திரத்தில் இடம்பெற்றுள்ள உடம்பின் ஆக்கம், கரு உற்பத்தி, அமுரிதாரணை, ஆயுள்பரிட்சை, காயசித்தி உபாயம், தியானம், பரியங்க யோகம், விந்துற்பனம், போக சரவோட்டம், பிராணாயாமம் போன்ற பகுதிகளில் உடல் இயங்கியல் பற்றிய மந்திரங்கள் மனதை மயக்குகின்றன. அறிவியல் வளர்ச்சியோ, அறிவியலின் பயன்பாடோ இல்லாத அக்காலகட்டத்தில் உடல் இயங்கியலின் நுணுக்கங்களை உணர்ந்து, அவற்றைத் தன் பாடல்களில் பதிவாக்கியுள்ள ஆசிரியரின் அறிவுத்திறம் எண்ணி இன்புறத்தக்கது. எலும்புகளாகிய கழிகளைக் கொண்டு நரம்புகளாகிய கயிறுகளால் பிணித்து செம்மை நிறமாகிய தசையினால் கட்டப்பட்டதே இவ்வுடல் (பா. எ. 461) என்ற கருத்தும் நாம் உண்ணும் உணவு மூன்று கூறுகளாகப் பிரிந்து உடலைப் பேணுகின்றது. ஒன்று பருவுடலை வளர்ப்பதற்கும், மற்றொன்று நுண்ணுடலில் மனதை வளர்ப்பதற்கும், பிரிதொன்று சக்கையாகிய கழிவினைக் கழியச் அசெய்வதற்கும் பயன்படுவதாகக் குறிப்பிடும் (பா.எ.1933)கருத்தும் அறிவியல் நோக்கில் சிந்திக்கத் தக்கது.

கருத்தோற்றமும் பரிணாம வளர்ச்சியும்

எப்போதும் நீங்காது மீக்குறும் எழில் இன்பம் மக்கட்பேறு ஒன்றால் மட்டும் உண்டாகும். அதனை அடைதற்கு மனையறம் பேணும் இயல்புடைய இருவராகிய கணவனும் மனைவியும் விரும்பிக் கடவுளைக் கைதொழுது முயலுதல் வேண்டும். அவ்வாறு வணங்கி முயலும்போது இருவரிடம் பேரன்பு உண்டாகும். அவ்வன்பின் பெருக்கால் இருவரும் அகம், புறம் ஒத்துக்கூடுவதால் அக்கூட்டத்து உறுபயனால் கருவுறும். வானத்துள் இறைவனது ஆருயிர் கருவிற்புகுமாறு திருவுள்ளங் கொள்வான். அவ் இறைவனே உயிர்களின்

வினைக்கீடாகப் பொருந்தும் பண்பும், வாழ்நாளும் பார்மிசை வாழ்க்கையும் கருவினுள் பதித்தருளுவான் என்பது திருமந்திர வாக்கு. இல்வாழ்க்கையில் மக்கட்பேறு அமையும் தன்மையை அறிவியல் கண்ணோட்டத்துடன் நோக்குகின்றது திருமந்திரம்.

மரம் முளைக்க விதை, பறவை பிறக்க முட்டை, மனிதன் பிறக்க விந்து. இதனை யோக சாதனை வழியாகச் சுழுமுனை வழியாக சகஸ்ர தளத்திற்கு ஏற்றி வெற்றி காண்போருக்கு சிவலோகம் கிட்டும் என்பதை 'விந்து அடங்க விளையும் சிவலோகமே' (பா. எ. 1969) என்ற மந்திரம் குறிப்பிடுகின்றது. உடலின்பம் கருதி இதனைக் கீழ்விடுவோருக்கு சிற்றின்பம் மட்டும்தான் கிட்டும். அச்சிற்றின்பத்தின் பயனாகப் பெறுகின்ற மக்கட்பேறு மண்ணில் உறவுகளுக்கு மட்டும்தான் நிலைபேற்றுத் தன்மையைப் பெற்றுத்தரும்.

தொகுப்புரை

இவ்வுலகமே பஞ்சபூதங்களின் சேர்க்கை என்னும் நிலையில் ஒன்றிலிருந்து ஒன்று தோன்றி ஒன்றாக இயங்கிக் கொண்டிருக்கின்றது. மனித உடல் பஞ்சபூதங்களின் சேர்க்கை என்பதற்குச் சித்தர் பாடல்களும், திருமூலரின் திருமந்திரப் பாடல்களும் சான்றாகின்றன. அண்டத்திலிருந்து பிண்டம் (மனித உடல்) வரை அனைத்தும் பஞ்சபூதக் கூட்டமான அணுத்திரள்கள் என்னும் செல்களால் கட்டப்பட்டவை. மனித உடலும் மனித வாழ்வே ஆன்மா ஈடேற்றம் பெற உதவும் ஒப்பற்ற சாதனங்களாக விளங்குகின்றன. உடலைக் கொண்டே உயிர் ஓம்பி முக்தி அடையமுடியும். எனவே உடலைப் பேணி வளர்க்க வேண்டியது அவசியம் என்பதைத் திருமூலர் அறிவுறுத்துகின்றார். எதையும் அறிவியல் கண்ணோட்டத்துடன் நோக்கும் அணுகுமுறை திருமூலரிடம் இயல்பாகவே நிலைபெற்று இருந்தமையால் உடலும், அவ்வுடல் தொடர்பான அதன் இயக்கத்திலும் அழ்ந்த சிந்தனை வெளிப்பாடு அவருக்கு இருந்தது என்பது புலனாகின்றது. உயிர்கள் இம்மண்ணில் தோன்றுவதற்கு மிக முக்கியமான முதற்காரணம் விந்துநாத திரவமே என்பது திருமூலரின் பாடல்களில் தெளிவாகின்றது.

70. திருமூலரின் சமய சன்மார்க்க நெறி



ச.ஞானசம்பந்தன்
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை

உலகில் சமயங்கள் பலப்பல. அவை ஒவ்வொன்றும் அவரவர் அறிவின் தெளிவுக்கேற்ப மனப்பக்குவத்திற்கேற்ப இறைவன் திருவருளால் அவரவர்க்கு அறிவுறுத்தப்பட்டவையே. மனித குலத்தின் பலமும் பலவீனமும் சமயமே. ஓர்இனம், குழு இவைகள் தனக்கென ஏற்படுத்திக்கொண்ட சடங்குகள், பழக்க வழக்கங்கள் நடைமுறை மரபுகள் இவற்றால் வேறுபடுகிறது. அவர்களின் வெவ்வேறு ஆன்மிக வழிபாடுகள் வெவ்வேறு சமயங்கள் தோன்றக் காரணமாயின. எனினும், சமயங்களின் அடிப்படைத் தத்துவம் என்பது இறைநிலை உணர்வது என்பதாகும்.. இச்சமயங்கள் எல்லாம் கடந்து விளங்குபவன் இறைவன். அவன் ஒருவனே என்று உணரும்போது சமயப்பிணக்கின்றி உண்மையான சாந்தி நிலை அடையலாம் என்று முதன்முதலில் கூறி சமயங்களிடையே சமரச நிலையைக் காணமுற்பட்டார் திருமூலர்.

சன்மார்க்க நெறி

மதத்திற்கு ஒரு தெய்வம் அல்லது பலதெய்வங்கள் என்று இறை நிலையைப் பலவாறாகக் காட்டிக் கொண்டிருப்பதால் இறைநிலை பற்றிய உண்மை சிதறுண்டு இருக்கிறது. இந்நிலையில் உலக மெங்கிலும் உள்ள ஞானிகள் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற மந்திரத்தை மக்களிடையே பதியுமாறு செய்யும்போது வேற்றுமைகள் நீங்கி உலக மக்கள் ஒற்றுமையுடன் வாழ வழி உண்டாகும். இதற்கு ஒரே வழி சமரச சன்மார்க்க நெறி ஒன்றேயாகும். ஒவ்வொரு சமயத்திலும் ஒவ்வொரு கொள்கை உண்டு அந்தந்த, தேசத்தின் சூழ்நிலை மக்களின் மனநிலைக்கேற்றவாறு அது வேறுபடுகிறது. இந்த வேறுபாடு நாட்டையே துண்டாக்கி மக்களிடையே காழ்ப்புணர்ச்சியினை தோற்றுவிக்கிறது. அப்போது உண்மைப் பொருளை ஆராயாமல் வீன்பெருமைகளை பேசி கடவுள் ஒருவனே என்ற உண்மையை மறந்து விடுகின்றனர். சமயக் காழ்ப்பின்றி சமயங்களைக் கடந்த மெய்ப்பொருள் ஒன்றே என்றுணர்ந்து வழிபடும்போது உலகில் உள்ள எல்லா வேறுபாடுகளும் ஒழியும்.

திருமூலர் சமயம் - இறைக்கொள்கை அன்பே ஆகும். அன்பு வடிவான இறைவனை அன்புடையாரே அடையமுடியும் இதனால்தான் அன்பே சிவம் என்கிறார் திருமூலர்

அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலர்
அன்பே சிவமாவதாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே (270)

அன்புடன் கலத்தல் என்பது அன்பே வடிவமாக ஆதல். அன்பே வடிவமாக ஆகிறவர்கள் பிற உயிர்களுக்குத் தொண்டு செய்வதே அன்புடன் கலத்தல் அல்லது சிவத்துடன் ஒன்றுதல். சிவ வழிபாடு என்பது உயிர்களிடத்தில் அன்பு கொண்டு தொண்டு செய்தலே என்பதை திருமூலர் உரைக்கிறார்.

அறம் செய்வதற்கு அன்பே அடிப்படையாகும். அன்பு என்பது ஒரு பண்பு நிலை. ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற குறிக்கோளைக் கொண்டது அன்புநெறியாகும். நம் சமயம் பிற சமயம் என்ற மாறுபாடோ நம் இனம் பிறஇனம் என்ற வேறுபாடோ இல்லாத நிலையில் அன்பு மலரும். அது மட்டுமல்லாது பிறர் துன்பத்தினைக் கண்டபோது அத்துன்பம் நீக்க உதவுவதே அன்பின் செயலாகும். அன்புடையோர் எல்லோரும் துன்பம் நீக்கி இன்புற்றிருக்கவே விரும்புவர் என்பதை தாயுமானவர்,

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றிறயேன் பராபரமே

என்கிறார்.

திருமந்திரம் மக்கள் ஒற்றுமையாக வாழ்வதற்குரிய அன்பு நெறியினை வலியுறுத்துகிறது.

ஒன்றே குலம் ஒருவனே தேவன்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சேன்றே புகும்கதி யில்லைநுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர் நினைந் துய்மினே (2104)

இதுவே மனிதசமுதாயம் இன்று பெறவேண்டிய முடிவான லட்சியமாகும். இது எப்போது சாத்தியமாகும்? கடவுள் உண்டு என்றும் அவன் ஒருவனே அவனை வழிபடும் நெறியும் ஒன்றே என்றும் உணரும்போதுதான் இது சாத்தியமாகும்.

சமயம்

சமயம் என்பது சமைத்தல் அல்லது பண்படுத்துதல் - மனிதனைப் பண்படுத்தி புதிய மனிதனாக அவனை பக்குவப்படுத்துவதே சமயத்தின் நோக்கமாகும். உலகில் வாழ்கின்ற எல்லோரும் ஒரே மூலத்திலிருந்து வந்தவர்கள்தாம். எல்லோரும் சமம் என்ற எண்ணத்தை வைத்துக் கொண்டு ஒருவருக்கொருவர் ஒத்தும் உதவியும் என்ற ஒரு நெறியைச் சமயம் என்று சொல்லலாம். சமம் + இயம் = சமயம். இதுவே சமய நெறியானது. இதனையே வேதாத்திரி மகரிஷியும்,

சமயம் என்பது சம இயம் இணைந்த சொல்
சமயம் உயிர்கள்பால் நேர்நிறை உணர்வுதான்
சமயக் கருத்துதான் மதங்களின் உயிரதனால்
சமயம் என்றும் நாம் மதங்களைச் சொல்லுவோம் (ஞா.க 499)

என்று சமயநெறி உருவான கருத்தினை உணர்த்துகிறார்.

சாதி மற்றம் மதத்தின் பெயரால் சண்டை உண்டாகிறது. ஒரு மதத்திலேயும் பல பிரிவுகளுக்கிடையேயும் சண்டை. மதத்தின் அடிப்படையில் பிற நாட்டின்மீது படையெடுத்து அந்நாட்டு மக்களைப் பலாத்காரமாக மதமாற்றம் செய்வதும் நடந்துகொண்டே உள்ளது.இதிலிருந்து விடுபட அன்புநெறியினை அறநெறியாக அருளுகிறார் திருமூலர்.

அன்பு சிவம் இரண் டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே (270)

ஆறு சமயங்களும் கடந்த ஒரு பொருளை சிவன் என்கிறார் திருமூலர். ஆறு சமயமும் கண்டவர் உண்மைப் பொருளைக் காணாது வீண்பெருமை பேசிக்கெடுகின்றனர். இறைவன் ஒருவனே - அவனே தேவன் எனத் தேறி தெளியுங்கள். இவ்வாறு தெளிந்தால் சமயப் பிணக்கின்றி உண்மையான சாந்தி நிலையான வீடுபேறு அடையலாம் என்கிறார்

ஆறு சமயமுங் கண்டவர் கண்டிலர்
ஆறு சமயப் பொருளும் அவனவன்
தேறுமின் தேறித் தெளிமின் தெளிந்தபின்
மாறுதல் இன்றி மனைபுக லாமே (1533)

சமயக் காழ்ப்பின்றி இம்மெய்ப்பொருளே சமயம் கடந்த பொருள் என்று உணர்ந்து வழிபடும்போது உலகின் அனைத்து வேறுபாடுகளும் ஒழியும். ஒருவனே தேவன் என்ற நிலை உண்டாகும்.

நம் இனம் பிற இனம் நம் சமயம் பிற சமயம் என்ற வேறுபாடுகள் அன்பின் முதிர்ச்சியில் உண்டாகாது. மேலும் துன்பப்படும் உயிர்களுக்கு உதவுவதே அன்பின் செயலாகும். எல்லோரும் துன்பம் நீங்கி இன்புற்றிருக்கவே அன்புடையவர் விரும்புவர் அதனால்தான் திருமூலரும் யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்றார். தாயுமானவரும்

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே

என சமய வேறுபாடின்றி எல்லோரும் இனிதுடன் வாழ விரும்பினார்.

தான்அவன் ஆகித் தான்ஐந்தாம் மலம்செற்று
மோனம் ஆம் மொழிப்பால் முத்தர் ஆவதும்
ஈனம்இல் ஞான ஆநுபூதியில் இன்பமும்
தான்அவ னாய்அற்றல் ஆனசன் மார்க்கமே (1481)

சன்மார்க்கம் தரும் பயனாய் அடைவது ஆன்மா. ஆணவம் கன்மம் மாயை மாயேயம் திரோதாயி என்ற ஐந்து தன்மலம் நீங்கி மௌனநிலையில் அடங்கி முக்திநெறி அடையப் பெறுவதும் தானே அவன் என்ற சாயுஜ்ய நிலை ஆவது சன்மார்க்கமே என்கிறார். சன்மார்க்க நெறி ஞானமார்க்க நெறியாகும். இது மாணிக்கவாசகர் கொண்ட நெறியாகும். அவரைக் குருவாய்க்கொண்டே வள்ளலார் சமரச சுத்த சன்மார்க்க நெறியினை மேற்கொண்டார். சுத்த சமரச சன்மார்க்கம் வகுத்த வள்ளலார் சமயம் கடந்த நெறியினைக் கொண்டு அருட்பெருஞ்சோதியாக இறைநிலையை உணர்ந்தார்.

காலத்தாலும் இடத்தாலும் மொழியாலும் மதபோதனை, வழிபாடு போன்றவைகளில் வேறுபாடுகள் இருக்கின்றன. இருந்தாலும் மதங்கள் அனைத்திலும் இறைவழிபாடு அறநெறி என்ற ஒற்றுமையைக் காணமுடிகிறது. இறையுணர்வின் முற்பகுதி பக்தி வழியாகவும் பிற்பகுதி ஞான வழியாகவும் உள்ளது. அறவழிபாடு என்பது உயிர்வழிபாடு. இதில் ஒழுக்கம், கடமை,ஈகை என்ற அறநெறி வலியுறுத்தப்படுகிறது. இறைவழிபாட்டில் பக்தி விளக்கம் முழுமைப்பேறு என்ற மூன்றும் உள்ளது. சைவம், வைணவம், சௌரம், சாக்தம், கௌமாரம், காணபத்யம் என்ற ஆறு சமயங்கள் உருவாவதற்கு மனிதனின் கேள்விகளும் ஞானியர்களின் விளக்கங்களும் காரணமாயின.

மத நல்லிணக்கம்

மனிதனுக்கு இனி ஒரு மதம் போதும். மதத்திற்கு அடிப்படையாகத் தெய்வநிலை ஒன்றே போதும். மொழி, சாதி, இனப்பாகுபாடுகளால் தோன்றியுள்ள வேறுபாடுகள் மறைய வேண்டும். ஆதனால் மதநல்லிணக்கம் அனைத்து மதங்களிலும் ஏற்படுத்தப்பட வேண்டும். அனைத்து மதங்களிலும் உண்மை இருக்கிறது. இருப்பினும் இவை ஓர் உண்மையைத்தான் கூறுகின்றன என்ற தெளிவு ஏற்பட மத நல்லிணக்கம் தேவை.

பிற மதங்களைச் சகித்துக்கொள்வதும், அவற்றின் கருத்துக்களை ஏற்றுக்கொள்வதும் கருணை காட்டுவதும் அம்மதத்தினரோடு அன்பு பாராட்டி ஒன்றுபடுவதும் மதநல்லிணக்கம் என்பதன் பொருளாகும். இப்பிரபஞ்சம் ஒரே இறைவனின் தோற்றம் என உணர்தல் மனிதருக்குள் சாதி மத வேறுபாடு இல்லா நிலை உண்டாகும்.

தெய்வம், உயிர், அறிவு, சீவகாந்தம் என்ற நான்கு மறைப் பொருட்களை மனிதன் உணரும்போது மத நல்லிணக்கம் ஏற்பட்டுவிடும். மனம் ஒரேநிலையில் இயங்கினால்தான் மதநல்லிணக்கம் சாத்தியமாகும். தியானம் செய்வது மனம் செயல் ஒழுங்கு அமைவதற்கு

வழியாகும். தவத்தினால் மனத்தூய்மை ஏற்படும். அது அன்பு கருணை அறம் தழைக்க மனம் ஒருநிலைப்படுத்தப்பட வேண்டும்.

ஆன்ம ஒருமைப்பாடு

எல்லா உயிர்களும் என்னை நண்பனாகக் கருதட்டும். அது போலவே நானும் எல்லா உயிர்களையும் நண்பனாகவே கருதுவேனாக - இந்த அன்பு நிலை நல்லொழுக்கம் ஆன்ம அறிவு ஆகியவற்றையே வேதங்கள் பெரும்பாலும் வலியுறுத்துகின்றன. இந்த அன்புநிலைதான் **"யாதும் ஊரே யாவரும் கேளிர்"** என்று கணியன் பூங்குன்றனார் பாடியதற்கு உரமாயிற்று. இதற்கு ஒருபடி மேலே சென்று காக்கை குருவி எங்கள் சாதி காடு மலைகள் எங்கள் கூட்டம் என்று மகாகவியும், வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்று வள்ளலார் கூறுவதும் வேதங்கள் அனைத்தும் உணர்த்தும் ஆன்மநேய ஒருமைப்பாட்டை மொழிவதற்கே என்பது புலனாகிறது.

உலகில் உள்ள எல்லா உயிரினங்களும், உலகம் முழுமையுமே ஒரே ஆற்றலால்தான் தோன்றியிருக்கின்றன. அந்த ஆற்றல், அந்தத் தத்துவம் ஒன்றுதான். அதுவே சத் என்ற உண்மைப் பொருளாகும். இந்த உண்மைப்பொருளின் அடிப்படை இறைநிலை. அதுவே எங்கும் நிறைந்து ஆற்றலாக உள்ளது. கண்ணுக்குப்புலப்படாத நுண்ணிய துகள்களில் உள்ள இந்த ஆற்றல் உலகம் முழுவதும் உயிராற்றலாக (ஆத்மாவாக) உள்ளது. அதுவேதான் (இந்த ஆற்றல்தான்) நீயாக இருக்கிறாய். இதுவே தத் த்வம் அசி தத்துவமசி. இந்த உயிராற்றலைதான் நவீன அறிவியல் எனர்ஜி என அழைக்கிறது.

இறைவன் எல்லா உயிர்களுனுள்ளும் கலந்து இருக்கின்றான். ஆனால் உயிர்கள், அவன் தன்னுள் உடனாய் இருப்பதை அறியாது இருக்கின்றன என்பதை திருமூலர்,

உள்ளத் தொருவனை உள்ளுறு சோதியை
உள்ளம் விட்டோடி நீங்கா ஒருவனை
உள்ளமும் தானும் உடனே இருக்கினும்
உள்ளம் அவனை உருவறியாதே (431)

உள்ளத்துள்ளேயே இருந்தும் இறைவனை, உயிர் அறியாமைக்கு மறைப்புச் சக்தியே காரணம். உண்மை அன்பால் சிந்தையை இறைவன்பால் செலுத்தினால் அந்த உண்மையான உள்ளம் ஒன்றிய வழிபாட்டால் இறையருள் கிட்டும் என்கிறார் திருமூலர்.

உயிர்க் குயிராய் நிற்றல் ஒண்ஞானப் பூசை
உயிர்க் கொளிநோக்கல் மாயோக பூசை (1444)

இதில் உயிர்க்கு உயிராய் நிற்றல் என்பது எல்லா உயிர்களையும் தன்னுயிர் போல் எண்ணி நிற்பது இதுவே உயிரினுள் ஒளியைக் காணும் ஒண்ஞான பூசையாகும்.

எங்கும் பரந்துள்ள ஆற்றல்தான் நம் ஒவ்வொருவரிடையேயும், ஒவ்வொரு பொருளிலும் இருக்கின்றது. நம்மிடம் உள்ள அந்த ஆற்றல்தான் எங்கும் பரந்து விரிந்துள்ளது. ஆக ஆன்ம அறிவு ஆன்ம ஒருமைப்பாடு இவற்றை உணர்ந்தவருக்கு ஆண்டவன் எனத் தனியாக எதுவம் இல்லை. இவ்வாறாக ஆன்ம ஒருமைப்பாட்டை அமைத்தவர்கள் மனிதருக்குள்பிரிவினை பார்ப்பதில்லை. இந்த ஆன்மநேயம் அமைந்த ஒருவன் பிறருக்கோ பிற உயிர்களுக்கோ தீங்கு செய்வதில்லை என உறுதி எடுத்துக்கொள்கிறான். துன்புறுத்தாமை என்ற அகிம்சை எல்லா அறநெறிகளிலும் மிகச்சிறந்ததது. மனிதன் எல்லோரும் தன்னிடம் அன்பு பாராட்ட வேண்டும் என விரும்புகிறான். அதுபோலவே அவனும் பிற உயிர்களிடத்து தயை காட்டவேண்டும். இதுவே தன்னைப்போல் பிறரையும் நேசி என்ற தத்துவம் மலர்ந்த விதமாகும். இதையே வேதாத்திரி மகரிஷி, உலகமக்கள் அனைவரும் உலக அமைதி என்ற இலக்கை அடைய இரண்டொழுக்கப் பண்பாடாக,

நான் எனது வாழ்நாளில் தனக்கோ, பிறருக்கோ,
பிற உயிர்களுக்கோ துன்பம் தரமாட்டேன்.
துன்பப்படும் உயிர்களுக்கு என்னாலான உதவிகளைச் செய்வேன்

என்ற அறநெறியாக எடுத்துக்கொள்ள விழைகிறார்.

சமயம் கடந்த மோனரசம்

பல இடங்களில் தோன்றி உருவாகும் ஆறுகள் தொடக்கத்தில் ஒன்றாகவே இருந்து ஏரி, குளம், இவற்றிலிருந்து விரிந்து ஆறாக மாறுவது போலவே பல்வேறு வகையில் வேறுபடுகின்ற சமயவாதிகளின் கருத்திற்கேற்ப பரம்பொருளான இறைவனும் பல்வேறு சமயங்களாக மாறினாலும் முடிவில் இறைவன் ஒன்றே என்பது மாறுவதில்லை என்பதைத் தாயுமானவர்,

வேறுபடுஞ் சம்யமெல்லாம் புகுந்து பார்க்கின்
விளங்குபரம் பொருளேநின் விளையாட் டல்லால்
மாறுபடும் கருத்தில்லை முடிவில் மோன
வாரிதியின் நதித்திறள்போல் வயங்கிற் றம்மா

விளக்குகின்றார். இதனையே வேதாத்திரி மகரிஷியும்,

கடவுள் ஒன்றே பூரணமாம் உவமையில்லை
கருத்தொடுங்கிக் கருத்தறிந்த நிலையில் மௌனம்
கடவுள் அணு ஒலி ஒளி இறுக்கம் இவையாக உள்ளான்
கண்டிடலாம் அவனை எங்கும் இயற்கையாக (ஞா.க.)

கடவுள் உயிருக்கு மூலநிலையான உண்மைநிலை. அவனே அறிவான தெய்வமாக இயற்கையாக எங்கும் நீக்கமற நிறைந்துள்ளான் என்கிறார்.

பக்திநெறியும் சித்தர் நெறியும்

பக்தர்கள் ஞானிகள் யோகிகள் ஆகிய இம்மூன்று வகையினரும் இறையுணர்வு கொண்ட ஆன்மிகவாதிகளே. எனினும் பக்தர்கள், ஞானிகள் இருவரும் சமயம் என்ற எல்லைக்குள் தங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டவர்கள். யோகிகள் சித்தர்கள் சமயம் கடந்த ஆன்மிகவாதிகள். இறைவன் ஒருவனே என்ற இறைஞானத்தைப் போதிக்கும் ஞானியர்களும் சமய எல்லைக்குள் தங்களை அடைத்துக்கொள்ள மாட்டார்கள். ஞானிகள்வழி நடக்கும் பக்தர்கள் ஞானிகளைத் தங்களது சமய எல்லைக்குள் நிறுத்தி வழிபடுகின்றனர். எனினும் ஞானிகள் சமயம் கலவாத பொதுநெறியாளர்கள் என்பதே ஆன்மிக ஆய்வாளர்கள் கூறும் கருத்துகளாகும்.

சமய எல்லையைக் கடந்து நின்று இறைநிலை உணர்ந்வர்கள் எல்லா மதங்களிலும் எல்லா நாடுகளிலும் உண்டு. இந்து மதத்தில் சித்தர்கள் கிருத்துவத்தில் மிஸ்டிக்குகள், சீனத்தில் தாவோக்கள், இஸ்லாத்தில் சூ.ஃபிகள். இவர்கள் அனைவரும் ஆன்மிகத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு பொதுநெறியினை அமைத்தனர். இதுவே சித்தர்நெறி என்பது. தத்துவமும் மதமும் கலந்து உருவானது சித்தர்நெறி. தத்துவார்த்த சிந்தனை ஏதுமின்றி உள்ளுணர்வால் இறைஞானத்தைப் பெறுவது சித்தானுபவம். இது சொற்களால் வெளி படுத்த முடியாத ஓர் அனுபவம். இறைவனோடு தன்னை ஐக்கியப் படுத்தி இரண்டறக்கலந்து கரைந்துவிடுவதல், ஒன்றிவிடுதல் இந்தத் தன்மையே சித்தானுபவம்.இதைத் திருமூலர்,

சாற்றுஞ் சன்மார்க்கமாம் தற்சிவ தத்துவம்
தோற்றங்களான சுருதிச் சுடர்கண்டு
சீற்றமொழிந்து சிவயோகச் சித்தராய்க்
கூற்றத்தை வென்றார் குறிப்பறிந்தார்களே (1477)

சன்மார்க்கம் என்பது சிவத்தின் உண்மை வடிவங்களான சுருதிச்சுடர் கண்டு சினத்தைக் கைவிட்டு காலனை வென்ற சிவனின் உள்ளக்குறிப்பினை உணர்ந்தவர் பற்றுகின்ற நெறியே என்பதை உணர்த்துகின்றார். இதன்மூலம் சித்தர்கள் பெற்ற சித்தானுபநிலை என்பது சமயம் கடந்த சன்மார்க்க நெறியாகும்.

உண்மை நிலை

இறைவன் நிலம் நீர் நெருப்பு காற்று ஆகாசம் என்ற பஞ்ச பூதங்களிலும் கலந்து அவற்றின் இயக்கங்களுக்குக் காரணமாகவும் உள்ளான். இதனை அட்டமூர்த்தம் என்பர்.

ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந் தான் ஐந்து
வென்றனன் ஆறுவிரிந்தனன் ஏழும்பர்ச்
சென்றனன் தானிருந் தானுணர்ந் தெட்டே (1)

இறைவன் ஒருவனே சக்தியோடு இரண்டாகவும். மும்மூர்த்தி களாகவும், அறம் பொருள் இன்பம் வீடு என்ற உயிர்களில் உணர் வாகவும் உள்ளான். ஐம்பொறிகளையும் வென்றவன். மூலாதாரம், சுவாதிஸ்டானம், மணிப்பூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்கினை என்ற ஆறு ஆதாரங்களிலும் விரிந்து விளங்குகின்றான். ஏழாவது தளமான நிராதாரமான சகஸ்ரதளத்தில்மேல் பொருந்தி, பஞ்சபூதங்கள், சந்திரன், சூரியன்,ஆன்மா இவற்றுடன் எட்டு மூர்த்தங்களாகவும் விளங்குகின்றான். இத்துணை பேதங்களாக இருந்தாலும் அவனுக்கு ஓர் உருவம் இல்லை என்பதைத் திருமூலர்,

உருவிலி ஊனிலி ஊனமொன் றில்லி
திருவிலி தீதிலி தேவர்க்கு தேவன்
பொருவிலி பூதப் படையுடை யாளி
மருவிலி வந்தென் மனம்புகுந் தானே (2941)

என்ற பாடல் மூலம் உணர்த்துகிறார்.

எல்லாச் சமயங்களும் வெவ்வேறு பெயர்களில் கூறும் முழுமுதற் பொருளுக்கு இலக்கணம் வகுக்கையில் உண்மைப்பொருள் ஒளிவடிவானது என்பதையும் கருணையே வடிவமாகவும் உள்ளது பிறசமயத்தவரும் ஏற்றுக்கொண்டனர். உருவ வழிபாடு என்று வரும்போதுதான் பூசல் உண்டாகிறது. இதனை மனதிற்கொண்ட வள்ளலாரும் நாமரூபங்களைக் கடந்த உண்மைப் பொருளுக்கு உருவங்களைவிட்டு விடுவதில் தவறில்லை. அருட்பொருஞ்சோதியாக இறைவனை வழிபடும்போது அந்த நிலையினை எல்லாச் சமயங்களும் ஏற்றுக்கொள்ளும். அப்போது சமயவாதிகளிடையே முரண்பாடு இல்லாத சமரச சன்மார்க்க நிலை உண்டாகும் என்று விரும்பிச் சுத்த சமரச சன்மார்க்க நெறியினை உருவாக்கினார்

மேற்கோள் நூல்கள்

1. திருமந்திரம் காட்டும் வாழ்வியில் நெறிகள் முனைவர் தி.மகாலட்சுமி
2. ஆண்டவன் மறுப்பும் ஆன்மிகமே - பத்மன் (விகடன் பதிப்பகம்)
3. திருமந்திர நெறி - ஜி. வரதராஜன், பழனியப்பா பிரதர்ஸ்
4. அருளாளர்கள் - அ.ச.ஞானசம்பந்தன், கங்கை புத்தக நிலையம்
5. திருமூலர் காட்டும் இறைமை - கே.சிவராஜன், அழகு பதிப்பகம்
6. பண்பாட்டுப் பார்வையில் திருமந்திரம், சுடலி தியாகராஜன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
7. சித்தர்களின் நெறியில் வேதாத்திரிய யோகம் ஓர் ஒப்பாய்வு - ச.ஞானசம்பந்தன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

71. திருமந்திரமும் விநாயகர் அகவலும்

முனைவர் ச.முத்துச்செல்வி,
உதவிப்பேராசிரியர்,
டி.ஆர்.பி.சி.சி.சி. இந்துக்கல்லூரி,
பட்டாபிராம், சென்னை-72
தொடர்பு எண் +919444163214
மின்னஞ்சல் muthuselvi304@gmail.com

சுத்த அறிவே சிவமென்று கூறும்
சுருதிகள் கேளீரோ? - பல
பித்த மதங்களிலே தடுமாறிப்
பெருமை யழிவீரோ[1]

என்று அறிவையே தெய்வமென்று போற்றினார் பாரதியார். திருமூலரும் ஔவையும் அன்பே தெய்வமென்று போற்றினார். அன்பும் அறிவும் ஒன்றுபடும் பொழுதே இறைவனைக் காணலாம். திருமூலரும் ஔவையும் அவ்வழியில் அறிவையே தெய்வமாகப் போற்றியுள்ளனர்.

ஔவை என்ற அறிவிற் சிறந்த மூதாட்டி தமிழகத்தில் வாழ்ந்தார் என்பதற்குச் சான்றாகப் பல நூல்கள் உள்ளன. வரலாற்றில் நீங்க இடம் பெற்ற ஔவையார் ஒருவர் அல்ல பலர் என்ற கருத்தும் தமிழறிஞர் பலரால் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. கி.பி. பதினான்காம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த ஔவையார் பாடிய நூல்களே விநாயகர் அகவலும் ஔவைக்குறளும் ஆகும். விநாயகர் அகவலும் திருமந்திரமும் எவ்வாறு அறிவே தெய்வம் என்று கூறுகின்றது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

விநாயகர் அகவல் என்ற நூலை ஔவையார் எவ்வாறு பாடினார் என்பதற்குத் தனி வரலாறே உண்டு என்பர். அது கட்டுக்கதை என்றும் கூறப்பட்டுவருகின்றது. சேரமான் பெருமாள் நாயனாரும் சுந்தர மூர்த்தி நாயனாரும் திருக்கயிலை மலைக்கு சிவ தரிசனம் செய்யப் புறப்பட்டனர். அவர்கள் ஔவையாரையும் உடன் அழைத்துச் செல்ல விரும்பினர். ஆனால் ஔவையோ தினம் தோறும் விநாயப் பெருமானுக்குச் செய்யும் பூசையினைச் செய்து முடிக்கவில்லை. எனவே பூசையை முடித்துவிட்டு வருவதாகக் கூறி விட்டு மன பதற்றத்தினால் வேகமாகப் பூசையினைச் செய்தாராம். அதைக் கண்ட விநாயகப் பெருமான் ஔவையே அவசரம் வேண்டாம் நிதானமாகப் பூசைய்யினைச் செய் அவர்களுக்கு முன் உன்னைக் கயிலையில் சேர்க்கிறேன் என்று கூறினாராம். ஔவையும் மனமகிழ்ந்து விநாயகர் அகவல் பாடி பூசையினைச் செய்தார் என்று இந்நூல் எழுந்ததற்கான வரலாறும் சூழலும் கூறப்படுகின்றன.

விநாயகர் அகவல் அகவற்பாவாலான எழுபத்தியிரண்டு அடிகள் கொண்ட நூலாகும். இந்நூலில் முதல் பதினைந்து அடிகளில் விநாயகரின் உருவத்தின் தத்துவமானது விளக்கப்பட்டுள்ளது. பதினாறாம் அடியிலிருந்து எழுபத்தியிரண்டாம் அடிவரை எவ்வாறு விநாயகர் தனக்கு எவ்வாறு அருள் புரிந்தார் என்பதை ஔவை விளக்கியுள்ளார். விநாயகர் அகவலைப் போன்றே திருமூலரின் திருமந்திரத்திலும் விநாயகரின் உருவ தத்துவமானது விளக்கப் படுகின்றது.

விநாயக வணக்கம் செய்தே நூலை இயற்றியுள்ளார் திருமூலர். "தெய்வங்கள் பெயர்களை நம் மனத்தின் நிலையாகக் கொள்ள வேண்டுமே தவிர உருவமாக கருதவே கூடாது. கடவுள் தத்துவமென்பது பகுக்க இயலாத பரமா அணுத் தத்துவம் இதைத் திடமாக மனதில் கொண்டே தெய்வீக நூல்களை நெருங்க வேண்டும் நம்மைப் போல உருவப்பொருளாகக் கருதவே கூடாது"3 இவ்வகையிலே திருமந்திரமும் விநாயகர் அகவலும் உணரப்பட வேண்டும்.

"விநாயகர்' என்றால் நாம் கோவில்களில் பார்த்த ரூபத்தை மறந்துவிடவேண்டும். உலகம் என்பது நம் உடலையே குறிக்கும். ஆய்ந்தவர்களுக்கே இது விளங்கும். நமக்கு உடல் இல்லையானால் இந்த உலகம் உண்டா? கிடையாது. அடுத்து மனம் இல்லையானால் உடலும் கிடையாது. மனமும் கிடையாது. ஆகவே மனமென்பது நம் தோற்றத்திற்கும் வராதது. நம் மனம் நிறைவு பெற அறிவாக வேண்டும். அறிவாக விரும்பினால் மனக்கண்ணால் அறிவைப் பார்க்கவேண்டும் ஊனக்கண்ணால் பார்த்தால் உண்மையை அறிய முடியாது."4 ஆகவே மனம்தான் முதல் கடவுள். அம்முதல் கடவுளை ஔவையும் திருமூலரும் விநாயகர் உருவில் அறிவால் உணர்கின்றனர்.

'னம் என்றால் என்ன? எண்ணங்களின் தொகுப்பு. எண்ணங்கள் எழுமிடம் எது? நம் கண்கள் ஆகும். எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும். ஆகவே நம் கண்களே கண் + பதி= கணபதி என்றாகிறது[5]. இக்கருத்தின்படியே ஔவை விநாயகப் பெருமானை 'அஞ்சு கரமும் அங்குச பாசமும்' என்கிறார். திருமூலரும் 'ஐந்து கரத்தனை' என்கிறார். ஐந்து கரம் என்பது துதிக்கையைச் சேர்த்து எண்ணப்படுவது அன்று. "கரம் என்றால் உடனே நாம் கைகளையே நினைக்கின்றோம். கை தானாக வேலை செய்யாது. உள்ளே காற்று நரம்புகள் மூலம் செல்லவில்லையானால் கை அசையாது"6 காற்று தனித்து இயங்காது. அது இயங்க நீரும், நெருப்பும் துணை புரியவேண்டும். உடலானது நீர், நெருப்பு, காற்று மூன்றும் இணைந்ததே. மூன்றும் இணைந்தால் நினைவு உண்டாகும் நினைவோடு மனம் இணைய வேண்டும். நீர், நெருப்பு, காற்று, நினைவு இவையே கண், நாக்கு, மூக்கு, செவி இவை உலவும் இடமே ஆகாயமான மனம் இவற்றையே திருமூலரும் ஔவையும் உரைத்தனர்.

மேலும் 'வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்', 'ஆனை முகத்தனை' என்று உரைக்கின்றனர். வேழம் என்பது ஆண் யானையைக் குறிக்கும். விநாயகரும் ஒற்றைக்கொம்புடன் கூடிய யானை முகம் கொண்டே வணங்கப்படுகின்றார், யானை உருவம் கொண்ட விநாயகப்பெருமான் தன் கைகளில் அங்குசம் என்ற கருவியையும் பாசத்தினையும் ஏந்தியிருக்கின்றார். அங்குசம் என்பது யானையை அடக்கும் ஒரு ஆயுதம். ஐந்து கரங்களுடன்கூடிய தன்னுடைய அறிவை அடக்கியாளும் ஆயுதம் தன் கைகளிலே இருக்க வேண்டும் என்றே அங்குசத்தையும் பாசத்தையும் ஏந்தியுள்ள வாறு உருவகப்படுத்தியுள்ளனர். திருமூலர் திருமந்திரத்தில்'

கண்காணி இல்லையென்று கள்ளம் பல செய்வார்
கண்காணி இல்லாத இடமுமில்லை காணுங்கால்
கண்காணியாய்க் கலந்து எங்கும் இருந்தானை
கண்காணி கண்டார் களவொழிந்தாரே[7]

நம்மை யாரும் கண்காணிக்க முடியாது. நாமே நம்மை கண்காணித்தல் வேண்டும் என்கிறார் திருமூலர்

மேலும்,

உருவும் அருவும் உருவோ டருவும்
மருவும் பரமசிவன் மன்பல்லுயிர்க்கும்
குருவுமென நிற்குக் கொள்கையனாகும்
தருவுமென நிற்கும் சதாசிவன் தானே[8]

என்கிறார். ஔவையும், "குருவடிவாகி குவலயந்தன்னில் திருவடி வைத்து திறம் இது பொருளென" என்கிறார். 'கு' என்பது இருட்டைக் குறிக்கும். 'ரு' என்பது ஒளியைக் குறிக்கும் நம்மை இருளிலிருந்து ஒளிக்கு கொண்டு செல்வது நம் கண்களே ஆகும், நம் கண்களே நம்மை நல்வழிப்படுத்தி நம்மைக் கண்காணிக்கும் குரு என்பதே திருமூலரும் ஔவையும் கூறுவனவாகும் இதுவே நம்முள்ளிருக்கும் குருவை நாம் காண்டல் என்பதாகும். நம்முள்ளி ருக்கும் கடவுளைக் கண்டாலே 'எண்முகமாக இனிதெனக் கருளுதல்" தெளிவாகும். என்கிறார் ஔவை. இதனையே திருமூலரும்,

ஒன்றே அவனானான் இரண்டு அவன் இன்னருள்
மூன்றில் நின்றனன் நான்கு உணர்ந்தனன்
ஐந்தை வென்றனன் ஆறில் விரிந்தனன்
ஏழும்பர் சென்றனன் உணர்ந்து அமர்ந்தான் எட்டே

என்கிறார். ஒரு பொருளாய் உள்ளவன் முதற்கடவுள் அவனின்றி வேறில்லை. அவனது அருளோ அறம், மறம் என்று இரண்டாக நிற்கும். அவ்வருளினால் இலயம், போகம், அதிகாரம் என்ற மூன்று நிலையிலும் நின்று அறம்,பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப் பொருள் நான்கினையும் உலகிற்கு உரைப்பான். ஐம்பொறிகளின் வழியே நுகரப்படுகின்ற ஆசையினை வென்றான். மந்திரம், பதம், வன்மை, புவனம், தத்துவம், கலை என்னும் ஆறு தத்துவங்களாக விரிந்தான். அவன் ஏழு உலகங்களாலும் போற்றப்படுகின்றான்.

மனமே அவனை எட்டு அதாவது அடை என்கிறார் திருமூலர். ஔவையும் "தெரியெட்டு நிலையும் தெரிசெனப்படுத்தி என்கிறார்.

திருமூலரும் ஔவையும் மந்திரத்திலும் அகவலிலும் மனத்தின் திறத்தினையே உணர்த்துகின்றனர். அறிவாலே தெய்வத்தினைக் காண்கின்றனர்.

யான் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுக
வான் பற்றி நின்ற மறை பொருள் சொல்லிடின்
ஊன் பற்றி நின்ற உணர்வுரு மந்திரம்
தான் பற்றப் பற்ற தலைப் படும் தானே[10]

இதனையே ஔவையும் உரைக்கின்றார். தான் பெற்ற இன்பம் ஆனது ஔவையின் அகவலில் முதலாவது நிலையில் தாயாக வந்து சக்தியாக மாறி இரண்டாவது நிலையில் உள்ளத்தில் புகுந்து, மூன்றாவது நிலையில் குரு வடிவாய் வந்து நான்காவது நிலையில் உபதேசம் அருளுதல் ஆகும். இதனையே திருமூலரும் உணர்த்துகின்றார். திருமந்திரத்தின் சுருக்கமே ஔவை பாடிய விநாயகர் அகவல் என்றே கொள்ளலாம்.

அடிக்குறிப்புகள்

1. பாரதியார், பாரதியார் கவிதைகள் ப. எண்-92
2. திருமூலர், திருமந்திரம் விநாயகர் வணக்கம்
3. ஔவையார் அகவல் ஔவைக் குறள் மூலமும் உரையும் ப.எண்-143
4. மேலது ப.எண் -110
5. மேலது ப.எண் -111
6. மேலது ப.எண் -117
7. திருமூலர், திருமந்திரம் பாடல் எண்-2067 ஏழாம் தந்திரம்
8. திருமூலர், திருமந்திரம் பாடல் எண்- 1736 ஏழாம் தந்திரம்
9. திருமூலர், திருமந்திரம் பாயிரம்
10. திருமூலர், திருமந்திரம் பாடல் எண்-

துணைமை நூல்கள்

1. ஔவையார் அகவல், ஔவைக்குறள் மூலமும் உரையும், தாமரை நூலகம் சென்னை-600 026
2. திருமந்திரம் www.vasithwam.com <http://www.vasithwam.com> (வசித்துவம்)
3. பாரதியார் கவிதைகள், பாரி நிலையம், சென்னை-600 108

72. திருமூலரின் தனிமனித அறங்கள்

முனைவர் பி.பகவதி
தமிழ்ப்பிரிவு
தொலைதூரக் கல்வி இயக்ககம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்

பன்னிரு திருமுறைகளுள் பத்தாம் திருமுறையாகப் போற்றப்படுவது திருமந்திரமாகும். திருமூலரின் திருமந்திரமானது இறைவனுடைய புகழைப் போற்றிப் பாடும் தோத்திர நூலாகவும், இறை-உயிர்-உலகு என்னும் முப்பொருள்களின் இயல்புகளை உணர்த்தும் சாத்திர நூலாகவும், சரியை-கிரியை-யோகம்-ஞானம் என்னும் நால்வகை நெறிகளைக் காட்டும் சித்தாந்தக் கோட்பாட்டை விரித்துரைக்கும் முதனூலாகவும் திகழ்கிறது. மேலும், இதனை ஒரு சிறந்த வாழ்க்கை நூலாகவும் கருதலாம். ஏனெனில் வாழ்க்கைக்கான சீரிய அறங்கள் திருமந்திரத்தில் காணப்பெறுகின்றன. அன்புடைமை, கொல்லாமை, புலால் மறுத்தல், கள்ளுண்ணாமை, பொறையுடைமை, பெரியாரைத் துணைக்கோடல், பிறன்மனை நயவாமை ஆகிய அறங்கள் குறித்துத் திருமூலர் கூறும் முறையே மிகச் சிறப்புடைய ஒன்றாகும். திருமூலர் கூறிய தனிமனித அறங்கள் குறித்து இங்குக் காணலாம்.

தனிமனித அறங்கள்

உலக உயிர்களுள் தலையாய சிறப்பைப் பெற்றிலங்குபவன் மனிதன். ஆறாவது அறிவாகிய மன உணர்வு மனிதப் பிறவியிலேயே கூர்ந்து விளங்குகிறது. மேலும், மனிதன் மன உணர்வுடன் பகுத்தறிவும் பெற்றவனாகக் காணப்படுகிறான். 'மன்' என்னும் சொல்லில் இருந்து மனிதன் என்னும் சொல் உருவானது. 'மன்' என்பது நிலைபேற்றினைக் குறிக்கும். நிலைபேறுள்ள பல இயல்புகளையும் பண்புகளையும், உணர்வுகளையும் உடையவனே மனிதன் ஆவான். 'மனிதன்' என்பவன் வெற்றிடத்தும் தொடர்பற்ற தன்னந்தனியானவன் அல்லன். அவன் மண்ணிலிருந்து விண்வரை அனைத்திடத்தும் தொடர்புடையவன். எவ்வுயிர்களுக்கும் இல்லாத தனியியல்புகள் பெற்றதோடு, இறைத் தன்மையையும் அடையும் ஓர் ஒப்புயர்வற்ற சிறப்பு மனிதனுக்குள் உள்ளது. 'வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்' என்ற குறளின் அடிப்படையில் இறைவனுடன் சேர்ந்து வாழ்வதற்குரிய சிறப்பு மனிதனுக்கு மட்டுமே உள்ளது. அதேவேளையில் தீயபண்புகளை மேற்கொண்டொழுகுவதால் துன்பற்றழியும் நிலையும் மனிதனுக்கே உரியது. அன்பு, வாய்மை, பொறுமை, கடமை, ஒழுக்கம் போன்ற

அறப்பண்புகளுடன் ஒருமனிதன் வாழும் போது சமுதாயம் அவனைச் சிறந்த மனிதனாகப் போற்றும் தனி மனிதன் ஒருவன் உயர்ந்தால் அவன் குடும்பம் உயரும். குடும்பம் உயர்ந்தால் சமுதாயமும், சமுதாயம் உயர்ந்தால் நாடும் உயரும். எனவே தனிமனித அறம் என்பது மிக இன்றியமையாததாகக் கருதப்படுவதால் காலங்காலமாகப் புலவர்களும், சமயப் பெரியோர்களும் அது குறித்துப் பன்னிப் பன்னிப் பாக்கள் புனைந்தனர். அவ்வழியில் திருமந்திரத்திலும் தனிமனித அறங்கள் குறித்த கருத்துக்கள் காணப்படுகின்றன. அவற்றில் சுருக்கங்கருதி அன்புடைமை, கொல்லாமை, புலால் மறுத்தல் ஆகியன மட்டும் இங்கு விளக்கப்படுகின்றன.

அன்புடைமை

அன்பு என்பது ஓர் உயிர்ப்பண்பாகும். அவ்வன்பே அறங்களுக் கெல்லாம் அடிப்படையாகத் திகழ்கிறது. அன்பு குறித்துப் பேசாத அறநூல்கள் இல்லை; அன்பு குறித்துப் பேசாத சமயங்களும் இல்லை. உலகின் அறங்கள் அனைத்திற்கும் அடிப்படையாகவும் ஆதாரமாகவும் திகழ்வது அன்பேயாகும். அதனால்தான் இறைவனது உருவத்தை அன்பாகவும், அன்பின் உருவத்தை இறைவனாகவும் கூறியுள்ளார் திருமூலர். அன்பே சிவத்தை அதாவது இறைவனை விளங்கச் செய்யும். 'அன்பே சிவம்-அன்பின் முதிர்வே சிவம்' என்ற கருத்தை இப்பாடல் உணர்த்துவதோடு 'அன்பு என்ற பண்பைக் காணமுடியாது; உணர முடியும். அதைப்போன்று, சிவத்தைக் காணமுடியாது; உணரமுடியும் என்ற உண்மைப் பொருளையும் உணர்த்துகிறது. மேலும் உடலை வருத்திச் செய்யும் அசுரவழிபாட்டை விட மனதால் நெகிழ்ந்துருகும் அன்பு வழிபாடே சிறந்தது என்பர் திருமூலர். மனதில் அன்புடையவரே இறைவனை அடையமுடியும் என்பதனை,

ஆர்வம் உடையவர் காண்பார் அரன்தன்னை
ஈரம் உடையவர் காண்பார் இணையடி (273)

என்ற பாடலடிகள் மூலம் உணரலாம். எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்துகின்ற அன்புடையாருக்கு இறைவனே துணையாகி நிற்பான் என்பதை,

அன்பினுள் ளாகி அமரும் அரும் பொருள்
ளன்பினுள் ளார்க்கே அணைதுணை யாமே (279)

என்ற பாடலடிகளின் மூலம் அறிவுறுத்தியுள்ளார் திருமூலர். மன ஈரத்தால் சுரக்கும் அன்பே ஒருவன் இறைவனை அடைவதற்கும் சமுதாயத்தில் இறைவனாக உயர்வதற்கும் அடிப்படை அறமாகின்றது.

கொல்லாமை

கொல்லாமை என்ற அறமானது ஒவ்வொரு தனிமனிதனும் பின்பற்ற வேண்டிய இன்றியமையாத அறமாகும். பிறிதோர் உயிரினை அழிக்கும்

கொடுஞ்செயலே கொல்லுதல் என்பதாகும். கொல்லாமை என்ற அறத்தின் மூலமே மனித சமுதாயம் உலகில் நிலைத்திருக்கும். இல்லையேல் ஒருவரையொருவர் அழித்து மானுடமே அழியும் நிலை ஏற்படும். உலகில் உள்ள அனைத்து சீவன்களுக்கும் இறைவன் அளித்துள்ள இறைக்கொடை 'உயிர்' ஆகும். உயிரானது ஓரறிவு முதல் ஆறறிவு உள்ள அனைத்து சீவன்களுக்கும் பொதுவானதாகும். உலகில் வாழும் ஒவ்வொரு உயிருக்கும் பிறப்பும் இறப்பும் உண்டு. இப்பிறப்பும் இறப்பும் இறைவனின் ஆளுமைக்குட்பட்டு நிகழும்போது ஓர் உயிர் மற்றொரு உயிரை அழிப்பது என்பது இறையாளுமைக்கு எதிரான கொடுஞ்செயலாகும். எனவே மன ஈரமாகிய அன்பின்றி பிற உயிரைக் கொல்லுதல் என்பது எல்லாச் சமுதாயமும் வெறுக்கும் ஒரு செயலாகக் கருதப்படுவதால் கொல்லாமை என்பது அறமாகின்றது. கொல்லென்றும் குத்தென்றும் பேசிய மக்கள் நரகத்தில் வீழ்த்தப்படுவர் என்ற கருத்தை,

கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை
வல்லடிக் காரர் வலிக்கயிற் றாற்கட்டிச்
செல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை
நில்லிடும் என்று நிறுத்துவர் தாமே (198)

என்ற பாடலின்மூலம் விளக்கியுள்ளார் திருமூலர். பூக்களைத் தூவி இறைவனை வழிபடுவது பழந்தமிழரின் பண்பாடாகும். கொல்லாமை என்ற பண்பே இறைவனை வழிபடுவதற்குரிய பலவகைப் பூக்களாகும் என்பது திருமூலரின் திண்ணமான எண்ணமாகும். அதனால் தான்,

பற்றாய நற்குரு பூசைக்கும் பன்மலர்
மற்றோர் அணுக்களைக் கொல்லாமை ஒண்மலர்
நற்றார் நடுக்குற்ற தீபமுஞ் சித்தமும்
உற்றாரும் ஆவி அமர்ந்திடம் உச்சியே! (197)

என்று திருமூலர் திருமந்திரத்துள் பாடியுள்ளார்.

புலால் மறுத்தல்

மக்கள் தொகைப் பெருக்கம் மற்றும் சூழ்நிலை காரணமாக ஓருயிர் தன் உணவு, உடை, உறைவிட தேவைகளுக்காக மற்ற உயிர்களுடன் போராட நேரிடுகிறது. இப்போராட்டம் இரு உயிர்களுக்கிடையே நேரிடும்போது அடுத்த உயிரை அழித்து ஓர் உயிர் வாழ விரும்புகிறது. அவ்வமயம் கொல்லுகின்ற கொடுஞ்செயல் நிகழ்கிறது. ஓர் உயிரை அழித்து தான் மட்டும் வாழ விரும்பும் இழிவான செயலே வெறுக்கப் படும்போது ஓர் உயிரை அழித்து அதன் ஊனை உண்டு மனிதன் தன் ஊனைப் பெருக்குவது என்பது கடியப்படக்கூடியதாகும். மனித வாழ்வு சீரானதாக, இன்ப மயமானதாக அமைய உணவே மருந்தாக அமைதல் வேண்டும். அங்கு புலால் உண்ணுதல் என்பது தேவை

யற்றதாகும். அசைவ உணவினை உண்பதற்கு ஏற்பப் பற்கள் கூர்மையு டையதாக விலங்குகளின் படைப்பு அமைய சைவ உணவினை உண்பதற்கு ஏற்ப மனிதனின் படைப்பு இயற்கையிலேயே அமைந் துள்ளது. புலால் உண்டு உடம்பை வளர்ப்பது இயற்கைக்கு மாறான தாகும். அதுமட்டுமல்ல ஒன்றன் உடலைத் தின்று புசித்தவனுக்கு மற்ற உயிரினங்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற சிந்தனை இல்லாது போகும் என்ற நிலைப்பாட்டை

படை கொண்டார் நெஞ்சம்போல் நன்று ஊக்காது ஒன்றன்
உடல்சுவை உண்டார் மனம (குறள் 253)

என்ற குறள் விளக்குகிறது. பிற உயிர்களைக் கொல்லும் கொடூரத் தன்மையிலிருந்து மாற்றம் பெற்று பிற உயிர்களையும் தம்முயிர் போல் காக்கும் மனநிலை பெற்று மக்கள் வாழவேண்டும். பிற உயிர் களைக் கொன்று தின்று வாழும் வாழ்க்கை பாவ வாழ்க்கையாகும். புலால் உண்பவரை எமதூதர் நரகத்தில் கிடத்தத் துன்புறுத்துவர் என்னும் கருத்தை,

பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாருங் காண இயமன்றன் தூதுவர்
செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தில்
மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பாரே (199)

என்ற பாடலின் மூலம் விளக்கியுள்ளார். ஓர் உயிரை உருவாக்குதல் என்பது எவராலும் இயலாத செயலாகுவதால் உயிர்க்கொலை தவிர்க்கப்படவேண்டும். அதனால்தான்

ஊனைத் தின்றூ னைப் பெருக்குதல் முன்னின்னா

என்கிறது இன்னா நாற்பது. திருமூலரும்

கொலையே களவுகட் காமம் பொய்கூறல்
மலையாள பாதக மாம்அவை நீக்கித்
தலையாஞ் சிவனடி சார்ந்தின்பஞ் சார்ந்தோர்க்
கிலையாம் இசைஞானா னந்தத் திருத்தலே (200)

என்ற பாடலின் மூலம் கொலை முதலிய பாவம் செய்யாதவர் துன்பமின்றி இன்பம் எய்துவர் என்ற கருத்தை விளக்கியுள்ளார்.

எல்லோருக்கும் எக்காலத்தும் நன்மை செய்யும் இனிய செயல் களாகிய அறம் தனிமனிதனையும் சமுதாயத்தையும் செந்நெறிப் படுத்தும் ஒழுக்கநெறியாகக் கருதப்படுகிறது. திருமூலர் கூறியுள்ள தனிமனித அறங்களை மேற்கொள்வதால் இம்மண்ணுலக வாழ்வு சிறப்பதோடு விண்ணுலகில் இறைவனோடு கலப்பதும் எளிதாகும் என்பதில் ஐயமில்லை.

73. திருமந்திரம் ஓர் அருமந்திரம்

முனவர் ஆ.இரா.பாரதராஜா
தலைவர், தலைநகர் தமிழ் மன்றம்
13/201 ஜீவானந்தம் சாலை,
கே.கே.நகர், சென்னை-600078
பேசி எண் : 94444 85139, 80560 71045
அலுவலக எண் : 044-24891313

நுழைவாயில்

அறிவும் ஆற்றலும் மிக்க தமிழ்ச் சித்தர் சிந்தனை மரபு, சங்ககாலம் தொடங்கி இன்று வரை தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. வாழையடி வாழையெனத் தொடர்ந்து வளர்ந்து வரும் இச்சித்தர்களின் சிந்தனை மரபிற்குத் தமிழ் இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. தமிழ்ச் சித்தர்கள் எண்வகை யோகங்கள், எண்வகை சித்திகள், மணி, மந்திரம், மருந்து, சோதிடம், வான நூற்கலை, இரசவாதம், வர்மம், தொலைவில் உணர்தல், காலம் கடந்து நிலைபெறுதல், எல்லைகளைக் கடந்து நிலைபெறுதல் - எனப் பல நிலைகளில் தம் ஆளுமைகளைச் செலுத்தினர். தொடக்கக் காலங்களில் பதினென் சித்தர்கள் இருந்ததாகச் சொல்லப் பெற்றாலும் இன்றைய காலகட்டத்தில் பல நூறு சித்தர்கள் வாழ்ந்ததாக ஆய்வாளர்கள் நிறுவுகின்றனர். அவர்களுள் 'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்' என்ற உயரிய கோட்பாட்டை உலகுக்கு அளித்த திருமூலரின் திருமந்திரப் பாடல்களில் சிலவற்றை அருமந்திரமாகக் கொண்டு அமைகிறது இந்த ஆய்வுக் கட்டுரை.

திருமூலரின் இறைநோக்கு

திருமூலர் தீராத சிவபக்தி உடையவராகவே அவரது திருமந்திரப் பாட்ல்கள் உறுதி செய்கின்றன. மற்ற சித்தர்களை விட அனைத்துச் சித்து வேலைகளையும் மந்திர, தந்திரங்களையும், உடலியல் பேணும் உபாயங்களையும் அறிந்து தெளிந்த அற்புத ஞானியாகவே திகழ்கிறார் திருமூலர். ''மனித உடற்கூட்டின் உள்ளிருக்கும் 'சீவன்' என்பதே 'சிவன்' என்பதாகும். அந்த சீவனைக் கொண்டிருப்பவர்கள், அதனுள்ளே இருக்கும் இயங்கும் சிவனைப் பற்றி அறியாமல் உள்ளனர். சீவனானது, சிவன் எனச் சிலர் அறிந்துகொள்வர். திருவருளாலோ, குருவருளாலோ அவ்வாறு அறிந்து கொண்ட பின்னர் சீவனானவர் 'சிவனாக ஆகி இவ்வுலகில் இருப்பார்களே'' என திருமூலுர் சிவனும், சீவனும் ஒன்றே! அதை அறிந்தவர் வாழ்வர் நன்றே! என விளக்குகிறார். இதனை விளக்கும் பாடல்,

சீவன்எனச் சிவன்என்ன வேறில்லை
சீவனார் சிவனாரை அறிகிலர்
சீவனார் சிவனாரை அறிந்தபின்
சீவனார் சிவனாயிட் டிங் இருப்பரே (2017)

இப்படிப்பட்ட சிவபிரானின் பெருமையறியாதவர்கள் தெளிவற்றவர்கள். அத்தெளிவற்றவர்கள் சீவனாகவும் ஆகமாட்டார்கள்; சிவப்பரம் பொருளாகவும் ஆகமாட்டார்கள்; பிறப்பென்னும் பாவத்தையும் அறுக்க மாட்டார்கள்.

தெளிவறி யாதார் சிவனை யறியார்
தெளிவறி யாதார் சீவனு மாகார்
தெளிவறி யாதார் சிவமாக மாட்டார்
தெளிவறி யாதார் தீரார் பிறப்பே (1480)

என்ற திருமந்திரப் பாடல் சிவனும் சீவனும் ஒன்றென நிறுவுகிறார்.

சீவ அணுவாக விவளங்கக்கூடியது சிவனே எனக் கூறும் திருமூலர் அன்பு வடிவாக விளங்கக் கூடியதும் சிவமே என உருகுகிறார்.

அன்பையும் சிவத்தையும் இருவேறு கூறுகளாகப் பகுத்துப் பார்ப்பார்கள் அறிவில்லாதவர்கள். 'அன்பே சிவம்' என்பதை யாரும் முழுமையாக அறியாதவர்களாக உள்ளனர். அன்பும் சிவனும் ஒன்றுதான் என அறிந்து கொண்டவர்கள் ''அன்பு தான் சிவம்; சிவம்தான் அன்பு'' என அமர்ந்து சித்தி பெறுவார்கள் என விளக்குகிறார்.

அறிவு வடிவாகவும் விளங்கக் கூடியவர் சிவபிரான் என்று அறியாதிருந்த என்னை, அறிவு வடிவாகத் திகழக்கூடியவர்தான் சிவன் என்று நந்திதேவர் எனக்கு அருள்புரிந்தார். அறிவு வடிவம்தான் சிவன் என்பதை அவர் அருள் மூலம் நான் அறிந்து கொண்டு, அமர்ந்து சிவனின் தரிசனத்தைக் காணத் தொடங்கி விட்டேன் என திருமூலர் நிறுவுகிறார். அப்பாடல்,

அறிவு வடிவு என்று அறியாத என்னை
அறிவு வடிவு என்று அருள் செய்யதான் நந்தி
அறிவு வடிவு என்று அருளால் அறிந்தே
அறிவு வடிவு என்று அறிந்து இருந்தேனே! (2330)

இப்படி சிவனானவர் சீவனாகவும், அன்பாகவும், அறிவாகவும், அருளாகவும், ஒளியாகவும் விளங்குவதாகக் கூறுகிறார்.

இப்படி எல்லாமாக விளங்குகின்ற சிவபெருமானின் திருவருளைப் பெற விரும்புகின்ற சிவபெருமானின் திருவருளைப் பெற விரும்புகின்ற தீவினையாளர்கள் யாவரும் ''சிவ சிவ'' என்று வேண்டுவர். அவ்வாறு அவர்கள் 'சிவ சிவ' எனக் கூறும்போதே அவர்களின் பழவினைகள், தீவினைகள் தீய்ந்து மாளும். அவர்கள்

'சிவ சிவ' என உளம் உருகி உரைத்து வேண்டுவதால் தேவருமாகி உயரிய சிவகதியைப் பெற்றுய்வார்கள் என சிவத்தின் பெருமையைத் திருமூலர் தெளிவிக்கிறார். இக்கருத்தமைந்த பாடல்,

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே (2716)

மேற்காண் செய்திகள் யாவும் சிவனின் தனித் தன்மைகளையும், சிவ வடிவாகவும், ஓரிறையாகவும் விளங்கும் 'ஒருவனே தேவன்' கோட்டிபாட்டினையும் திருமந்திரப் பாடல்கள் மூலம் திருமூலர் நிறுவுகிறார். அதன் மூலம் திருமூலரின் இறைநோக்கினை, இறை நெறியினை அறிய முடிகிறது. இது அவருடைய பரந்து விரிந்த பரமோனத்தையும் இறைஞானத்தையும் தெளிவுப்படுத்துகிறது. இது திருமந்திரத்தின் அருமந்திரங்களில் ஒரு மந்திரமாம் சிவமந்திரம்.

குருவருள்

திருவருளாகிய சிவபிரானின் வேண்டுதலுக்குப் பேருதவியாகத் துணை நிற்பது ஒரு குருபிரான் என்பது சித்தர்கள், குறிப்பாக திருமூலர் கூறும் உறுதிப்பாடாகும். சைவநெறியின் பெருமையை அறிவதற்கும், சிவ சன்மார்க்க நெறி தழைத்தோங்குவதற்கும் குருநெறி, நாயகன் நந்திதேவனால் வகுக்கப் பெற்றுள்ளது. இந்நெறி நின்று வழுவாது, தொழுவோர்க்கு அனைத்து நன்மைகளும் கிட்டும் வகையில் குருவின் பெருமை கூறப் பெற்றுள்ளது. இதனை,

சைவப் பெருமைத் தனிநா யகன்நந்தி
உய்ய வகுத்த குருநெறி ஒன்றுண்டு
தெய்வச் சிவநெறி சன்மார்க்கம் சேர்ந்துய்ய
வையத்துளார்க்கு வகுத்துவைத் தானே (1476)

என்ற பாடல் நெறி மூலம் திருமூலர் தெளிவுப்படுத்துகிறார்.

திருவடி என்பதும் குருவடி என்பதும் ஒன்றே. அருட்பெருஞ் சோதி வடிவமாக விளங்கும் சிவபிரானின் மறு வடிவமாக விளங்கும் குருவின் துணையின்றி யாரும் சைவராகவும் ஆகமுடியாது. முக்தியும் பெற இயலாது. எனவே சிவபிரானுக்கு வழிகாட்டும் குருபிரானை முதலில் கண்டுகொள்வதே சிறப்பு என்பதனைக் கீழ்க்காண் பாடல்கள் நிறுவுகின்றன.

குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோளுமாய் நிற்கும்
குருவே யுரையுணற் வற்றதோர் கோவே (1581)

என குருபிரானின் பெருமை உரைப்பதோடு, குருவருள் பெற்றால்தான் திருவருள் கிட்டும் சித்தியும் முக்தியும் கிட்டும் எனத் தெளிவுப்படுத்தும் திருமந்திரத்தின் ஒரு மந்திரம்,

திருவடி ஞானஞ் சிவமாக்கு விக்கும்
திருவடி ஞானஞ் சிவலோகஞ் சேர்க்கும்
திருவடி ஞானஞ் சிறைமல மீட்கும்
திருவடி ஞானமே தின்சித்தி முக்தியே திரு 1598

என்ற அருமந்திரமாகும் குருமந்திரம். இவையாவும் குருவருள் மூலமே திருவருள் கிட்டும் என்பது தெளிவு.

தன்னை உணர்தல்

திருவருளாகிய சிவனருளை உணர்ந்து, சிவனருளாகிய குருவருளை உணர்ந்து, அடுத்து உடம்பைப் பேணி தன்னை உணர்ந்து தியானிக்க வேண்டும். அதற்கு உடலும் உள்ளமும் உறுதியாக இருக்க வேண்டும். பரம்பொருள் நம் உடம்பிற்குள்ளே உள்ள சிற்சபையில் அமர்ந்து அம்பலத்தில் நடராசராய் நடனமாடி ஒலி செய்து, ஒளி பெய்து கொண்டிருப்பதை சித்தர்கள் தெளிவாக உணர்ந்து, உரைத்துள்ளனர். இறைவன் வீற்றிருக்கும் கருவறையாகிய உள்ளம் தெளிவாக இருக்க வேண்டுமானால், உடல் உறுதியாக இருக்க வேண்டும் என்பதை அறிந்து கொண்டேன் எனத் திருமூலர் விளம்புகிறார்.

உடம்பின் தேவையை அறிந்ததோடு, ''இத்தனை காலமாக உடலின் தேவையை அறியாமல் இருந்து, இப்போது உத்தமனாகிய சிவன், என் உடம்பிற்குள் கோவில் கொண்டிருப்பதை அறிந்து, தெளிந்து என் உடலைப் பெறுகின்றேன்'' என விளம்புகிறார். உடலைப் பேணுவதும் திருமந்திரங்களின் அருமந்திரங்களுள் ஒரு மந்திரமே.

முதலில் ஒருவன் தன்னை அறிந்துகொள்ள வேண்டும். தன்னை அறிந்து கொண்டால் ஒருவனுக்கும் கேடு வராது; தன்னை அறியாமல் தன்னை கெட்டழிகின்றான். தன்னை அறியும் அறிவு பெற்ற பின்னர் தன்னுள்ளே சிவமிருப்பதை உணர்ந்து தன்னைத்தானே வழிபாடு செய்வர். இதனை

தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை யறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை யறியும் அறிவை அறிந்தபின்
தன்னை யர்ச்சிக்கத் தானிருந் தானே (2355)

என தன்னை அறிந்துகொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறார் திருமூலர். அவ்வாறு தன்னை அறிந்தவராலேயே

சிவமாகிய தலைமை குருவை, இறையை அறிய முடியும். தன் முன்னைய வினை முடிச்சுகளை அவிழ்த்து, சிவனருளால், பின்னை நாளினில் எவ்விதத் துன்பமும் இன்றி, எல்லா நலனையும் பெறுவார்கள் என்பதை உறுதி செய்கிறது திருமந்திரப் பாடல்.

தன்னை யறிந்திடுந் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை யவிழ்ப்பார்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவார்கள்
சென்னியில் வைத்த சிவனரு ளாலே (2611)

மேற்காண் திருமந்திரத்தின் அருமந்திரங்கள் உடல்நலம் பேணலும், அதனுள் இருக்கும் சிவத்தைக் காணலும் தன்னை அறியும் அறிவினாலேயே முடியும். அது சென்னியில் வைத்துப் போற்றும் சிவனருளாலேயே முடியும் என்பதைத் திருமூலர் உறுதி செய்கிறார்.

பொதுநோக்கு

இறையாகிய திருவருளால், குருவருளால் உடலோம்பலால், தன்னையறிதலால், சிவம் பற்றிய எல்லா அறிவும் பெறுதலால் உலகத்தைப் போற்றி நிற்கும் உயர்நோக்கம் பிறக்கும். உலக மக்கள் யாவரும் ஒரு குலமே; உலகோர் யாவர்க்கும் இறைவன் ஒருவதேன என்ற உயரிய நெறியை உலகுக்கு அளித்த 'உத்தம சித்தர்' திருமூலரே! அந்தக் காலத்திலேயே போட்டிப் பூசலற்ற, சாதி மதங்களற்ற சமத்துவ சமுதாயத்தையும், ஒரிறைக் கோட்பாட்டையும் திருமூலர் தெளிவுபடுத்தியிருப்பதே, அவர் நந்திதேவரின் குருவருளையும், சிவபிரானின் திருவருளையும் பெற்றுத் தெளிந்த, சிறந்த 'ஞானச்சித்தர்' என்பது இக்குறு ஆய்வு மூலம் நிறுவப் பெறுகிறது. இதனைக் கீழ்க்காண் திருமந்திரத்தின் மூலமந்திரமாக உலகோர் போற்றும் அருமந்திரம் உறுதி செய்கிறது.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகுங்கதி யில்லைநுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே (2104)

என்பதே. ஒன்றே குலம்; ஒருவனே தேவன் என நினைத்துத் துதிப்போர்க்கு எமனின் அச்சம் தேவையில்லை. சிவனருளால் நற்கதி கிட்டும். எனவே 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்ற பொன்மொழிப் பொருளுணர்தல் வேண்டும். திருமூலரின் நற்கருத்தை ஒத்த கருத்துகளைக் கீழே காணலாம்.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் - திருவள்ளுவர்
சாதி இரண்டொழிய வேறில்லை - ஔவையார்

வள்ளுவர்செய் திருக்குறளை மறுவற நன்குணர்ந் தோர்கள்
உள்ளுவரோ மனுவாதி ஒரு குலத்துக் கொருநீதி
- மனோன்மணியம் சுந்தரனார்

பிழை நீக்குவதே உயிருள்ளோரின் கடமை - பாரதிதாசன்

மேற்காண் கருத்துகள் திருமூலரின் திருமந்திரத்தைக் கற்றுணர்ந்த சான்றோரின் அருங்கருத்துகளே! இன்றைய உலக மக்களின் ஒருமைப்பாட்டுக்கும் 'யாரும் ஊரே; யாவரும் கேளிர்! என்ற கணியன் பூங்குன்றனாரின் பரந்த சிந்தனைக்கம் உயிப்பூட்டுவது திருமந்திரத்தின் அருமந்திரமே!

நிறைவுரை

உலக மக்கள் இறையருளாம் சிவத்தின் அருளைப் பெற குருவருளைப் பெற, உடலைப் பேணுதலும் அதனுள்ளிருக்கும் சிவத்தை உணரத் தன்னை அறிதலும் வேண்டும். இவற்றை அறிந்து எல்லாம் அறிந்து கொண்டால் உலகியல் சிவபிரானின் நோக்கத்தை உணர்வர். எனவே ''உலக மக்களின் உயிராக விளங்கும் சிவமே இறைவன்; அவனால் படைக்கப்பெற்ற மக்கள் யாவரும் ஓரினத்தவரே ஒரு தாய் மக்களே'' என்ற அரிய உண்மைத் தத்துவத்தை அறிய முடியும். மற்ற சித்தர்களைவிட அரிய, பெரிய தத்துவத்தை உலகிற்களித்த உத்தமச் சித்தர், ஞானசித்தர் திருமூலர் அருளிய ''திருமந்திரம் ஓர் அருமந்திரம்'' என்பது தெளிந்த முடிவு இதை உணர்ந்தால் இந்த உலகம் இனிதே விளங்கும்; இன்பம் துலங்கும்.

வாழ்க திருமந்திரம்!
வெல்க தமிழ் மந்திரம்!

துணை நின்ற நூல்கள்

1. ஒன்றே குலம் புலவர்-ப.அரங்கநாதன்
2. நினைக்கத் தனக்கு-முனைவர் அரங்க இராமலிங்கம்
3. நம் நாட்டு சித்தர்கள்-இரா.மாணிக்கவாசகம்
4. தமிழ்ச் சித்தர் மரபு-த.ந.கணபதி
5. இந்து, கிறிஸ்துவம், இஸ்லாம் ஒருமைப்பாடு-பா.கமலக்கண்ணன்

74. பொய்யாமொழியும் மறைமொழியும்
(திருக்குறள்-திருமந்திரம் ஒப்புமைகளில் சில)

பால சீனிவாசன்,
வழக்கறிஞர்
உலாபேசி: 9380581129

தேவர் குறளும் திருநான்மறை முடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திருவாசகமும், திருமூலர் சொல்லும்
ஒருவாசகம் என்று உணர் ஔவையார்

மிகச்சிறந்த நுட்பமான ஆராய்ச்சியாளர்கள் சிலருக்கும் சான்றோர்களுக்கும் மனதளவில் குறைகள் உள்ளதை நான் நன்கறிவேன். அக்குறைகளுள் ஒன்று இலக்கிய ஒப்பீடுகள் அருகிவிட்டன என்றே.

அதற்கான காரணங்கள் சில நானறிந்தவரையில்

1. 'ஒப்பீடுகளெல்லாம் செய்து முடித்தாயின'. இனி ஏதும் இல்லை என்ற தவறான முடிவு.
2. ஒப்பீடுகள் பயனற்றவை எனும் கருத்துடைமை.
3. ஒப்பீடு குறித்த கருத்தின்மையும் அறியாமையும்.
4. உணர்வின்மை - சூழல் உருவாகாமை - மடி என்பன.
5. இரண்டும், அதற்கு மேலுமான நூல்களை முற்றிலும் கல்லாமை.

இக்காரணங்களோடு இன்னும் இருப்பதாகக் கருதி அவற்றைக் கடந்து; முயற்சி ஒன்றினை மேற்கொண்டால் என்ன என்ற துணிவும், வாய்க்ககப் பெற்ற சூழலும் இவ்வுரை நிகழக்க காரணங்களாயின.

காலம், இடம் நிறைவுடையதாக அமையாமையால் கட்டுரையாக அன்றிப் பட்டியலாகவும், தொகுப்புரையாகவும் அமைந்த இதனை தமிழ் கூறும் அறிஞர் உலகம் ஏற்கும்; போற்றும் என்ற நம்பிக்கையில் ..... எதிர்பார்ப்பில் ..... அமைத்துள்ளேன்.

இஃதொன்றும் தொடக்கமன்று முந்தைய காலங்களில் முன்னோர் சிலர் தொட்டுத் தொடங்கியதன் தொடர்ச்சி. ஆனால் இதுவே முறறும் முடிந்த முடிவும் அன்று.

இவ்வுரை அமையக் காரணமாக, கருவிகளான நூல்களில் சில....

1. திருமந்திரம் - காசித்திருமடம் - 2000
2. திருக்குறள், சொல் அகராதியும் மூலமும் - 2008
3. திருக்குறள் திறவுகோல் - முனைவர் கு. மங்கையர்க்கரசி, புத்தா பப்ளிகேஷன்ஸ், 2003

4. பன்னிரு திருமுறை வரலாறு - க.வெள்ளைவாரணன், அண்ணாமலைப் பல்கலை.
5. திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு - இ.வா. ஜகந்நாதன், ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம், பெரிய நாயக்கன் பாளையம்.
6. ஐந்தாவது திருமந்திர மாநாட்டு மலர் - திருவாவடுதுறை ஆதினம் (18, 19, 20.01.1958)
7. திருமந்திர நெறி - திருவாசக - திருமந்திர சண்முக சுந்தரம் கல்வி அறக்கட்டளைகள், 09.11.2013
8. ஞான வாழ்க்கை அல்லது திருமூலர் உண்மைகள் - இளவழகனால், சென்னை சிவனடியார்த் திருக்கூட்டம், 1959
9. திருமந்திரத் தேன் துளிகள் - மா. எல்லப்பன், 2009
10. இன்பமாய் வாழும் வழி - ஆ. பக்தவச்சலம், 2001
11. திருமந்திர முத்துக்கள் - மா. எல்லப்பன், 2008
12. திருமந்திர நெறி - ஜி. வரதராஜன், தெய்வத் தமிழ் மன்றம், மாயூரம், 1976
13. திருமூலத் அருளுரை - தேமொழியார், அருட்பண்ணை, 1994
14. திருமூலரின் கற்றல் கோட்பாடுகள், கா. மீனாட்சி, 2004

திருக்குறள் - திருவள்ளுவர்; திருமந்திரம் - திருமூலர். தமிழ் மொழிக்கு இவ்விரண்டு நூல்களும் மூலநூல்கள்.

திருக்குறள் - பதினென் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.

திருமந்திரம் - சைவத் திருமுறைகள் பன்னிரெண்டினுள் பத்தாவது

திருக்குறள் - அறநூல்

திருமந்திரம் - அருள் நூல்

இரு நூல்களின் கருத்துகளும் வாழ்வியல் நெறிகளே. இவற்றை வாழ்வியல் இலக்கண நூல்கள் எனவும் வழங்கலாம். இவ்விரண்டும் பட்டறிந்தும், கற்றும், உணர்ந்தும் உலகம் உணர வெளிப்படுத்தப் பட்டவையே.

திருக்குறளின் அறவழி அருள் வெளிப்படுதலும்

திருமந்திரத்தின் அருள்வழி அறம் வெளிப்படுதலும்

அறமும் அருளும் இன்றியமையாத தமிழர் தம் வாழ்நெறி எனலாம். பண்பாடு எனினும் சிறப்பே.

புறஒப்பீடு (புற ஒப்புமை)

பாயிரவியல்

அறம்	இல்லறவியல்	4	
	துறவறவியல்	13	
	ஊழியல்	1	380

திருக்குறள் பொருள்

	அரசியல்	25	
	அமைச்சியல்	10	
	அங்கவியல்	22	
	ஒழிபியல்	13	700
காமம்	களவியல்	7	
	கற்பியல்	18	250
			1330

தந்திரங்கள்

1. காரணகாமம்
   ஒழுக்கம், கல்வி, அறம், செய்யத்தக்கன, தகாதன
   தந்திர பொருள்கள் (அதிகாரங்கள்) 24
2. காமிகாகமம்
   புராண வரலாறு, கரு, கல்வி, இறையும் தொழிலும்
   தந்திர பொருள்கள் (அதிகாரங்கள்) 25
3. வீராகமம்
   மருத்துவம், பிறப்பு, வளர்ச்சி, நெறி, யோகம்
   தந்திர பொருள்கள் (அதிகாரங்கள்) 21
4. சித்தாகமம்
   சக்கரங்கள், வயிரவி, மானுடயியல், வாழ்வியல், நடப்பு
   தந்திர பொருள்கள் (அதிகாரங்கள்) 13
5. வாதுளாகமம்
   உடல் கூறு, பத்தி நெறி, உறவு வழி, சைவம் வகை தொகை
   தந்திர பொருள்கள் (அதிகாரங்கள்) 21
6. வியாமளாகமம்
   ஆசிரியன், மாணாக்கன் - இலக்கணம், தவம், திருநீறு, துறவு, அருள், ...
   தந்திர பொருள்கள் (அதிகாரங்கள்) 14
7. காலோத்தராகமம்
   அடியார் நெறி, குருவற்ற ஒழுக்கம், உயிரிலக்கணம், சமாதி, குருபூசை
   தந்திர பொருள்கள் (அதிகாரங்கள்) 38
8. சுப்பிராகமம்
   வாய்மை, மெய்ப்பொருள், மெய் அறிவோர் செயல்
   தந்திர பொருள்கள் (அதிகாரங்கள்) 43

9. மகுடாகமம்
சைவ சமயக் கோட்பாடுகள், 5 எழுத்து கூத்துக்காணல், சமயம், சமூகம், மெய்யறிவு
தந்திர பொருள்கள் (அதிகாரங்கள்) 23

அகஒப்புமை (பொருள் ஒன்றுதல்)

குறள் 1 : அகர முதல எழுத்தெல்லாம் ...
மந்திரம் : அகர முதலாய் அனைத்துமாய் ... (1753, 1751)
குறள் 2 : கற்றதனால் ஆய பயன் ....
நற்றாள் தொழா ....
மந்திரம் : ஓதி உணரவல்லோம் என்பர் உள்நின்ற
சோதி நடத்தும் தொடர்பு அறியாரே (319)
குறள் 3 : மலர்மிசை ஏகினான் ....
மந்திரம் : போதுகந் தேறும் ... (632)
மலருரை மாதவன் ... (1531)
கமலத்து உறை ஈசன் ... (2092)
சொந்தாமரை உள்ளுறு சோதி ... (2484)
குறள் 5 : ஐந்தவித்தான் ...
மந்திரம் : ஐந்து வென்றனன் - 1
குறள் 7 : தனக்கு உவமை இல்லாதான் ...
மந்திரம் : தன்னை ஒப்பாய் ஒன்றும் இல்லாதத் தலைமகன் (7)
குறள் 8 : அறவாழி அந்தணன்; பிறவாழி நீத்தல் ...
மந்திரம் : அறவாழி அந்தணன் (1803); பிறவா நெறி தந்த (1803)
குறள் 18 : சிறப்பொடு பூசனை செல்லாது ...
மந்திரம் : சிறப்பொடு பூசனை செய்ய நின்றார்க்குக ... (1524)
குறள் 23 : இருமை வகை தெரிந்து ...
மந்திரம் : இறப்பும் பிறப்பும் இருமையும் நீங்கி ... (1614)
குறள் 24 : ஓரைந்தும் காப்பான் ...
மந்திரம் : ஆகமதத்தன ஐந்து களிறுள ... (2023)
ஆனைகள் ஐந்தும் அடக்கி ... (2316)
குறள் 30 : அந்தணர் என்போர் ....
செந்தண்மை ....
மந்திரம் : அந்தண்மை பூண்ட அருமறை ....
சிந்தைசெய் அந்தணம் ... (234)
குறள் 94 : இன்புறூஉம் இன்சொலவர்க்கு ...
மந்திரம் : பிறர்க்கு இன்னுரை ... (252)
குறள் 126 : ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ...
எழுமையும் ....

மந்திரம் : ஒருமையுளாமைபோல் உள்ளைந்தடக்கி ...
இருமையும் .... (133)
குறள் 228 : ஈத்துவக்கும் இன்பம் ....
மந்திரம் : இன்பம் இடரென்று ....
இன்பம் அதுகண்டும் ... (267)
குறள் 262 : தவமும் தவமுடையார்க்கு ....
மந்திரம் : தவமிக்கவரே தலையான வேடர்
.....
தவமிக்கவர்க்கன்றி .... (1661)
வேடநெறி நிற்பார் வேடம் மெய்வேடமே (240)
குறள் 269 : கூற்றம் குதித்தலும் ...
மந்திரம் : கூற்றன் வருங்கால் குதித்தல்..... (172)
கூற்றை உதைக்கும் குறியது ... (571)
குறள் 338 : உடம்போடு உயிரிடை நட்பு ...
மந்திரம் : உடம்போடுயிரிடை நட்பு .... (2148)
குறள் 346 : செறுக்கறுப்பான் வானோர்குயர்ந்த உலகம் புகும்
மந்திரம் : இதமுற்றவர்கள் சிவசித்தர் தாமே (2525)
குறள் 350 : பற்றுக பற்றற்றான் பற்றினை ...
மந்திரம் : பற்றது பற்றிற் பரமனைப் பற்றுமின் (298)
பற்றற்றவர் பற்றி நின்ற பரம்பொருள் (2865)
குறள் 352 : இருள் நீங்கி இன்பம் .,...
மந்திரம் : தெளிந்து இருள் நீங்கினால் ... (1460)
இருள் நீங்கி ...
.....
பொருள் நீங்கா இன்பம் ... (1516)
குறள் 358 : செம்பொருள் காண்பது அறிவு ...
மந்திரம் : செம்பொருளான சிவமெனலாமே ... (2563)
சிறந்த சிவனருள் சேர் .... (1615)
குறள் 360 : காமவெகுளி மயக்கம் ....
மந்திரம் : கலங்கிடும் காம வெகுளி மயக்கம் .... (1340)
காமவெகுளி மயக்கம் இவை ..... (2436)
குறள் 391 : கண்ணென்ப வாழும் உயிர்க்கு
மந்திரம் : கணக்கறிந்தார் கல்வி கற்றறிந்தாரே (316)
குறள் 398 : ஒருமைக்கண் தான் கற்ற கல்வி
எழுமையும் ....
மந்திரம் : துணையதுவாய் வரும் தூயநற் கல்வியே ... (294)

குறள் 399 : காமுறுவர் கற்றறிந்தார் ...
மந்திரம் : கற்றவர் பேரின்பம் உற்று நின்றாரே ... (298)
குறள் 86 : செல்விருந்தோம்பி ....
குறள் 227 : பாத்தூண் மரீஇ ....
குறள் 527 : காக்கை கரவா ...
மந்திரம் : ஆர்க்கும் இடுமின் ...
பார்த்திருந்து உண்மின் ...
.....
காக்கை கரைந்துண்ணும் ... (250)
குறள் 549 : ..... குற்றங் கடிதல்
..... வேந்தன் தொழில்
மந்திரம் : மெய்த்தண்டஞ் செய்வதவ் வேந்தன் கடனே (247)
குறள் 553 : நாடொறும் நாடி முறை செய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும்
மந்திரம் : நாடோறும் மன்னவன் நாட்டில் தவநெறி
நாடோறும் நாடி அவன் நெறி நாடானேல்
நாடோறும் நாடு கெடு மூட நண்ணுமால்
நாடோறும் செல்வம் நரபதி குன்றுமே (239)
குறள் 972 : பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் ..
மந்திரம் : ஒன்றே குலனும் ஒருவனே தேவனும் .. (2104)
குறள் 27 : சுவை ஒளி ஊறோசை நாற்றம் ...
மந்திரம் : ஆமே சுவை ஒளி யூறோசை கண்டவன் ... (1530)
குறள் 38 : வாழ்நாள் வழி அடைக்கு கல் ...
மந்திரம் : வாழ்நாள் அடைக்கும் வழி அது ஆமே ... (588)
குறள் 580 : பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் ...
மந்திரம் : சினஞ்செய்த நஞ்சுண்ட தேவர் ... (41)
குறள் 361 : அவாவென்ப எல்லா உயிர்க்கும் ...
மந்திரம் : அவாவை அடக்கி வைத்து ... (1108)
குறள் 341 : யாதனின் யாதனின் நீங்கியான் ...
மந்திரம் : ஆசை அறுமின் ... (2615)
குறள் 298 : புறந்தூய்மை ..... அகந்தூண்மை
வாய்மையால் ...
மந்திரம் : மெய்யது செம்மை ....
பொய்வகை விட்டு நீபூசனை செய்யே ... (1294)

புற அக ஒப்புமை

திருமந்திரத்தின் ஒன்பது தந்திரங்களின் உள் பொருள் தலைப்புகள் சில; திருக்குறளின் அதிகாரப் பெயரும் உட்பொருளும் கொண்டு வாங்குவன.

பாயிரத்துள் - கடவுள் வாழ்த்து - பாமிரவியல் - அறததுப் பால் - திருக்குறளில் உளது.

மந்திரம்	குறள்
1ஆம் தந்திரம்	
அரசாட்சி முறை	அரசியல்
அறஞ்செய்யான் திறம்	அறன் வலியுறுத்தல்
அறஞ்செய்வான் திறம்	அறன் வலியுறுத்தல்
அன்புடைமை	அறன் வலியுறுத்தல்
கல்லாமை	அறன் வலியுறுத்தல்
கல்வி	அறன் வலியுறுத்தல்
கள்ளுண்ணாமை	அறன் வலியுறுத்தல்
கொல்லாமை	அறன் வலியுறுத்தல்
நடுவு நிலைமை	அறன் வலியுறுத்தல்
பிறன்மனை நயவாமை	அறன் வலியுறுத்தல்
நல்குரவு	அறன் வலியுறுத்தல்
புலால் மறுத்தல்	அறன் வலியுறுத்தல்
வானச் சிறப்பு	வான் சிறப்பு
2ஆம் தந்திரம்	
பெரியாரைத் துணைக் கோடல்	வான் சிறப்பு
பொறையுடைமை	வான் சிறப்பு
6ஆம் தந்திரம்	
அருளுடைமையின் ஞானம் வருதல்	அருளுடைமை
தவம்	அருளுடைமை
துறவு	அருளுடைமை
7ஆம் தந்திரம்	
இந்திந்திரியம் அடக்கும் அருமை	புலனடக்கம்
இந்திந்திரியம் அடக்கும் முறைமை	புலனடக்கம்
கூடாவொழுக்கம்	புலனடக்கம்
8ஆம் தந்திரம்	
அவாவறுத்தல்	அறிவுடைமை
அறிவுதயம்	அறிவுடைமை
புறங்கூறாமை	அறிவுடைமை
வாய்மை	அறிவுடைமை
9ஆம் தந்திரம்	
ஊழ்	அறிவுடைமை

75. திருமூலர் திருமந்திரத்தில் வாழ்வியல் சிந்தனை



த. சக்கரவர்த்தி
குலாளகுலர் இன அமைப்பாளர்,
திருநீலகண்ட விழா குழுவினர்
கந்தசாமி கோயில் தெரு,
சென்னை 12
94440 51827

திருமந்திரம் ஒரு கலைக் களஞ்சியம் ஆகும். வாழ்வியல் தொடர்புடைய சிந்தனைகளை பல இடங்களில் நிறுவி உள்ளார். திருமூலர் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் புலன்கள் வழியே உலக வாழ்விற்கும், ஞான வழிக்கும் வழிக்காட்டியாய் அமைகிறது-இப்புலன்களின் வழி வாழ்வை நெறிப்படுத்துகிறது.

வாழ்க்கையில் இடம் பெறும் விருந்தோம்பல் நெறி, பொறாமை, ஆசையை நீக்குதல், தருமநெறி, சினங்கொள்ளாமை, செல்வம் நிலையற்றமை. ஒன்றே குலம் போன்ற கருத்தமைவுகளை முன்மொழிகிறது இக்கட்டுரை.

விருந்தோம்பல் நெறி

வேட்கை உடையீர் விரைந்து ஒல்லை உண்ணன்மின்
காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே
ஒரு காக்கைக்கு கிறு உணவு (250)

ஒரு காக்கைக்கு சிறு உணவு கிடைத்தாலும் தன் இனத்தையே அழைத்து அது உண்பது போல் வேற்றுமை பாராமல் பசித்தோர்க்கு உணவிட வேண்டும் என்றும்.

தரும சிந்தனை

இருமலும் சோகையும் ஈளையும் வெப்பும்
தருமம் செய்யாதவர் தம்பால தாரும்

இருமல் இரத்தக் குறைவால் உண்டாகும். இந்த சோகை, சளி, கணைச்சூடு போன்ற நோய்கள் பிறருக்கு உதவி செய்யாதவர் களுக்கு உரிய்வையாகும் என்று கூறி. தருமத்தை வலியுறுத்துவதன் மூலம் வறியவருக்கு செய்யும் உதவி இறைவனை அடைய வழி வகுக்கும்.

செல்வம் நிலையாமை

ஈட்டிய தேன் பூமணம் கண்டு இரதமும்
கூட்டிக் கொணர்ந்தொடு கொம்படை வைத்திடும்
ஒட்டித் துரத்திட்டி அது வலியார் கொளக்
காட்டிக் கொடுத்து வைவிட்டவாதே (171)

தேனீக்கள் கூடிய கூட்டை மனிதர்களுக்கு தாமே காட்டிக் கொடுத்துத் தேனை இழந்தை உயிரையும் விடுவது போல பாடுபட்டுத் தேடி வைக்கும் செல்வமும் ஒரு நாள் கள்வரின் வசமாகும். எனவே, பொருளை தேடிச் செல்லாமல். பார்க்கும் பயன்படச் செலவு செய்ய வேண்டும்.

ஆசையை விட்டெழித்தல்

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
மரத்தை மறைத்தது பார்முதல் பூதல்
பரத்தில் மறைந்தது பார்முதல் பூதமே (2290)

பரம் பொருளாகிய இறைவன் விண், மண், நீர், நெருப்பு, காற்று என்றும் ஐந்து பூதங்களால் மறைக்கப்பட்டிருக்கிறான். இந்த ஐம்பூதங்களும் இறைவனேடு தான் கலந்திருக்கின்ற உலக ஆசைகள் இறைவனை மறைக்கச் செய்கின்றன. அந்த ஆசைகளில் இருந்து விடுபட்டால் இறைவனை பெற முடியும்.

பொறாமை விட்டொழித்தல்

பொறாமை நம் வளர்ச்சியைக் கெடுக்கும் நம் முதல் எதிரியும் இதுவே ஆகும். எனவே பொறாமையை விட்டொழிக்க வேண்டும் இதனை,

அவ்வியம் பேசி அறம்கெட நில்லன்மின்
செவ்வியன் ஆகிப் பிறர்பொருள் விண்மீன்
செவ்வியர் ஆகிச் சறிந்தெண்ணும் பேதொடு
தவ்விக் கொடுண்மின் தலைபட்ட போடி (196)

பிறர் பொருள் மேல் கவனம் கொள்ளாமல் தம்மிடம் இருப்பதைக் கொண்டு பிறருக்குக் கொடுக்க முன் வர வேண்டும்.

சினத்தை விட்டொழித்தல்

தீய குணங்களில் மிகவும் கொடுமை வாய்ந்தது வெகுளிதான். இந்த வெகுளி ஒரு நொடியிலேயே அனைவரையும் பகைவராக்கி விடும்.

செல்லும் அளவில் விடுமின் வெகுளியைச்
செல்லும் அளவும் செலுத்துமின் சிந்தையை
அல்லும் பகலும் அருளுடன் தூங்கினால்
கல்லுமூ பிறந்து கூடுவெளிஆமே (2303)

எனவே, சினத்தை உதறித்தள்ளி விட்டு மனத்தை நல்வழியில் செலுத்த வேண்டும் என்கிறார்.

ஐம்புலன்களை அடக்குதல்

இறைவன் ஐம்பொறிகளை கட்டுப்படுத்தும் ஆற்றலை வழங்குகின்றார். ஐந்து பசுக்களாகிய இந்த ஐம்பொறிகளை இறைச் சிந்தனைகளில் செலுத்தினால் ஐம்பசுக்களும் பேரின்பப் பாலைச் சொரியும்.

பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு
மேய்ப்பாரும் இன்றி பெறுத்துத் திரிவன
மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினால்
பார்ப்பான் பசு மைந்தும் பாலைச் சொரியுமே (2883)

என்கிறார்.

நாம் செய்யும் வினைப் பயன்களை நாமே அனுபவக்கிறோம். நம்மால் ஆற்றப்படும் அனைத்துச் செயல்களுக்கும் நாமே காரணமாக அமைகின்றோம். நல் வழியில் செலுத்த வேண்டும்.

தானே தான் செய்தவினைப்பயன் துய்ப்பானும்
தானே தனக்குத் தலைவனும் ஆமே அமைகிறார் (2228)

ஐம்பெரும் குற்றங்களில் மனம் ஈடுபடுதல் கூடாது என்பதை.

சொலையே களவுகள் காமம் பொய்கூறல்
மலைவான பாதகமானம் அவை நீக்கி (200)

கொலை, களவு, கள் குடித்தல், காம இச்சை, பொய் கூறல் இவை நல்வாழ்வை அழித்து பாழ்படுத்தும் நல்வாழ்வினை பெற இறைவன் திருவடியைப் பணிந்து வாழவேண்டும்.

ஒன்றே குலம் ஒருவனே தேவன்

மனிதன் உட்பட உயிர்களும் ஒன்றுதான் அதே போல் அனைத்து உயிர்களும் படைத்த இறைவனும் ஒன்றேதான் நல்ல செயல்களை செய்யுங்கள்.

ஒன்றே குலம் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமன் இல்லை நானாமே
சென்றே புகுடம்கதி இல்லை நம்சித்தத்து
நின்றே நிலை பெற நீர் நினைத்து உய்மினே (2104)

செய்தால் இயமன் நம் அருகில் வரமாட்டான் என்கிறார்.

76. திருமந்திர செந்தமிழ் ஆகமச் சடங்குகளும்

அகோர சிவம் ச.மு. தியாகராஜன்
தெய்வத்தமிழ் அறக்கட்டளை,
பெரியார் நகர், சென்னை .

உலக மொழிகளிலேயே மந்திர நூல் என்று சொல்ல வேண்டுமானால் அது தமிழில் மட்டுமே காண முடிகிறது. 'மந்த்ரா' என்று வடமொழியில் சொல்லுகின்றார்கள் என்றால் இலக்கணம் 'தற்சமம்' என்று குறிக்கிறது. இரண்டிற்கும் பொருள் வேறு ஆனால் உச்சரிப்பு ஒன்று போல் இருக்கும். 'மந்த்ரா' என்ற வடசொல் நினைப்பவனை காப்பாற்றும் என்பது பொருள்.

நிறைமொழி மாந்தர் ஆனையிற்கிளந்த
மறைமொழிதானே மந்திரம் என்ப

என்ற தமிழ் மந்திரத்தை தொல்காப்பிய நூற்பா விளக்குகின்றது. இதுவே தமிழில் 'மந்திரம்' என்பதை நீண்ட நெடுங்காலமாக பயின்று பரப்பப்படுகின்றது. இதனுடைய விரிந்த இலக்கணப் பொருளாவது

1. மாந்தரால் (தெய்வ சிந்தனையில் ஊறியவர்) கூறப்படுவது.
2. அவர் நிறை மொழி மாந்தராக (குறை மொழி அற்றவராக) இருக்க வேண்டும்.
3. மாந்தர் ஆணையிட்டு கூறியதாக இருக்க வேண்டும்.
4. மறைவான உட்பொருளை காட்டுவதாக இருக்க வேண்டும்.

அவர் எந்த ஒன்றை ஆற்றல் செய்து ஆணையிட்டு கூறுகிறாரோ அதுதான் மந்திரமாகும். இதையே திருக்குறளும் கூறுகிறது.

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி கட்டி விடும்

இதை பரிமேலழகர் நிறைமொழி என்பது ஒன்றை வெகுளிக்கூறினும் அருளிக்கூறினும் அவ்வப் பயனைப் பயந்தே விடும் என்கிறார். அந்தணர், அறவோர், மாந்தர் அனைவரும் ஒருவரையே குறிப்பன. மேலும் மாந்தர் தாம் கூறுவனவற்றில் ஆற்றலை மட்டும் மறைப்பதில்லை. உடலின் வடிவத்தையும் சில நேரங்களில் மறைத்துச் கூறுவர். சான்றாக ஐந்தெழுத்தை 'நமசிவ' மந்திரத்தை சொல்லலாம். இதில் ஒவ்வொர் எழுத்தும்

ஒவ்வொரு சொல்லையும் பொருளையும் மறைவாகக் கொண்டது உணர்த்துவதும் ஆகும். தமிழ் மந்திரம், அதுவும் திருமந்திரம் ஆக உயர்ந்த மந்திரங்களில் மூவாயிரத்தால் ஆண்டு ஒன்றுக்கு ஒன்றாக பாடப்பட்டது. இவை,

1. இறைவனை வழுத்துவதற்குரிய மந்திரங்களாகவும்
2. மக்கட்கு உறுதி பயன் தருவதற்குரிய மந்திரங்களாகவும்
3. சபிக்கப்படும் கேடு தரும் மந்திரங்களாகவும்

அமைந்துள்ளன. இதில் பெரும் பான்மை இறைவனை வழுத்துவதற்கும் மக்கட்கு நலன் விரிவிக்கக்கூடியதாகவும் உள்ளன. இதன் அடிப்படையே ஆகமகங்களாக அமைந்து திருக்கோயில் மற்றும் இல்லச் சடங்குகளில் பயன்படுத்த எதுவாய் காணக்கிடைக்கின்றன. இதனாலேயே இதனை சாத்திர மூல நூல் என்று அழைத்தனர். திருமந்திரம் பெரிதும் தத்துவ விளக்கத்தோடு அமைந்த கிரியை நூலாகும். இதனாலேயே திருமந்திரத்தை தமிழகம் ஆகமநூல் என்று வழங்குகின்றனர். தமிழில் மூல ஆகம நூல்கள் பல்லாயிர ஆண்டுகளுக்கு முற்பட்டு இருந்தன. அவை கடற்கோள்களால் பலவாறு அழிந்து பட்டன என்பதை பண்டைய இலக்கியங்கள் புறநானூறு தொடங்கி தொல்காப்பியம் மற்றும் சில பல இலக்கியங்களில் காண கிடைக்கின்றன.

மன்னு மாமாலை மகேந்திர மதனில்
சொன்ன ஆகமம் தோற்றுவித் தருளியும்

என்பது திருவாசக வரிகள். மகேந்திர மலை கதவபுரம் என்னும் கபாடபுரத்தருகே இருந்ததாக வான்மீகி இராமாயணத்தில் சொல்லப்படுகிறது. பின்னாளில் கடலில் மூழ்கிபோயிற்று. இது இலங்கைக்குத் தெற்கே இருந்ததாக 'முக்கடல் புதிர்' என்ற நூலும் சான்று பகர்கின்றது. குமரிக்கு தெற்கே 7 தமிழ் நாடுகள் பல ஆயிரம் மைல்கள் பரவியிருந்தன என்றும் கடற்கோள்களில் அழிந்துபட்டன என்று அடியார்க்கு நல்லார் உரையில் காணக் கிடைக்கின்றன. இதில் அழிந்த பட்ட தமிழ் நூல்கள் ஏராளம். இதில் தப்பி பிழைத்தன நினைவில் தங்கிய ஆகமகக் கூறுகளே பின் தொடர்ந்தன. இவையும் கால மாற்றத்தில் சிதைவு பெற்றன. இங்கே தான் இறைவன் ஆகமத்தை மீட்டெடுக்க திருமூலரை பயன் படுத்தினான் என்பதை நாம் அறியலாம். கிமு 5500 தொடங்கி 3000 ஆண்டுகள் தவமிருந்து பெற்றவை தான் நாம் இன்று காணும் 3000 மந்திரங்கள்.

ஆகமங்கள் தமிழில் இருந்து வந்தன என்பதையே பின்னாளில் வடமொழிக்கு மொழிபெயர்க்கப்பட்ட காரணமே வசனமும் உறுதி செய்கிறது.

விந்த்யாத்ரே தட்சினே தேசே
சைவேபிற்பத்திப்கீர்தித

சைவம் தெற்கே தான் உற்பத்தி ஆயிற்று என்பது இதன் பொருள் சைவம், சைவாகமம் என்பன ஒரு பொருள் பல் சொல். இதையே தெய்வச் சேக்கிழார் தம்பெரிய புராணத்தில் குறிப்பதை நாம் பார்க்கலாம்

தண்ணியலார் சடையார் தாம்தந்த ஆகமப்பொருளை
மண்ணின் மிசைத் திருமூலர் வாக்கினல் தமிழ் வகுய்ப...

மேலும் திருமூலரே

அந்திமதி புனை அரனடி நாடொறும்
சிந்தைசெய் தாகமம் செப்பலுற்றேனே
என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே
நவ ஆகமம் எங்கள் நந்தி பெற்றானே

சத்யோஜாத சிவாச்சாரியாரின் பத்ததி 12ஆம் நூற்றாண்டாகும். இவர் காஷ்மீரத்தை சார்ந்தவர். பின்னர் கோர சிவாச்சாரியார் பத்ததி பயன்பாட்டில் உள்ள திருமூலர் ஆகமம் தமிழில் இருந்தன என்பதையும் தான் சொல்லுபவை அனைத்தும் ஆகமக் கருத்துக்களே என்று தந்நிலை விளக்கம் அளிக்கிறார். மேலும் தான் கொடுக்கும் இந்த 9 ஆகமங்கள் தான் பிறர் சொல்லும் 28 என்பதையும் மற்றொரு பாடலில் காட்டுகிறார்.

ஆகமம் ஒன்பான் அதிலான நாலேழு
மேகமில் நாலேழு முப்பேதம் உற்றுடன்
வேகமில் வேதாந்த சித்தாந்த மெய்ம்மையொன்று
ஆக முடிந்தது அருஞ்சுத்த சைவமே

ஒவ்வொரு ஆகமமும் கிரியைப் பகுதி, யோகப்பகுதி, ஞானப் பகுதி என்று முப்பிரிவுகளை உடையது. 3 × 9 = 27 இவற்றின் வேறுபாடுகளை அமைதிப்படுத்திய ஆகமம் ஒன்றுடன் 28 ஆகியது. பல்லவர்கள் காலத்தில் அரசனுடைய ஆதரவு பெற சிவாச்சாரியார்கள் அரசனுக்குரிய வடமொழியில் கிடைத்த தமிழ் ஆகமங்களை மொழி பெயர்த்தார்கள். புதிய கிரந்த லிபி தோன்றியது. பல்லவ கிரந்தம் என்ற பெயர் பெற்றது பல தமிழ் எழுத்துக்களின் துணையுடன். இதுவே பின்னர் காஷ்மீர் வரை சென்று 8ஆம் நூற்றாண்டில் பாலி மொழி பத்ததிகளாக உருப்பெற்றன. இதுவே இன்று தமிழ் வாயிலாக காணப்படும் வழிபாட்டு செய்முறை நூல்களாகும். இது ஒரு புறம் வளர்ந்து கொண்டிருக்க மூச்சு விட்டுக் கொண்டிருந்த எஞ்சிய சில தமிழ் ஆகம நூல்கள் 2ஆம் குலோத்துங்கன் காலத்தில் 1 ஆம் நூற்றாண்டு காலங்களில் குகையிடி கலகம் என்ற பேரழிவில்

அழிந்தன. கல்வெட்டுகளும் நூல்களும் அடித்து நொறுக்கப் பட்டன. மேலும் நாம் இங்கு கவனிக்க வேண்டியது சிவாச்சாரியார்கள் தமிழ் இனத்தவரே.

தமிழில் 'ஆகமம்' என்பது உயிர்களுக்கு நிறைவை தருவது இறைவனோடு தொடர்புடையது, கோயில், குளங்கள் மற்றும் நகரமைப்புகள், இறை தொடர்பான அனைத்து கிரியைகளும் காரண காரிய அறிவான சைவ சித்தாந்தத்தோடு தொடர்புடையன. பூசை முறைகள், வழிபாடுகள், கோயிற் திருவிழாக்கள், நாட்பூசை, சைவ அனுட்டானம் போன்ற ஆன்மார்த்த பூசை பிறர் பொருட்பின பரார்த்த பூசை சிவாச்சாரியார் யார் என்பன போன்ற அனைத்திற்கும் இதில் விடை காணலாம். ஆகமம் தமிழர் நெறி சார்ந்த கலை சார்ந்த விஷயம். தமிழர் கடவுட் கொள்கை உடையவர்கள் இதனாலேயே தொல்காப்பியர் தம் இலக்கண நூலில் நிலத்தை நாற் பகுப்பு செய்து அதற்குரிய தெய்வத்தை பற்றி பேசுகிறார். மேலும் பொதுவாக சமயம் சார்ந்த சொல்லால்களை நாம் கவனித்தால் அதில் மூல நேறா அமைந்துள்ளன. எது என்பது முழுமையாய் வெளிப்படும். உதாரணத்திற்கு பூஜை - பூசை, ஜலம் - சலம், குண்டா - குண்டம், யஞ்ஜம் - யாகம், ஹோமம் - ஓமம், கலசம் - கலயம், ஆகுதி - ஆவுதி போன்ற சில சொற்களை பார்த்தாலே புரியும்.

ஆகம நெறி, வைதிகத்திற்கு - சமஸ்கிருத வேத காலத்துக்கு முற்பட்ட பழமை வாய்ந்தது. ஆனால் இன்று ஆகம நெறி வைதிகக் கலப்புக்கு உட்பட்டிருப்பினும் இது தனித்ததோர் நெறியேயாம். பூவினால் செய்யப்படுவது பூசை, சை ஜையாக மாறியது. இதுபற்றி டாக்டர். ராதாகிருஷ்ணன், பி.டி. சீனிவாச ஐயங்கார் மற்றும் பல வரலாற்று அறிஞர்கள் அவர்தன் நூல்களில் குறித்துள்ளனர். இன்னொன்றை நாம் கவனிக்க வேண்டும் தெற்கே தான் கோயில்கள், குளங்கள், கோபுரங்கள், மடங்கள் ஆகியவற்றை அதற்குரிய விதத்தில் நெறி வழி பாட்டில் காணலாம் ஆனால் இதை வடக்கே சிறிதும் பார்க்க முடியாது.

பாடல் பெற்ற தலங்கள் எல்லாம் தமிழாலேயே பாடப் பெற்றுள்ளன அன்றி வடமொழி பாடல் என்று ஒன்று கூட காண இயலாது. இப்பொழுது இறைவனை வழுத்தும் நான் மறைத்து வடமொழி வேதம் மூன்று என்று அமர கோச வடமொழி நிகண்டு மற்றும் மனுஸ்மிருதியில் காணலாம்.

வேதம்த்ரயே

தமிழ் வேதம், நான் மறை, நூல் வேதம் என்று 'அழிந்த சிந்தை அந்தனாளர்க்கு அறம், பொருள் இன்பம் வீடு மொழிந்த யாயின் ''முக்கன் ஆதி மேயது முதுகுன்றே'' என்றார் சம்பந்தர்.

அற்றலின் நிழல் கீழ் அறம் நூல்கள் அருள்புரிந்து சுந்தரர்
அருந்தவருக்கு ஆலின்கீழ் ஆறமுதாகி நான்கனையும்
இருந்தவருக்கு அருளுமது எனக்கூறிய இயம்பேடி
மாணிக்கவாசகர்

அரித்தான் ஆலதன் கீர்இருந்து நால்வர்க்கு
அறம்பொருள் இம்பம் வீடு ஆரங்கம் வேதம் அப்பர்

தெரிந்தாளைத் திருநாகேசரத்துளானைச்
சேராதார் நன்னெறிக்கட் சேராதாரே

என்று பல பட பார்க்கலாம்.

மறைந்து போயின இது பற்றி தசாவதாரப் புராணங்களில் திருமாலின் மச்சாவதார கூறுகின்றது. கடலில் மூழ்கிய வேதத்தை திருமால் மீட்பார் எனவே அது தமிழ் நூன் மறையே ஏனெனில் இதுவே எழுதப்பட்ட மறையாகும். வடமொழி எழுதாக்கிளவி என்பது அனைவரும் அறிவர்.

இறைவனால் அளிக்கப்பட்டது தமிழ் நான் மறையே என்று அருளாளர்கள் உறுதி பட கூறியுள்ளனர். இங்கே திருமூலர்,

1. வேதமொடு ஆகமம் மெல்லாம் இறைவன் நூலாம்.
2. சதாசிவதத்தும் முத்தமிழ் வேதம்
3. தமிழ் மண்டலம் ஐந்தும் தாவிய ஞானம்
4. என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
   தன்னை நன்றாக தமிழ்ச் செய்யுமாறே
5. செந்தமிழ் ஆதி தெளிந்து வழிபடு

என்பது திமூலர் ஆணை. ஆக இறைவன் உபதேசித்த தமிழ் நான் மறையை தமிழ் வேதத்தை ஆகம நெறியோடு பிழிந்து கொடுத்தது தான் திருமந்திரம். இதில் சடங்குகளில் இன்றியமையாத கிரியைகளைப் பற்றிய பலகுறிப்புகள் மந்திரங்களாக நாம் பார்க்க இயலுகின்றன. சடங்கு என்ற சொல்லின் விரிந்த பொருளை பார்த்தால் அதனுடைய முழு வீச்சு அதில் புலப்படும். நம் வாழ்வில் நடைபெறுகின்ற முக்கிய மான நிகழ்வுகளை நாம் இறைவனை முன்னிறுத்தி வழிபாடு களை ஆற்றோவானமானல். அது நம்மை அரன் போலக் காக்கும். இன்றும் நாம் சடங்குகளை செய்து வருகிறோம், பிரியாத மொழியில் பொருந்தாத மந்திரங்களினால், தொடர்பில்லாத வகையில். வெற்றுச் சடங்குகளையே இன்று நாம் காண முடிகிறது. அதில் ஓர் ஈர்ப்பைக் காண இயலவில்லை. இறைவனோடு மக்களை தொடர்பு படுத்த இயலவில்லை. காரணம் தமிழ் நெறி சார்ந்த விதிமுறைகள் மீறப்பட்டு சிறிது சிறிதாக மாறி கால வெள்ளத்தில் அனைத்து வழிமுறைகளி லிருந்து இடம் பெயர்ந்து அந்நியப்பட்டு நிற்கிறோம்.

இனம், மொழி, கலாசாரம் மட்டுமின்றி இறைவனிடமிருந்தே விலகி நிற்கின்றோம் என்பது தான் இன்றைய நிலை.

தன்னை அறிய தனக்கொரு கேடில்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை அறியும் அறிவை அறிந்த பின்
தன்னை அர்ச்சிக்க தான் இருந்தானே (திரு)

இதை எல்லாம் சிறு வயதிலேயே இறை திருவருளாலும், முந்தைய பிறவிகளின் தவ வட்டத்தாலும் உணர்ந்தவர் பல ஆகம நூல் ஆராய்ச்சிகளை நீண்ட நாள் மேற் கொண்டு செந் தமிழ் ஆகம சடங்குகளை பல பத்ததிகளாக உருவாக்கி இன்று உலகளாவிய அளவில் முன்னெடுத்து செல்பவர் தான், என்னை நெறிகாட்டி செந்தமிழ் ஆகம சடங்குகளில் வழிப்படுத்திய ஆசான், குரு, திருமந்திரமாமணி மு. பெ. சத்திய வேல் முருகனார். இப்பொழுது திருமூலர் தம் திருமந்திரத்தில் எவ்வாறெல்லாம் சடங்குகள் தொடர்பான கிரியைகள் மற்றும் மந்திரங்கள் உள்ளன என்பதைப் பார்க்கலாம்.

ஒரு வழிபாட்டையோ, சடங்கையோ ஆரம்பிக்கும்போது ஓங்காரத்துடன் ஆரம்பிப்பது என்பது ஆகம விதி இதையே திருமூலர்

ஓமெனும் ஓங்காரத்துள்ளே பொருமொழி
ஓமெனும் ஓங்காரத்துள்ளே யுருவரு
ஓமெனும் ஓங்காரத்துள்ளே பலபேதம்
ஓமெனும் ஓங்காரம் ஒண்முத்தி சித்தியே

இதுபோன்று பல பாடல்கள் ஓங்காரத்தின் சிறப்பை விளக்குன்றன.

திருவிளக்கை ஏற்றல்: இதை அருமையாக திருமந்திரம் கூறுவதைப் பார்க்கலாம்.

விளக்கினை ஏற்றி வெளியை அறிமின்
விளக்கினின் முன்னே வேதனை மாறும்
விளக்கை விளக்கும் விளக்குடையார்கள்
விளக்கில் விளங்கும் விளக்குபவர் தாமே

இறையின் பெயரில் என்பது திருக்கோயில் கும்பாபிஷேகத் தில் துவக்கத்தில் இறைவனை வேண்டி அவர் அனுமதியை நாம் பெற வேண்டும். அப்பொழுது அங்கே குரு துதியும் வரவேண்டும். குரு முகமாக இறைவன் அருள் புரிவான் என்பதே ஆகம நெறி.

குருவே சிவமெனக்கூறினன் நந்தி
குருவே சிவமென்பது குறித்தோரார்
குருவே வீசனுமாய்க் கோறுமாய் நிற்கும்
குருவே உரை உணர் வற்றதோர் கோவே

வெவ்வேறு இறை உருவங்களை எழுந்தருளச் செய்யும் பாடல்கள்.

பெருமான்

சிவபெருமான் என்று நான்அழைத் தேத்த
தவபெருமான் என்று தான் வந்து நின்றான்
அவபெருமானின் என்னை ஆளுடை நாதன்
பலபெருமானை பிணிந்து நின்றானே

அம்பிகை

உண்டு இல்லை என்றது உருளச்செய்து நின்றது
வன்தில்லை மன்றினுள் மன்னி நிறைந்தது
கண்டிலர் காரண காரணி தம்மொடு
மண்டலம் மூன்றுற மன்னி நின்றானே

சூரியன்

உணர்ந்தேன் உலகினில் ஒன் பொருளானை
கொணர்ந்தேன் குவலயம் கோயில் என்நெஞ்சம்
புணர்ந்தேன் புனிதனும் பொய்யல்ல மெய்யே
பணிந்தேன் ப்கபவன் பாட்டும் ஒளியே

கூத்தன்

அடங்காத என்னை அடக்கி அடிவைத்து
இடங்காண் மரானந்தத்தே என்னை இட்டு
நடந்தான் செயும் நந்தி நல்ஞானக்கூத்தன்
படந்தான் செய்து என்னுள் படித்திருந்தானே

இது போன்று பலருக்கும் உண்டு.

அமுதூட்டலில் ஒரு மந்திரம்

வேட்டவி உண்ணும் விரிசடை நந்திக்கு
காட்டவும் நாம் இலம் காலையும் மாலையும்
ஊட்டவி ஆவன உள்ளங் குளிர்விக்கும்
பாட்டவி காட்டுதும் பாலவி ஆகும்

சடங்கில் ஆசிரியர் முதலில் இறைவனுடரை ஒன்ற வேண்டி பாட வேண்டியது மெய் ஒன்றல் பாடல்.

ஒன்றியவாறும் உடலின் உடன் கிடந்து
என்றும் எம் ஈசன் நடக்கும் இயல்பது
தென் தலைக்கேற திருந்து சிவனடி
நின்று தொழுதேன் என் நெஞ்சத்ததின் உள்ளே

போற்றி அருச்சனைகள்

அம்பிகை போற்றிகளுக்கு 4 ஆம் தந்திர பகுதிகளும், ஆடல் வல்லானுக்கு. 9ம் தந்திரமாகிய மகுடாகமத்தில் திருக்கூத்து தரிசனத்தையும் சதாசிவருக்கு 23 பாடல்கள் உள்ளன.

கூடிய பாதமிரண்டும் படி மிசை
பாடிய கையிரண்டெட்டும் பிராந்தெழுந்

தேடு முகம் ஐந்து செங்கணின் மூவைந்து
நாடுஞ்சதாசிவ நல்லொளி முத்தே
வேள்விதீயற்றலைக் குடங்களுக்குக் கொண்டு சேர்க்க
சடங்கது செய்து தவம் புரிவார்கள்
கடந்தனின் உள்ளே கருதுவராகில்
தொடர்ந்தெழு சோதி துளைவழி ஏறி
அடங்கிடும் அன்பினது ஆயிழையிலே

விழுத்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்த சென்னியும் தந்த தலைவனை
சூழ்த்த மாமலர் தூவி துதியாதே
வீழ்த்தவா வினையேன் நெடுங்காலமே

இதுபோன்றே நம் இல்லச் சடங்குகளில் கையாளக் கூடியன பல குழந்தையைத் தொட்டிலில் போட்டு தாலாட்டுப் பாட

தேவ ரோடாடித் திருவம் பலத்தாடி
மூவ ரோடாடி முனிசனத் தோபிடிப்
பாவினுள் ஆடிப்பரா சத்தியிலாடிக்
கோவினுள் ஆடிடும் கூத்தப்பிரானே

மகவுக்கு உணஊட்டலில்
வாழ்நாள் வேள்வியில் (பிறந்த நாள் வழிபாட்டில்)
எழுத்தறிவித்தலில்
மஞ்சள் நீராட்டு விழாவில்
அம்மனை அம்மை அரிவை மனோன்மணி
செம்மனை செய்து திருநங்கையாய் நிற்கும்
இம்மனை செய்த இந்நில மங்கையும்
எம் மனையாகி அமர்ந்து நின்றாளே

வளை காப்பில்
மணி விழா, முத்து விழாவில்
திருவடிப் பேற்று சடங்கில்
என் தாடோ டென்னப்பன் ஏழேழ் பிறவியும்
அன்றே சிவனுக்கு எழுதிய ஆவனம்
ஒன்றாய் உலகம் படைத்தான் எழுதினன்
நின்றான் முகில் வண்ணன் நேரெழுத்தாயே

இது போன்று பல மந்திரங்கள் திருக்கோயில் கடவுள் மங்கலத்தில் (கும்பாபிடேகம்) பொருந்தி வரக் காணலாம். வார்த்தைகளால் அளக்கவுங்ட செயல்முறையில் கண்டு உணரலாம். நிறைவு அடையலாம். முன்னோர் தடத்தில் உறுதிபட நடக்கலாம். வாழையடி வாழை வாழலாம். திருமந்திரமும் செந்தமிழ் ஆகமச் சடங்குகளும் என்ற இந்தக் கட்டுரைக்கு வலுசேர்த்து உதவினர் திரு. மு.சத்தியவேல் முருகனார் அவரின் நூல்கள் மற்றும் கட்டுரை ஆக்கங்கள்.

77. திருமூலரும் ஆகமமும்

பொன். எழில் குமார்
சிவாலய ஆன்மிக அறக்கட்டளை,
அயன்புரம்,
சென்னை.

எல்லாம் வல்ல தனித் தலைமை பெருங்கடவுளாய் திகழும் சிவபெருமானே மானிடர்கள் உய்வு பெற ஆகமங்களை அருளினார்கள் ஆகமங்கள் காலப்போக்கில் கிடைத்தில. அவ்வகையில் ஆகமங்களை மீட்டுருவாக்கம் செய்து திருமூலரால் கிடைக்கப் பெற்றது.

முன்னியஅம் பொருண்மாலைத் தமிழ்மூவா யுரஞ்சாத்தி
மன்னிரமூவாபாரத்தாண் டிப்புவிமேல் மகிழ்ந்திருந்து
சென்னிமதி யணிந்தார்தம் திருவருளாற் திருக்கயிலை
தன்னிலணைந் தொருகாலுமூ பிரியாமைத் தாளடைந்தார்

திருமந்திரம் (சித்தர்களின் சமயக் கோட்பாடு)

சமய உண்மைகளும், உளவியல் ஒழுக்கங்களும் அருளிய திருக்கோயில் வழிபாடுகளும் திருவுருவச் சிறப்புகளும் என சக்கர அமைப்பும் மந்திர மாண்பும் அடியார் பெருமையும் சிவகுருவின் முதன்மையும் சிவ பூசை நிகழ வேண்டிய இன்றியமையாமையும் விளக்குகிறார் கூறும் நூல் தமிழ் வேத ஆகமமாகிய திருமந்திரம் ஆகும்.

இதனைச் சுந்தரன் என்னும் திருமூலநாயனார் இயற்றினார் இவர் நந்தியிடம் உபதேசம் பெற்று தமிழகத்தில் ஒரு ஞானம், பரம்பரையை உருவாக்கியவர் 3000 பாடல்களைப் பாடியவர் இவை தமிழ் உபதேசம், மந்திரம் என மூன்று பிரிவுகளாக உள்ளன.

மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ்
மூலன் உரை செய்த முந்நூறு மந்திரம்
மூலன் உரை செய்த முப்பது உபதேசம்
மூலன் உரை செய்த மூன்றும் ஒன்றாமே

எனத் திருமந்திரத்தின் இறுதியில் காணப்படும் பாடல் கூறும்.

எண்ணை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யு மாறே

இறை உணர்வதைத் தமிழகத்தில் பரப்பும் பொருட்டே தாம் பிறந்ததாக அவர் பதிவு செய்கிறார்.

சுந்தர ஆகமம்

திருமந்திரமாகிய இந்நூலைச் சுந்தர ஆகமம் என்பர் இறைவனருளிய 'த்வ்யாகமம்' என்னும் சிறப்பினை உணர்த்து வதாகும்.

மறைமொழி சிறந்த மந்திரத்தானும்
நிறைமொழி மாந்தர் ஆணையுற் குளந்த
மறைமொழி தானே மந்திரம் என்பர்

என்னும் தொல்காப்பிய விதிகளுக்கு ஏற்ப மறைமொழி கிளந்த மந்திரமாக இது விளங்குகிறது.

நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
வான் பற்றி நின்ற மறைப்பொருள் கொள்லிடின்
ஊன் பற்ற நின்ற உணர்வுறு மந்திரம்
தான் பற்றப் பற்றத் தலைப் பருந்தாறே

என்னும் வரிகள் இதனை உணர்த்தும்.

திருமந்திரம் அமைப்பு முறை

திருமந்திரம் ஒன்பது பகுதிகளாக உள்ளது, ஒவ்வொரு பகுதியும் தந்திரம் எனப்பெயர் பெற்று விளங்குகிறது. இவற்றில் சமய சாத்திரக் குறியீடுகள் பலவற்றையும் திருமூலர் கையாண்டுள்ளார். பதி, பசு, பாசம், ஆணவம், கன்மம், மாயை, சித்து? அசித்து, சரியை, கிரியை, யோகம், ஞானம் எனப் பிற சொற்களையும் எடுத்துாண்டுள்ளார். வேத ஆகமங்களின் முடிந்த முடிபாகிய சைவ சமயம் என்ற பொருளில் 'சித்தாந்தம்' என்னும் தொடரை முதன்முதலில் வழங்கியவர் திருமூலரேயாவர்.

திருமந்திர திறம்

இவர் பாடல்கள் தேவாரப் பாடல்களைப் போல் திருக் கோவிலை மையமாகக் கொண்டு எழுந்தனவல்ல மணிவாசகர் பாடல்கள் போல் ஞான அனுபவத்தை உணர்ச்சி நிலையில் நின்று உள்ளம் உருகப் பாடுவனனவுமல்ல. இவர் பெற்ற அட்டாங்க யோகத்தால் கைவரப் பெற்றிருப்பனும் ஞான அனுபவமே ஆயின் அதனை வெளிப்படுத்தும் பாங்கு நீதி இலக்கியங்கள் போன்று அறிவுரை கூறும் பாங்கே தாம் பெற்ற தெய்வ அனுபவத்தைத் உணர்த்துகிறார் என்பது சான்றோர் வாக்கு.

அறநூலாகிய திருமந்திரத்தில் இறைவனுக்குப் பூசை என வலியுறுத்தும் அவர். பசுவிற்குச் சிறிது புல் உண்பதற்குப் பொருளில்லாத மனிதனுக்குத் தன் உணவில் ஒரு சிறிய பகுதி

சமுதாயத்தோடு கலந்து பழகி பழகி மானுடனாய் கூடி இன்சொல் ஆகியவை வேண்டும் எனவும் கூறுவார்.

யாவர்க்குமாம் இறைவிற் கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவிற்கொரு வாயுரை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே

இப்படி உலகியல் அறத்தோடு இணைத்து தெய்வ நெறியையும் பாடும் நற்சிந்தனையாளர் திருமூலர் ஆவர். கற்றதனால் ஆன பயன் என்ன? என்பதை,

கல்லாத மூடரைக் காணவும் ஆகாது
கல்லாத மூடர்சொல் கேட்கக் கடனன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லராம்
கலலாத மூடர் கருத்தறி யாரே

இறையன்பிற்குத் துணையாகும் கல்வியே எனக் குறிப்பிடு கின்றார். நீதி நூல்களில் தாம் பெற்றுள்ள தலைப்புகளே திருமந்திரத்திலும் காணப் பெறுவது சிறப்பாகும்.

தந்திரங்களும் ஆகமங்களும்

இறைவன் படைத்த ஆகமத்தையே மூலர் தந்திரங்களாக படைத்தார் தந்திரத்தின் வாயிலாகச் சிவபெருமானின் ஆகமத்தை முன் மொழிந்தார். தத்துவம் சார்ந்த உலகியல் நெறியுரைக்கும் பகுதிகளை ஒப்பிட்டுக் காண்போம்.

தந்திரங்கள்	ஆகமங்கள்
முதல் தந்திரம்	காரணாகமம்
இரண்டாம் தந்திரம்	காமிகாகமம்
மூன்றாம் தந்திரம்	வீராகமம்
நான்காம் தந்திரம்	சித்தாகமம்
ஐந்தாம் தந்திரம்	வாதுளையாகமம்
ஆறாம் தந்திரம்	வியாமனாகமம்
ஏழாம் தந்திரம்	காலோத்தராகமம்
எட்டாம் தந்திரம்	சுப்பிராகமம்
ஒன்பதாம் தந்திரம்	மகுடாகமம்

இவ்வாகமத்தின் சாரமே திருமந்திரம் ஆகும். திருமந்திரத்தை ஓதுவோம் ஆகமப் பயனை பெறுவோம் என்று இக்கட்டுரை முன் மொழிகிறது.

78. திருமூலர் பெருமான் வரலாறு



கோ.கோபிநாத்
இதழியல் துறை,
சென்னை 7.
கைபேசி: 9840346868
மின்னஞ்சல்: kgmsathish1965@rediffmail.com

கயிலாத் தொரு சித்தர் பொதியிற் சேர்வார்
காவிரிசூழ் சாத்தனூர் கருது மூலன்
பயிலா நோயுடன் வீயத் துயரநீடும்
பசுக்களை கண்டு அவனுடலில் பாய்ந்து போத
அயிலாகப் பண்டையுடல் அருளான் மேவி
ஆவடுதண்டுறையாண்டுக் கொரு பாவாகக்
குயிலாரும் அரசடியிலிருந்து கூறிக்
சோதலா வடகயிலை குறுகினாலே

திருத்தொண்டர் புராணசாரம்

திருமூலர் கயிலாயப் பரம்பரையைச் சேர்ந்தவர். சித்தர்களின் முதன்மை சித்தர் என்னும் சிவபெருமானிடமும் நந்தீசரிடமும் உபதேசம் பெற்றவர். அகதியர் முனிவரின் அன்பினாலே அவருடன் சில நாள் தங்குவதற்கு எண்ணி அவருடன் பொதிகை மலையை சேர்வதற்குக் கயிலையிருந்து புறப்பட்டு தென்திசை நோக்கிச் சென்றார். செல்லும் வழியில் திருக்கேதாரம், பசுபதி, நேபாளம், திழுக்காளத்தி, திருவாலங்காடு ஆகிய திருத்தலங்களைத் தரிசித்து காஞ்சி மாநகரை அடைந்தார் அங்கு உள்ள சிவயோகியர்களைக் கண்டு ஆனந்தம் அடைந்தார்.

பின்னர் திருவதிகையை அடைந்து அங்கு
புரமெரித்த பெருமானை வழிபட்டு பின்னர்
தில்லைத் திருநடனகண்டு சிவயோகியர் அனகிருந்து
புறப்பட்டு காவிரியில் நீராடி தென்கரையை

அடைந்து இறைவனைத் தரிசித்து நின்றார். அவர் அங்கிருந்து செல்கின்றபோது பசுக் கூட்டங்கள் கதறி அழுவதை எதிரே கண்டார். அந்தணர்கள் வாழும் சாத்தனூரில் தொன்றுதொட்டு மாடுகளை மேய்க்கும் குலத்தில் பிறந்த மூலன் என்று பெயர் பெற்றிருந்தார்.

மூலன் இறந்ததைக் கண்ட பசுக்கள் அவனது உடலைச் சுற்றி வந்து கதறி வருந்தின. மேய்ப்பவன் இறந்ததால் பசுக்கள் கொண்ட துயரத்தைச் சிவயோகிகள் அப்பசுக்களின் துயர் துடைப்பதர்க்குத் தன் உடலை ஒரு மறைவான இடத்தில் கிடத்திவிட்டுக் கூடுவிட்டுக் கூடு பாய்தல் வழியினாலேயே அவ்விடையனது உடலில் புகுமாறு செலுத்தித் திருமூலராய் எழுந்தார்.

மூலன் எழுந்ததை கண்ட பசுக்கள் துள்ளி குதித்து தனக்கு பிடித்தமான இடத்திற்குச் சென்று புல் மேய்ந்தன அப்பசுக்கள் வயிறார மேய்ந்து கூட்டமாகச் சென்று காவிரியாற்றின் இறங்கி தண்ணீர் பருகி கரையேறித் தத்தம் கன்றுகளுடன் தாமே மெல்ல நடந்து சாத்தனூரை அடைந்தன.

அப்பசுக்கள் சென்ற வழியிலே சென்று தத்தம் வீடுகளுக்குச் சென்ற மூலன் தனியாக நின்றார். பொழுது சென்ற பின்னரும் தன் கணவன் விடு திரும்பாததைக் கண்டு தேடி வந்தாள். மூலன் வடிவில் இருந்து சிவயோகியரைக்கண்டு வீட்டிற்கு அழைத்தார்.

மூலரோ தான் உன் கணவன் இல்லை என்று கூறி அவன் விதி முடிந்தது என்றும் அவன் இறந்துவிட்டான் என்று கூறினார். அவள் அதை அவ்வூரிலுள்ளோரை அழைத்து தன் கணவன் நிலையில் ஏற்பட்ட மாற்றத்தைக் கூறி அழுது நின்றாள்.

அங்குள்ள சான்றோர் மூலனுக்கு அறிவுரை கூறி வீடு செல்லும் மாறு கேட்டு கொண்டதால் மூலன் உடலிலிருந்து சிவயோகியார் தன் நிலையை அவர்கட்கு எடுத்துக் கூறி மறுபடியும் அவ்வுடலை செயலற்றதாக்கி நிருபித்தார்.

சான்றோர்கள் மூலன் மனைவியைத் தேற்றி அவனது வீட்டிற்கு அழைத்து சென்றார். தன்னுடைய பழைய உடலை தேடிச் சென்று சிவயோகியார் அஃது அங்குத் தம் உடல் காணபடாமல் பின்னர் மூலன் உடலியே தங்கி திருவாவடுதுறைத் திருக்கோயிக்குச் சென்று யோகத்தில் வீற்றிருந்து உலகத்தில் உள்ள அனைவரும் போற்றும் வர்ம யோகம், ஞானம், கிரியை, சரியை எனும் நால்வகை நன்னெறிகளும் விளங்கும் திருமந்திரம் என்ற நூலை ஓராண்டுக்கொரு பாடலாக மூவாயிரம் பாடல்களைப் பாடியருளினார். பின்னர் மூவாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் இறைவன் திருவடி நிழலை அடைந்தார்.

சதுரகிரித் தலபுராணத்தில் திருமூலரின் வரலாறு

இந்தச் சதுரகிரி மலையில் பல சித்தர்களும் தங்கி தவம் புரிந்ததாக காலாங்கி கூறுகின்றார். சதுரகிரி சிறப்பு ஒருபுறமிருக்க திருமூலர் வரலாற்றுடன் இத்தல புராணம் கொண்டுள்ள தொடர்பைக் காண்போம். பாண்டிய நாடு சித்த வித்ததைக்குப் பேர் போனது இறைவனாம் சிவபெருமானே சித்தராகத் திருவிளையாடல் புரிந்த நாடல்லவா அது.

அந்த பாண்டிய நாட்டை சுவேதன் என்ற மன்னர் அரசாண்டு வந்தான். அவனுக்கு இரண்டு மனைவிகள் முதல் மனைவி சந்தரவள்ளிக்கு வீரசேனன் என்ற புதல்வனும், இரண்டாவது மனைவியான சந்திரவதனிக்கு தர்மார்த்தன், சூரசேனன், வஜராஸ்கதன் என்ற புதல்வர்களும் இருந்தனர். மன்னராயிருந்த சுவேதன் முதுமையை அடைந்து விட்டதால் பட்டத்தரசியான சுந்தரவல்லியினை மகன் வீரசேனனுக்குப் பட்டம் சூட்டி

அரசனாக்கினார். அரசனும் நல்லாட்சி புரிந்து வந்தார். அவ்வப்போது நகர்ச் சோதனைகள் புரிந்து நாட்டில் குற்றம் நிகழாமல் பார்த்துக் கொண்டார்.

வீரசேனனுக்கு ஆண் குழந்தை ஒன்றும் பிறந்தது அந்த மகிழ்ச்சியில் பெயர் சூட்டு விழா இனிதாக நடந்தேறியது. மகன் பிறந்த சந்தோஷத்தில் மாதக்கணக்கில் நகர்ச் சோதனைக்குப் போகாதது நியாயபங்கம் வந்தது. எனவே, அன்று இரவே சோதனைக்குப் புறப்பட்டார். திரும்பி வந்த மன்னர் உடல் சோர்வுடன் காணப்பட்டார். மன்னர் உடனே மஞ்சத்தில் படுத்துவிட்டார். அவரது மனைவி குணவதி அவரிடம் அவரின் உடல்நிலைக்கான, காரணத்தைக் கேட்டாள் பதிலில்லை. மன்னர் வாயில்நுரை வர ஆரம்பித்தது.

கணவரின் நிலையைக் கண்டு குணவதி அரண்மனை மருத்துவர்க்குச் செய்தி அனுப்பினார் உடனடியாக மருத்துவ பட்டாளமே ஓடிவந்து மன்னரைப் பரிசோதித்துவிட்டு அவர் இறந்ததை உறுதி செய்தது. பாண்டிய நாடு சோகத்தில் ஆழ்ந்தது உறவினர்கள் கதறிய கதறலை விட ஊர்மக்கள் நாட்டு மக்களின் கதறல் தான் பெரும் சோகமயமாய் விளங்குகிறது. ஆகாயத் தையும் அலற அடித்த- அப்போது ஆகாய வழியாகப் போய்க் கொண்டிருந்த திருமூலரின் காதுகளிலும் இந்தப் புலம்பல் சோகம் கேட்டது- அவர் உடனே கீழே இறங்கினார்.

அங்கே மன்னரின் உடலை பார்த்து குணவதியும் சுற்றமும், ஊர் மக்களும் ஓலமிட்டு அழுது கொண்டிருந்தினர். இதைக் கண்டு திருமூலர் தான் தவம் செய்யும் சதுரகிரி குகைக்குச் சென்றார். அந்தரங்கச் சிடனான குருராஜன் என்பவனை அழைத்து தான் விரசேனனின் உடலுக்குள் சில காலம் மானிடனாக மன்னராக வாழ விரும்புகிறேன். அங்கே எல்லோரும் சோகத்தில் இருக்கிறார்கள். அதனால் வீரசேன மகாராஜாவின் உடலில் பிரவேசித்து சிறுது காலம் உலக வாழ்க்கையில் ஈடுபட விரும்புறேன். நான் திரும்பி வரும் வரையில் கல்ப சாதனையால் வயிரம் பாய்ந்த விளங்கும் இந்த உடலில் காப்பாற்றி வைத்திருப்பயாக என்று கூறினார்.

குருவின் கட்டளைக்கு மறுவார்த்தை பேசியறியா அந்தச் சீடனும் குருவின் செயலுக்குச் சம்மதம் தெரிவித்தார். திருமூலர் குகையில் மறைவான ஓர் இடத்தில் தன் உடலைக் கிடத்திவிட்டுச் சூட்சம உடலோடு மன்னன் உடல் இருந்த இடம் நோக்கி விரைந்தார்.

அதற்குள் மன்னர் உடலைக் கழுவி முடிந்திருந்தார்கள். அப்போது திருமூலர் மன்னனின் உடலில் புகுந்தார். அதுவரை, அசையாமல் இருந்த மன்னர் உடலசைந்தது. அதற்குள் திருமூலர், வீரசேனத்திருமூலராக எழுந்து விட்டார்.

மன்னர் எழுந்ததை கண்ட மனைவியும் மற்றும் அரசவையில் உள்ள அனைவரும் மகிழ்ச்சிக்குக் குரலாக மாறியது. நான் தான் எழுந்துவிட்டேன். இன்னும் ஏன் துயரம் என்று கேட்டார்.

எல்லோருக்கும் ஆச்சிரியம். அவர்கள் குழப்பத்திற்கு அரசே தன்னிலை விளக்கம் அளிக்கமுன் வந்தார்.

நகரசோதனைக்குப்போன இடத்தில் நந்தவனம் ஒன்றில் ஒரு கொடிய நாகம் தன்விஷத்தை கக்கியிறரந்தைக் கவனிக்காமல் மோர்ந்த காரணத்தால் இவ்வாறு நிகழ்ந்தது என்று கூறினார்.

மக்கள் திருமூலர் விரசேனனின் ஆட்சியில் நாட்டில் செல்வம் கொழித்தது, நீதி, நேர்மை மற்றும் குற்றங்கள் குறைந்தது. ஆனால் மனைவி குணவதி மனத்தில் தன்கணவரின் மாற்றத்தில் சந்தேகமிருந்து வந்தது.

ஓர் இரவு இரண்டு பேரும் தனியாக இருந்த நேரத்தில் நீங்கள் யார் என்று கேட்டால், அவரும் இனிமேல் இது விபரிதமாகி விடும் என்று நினைத்து உண்மையைக் கூறினார். குணவதியான கற்புக்கரசியே நினைப்பது உண்மை என்று கூறினார். பின்னர் அவரது உடல் மலையில் உள்ளது என்றும் அது திரை முப்புக்கு அழியக்கூடியது என்று கூறினார். கற்பதேகத்தைச் சாதாரணத் துயில் எரித்து விடமுடியாது. அதன்மேல் வெடியுப்பும், குங்கிலியமும், பொரிகாரமும் போட்டுத் தூலாக்கி, அந்த உடம்பில் பூசி அதன் பிறகு அதை விராலி இலைகளினால் மூடி, அதில் கட்டைகள் அடுக்கி எரி மூட்டினால்தான் எரியும். இதையறிந்த அரசி தன் ஆட்களை அனுப்பித் திருமூலர் உடம்பை எரிந்த் தன் சுயநலத்துக்காக செய்து முடித்தார்.

ஆனால் சித்தர்க்கு குணவதியின் நடவடிக்கை சந்தேகத்தை ஏற்படுத்தவே. அவர்குகை சென்று பார்த்தார். அங்கு அவர் உடலில்லை. இது இராணி செய்த சூழ்ச்சி என்று புலனாயிற்று. அரண்மனைக்குத் திரும்பினார். குணவதி துரோகம் செய்திருந்தாலும் வீரசேனன் உடலிருக்கும் தான் அவளுக்கு துரோகம் செய்யக்கூடாது என்று தீர்மானித்தார்.

ஒரு நாள் நள்ளிரவு யார்க்கும் தெரியாமல் அரண்மனையை விட்டு வெளியேறினார். சதுரகிரியை நோக்கி சென்றார். அப்போது நதியில் இறங்கி நீராடிக் கரை ஏறியவர் அங்கே ஒரு பிராமணன் உடல் சாய்ந்து இருப்பதைக் கண்டார். மூச்சு இயங்க வில்லை, பின்னர் வீரசேன திருமூலர் அந்த உடலில் நுழையத் தீர்மானித்தார்.

சதுரகிரிமலை உச்சியிலுள்ள ஒரு குகையில் நீண்ட நாள் தவம் செய்து மறுபடியும் தேகத்தைக் காயகல்ப தேகமாக ஆக்கிக் கொண்டார். திருமூலர் எண்ணாயிரம் திருமந்திரங்கள் இயற்றியதாக அகத்தியர் தமது சௌமிய சாகரம் என்னும் நூலில் கூறுகின்றார்.

திருமூலரின் வரலாறு இருவகையினதாக அமைந்துள்ளது. ஒரு வரலாற்று முறையே. (நந்தி-மூலன்) அவைருக்கும் தெரிந்தது. சதுரகிரி வரலாறு தெரியாத காரணத்தால் இக்கட்டுரை வரலாற்று முறை கட்டுரையாக அமைந்துள்ளது.

79. திருமூலரின் இறைமைச் சிந்தனை



எஸ்.குணராஜா(எ) மகாதேவ்
கண்ணப்ப சுவாமி குடில்,
காவாங்கரை,
புழல்.

தமிழ் இலக்கிய வகையில் சித்தர் இலக்கியம் என்பது. வாத, வைத்திய, யோக, ஞானம் என்னும் பொருமையை அடிப்படை யாக அமைத்து கட்டப்பெற்றது. அக்கட்டமைப்பில் திருமூலர் என்ற சித்தரின் ஞானச் சிந்தனை மூலம் இறைமைச் சிந்தனை அடையும் வழி எளிமையானதாக நிறுவப்பட்டுள்ளது.

திருமூலச் சித்தர்

இறைவன் படைப்பில் எவ்வுயிரையும் தம்முயிராக எண்ணி மதித்து போற்றி வணங்கி வாழந்தவர்கள் சித்தர்களின் தெய்வக் கொள்கை சடங்குகளுக்கும் பொய்ப் புனைவுகளுக்கும் அப்பாற் பட்டதாம். உண்மையானதாக விளங்குகின்றது. திருமூலர் நந்தியம் பெருமானிடம் உபதேசம் பெற்று அட்டமா சித்தியைப் பெற்ற தவயோகி ஆவார். திருக்கயிலை மலையில் இருந்து புறப்பட்டுத் திருவாவடுதுறை பசுபதி ஈசனை வணங்கி அரச மரத்தடியில் அமர்ந்து யோக நிட்டை புரிந்து ஆண்டுக்கொரு பாடல் வீதம் மூவாயிரம் ஆண்டு காலம் வாழ்ந்து மூவாயிரம் தமிழ்ப் பாடல்களை பாடினார். அப்பாடல்களே 'திருமந்திரம்' என்று போற்றப்படுகிறது.

கயிலாயத்து ஒரு சித்தர் பொதியில் சேர்வார்
காவிரிசூழ் சாத்தனூர் கருதும் மூலன்

என்று சேக்கிழார் பெரிய புராணத்தில் கூறுகிறார்.

திருமூலரின் இறைமைச் சிந்தனை

பன்னிரு திருமுறையில் பத்தாம் திருமுறையாகத் திருமூலர் திருமந்திரம் திகழ்கிறது. திருமூலரின் இறைச் சிந்தனையானது. சிவ சிந்தனையில் மனத்தை சித்தத்துள்ளே சிவனைக் காண வேண்டும் என்ற தத்துவத்தை வெளிப்படுத்துகிறார். பேரறிவுப் பொருளாக இருக்கும் சிவத்தைத் தான் பிரம்ம நிலை என்று கண்டு பரப்பிரம்மமாக ஆகிக் கொண்டவர் திருமூலர்.

உள்ளத்தில் ஆலயம்

உள்ளமும் முனமும் கோயிலின் கருவறை ஊனுடம்பு ஆலயம். ஆருயிர்களுக்கு அருளை வாரி வழங்கும் வள்ளலாக விளங்குகின்ற பரம்பொருளைச் சென்று வழிபடும் கோபுரவாசல் வாய் உடலில் பொருந்தியுள்ள ஐம்புலன்களும் ஐந்து பெரிய அழகிய மணி விளக்குகள் போன்று விளங்குகின்றது இதனை,

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானுக்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிவார்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலன் ஐந்தும் காளாமணி விளக்கே (1823)

அறிவு விளக்கம் பெற்று அறியாமை. இருளகன்று, தெள்ளத் தெளிவான மனநிலை வாய்க்கப் பெற்றவர்கள் என்கிறார். உயிரே சிவலிங்கம் என்று வெளிப்படுத்துகின்றார்.

உடல் தத்துவம்

உடம்பினை முன்னம் இழுக்கு என்று இருந்தேன்
உடம்பினுக்கு உள்ளே உறுபொருள் கண்டேன் என்று
உடம்புளே உத்தமன் கோவிக கொண்டான்
உடம்பினை யான் இருந்து ஒம்புகின்றேனே (725)

இப்பாடலின் மனிதன் நல்வாழ்விற்கும், நல்லறம் செய்வதற்கும் நற்றொண்டிற்கும் நம் உடல் தேவை. உடலை ஓம்பாமல் வாழ்பவர் இயற்கை இன்பத்தை மட்டும் அல்லாமல். இறையின்பத்தையும் பெறாதவனாகிறான் மனித உடல் இயற்கை கோயிலாகும் என்று வெளிப்படுத்துகிறார்.

அன்பே சிவன்

உயிர்களுக்கு காட்டும் அன்பே கடவுளுக்குக் காட்டும் அன்பாகும். இதனை மூலர் 'அன்பே சிவம்' என்கிறார். பிற உயிர்கள் மீது மக்கள் அன்பு கொண்டு ஒழுகுவதே நல்லொழுக்கத்திற்கும் நல்வாழ்விற்கும் அடிப்படைக் கொள்கையாகும். இத்தகைய கொள்கையை இறைக் கொள்கை ஆகும்.

அன்பும் சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவதாரு மறிகிலார்
அன்பே சிவமாவதாரு மறிந்த பின்
அன்பே சிவமா யமர்ந்திருப் பாரே (270)

சைவ சமயம் என்பது அன்பு சமயம் ஆகும் அன்பே சிவனை காணும் பேறு பெறும் பாக்கியத்தைப் பெறுதல்.

இறைவன் ஒருவனே

ஒரிறைக் கொள்கையே சித்தர்களின் தத்துவக் கொள்கை ஆகும். மனித குலம் முழுமையும் ஒன்று தான் அவர்களுக்கு இறைவனும் ஒருவனேதான். எப்போதும் எவர்க்கும் நல்லதையே நினையுங்கள். இப்படிப் பட்டவர்கள் இறவாப் புகழுடன் வாழ்பவர்கள். இதனை,

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமன் இல்லைநானாமே
சென்றே புகும்பதி இல்லை நும்சித்தத்து
நின்றே நிலைபெற நீர் நினைந்து உய்மினே (2104)

இறைவன் எங்கும் நிறைந்த பேரருளாளன் என்று ஒரிறைக் கொள்கையைச் சுட்டி விளக்குகிறார்.

அறிவே தெய்வம்

அறிவுக்கு அழிவில்லை ஆக்கமும் இல்லை
அறிவுக்கு அறிவல்லது ஆதாரம் இல்லை
அறிவே அறிவை அறிகின்றது என்றிட்டு
அறிகின்ற மறை ஈறுகள் தாமே

மனிதன் தான் செய்த புண்ணிய பலனால் மனிதனாகப் பிறந்து அறிவாகிய தெய்வத்தை வழிபட்டு ஞான மார்க்கத்தை அடைவர். ஆன்மா அறிவு வடிவானது. ஆருயிர் அழிவில்லை. உடம்பு தான் அழிகிறது ஆகவே அறிவு வடிவான ஆருயிர்க்கு அழிவில்லை ஆக்கமும் இல்லை என்ற கொள்கையை வலியுறுத்தி உள்ளார்.

அன்னதான சிறப்பு

தானங்களில் சிறந்தது அன்னதானம் அன்னதானத்தால் பெறக் கூடிய பயன் சிறந்தது. மும்மூர்த்திக்கும், மூவேழ் தலைமுறையினருக்கும் உயர்ந்த பொருளுக்கும் சமமானது அன்னதானம் தவ ஞானிகளுக்கு படைத்த உணவினை அவர்கள் விரும்பி உண்பது மூன்று உலகத்தவர்களும் உண்டு மகிழ்ந்த பெருமை கொண்டது.

பகரு ஞானி பகல் ஊன் பலத்துக்கு
நிகரில்லை என்பது நிச்சயம் தானே (1860)
ஆத்தனக்கு ஈந்த அரும்பொருள் ஆனது
மூர்த்திகள் மூவர்க்கும் மூவேழ் குரவர்க்கும் தீர்த்தமதாம்
தண்டுஅறு சிந்தை தவோதனர் தாம் மகிழ்ந்து
உண்டது மூன்று புவனமும் உண்டது (1858)

பசித்தோர்க்கு சோறிடல் என்ற கொள்கை தமிழ் நாட்டில் தொன்று தொட்டு நிலவி வருகிறது.

இதனைப் போன்ற அரும் பெரும் சிந்தனைகளைத் திருமூலர் தம் மூவாயிரத்தில் பதிவு செய்துள்ளார்.

80. திருமூலர் கூறும் திருமந்திரத்தில் உடல் உயிர் தத்துவங்கள்

மருத்துவர் எ. கன்னியப்பன்
சித்த மருத்துவர் - சோதிடர்,
கதிர்வேடு,
சென்னை

உள்ளம் பெருங்கோயில், ஊனுடம்பு ஆலயம் என்றும் உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன் என்னும் திருமந்திர வரிகள் உடம்பின் முதன்மையை வலியுறுத்துகின்றன. உடம்பை வளர்க்கும் உபாயங்களையும் உயிரினைப் பேணி காக்கும் முறையினையும் வலியுறுத்துவன் மூலம். சாகாகலையாகிய மரண மிலா பெருவாழ்வு பற்றியும் தம் நூலுள் விளக்குகிறார். அதற்கு இவர் காட்டுகின்ற தத்துவத்தினை இக்கட்டுரை முன் மொழிகின்றது.

ஒன்பது வாயில்கள் : 1. இரண்டு விழிகள், 2. இரண்டு செவிகள், 3. இரண்டு நாசித்துவாரம், 4. வாய், 5. ஆண் அல்லது பெண் குறி, 6. மலவாய்.

பஞ்ச பூதங்கள் ஐந்து : 1. மண், 2. நீர், 3. நெருப்பு, 4. காற்று, 5. ஆகாயம்.

ஞானேந்திரியம் ஐந்து : 1. மெய் (தொக்கு), 2. வாய் (சிங்குவை), 3. கண் (சட்சு), 4. மூக்கு (ஆக்கிவினம்), 5. செவி (சோத்திரம்).

அம்சங்கள் ஐந்து : 1. மெய்-ஸ்பரிசம், 2. வாய்-நீர், 3. கண்-நெருப்பு, 4. மூக்கு-காற்று, 5. செவி-விசும்பு.

கர்மேந்திரம் ஐந்து : 1. வாக்கு, 2. கை, 3. கால், 4, குதம், 5. கருவாய்.

காரியம் ஐந்து : 1. சொல்லல், 2. நடத்தல், 3. கொடுத்தல், 4. கழித்தல், 5. மகிழ்தல்.

அந்தக்கரணம் நான்கு : 1. மணம், 2. புத்தி, 3. சித்தம், 4. அகங்காரம்.

மனம் என்பது வாயு அம்சமாகும் சங்கற்பவிகற்பங்களைச் செய்து அலைந்து திரியும் இதற்கு அதிதேவதை சந்திரன் இடம் நாபியாகும். புத்தி என்பது நெருப்பு அம்சமாகும் உருவ விருத்தி செய்வது. இதற்கு அதிதேவதை பிரம்மா இடம் முகமாகும். சித்தம் என்பது நீர் அம்சமாகும். வஸ்துவினைப் பற்றிய சிந்தனையை சித்தமாகிறது. இந்திரியங்களுக்குக் சலனத்தை உண்டாக்கி விஷயங்களுக்கு இழுத்துச் செல்வது. இதற்கு அதிதேவதை திருமாளாகும், இடம் நாபியாகும். அகங்காரம் என்பது மண் அம்சமாகும். தேகத்தையே நான் என்று அபிமானம் செய்வதாகும். இதற்கு, அதிதேவதை ருத்திரன் இடம் இதயமாகும்.

சப்த தாதுக்கள் ஏழு : 1. இரசம் (காரம்), 2. இரத்தம் (செந்நீர்), 3. மாமிசம் (ஊன்), 4. மேதஸ் (கொழுப்பு), 5. அஸ்தி (எலும்பு), 6. மஜ்ஜை (மூளை), 7. ஆணின் சுக்கிலம்-பெண்ணின் சுரோணிதம் (வென்னீர்).

பஞ்சகோசங்கள் ஐந்து : 1. அன்னமய கோசம் (உணவுடம்பு), 2. பிராணமய கோசம் (வளியுடம்பு), 3. மனோமயகோசம் (மனவுடம்பு), 4. விஞ்ஞானமயகோசம் (அறிவுடம்பு), 5. ஆனந்தமய கோசம் (இன்ப உடம்பு).

திரிகுணாதிகள் மூன்று : 1. சத்துவம்-அமைதி, 2. தாமசம்-மயக்கம், 3. ராட்சசம்-மனவெழுச்சி.

திரிமனங்கள் மூன்று : 1. ஆணவம், 2. கன்மம், 3. மாயை.

ரோகங்கள் மூன்று : 1. வாதம், 2. பித்தம், 3. சிலேத்துமம்.

நான்கு முக்கிய வாயுக்கள்

1. வயிரவன்-ஈளை இருமலை உண்டாக்குவது. இதன் இடம் கால் எலும்புகள்.
2. முக்கியன்-உடலின் திரியைகளைச் சிறக்கச் செய்வது. இதன் இடம் கை எலும்புகள்.
3. அந்தர்யாமி-உயிருக்குற்ற கருவியாயிருந்து உயிர்க்காற்றை (பிராணன்) விளைவிப்பது.
4. பிரவஞ்சனன்-ஓங்காரத்திற்கிடமாக விளங்கி தேகத்துடன் உயிர் துலங்க முக்கிய காரணமாக விளங்குவது.

அவஸ்தைகள் ஐந்து : 1. சாக்கிரம் (நனவு)-புருவ மத்தியிலிருப்பது கர்மேந்திரியங்களின் காரியங்கள் மனம் முதலியன அகக் கருவிகளுடன் சேர்ந்து பரதேவதையின் கிருபையாகி இன்ப, துன்பங்களை அறிந்துய்யும் நிலையாகும்.

சொப்பனம் (கனவு) புருவ மத்தியிலிருப்பது ஐம்பொறிகளும், கர்மேந்திரியங்களும் கண்டப் பகுதியில் நிலைத்த கனவு நிலை சொப்பணம் எனப்படுவது.

சுழுத்தி (உறக்கம்), அந்தக்கரணங்கள் 4ஆம் உயிருடன் கூடி அசைவற்ற நித்திரை நிலையாகும்.

துரியம் (பேருறக்கம்), நிஷ்டை நிலை சுழுத்தி விட்டகன்று கரணத்துடன் ஜீவன் கொப்பூளில் நிலைக்கும் போது உட்சுவாச, நீள் சுவாசங்கள் உண்டாகும் துரியமாகும்.

துரியாதீதம்-பஞ்ச இந்திரியங்களும், கர்மேந்திரியங்களும், 4 அந்தக் கரணங்களும், பற்றை விட்டு உயிர் தானே மூலஸ்தானத்தில் ஒடுங்கிவிடும் நிலையாகும்.

சரீரத்திரியம் 3 தேகங்கள்

1. **ஸ்துல பருவுடல்:** நமக்குப் புலனாகி விளங்கிக் கொண்டிருக்கும் மாமிச தேகம் மண்ணியலில் உருவாக்கப்பட்டது.

2. **நுண்ணுல் :** பருவுடலுக்குள் நுண்ணிய தன்மையுள்ளது. ஞானேந்திரியம் - 5, கர்மேந்திரியம் - 5, அந்தக் கரணங்கள் - 4, பிராண வாயு ஆகியன கூடியதாகும்.

3. **காரணஉடல்** : ஸ்தூலம் - லிங்க சரீரம் ஆகிய இவைகளுக்குக் காரண வித்தாக இருப்பது சஞ்சீத கன்மம் என்றும் இதனை அழைப்பதுண்டு.

4. **பற்றுகள்** : 1. அர்த்த வேடனை (பொருட்பற்று), 2. புத்திர வேடனை (புதல்வர் பற்று), 3. லோக வேடனை (உலக பற்று)

பஞ்ச ரசயங்கள் ஐந்து : 1. அமர்வாசயம் - இரைக்குடல், 2. பகீர் வாசயம் - செரிகுடல், 3. சலவாசயம் - நீர்க்குடல், 4. மலவாசயம் - மலக்குடல், 5. சுக்கிலவசயம் - வெண்னீர் குடல்.

மாயைகள் மூன்று. 1. சுத்த மாயை (தூமாயை), 2. அசுத்த மாயை (தூவாமாயை), 3. பிரகிருதி மாயை (பகுதி மாயை)

கர்மங்கள் மூன்று : 1. சஞ்சித கர்மம் (இருப்பு வினை, தொடக்க வினை) 2. பிரார்த்த கர்மம் (தொடக்கவினைத் துகள் வினை), 3. ஆகாமிய கர்மம் (நிகழ்வினை).

கன்மங்கள் இரண்டு : 1. புண்ணியம் (நல்வினை), 2. பாவம் (தீவினை).

வாக்குகள் நான்கு : 1. வைகரி (செவியோசை), 2. மத்தினம் (மிடற்றோசை), 3. பைசந்தி (நினைவோசை), 4. சூக்குமை (நுண்ணோசை)

சத்திகள் ஆறு : 1. பரிக்கிரக சக்தி - வைப்பாற்றல், 2. திரோத சக்தி - மறைப்பாற்றல், 3. இச்சக்தி - விழைவாற்றல், 4. ஞானசக்தி - அறிவாற்றல், 5. கிரியாசக்தி - செயலாற்றல், 6. சிற்சக்தி - பிரம்மாற்றல்.

சுத்த வித்யாதத்துவங்கள் : ஏழு. 1. காலம், 2. நியதி, 3. கலை, 4. வித்தை, 5. அபகம், 6. புருடன், 7. மாயை.

சிவதத்துவங்கள் ஐந்து : 1. சுத்த வித்தை (தூய நினைவு), 2. ஈசுரம் (தலைமை), 3. சாதாக்கியம் (அருள் நிலை), 4. சந்தி (அன்னை), 5. சிவம் (அத்தன்).

அட்டமாசித்திகள்: அணிமா (நுண்மை), மகிமா (பருமை), கரிமா (விர்டன்மை), இலகிமா (மென்மை), பிராப்தி (விரும்பியதை அடைதல்), பிரகாமியம் (நிறைவுண்மை), ஈசத்துவம் (ஆட்சியடைதல்), வசித்துவம் (கவர்ச்சி).

சைவத்தின் பிரிவுகள் ஆறு 1. சைவம், 2. பாசுபதம், 3. மாவிரதம், 4. காளாமுகம், 5. வாமம், 6. வைரம்.

அகப்பகை ஆறு. 1. அவா, 2. வெகுளி, 3. இவறல் , 4. செருக்கு, 5. மயக்கம், 6. பொறாமை.

அட்டதிக்குப் பாலகர்கள். 1. இந்திரன், 2. அக்னி, 3. இயமன், 4. நிருதி, 5. வருணன், 6. வாயு, 7. குபேரன், 8. ஈசானன்.

அஷ்டாங்க யோகம். 1. இயமம், 2. நியமம், 3. ஆசனம், 4. பிராணாயமம், 5. தாரணை, 6. தியானம், 7, சமாதி, 8. பிராத்தியாகரம்.

அட்டமூர்த்தம்: 1. பூமி, 2. நீர், 3. அக்னி, 4. வாயு, 5. வான், 6. சூரியன், 7. சந்திரன், 8. உயிர்.

அவஸ்தைகள் ஏழு: 1. கர்ப்பாவஸ்தை, 2. ஜன்மாவஸ்தை, 3. பாலயாவஸ்தை, 4. ளௌவனாவஸ்தை, 5. ஜராவஸ்தை, 6. மரணாவிஸ்தை, 7. நரகாஸ்தை.

பஞ்ச அவஸ்தைகள்: 1. சாக்கிரம், 2. சொப்பனம், 3. சுழுப்தி, 4. துரியம், 5. துரியாதீதம்.

சிவனின் பஞ்சமுகம்: 1. ஈசானம், 2. தத்புருடம், 3. அகோரம், 4. வாமம், 5. சத்தியோஜாதம்.

பஞ்ச கிருத்தியம்: 1.படைத்தல், 2.காத்தல், 3.அழித்தல், 4. மறைத்தல், 5. அருளல்.

அட்ட நாகங்கள்: வாசுகி, தக்கன், அனந்தன், சங்கபாலன், குளிகன், பதுமன், மகாபதுமன், கார்க்கோடகன்.

ஏழு பிறவிகள்: தேவர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர் வாழ்வன, தாவம்.

14 லோகங்கள்: பூ, சுவர், அமர், ஜன, தபோ, மகா, சத்ய மற்றும் அதள, விதள, சுதள, விதள, மகாதள, இராசாதள, பாதாள

வேதங்கள் நான்கு: ரிக், யஜுர், சாம, அதர்வனம்

உபவேதங்கள் நான்கு: ஆயுள், அருத்த, தனுர், காந்தர்வ.

நேரங்கள்: 60 நாழிகை - 1 நாள், 1 நாழிகை - 24 நிமிடங்கள், 1 நாள் - 360 சுவாசம், 360 நாழிகைக்கு - 21,100 சுவாசம், 1 நாளுக்கு - 21,600 நொடிகள், 60 நொடி - 1 விநாடி, 60 விநாடி - 1 நாழிகள், 60 நாழிகை - 1 நாள், 360 நாள் - 1 வருடம், 21,600 நாழிகை - 1 வருடம்.

மண்டலம் மூன்று: 1. சூரிய மண்டலம், 2. சந்திர மண்டலம், 3. அக்னி மண்டலம்.

சூரிய மண்டலம்: நாபிக்கு மேலாக இருதய தாமரையில் அறுகோணத்தில் 8 இதழ் கமலமாக வாழைப்பூவை போல் கீழ் நோக்கி விளங்குவது.

சந்திர மண்டலம்: மூலாதாரம் தொடங்கி சிரசு வாயிலாக அக்னி மண்டலத்தை நோக்கிய வண்ணம் மிக்க காந்தியுடன் அமிர்த கலையுடன் விளங்வது, அமுதம் ஊர்தவமாகவும், அக்னி கீழ் நோக்கியும் விளங்குவது. இதனூடே மையமாகப் பராசக்தி துலங்கியருளுவாள்.

அக்னி மண்டலம்: மூலதாரத்திற்கு 2 அடிற்கடையளவு மேலாக மண் நீர் தத்துவங்கள் சேர்ந்த ஸ்தானத்தில் முக்கோணமாக 4 இதழ் தாமரையாக விளங்குவது.

தச நாடிகள் 10: இடைகலை, பிங்கலை, சுழுமுனை, சிழுவை, புருடன், காந்தாரி, அத்தி, அலம்புடை, சங்கினி, குரு.

தச வாயுக்கள் 10: பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன் நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்செயன்.

உடல்-உயிர் சித்தி பெறவும் ஞானம், யோகம் கைகூடவும் இத்தத்துவங்கள் அறிந்து செயல்பட மரணமில்லாப் பெருவாழ்வு அடைய துணை புரிகிறது.

81. திருமந்திர அமைப்பியல்

சுதாகர்
முனைவர் பட்ட ஆய்வாளர்,
செங்கம் தாலுகா,
திருவண்ணாமலை மாவட்டம்
கைபேசி: 7373902860/9965209540

நாயன்மார்களிலும், சித்தர்களிலும் ஒருவராய் திகழ்பவர் திருமூலர் இவரின் காலம் கணித்தற்கிலாதவாறு உள்ளன. இருப்பினும் வரலாற்றாசிரியர்கள் கி.பி.3 அல்லது 10 ஆம் நூற்றாண்டு என்கின்றனர்.

இவர் தமிழுக்கும், சமயத்திற்கும் பெரும் பங்கு ஆற்றியுள்ளார். நந்தியம் பெருமானிடம் உபதேசம் பெற்ற இவர். அஞ்ஞானம் நீங்கி மெய்ஞ்ஞானம் பெற்றார். மெய்ஞ்ஞானத்தின் சாரமாக திருமந்திரத்தை அருளி உள்ளார்.

திருமந்திரத்தை சுந்தராகமம் என்று அழைப்பர். ஒன்பது ஆகமங்களை ஒன்பது தந்திரங்களாக பகுத்துள்ளார். தந்திரங்கள் என்பது நூலின் உட்பிரிவு ஆகும்.

ஆகம பிரிவு

காரணாகமத்தை முதல் தந்திரமாகவும், காமிகாகமத்தை இரண்டாம் தந்திரமாகவும், வீராகமத்தை மூன்றாம் தந்திரமாகவும், சித்தாகமத்தை நான்காம் தந்திரமாகவும், வாதுகளாகமத்தை ஐந்தாம் தந்திரமாகவும், வியாமனாகமத்தை ஆறாம் தந்திரமாகவும் காலோத்தராகமத்தை ஏழாம் தந்திரமாகவும் சுப்பிராகமத்தை எட்டாம் தந்திரமாகவும் மகுடாமகத்தை ஒன்பதாம் தந்திரமாகவும் வகுத்துள்ளார். 3000 பாடல்களும் சில நூல்களில் 3108 பாடல்களும் சில நூல்களில் 3047 பாடல்களும் இடம்பெற்றுள்ளது. 9 தந்திரங்களுக்குள் 232 அதிகாரத்தை மையப்படுத்தி இந்நூலாக்கம் செய்துள்ளார்.

முதல் தந்திரம்

இதில் யாக்கை நிலையாமை முதலாக 24 தலைப்புகள் தரப் பெற்றுள்ளன. பெரும்பாலும் நீதி கூறும் அறிவுரைகளாக அமைந்துள்ளன. அவை:

1. உபதேசம், 2. யாக்கை நிலையாமை, 3. செல்வம் நிலையாமை, 4. இளமை நிலையாமை, 5. உயிர் நிலையாமை, 6. கொல்லாமை, 7. புலால் மறுத்தல், 8. பிறன்மனை நயவாமை, 9. மகளிர் இழிவு, 10. நல்குரவு, 11. அக்கினி காரியம், 12. அந்தணர் ஒழுக்கம், 13. இராச தோடம், 14. வாணச் சிறப்பும், 15. தானச் சிறப்பு, 16. அறஞ் செய்வான் திறம், 17. அறஞ்செய்யான் திறம், 18. அன்புடைமை, 19. அன்பு செய்வாரை அறிவான் சிவன், 20. கல்வி, 21. கேள்வி கேட்டதைல், 22. கல்லாமை, 23. நடுவு நிலைமை, 24. கள்ளுண்ணாமை.

நிலையாமை

அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடி யாரொடும் மந்தணம் கொண்டார்
இடப்பக்கம் இறை நொந்தது என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந் தொழிந்தாரே

என்ற பாடல் நிலையாமை தத்துவத்தை கூறுகிறது.

இரண்டாம் தந்திரம்

1. அகத்தியம், 2. பதிவவியல் வீரட்டம் எட்டு, 3. இலிங்க புராணம், 4. தக்கன் வேள்வி, 5. பிரளயம், 6. சக்கரப்பேறு, 7. எலும்பும் கபாலமும், 8. அடிமுடி தேடல், 9. சர்வ திருஷ்டி, 10. திதி, 11. சங்காரம், 12, திரோபவம், 13, அணுக்கிரகம், 14. கர்ப்பக்கிரியை, 15. மூவகைச் சீவர்க்கம், 16. பாத்திரம், 17. அபாத்திரம், 18. தீர்த்தம், 19. திருக்கோயிலிழிவு, 20. அமுதாமுகதரிசனம், 21. சிவ நிந்தை, 22. குரு நிந்தை, 23. மாயேசுர நிந்தை, 24. பொறையுடைமை, 25. பெரியாரைத் துணைக் கோடல், அடியார்களை நிந்திப்பதும், கடவுளை நிந்திப்பதும், கோயில்களை அழிப்பதும் போன்ற தீச்செயல்களைக் கைவிட வேண்டும் என அறிவுரை வழங்கி உள்ளார்.

மூன்றாம் தந்திரம்

முழுவதும் யோகத்தைப் பற்றிக் கூறுகிறார்.

1. அட்டாங்க யோகம், 2. இயம், 3. நியமம், 4. ஆதனம், 5. பிராணயாமம், 6. பிரத்தியாகாரம், 7. தாரணை, 8. தியானம், 9. சமாதி, 10. அட்டாங்க யோகப் பேறு, 11. அட்டமாசித்தி, 12. கலைநிலை, 13. சரீர சித்தி உபாயம், 14. கால சக்கரம், 15. ஆயுள் பரிட்சை, 16. வாரசரம், 17. வார சூலம், 18. கேசரி யோகம், 19. பரியங்க யோகம், 20. அமுரிதாரணை, 21. சந்திர யோகம் என பல செய்திகளை இடம் பெற்றுள்ளது.

நான்காம் தந்திரம்

மந்திர சாத்திரம் அல்லது உபாசன மார்க்கத்தை கூறுவது வாய் விட்டு ஜபிக்காமல் பிராணனுடன் சேர்ந்து இயங்குவது மந்திரம் என்பர். இங்குக் கூறப்படும் செய்திகள் யாவும் சாக்தத்தின் பாற்பட்டவை என்பர். இதில் மந்திரச் சக்கரங்களின் வடிவம் அளவு வகைகள் அவற்றுள் அடைக்கப்படும். மந்திர எழுத்துகள் உரிய மந்திரங்கள், வழிபாட்டு முறைகள் தெய்வம், வரையை, பயன் முதலியன விரிவாகக் கூறப்பட்டுளளன. அம்மை வழிபாட்டால் பெறற்கரிய பயனைப் பெற முடியும் என இத்தந்திரம் கூறுகிறது. சச்கரம் மந்திரம் என இரு வகையினை கூறுகிறது.

ஐந்தாம் தந்திரம்

ஐந்தாம் தந்திரம் 20 உட்தலைப்புகளைக் கொண்டது. சுத்த சைவம், அசுத்த சைவம், கடுஞ்சுத்த சைவம், சரியை, கிரியை, யோகம், ஞானம், சன்மார்க்கம், சகமார்க்கம், சற்புத்திர மார்க்கம்,

தாச மார்க்கம், சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம், சத்திநி பாதம், புறச்சமய தூடணம், நிராசாரம், உட்சமயம் என்னும் பொருள் பற்றி எடுத்துரைக்கின்றது.

ஆறாம் தந்திரம்

சிவகுரு தரிசனம், அவனது திருவடிப்பேறு, ஞானத்தின் பொருள், தெரிபவன் தெரியப்பட்ட பொருள், துறவு, தவம், அருளிலிருந்து தோன்றும் ஞானம், பக்திக்கு, உரியவர், இலக்கணம் பக்திக்குரியரல் லாதார் இலக்கணம். திருநீற்றின் பெருமை ஆகியன இத்தந்திரம் கூறுகிறது.

ஏழாம் தந்திரம்

யோக கோட்பாட்டை விளக்குகிறது ஆறு ஆதாரங்கள். ஆறு லிங்கங்கள், சமயச் சிறப்பு போதனை, ஆத்மாவில் சிவனுக்கு இயற்றும் வழிபாடு. குருவாகிய சிவனுக்கு இயற்றும் வழிபாடு. மகேசுவர பூசை, அடியார் பெருமை, உணவு விதி, பலவகை முத்திரைகள், பலவகை யோகிகள், இறப்பிற்கு பின் அடையத்தகும் உலகம், இடகலை, பிங்கல நாடிகள், ஐம்புலன்களை அடக்கும் முறை கூடா ஒழுக்கம் ஆகியன கூறுகிறது.

எட்டாம் தந்திரம்

இத்தந்திரம் ஆன்ம அனுபவத்தின்போது அடையும் பல்வேறு அவத்தை பேசுகிறது. 11 அவத்தைகள், சிவத்திற் கலக்க உடம்பை விடும் முறை, ஞானோதயம், சித்தாந்தத்தின் விளக்கம், பிரமனும், சிவனும், திருமாலும் காணாச் சிவன் என்னும் தத்துவம் பிற சமயங்கட்கும் அதற்கும் உள்ள தொடர்பு பதி, பசு, பாச விளக்கம் மூன்று குற்றங்கள் பரங்கள், துரியங்கள், முத்திகள், ஸ்வருபங்கள் முக்கரணங்கள், சூனியங்கள் என்பன விளக்கப்பட்டுள்ளன.

ஒன்பதாம் தந்திரம்

குருவின் பஞ்சாட்சர உபதேசம் பெற்றுத் திருக்கூத்தின் உண்மை உணர்ந்து சமாதி கை கூடுவதை இத்தந்திரம் கூறுகிறது. குரு, குருமடம், குருதரிசனம், பிரண சமாதி, ஸ்தூல, சூக்கும, அதிசூக்கும பஞ்சாட்சரம் திருக்கூத்து தரிசனம், சிவானந்த நடனம் சுந்தர பொன்னம்பல நடனங்கள். உண்மை ஞானத்தின் சிறப்பு ஆகிய இந்த தந்திரத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

இறைவனின் திருக்கூத்து எல்லா இடங்களிலும் நிகழ்வதை திருமூலர் பின்வருமாறு கூறுகிறார்.

எங்குந் திருமேனி எங்குஞ் சிவசக்தி
எங்குந் சிதம்பரம் எங்குந் திருகூட்டம்
எங்குந் சிவமாலிருத்தலால் எங்கெங்குந்
தங்குஞ் சிவனருள் தன் விளையாட்டதே

இறைவன் உணர்வும், உயிரும், புணர்வும், புலினுமாய் திகழ்வதை இறுதியில் சுட்டிக்காட்டி அவன் எங்குமாய் எல்லாமுமாய் உள்ளான் அதை அறிவதே இம்மந்திரத்தின் நோக்கம் ஆகும்.

82. திருமூலரும் திருமந்திரமும் – ஒரு வரலாற்று சுருக்கம்



சிவத்திரு ந. தட்சிணாமூர்த்தி
தலைவர், சண்முக ஞானபுரம்
இறையருள் திருப்பணி மன்றம்,
சென்னை 12.
கைபேசி: 9445353469

இறையருள் பெற்று உலக மக்களுக்குப் பல நுண்ணிய கருத்துக்களைப் பரப்பிச் சைவ சமயக் கொள்கைகளையும் பல அறநெறிகளையும் நூல் வழி வெளிக் கொணர்ந்த ஞானிகளுள் மிக முக்கியமான ஒருவராகக் கருதப்படுபவர் திருமூலர். இவர் வாழ்ந்த காலம் கி.மு.6000 என்பது ஆய்வாளர் கூற்று. திருமூலரின் இயற்பெயர் சுந்தரர் என்பதாகும். பொதிகை மலையில் அகத்தியர் தமிழ்ச் சங்கத்தில் உலக நூல்களை கற்றுப் பின் கயிலை குருகுலம் சென்று ஆகமங்கள், அகமறைகளை நந்தியம் பெருமானிடம் கற்கும்போது நந்தியெம்பெருமான் அருளால் 'நாதன்' என்ற பட்டம் பெற்றுச் சுந்தர நாதர் என ஆகினார். இவர் பாண்டிய நாட்டைச் சேர்ந்தவர் என அறிஞர்கள் கருது கின்றனர்.

கயிலை குருகுலத்தில் தென்முகக் கடவுள் சிவபிரானிடம் அருமறைகளை கேட்டுப் பின் திருக்கேதாரம், பசுபதி நாதர் திருத்தலம், அரித்துவாரம், காசி, திருக்காளத்தி, காஞ்சி, தில்லை, திருவதிகை ஆகிய திருத்தலங்களில் இறைவனை வழிபட்டு பின் திருவாவடுதறை வந்து இறைவனைத் தரிசித்து புறப்படும் போது சாத்தனூர் எனும் கிராமத்தில் காவிரிக் கறையில் பசுக்கள் புலம்புவதைக் கண்டார். அங்கே வயல் வெளியில் அந்தப் பசுக்களை மேய்க்கும் குலத்தவரான மூலன் எனப் பெயர் கொண்டவர் வினை முடிந்து உயிர் நீத்துக் கிடப்பதையும் கண்ணுறுகிறார். திடீரென மரணம் எய்திய மூலனைக் கண்டு ஆவினம் கதறுவதையும், அவை சிந்தும் கண்ணீரையும் கண்டு இந்நிலையை மாற்ற மூலன் உயிர்பெற்று எழுந்தாலன்றி வேறுபழியில்லை என உணர்ந்த சுந்தர நாதர் தன் உடம்பை ஓர் இடத்தில் இருத்தி, பின் மூலன் உடம்பில் தன் உயிரைப் பாய்ச்சி, மேய்ப்பவன் மூலன் உடல்கொண்டு எழுந்து பசுக்களின் துயரைத்துடைத்தார். ஆவினம் இதைக் கண்டு துள்ளி மகிழ்ந்தன. அந்திப்பொழுது வந்ததும் ஆவினத்தை அதனதன் இடத்தில் விட்டு விட்டுத் தான் விட்டுச் சென்ற தனது

திருமேனியை தேடும் பால், அது இறையருளால் மறைக்கப்பட்டு விட்டது என்பதனை அறிந்து, மூலன் உடம்பிலேயே தங்கிப் பின்னர் திருமூலர் என்ற பெயருடன் விளங்கினார். அச்சமயம் தனது மனைவி, மக்கள், சுற்றத்தார் என எவர் அழைத்தும் கேளாமல் மடத்தில் தங்கி, பின்னர் அரசமரத்தினடியில் தங்கி மூவாயிரம் ஆண்டுகள் தவமிருந்து, ஆண்டுக்கு ஒன்றாக 'தமிழ் மூவாயிரம்' எனும் நூலை இயற்றினார். அதுவே 'திருமந்திர மாலை' என வழங்கலாயிற்று.

திருமூலர் இறைவனருளால் பல ஆயிரம் ஆண்டுகள் யோக நிலையில் இருந்து தவம் செய்தவர். இவர் ஞானி மட்டுமல்லாது சித்தராகவும், யோகியாகவும், அருள் நிறைந்த நாயன்மாராகவும் விளங்கினார். பொதிகைக் குறுமுனி அகத்தியர்பால் மிகுந்த நட்பு கொண்டிருந்தார். பொதிகைமலையில் முருகனருட் தமிழ்ச் சங்கத்தில் குறு முனிவருடன் கல்வி பயிலும்போது மிகவும் மனம் மகிழ்ந்தவர். அகத்தியர் இவரை வடகயிலைக்கு அனுப்பி ஆகமம் அருமறைகளைப் பயில உதவினார்.

திருமந்திரம் காலத்தால் மூத்த நூலாகும். திருமந்திரம் சங்கநூல்களுக்கும் முந்தைய தனித்தமிழ் இலக்கிய நூலாகக் கருதப்படுகிறது- பாமரர் முதல் பேராளர் வரை அனைவரும் போற்றிப் பலன் பெறும் நூலாக திருமந்திரம் உளது. தமிழ் மூவாயிரம் எனும் திருமந்திர நூல் ஒன்பது தந்திரங்களால் அமைந்தது. இது ஒன்பது ஆகமங்களின் சாரத்தைக் கொண்டது. சைவ ஆகமங்களில் உணர்த்தப்பட்ட ஞானம், யோகம், கிரியை, சரியை எனும் நிலைகளை திருமந்திரம் விளக்குகின்றது. திருமூலர் அருளிய திருமந்திரமாலை திருவாவடுதுறை திருக்கோயிலுள் புதைத்து கிடந்ததாகவும், அங்கு தரிசனத்துக்கு வந்த திருஞானசம்பந்தர் பலிபீடத்தருகே வணங்கி எழுந்த போது இங்குத் தமிழ் மணம் கமழுகின்றது தோண்டிப் பாருங்கள் எனக்கூற, அங்கு தோண்டின போது திருமந்திர நூல் கிடைத்ததாக ஆன்றோர் கூற்று. திருமந்திர நூலில் ஆங்காங்கே சைவ சித்தாந்தம் வெளிப்படுகிறது. திருமந்திரம் ஓர் சமய சமூக ஒருமைப்பாட்டு நல்லிணக்க நூலாக விளங்குகிறது. தோத்திரம், ஞானம், யோகம், சாத்திரம், மருத்துவம், யந்திர தந்திரம் மற்றும் மந்திரங்கள் அமைந்த பாராயண நூலாகவும் நிகழ்கிறது.

சிவ மகா யோகியாக விளங்கிய அருட்செல்வர் திருமூலரையும் அவர் அருளிச் செய்த திருமந்திரமாயையும் போற்றி வணங்கி எல்லாம் வல்ல பரம்பொருளாகிய இறைவனின் திருப்பாதங்களில் சிரம் வைத்துப் பணிகின்றேன்.

83. திருமூலரின் அறச்சிந்தனை

ஏ. ஏழுமலை
சென்னை பல்கலைக்கழகம்
கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
நெம்மேலி.

நாயன்மார்களுள் திருமூலரைச் சுந்தரர் ''நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்'' என்று கூறுகிறார். நம்முடைய வாழ்வியல் முறைகளுக்கு திருமூலர் வித்திட்டவர் ஆவர். தம்முடைய திருமந்திர பகுதிகளில் வாழ்வியல் சிந்தனைகளையே முதன்மையாகவே முன் வைக்கிறார். அவற்றினை இக்கட்டுரை ஆய்கிறது.

அன்பு

மனித வாழ்வினை வளப்படுத்துவது அன்பு ஒன்றே ஆகும். குடும்பம் - சமூகம் - உலகம் - இறைமை இவற்றினை கட்டிக் காப்பது அன்பே ஆகும். அன்பே சிவம். அன்பு வேறு சிவம் வேறு என்பர் அறிவிலார். எனவே அத்தகைய அன்பினை உலக உயிர்களிடத்து செலுத்துவோரே பேரின்ப நிலையை அடைய முடியும். அன்பை அடிப்படைக் கடவுள் என்கிறார்.

அறம்

நல்வினை, தீவினை காரணமாக பிறப்பு - இறப்பு நிகழ்விக்கப் பெறுகிறது. இதனைக் கொண்டே உயர்ந்தவர் - தாழ்ந்தவர் என்ற நிலை உருவாக்கப்படுகிறது. உண்ண உணவும், உடுக்க உடையும், கொடுத்து வாழ்ந்தால் மகிழ்ச்சியாக வாழலாம் அவ்வாறு செயலாற்றத் தவறுபவர்கள் மக்கள் பிறவியில் தாழ்ந்தவர்கள் ஆவார்கள்.

கெடுவது மாவதுங் கேழல் புகழோன்
நடுவல்ல செய்தின்ப நாடவும் ஒட்டான்
இடுவதும் ஈவதும் எண்ணுமின் இன்பம்
படுவது செய்யிற் பசுவது வளமே

என்று அறிவுறுத்துகிறார்.

ஈகை

பிறருக்கு அளிப்பது ஈகைக் கொடுத்தால் உதவி. கொடுக்காவிட்டால் பகை என்பர். தான் உண்ணும்போது யார் யாருக்கு கொடுக்க வேண்டும் என்பதை,

யாவர்க்கு மாம் இறைவர்க்கொரு ..... இன்னுரை தானே

என்கிறார் அதோடு நில்லாமல் தானம், தருமம் எல்லாம் இல்லாதவர்க்கு அளிக்க வேண்டும். இதனைத் தவிர்த்த சிலர் கோவிலுக்கு அள்ளி அள்ளிக் கொடுக்கின்றனர். இறைவனுக்கு

கொடுக்கும் கொடை மக்களுக்குச் சென்றடையவில்லை. மக்களுக்குக் கொடுக்கும் கொடை இறைவனுக்குச் சென்றடைகிறது.

படமாடக் கோயில் ..... பகவற்குத் தாமே

மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்று கூறுகிறார். வேண்டியவர், வேண்டாதார் என்றும், உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்றும் வேறுபாடு இன்றிக் கொடுக்க வேண்டும் அவ்வாறு கொடுக்கும் பொருள் புதியன பழையனவாக இருக்க வேண்டும்.

ஆர்க்கும் இடுமின் அவரவர் என்னன்மின்
பார்த்திருந்து உண்மின் பழம்பொருள் போற்றன்மின்
வேட்கையுடையீர் வினாள் தொல்லை உண்ணன்மின்
காக்கை கரைத்துண்ணும் காலம் அறிமினோ

என்பதாகும். அதாவது தன்னிடம் உள்ளதை மனம் உவந்து பொருளின் நிலை பாராது கொடுக்க வேண்டும் என்ற உணர்வுகளை வெளிப்படுத்துகிறது. திருமூலர் தனது பிறர்வழி காட்டுகிறார்.

பஞ்சமாபாதகம்

கொல்லாமை, புலால் உண்ணாமை, கள்ளும், காமம் விலக்கல், கள்ளாமை போன்ற பல்வேறு சமூக சீர்த்திருத்தக் கருத்தைப் பல்வேறு பாடல்கள் மூலம் சுட்டிக் காட்டியுள்ளார்.

கொலையே களவுகள் காமம் பொய்கூறல்
மலையான பாதகமாம் அவை நீக்கித்
தலையாம் சிவனடி சார்ந்து இன்பம் சார்ந்தோர்க்கு
இலையாம் இவை ஞானானந்தத்து இருந்தலே

என்ற பாடல்வழி ஐம்பெரும் பாவங்களைத் தவிர்த்தால் பேரின்பத்தில் திளைத்திருக்கலாம் என்கிறார்.

பிறர் பொருள் விரும்பாமை

7பிறரது பொருளை இச்சித்தல் கூடாது. அந்த பழக்கம் நற்பழக்கமாக இல்லாமல் தீய எண்ணத்திற்கு வழி வகுக்கும் ஒரு மனிதன் நல்லவனாக வாழ இயலாத நிலையை உருவாக்கும். எனவே இந்நிலை ஏற்படாதவாறு பிற நல் உணர்வுகளுக்கு மதிப்பளித்து வாழ வேண்டும்.

அவ்வியம்பேசி அறங்கெட ... தலைபட்ட போதே

என்று வெளிப்படுத்துகிறார்.

முடிவுரை

இவ்வாறு அன்பு, அறம், ஈகை, முதலிய அறச் செயல்களை மனிதர்கள் மேற்கொண்டால் வாழ்க்கை வளமாகும் என்றும் பேரின்பமடைய தீய எண்ணங்கள் தீய வாழ்க்கையின் பழக்கம் ஏற்படாதவாறு காத்துக் கொள்ளல் வேண்டும்.

84. திருமந்திரம் சுட்டும் நிலையாமைக் கருத்துகள்



முனைவர் சு. சசிகலா
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
பக்த்வத்சலம் நினைவு மகளிர் கல்லூரி,
கொரட்டூர், சென்னை 80
கைப்பேசி: 9003038610

மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர் (புறம் 145)

என்ற புறநானூற்றுப் பாடலடி உலகம் நிலையற்றது என்றும், மணிமேகலை,

இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா

(மணிமேகலை 135-136 அடிகள்)

என்றும் இளமை, உடல், செல்வம் ஆகியவற்றின் நிலையாமையை எடுத்துரைக்கிறது. மேலும் உலகம் தோன்றி இயங்கி அழிவதால் அது நிலையற்றதாகின்றது. மனிதன் தன்னைச் சுற்றியுள்ள, இயற்கை, விலங்குகள், பறவைகள், தாவரங்கள் ஆகியவற்றின் அழிவைக் கண்டும் தனக்கும் ஒரு நாள் அழிவு வரும் என எண்ணாது இருக்கிறான், இதனை,

மண்ணொன்று கண்டீர் இருவினைப் பாத்திரம்
தின்ணென்றிருந்து தீயினைச் சேர்ந்தது
விண்ணின்று நீர்வவிழின் மீண்டும் மண்ணாவ போல்
எண்ணின்ற மாந்தர் இறக்கின்ற வாறே (143)

என்று திருமந்திர பாடல் விளக்குகிறது. இவ்வாறு பல இலக்கியங்கள் சுட்டும் நிலையாமையை திமூலர் திருமந்திரத்தின் வாயிலாக, நான்கு பொருள்மைகளில் வகைப்படுத்துகிறார், அவை:

- யாக்கை நிலையாமை
- செல்வம் நிலையாமை
- இளமை நிலையாமை
- உயிர் நிலையாமை

இத்தகைய நிலையாமைக் குறித்துத் திருமூலர் கூறும் கருத்துக்களை இக்கட்டுரை விளக்குவதாக அமைகிறது.

திருமந்திரம் அறிமுகம்

திருமூலர் வாழ்க்கையின் பல்வேறு நிலையாமையினையும் கண்டு தெளிந்த சிவயோகியருள் ஒருவர். இவர் திருக்கயிலையில்

நந்திதேவரின் திருவருள் பெற்றவர். எண்பெரும் சித்திகளும் கைவரப்பெற்ற இச்சித்தர் திருவாவடுதுறைக் கோயிலில் உள்ள அரசமரத் தடியில் 3000 ஆண்டுக்காலம் யோகத்தில் இருந்ததாகவும், ஆண்டுக்கு ஒரு முறை கண் விழித்து ஒரு பாடல் வீதம் 3000 பாடல்கள் பாடியதாகவும் கூறப்படுகிறது. தமிழில் மெய்ப்பொருள் உணர்வினை விளக்கும் தொன்மையான இலக்கியங்களுள் 'திருமந்திரமே' முழுமையான முதல் நூலாகும். இந்நூல் பொதுஅறம், மந்திரம், சோதிடம், மருத்துவம், சித்தாந்த அடிப்படை விளக்கம் மற்ற பிற செய்திகளையும் விளக்குகிறது. இந்நூலில் 9 தந்திரங்களும் 232 அதிகாரங்களும் கொண்டமைந்துள்ளது.

திருமூலர் கூறும் உடல் உயிர் தோற்றம்

உலகம் முழுவதும் உயிர்த் தோற்றம் என்பது கருப்பையாகிய குளத்திலிருந்து, உயிரணுக்களான மண் கொண்டு உற்பத்தியா கின்றன. கருப்பையில் உருவான கருமுட்டை உடலும், உயிரும் பெற்று முந்நூறு நாட்களில் ஒரு குழந்தையாகப் பிறப்பது யாரும் விரும்பியப்படியோ, அமைத்தபடியோ வந்ததல்ல. பிறப்பும் இறப்பும் என்பது பொழுது விடிந்தால் பிறகு வரும் இருட்டு போல் மாறி மாறி நிகழக்கூடியதாகும்.

உயிர், உடல் நிலையாமை

இரண்டு கால்கள் முதுகுத்தண்டாகிய உத்தரம் (முகட்டழுகு) ஒன்று, பக்கவாட்டில் சட்டங்கள் போன்ற விலா எலும்புகள், உச்சந்தலை வரை மீண்டும் இரண்டு கால்களாகிய அவரின் மேல் முதுகுத்தண்டாகிய உத்திரத்தைச் சாத்தி, வலுவான சட்டங்கள் முப்பத்திரண்டை (விலா எலும்புகள்) பக்கவாட்டில் சாத்தி, தசையும் சதையும் சேர்த்துப் பூசிச் செய்தமைத்த கூரைவீடு இந்த உடல். இதில் உள்ளே இருக்கும் உயிர் ஒரு நாள் கபாலம் (தலை) திறந்து வெளியேறி விட்டால் மீண்டும் உள்ளே வர இயலாது. செத்தவன் பிழைக்க மாட்டார். எனவே, உடலும் உயிரும் நிலையில்லாது அழிந்து போகும். நிலையானது எதுவென்றால் இதழ் விரிந்த கொன்றை மலர்மாலை அணிந்த மாயன் படைத்த இந்த உடலில் உள்ளே, உள் ஒளிர் சோதியாக விளங்கும் இறைவனாகிய பரம்பெருளே என்று திருமூலர் விளக்குகிறார்.

காலும் இரண்டும் முகட்டலகு ஒன்றுள
பாலுள் பருங்கழி முப்பத்திரண்டுள
மேலுள கூரை பிரியும் பிரிந்தால் முன்
போலுயில் மீளப் புக அறியாதே (146)

இறந்த உடல், உயிர் உள்ளபோது பெற்றிருந்த பெயரை எடுத்துவிட்டுப் பிணம் என்று குறிப்பிடுகின்றனர். இறந்த உடல்

பிணமானதைக் கண்டும் மனிதன் இதுபோல் நாமும் ஒரு நாள் ஆவோமே என்ற நினைப்புக் கொள்ளாமல் வாழ்நாளை வீண்கதைகள் பேசி வீணாக்குபவரை நோக்கி திருமூலர், 'நினைப்பு ஒழிந்தார்கள்' எனக் கூறுகிறார்.

நேசம் பாசம் இரண்டும் நெருப்பில் எரிந்தது

ஒரு ஆணுக்கு பெண் பேசித் திருமணம் நிச்சயம் செய்து, மணம் முடித்துக் கூட்டிக்கலந்து மகிழ்ந்திருந்த தலைவன்மேல் வைத்த ஆசை, நெருக்கம் காலப்போக்கில், திகட்டிப் போய்ச் சலிப்படையச் செய்துவிட, அவனுடைய பாச நினைவுகளையும் பின்னர் மறந்துவிடும். இந்த நிலையில் கணவன் இறந்துவிட்டால், அவன் உடலைப் பாடையின் மேல் வைத்து, ஒப்பாரி வைத்து அழுது புலம்பித் தங்களின் அன்புப் பாசத்துக்கே தீ வைத்துப் பிண்டம் போட்டார்களே! என்ன கொடுமை! அவன் உயிரோடு இருக்கும்போது அவனுக்கு என்ன மரியாதை, நேசம், பாசம் உயிர் போனபின் நடந்ததென்ன? இதுதான் நிலையா யாக்கையின் நிலை என்கிறார், திருமூலர். உடலில் உயிர் இருக்கும்வரை தான் தலைமையும் தகுதியும் பெருமையும் உயிர் போய் விட்டால் உடல் பிணம் தான். உடல் போகுமிடம் சுடுகாடுதான் இறந்தபின் உடலைச் சுடுகாட்டில் சிதையில் வைத்துத் தீ மூட்டிவிட்டுப்பின் அவரவரின் வேலைகளைப் பார்க்க தொடங்கி விடுவர். இறந்தவர்களின் நினைப்பும் மறந்து விடுவது உலக இயல்பாக இருப்பதைக் கண்டும், மனிதர்கள் உடலாகிய அச்சை விட்டு உயிர் பிரியாது என்ற நினைப்பில் ஓடிஓடி அவர்கள் தேடும் அருமையான பொருட்களின் மேல் ஆசை வைத்துத் தேடுவதைத் தொடர்ந்து, மற்றவர்களும் ஆசைப்பட்டு அலைந்து, அவர்களும் தங்கள் பெருமையை இழந்து சிறுமையை அடைகிறார்களே! என்று கீழ்கண்ட பாடல் அடிகளில் வருந்துகிறார்.

வைச்சு அகல் வுற்றது கண்டு மனிதர்கள்
அச்சு அகலாது என நாடும் அரும்பொருள்
பிச்சது வாய்ப்பின் தொடர்புறு மற்றவர்
எச்சகலா நின்று இளைக்கின்ற வாறே (156)

செல்வம் நிலையாமை

செல்வம் நிலையற்றது என்பதைத் தெரிந்து தெளிவடைய வேண்டும். ஆற்று வெள்ளம்போல் பெருகி வரும் செல்வம் செழிப்பைக் கண்டு மயங்க வேண்டாம். பொருட் செல்வத்தின் மீது வைத்த பற்றை மாற்றிக் கொண்டு இறையருளைப் பெரும் செல்வத்தைப் பெற முயல வேண்டும். மன மகிழ்ச்சி தரும் பெருமூ செல்வமும், வீடும், வயலும் என பிற செல்வ வளங்களும் ஆற்று வெள்ளத்தில் மிதக்கின்ற படகைப்போல் ஒரு நாள் கவிழ்ந்து விடும். இதனைத் திருமூலர் கீழ்கண்ட வரிகளில் விளக்குகிறார்.

மகிழ்கின்ற செல்வமும் மாடும் உடனே
கவிழ்கின்ற நீர்மிசைச் செல்லும் கலம் போல்
அவிழ்கின்ற ஆக்கைக்கோர் வீடு பேறாகச்
சிமிழொன்று வைத்தமை தேர்ந்தறியாரே (173)

உயிர் உடலை விட்டு எவ்வாறு பிரிந்து போகுமோ அவ்வாறு செல்வங்களும் ஒரு நாள் பிரிந்து விடும். எனவே, செல்வத்தின் நிலையாமையைத் திருமூலர் சில பாடல்களில் பதிவு செய்துள்ளார்.

இளமை நிலையாமை

காலையில் கீழ்திசையிலே இளமை செவ்வாயுடைய தாய் எழுந்து விரைந்து மேற்சென்ற கதிரவன் நண்பகலில் இளமைத் தன்மை நீங்கிப் பின்னர் முதுமை எய்தி மாலையில் மேற்திசையில் வீழ்ந்து மறைதலைக் கண்ணால் கண்டிருந்தும் இளமையெழுச்சி என்றும் நிலையுடைய தன்று என்பதை அகக் கண்ணிலாதார் யாரும் தெளிவதில்லை. இதனைத் திருமூலர்,

கிழக்கெழுந் தோடிய ஞாயிறு மேற்கே
விழக் கண்முன் தேறார் விழியாக மாந்தர்
குழுக்கன்று மூத்தெரு தாய்ச்சில நாளில்
விழக்கண்முன் தோறார் வியனுலகோரே (177)

என்று கூறுகிறார், வள்ளுவரும்

அன்றறிவாம் என்னாதறம் செய்க மற்றது
பொன்னுங்கால் பொன்றாத் துணை

எனக் கூறுகிறார்.

சிறுவன், காளை, கிழவன் எனப் பருவ காலங்கள் மாறிக் கழிந்து போவதைக் கண் எதிரே கண்டும், இளமைப் பருவம் என்பது நிலையற்றது என்பதை உணராமல் மனிதர்கள் இருக்கிறார்கள். இதனை,

பாலன் இளையன் விருத்தன் எனநின்ற
காலம் கழிவன கண்டும் அறிகிலார் திரு 181

என விளக்குகிறார்.

திருமூலர் மனித வாழ்க்கையில் இறைவனின் திருவடியை அடைவதையே நோக்கமாக கொண்டு அமைய வேண்டும். இதற்காக நிலையற்ற உயிர், உடல், செல்வம், இளமை இவற்றின் மீது பற்றுக்கொள்ளாமல் வாழ வேண்டும். மனித உடல் இறந்த பின்பு பிணம் என்றே கூறப்படுகிறது. இதை சிறிதும் எண்ணாமல் மக்கள் நிலையில்லாத பொருள்கள் மேல் ஆசைகளை வைத்துத் தம் வாழ்நாளை வீணாக்குகிறார்கள். எனவே, மக்கள் யாக்கையின் மீதான புறப்பற்றைத் துடைத்து, செல்வத்தை நிலையில்லாதென உணர்ந்து அதன்பால் பற்று இன்றிப்வ பற்றற்றான் பற்றினையே, பற்றிக் கிடக்குமாறு அறிவுறுத்து கின்றார்.

85. திருமந்திரம் வெளிப்படுத்தும் முதல் தந்திரச் சிறப்பு



மு.க ஞானசம்பந்தம்
செயலாளர், ஸ்ரீ பகவத் மிஷன்,
சென்னைப் பிரிவு,
திருமுல்லைவாயல்,
சென்னை 62
கைபேசி: 9444756744

சித்தர் நூல்களுள் தலைமை நூல் திருமூலர் திருமந்திரம். திருமந்திரத்தின் உட்பிரிவு தந்திரம் என்று கூறப்படுகிறது. தந்திரத்தை ஒன்பது பிரிவாகத் திருமூலர் வகுத்துள்ளார். ஒன்பது தந்திரங்களுள் முதல் நான்கு தந்திரங்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கையும் உணர்த்துகின்றன. ஐந்து முதல் ஒன்பது தந்திரம் வரை வீடுபேறு, வீடுபேற்று வழி, வழிபாடு, வழிபாட்டு துதி, வாழ்வு என்ற ஐந்தையும் உணர்த்துகின்றன.

திருமந்திரம் இளமை, யாக்கை, செல்வம் ஆகியவை நிலை இல்லாதவை. எனவே நிலைத்த பொருளாகிய இறைவனை அடையவே பாடுபட வேண்டும் என்கிறார். உலகில் உள்ள உயிர்களின் பசிப்பிணி நீக்கி. பிறர் மனை விழையாமை போன்ற செயல்கள் நீக்கி உயிர்நிலையாமை, யாக்கை நிலையாமை, பிரிந்த உயிர் உடலில் புகாமை என்ற தத்துவம் தெரிந்து மரணத்தைத் தடுக்கும் வழி தெரிந்து மேன்மையான இடத்திதற்குச் செல்லும் வழியை இக்கட்டுரை உணர்த்துகின்றது.

பசிப்பிணி நீக்குதல்

பிணியில் நீங்காத பிணி, பசிப்பிணி ஆகும். பிறவிகள் தோறும் விடாமல் தொடர்ந்து வரும் உறவுகள் வினையைவிடக் கொடியவை ஆகும். வயிற்றை நிரப்புவதற்குப் பொன்னைத் தேடுவர். அந்த வயிற்றைக் குறையாமல் நிரப்புதல் எல்லார்க்கும் பெற்ற பின் பிறவிக்குக் காரணமாக வினையும் நீங்கி வயிற்றுப்பிணியும் நீங்கி விடும்.

பிறர் மனை விழையாமை

பிறர் மனை விரும்புவது என்பது இனிய சுவையுடைய மாம்பழம் இருக்க தகுதி இல்லாத புளியம்பழத்திற்காகப் புளிய மரத்தில் ஏறி வருந்துவதற்கு ஒப்பானத் தாமே

பொருத்தம் இலா புளிமாங்கொம்பு ஏறிக்
கருத்து அறியாதவர் கால் அற்ற வாறே (22)

என்று திருமூலர் பிறர் மனைவியை விரும்புவது பாம்பின் தலையைத் தொடுவது போன்று ஆபத்தான செயலாக அமையும் என்று கூறுகிறார்.

யாக்கை நிலையாமை

மன்னாதி மன்னர்களும் மாண்டனர் இம்மன்னர்கள் வெண்கொற்றக் குடையும், குதிரைப் படையும், செங்கோலும் கொண்டு நான்கு பக்கமும் மக்கள் சூழ்ந்து வர நடுவே செல்லும் போது அறிவு உண்டாகும் அந்த நேரத்தில் மன்னனின் உயிர் வளமாகச் சுழன்று நின்றுவிடும்

குடையும் குதிரையும் கொற்ற வாளும் கொண்டு
இடையும் அக்காலம் இருந்து நடுவே
புடையும் மனிதனார் போகும் அப்போதே'
அடையும் இடம் வலம் ஆருயிராமே *(166)*

உயிர் நிலையாமை

எண் சான் வீட்டிற்கு சிரசே பிரதானம் இவற்றிற்கு இரண்டு கால்கள், உச்சி உத்தரமான முகுதுத் தண்டு உள்ளது. பக்கத்தில் இடப்பட்ட விலா எலும்பான சாற்றுக்கழிகள் முப்பத்திரண்டு இருக்கின்றன. இவையனைத்தும் மூடப்பெற்ற தசையான கூரை ஒரு காலத்தில் நீங்கி விடும் அப்படி உயிர் நீங்கினால் மீண்டும் உடலில் புகுவதற்கு அது அறியாது இதனைத் திருமந்திரத்தில்

மேல்உள கூரை பிரியும் பிரிந்தால்முன்
போல் உயிர் மீளப் புக்அறியாதே *(146)*

என்று கூறும் போது உயிர் இருக்கும் போது நல்லதைச் செய்ய வேண்டும்.

உடன் வருவன எவையும் இல்லை

நல்ல முறையில் உணவைச் சமைத்து வைத்தியர் உணவை உண்டார். தன் இளம் மனைவியுடன் இன்பம் அனுபவித்து இடப்பக்கம் வலிக்கின்றது என்று மனைவியுடன் படுத்தார். படுத்தவர் அப்படியே எழுந்திராமல் இறந்து விட்டார் அளவிட்டு வைக்கப்பட்ட உடல்வினை, போகங்கள் அனைத்தையும் அனுபவித்து, உடல் நீங்கும் பின்பு இன்பங்கள் உடன் இருந்து அனுபவித்த மனைவியும், மக்களும் உடன் வரமாட்டார்கள் உயிருடன் வாழந்த காலத்தில் நோன்பின் பயனும், ஞானமும் தவிர மற்றவை இறந்தவருடன் செல்வதில்லை.

மரணத்தை வெல்லும் வழி

மரணம் என்ற ஒரு காரியத்தால் உடலை விட்டு உயிர் இடையில் செல்லும்போது செல்லும் வகை ஏதும் இல்லை. எனவே, இறைவனையே நினைத்தால் உயிரை, உடலினின்று பிரிக்கும் எமதூதர்கள் வேதனைபடுத்த எண்ண மாட்டார்கள். நான்தோறும் காலையில் எழுந்தவர்கள் மாலையில் உறங்கச் செய்யும் செயல்கள் வாழ்நாள் குறைவது போன்றதாகும்.

காலை எழுந்தவர் நித்தலும் நித்தலும்
மாலை படுவதும் வாணாள் கழிவதும்
சாலும் அவ்வீசன் சலவியன் ஆகிலும்
ஏலி நினைப்பவர்க்கு இன்பம் செய்தானே

அவ்வாறு வாழநாளைக் குறைக்கும் உருத்திரன் சினம் கொண்டாலும் அவனையே நினைப்பார்க்கு இன்பத்தை அளிக்கின்றான்.

மேன்மையான இடத்திற்கு செல்லும் வழி

பருத்த ஊசியைப் போன்ற ஐந்து பொறிகளும் ஒரு பையைப் போன்ற உடலுள் உள்ளன. பறந்து போய் தீயவனவற்றையே பற்றி உண்ணும் காக்கை போன்றது இந்த ஐம்பொறிகளாகும். ஐந்து பொறிகளும் தலையின்மீது பனிப்படலம் போல் விளங்கும் ஒளியில் தலைப்பட்டு அமைந்தால் ஐந்து பொறிகளைக் கொண்ட உடலில் நினைவு நீங்கி விடும். நின் மலங்கள் அழிந்தால் மேன்மையான இடத்திற்கு செல்லலாம் என்று திருமந்திரம் கூறுகிறது.

நிலையாமையை உணர்ந்து நிலைத்த பொருளாகிய இறைவனை அடையும் முறையை திருமந்திரம் கூறுகிறது.

86. நடுவு நிலைமைப் பற்றி திருக்குறளும், திருமந்திரமும் ஒப்பீடு

மா. பாலமுருகன், M.Sc., MBA
முதுகலை வணிக நிர்வாகவியல்,
தொழில்துறை வல்லுனர்
நெற்குன்றம்,
சென்னை

உலக வாழ்க்கை, குடும்ப வாழ்க்கை, சமூக வாழ்க்கை, தன் வாழ்க்கை என்ற எல்லாப் பரிணாமங்களிலும் நடுவு நிலைமையோடு மனிதன் இருத்தல் வேண்டும். நன்மை, தீமை, அழகு - அழகின்மை, செல்வம் - வறுமை, உயர்வு - தாழ்வு என்ற நிலைப்பாட்டிலும் நடுவு நிலைமையோடு இருப்பவன் ஞான நிலையிலும் நடுநிலை வகிப்பான் இந்த நிலைக்கு உயர்ந்தவன் இறைவனோடு ஒப்பாக நின்று போற்றத்தக்க அருங்குணம் பெற்றவனாகிறான்.

திருக்குறள் உணர்த்தும் நடுவு நிலைமை

நேர்மை என்ற சொல் நடுவு நிலைமையைக் குறிப்பதாகத் தமிழ் அகராதி கூறுகிறது.

நேர்மை உடையவனது செல்வம் என்றும் குறையாமல் வழி வழி மக்களுக்குத் துணையாக நிற்கும். இதனை வள்ளுவர்,

செப்பம் உடையவன் ஆக்கஞ் சிதைவின்றி
எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து (112)

என்று கூறுகிறார்.

நடுவு நிலைமை ஆராய்தல்

ஒரு மனிதனிடம் நடுவு நிலைமை உள்ளதா? என்று ஆராய்வதற்கு திருக்குறள் பின்வறுமாறு கூறுகிறது.

தக்கார், தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும்

ஒருவனுடைய சொல்லை மையமாக வைத்தே அவன் நேர்மை யானவனா? நேர்மையற்றவனா? என்பதைப் புரிந்து கொள்ளலாம்

மனமும் நடுவு நிலைமையும்

உலகப் பொருள்கள் அனைத்தும் ஆக்கவும் அழிவும் தன்மைக் கொண்டதாக அமைகிறது. உலக குறியீடு மேற்சொன்ன நிலையில் சாய்கிறது. ஆனால் இந்த உலகத்தில் இவ்வியற்கையைப் பார்த்து அவன் மனம் சாய்தல், சோர்தல் கூடாது என்பதை,

கேடும் பெருக்கமும் இல்லை நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க்கு அணி (115)

என்று சான்றோர்களுக்கு நடுவுநிலைமை நின்றோர்க்கு அழகு என்கிறார்.

நடுவு நிலைமையும் உள்ளமும்

உள்ளம் சிறிதும் சாயாமல் இருந்தால் தான் சொல்லுகின்ற சொல்லும் நேர்மை சொல்லாக இருக்கும்.

''சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா''
உட்கோட்டம் இன்மைப் பெறின்

உள்ளம் சரிந்து விட்டால் சொல்லுகின்ற சொல்லும் சரிந்தும் சாய்ந்தும் விடும்.

நடுவு நிலையும் வாணிபமும்

வாணிபம், சிறு வாணிபம், பெரு வாணிபம் என்ற இரு வகைப்படும். தெருக்களில் செய்யும் வாணிபம், ஊரில், கிராமத்தில், நகரத்தில், மாநகரத்தில், மாநிலத்தில், தேசியத்தில், உலகத்தில் என வாணிபம் அவரவர் தகுதிக்கேற்ப செய்யப் படுகிறது. கொள்ளும் விலைக்கு ஏற்ப, ஒரு பொருளையும் அதற்குரிய முறையில் விற்பனை செய்தால் உலக வாணிபத்தைக் கைப்பற்றிக் கொள்ளலாம் என்கிறார்

வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தம்போற் செயின் (120)

இந்தக் கொள்கையை வீட்டிலும், குடும்பத்திலும், சமூகத்திலும், தொழிலிலும் கடைபிடித்தால் எங்கும் இலாபத்தைப் பார்க்கலாம்.

திருமந்திரத்தில் நடுவு நிலைமை

இன்னார் இனியர் என்ற வேறுபாடு காட்டாது அறத்தொடு நிற்றச் என்பர் பரிமேலழகர்.

திருமந்திரத்தில் நடுவு நிலைமையை அகமுக பயிற்சியை பேசுகிறது. சிரசில் மேல் விளங்கும் ஒளியில் நிற்றல், சிவசக்தி இனமே நிற்றல், சூரிய, சந்திரனாகிய இரு கண்களும். மேல் புருவ நடுவுல் நிற்றல் என்று புறசெய்தினை வள்ளுவர் கூறியது போல் அகச்செய்தியை திருமூலர் கூறுகிறார்.

பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், நடுவு நிலைமையில் நின்றதால் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழில் புரிகின்றான்.

நமது உடலில் நடுப்பாகம் இதயம் இதுவே இறைவன் திருவடிப் பற்றுடனிருந்து முக்குண விளையாட்டை பற்றறப் பார்த்திருப்பதே ஞானிகளின் நடுவு நிலையாகும்.

நடுவு நின்றார்க்கன்றி ஞானம் இல்லை
நடுவு நின்றார்க்கு நரகமும்இல்லை
நடுவு நின்றார் நல்லதேவரும் ஆவர்
நடுவு நின்றார் வழி நானும் நின்றேனே (1322)

என்று திருமந்திரம் கூறுகிறது.

எனவே, அகப்புற - வாழக்கையில் நின்று மாக்கள் நிலையில் இருந்து மக்கள் நிலைக்கு வந்து தேவர்கள் நிலைக்கு உயர்த்தப் படுவார்கள்.

87. பெரியாரைத் துணைகோடல்
திருக்குறளும், திருமந்திரமும் ஒப்பீடு

ப. ஆனந்தன்
சோதிட ஆசிரியர், (ம) இதழியல் துறை
ஓம் ஸ்ரீ சோதிட கல்வி மற்றும் பயிற்சி மையம்
தி. நகர், சென்னை 17
கைபேசி: 9962417020

மாதா, பிதா, குருவை தெரிந்து கொள்பவர்கள் தெய்வம் ஆகிவிடு கிறார்கள். மாதா, பிதா, குரு இவர்கள் தான் தெய்வம். தெய்வத்தை கண்ணால் பார்க்க முடியாது. இவர்கள் தான் தெய்வமாகக் காட்சி அளிக்கிறார்கள் இப்பெரியவர்களை எப்படி அணுகி நம் வாழ்வியலை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்பதை இக்கட்டுரை முன்மொழிகிறது.

அறிவுடையார் நட்பை பெறல்

அறம் செய்யும் திறத்தில் முதிர்ந்த அறிவு உடையவர் நட்பை நாம் தெரிந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்

அரிதிலும் அரிது

பெரியவர்களை அறிந்து அவர்களை போற்றி உறவு கொள்வது. அரிய செயல்களுல் அரியது என்கிறார்.

அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல் *(443)*

என்று குறள் கூறுகிறது.

பெரியோர் இல்லையேல் மன்னனும் கெடுவான்

உலகை ஆளும் மன்னனாக இருந்தாலும் அவனுக்கு அறன் உரைக்கும் பெரியோர் இல்லை என்றால் அவனுக்கு பகைவனே இல்லை என்றாலும் கெட்டு அழிந்து விடுவான்.

இடிப்பாறை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானும் கெடும் *(448)*

என்று வள்ளுவர் பெரியோரின் சிறப்பை மன்னனுக்கும் எடுத்துரைக்கிறார்.

துணை இல்லை ஊதியம் இல்லை

முதல் இல்லாமல் உலகத்தில் ஊதியம், வாணிபம், ஈட்ட முடியாது. அதுபோல் பெரியோர் துணை இல்லாமல் உயர்நிலை பெற முடியாது.

முதல் இல்லார்க்கு ஊதியம் இல்லை மதலையான்
சார்பிலார்க்கு இல்லை நிலை

என்று தெளிவுறுத்திகிறார்.

திருமந்திரம் கூறும் பெரியாரை துணைகோடல்

பெரியோரைக் கூடவல்ல அருமையானவன் கலைஞானத்துள் விளங்கி இருப்பான். பெருமையுடைய ஞானத்தைப் பெற்றவனோ, பிறவிச் சூழலிலிருந்து நீங்கப் பெறுவான் உரிமையோடு பழகும் தன்மையில் வல்லவன் சிவபெருமானை அகத்தே உணர்ந்து அழிவின்றி வாழ்வான் அதனால்தான் நான் அருமையும் பெருமையும் உரிமையுமுடைய பெரியோரது துணையைப் பெறும் பேறு பெற்றேன்.

அருமறை வல்லோன் கலை ஞானத்துள் தோன்றும்
பெருமை வல்லோன் பிறவிச் சுழி நீந்தும்
உரிமை வல்லோன் உணர்ந்து ஊழி இருக்கும்
தருமை வல்லாரோடு சேர்ந்தனன் யானே

என்று பெரியோரைப் பற்றி உலக மக்களின் வாழ்வில் இல்லற ஞான வாழ்க்கைக்கு உயர்த்துவதற்கு ஏணியாக இருப்பர்.

88. ஊழ் பற்றி திருக்குறள், திருமந்திரம் ஒப்பீடு



முனைவர் க. காந்திதாஸ்
தமிழ்த்துறை தலைவர்,
சர் தியாகராய கல்லூரி,
சென்னை 21

என்ன தான் பெருமை பொருந்திய செல்வந்தர் வீட்டில் பிறந்தாலும் மிகப் பெரும் அரசர் வழியில் பிறந்தாலும் அவ்வின் நுகர்வு நுகர்வதற்கு ஊழ்வினை என்னும் முன் வினைப்பயன் இருந்தால் மட்டுமே முடியும்.

ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்

என்று சிலம்பின் வழி, இளங்கோ அடிகள் கூறுகிறார்.

ஊழும் அறிவும்

ஒருவர் எவ்வளவு நுட்பமான அறிவு மிகுந்து இருந்தாலும் நுட்பமான, அறிவு சார்ந்த நூலை கற்றிருந்தாலும் ஊழ் வினையின் ஆற்றிய செயலக்கு ஏற்ப அறிவு அமையும் என்கிறார்.

நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும்

என்கிறார்.

கோடி பொருள் சேர்த்தாலும் துய்த்தல் என்பது ஊழ்

ஒருவர் கோடிக்கணக்கான செல்வங்களை ஈட்டி இருந்தாலும் அதனை அனுபவிக்கும் அமைப்பு இருந்தால் மட்டுமே அனுபவிக்க முடியும். இல்லையென்றால் எள்ளளவும் அனுபவிக்க முடியாது.

வகுத்தான் வகுத்த வகையல்லலால் கோடி
தொகுத்தார்க்கும் துய்ததல் அரிது (377)

என்கிறார்.

வலிமை ஊழே

உலகத்தில் வலிமையானது எது என்றால் ஊழே மிகுந்த வலிமையானது. இந்த ஊழை காட்டிலும் வலிமையானது உலகில் எதுவும் இல்லை. எல்லாவற்றைக் காட்டிலும் அது முந்தி வீடுகிறது.

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் தூறும்

ஊழை வெல்லும் முயற்சி

ஊழையும் வெல்லும் பேராற்றல் கொண்டது முயற்சி ஆகும். முயற்சியை விட்டு விடுதல் கூடாது என்கிறார்கள் முன்னோர்கள்.

திருமூலரின் ஊழ்

ஊழ் என்பது இருவினைப் பயன் செய்தவனையே சென்றடைவதற்கேதுவாகிய நியதி. ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், நியதி, விதி என்பன ஒரு பொருட் சொல் ஆகும்.

விதி என்பது ஒன்று உண்டு எல்லாம் அறிந்த இறைவன் வகுத்த வழியே, அது

ஆறிட்ட நுண்மணல் ஆறே சுமவாதே
கூறிட்டுக் கொண்டு சுமந்தறி வாரில்லை
நீறிட்ட மேனி குமிர்சடை நந்தியை
பேறிட்டு என் உள்ளம் பிரிய கில்லாவே *(2849)*

ஆற்றில் காணப்படும் நுண்மணல் வெள்ளத்தால் கரையும், இடம் மாறிச் செல்லும். மேடு பள்ளமாகும் பள்ளம் மேடு ஆகும். இவை மனிதர்களாளோ விலங்குகளாளோ நடப்பதில்லை. இயல்பாக நடக்கும். அதுபோல முன் செய்த வினைப்படியே எல்லாம் நடக்கும் இதை உணர்ந்த நாம் வெண்ணீறு ஒளியில் விங்கும் பெருமானை சென்ற வானாவனை இறைவனாப் பெறுப்பேறாகக் கருதி அவனை விட்டு எப்பொழுதும் நில்லாது இருக்க வேண்டும். ஊழ் ஒன்றும் செய்ய முடியாது என்று இக்கட்டுரை நிறுவுகிறது.

89. திருமூலர் + திருமந்திரம் = இறைநெறி



இர. அருள் நிதி
ஆய்வியல் நிறைஞர்
உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை
சர் தியாகராய கல்லூரி, சென்னை 21
கைப்பேசி: 9380871581
arulnithinoolagam@yahoo.com

திருமூலரும், அவர் அருளிய திருமந்திரமும் யார் ஒருவர் அறிகிறார்களோ அவர்கள் சாகா நெறியைப் பெற்று இறைநெறியை அடைவார்கள்.

திருமந்திரம் தோற்றம்

சிவபெருமான் மானுடம் உய்ய மக்களுக்கு வழங்கியதே ஆகமங்கள். இவ்வாசகங்கள் காலப் போக்கில் கிடைக்காமல் போனதால் இவற்றினை மீட்டுருவாக்கம் செய்து நூலாக்கம் செய்ய திருமூலர் ஆவார்.

திருமந்திரம் மறைப்பு

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் திருஞானசம்பந்தர் திருவாவடு துறை ஆருகே தலப் பயணம் மேற்கொண்ட போது. இங்குத் தமிழ் மணம் வீசுகிறது என்று கூறிய போது, தோண்டிப் பார்த்தார்கள் உள்ளே செப்பேடு கிடைக்கப் பெற்றது. அதனை சுத்தம் செய்து பார்த்தபோது திருமந்திரம் மாற்றுச் சமய ஆட்சியின் போது மறைத்து வைக்கப்பட்டிருந்த இந்தச் செப்பேடு இறைவன் திருவருளால் திருஞானசம்பந்தரின் மூலமாக உலக மக்களுக்குக் கிடைக்கப் பெற்றது.

திருமந்திர வழி உய்வு பெற்றோர்

திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், பட்டினத்தார், தாயுமானவர், அருணகிரியார், வள்ளலார் இவர்கள் அனைவரும் திருமந்திரத்தை ஓதி திருமந்திர மேனியை பெற்றவர்கள் இவர்களின் நூல்களில் திருமந்திரத்தின் தாக்கம் உள்ளது.

திருமந்திர சிறப்பு

இறைவனால் உலக மக்களுக்கு வழங்கப்பட்ட இந்நூல் சதாசிவ ஆகமம் என்றும் சுந்தராகமம் திருமூலர் பெயர் இட்டுள்ளார்.

திருமந்திரம் என்றால் மரணமிலா பெருப் வாழ்வு என்று உள்ளதால் இப்பெயரே நிலைத்து விட்டது.

மந்திரங்கள் சப்த கோடி மந்திரங்கள் என்றும்,
சுருக்கினால் இலட்சத்து எட்டு என்றும்,
சுருக்கினால் ஆயிரத்து எட்டு என்றும்,
சுருக்கினால் நூற்றுஎட்டு என்றும்,
சுருக்கினால் பதினெட்டு என்றும்,
சுருக்கினால் ஒன்பது என்றும்
சுருக்கினால் ஐந்து என்றும் அமைகிறது.
ந ம சி வ ய

அருளல், மறைத்தல், அழித்தல், காத்தல், படைத்தல் என்று ஐந்தொழில்கள் இவ்வுலகில் நடைபெற்று வந்து கொண்டு இருக்கின்றது. தனி மனித உயிர், உடல், உலகம் என அனைத் திலும் இந்நிலையே நடக்கிறது தொடர்கிறது. இவ்வாற்றலை உணர இத்திருமந்திரம் வழிகாட்டுகிறது.

வள்ளலார் தோத்திரத்திற்குத் திருவாசகத்தையும், சாத்திரத் திற்குத் திருமந்திரத்தையும் உற்று நோக்குங்கள் என்று கூறுகிறார்.

சன்மார்க்கம் என்ற சொல்

சன்மார்க்கம் என்ற சொல்லை முதன்முதலில் அறிமுகப்படுத்தியவர் திருமூலர். சன்மார்க்கத்திற்கு கடக்கால் இட்டவர் இவர். சுவர் எழுப்பியவர் தாயுமானவர், கூரை எழுப்பியவர் வள்ளலார். இச்சன்மார்க்கம் உலகம் முழுமையும் பரவி நிறையும்.

திருமூலர் இயற்றிய நூல்கள்

திருமந்திரம் என்ற நூல் மட்டுமே அருளி உள்ளார்கள் என்று இலக்கியத்தில் பதிவு செய்துள்ளார்கள். ஆனால் சித்தர் என்ற பார்வையில் திருமூலர் திருமந்திரம் எண்ணாயிரம் என்ற நூல் இருந்ததாக ஞானிகளும் குறிப்பாக வள்ளலாரும் குறிப்பிட்டுள்ளார்.

1. திருமூலர் திருமந்திரம் மூவாயிரம்
2. திருமூலர் திருமந்திரம் முந்நூறு
3. திருமூலர் திருமந்திரம் முப்பது
4. திருமூலர் திருமந்திரம் உபதேசம்
5. திருமூலர் வைத்திய சாரம்
6. திருமூலர் வைத்தியம் 1000
7. திருமூலர் தீட்சாவிதி

8. திருமூலர் கற்பம்
9. திருமூலர் ஞானம்
10. திருமூலர் புவனை கக்கிஷம்

போன்ற நூல்கள் பல பதிப்புகளைப் பெற்றுள்ளன. மேலும் திருமூலர் பெயரில் பல சுவடிகள் அச்சு ஏறாமல் உள்ளன.

மூல நூல்கள்

திருமந்திர மூல நூல்கள்

1. திருமந்திரம் - விசுவநாதபிள்ளை - ரிப்பன் அச்சியந்திரம்
2. திருமந்திரம் - சைவ சித்தாந்த மகா சமாஜம்
3. திருமந்திரம் - திருவாவடுதுறை ஆதினம்
4. திருமந்திரம் - திருப்பனந்தாள் பதிப்பு
5. திருமந்திரம் - சாது அச்சுக்கூடம், திரு.வி.க. பதிப்பு

இந்தப் பதிப்புகள் திருமந்திர நூல் பதிப்புகளில் புகழ் பெற்றவை.

உரை நூல்கள்

1. திருமந்திர உரை - துடிசைக்கிழார், கழகப் பதிப்பு
2. திருமந்திர உரை - பஞ்சாக்ர தீபம், திருவாவடுதுறை
3. திருமந்திர உரை - தருமை ஆதினப் பதிப்பு, அருணை வடிவேலு முதலியார்
4. திருமந்திர உரை - ஜி. வரதராசன், பழனியப்பா பிரதர்ஸ்
5. திருமந்திர உரை - சுப. அண்ணாமலை, உரை கலாஷேத்திரா
6. திருமந்திர உரை - மாணிக்கவாசம், உரை உமா பதிப்பகம்

இந்தப் பதிப்புகள் ஆய்வாளருக்கும், ஆசிரியருக்கும், மெய்யடி யார்களுக்கும், மற்றும் பல்கலைக்கழக கல்வி துறையினருக்கும் சாகா கலையை விரும்பும் மெய்யன்பர்களும் கடலில் செல்லும் கலமாய் அமையும்.

திருமூலரின் சமாதி

திருமூலரின் சமாதி சிதம்பரத்தில் திருமூலட்டான குகையில் அமைந்துள்ளது. அவரின் பேராற்றல் உலகம் முழுமையாகப் பரவி நிற்கிறது. திருமூலர், திருமந்திரம் பற்றிய சுவடுகளை இக்கட்டுரையின் மூலம் இரத்தினச் சுருக்கமாக அறிந்து கொள்ளலாம்.

90. திருமந்திரம் உணர்த்தும் மந்திரம், தந்திரம், இயந்திரம்



ச.ஞானசம்பந்தன்
சென்னைப் பல்கலைக் கழகம்

உலகியல் நெறிகளில் மந்திரம், தந்திரம், யந்திரம் இம்மூன்றும் சித்தர்கள் இறைவனைத் தொழும் மார்க்கம். மருத்துவத்திலும் மணி மந்திரம் மருந்து என்ற வகையில் மந்திரத்தைச் சித்தமருத்துவ முறையிலும் ஈடுபடுத்தியுள்ளனர். மந்திரத்தை உருப்போடுதல், தந்திரத்தைப் பழக்கிக்கொள்ளல் யந்திரத்தைப் பாதுகாப்பிற்காக வைத்துக்கொள்ளுதல் என இம்மூன்று தத்துவங்களையும் சித்தர்களும் ஞானிகளும் உருவாக்கித் தந்துள்ளனர்.

மந்திரம் என்பது மந் + திரம் அதாவது மந் என்பது மனது திரம் என்பது உறுதி. மனத்தை உறுதியாக்கிக்கொள்ளும் முறையே மந்திரம் என்பது. அதுபோலலே . தந்திரம் என்பது தன் + திரம் தன்னை உறுதியிலே நிறுத்திக்கொள்ளுதல் என்பதே தந்திரம். சித்தர்கள் காட்டில் தவம் செய்வதற்கும், கொடிய விலங்குகளின் தாக்குதல்க ளிலிருந்து தன்னைக் காத்துக்கொள்ளவும் அஞ்சாமல் ஒரு நிலையில் நிற்பதற்கு மந்திரங்களை உச்சரிக்கும் முறையினைப் பயின்று பழகியிருந்தனர்.

மந்திரங்களின் நோக்கங்களாக

1. துயரங்கள் அணுகாது காக்க, இன்பங்கள் பெருகிட
2. விரும்பிய பொருட்களைப் பெறுவதற்கு
3. இறைநிலையான பேருண்மையுடன் இணைந்திட

என்ற வகையில் விளங்குகின்றன.

பக்தியோகத்தில் நித்தியவழிபாட்டில் மந்திரம் முக்கிய இடத்தை பெற்றிருக்கிறது. யோகமார்க்கத்திலும் மந்திரங்களின் உதவியால் முலாதாரத்திலிருந்து குண்டலினி சக்தியை எழுப்பிச் சகஸ்ராரத்தில் நிறுத்தி இறைநிலையை அறியமுடிகிறது.

அதன்மூலம் பிறவிப்பினிகளை நீக்கி ஞானத்தையும் இறையனுபவங் களையும் தரும் இத்தகைய மந்திரங்களை உத்தம மந்திரங்கள் என்று அழைக்கின்றனர்.

எய்தி வழிப்படில் எய்தாதன இல்லை
எய்தி வழிப்படில் இந்திரன் செல்வமும்
எய்தி வழிப்படில் எண்சித்தி உண்டாகும்
எய்தி வழிப்படில் எய்திடும் முத்தியே (1006)

மந்திர இயந்திர வழிபாடு செய்யும்போது அடையாத பேறு எதுவும் இல்லை. இங்ஙனம் வழிபாடு செய்தால் இந்திரச் செல்வத்தைப் பெறலாம் எட்டுவகையான சித்திகளும் (அட்ட கரும பலன்கள்) உண்டாகும். இம்மை மறுமையில் வீடுபேறாகிய முக்தி வாய்க்கப்பெறும்.

மந்திர வழிபாட்டிற்குரிய உறுப்புகளான பூவும் புகையும், புனலும் படைப்பும், விளக்கும் ஒளியும், பாவும் பண்ணும், மணியம் இயமும் செய்து தூபதீபங்கள் காட்டி வணங்குபவர்க்கு இம்மை மறுமை வீடுபேறு கிட்டும்.

அன்புடனேநின் றமுதமு மேற்றியே
பொன்செய் விளக்கும் புகைதீபந் திசைதொறுந்
துன்ப மகற்றித் தொழுவோர் நினையுங்கால்
இன்புட னேவந் தெய்திடு முத்தியே (1005)

இயந்திரமாவது ஓர்மை, கூர்மை, வலிமை இவைக்கூடப்பெற்ற மனத்தில் ஒருவித சக்தி அல்லது அறிவுக்கு ஒத்த கற்பனை உருவைப் பொருளாகக் (medium) கொண்டு அதுவாகவே மாறிவிடுவது இயந்திரம். The mind gets attuned to the level of that thing. இவை சக்தி சக்கரங்களாகத் திருமந்திரத்தில் உணர்த்தப்பெறுகின்றன. ஐந்தெழுத்துகள், ஐம்பத்தோர் அட்சரங்கள், பிரணவம் இவ்வெழுத்துக்களைக் கொண்டே சக்கரங்கள் அமைக்கப்படுகின்றன. இச்சக்கரங்கள் திருவம்பலச் சக்கரம், ஏரொளிச் சக்கரம், வயிரவி, நவாக்ரி, .ச்ாம்பவி, புவனாபதி, பேரம்பலச்சக்கரம் எனப் பல்வேறு அமைப்புகளையும் ஆற்றல்களையும் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது.

தந்திரம் என்பது வாழ்வின் நலத்திற்கும், செம்மைக்கும் உயர்வுக்கும் இலட்சியத்திற்குமான சங்கற்பங்களைத் தேர்ந்தெடுத்து அதனைத் திருப்பித் திருப்பி மனத்தில் சுழல விடுதலே ஆகும். இதுவே வழிபாடு என்பது. மந்திரம். யந்திரத்தை வாழ்வின் பயனாக்கிக் கொள்ளுதல் தந்திரம். இது பக்திமார்க்கத்தில் வேண்டுதல் (சயலநச) எனப்படுகிறது. இதுவும் ஒருவகையில் தன்னையே வழிபடும் தன்வழிபாடே.

பிரணவ மந்திரம்

பிரணவம் என்பது ப்ர + நவம் ப்ர சிறப்பானது – நவம் என்பது புதுமையானது. சிறந்த புதிய புதிய ஆற்றலைத் தருவது பிரணவம். ஓம் என்ற மந்திரத்தில் ஐந்து பூதங்களும் அடங்கும். இதனைத் திருமூலர்,

ஓங்காரத் துள்ளே யுதித்த ஐம்பூதங்கள்
ஓங்காரத் துள்ளே யுதித்த சராசரம்

என்று அண்ட சராசரங்களும் பிரணவத்திலிருந்தே உதித்தன என்கிறார்.

மந்திரயோகம் என்றால் மந்திரத்தை மனத்தினால் நிறுத்தி நினைப்பவனைக் காத்து இறைவனோடு சேர்க்கும், இறைவனோடு ஒன்றரக் கலக்கும் நெறி. இதில் ஓம் என்ற பிரணவ மந்திரம் தாரக

மந்திரம். தாரகம் என்பது தாண்டுவது அல்லது கடப்பது என்று பொருள்படும். கப்பல் கடலைக் கடக்க உதவுவதால் அதற்குத் தாரகம் என்ற பெயரும் உண்டு. சம்சார சாகரமாகிய கடலைக் கடக்க இந்த பிரணவமந்திரம் உதவுகிறது. ஓம் என்பது ஏகாட்சரம். அகர முதலாகிய ஐந்தும் பிரிப்பின்றி ஒன்றாகவே உச்சரிக்கப்படுவதால் ஒரெழுத்து மொழியாகும்.

உலகில் உள்ள எல்லாச் சாத்திரங்கட்கும் மூலம் பிரணவம். ஓம் என்ற மந்திரத்திலிருந்தே எல்லா வேதங்களும் மந்திரங்களும் பிறந்தன. எனவே இதனைச் செபித்தால் எல்லா மந்திரங்களையும் ஓதிய பலனை அடையலாம். பிரம்மா ஓங்காரத்தைச் செபித்ததால் பிரம்மரிஷி பட்டம் பெற்றார் என்றும், ஓங்காரத்திற்குப் பொருள் அறியாததால் முருகன் பிரம்மனைத் தலையில் குட்டி சிறையில் அடைத்தான் என்றும் கந்தபுராணம் தெரிவிக்கிறது. இந்தப் பிரணவ மந்திரத்தைத்தான் சிவனுக்கு முருகன் குருவாக இருந்து உபதேசித்தான் என்பதும் வரலாறு.

ஓம் என்பது அ(கரம்) உ(கரம்) ம(கரம்) என்ற மூன்று பதங்களை உடையது. இதில் அ-அகரம் உலகமெல்லாம் பரவி அதுவதுவாய் விளங்கி இரண்டாவது பதமாகிய உ என்ற உகரத்தால் உடம்பினுள் பொருந்திச் சிவசக்தியாய் மூன்றாவது பதமாகிய ம என்ற மகரத்தால் தோன்றுகின்ற ஒளியோடு பொருந்துவது. இதனைச் சாக்கரம் சொப்பனம் சுழுத்தி அதாவது விழிப்பு, கனவு, உறக்கம் என்ற நிலைக்கு ஒப்பிடலாம். பிரணவத்தை திருமந்திரத்தில்

ஒரெழுத்தாலே உலகெங்கும் தானாகி
ஈரெழுத்தாலே இசைந்தங் கிருவராய்
மூவெழுத்தாலே முளைக்கின்ற சோதியை
மாவெழுத்தாலே மயக்கமே உற்றதே (885)

என்று திருமூலர் உரைக்கிறார்.

இப்பாடலில் ஓரழெத்து என்பது அ – உ என்ற இரண்ழெத்துக்கள் இணைந்த 'ஓ' எனும் எழுத்தாகும். இதில் 'அ' என்ற ஓரழெத்தால் அருவநிலையில் சிவம் எங்கும் வியாப்பித்துள்ளது. ஈரெழுத்தாலே இசைந்தங்கிருவராய் - அதாவது அ + உ என்ற இரண்டெழுத்தாகிச் சிவ சக்தியாய் இணைந்து அருவுருமாக நிறைந்துள்ள நிலை.

மூவெழுத்தாலே முளைக்கின்ற சோதியை – அ, உ, ம் என்ற மூன்றெழுத்தாகி உருவமாக விளங்குகிறது. இவ்வாறு சிவம் அருவம், அருவுருவம், உருவம் என்பதாகக் காட்சியளிப்பதைக் குறிக்கின்ற ஓம் என்ற பிரணவத்திலிருந்தே நமச்சிவாய என்ற ஐந்தெழுத்தும் உதித்தது என்பதை

அகாரம் உயிரே உகாரம் பரமே
மகாரம் மலமாய் வரும் முப்பதத்தில்
சிகாரம் சிவமாய் வகாரம் வடிவமா
யகாரம் உயிர்என்று அறையலும் ஆமே (975)

என்று திருமந்திரம் விளக்குகிறது.

ஓம் என்ற பிரணவமே அகரம் உயிராகவும் உகரம் பரமாகவும் மகரம் ஆணவம் கன்மம் மாயை என்ற மலமாகவும் அதுவே விரிந்து சி சிவமாகவும் வ வடிவுடைய சக்தியாகவும் ய உயிராகவும் சொல்லப்படுவதாகிறது.

தாண்டவமான தனியெழுத்து ஓரெழுத்து (886)

அதாவது ஓம் என்ற ஓரெழுத்தே நடராஜ வடிவமாகக் (காட்சியாகத்) திகழ்கிறது என்கிறார் திருமூலர்.

இந்த ஓங்காரம் மகா வாக்கியம் என்றும் அழைக்கப்படுகிறது.

மாணிக்கவாசகப்பெருமான் சிவபுராணத்தில்

உய்ய என் உள்ளத்தே ஓங்காரமாய் நின்ற

மெய்யா, விமலா, விடைப்பாகா

என்று தன் உள்ளத்தில் உய்ய இறைவன் ஓங்காரமாய் நின்றதாகச் சொல்லுகிறார்.

ஓம் என்ற மந்திரம் அகரம்-உகரம்-மகரம்-விந்து-நாதம் என ஐந்தாகப் பிரியும் அது ஓங்கார பஞ்சகம் எனப்படும். வள்ளல்பொருமான் இதனை,

ஓங்கார பஞ்சகத்தே பாங்காக நடிக்கிறார்

என்று குறிப்பிடுகிறார். வள்ளல்பெருமான் தான் பெற்ற ஓங்கார அனுபவங்களில் தனக்கு இறைவன் சாகாக் கல்வியைக் கற்பித்து ஏகாக்கர பொருளையும் அருளினான் என்று அருட்பெருஞ்சோதி அகவலில் கூறுகிறார்.

சாகாக் கல்வியின் தரம் எலாம் கற்பித்து

ஏகாக்கரம் பொருள் ஈந்த சற்குருவே

ஏகாக்கரம் என்பது ஏக அட்சரமாகிய ஓரெழுத்து மந்திரமான ஓங்கார மந்திரமேயாகும்.

பரந்தது மந்திரம் பல்லுயிர்க்கு எல்லாம்
வரந்தரு மந்திரம் வாய்த்திட வாங்கித்
துரந்திடு மந்திரஞ் சூழ்பகை போக
உரந்தரு மந்திரம் ஓமென் றெழுப்பே (943)

ஆகாயத்தில் மந்திரம் எப்போதும் சூக்குமமாகப் பரந்து விரிந்துள்ளது. பல உயிர்கள் ஒரே நேரத்தில் உச்சரித்தாலும் இறைவனிடம் வரம் பெறலாம். தீய எண்ணங்கள் மாய்ந்திடுமாறு உச்சரிக்க மந்திரமானது பகையை நீக்கும். மந்திரங்களை உரைப்பவனை வலிமையுடைய தாக்கும். ஓம் என்ற ஓங்காரத்தை மூலாதாரத்திலிருந்து சுழுமுனைநாடி வழியாக ஆக்ஞா சக்கரத்திற்குக் கீழ்மேலாக உயர்த்தும்போது உச்சியில் செவ்வொளி படரும் அந்த வகையில் ஓங்காரத்தை நீட்டிச் சொல்ல வேண்டும்.

ஓம் என்ற பிரணவ வடிவான தேவியே(சத்தியே) ஐந்தொழில் நிலைக்கு வரும்போது ஐந்தொழிலுக்கும் அவள் தலைவியாவாள். அவள் பச்சை நிறைத்தை உடையவள். அவளே ஆங்காரத்துள் ஒடுங்கி

(அகங்காரத் தத்துவத்துடன்) விளங்கும்போது ஹ்ரீம் என்ற பீஜமந்திரத்துள் வீற்றிருந்தாள்.

ஓங்காரி என்பாள் அவன் ஒருபெண் பிள்ளை
நீங்காத பச்சை நிறத்தை உடையவள்
ஆங்காரி ஆகியே ஐவரைப் பெற்றிட்டு
ரீங்காரத் துள்ளே இனிது இருந்தாளே (1073)

பிரணவம் சக்தியாகவும் விளங்குவதாக திருமூலர் உணர்த்துகிறார்.

திருவைந்தெழுத்து என்கிற பஞ்சாட்சர மந்திரம்

பஞ்சாட்சரம் பல வகைப்படும் அவை முறையே,

தூல பஞ்சாட்சரம் - நமசிவாய
சூக்கும பஞ்சாட்சரம் - சிவாயநம
அதிசூக்கும பஞ்சாட்சரம் - சிவயசிவ (காரண பஞ்சாட்சரம்)
மகாகாரண பஞ்சாட்சரம் - சிவ சிவ
மகா மணு – சி

'ந' நகரத்தை முதலாக வைத்து 'நமசிவாய' என்று ஓதுவது தூல பஞ்சாட்சரமாகும். பிறர் செவிக்குக் கேட்கும்படி உச்சரிப்பது தூலபஞ்சாட்சரம் என்று சொல்லப்படுகிறது. மந்திரங்களில் பிறர் செவிக்குக் கேட்கும்படி உரைப்பது வைகரி வாக்கு ஆகவே நமசிவாய என்பது தூல வைகரி. தன் செவிக்குமட்டும் கேட்கும்படி உதட்டினால் உச்சரிப்பது சூக்கும வைகரி வாக்காகும். 'சிவாயநம' சூக்கும வைகரி. ஐந்தெழுத்துக்களுள் மாயையைக் குறிக்கும் நகாரமும் ஆணவத்தைக் குறிக்கும் மகாரமும் நீக்கி 'சிவாய' என்று ஓதுவதே அதிசூக்கும பஞ்சாட்சரம். இது ஆணவம் கண்மம் மாயை என்ற மும்மலம் நீக்கி முத்தியினை அருளுவதால் இது முக்தி பஞ்சாட்சரம் ஆகும். அதிசூக்குமத்தைவிட சூக்குமானது காரண பஞ்சாட்சரம் சிவாய என்ற அதிசூக்கும பஞ்சாட்சரத்தில் ஆன்ம எழுத்தாகிய யகாரத்தை நீக்கி 'சிவசிவ' என்று சுவாசத்தைக் கணிப்பதால் (சி – வெளிவிடும் மூச்சு) வ (உள்வாங்கும் மூச்சு) இது வாசியோகமாக இணைந்த காரண பஞ்சாட்சரம் ஆகும்.

நமசிவாய என்பது வேதமுறை - சிவாய நம என்பது ஆகம முறை.

நமசிவாய சமயகுரு உபதேசிப்பது - சிவாய நம ஞானகுரு உபதேசிப்பது.

நமசிவாய சாதாரண பக்குவிக்குரியது - சிவாய நம தீவர பக்குவிக்குரியது.

நமசிவாய - இம்மை மறுமைப் பயன்களை அளிப்பது

சிவாயநம முக்திப் பயனை அளிப்பது - அதுவே ஞானசித்தி

வேத நெறியில் புறவழிபாட்டுக்குரியது ஐந்தெழுத்து மந்திரமாகிய நமசிவாய என்கிற பஞ்சாட்சர மந்திரம். இதில்

ந – நகரம் - ப்ருத்வி – சுவாதிஸ்டானம்

ம – மகரம் - அப்பு – மணிப்பூரகம்

சி – சிகரம் - தேயு – அநாகதம்

வா – வகரம் - வாயு – விசுத்தி

ய – யகரம் - ஆகாசம் – ஆக்கினை

என்பதைக் குறிக்கிறது. மேலும் திருமந்திரத்தில்,

ஐந்தெழுத்தின் பெருமையே அகலிடமாவதும்
ஐந்தெழுத்தின் பெருமையே ஆலயமாவதும் (969)

என்பதில் ஆலயமாவது

சிகரம் - கர்ப்பக்கிருஹம்

வகரம் - அர்த்த மண்டபம்

யகரம் - இடபம் எழுந்தருளிய மகா மண்டபம்

நகரம் - கூத்தபிரான் இருக்கும் மண்டபம்

மகரம் - பலிபீடம்

என்பதாகும்.

நமசிவாய என்ற ஐந்தெழுத்து மந்திரமே ஞானத்தைத் தரும் மறைமொழி. அம்மறைமொழியாகிய நமச்சிவாயப் பழத்தை நான் தின்று பார்த்தேன் அதன் சுவையை மற்ற மந்திரங்களோடு ஒப்பிட்டு உணர்த்துவேன் என்பதைத் திருமூலர்,

நன்று கண்டீர் இனி நமச்சிவாய பழம்
தின்று கண்டேற்கிது தித்தித்த வாறே (2962)

இப்பாடலில் உணர்த்துகிறார். இவ்வாறு நகரத்தை முதலாக வைத்து நமசிவாய என்று ஓதுவது தூல பஞ்சாட்சரம்.

தியான நிலையில் உறைந்து நிற்பவர்க்குத் தசவித நாதங்களான மாணிக்க மணி, மாகடல், யானை, புல்லாங்குழல், மேகம், வண்டுகளின் ரீங்காரம், தும்பி சங்கு இவை எழுப்பும் நாதம் பேரிகை யாழ் மீட்டும்போது கேட்பது போன்ற ஓசைகள் நுண்மையாக விளங்கும்.

மணிகடல் யானை வார்குழல் மேகம்
அணிவண்டு தும்பி வளைபேரி கையாழ்
தணிந்து எழுநாதங்கள் தாமிவை பத்தும்
பணிந்தவர்க்கு அல்லது பார்க்க ஒண்ணாதே (606)

எண்ணாயிரம் முறை உருவேற்றி மௌனமாகத் தியானிக்கப்படும் திருவைந்தெழுத்து மந்திரம் மேல்தளத்தில் நுண்மையான சகஸ்ரார தளம் எனப்படும் ஆயிரம் இதழ் தாமரையாக விளங்கிச் சஞ்சித ஆகாமிய வினைகளை அழித்துச் சிவனின் ஆனந்த நிலையை எய்தச்செய்யும் என்பதைத் திருமூலர்,

சூக்குமம் எண்ணாயிரம் செபித்தாலும், மேல்
சூக்கும மான வழியிடைக் காணலாம்
சூக்கும மான வினையைக் கெடுக்கலாம்
சூக்கும மான சிவனது ஆனந்தமே (909)

இப்பாடலில் விளக்குகிறார்.

மாணிக்கவாசகர் இந்த ஐந்தெழுத்து மந்திரம் பிறவியை நீக்கும் மந்திரம் என்கிறார்.

நானேயோ தவம் செய்தேன் சிவாய நம எனப்பெற்றேன்
தேனாய் இன் அமுதமாய்த் தித்திக்கும் சிவபெருமானை
தானே வந்தென துள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர் வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே
திருவாசகம் - திருவேசறவு 6

மேலும் திருஞானசம்பந்தர் ஐந்தெழுத்தின் மகிமையைப் பற்றிக்கூறும்போது கூற்றினை (எமனை) உதைத்துக் காக்க வல்லது ஐந்தெழுத்து மந்திரம் என்கிறார். இதுவே காலசம்ஹார மூர்த்தியாக வந்து திருக்கடையூரில் மார்க்கண்டேயனுக்காகக் காலனை உதைத்துச சம்ஹாரம் செய்தது.

துஞ்சலும் துஞ்சலில் லாதபோழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமி னாடொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்ச வுதைத்தன வஞ்செழுத்துமே
(பஞ்சாக்கரத் திருப்பதிகம் - திருஞானசம்பந்தர்)

திருமூலர் பஞ்சாரத்தின் மகா மனு 'சி' என்னும் சிகாரத்தை நாயோட்டு மந்திரம் என்கிறார். அதுவே சிகாரமான 'சி' யைக் குறிக்கிறது. இது நான்கு மறைகளின் வேதம், நாதன் இறைவனின் இருப்பிடம் என்றும் முடிவில் தேரிஸ்வருபம் என்றும் கூறுகிறார்

நாயோட்டு மந்திரம் நான்மறை வேதம்
நாயோட்டு மந்திரம் நாதன் இருப்பிடம்
நாயோட்டு மந்திரம் நாதாந்த ஜோதி
நாயோட்டு மந்திரம் நாம் அறியோமன்றோ (2676)

மந்திரங்களின் நோக்கம் இறைநிலையை வணங்குதல் என்பதும் தொடர்ந்து உருவேற்றி வழிபடும்போது அது உயிராற்றலை வளர்ப்பதாகவும் அமைகிறது. மேலும் அது எழுப்பும் அலை இயக்கம் நம்மையும் நம்மைச் சார்ந்தவர்களிடமும் ஒருவித இணைப்பை ஏற்படுத்தி எப்போதும் மனமகிழ்ச்சியுடனும் உதவும்வகையிலும் அமைந்து எப்போதும் நன்மையே தந்துகொண்டிருப்பதாக உள்ளது. உடல் நலம் உயிர் வளம் மனநலம் உலகநலம் அனைத்தையும் தரவல்லதாக இந்த மந்திரங்கள் உள்ளன என்றால் மிகையாகாது.

வாழ்க வையகம்! வாழ்க வளமுடன்!!

துணைநூல்பட்டியல்

1. தேடிக்கண்டேன் திருமந்திரத்தில் - சிவமல்லிகா, திருச்சி
2. யோகக்களஞ்சியம் - அ.அறிவொளி, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை
3. திருமூலர் அருளிய திருமந்திரம் - அ.மாணிக்கம், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை
4. சித்தர்களின் நெறியில் வேதாத்திரிய யோகம் ஓர் ஒப்பாய்வு - ச.ஞானசம்பந்தன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை
5. பண்பாட்டுப் பார்வையில் திருமந்திரம் - முனைவர் சுடலி தியாகராஜன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை
6. திருமந்திரம் காட்டும் வாழ்வியல் நெறிகள் - முனைவர் தி.மகாலட்சுமி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
7. மனவளக்கலை - தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு.
8. திருமூலர் காட்டும் இறைமை - கே.சிவராஜன், அழகு பதிப்பகம், சென்னை

92. திருமந்திரத்தில் கர்ப்பக் கிரியையும் பரியங்க யோகமும்



முனைவர் மரு.சு. இரவீந்திரன்
சென்னை

தொடக்க உரை

திருமூல தேவர் அருளிச் செய்த திருமந்திரம் 'தமிழாகமம்' என அழைக்கப்படுகிறது. ஆகமம் என்பது சைவாகமம் ஆகும். திருமநதிரத்தின் முழுபெயர் 'திருமநதிரமாலை' என்பதாகும். தமிழ் ஆகமம் என்பதற்கு ஏற்ப திருமந்திரத்தின் பெரும்பிரிவுகள் யாவும் 'தந்திரம்' என்னும் பெயரால் குறிக்கப்பட்டுள்ளன. தந்திரம், ஆகமம் இவையிரண்டும் ஒரு பொருட் சொற்கள் ஆகும். இது ஒன்பது தந்திரங்களை உள்ளடக்கியதாகும். மூலன் உரைத்தது மூவாயிரம் தமிழ் என நூலில் கூறப்பட்டுள்ளதால் சேக்கிழாரும் மூவாயிரம் பாடல்களைச் செய்ததாகவே கூறினார். ஆயினும் சில பாடல்கள் அதிகமாகவே காணப்படுகின்றன. ஆதலால் மூவாயிரம் என்பது ஒரு பொது எண்ணிக்கையேயன்றி அறுதியிட்டுச் சொன்னதன்று எனக் கருதுதற்கு ஏதுவாகிறது.

திருமூலர் பெருமான் தனது இரண்டாம் தந்திரத்தில் பதினான்காவது தலைப்பில் 'கர்ப்பக்கிரியை' என்னும் மனித உயிர் தோற்றம் அல்லது பிறப்பு முறையைக் கூறியுள்ளார். அக்கிரியையில் நடைபெறும் தொழிலும் நாதவிந்துவின் கலவி முறை கரு உண்டாகும் விதத்தைப் பற்றியும், பரியங்க யோகம் என்னும் சிற்றின்பக் கலையைப் பற்றி அறிவதும் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நாத விந்து தத்துவம்

'எத்திறம் நின்றான் ஈசன், அத்திறம் அவளும் நிற்பள்' என்கிறபடி சிவன் அடைகின்ற நிலைகளுக்கேற்ப சத்தியும் அவனொடு பிரிப்பின்றி நிற்பாள். அதனால் சிவன் பரசிவனாய் நிற்கின்ற நிலையில் அவனது சத்தி பராசத்தியாய் நிற்பாள். பரசிவனை, பராபரசிவன் என்பது போலப் பராசத்தியைத் திருமூலர் பராபரசத்தி என்கிறார். சிவன் ஆதிசிவனாய் நிற்கின்ற போது சத்தி ஆதி சத்தி

எனப்படுவாள். இங்கு சத்தியின் சொரூபம் என்பது ஞானமே ஆகும்.

அதிலோடு அந்தம் இலாத பராபரம்
போதமதாக புணரும் பராபரை
சோதியதனில் பரம் தோன்றத் தோன்றுமாம்
திதிப்பரை: அதன் பால் திகழ்நாதமே

என்னும் மந்திரத்தில் அநாதி சிவனாகிய பராபரன் அனாதி சத்தியாகிய பராபரையைப் புணர்வான் என இறைவனது இயற்கை நிலையாகிய சொரூப நிலை கூறப்பட்டது. பராபரையை, போதம் என்றதால் ஞானமே அவளது சொருபமாகிறது. தோன்றும் தீதில் பரை என்றதனால், அநாதி சத்தியாகிய பராபர சத்தியிலிருந்து ஆதி சத்தியாகிய பராசத்தி தோன்றுவாள் என்பது கூறப்பட்டது. 'அதன் பால்நாதம்' என்றது ஆதி சத்தியினின்று 'நாதம்' என்னும் பெயருடைய சிவன் தோன்றுவான் என்றபடி, மொழிக்கு முதலாக நிற்பதுவும் நாதம் அல்லது நுண் ஒலியேயாகும். அந்த நாதத்தை முதற்கண் தோற்றுவிப்பவனாகிய சிவனும் 'நாதம்' என்னும் பெயரைப் பெறுகின்றான். இறைவனை நாதன் எனக கூறுவதற்கு இதுவே பொருளாகும். நாதன் 'சாகூகீசுவரன்' என்றும் அழைக்கப் படுவான்.

அடுத்த மந்திரத்தில் 'நாதத்தில் விந்து தோன்றும்' என்றார். விந்து -பரஒலி. இந்த நாத விந்துக்களே பின்பு பல அக்கரங்களாக (எழுத்துளாக - 51 அட்சரங்கள்) உருப்பெற்றது. ஆதலால் மொழிகட் கெல்லாம் மூலம் இந்த நாத விந்துக்களாகும்.

நாதம், விந்து என மேற்கூறிய இரண்டும் 'பரம்', 'அபரம்' எனத் தனித்தனி இரண்டாகி கூட்டலில் நான்காகும். நாதம் விந்து எனக் கூறப்பட்டன. பரநாதம், பரவிந்து அவற்றுள் பரநாதத்திலிருந்து சிவனும், பரவிந்துவிலிருந்து சத்தியும் தோன்றுவர். இவை யெல்லாம் இறைவன் ஐந்தொழில் இயற்றுதற்குக் கொள்ளும் முயற்சிகள். ஆதலின் இந்நான்கு நிலைகளிலும் இறைவன் அருவத் திருமேனியானவன். நாதத்தில் விந்துவும் நாத விந்துக்களில் தற்றகம் வந்த சிவன் சக்தி எனவே ஞானம், கிரியை தோன்றும் என்கிறார் திருமூலர். அக்கிரியை செயல்களை பின் வருமாறு காண்போம்.

கர்ப்பக்கிரியை

கர்ப்பத்தில் (கருப்பையில்) செய்யப்படும் தொழில் கர்ப்பக் கிரியை எனப்படும். இறைவன் சீவர்களைக் கருப்பையில் இருந்து காக்கும் முறையை இப்பகுதி விளக்குகிறது. ஆதியாகிய இறைவன் உயிரைத் தத்துவங்களோடு இணைத்துக் கருப்பையில் இருந்து உதவுகிறான்.

ஆக்குகின்றான் முன்பிரிந்த இருபத்தஞ்
சாக்குகின்றானவ னாதினயெம் ஆருயிர்
ஆக்குகின்றான் கர்ப்பக் கோளகை யுள்ளிருந்து

எனும் திருமந்திரத்தின் கூற்றுப்படி

இறப்பின் போது பிரிந்த இருபத்தைந்து தத்துவங்களாக பூதம் ஐந்து, தன் மாத்திரை ஐந்து, ஞானேந்திரியம் ஐந்து கண்மேந்திரியம் ஐந்து, அந்த கரணம் நான்கு புருடன் ஒன்று ஆக இருபத்தியைந்து ஆகியவற்றை தாயின் கருப்பையில் உதிக்கும் கருவில் சீவனைப் புகுத்தி, அறிவு புகட்டி பத்து மாதம் தங்கியிருந்து முழுமையானக் குழந்தையாய் பிறப்பெடுக்க வேண்டுமென்ற நியதியை வைத்துள் ளான். இக்கருவின் இயல்பை, தத்துவங்களை ஞானியரைத் தவிர உலக மாந்தர்கள் யாரும் அறிய இயலாது.

விழுந்தது லிங்கம் விரிந்தது யோனி
ஒழிந்த முதுல் ஐந்தும் ஈரைத் தோடேறி
பொழிந்த புனல் பூதம் போற்றும் கரணம்

என்னும் திருமந்திரத்தில் இலிங்கம், யோனி முதலான ஆண், பெண்ணுக்குரிய கருவாயின் மூலமாகக் கருவில் புகுந்து தத்துவங் களுடன் கூடிய புருடனது (ஆணின்) அறிவினையும், ஆற்றலையும் நெற்றின் உச்சியில் பொருந்துமாறு இறைவனால் படைக்கப் படுகிறது. இக்கிரியை நடைபெறுவதற்குத் தசவாயுக்களில் 'தனஞ்செயன்' என்னும் வாயுவே முக்கிய பங்கு வகிக்கின்றது. சுக்கில சுரோணிதக் கலப்பால் சிசுவுக்கு என்சான் உடம்பு உண்டாகிறது. (ஆண் பெண் கூட்டுறவால் சுக்கில நாடியில் (விந்து குழாய்) தோன்றிய வெள்ளை நிறமான சுக்கிலம் (விந்து) அவ்வாறே யோனியின்று (பெண் குறி) தோன்றும் செந்நிறமான சுரோதமும் எட்டு விரற்கடையளவு புறப்பட்டு நான்கு விரற்கடையளவு உள்ளே சென்று என்சாணவு உடல் உண்டாகும்.

ஏகத்துள் ஆங்கே இரண்டெட்டு மூன்றைந்து
மோகத்துள் ஆங்கொரு முட்டை செய்தானே
இரண்டேட்டு மூன்றைந்து (2 × 8 = 16 + 3 × 5 = 15 = 31)

ஆன்மதத்துவம் இருபத்து நான்கு, வித்தியா தத்துவம் ஏழு ஆக தத்துவம் முப்பத்தொன்றாகும். இது இருவரின் மயக்க நிலையில் (இன்ப நிலையில்) உருவாகும் தத்துவமாகும்.

இறைவனாகிய குயவன் உடம்பாயி மண்ணைக் கருப்பையாகிய சூளையில் வைத்துப் பக்குவப் படுத்துகின்றான். இதனை,

நந்தவனத்திலோர் ஆண்டி அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்
கொண்டு வந்தானொரு தோண்டி

எனும் கடுவெளி சித்தரின் பாடலின் மூலம் உணர முடிகிறது.

இறைவன், உடலுயிர்த் தன்மைகளை உணர்ந்து அவனை அடைவதற்கு உரிய வழியையும், பிரணவத்தால் (ஓங்காரம்) உடம்பை ஆக்கி (கருவிலுள்ள குழவியின் ஓங்கார வடிவம்) பசு, பாசம் நீங்கிட உடலில் பஞ்ச பூதங்களைப் படைத்தருளினான். பிற சீவர்களிடம அன்பு காட்ட அறிவையும், தெளிவையும் விளங்கச் செய்தான். அதோடு நில்லாமல் அவ்வுயிர் சிவசத்தியாகி அனைத்துயிரிலும் கலந்து நிற்கின்றான்.

கருவின் ஆண், பெண்

உயிரில் ஆண், பெண், அலி என்னும் வேற்றுமை காண்பது கற்பனையாகும் என்று திருமூலர் கூறுகிறார். உடம்பில்தான் ஆண், பெண் வேறுபாடாகவும், உயிரில் இல்லை எனவும் அது தாய், தந்தை வழியே நடைபெறுகின்ற மாற்றமாகவும் கருதுகின்றார். ஆண், பெண் கூட்டுறவின்போது ஆண் தன்மை மிகுந்திடில் ஆண் குழவியாகவும், பெண் தன்மை மிகுந்திடில் பெண் குழவியாகவும் இரண்டும் சமநிலைத் தன்மை ஏற்படில் சிசு அலியாகும் என்று கூறுகிறார். மேலும் அனைத்திற்கும் சுக்கிலத்தை வெளிப்படுத்து கின்ற பிராணனது இயக்கத்திற்கேற்ப ஆயுளும், குழந்தையின் அங்க இலட்சணங்களும் அமைகிறது என்கிறது கீழ்வரும் திருமந்திரம்.

ஆண்மிகில் ஆணாகும் பெண்மிகிற் பெண்ணாகும்
பாய்ந்தபின் வாயு குறையிற் குறளாகும்
பாய்கின்ற வாயு குறையிற் குறளாகும்
பாய்கின்ற வாயு இளைக்கின் முடமாகும்

போன்ற வரிகளால் மேற்காணும் கூற்று உறுதி செய்யப் படுகின்றது. தாயின் கருவறையில் கருவமைந்து வளருங் காலத்தில் தாயின் வயிறு மலசலம் மிகாமல் இருத்தல் வேண்டும். அவ்வாறு மலமிருந்தால் குழந்தை மநத் புத்தியுள்ளதாகவும், நீர் மிகுந்தால் ஊமையாகவும், மலமும் நீரும் மிகுந்திருந்தால் குழந்தை குருடாகவும் பிறக்கும், கணவன் மனைவியின் மூச்சுக் காற்றாகிய பிராணனின் இயக்கத்திற்கேற்ப பால் வேறுபாடுமம், அழகும் அமைகிறது.

கரு உண்டாகும் விதம்

ஒரு பெண் கர்ப்பம் தரிக்க வேண்டுமெனில் சுக்கில, சுரோணிதம் கலந்து ஒன்றாகி அதன்தன் எடையளவில் மாறாமலும், சேர்க்கை முறை தவறாமலும் இருத்தல் மிக அவசியமாகிறது. பஞ்ச பூதக் கூட்டுடன் கடவுளின் ஆவியும் கலந்துள்ளதாக வள்ளலர் கூறுகிறார். மேலும் சுக்கிலம் சுரோணிதப் பையிடத்தில் மூன்று மணி சேர்ந்த

கொத்து ஒன்று, வலது புறத்திலும் நான்கு மணி சேர்ந்த கொத்து ஒன்று இடது புறத்திலும் இருக்கின்றன. சுக்கில சுரோணிதம் கலந்து கர்ப்பந்திரிக்கின்ற காலத்தில் மூன்று சேர்ந்த கொத்தில் சம்பந்தப்பட்டால் பெண் குழந்தையும், நான்கு சேர்ந்த கொத்தில் சம்பந்தப்பட்டால் பெண் குழந்தையும் பிறக்கும் எனவும், புணர்ச்சி காலத்தில் வலது புறம் சாய்வாகப் புணர்ந்தால் ஆணும், இடது புறம் சாய்வாகப் புணர்ந்தால் பெண்ணும் பிறக்கும் என்று குறிப்பிடுகிறார்.

பரியங்க யோகம்

பரியங்கம் - கட்டில், யோகம் - சேர்க்கை கட்டிலில் பெண் கணோடு கூடியிருந்து செய்யும் போகத்தை யோகமாக்குதல் பரியங்க யோகமாகும். மனம் பிரமரந்திரத்தில் நிலை பெற்றவர்க்கே இந்த யோகம் கைக்கூடும். இன்ப காலத்திலும் இறைவனை எண்ணியிருக்க வேண்டும் என்பதே நோக்கமாகும். மனதை செம்மைபடுத்தாமல் வாழ்வில் ஆரோக்கியத்தைப் பெறவே முடியணுாது. மனமே வாழவோட்டத்தின் மூலதனமாகும். இலட்சியத்திற்கும், காம உழவிற்கும், பக்திக்கும், முக்திக்கும் மனமே விதையாகிறது. பிண்டமான உடலுக்கும், அண்டமான பேரண்டங்கள் உற்பத்திக்கும் விதையானது விந்து, பரவிந்து ஆகும். இதனை பலவாறாக விவரித்து இயம்பியர் திருமூலர் ஆவார்.

பரியங்க யோத்துப் பஞ்ச கடிகை
அரிய இவ்யோகம் அடைந்தவர்க்கல்லாது
சரிவளை முன்கைச்சி சந்தனக் கொங்கை
உருவித் தழுவ ஒருவர்க்கொண்ணாதே

இத்திருமந்திரப் பாடல் முழுக்க முழுக்க ஒரு யோகியாய் இருப்பவர்க்கே காமச்சுவையை முழுமையாக அனுபவிக்க முடியும் இல்லையேல் கட்டிலில் படுத்துப் பெண்ணைத் தொட்டேன், விட்டேன் விந்துவை என்றளவில் நின்றுவிடும். மேலும், சோர்வுதான் மிஞ்சுமே அல்லாமல் நாகத்தைப் போல நீண்ட நேரம் ஒட்டி உறவாடி, மகிழ்ந்து பெண்ணுக்கும் இன்ப நிறைவை ஏற்படுத்தாது. ஆண், பெண் ஒரே சமயத்தில் சிற்றின்பத்தின் உன்னத பரவச நிலையை அடையமுடியம். இதுவே சுகானுபவமாகும். கரு உற்பத்திக்கு பிறக்கும் வாரிசு திடமாகவும், ஞானக்குழந்தையாகவும் வளரவும் இந்தப் போகம் மிகவும் பயனளிக்கும்.

XY குரோமோசோம்களின் ஆதிக்கமே குழந்தைப் பிற்ற மிகவும் ஏதுவாகிறது. ஆணின் விந்துவிலுள்ள Y குரோமோசோம்கள் இதற்கு மிகவும் துணைபுரிகிறது. ஆணின் விந்தில் Y குரோமோசோம்கள் அதிகமிருந்து பெண்ணின் Xன் கரு முட்டையுடன் சேர்ந்து

கருதரித்தால் பிறப்பது ஆணாகவும், பெண் சுரோணித்தில் X குரோமோசோம்கள் அதிகமமிருந்து ஆண் விந்துவில் உள்ள X குரோமோசோம்களும் சேர்ந்து XXசும் கருவானால் பிறப்பது பெண்ணாகும். ஆண் விந்துவில் உள்ள 23 குரோமோசோம்களும் பெண் பெண் கருமுட்டையில் உள்ள 23 குரோமோசோம்களும் பெண் கருமுட்டையில் உள்ள 23 குரோமோ சோம்களும் சேர்ந்து 46 ஆகி இனவிருத்திக்குக் காரணமாகிறது.

முடிவுரை

மனித உடம்பை இயக்குதற்கு உயிர்மூச்சு (பிராணன்) முக்கியப் பங்கு வகிக்கிறது. உடம்பை அழிக்கவோ, போற்றிப் பாதுகாத்து விரைவில் மரணம் எய்தாமல் பாதுகாக்கவோ மனம் உறுதுணை யாகிறது. பிறப்பின் மகத்துவத்தையும், இறைவனின் பெருமையை உணராமலும் காம இச்சையில் திளைக்க கூடாது. மனிதன் மனதை அதன் போக்கில் செல்லவிடாமல் சிற்றின்பத்தையே பேரின்ப மாக்கும் நுட்பத்தை அறிய வேண்டும். அறுபத்து நான்கு கலைகளில் சிற்றின்பக் கலையும் (பரியங்க யோகம்) மிக முக்கிய ஒன்றாகிறது.

போதத்தை உன்னவே போகாது வாயுவும்
மேகத்த வெள்ளியும் மீளும் வியாழத்தில்

எனும் திருமந்திரத்திற்கிணங்க மனதையும், விந்துவையும் புருவ மையத்தில் ஏற்றி, பரியங்க யோகத்து பஞ்ச கடிகையைப்போல் காமத்தை ஐந்து நாழிகை (இரண்டுமணி நேரம்) முழுமையாகத் துய்க்க வேண்டும். இவ்வாற்றலே குண்டலி ஆற்றலை மேலோங்கச் செய்யவும் மனித வாழ்வு மாண்படையவும், வழிவகுக்கும் சிவப்பேரடையவும் இந்த யோகம் மிகவும் பயனாகின்றது. இதன் மூலம் உருவாகும் கர்ப்பகிரியை ஒரு ஞானியை இவ்வுலகுக்கு நல்கும் என்பதில் எந்தவித ஐயப்பாடுமில்லை.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 600 113

ஆண்மை வெளியீடுகள்

	ரூ. பை.
சாஸ்திரக் கோவை	130.00
திருப்பவனசைப் புராணம்	150.00
யாப்பருங்கலக்காரிகை	150.00
பொதிகை நிகண்டு	200.00
தண்டியலங்காரம்	160.00
திருக்கடம்பநாத புராணம்	140.00
அகம் புற ஆராய்ச்சி விளக்கம்	250.00
திராவிடப் பிரகாசிகை	150.00
தைலவருக்கச் சுருக்கம்	100.00
ஸ்ரீ கரபாத்திர சிவப்பிரகாச சுவாமிகள்	100.00
திருவாட்போக்கிப் புராணம்	150.00
சிதம்பர சபாநாத புராணம்	80.00
திருவருட்பா இங்கித மாலை	70.00
ஒங்கார விளக்கம்	150.00
நன்னெறி பதவுரை	40.00
எல்லிசாரின் ஆங்கில மொழிபெயர்ப்புகள்	210.00
சரசோதிமாலை – பாகம் 1	80.00
சரசோதிமாலை – பாகம் 2	140.00
தமிழர் வரலாறு – பாகம் 1	260.00
தமிழர் வரலாறு – பாகம் 2	270.00
தமிழ் வரலாறு	240.00
குறுந்தொகை மூலமும் தி.செளரிப்பெருமாள் அரங்கனார் புத்துரையும்	200.00
தமிழ் தமிழ் – அகராதி	1,250.00
Tamil Literature	300.00
Tamil Culture *1 to 12 Volumes*	3,200.00

ஊன் உடம்பு ஆலயம் (திருமந்திரம்) ரூ. 250.00